3L.
3m 21192, N06
N06.8
161299

# பிரஜாநுகூலன்.

புத்தகம் 8. } திரிச்சிராப்பள்ளி 1913-ம் ௵ மார்ச்சு ௴ { சஞ்சிகை 1.

## கமலாபாய் கதை.

(270) ம் பக்கத் தொடர்ச்சி.)

"சாந்தம் பாபம்! சாந்தம் பாபம்! உங்களுக்கு இவ்வளவு பேச இடம் கொடுத்தது ராம்மோகனருக்குத் துரோகம் புரிந்ததாகும். போதும் போதும். ஆனால் இன்னும் சந்தேகம் போராடுகிறது. உண்மையை இப்பொழுதாவது சொல்லுங்கள். தாங்கள் ராம்மோகனரல்லாவிடில் உங்களுடன் அதிகமாய் வார்த்தையாடுவது பாபமாகும். உண்மையைச் சட்டென்று சொல்லி, எனக்குச் செலவு கொடுங்கள்."

"நான் உண்மையைத்தான் உரைக்கின்றேன். என்னை நானல்லன் என்று எதற்காக மறைக்கவேண்டும்? நான் ராம்மோகனனல்ல. என் பெயர் ஸுகுணன். ஆயினுமென்ன உனக்கின்னும் கலியாணமான தாய்த் தெரியவில்லை. அவ்வன்பை என்னிடம் வைத்தால் என்ன மோசமாகும்? ராம்மோகனர் உன்னை முற்றிலும் மறந்து மற்றொரு மாதை யொருவளை மணந்திருந்தாலுமிருக்கலாம். தயவு செய்து தீர்க்கமாய் ஆலோசித்து நான் களிக்குமாறு பதில் தரவேண்டும்."

இதைக்கேட்ட வஸந்தமாலா அந்த யுவகனை நோக்கி தாங்கள் அவரேயானாலன்றி, என்று பதில் சொல்ல ஆரம்பிக்குந்தருணத்தில் சந்திர போஸ் தீபமும் கையுமாய் அவ்வறைக்குட் புகுந்தார். அவரை நோக்கிய வஸந்தமாலா, தான் அநுமதியின்றி இவ்வறைக்குட் பிரவேசித்ததற்காக ஏது சொல்வாரோ வென்ற அச்சத்தினாலும் திகிலினாலும் தன் ஆசை முறிந்த சோகத்தாலும் மரணத்திற்குச் சமானமான மூர்ச்சையாகிக் கீழே சாய்ந்தாள். பிறகு நடந்ததின்னதென்று அவள் அறிந்தாளில்லை.

காலையில் படுக்கையை விட்டெழுந்தருணம் வஸந்தமாலையைச் சுற்றி பிரகாஸலக்ஷ்மி, பெரியவர், வைத்தியர், சில பணிப் பெண்கள் முதலாயினோர் உட்கார்ந்து கொண்டிருந்தனர். வஸந்தம் உடம்பு எப்படி இருக்கிறது என்று பெரியவர் கேட்க, வஸந்தமாலா எனக்கு ஒன்றுமில்லையே; நீங்களெல்லோரும் ஏன் என்னைச் சுற்றிக்கொண்டிருக்கிறீர்கள் என்று வினவினள்.

பெரியவர்.—சரிதான், இப்பொழுது ஒன்றுமில்லையோ! உனக்கு ஜ்வரம்கண்டு ஒரு மாதம் ஆயிற்றே என்று சொன்னதைக் கேட்க இவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. படுக்கையில் இருந்தபடியே தேதி காட்டும் "காலண்டரைப்" பார்த்தாள். அப்பொழுதும் நிச்சயம் கொள்ளவில்லை; யாரோ காலண்டரை மாற்றிவைத்திருக்கிறார்கள் என்று எண்ணினாள்.

உண்மையிலேயே வஸந்தமாலா பல நாட்களாய் ஜ்வரத்திலிருந்தாள். அன்றிரவு மூர்ச்சையானவுடனே அவளை அந்த இடத்திலிருந்தும் தூக்கிக்கொண்டு வந்துவிட்டதாகத் தெரிகிறது. அப்பொழுதே பயத்தினால் ஜ்வரம் கண்டது. வஸந்தமாலா பற்பல விதமாய்த் தான் கண்டதை எல்லாம் உளற ஆரம்பித்தாள். இப்பொழுதுதான் அவளுடைய நினைவு அவளுக்கு வந்தது. சற்று நேரத்தில் பிரகாசலக்ஷ்மியைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் வஸந்தத்துக்கு தேகசௌக்கியமானதைப்பற்றிச் சந்தோஷித்தவர்களாய் அவரவர்கள் காரியத்தைக் கவனிக்கச்சென்றனர்.

வஸந்தமாலை.—அக்கா! நீ எனக்கோர் உண்மையைச் சொல்லமாட்டாயா? நம் வீட்டில் இருந்த அந்த மகா புருஷர் போய்விட்டாரோ?

பிரகாசலக்ஷ்மி.—அண்ணனைத் தவிர நம்வீட்டில் வேறுயார் இருக்கிறார்கள்? உன் காய்ச்சல் ஆரம்பமுதல் இதைத்தானே சொல்லுகிறாய் உனக்கென்ன வீண் பிரேமை இது?

வஸந்தமாலா.—ஆனால் நான் கண்டதை நம்பாமலிருக்கமுடியுமோ?

பிரகாசலக்ஷ்மி.—ஆனால் நீ கனவு கண்டதை எல்லாம் நாங்கள் எப்படிப் பிரத்தியக்ஷமாகக் காட்டமுடியும்? எங்கேயோ ஓர் ஹாலில் கண்டதாகவல்லவா சொல்கிறாய்; அந்த ஹால் நம் வீட்டிலேது?

வஸந்தமாலா.—அக்கா, அதை நான் மறக்கவேமுடியாது. நீங்களெல்லோரும் எனக்கு விரோதிகளே ஆயினீர்கள். பகவானாவது எனக்கு உதவி செய்யமாட்டாரோ? என்று அழ ஆரம்பித்தாள். பிரகாசலக்ஷ்மி என்ன சொல்லியும் கேட்கவில்லை. நான் கண்டது ராம்மோகனர் தான். இரகசிய அறையில் ஏனோ அவரைப் பூட்டிவைத்திருக்கிறீர்கள்? அன்று கண்ட போதினும் இன்னும் என் கண்முன் தோன்றுகிறதே அவருடைய உருவு——என்று தன்னையறியாமல் உபன்யாசம் செய்தாள். பிரகாசலக்ஷ்மி யாதும் பதில் சொல்லாமலிருந்தாள். இப்படியும் சில நாட்கள் சென்றன. வஸந்தமாலாவுக்குத் தேகசௌக்யம் தினே தினே அபிவிருத்தியாயிற்று. சிறு பெண்ணாயிருந்தாலும் மிகுதியும் விவேகசாலினியா யிருந்தாள்.

161299
3m21192,N06
N06.8



## அத்தியாயம் 6.

யௌவனமானது ஸ்திரீ புமான்களிருவர்களுக்கும் சத்துரு; பெண்கள் யௌவனத்தையடைந்த காலத்தில் அவர்களது கற்பென்னும் விலைமதிப்பில்லாத மாணிக்கத்தை அபஹரிக்க அநேகம் விடபுருஷர்கள் திரிவார்கள். புமானோவென்றால் அந்த வாலிபகாலத்தில் தனக்கு இந்திர சந்திரர்களும் நிகரல்லவென்றே நினைத்துத் தோன்றியது செய்யும்படியும் வந்துசேரும். இவைகளுக்கெல்லாம் மனமே காரணம் என்பார் ஓர் சாரார். விதிப்படியாகுமென்பார் வேறு சிலர். ஆனால் இந்த யௌவனத்தை நல்வழியில் நடத்தி நம் ஜென்மம் சாபல்யமாகும் மார்க்கத்தைத் தேடுதலே மானுஷீகரீதியாகும். தன்னுடைய யௌவனம் தன்னை நம்பியிருக்கிற மனைவிக்குச் சொந்தமென்று கணவனும், தனது யௌவன ரூப லாவண்யாதிகள் தனது பர்த்தா ஒருவனுக்கே உரியதென்று மனைவியுங் கருதி ஒழுகுவார்களாகின் எவ்வளவோ க்ஷேமம் உண்டாகும். சாதாரணமாக நன்மையைவிடத் தீமையே அதிசுலபமாய் பிடிபடக்கூடியதாகிய இந்தக் கலியுகத்தில் வேதபுரியை அரசாண்டு வந்த அரசி, அவளது முதன் மந்திரியின் ஆசைக்கு இலக்காயினாள். முதலில் நீதிபரிபாலனந் தான் செய்து வந்தாள். நாளாக ஆக தன் முதல் மந்திரியிடம் சகலமும் ஒப்புவித்தாள். அநியாயம் தலையெடுக்க ஆரம்பித்தது. அவனோ விழித்தது முதல் தூங்கும் வரையில் வரி வசூலிக்க ஆரம்பித்தான். ஆகவே குடிகள் அரசியிடம் முறையிடத் தொடங்கினார்கள். பிறகு அரசியின் கெட்ட நடத்தை வெளிக்கு வந்தது. அரசியே இவ்விதம் அநியாயம் செய்தால் யாரிடத்தில் முறையிடுவது? சிலகாலம் பொறுத்துவந்தார்கள். பொறுமை பயனற்றதாகவாயிற்று. அங்கங்கே பலர் கிளம்பி இந்த ராஜாங்கத்தையே வேரறுப்பதென நிச்சயம் செய்துகொண்டு பற்பல நகரங்களிலும் புகுந்து ராஜாங்கத்து உத்தியோகஸ்தர்களைப் பல ஹிம்சைகள் செய்ய ஆரம்பித்தனர். நாளுக்கு நாள் இவர்கள் தொகையில் அதிகமாகிக்கொண்டே வந்தனர். இவர்களைப் பிடித்து 24 மணிநேரத்துக்குள் சமீபத்திலுள்ள நியாயசபைக்குக் கொண்டுபோகவேண்டுமென்றும், அப்படிச் செய்வோருக்கு மரியாதைப்பட்டங்கள் கொடுக்கப்படுமென்றும், அவ்விதம் அகப்பட்ட கலகக்காரர்களை அந்த நியாயாதிபதிகள் 24 மணிநேரத்திற்குள் கொலை செய்துவிடலாம் என்றும் இராணியின் ஆக்ஞை ஏற்பட்டது. இந்த அநியாயத்தைக் கேட்ட ஜனங்கள் பின்னும் அதிக உக்கிரஹத்துடன் அரசியைக் கொலை செய்தே திரும்புவோம் என்ற சபதம் செய்துகொண்டனர்.

ஒரு நாள் சந்திரபோஸுக்கு வாரண்டு வந்தது. எதற்காகவென்று

விசாரித்துப் பார்க்கு மிடத்தில், அவர் ஓர் கலகக்காரனை சில மாதங்களாக வீட்டில் வைத்து சம்ரக்ஷித்து வருகிறார் என்று தெரியவந்தது. அவர் என்ன சொல்லியும் கேட்காமல் அவரைக் கைது செய்ததோடு பலவிடங்களிலும் தேடினார்கள். யாரையும் கண்டுபிடிக்கமுடியாமல் போனபோதிலும் சந்திரபோஸை வேதபுரிக்கு அருகாமையிலுள்ள ஓர் காராக்கிருஹத்தில் அடைத்துவைத்தனர். அவர் அரசியைக் கண்ட பிறகு அவர்கள் இஷ்டம்போல் நடக்கிறேன் என்று பல முறை வேண்டியும் அவர்கள் கேட்கவில்லை. இவர் நினைத்தால் அந்த ராஜாங்கத்தையே ஹதம் செய்துவிடக்கூடும்; ஆயினும் இதுவும் பகவத் சங்கல்பமென நினைத்துப்பொறுமை பாராட்டினார்.

பெரியவராகிய சந்திரபோஸைப் பிடித்துப்போனதை அறிந்த பிரகாஸலக்ஷ்மி தான் அரசியிடம் நேரில் பேசுவதாய் உத்தேசித்து வஸந்தமாலாவை அழைத்து, தான் வேதபுரி போய்வருவதாயும், அதுவரையில் வீட்டைப் பார்த்துக்கொள்ளும்படியும் சொல்லிவிட்டுப் பிரயாணப்படலாயினள். புருஷர்களே கலகக்காரர்களுக்குப் பயந்து நடக்கும் நாளாகிய இந்தக் காலத்தில் அவள் யாங்ஙனம் போகமுடியும்? ஸர்வாபரண பூஷிதையாயும், அழகில் தேவகன்னிகையை நிகர்த்தும் இருக்கிறாள்——ஆயினும் தைரியத்தைக் கைப்பற்றி, துக்கத்தின் அதிகரிப்பால் துணிவு மிகுந்தவளாகி தனக்கு வேண்டிய சில சாமான்களுடன் யாதொரு துணையும் இன்றி இரகசியமாகப் புறப்படலானாள். இவ்வளவு தைரியத்திற்கும் காரணம் அவள் காணப்போகிற அரசிக்கும் அவளுக்கும் ஏற்கனவே பரிச்சயமேற்பட்டிருந்ததுதான். அந்த அரசி வேறு எவருமல்ல. முதலாவது அத்தியாயத்திலே நாம் விவரித்த மஹாராணியார்தான். தான் இராணியிடத்துச் செல்லும் விஷயம் வெளிக்குத் தெரிந்தால் துன்மந்திரிகளுக்கு எவ்வாறேனும் எட்டிவிடுமென்ற கருத்துடனே தான் இவ்விதமாக அந்தரங்கமாய்ப் புறப்படலானாள். ஆனாலோ இவள் இதுவரையிலும் நடந்தே அறியாதவள். வேதபுரிக்கு ஏகும் பாட்டையும் தெரிந்தவளல்லள். அப்படிப் போவதற்கும் நேரான பாதையும் இல்லை. ஆயினும் துணிகரத்துடன் தன் வழி நடந்தாள். செல்லும் மார்க்கமெல்லாம் இவளுடைய சௌந்தரியப் பிரஸ்தாபமே ஜனங்களுக்குள் ஒரு பெரும் பேச்சாக ஆயிற்று. காமுகர்கள் நாய்கள்போலப் பின்தொடரவுங் கண்டாள். இப்படியாக மூன்று தினங்கள் பிரயாணம்செய்து நான்காம் நாள் ஒரு வனாந்தரத்தின் மத்தியில் நல்ல வெயில் நேரத்தில் அகப்பட்டுக்கொண்டாள்! எரிநெருப்புக்கிரையில்லை என்பதாக வாட்டு வாட்டு என்று வாட்டிற்று. எந்த வருஷத்திலும் என்றையுங்கும் கண்டதில்லையே என்று பரிதபித்தாள்.



எரி எரி என்று எரிக்கின்ற இந்த வெயிலின் எரிச்சலை எதற்கொப்
பிடலாம்? ஈ எறும்பு மொய்க்காது இராக்கண் பகல்கண் விழி
த்து இடைவிடாது பக்கத்திருந்து, கூ! என்றால், ஆ! என்றால்
தூக்கி முகத்தோடு முகம்வைத்து முத்தியிட்டு கைமேலும் கால்மேலுந்
தோள்மேலும் தலைமேலும் தூக்கி வளர்த்து, ஈரைப் பேனாக்கி பேனைப்
பெரிதாக்கிக் காப்பாற்றிய பெண்ணும் பிள்ளையும், பிற்காலத்தில் அவரவர்
களுக்குப் பிராயம் வந்து பெண் ஒரு வல்லாளகண்டனையும், பிள்ளை ஒரு
கொடுஞ்சூரியையும் மணந்தானபிறகு; முற்றுந் துறந்த பரமயோகியாகிய
பட்டணத்துப்பிள்ளையார் “குடியிருந்த வீட்டுக்குக் கொள்ளிவைக்கக்
காத்திருந்தேன்” என்று பெருந் தொல்லையாய்க் காத்திருந்து தன்னைப்
பத்துமாதம் சுமந்து பெற்ற தாய்க்குத் தகனகிரியை செய்துவிட்டுப்
போனதை எண்ணிப் பார்க்க நேரமில்லாமலும், தன் உற்பத்தியை யுண
ராமலும், தான் வளர்ந்தது யாராலே என்பதை யறியாமலும், பெற்றோ
ரைப் படாதபாடு படுத்தும்பொழுது அவர்கள் மனது எப்படி எரியுமோ
அப்படி எரிகிறது இந்த வெயில்! ‘தம்பி யுள்ளான் படைக் கஞ்சான்’
என்பதாய், தன்னுடன் பிறந்த உடன்பிறப்பாயிற்றே என்றும், சகோதர
ரைக் கைவிடக்கூடாதென்றுங் கருதி, தன் மனைவி சேய் முதலியவர்களைப்
பெரிதாயெண்ணாது தான் தின்னாது உடுத்தாது உண்மைக்குப் பாடுபட்ட
அண்ணனை எண்ணாமல், தன் பெண்டிரைப் பெரிதாயெண்ணி வம்பு
க்கு நின்று மனநோக வைக்கும்பொழுது அந்தப் புண்ணியவாளர் மனது
எப்படி எரியுமோ அது போலெரிகிறது இந்த வெயில். உயிர் ஒன்று உட
ம்ப இரண்டென்று தமிழ் சாஸ்திரத்தில் சொல்லியிருப்பதற்கு ஒப்ப, ‘ஒரு
பாதி மால் கொள்ள மற்றொரு-பாதி யுமையவள்கொண்டிருபாதியால் இற
ந்தான் ஈசன்’ என்று ஒரு வித்துவசிரோன்மணி சாதுரியமாய்க்
கூறியபடியும், ஹிந்து சாஸ்திரத்திற் சொல்லியிருப்பதற்கொப்ப, ஆங்
கிலேயர் (Better half) தன்னில் பேர்பாதியென்றும் (Sweet heart)
இன்ப இருதயம் என்றுஞ் சிறப்புப் பெயர் அடையப் பெற்றவளு
மாகிய பெண்டிரே தாய்க்குப் பின் தாரமென்றும், மந்திரி, குரு,
பணிப்பெண், வேசி, தாயாரென எல்லாம் ஓருருவாயமைந்த அற்புத
உருவமென்றும், நாயனார் கூறியதுபோல் ஐம்புலனுக்கும் ஏககாலத்
தில் ஆநந்தத்தை யளிக்கும் அரிய பதார்த்தமென்றும், கண்ணிலிருக்கும்
பாப்பாவென்கிற அந்தக் கருமணியை யகற்றி அவ்விடத்திலமைக்கவேண்
டிய பெருமணியென்றும் மதித்து, அவள் காலில் பட்டது தன் கண்ணில்
பட்டதாய் எண்ணி நடந்த கணவனை விட்டு, “அம்புலி மாதே கேளாய்,
அரசனையகலவிட்டு வம்பனைக் கைபிடித்தவாறுபோ” லென்று நரி அர
சன் மனைவியைப் பார்த்து எளிதஞ் செய்ததற்கொப்ப, சோர நாயகனைத்

துணைகொண்டோடிய நாரியைப் பிரிந்தவன் மனம் எப்படி எரியுமோ அதுபோலெரிகிறது இந்த வெயில். தாய் தந்தை சகோதரரை விட்டு முன்னே பிறந்த காதைவிடப் பின்னே முளைத்த கொம்பு வலிதென்பதாய் நீயே கதி என்று நம்பிவந்த பெண்டிரை இல்லில் உறங்கவைத்து, உடுக்க உடையில்லாது உண்ண உணவில்லாது படுக்கப் பாயில்லாது பறக்கவைத்து, இஷ்ட இஷ்டருடன் சேர்ந்து கஷ்டப்பட்டுத் தேடிய பொருளை நஷ்டிசெய்து, வேசிக்குத் தலைமகனாக அவள் காலைப்பிடித்து, உள்ளதை யுரியதையெல்லா தத்தஞ்செய்து விலைக்கு வாங்கிய மேகரணங்களுடனும் மற்றும் பல உபாதைகளுடனும் வீடுசேர்ந்து அதே கதியாய் அன்னமிறங்காது அந்தகனுக்கு ஆளாகும் மதியீனருக்கு வாழ்க்கைப்பட்டு மங்கிலியம் இழக்கின்ற உத்தமபத்தினிகளின் மனம் எரிகிறதுபோலெரிகிறது இந்த வெயில். மழை பெய்யாது ஏரி நிறையாது இரவும் பகலும் ஏற்றம் பிடித்து மார்பு உடைய இறைத்து, கொஞ்ச நஞ்சம் பயிர்செய்து கைக்கெட்டுமென்று அவாவுடன் பெண்ஜாதி பிள்ளைகுட்டிகள் ஆவென்று வாய் திறந்து காத்திருக்கையில், வரி வசூல்காரர் வந்து தண்டோரா போட்டு விளையாத நிலத்துத் தீர்வைக்காக அதைக்கொண்டேகும்பொழுது குடியானவன் வயிறெரிவதுபோலெரிகிறது இந்த வெயில். 'பிச்சை யெடுத்த தாம் பெருமாள் அதைப் பிடுங்கிற்றாம் அனுமார்' என்பதாய் காற்றிலடித்துப்போகும் செத்தை சுள்ளிகளைப் பொறுக்கி 'காணாது கண்ட கம்பங் கூழைச் சிந்தாது குடியடி சில்லிமூக்கி' என்பதாய் பிச்சையெடுத்த அமுதுபடியை பொங்கித்தின்னக் கொண்டுபோகையில் எமகிங்கரர்போல் வந்து, தொட்டால் உயிர்போகும் ஸ்திதியில் இருக்கும் பேதைகளை நெட்டித் தள்ளி, கட்டு கட்டாய் பாரஸ்டு சிப்பந்திகள் பிடுங்கிச் செல்லுகையில் அன்னோர் மனம் எரிவதுபோலெரிகிறது இந்த வெயில். பரிதானம் வாங்கிக்கொண்டு ஒரு புறஞ் சாய்ந்து அநீதத் தீர்மானஞ்செய்யும் நீதியதிபர்களைப்பார்த்து மனங்குழைவோர் வயிறெரிவதுபோலெரிகிறது இந்த வெயில். அண்டிவந்து தெண்டனிட்டு குண்டி கொழுத்து, தொண்டு செய்து உண்ணாது சேர்த்துவைத்தப் பொருளை வைத்துவையென்று வைக்கத்தெரியாது வைக்கற்போரில் வைத்து ஏமாந்து அதே பயித்தியங் கொண்டிறப்போர் மனம் எரிவதுபோலெறிகிறது. 'ஊர்க்குருவி தலைமேல் பனங்காயைச் சுமத்துவதுபோல,' குடிக்கக் கஞ்சியில்லாதவர்மீது தொழில்வரியென்னும் பாரத்தையும், கூரைமூட ஐவேஜு இல்லாது குட்டிச்சுவரில் வசிப்போருக்கு வீட்டு வரியும் விதித்து, உண்ணும் கலத்தை கஞ்சி குடிக்கும்பொழுதே பிடுங்கிப்போகையில் அவர்கள் மனம் எரிவதுபோலெரிகிறது. கையை மூடியிருந்தால் கௌரவமென்று வெட்கத்துக்கு ஆற்றமாட்டாமல் பார்ப்போருக்குப் பகட்டாய் மூடிக்காய் திரிவதைப்



பொறுக்காமல், தங்களை மதிக்கவில்லை, மரியாதை, பொருள், வருஷாப்தம் கொடுக்கவில்லை யென்கிற காரணத்தினாலேயே; இரக்கமென்பதின்னதென்றறியாதவரும் கிடா கன்றீன்றதென்றால் பிடித்துக் கொட்டாயில் கட்டென்பவருமாகிய பெரிய உத்தியோகஸ்தரிடத்தில் பேரெழுதிவைத்து வருமான வரியென்று போடவைத்து; அப்படிப்பட்டவர்கள் கொடுக்க சக்தியில்லாதபொழுது ஜப்திசெய்து, அக்கம்பக்கத்தார் விரோதிகள் பார்த்து நகைபுரியும்படி சாமான்களை யெடுத்து வெளியேபோட்டு ஜப்தி செய்யும்பொழுது அவர்களுடைய மனம் எரிவதுபோலெரிகிறது. காலமெல்லாம் கஷ்டப்பட்டு கூலி கேட்டால் வாயடி கையடி அடித்து வீட்டைவிட்டு வெளியே துறத்துகையில் அப்படிப்பட்டவர்கள் வயிறெரிவது போலெரிகிறது. இப்படி எரிகிற வெயிலில் இன்னும் எவ்வளவு தூரந்தான் நடந்து இப்பாலைவனத்தைக் கடப்பது என்று யோசித்தவளாய் வெகுதூரத்திற்கு அப்பாலிருந்த ஆலவிருக்ஷமொன்றில் ஏறி உட்காரலானாள். உட்கார்ந்து மேல்நோக்கியதில் அவ்விருக்ஷத்தில் ஒரு காகிதச்சுருள் தகரக்குழாய் ஒன்றில் சொருகப்பட்டுத் திறந்தவண்ணமாக வைக்கப்பட்டிருந்தது. அதில் பின்வரும் விவரங்கள் காணப்பட்டன:—

---

"பிறந்த நாள் முதற்கொண்டே துக்கமானால் என்றுதான் சுகப்படுவது? விருத்தி புகட்டும் இளமையிலேயே வறுமைப்பிணியாயின் வாழ்வதெப்படி? சிறுபோதிலேயே என் தாயார் தாயாதிகளினால் கொல்லப்பட்டுப்போனாள். அவர்களால் கபடமாக விஷம் கலக்கப்பட்டுப்போன பாலை அவள் அறியாமல் உட்கொண்டுவிட்டாள். அதில் மயக்கமேற்பட உடனே குழந்தைக்குப் புகட்டுவதை நிறுத்தி அரசனைக் கூவி அவன் வசம் ஒப்புவித்து ஆவிபிரிந்தாள். அடுத்த நாளிரவு அரசர் தமது குழந்தையை எவரிடமேனுங் கொடுத்து அந்தரங்கத்தில் வளர்த்தாலன்றி குழந்தையின் உயிரும் தப்புவதருமையெனக் கண்டு தமது நாட்டை விட்டுப் புறப்பட்டு மறுநாள் மத்தியானம் ஒரு கிராமத்தின் வழியே வந்துகொண்டிருக்கையில் எதிரே ஒருவன் தலையிறக்கத்தோடும் வந்து நின்றான். நின்றவன் அரசன் ஆரோகணித்து வந்த அஸ்வத்தைப் பிடித்துக்கொண்டான். அரசர் கோபாவேசத்துடன் கீழிறங்கி அவனது முகத்தை நிமிர்த்துப்பார்க்கவே மிகவும் பயந்துபோனார். ஹா! அமாஸிம்ஹா! இதென்ன அலங்கோலமப்பா என்று கதறினார். அவரது சரீர முற்றிலும் நடுங்கிற்று. உடனே வந்தவர் அரசனைப் பார்த்து,

"என் அரசே, அருமைத்தாய் மாமா! இதுவும் ஒருகாலமென வெண்ணினேன். உமது தர்மபத்தினி விஷ்ணுப்பிரியை சுகமாயிருக்கிறார்களா? இது யாருடைய குழந்தை?" என்று வினவினர்.

அரசர் தமது தங்கையின் புத்திரனான அமரஸிம்ஹருக்கு சகல விவரங்களும் கூறினார். விஷ்ணுப்பிரியையின் அகால மரணத்தைக் கேட்கவே மிக்க வியாகூலமடைந்து விஷ்ணுப்பிரியையும் மறைந்தனளாவென்று பிரலாபித்தார். பிறகு அரசரது விருப்பப்படி அக்குழந்தையைத் தம்மிடமே நிறுத்திக்கொண்டு அவரைத் தமது வீட்டில் இரண்டொருநாள்வரை வைத்திருந்து உபசரித்து அனுப்பிவிட்டார். அக்குழந்தையைக் காக்கவேண்டியதின் நிமித்தம் அமரஸிம்ஹர் வெளிப்பார்வையில் ஏழ்மை நிலையிலேயே இருக்கல்தான் உசிதம் என்று கருதி அந்தரங்கத்தில் சகல உதவியும் ஊருக்குப்போய்ச் செய்வதாகக் கூறிச் சென்றார். அவ்விதமே பிறகு நடந்துவந்தது. அமரஸிம்ஹர் தமது புத்திரியோடு அக்குழந்தையையும் சேர்த்து வளர்த்துவந்தார். இப்படியிருக்குங் காலத்தில் அமரஸிம்ஹரின் தர்மபத்தினி மிகவும் நலியாகி மரணப் படுக்கையிற் கிடந்தாள். தனக்குப் பிறகு தனது பெண் என்ன கதியாவாளோவென்று பரிதபித்து, தங்களிடமே வளர்ந்துவந்த அரசபுத்திரனும், அமரஸிம்ஹருடைய தாய்மாமனின் செல்லப்புதல்வனுமான சாருதத்தனையே தனது குமாரத்திக்குக் கணவனாக ஏற்படுத்தி மணத்தை முடிக்கும்படி வேண்டினாள். அமரஸிம்ஹரும் தனது மனைவியின் விருப்பப்படியே நடத்திமுடித்தார். இது நடந்தபிறகு அவளும் குணப்பட்டுக் கடவுளருளால் உயிர்பிச்சைபெற்று எழுந்தாள்.

இது இங்ஙனமாக, இந்த விவாகச்செய்தி சாருதத்தனின் பிதாவுக்கு எட்டிற்று. அவர் அதில் அதிகமான திருப்தியைக் காண்பித்துக்கொண்டார். ஆயினும் அமரஸிம்ஹரை மறுபடியும் வந்து சந்தித்துக்கொள்ள அவர் பிரியப்படவில்லை. அமரஸிம்ஹர் தமது தாயைப்போலவே இருந்தார். தாயைப் பார்த்தால் அமரஸிம்ஹரைப் பார்க்கவேண்டாம். அமரஸிம்ஹரைப் பார்த்தால் அவருடைய தாயைப் பார்க்கவேண்டாம். அமரஸிம்ஹரை ஸ்திரீவேடம் தரிக்கும்படி செய்துவிட்டால் அவருடைய தாயைப்போலவே தோன்றுவார். சாருதத்தனுடைய பிதாவான அரசரும், அமரஸிம்ஹருடைய தாயாரும் ஒரு வயிற்றுக் குழந்தைகள். ஆகவே சாருதத்தனின் பிதாவுக்கு அமரஸிம்ஹரைப் பார்க்கும்போதெல்லாம் தமது ஒரே உடன்பிறப்பாகிய தங்கையின் ஞாபகம் உண்டாகி வெகுதூரம் அவரை வாதிக்கும். ஆகவே அவர் அமரஸிம்ஹரைப் பார்ப்பதற்குப் பயந்துபோய் மறுபடியும் வராமலேயிருந்துவிட்டார். ஆயினும் தமது அருமைத் தங்கைக்கு நேர்ந்த கஷ்டகாலத்தையும், அமரஸிம்ஹரைக் கேவலம் பரதேசிபோன்ற கோலத்தில் அன்று தான் பார்க்க நேர்ந்ததையும் அவர் நினைக்கும்போதெல்லாம் அவரது வயிறு குபீர் குபீரென்று பற்றிக்கொள்ளும்.



மேலும் அவரது மனைவியும் விஷங்கலந்த பாலுண்டு மாண்டுபோனாள். அவளிடமாகத் தமக்குப் பிறந்த குழந்தையான சாருதத்தனை ஆசையோடு எடுத்து வளர்ப்பதற்கும் தாம் பாக்கியம் செய்யவில்லை இவற்றையெல்லாம் நினைத்துப் பார்த்தபோது அவருக்கு உலக விரக்தி பலமாக ஏற்பட்டுப் போயிற்று தமது குமாரனான சாருதத்தனைத் தருவித்து அவனைத் தமது புத்திரனென்றும், ரகசியமாக இதுவரை வளர்த்துவந்ததாகவும் சகலருக்கும் தெரிவித்து, அவனுக்கு இராஜ்ய பட்டாபிஷேகம் செய்வித்து இமயமலைச் சாரலுக்கு சமீபமான அடவியிற் புக்கி மறைந்துபோனார்.

சாருதத்தன் தனக்கு இராஜ்ய பட்டாபிஷேகமானதும் தான் உடனிருந்து ஒழுங்கு படுத்தவேண்டியிருந்த இராஜாங்க விஷயங்களையெல்லாம் சரிவர நிறைவேற்றி முடிப்பதற்கு இரண்டு வருஷ காலம் தேவையாயிற்று. அதன் பின்னர் அமரஸிம்ஹரின் புத்திரியான தனது மனைவியையும் அவரையும் தனது தேசத்துக்கு அழைத்துக்கொண்டு வருவதற்காகக் கையில் சிறிது பொருளுடன் ரகஸியமாகப் புறப்பட்டு, அமரஸிம்ஹர் இருந்த கிராமத்திற்கு வந்தான். அப்போது இரவு இரண்டுமணியிருக்கும். ஒரு பெரிய வீட்டு சாளரத்தின் கதவு திறக்கப்பட்டிருந்தது. மேஜையின் ஓர் பக்கம் விளக்கெரிந்துகொண்டிருந்தது. சில புத்தகங்கள் மற்றொரு புறமாக அடுக்கி வைக்கப்பட்டு ஒரு புஸ்தகம் மேஜையின் மீது திறந்தபடி கிடந்தது. அதற்குச் சமீபமாக ஒரு கட்டிலும், அதன்மேல் ஏகாங்கினியாய் ஒரு சுந்தரியும், உட்கார்ந்தபடி ஒரு கையைக் கன்னத்தில் வைத்துக்கொண்டு அழுத கண்களுடன் யோசித்த வண்ணமாகத் தனக்குத் தானே பேசியபடி சாய்ந்துகொண்டிருந்தாள்: அவளுக்குத் துணையாக ஒரு அழகிய நாயும் கதவுக்குச் சமீபமாகத் தூங்கிக்கொண்டிருந்தது. பின்வரும் வார்த்தைகளை சாருதத்தன் மிகவும் கவனமாக உற்றுக்கேட்டான்.

“எப்படியோ அச்சின்னாள் கனவுபோல மறைந்துவிட்டது. அவரோடு சுகித்த இன்பத்தின் ஞாபகம் கூட அத்தனை தெளிவாயிருக்கவில்லை. பன்முறையும் நினைவுக்கு வருத்திப் பார்த்தேன். ஏதோ எறும்பு கடித்தது போல் கொஞ்சம் ஞாபகத்திற்கு வருகிறது. அந்த இனிமையான காலத்தின் வைபவங்களை மீண்டுமோர் முறை சுவைத்துப் பார்க்க என் மனத்துள் அவாவெழுகின்றது. என்ன ஆச்சரியம்! எப்படிச் சென்றதோ அந்த நாட்கள்? அதிலும் எத்தனைத் தீவிரமாகச் சென்றுவிட்டன! ஆ! இதென்ன அதிசயம்!! ஞாபகத்திலிருந்து பெரும்பான்மை விலகியும் மறந்தும் விட்ட அந்த இன்பத்தினுடைய அடிச்சுவட்டின் அடையாளம் என் சிந்தையை விட்டு சலபத்தில் அகலுவதாகக் காணோமே! ஆவலோடு நான் அன்று பள்ளியறையின் கதவை உள்தாழ்ப்பாளிட்ட தருணம், என் நாதர் பின் புறமாகவே வந்து கரங்களைப்பற்றிக் கொண்டபோது எனக்கிட்ட அந்த அருமை முத்தங்கள் மறக்கத்தக்கனவோ! அவரது ஸௌந்தரமும் மிருதுத் தன்மையும் பொருந்திய ஹஸ்தங்கள் எனது தேகத்தின் மீது பட்டபோது என் உடலம் அடைந்த புளகாங்கிதம் இயம்பவும் ஒண்ணுமோ? ஆர்வத்துடனே அவரை நான் முத்தமிட்டுக்

கொள்ள நெருங்கியும் நாணத்தால் பின் வாங்கிநின்ற தருணம், அக்குறிப்பு
உணர்ந்த அவர் பலாத்காரமாக அக்காதல் முத்தப்பரிசுகளை ஏற்றுக்கொண்ட
காட்சியே காட்சி! அவர் அதிக சரஸமாகவும் காதலுடனும் பேசப் பேச
எனக்கு நாணம் அதிகமாயிற்று. எந்தக் காலத்திலுமில்லாத வெட்கம் அன்
றைக்கு எனக்கு எங்கிருந்து தான் உண்டாயிற்றோ, அது தான் ஆச்சரியம்!
உள்ளுக்குள் அவருடன் சரிசமானமாக அன்பு குலாவிப் பேசவே எண்ணி
னேன். ஆயினும் என் மனம் துணியவில்லை. என்னோடு அவரையும் கூட்டி
சயனக் கிருகத்திற்கு அனுப்பிய—அந்த நினைவு கூறத் தக்க இனிமைநிகழ்ந்த
அந்த நாளிரவிலே என்னை நித்திக்கே சொந்தமாக வல்லவோ அவரைக் கருதி
னேன்! என் கற்பும் மானமும் அவருக்கே அடைக்கலம் என்றல்லவோ
ஒப்புவித்தேன். அவரே யானென மகிழ்ந்தேன். அத்தனையும் ஆற்றிற்
கரைத்த புளியாயினதே! நாதா இனி நான் உம்மை என்று தான் காண்
பேன்? காணும் நாளும் உளதோ இனியே ஐயோ!"

பேச்சு நின்றதும் விம்மி விம்மி மெதுவாக அழுகின்ற சப்தம் கேட்
டது. சாருதத்தன் சற்று உயரத்திலிருந்த சன்னலின் மீது சிரமத்தைப்
பாராட்டாமல் ஏறி அறைக்குள் தன்கண்களைச் செலுத்தினான். இவனை அப்
பெண்மணி கவனிக்கவில்லை. அவள் தன் யோசனையிலாழ்ந்து துக்கத்தில்
தன்னை மறந்திருந்தாள்! ஹா! இவள் யார் நமதுமனைவியா என்று வந்த
வன் திடுக்கிட்டான். இதற்குள்ளாக அந்த சுந்தரியும் தலையைத் தூக்கி
இவனைப் பார்த்துக் கனவோ நினவோ வென்றான். அப்படியே பிரமித்துப்
போனான். யுவகன் கனவல்ல, உண்மைக் காட்சியே என்றான். தன்
காதலனைப் பற்றி இதுகாறும் துயர மிகுந்தவளாய்த் தூக்கமற்று துக்கித்து
நின்ற இந்த சுந்தரிக்கு தனது காதலனே பிரத்தியக்ஷமாக வந்து நிற்
பானாயின் அவளுடைய பாக்கியத்தையும் அடைந்த புளகாங்கிதத்தையும்
வர்ணிப்பதற்கு அந்தக் காலத்துக் காளிதாஸன் தான் வரவேண்டும். தன்
காதலனை ஜன்னலின் அருகிற்றானே வைத்து அவனுடன் பரஸ்பரம்
அந்தரங்கமான சம்பாஷணைகளை யெல்லாம் நடத்தி, ஒரு விதமாக முடிவு
படுத்திக்கொண்டு, காலையில் அன்னியன் போல இந்த வீட்டுக்கு வாருங்களெ
ன்று தெரிவித்து அனுப்பினாள். இவனும் மறுநாள் வந்து அவ்வீட்டுப் பிரபு
வைக் கண்டு கொண்டு சில காரணங்களை முன்னிட்டு வேறு விதியில்லாமல்
முன்னிரவு தாங்கள் பேசி முடித்துக் கொண்டபடியே, மறுபடியும் தனது
மனைவியை யாவரும் அறியத் திருமண முடித்து, அவளை ஆதரித்து வந்த
பெரிய மனிதனையும் உடன் அழைத்துக் கொண்டு நகரம் புகுந்து தனது
மனைவியின் விருப்பத்திற் கிணங்க அப்பெரிய மனிதருக்கு மந்திரி பதவியும்
கொடுத்து வாழ்ந்து வந்தான். சில காலத்திற்குப் பிறகு அப்புது மந்திரியின்
விருப்பத்திற்கும் வற்புறுத்துதலுக்கும் மறுக்கமுடியாமல் அவனோடு வேட்
டையாடச் சென்ற அரசனான சாருதத்தன் அங்கோர் கிராமத்தில் உள்ள
பெரிய மனிதரொருவரால் எதிர் கொண்டழைக் கப்பட்டு உபசரிக்கப்பட, அன்
றிரவு அங்கு தங்கமுயன்றான். அந்த மாளிகையானது * * * * *

* * *



இதற்குமேல் அந்தக் கடிதத்தில் ஏதுங்காணோம். ஆனால் காகிதம்
மட்டும் இன்னும் எழுதுவதற்குப் போதுமான இடமுள்ளதாகவும் பெரிய
அளவுள்ளதாகவும் இருந்தது. பிரகாச லக்ஷ்மி மனது கலங்கினாள். இத்தரு
ணத்தில் சுந்தரமான புருஷனொருவன் அவ்விருக்ஷத்தின் அடியில் வந்து
நின்று மேலே யிருக்கும் யுவதியைப் பார்த்து, "அம்மணீ தாயே, தாங்கள்
யார்; என்னால் தங்களுக்கு ஒரு விபத்து முண்டாகாது; நிர்ப்பயமாகக் கீழே
இறங்கி வாருங்கள்; என்றான். பிரகாஸலக்ஷ்மி அவனுடைய ரூபலாவண்யத்
திற்கும் மதுரமயமான கண்டத்துக்கும் வியந்தவளாய்க் கீழறங்கி வந்தாள்.
உடனே வாலிபன் மரத்திலேறி அவள் வைத்து வந்த காகிதச் சுருளை எடுத்
துக்கொண்டுவந்து அம்மணீ! தாங்கள் இதை வாசித்ததில் என்ன அறிந்தீர்
கள் என்றான். அதற்குப் பிரகாஸலக்ஷ்மி என் அபிப்பிராயத்தைப் பிறகு
தெரிவிக்கிறேன்; அது உங்களுடையதுபோல் காணப்படுவதால் அதை எழுதி
யது நீங்களாகத்தா னிருக்கக்கூடுமென்று நினைக்கிறேனென்றாள். அதற்கு
வாலிபன், "இல்லையம்மா நான் ஒரு சிறு கால்வாயில் கால் கை சுத்தி செய்து
கொண்டிருக்கும்போது அக்கால்வாயின் வழியே திறந்தபடியே இத்தகரக்
குழாயில் இடப்பட்டு நனைந்து வந்துகொண்டிருக்க நான் எடுத்துக்கொண்
டேன். இதைப் பரிசோதிக்கவேண்டியது என் கடமை. நான் அமரவிம்
ஹரைக் கண்டு அவர் இருப்பிடம் சேரப் புறப்பட்டிருக்கிறவன் என்றான்.
பிரகாஸலக்ஷ்மி அவனைப் பார்த்து தாங்கள் அவருக்கு சத்துருவா மித்துருவா
என்றாள். அதற்கவன் நான் சத்துருவுமன்று மித்துருவுமன்று, அவரிட்ட
வேலைகளை அன்புடனே செய்யவேண்டிய அவருடைய வாசல் காக்கும்
நாய்க்குச் சமானமானவன் என்றான்.

பிரகாஸலக்ஷ்மி:—தங்களுடைய நாமதேயம் என்ன?

வாலிபன்:—என்னை ஆரிய குமாரன் என்றழைப்பார்கள்.

பிரகாஸம்:—அக்கடிதத்தில் பாதி எழுதி மறுபாதி எழுதாமல் விடப்
பட்டிருப்பதற்கென்ன சொல்கிறீர்கள்?

ஆரிய:—அந்தக் கடிதத்தின் ஆரம்பத்தில் அந்த லிகிதனுடைய கஷ்
டங்கள் விவரிக்கப்பட்டுப் பிறகு அவனுடைய கதையைச் சொல்லி யிருக்
கிறது. கதையினால் அவன் இராஜகுமாரன் என்று விளங்குகிறது. அவ
னுக்கு விரோதிகள அதிகமென்றும் தெரிகிறது. அவனுடைய தாயார் விஷ
மிடப்பட்டு இறந்ததும், அவன் இரகசியத்தில் வளர்க்கப்பட்டதுமே போது
மான சாக்ஷியமாகும். அவனை எவரோ கைதுசெய்து ஓரிடத்தில் அடைத்து
வைத்திருப்பதாகக் காண்கிறது. எவருமில்லாத தருணத்தில் இந்தக் கடி
தத்தை எழுதியதுபோலவும், யாரோ வருகிற அரவம்கேட்டு உடனே கலக்கத்
துடன் தான் எழுதிமுடித்த பாதியை அப்படியே சுருட்டி, இந்தத் தகரக்குழா
யில் போட்டு அதை மூடக்கூட நேரமில்லாமல் அப்படியே கால்வாயில் எறிந்து
விட்டான் போலவும் தோற்றுகிறது."

பிரகாஸம்:—கால்வாயில் எறியக் காரணமென்ன?

ஆரிய:—தன் வரலாறு முழுவதையும் எழுதி இக்குழாயி லடைத்தாழ்டி
வாய்க்காலில் எறிந்தால் அது யார் கையிலாவது அகப்பட்டு அதின் மூலமாகத்
தான் விடுதலை பெறமுடியாதா என்ற நோக்கமா யிருக்கலாம்.

பிரகாஸம்:—தங்களின் சூக்ஷ்மமான புத்தி சாதுரியம் பாராட்டற்
பாலது. நிராதரவான இடத்தில் எதிர்ப்படும் யுவதிகளைப் பலாத்கரித்தலும்,
தங்களுக்கு ஆசை நாயகிகளாக விருக்கும்படி வற்புறுத்துதலும் உலகமென்
கும், எல்லாக் கதைகளிலும் சகஜமாக இருக்க அதற்கெதிரிடையான குண
விசேஷங்களுடன் பொருந்தி விளக்கும் தாங்கள்எந்த தேசமோ அறியேன்.
ஆரிய:—நான் நவத்துவீபத்தில் பிரபல சீமானை தேவேந்திர நாராய
ணரின் ஏகபுத்திரன். எனது பிதாவும், அவருடைய உயிர்த் தோழரென்று
கடவுளால் விதிக்கப்பட்டவரான அமரஸிம்ஹ ரென்பவரும் ஐந்து பிராயம்
வரையில் அவ்விடமே அந்நியோன்யமாய் இருந்து வந்தனர். அமரஸிம்ஹரது
பிதாவும் நவத்துவீபத்தின் ஜமீன்தாருமாகிய ராஜசேகரி இறக்கவே அதற்
குப் பிறகு அவர்களை அங்கு காணவேயில்லை. ராஜசேகரியின் தர்ம பத்தினி
கமலாபாயையும், அவருடைய புத்திரரான அமரஸிம்ஹரையும், புத்திரியான
பிரேமநிதியையும் கண்டு பிடிப்பதற்கு அவர்களுடைய விரோதிகள் எவ்வள
வோ தூரம் முயன்றும் முடியாமற் போய் விட்டது. அப்போது எனது பிதா
வுக்கு ஆறுபிராயம் ஆகிக் கொண்டிருந்தது. பிறகு இருபது வருஷங்களுக்
கப்பால் தமக்கு சகல சொத்துக்களும் கிடைத்த பின் தமது நண்பனைத்தேட
ஆரம்பித்தார். அப்படிக் கண்டு பிடித்து வருமாறு அனுப்பப்பட்டவர்களில்
சிலர் அவரை எவ்விதமோ ஒரு கிராமத்தில் தேடிப்பிடித்து அழைத்துப்
போயினர். யாதுகாரணத்தாலோ அவர் தமது பக்குவ வயது வந்த புத்தி
ரியை அக்கிராமத்திலேயே தனியாக விட்டுவிட்டுச் சென்றார். அதற்குக்
காரணம் இன்னதென்பதை இப்போது நமது கைக்கு அகப்பட்டிருக்கிற இக்
கடிதமானது சிறிது விளக்குகின்றது. அதற்குப் பிறகு நடந்த விவரம் ஒன்
றும் தெரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறது. அமரஸிம்ஹர் என் பிதா
வினிடத்தில் வந்து ஏராளமான ஐஸ்வரியங்களைப் பெற்றுக் கொண்டு ஏதோ
இரகசியமான காரியங்களைச் செய்வதற்காக வேதபுரிக்கு தூறுமைலுக் கப்
பால் ஒரு இடத்தில் அவர் வாஸம் செய்யச் செல்வதாக விடை பெற்றுப்
போயினர். இரண்டு மாதங்களுக்கு முன்னர் என்னையனுப்பும்படி என் பிதா
வுக்குச் செய்தி விடுத்தார். அவர் வஸிக்கும் இடம் ரகசியமாதலால் நான் ஒரு
வனே புறப்பட்டுப் போகும்படி என் பிதா உத்தரவு தந்தார். வரும் வழியில்
இந்தக் காகிதச் சுருளும் கிடைத்தது. இன்று வெயில் மிக்க கொடுமையாக
இருந்ததால் இந்த மரத்தின் கீழ்தங்கி இரவில் புறப்படலாமென்று தாமதித்
தேன்.

பிரகாஸம்:—உங்களை எங்கேயோ பார்த்ததாக ஞாபகம் உண்டாகிறது.
அது ஒருபுற மிருக்கட்டும். தங்களுக்கு மனைவிகள் எத்தனைபே ரிருக்கிறார்
கள்?



ஆரிய:—ஏது நீ பேச்சில் வெகு சாதுர்யவதியா யிருக்கிறாய். என்னை
எங்கேயோ கண்டதாகவும் கூறுகிறாய். நான் இப்போதும் இனிமேலும்
காதலிப்பது ஒரு பெண்ணைத்தான், அவள் பெயர் பிரகாஸலக்ஷ்மி, அவளும்
நானும் முன்பொரு காலத்தில் அத்தியந்த வாஞ்சை பாராட்டி நேசித்து வந்
தோம். எங்களிருவருக்கும் விவாகம் செய்து வைப்பதாக சந்திரபோஸ்
ஸ்வாமிகள் வாக்களித்திருக்கிறாரென்று என் பிதா அடிக்கடி சொல்லுவார்.
ஸ்வாமிகள் எப்போது வருவாரோ தெரியவில்லை. அவரைக் கேள்வியா
லறிந்தவனே யன்றி நேரிற் கண்டதில்லை. எங்கோ தேச ஸஞ்சாரம் சென்
றிருப்பதாக என் பிதா கூறுகிறார். அப்படிச் சென்று பல வருஷங்களா
யினவாம். ஆனதால் தான் விவாகத்திற்கு இவ்வளவு தாமதம், பிரகாஸலக்ஷ்
மிக்கு இப்போது தக்கபருவம் வந்து பூரண யுவதியாக இருப்பாள். அவளையே
மணந்து சுகிக்கவேண்டுமென்பது என் மனோபீஷ்டம்.

பிரகாஸலக்ஷ்மி:—தாங்கள் காதல் கொண்டுள்ள பெண்மணி நிரம்பவும்
ரூபவதி யென்பது தங்களின் உத்தேசமா யிருக்கலாம். புருஷர்கள் பெரும்
பாலும் பிரதமத்தில் ரூபத்திற்கே பெண்களை இச்சிக்கின்றனர். நடத்தைப்
பிசகுள்ளவளா யிருந்தாலும் சௌந்தரியவதியாய்க் காணப்பட்டால் அவள்
மீது மனம் வைக்கின்றனர். ஒரு ஸ்திரீ சகல விதங்களிலும் கொண்டாடத்
தகுந்த குணங்கள் அனைத்தும் வாய்ந்தவளா யிருந்தாலும் சோபிதமான ரூபம்
இல்லாவிடில் அவர்களைப் புருடர்கள் லக்ஷியமே செய்வதில்லை. இதற்காக
வே பெற்றோர் பார்த்துத் தங்கள் குழந்தைகளுக்கு மணமுடிக்க வேண்டு
மென்ற சம்பிரதாயம் நமது ஆரியா வர்த்தமாகிய இப்பரதகண்டத்தில் நடை
யாடுகின்றது. ஸ்திரீ புமான்கள் அனைவரும் ரூபவான்களையும் ரூபவதி
களையுமே விரும்புவதா யிருந்தால், அந்த ரூப விசேஷம் வாய்க்கப்பெறாத
வர்கள் போகும் கதி என்ன! மேலும் யௌவன காலத்தின் துடுக்குத்தனத்
தால் நேத்திரங்கள் மூடுண்டுபோவதால், ஸ்திரீ புமான்கள் தங்களின் யௌ
வனம் கழிந்த பிறகும் காதல் வைத்து ஒருமித்து வாழும்படியான குண
முள்ளவர்களைத் தெரிந்தெடுக்கத் தவறிப்போய், அப்போதைய விருப்பங்
களுக்குமட்டும் ஹிதகரமான இடத்தை நாடுகிறார்கள். ஆனபடியால் தான்,
லோகாநுபவமில்லாத யௌவன பிராயஸ்தருக்கு, அவர்களுக்கு முன்னதாக
உலக விஷயங்களில் நுழைந்து பாடுபட்டு அநுபவம் அடைந்துள்ள பெரி
யோர்களின் துணையும் உதவியும் அநுமதியும் இன்றியமையாததாகின்றது.

ஆரியகுமாரன்:—இப்போது தாங்கள் எந்த அபிப்பிராயத்துடன் இந்த
விவரங்களைத் தெரிவிக்கிறீர்களோ நான் அறிகிலேன். நான் காதற்கொண்
டுள்ள கண்மணி என் மனத்திற்கேற்ற மகா சுந்தரி யென்பதே எனது
அபிப்பிராயம்.

பிரகாஸம்:—என் போன்ற அழகுள்ள பெண்கள், மற்றப் பெண்களைப்
புகழ்ந்து பேசுகிற மனிதர்களின் வார்த்தைகளை விரும்புகிறதில்லை. இது
லோக சகஜம்.

ஆரிய:—நீ கூறியதும் சரியே. என்னை இவ்வளவு தூரம் விசாரித்து என் வரலாறுகள் முற்றிலும் தெரிந்துகொண்ட நீ, உன்னைப் பற்றிய ஒரு செய்திகூட வெளியிடாததை நோக்கின், நீ சாதாரணமான கன்னிகையல்லவென்பதை, இந்த உனது சாமர்த்தியமே நன்கு தெரிவிக்கின்றது. யோசித்துப் பார்க்காமல் வாய்ப்பட்டித்தனமாகப் பேசுகிற ஸ்திரீகள், என்ன பேசுகிறார்களென்பதை அறிந்துகொள்வது மனிதர்களுக்கு சுலபம்; ஆனால் வாய்ப்பட்டியில்லாமல் எதையும் யோசித்துச் சாவதானமாகக் காரியங்களைச் செய்யும் உன்னைப் போன்ற ஸதிரீகளினுடைய மனத்தின் ஆழத்தை அறிந்து கொள்வது மனிதர்களுக்குக் கடினந்தான்.

பிரகாஸம்:—ஆம் உண்மையே. பல்லைக்காட்டிப் புன்னகைபுரியும் ஸ்திரீ, பல்லைக் காட்டி அழுகின்ற ஸ்திரீயைவிட, தான் சாதிக்கவேண்டுமென்று மனதிற் கொண்ட காரியத்தை எளிதிலும் விரைவிலுமாக என்னைப் போல நிறைவேற்றிக் கொள்கிறாள்.

ஆரிய:—அப்படி நீ என்னிடமிருந்து சாதித்துகொண்ட காரியமென்ன?

பிரகாஸம்:—அதுவா; சொல்லவா; என்று கூறிக்கொண்டே அவன் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து நானே தாங்கள் இச்சித்த பிரகாஸலக்ஷ்மி என்றாள். அதற்கு ஆரியகுமாரன் என்ன, என்ன நீயா நீயா என்று பிரமித்து நின்றான். பிரகாஸ லக்ஷ்மியை ஏற்கெனவே நேரில் கண்டிருந்தும், அவளுடைய யௌவன விசேஷத்தாலுண்டான மாறுதல்களாலும் தலை மீதிருந்த அவளது வஸ்திரம் முகத்தை விசேஷமாக மூடியிருந்ததாலும் ஆரிய குமாரனுக்கு, முன்பு தான் பார்த்த பழய உருவமே எதிரில் நிற்கிறதென்பதையறிந்து கொள்ள ஹேது வில்லாமற் போயிற்று. பிரகாஸ லக்ஷ்மீ அவன் செவியில் சில ரகசியங்களைச் சொல்லி ஒரு முத்தம் தந்தாள். பிறகு இருவரும் ஒரே குதிரையின் மீதேறி அக்காட்டைக் கடந்து சென்றனர்.

## அத்தியாயம். 7.

அமரஸிம்ஹரைப் பற்றிச் சில ரகசியமான செய்திகளைப் பிரகாஸ லக்ஷ்மி அறிந்திருந்தாள். ஆகவே அதை ஆரிய குமாரனுக்கு எடுத்துச் சொல்லி அவரை நாடிப்போகிற அவனைத் தடுத்துவிட்டு, தன்னை வேதபுரிக்குக் கொண்டுபோய் விடும்படி செய்துகொண்டாள். என்னதான் தீரத்துவம் வாய்ந்தவர்களாயிருந்தாலும் ஸ்திரீகளுக்கு எதிரிலே புருஷர்களுடைய சாமர்த்தியமும் சுதந்தரத்துவமும் பயன்படாதானதால் ஆரிய குமாரனும் அதற்கொப்பினான். இருவருமாக வேதபுரிக்குச் சென்றனர். பிரகாஸலக்ஷ்மி தன் வரவை அரசிக்கு அந்தரங்கமாகத் தெரிவித்தாள். மாலை ஆறு மணிக்கு வந்து சந்திப்பதாகவும், அதுவரையில் அரண்மனையிலுள்ள ஓரிடத்தில் இருக்கும்படியும் செய்தி அறிவித்து, அவளுக்கு வேண்டிய உபசாரங்களும் நடக்கலாயிற்று. பிரகாஸலக்ஷ்மி இனி தனக்குப் பயமில்லை என்று கண்டுகொண்டவளாய் ஆரிய குமாரனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினாள்.



“அன்பரே! தாங்கள் சப்தசிந்தவத்தைச் சேர்ந்த கௌரி விலாஸத்திற்குப் போய் ஒரு முக்கியமான சங்கதியை அங்குள்ள வசந்தமாலாவுக்குத் தெரியாமற் சொல்லி அவளையும் யாதொரு தீங்கின்றிக் காப்பாற்றுவதோடு இந்த ரகஸ்யத்தைத் தாங்கள் யாரிடமும் வெளியிடக்கூடாது. கௌரி விலாஸத்தின் நடுக்கூடத்திலிருந்து பின்புறம்போகும் வழியில் ஓர் ஜன்னல் தோன்றும். அதினின்று 24 செங்கல்கள் எண்ணிக்கொண்டுவந்து ஞாபகம் செய்துகொள்ளுங்கள். அதிலிருந்து கீழே 7-வது செங்கல்லைக் கையால் அமுக்கினால் இரட்டைக் கதவுகள் தாமே திறந்துகொள்ளும், மற்றதெல்லாம் செங்கல்களின் பாவனையாக இருக்கும். அதினுள் அத்தியந்த ஸௌந்தரனான ஓர் யுவகன் வசிக்கிறான். அவனை எப்படியாவது வஸந்தமாலா என்ற பெண் பாராதவண்ணமாக வெளிப்படுத்திவிடவும்; இதற்கு முதலில் அவளுடைய சிநேகமின்றித் தாங்கள் போகமுடியாதாகையால் அவளுக்குத் தனியான கடிதம் ஒன்று கொடுக்கிறேன். தாங்கள் சாவகாசமாகச் செய்யலாம் என்று எண்ணியிருக்கக் கூடாது. பாழும் முதல் மந்திரி என்னென்னவோ துராலோசனைகள் செய்து வீட்டையும் இடிப்பான் போலிருக்கிறது. இதை முடித்து விட்டு என்னைத் தயவு செய்து இங்கு வந்து பார்க்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்” என்றாள்.

ஆரியகுமாரன் அதற்கிணங்கி விடைபெற்று சப்தசிந்தவத்தை நோக்கிச் சென்றான். பிரகாஸலக்ஷ்மியின் மந்தஸ்மிதமான முகம் அடிக்கடி ஞாபகத்திற்கு வந்து கொண்டிருக்க, அவள் நிமித்தம் வேலை செய்யப் போவதான சந்தோஷத்தால் அங்கம் பூரித்தவனாகி வழி நடப்பதும் தெரியாமல் சென்றான். கடைசியாக கௌரீ மந்திரத்தையும் அடைந்தான். அதிகாலையில், வஸந்தமாலாவைப் பார்க்கவேண்டுமென்று ஓர் கடிதம் எழுதியனுப்பினான். கொஞ்ச நேரத்தில் வஸந்தமாலாவின் அறைக்கும் அழைத்துக்கொண்டு போகப்பட்டான்.

ஆரிய குமாரன் பிரகாஸலக்ஷ்மியால் தரப்பட்ட கடிதத்தை அவள் கையில் கொடுத்தான். பிரகாஸலக்ஷ்மியின் கையெழுத்தை அறிந்திருந்தமையால் உடனே பிரித்துப் பார்த்து சந்தோஷங்கொண்டு தாங்கள் எவ்வளவு நாட்கள் தங்கியிருப்பதென்றாலும் இருக்கலாம்; இவ்வீடும் இதன் வேலையாட்களும் தங்களுடையதே. நான் தங்களுடைய குழந்தையே என்று கொஞ்சும் மொழியுடனும் புன்முறுவலுடனும் பாஷித்தாள் வஸந்தம். தான் வந்த காரியத்தை உடனே நிறைவேற்ற எண்ணினானேனும் வஸந்த மாலா இவனுடன் கூடவேயே இருந்தமையால் முடியாமற் போயிற்று. அன்று பகல் முழுமையும் இவ்விதமாக, சாயங்காலமே இராப்போஜனம் செய்து படுக்கைக்குச் சென்றான் ஆரிய குமாரன். சுமார் பத்து நாழிகை இருக்கும். மெதுவாக எழுந்து போய் கடிதத்தில் உள்ளவாறு கற்களை எண்ணிக்கொண்டு வந்து குறிப்பிட்ட கல்லைக் கையால் அமுக்கவே, அதி உத்கிருஷ்டமான இரண்டு கதவுகள் திறக்கப்பட்டன; உட்சென்று பார்த்தான்; யாரையும் காணோம்; பலநாட்களாக அதில் யாரும் வாசம் செய்ததாகவும் தோன்றவில்லை. இதுதான் அவள்

அடையாளம் சொல்லிய அறையோ அல்லவோ வென்று சந்தேகித்தான்.
செய்வது இன்னதென்று தெரியாமல் விழித்து, பிரகாஸலக்ஷ்மியின் விதிதப்
படி நடக்கமுடியாததைப் பற்றி வியசனம் அடைந்து நிற்கையில், மெத்தைப்
படியினின்றும் யாரோ மெதுவாய்க் கீழிறங்கிவருவதாக உணர்ந்து சூத்திரக்
கதவை சாற்றப்போகும் தருணம் வஸந்தமாலா பிராப்தமாயினாள். ஒருவரை
யொருவர் பார்த்து பிரமித்தனர். இந்த இரகசிய அறை வஸந்தமாலாவுக்குத்
தெரிந்துவிட்டதே என்று அவன் யோசித்தான். தனக்குத் தெரியாமல்
இந்த அறையை மூடிவைத்திருந்தார்களே என்று வியசனப்பட்டாள் வஸந்த
மாலா. தான் அன்று யுவாபுருஷனைக் கண்டவிடம் அதுவே என்றும், இந்த
இரகசியத்தை இன்றையதினம் வந்த மனிதன் அறிந்த விதம் எப்படி என்றும்
பல சந்தேகங்கள் இவள் மனதில் தோன்றிற்றே யாயினும் கேட்கத் துணியு
வில்லை.

உடனே ஆரியகுமாரன் வஸந்தமாலா! மேல்மாடிக்குப்போவோமா
என்று அழைக்கவே இவள் ஒன்றும் பேசாமல் சூத்திரப்பாவைபோல் அவன்
பின் தொடருவாளாயினாள். மாடிக்குச் சென்றதும் வஸந்தமாலாவின் சந்
தேகத்தை நிவர்த்திசெய்ய வெண்ணிய ஆரிய குமாரன், வஸந்தமாலா! என்னை
நீ அங்கே பார்த்தவுடன் ஆச்சரியமடைந்தாய் என்று கண்டுகொண்டேன்.
நான் கீழே போகும்பொழுது இந்த அறை தானே திறக்கப்பட்டது; அதின்
அதிசயங்களைப் பார்த்துக்கொண் டிருக்கும் சமயத்தில் நீயும் வந்தாய் என்
றான். இதையும் உண்மை யென்றே எண்ணினாள் வஸந்தமாலா.

தான் வந்தகாரியம் சித்தியடையாமல் போகவே இரண்டு நாட்கள்
தங்கி இருந்து வஸந்தமாலாவிடம் விடை பெற்றுக்கொண்டு சென்றான்.

ராஜதானிப் பட்டணத்தையடைய வேண்டுமென்ற அவாவுடன் செல்
கிறான் அப்பொழுது இரவு சுமார் பத்துமணி இருக்கும். காட்டுமார்க்கத்
தையடைந்தான். மேகங்கள்சூழ்ந்ததுபோல் மரங்கள் அடர்ந்திருந்தமையால்
சந்திரவெளிச்சம் நன்றாகத் தோன்றாமல்கொஞ்சங் கொஞ்சம் தோன்றி மறைந்
தது. இந்த அந்தகாரத்தில் வழி நடக்கிறான் ஆரியகுமாரன். கொஞ்ச தூரத்
தில் பல தீவட்டிகளின் வெளிச்சம் தெரியவே, அங்கு யாரோ பலர் இருக்
கிறார்கள் என்பதை அறிந்து கொண்டான். அவர்கள் யார் என்று அறியும்
பொருட்டு நெருங்கவே, ராஜபடர்கள் என்பதை உணர்ந்து, தோகையில் பல
ரிருப்பதால் தன் சாமர்த்தியம் செல்லாதென மதித்து பின்நோக்கியோட ஆரம்
பித்தான். இவனைக்கண்ணுற்ற ஓர் ராணுவவீரன் புலிபோல் பாய்ந்து இவனைப்
பிடிக்கவந்தான். ஆரியகுமாரன் ஓடுவதை நிறுத்தி தன் கையிலிருந்த வாளால்
அவன் மண்டையில் போடவே, அடியற்ற மரம்போல் அலறிக்கொண்டு வீழ்ந்
தான். இருந்தாப்போ லிருந்து சப்தம கேட்கவே, பலர் உள்ளூர திகிலடைந்து
ரால் நடுங்கி நிற்க, பின்னும் சப்தம் அதிகமாகவே, அஃது யாதென அறிய
இருவர் வந்தனர். இவர்களையும் ஓர் கை பார்த்தான் ஆரியகுமாரன். இங்கே
இப்படி இருக்க, கூட்டத்தினின்று எல்லோரும் ஓட்டம் பிடிக்கின்றனர்;



சுமார் இருபது வயதுள்ள ஓர் யுவகன் வத்தியவாளும் கையுமாய் பம்பரம்
போல் சுழன்று வந்து ஆரியகுமாரனை யணுகிச் சற்று உற்று நோக்கினான்.

இவன் ராணுவவீரன் அல்லன், நம்மைப்போல் ஒருவன் என்றெண்
ணிய யுவகன் ஆரியகுமாரனைப் பார்த்து ஐயா! தாங்கள் யாராக இருப்பினும்
சரியே. என்னை இந்த துராத்மாக்கள் அநியாயமாகக் கொலை களத்துக்கு
இழுத்துச் செல்கின்றனர். இருந்தாப்போ லிருந்து சப்தம் கேட்டது; இரு
வர் சென்றனர். மற்றவர் சற்று அங்குமிங்கும் பார்த்துக்கொண்டிருந்தனர்.
என் கைவிலங்குகளை உடனே எடுத்துவிட் டெறிந்தேன்.—இன்னும் அவர்
களில் சிலர் வருகிறார்கள் போலிருக்கிறது. எனது விருத்தாந்தத்தைப் பிறகு
சொல்கிறேன். வாருங்கள் ஓடி விடுவோம் என்றான். உடனே இருவரும்
அதிவேகமாய் அந்தகாரம் சூழ்ந்த அந்த அடவியைக் கடந்து மறைந்தனர்.

## அத்தியாயம். 8.

"கண்மணீ! நான் சொல்லுகிறபடி கேட்பையேல் உனது எண்ணங்
கள் யாவும் கை கூடும். இன்று முதற் கொண்டு நீயே அரசி. பயித்தியக்காரி
போல் யோசிக்காதே. நான் அழகில் என்ன குறைவா! நீ எனக்குத் தகுந்த
வளல்லவா? நான் சொல்வது உனக்கும் சம்மதமென்றே நினைக்கிறேன். உன்
னைக் கண்டது முதல் எனக்கு நல்ல போஜனமில்லை. சுகநித்திரையையும்
விட்டேன். இதே ஏக்கம். தயை செய்யாயோ கிள்ளையை யொத்த செல்வ
மொழியாளே."

"அண்ணா! அடாத மொழிபகராதீர்கள். நான் தங்களுக்கு சகோ
தரிக்கு சமமல்லவோ? நீதிபரிபாலன கர்த்தாவாகிய தங்களுக்கு நானென்ன
சொல்லப் போகிறேன். நான் இங்கிருப்பதை தயைகூர்ந்து அரசியிடம்
சொல்வீர்களேல் இந்த உதவியை என் உயிர் உள்ளளவும் மறவேன்."

"இந்த வார்த்தைகளால் என்னை ஏமாற்றிவிடலா மென்றெண்ணாதே.
அண்ணாவாகவேண்டு மென்றாலும் வைத்துக்கொள். வேறேதாக வேண்டு
மென்றாலும் வைத்துக் கொள். நான் கேட்டபடி மட்டு ஓர் முறை—"

பிரகாஸலக்ஷ்மி மௌனம் சாதித்தாள். அவன் பன்முறை பயமுறுத்தி
யும் பதிலுரையாமல் இருக்கவே, இன்னும் சின்னாள் பார்ப்போமென்
றெண்ணிச் சென்றான்.

பிறகு பிரகாஸலக்ஷ்மி தனித்திருக்கையில் பாதகனாகிய மந்திரியின்
வசனங்களை நினைத்து நினைத்து மனம் நொந்து அழுது—அடபாதகா! உன்
அதிகாரம் எவ்வளவு நாளடா—அநியாயம் தலை எடுத்தாடுகிறதே. இவ்விதந்
தானோ அரசியையும் பயமுறுத்துகிறாய்? மஹாபாபி! உனக்கு அந்தியகாலம்
சமீபித்ததோ தெரியவில்லை பகவானுக்குமா கண்ணில்லை. உனது துர்ப்போ
தனையால் எத்தனை ஜனங்கள் உயிர் துறக்கின்றனர். எவ்வளவு பதிவிரதை

களைக் கற்பழித்தனையோ! இன்று என்னையும் பெண்டாள வந்தாய். நீ தான் சந்திரபோளைப் பிடிப்பதற்கு அரசிக்குத் தெரியாமல் வாரண்டு அனுப்பியிருக்கவேண்டும். ஐயோ இன்று காலையில் நான் அரசியைப் பார்க்கவேண்டுமென்று இராஜாங்க காரியஸ்தரிடம் தெரிவித்தபோது, அரசி மாலை ஆறு மணிக்கு வந்து சந்திப்பார் என்று உத்திரவு வந்ததே. அதை உண்மையென்றல்லவோ நம்பிமோசம் போனேன். ஆறு மணிக்கு அரசி வருவதற்குப் பதிலாக இந்தப் பாதகனான மர்திரியைக் காணும்படி நேரிட்டதே! என்ன கஷ்டகாலம்!! எனது வருகையை இந்த மந்திரி அரசிக்குத் தெரிவிக்காமல் என்னை அகப்படுத்தும் பொருட்டு இப்படிச் செய்திருக்கிறான். என்ன செய்வதென்று பிரலாபித்துக் கொண்டு நின்றாள்.

சீதா பிராட்டியாருக்கு இலங்காபுரியில் திரிசடை துணையாக வாய்த்ததுபோல இவ்விடத்திலும் பிரகாஸலக்ஷ்மிக்கு அவளைக் காக்கும்படி நியமிக்கப்பட்டவர்களிலே கிழவி யொருத்தி அவளுக்கு சகாயமானாள். கற்பு சீலத்தைத் தவிற விடுகிறதில்லை யென்ற மனோவுறுதி உள்ளவர்களுக்கு எந்த இடத்திலும் தெய்வம் நின்றுதவு மென்பது திண்ணம். பிரகாஸலக்ஷ்மி கிழவியைப் பார்த்து இந்த ஆபத்திலிருந்தும் தப்புவிக்க வழியொன்று மில்லையா என்று கேட்டாள். எந்த இடத்திலும் பெண்கள் மற்றப் பெண்களுடன் கலந்து ஒற்றுமைபட்டுக்கொள்வர். வெகு துரிதத்தில் சிநேகிதிகளுமாகி விடுவர். தங்கள் ரகசியங்களையும் வெளியிட்டுக்கொள்வர். பரஸ்பரம் உதவி செய்து கொள்ளவும் முயலுவர். புருடர்களுக்குள் இந்த சுபாவம் அரிதாயிருக்கிறது.

"யோசித்துச் சொல்கிறேன். ஒன்று செய்யவேண்டும். அரசியின் கணையாழியை இப்பொழுது மந்திரி வைத்திருக்கிறானாகையால் அதை ஏதேனும் ஏற்பாடுசெய்து தாங்கள் வாங்கி என்னிடம் கொடுத்தீர்களானால் தகுந்த தட்டானைக்கொண்டு அதைப்போலவேயே ஒரு போலி மோதிரம் செய்து கொடுக்கிறேன். உண்மையான மோதிரத்தைக்கொண்டு நாம் எதுவேண்டுமென்றாலும் செய்யலாம்."

"சரி அதற்கென்ன! அந்த பாதகனுக்கு ஆசை வார்த்தைகாட்டி அம்மோதிரத்தை வாங்கிக்கொடுக்கிறேன். இன்று இரவுக்குள் இரண்டும் வந்துசேரவேண்டு" மென்றாள் பிரகாஸலக்ஷ்மி. கிழவி இந்த யோசனையை ஒப்புக்கொள்ளவே, பிரகாஸலக்ஷ்மி மந்திரிக்கு ஓர் கடிதம் எழுதி கிழவியினிடம் கொடுத்தனுப்பினாள். அக்கடிதத்தின் வாசகசேர்மைகளைக் கண்டு ஆனந்த பரவசனாய், தனக்கு அப்பெண்மான் கிடைத்தது தான் பூர்வத்தில் செய்த தவப்பயனே என்று சந்தோஷம் கொண்டு அந்தக்ஷணம் அவளை வந்து பார்ப்பதாய் கமலா யெனும் பெயருள்ள அக்கிழவியிடம் சொல்லி அனுப்பினான். கமலா இந்த சங்கதியைப் பிரகாஸலக்ஷ்மிக்குச் சொல்லிவிட்டுத் தன்னிடம் ஏகினாள்.

அதிசீக்கிரமே வந்தான் மந்திரி. அவனைக் கண்டவுடன் பிரகாஸலக்ஷ்மி ஓர் சாமர்த்தியம் செய்து புன்சிரிப்பு காட்டினாள். காமாந்தகாரனாகிய மந்



திரி அவள் கையிலகப்பட்ட சூத்திரப்பாவை யாகினான். பிறகு பிரகாஸலக்ஷ்மி தான் மௌனம் சாதித்ததின் தாற்பரியம் சம்மதமே என்று உணர்த்துவதற்காகத் தானென்றும், அவனைக் கண்டது முதலே அவனது ரூபத்திற்கு அடிமையாயினாள் எனவும், பெண்பாலாகையால் நாணமிகுதியினால் தான்வலுவில் உடன்படத் தாமதப்பட்டதென்றும், ஆரம்பத்தில் கொஞ்சம் 'பிகு' செய்து கொண்டால் நல்ல வார்த்தை சொல்வது தங்கள் கடமை யாகும் என்றும் சரமாரியாகப் பொழிந்தாள். அவளுடைய சாதுரியமான பேச்சுகள் எந்த புமானின் மனதைத்தான் இளகச் செய்யாது? ஆகையால் மந்திரியும் இவள் வார்த்தையில் நம்பிக்கை வைத்தது வியக்கற்பாலதன்று. அந்த நேரமே ஆலிங்கனம் செய்ய ஆசை கொண்டான். அதைக் கவனித்த பிரகாஸம் அவனைப் பார்த்து—"பிரபோ! கிணற்று நீரை வெள்ளங்கொண்டு போகுமா? மானிடஜென்ம மெடுத்தும் கேவலம் மிருகாதிகளைப் போல் சுகித்திருப்பது சரியோ? அப்படியானால் நமது அறிவால் பயனென்ன? சந்தோஷம் அடைய வேண்டியது தான்; ஆனால் சதாகாலமும் சிற்றின்பத்திலேயே கழித்தால் நம் ஜென்மம் சாபல்யமாகும் மார்க்கத்தை நாடுவதெப்போது? இந்த சரீரம் எப்பொழுதும் நிலையுள்ளதா அப்படியுமில்லையே. இப்பிறவி தப்பினால் எப்பிறவியோ யார் கண்டார்கள்? எமன் வந்து ஹிம்சை செய்கையில், பதினாயிரம் சுகதுக்கங்களுக்குப் பாத்தியக்காரிகளாக நாங்கள் இருந்தபோதிலும், எங்களால் பயனென்ன? ஓடியாடித்திரிய சக்தியுள்ளளவும் அதிகமான பிரேமையோடும் விஸ்வாசத்தோடும் இருப்போம். தேகவலுவு குன்றிற்றேயானால் எங்களுக்கு அன்பும் அப்படியே தான். உயிர் போகுமேயானால் அத்துடன் அன்பு முற்றிலும் போய்விடும். இதனால் தானே எங்களை சந்தையின் கூட்டமென்றார். ஆகையால் இப்பொழுது நாம் செய்யவேண்டுவதென்னவென்றால், கேவலம் காமுகர்களாய்த் மாறுவதை விட ஓர் சுபலக்னத்தில் உலகோர் அறியப்பாணிக்கிரஹணம் செய்து கொண்டு கொழுநன் மனைவியாக இருந்து, இந்த சம்சாரமாகிய துக்க சமுத்திரத்தைக் கடந்து நாம் உய்யும் வழியைத் தேடுவோம்" என்றாள் தருணி! இவளுடைய கல்வியை மெச்சினான் காமுகன். கண்ணே உனது விருப்பம் அஃதாயின் எனக்கும் சந்தோஷமே. நீயே எனக்கு சகலமும், உன் நிமித்தம் என் உத்தியோகத்தையும் விட்டு உனக்குப் பணியாளனாக இருப்பேன். உனக்கு கேவலம் சரீரரூபம் மட்டும் இருக்கிறது என்றெண்ணினேன். ஆனால் உன் வித்தியா பூஷணத்தை நோக்குங்கால், பொன் மலர் நாற்றமுடைத்து என்றவாறாயிற்று" என்றான்.

"சகே! உங்கள் கையில் ஜ்வலிக்கும் மோதிரம் என் கைக்குச் சரியாக இருக்குமோ?"

"ஆகா! அதிலென்ன தடை! ஆனால் இது அரசியினுடையது. இதை என்னைத் தவிர மற்றவர்கள் அணியக்கூடாது. உனக்குவேண்டுமென்றால் இதைவிட விலை மதிக்கக்கூடியதும், அதிசிலாக்கியமான ரத்தினங்களால் செதுக்கியதுமான இந்த மோதிரத்தை அணிந்து கொள்"

என்று மற்றோர் மோதிரத்தைக் கொடுக்கவே, பிரகாஸலக்ஷ்மியின் நேத்
திரங்களில் மழைத்துளியை நிகர்த்த கண்ணீர் பெருக ஆரம்பித்து, கண்ணு
டியை நிகர்த்த கபோலத்தில் ஆறுபோல் ஓடியது. அதை இலக்ஷியம் செய்யா
ததுபோ லிருந்தாள் கொஞ்சநேரம். பிறகு மந்திரியைப் பார்த்து, என்னிடம்
இருக்கிற பிரியம் நன்றாய்த் தெரிகிறதே. சற்று நேரத்திற்கு முன்பு என்
நிமித்தம் தங்களுடைய சகலத்தையும் விட்டுவிடுவேன் என்றீர்கள். பிறகு
தங்கள் இஷ்டம்; பிடிவாதம் பிடிப்பதாய் எண்ணக்கூடாது. தங்கள் ஹஸ்
தம் பட்ட எதையும் எப்பொழுதும் கௌரவமாக பாவிக்க எண்ணங்கொண்ட
வள் என்பதை நீங்களே அறிவீர்கள். அதிலும் எனக்கென்னமோ இதில்
பிரியம் சென்றது. பிறகு தங்கள் சௌகரியம் என்று சொல்லுமுன் இரண்டு
மூன்று முறை விம்முவதும், கண்ணீரைத் துடைப்பதுமாகவானான். உடனே
அதைக் கழற்றி அவளிடம் கொடுத்து, இன்று முழுதும் அணிந்துகொண்
டிரு தயவுசெய்து நாளையதினம் காலையில் கொடுத்துவிடு. அத்துடன் இதை
யும் அணிந்துகொள் என்று மற்றோர் மோதிரத்தையும் கொடுத்துச் சென்
றான். செல்லுமவனை நிறுத்தி சீக்கிரமாகவே கலியாணத்திற்கு வேண்டிய
காரியங்களை ஏற்பாடு செய்யும் படிக்கும், இனி அதிக நாள்கள் தாமதிக்க
முடியாதென்றும் கூறவே தன் ஜென்மம் சாபல்யமானதாக நினைத்து சரி
யென்றொப்புக் கொண்டு சென்றனன்.

ஆஹா! கடவுளுடைய சிருஷ்டிப்பின் பிரபாவத்தை என்னென்று
புகழ்வோம்! பெண்கள் மெல்லிய தேகிகளாயிருந்தாலும் அவர்கள் செய்யும்
ஸாகஸம் புருஷர்களுக்கு வரவே வராது. பகவான் தம்மிடத்தேயுள்ள விசேஷ
சக்திவிசேஷ முழுமையையும் மாதாரிடமே அமைத்து வைத்திருக்கின்றார்
போலும்! அந்த சக்தி விசேஷமல்லவோ உலகத்தை இவ்வளவு தூரம் நிலை
நிற்க வைத்திருக்கின்றது. ஆடவர் வெளிச்சென்று உலக துன்பங்களாலும்
சோதனைகளாலும் அடிபட்டு மிதியுண்டு சோர்ந்துபோய் உலகத்தின் மீது
வெறுப்பு மேலிட்ட சித்தத்துடன் வீடு திரும்புகின்றார்கள். இல்லஞ் சேர்ந்
ததும் தங்களின் ஸ்திரீகளை நோக்கியதும் பழய துன்பங்களை யெல்லாம்
மறந்து பின்னும் அவர்களின் பொருட்டாக உழைக்க உற்சாகமடைகிறார்கள்.
உலகத்திலே ஒரு மனுஷ்யனுக்கு மனைவிமக்கள் இல்லையாயின் அவன் வெகு
துரிதமாகவே பிரபஞ்சமாய்கையை வென்று விடுதல் கூடும். அவனது
ஆசைகள் வளர்ச்சி பெறாமல் சாந்தத்வத்தையடைந்து சுருங்கிப்போகின்றன.
இப்படி ஆகாதிருக்கச் செய்வது ஸ்திரீ சக்தி விசேஷமன்றோ?

அதுபோலவே பிரகாஸலக்ஷ்மியின் ஸாகஸத்திலே மந்திரியும் மயங்கிப்
போனான். இந்தவிதமான மாய்மால அழுகைக்கு இரங்கி எவ்வளவு ஐஸ்
வரியவான்கள் தங்களின் செல்வமனைத்தையும் பொது மகளிருக்கு அர்ப்பணம்
செய்து தங்க நிழலற்றும் குடிக்கக் கூழற்றும் திண்டாடி யிருக்கின்றார்கள்?
இந்த அழுகையையே பெரிய ஆயுதமாகக்கொண்டு தங்கள் தேகமெல்லாம்
பொன் காய்க்கும் மரமென்னும்படி ஆபரணாதிகளால் நிறைவித்துக் கொண்ட
சுந்தரிகளும் வெகுபேர். இந்த இந்திரஜால அழுகையைக் கொண்டுதானே



கைகேசியும் தசரத சக்கரவர்த்தியைத் தன் வசப்படுத்தலானாள். தாய் வீட்டுக்
குச் செல்ல விரும்பும் பெண்களுக்கு இந்த அழுகையே தான் புருஷர்களிடம்
உத்தரவும் வாங்கிக்கொடுக்கின்றது. தன்னைச் சேர்ந்தவர்களை யெல்லாம் தன்
புருஷன் வீட்டில் சேர்த்துவைத்துக் கொள்வதற்கும் இந்த அழுகையே
ஸ்திரீகளுக்கு அதிக சகாயமா யிருக்கிறது. தங்களை அல்லது தங்களின் விருப்
பங்களைப் புருஷர்கள் எதிர்த்து நிற்கும்போது அவர்களை வசப்படுத்துவதற்
கும் இந்த அழுகை வெகு பிரயோஜனமா யிருக்கிறது. இப்படியே குழந்தை
களின் அழுகையானது அவர்களின் இஷ்டப்படி பெற்றோர்களை நடக்க வைக்
கிறது இந்த அழுகையை ஸ்திரீகளிடமும் குழந்தைகளிடமும் கற்றுக்
கொண்டு அதைத் தாங்களும் அநுஷ்டித்து மற்றவரை ஏமாறவைக்கும் சாமர்
த்தியமும் சில புருஷர்களிடம் காணப்படுகின்றன. ஒப்புக்குத் துக்கம்
கொண்டாடப் போகிறவர்களுக்கும் இந்த அழுகை அதிக உதவியைச் செய்து
அவர்கள் வாஸ்தவமாகவே துக்கப்படுகிறார்களென்று பிறரை நம்பவைக்கிறது.
வீட்டிலே தாயானவள் தன்னிஷ்டப்பட்ட இடத்தில் தன் மகனுக்கோ மகளுக்
கோ விவாகம் நடப்பிக்கச் செய்வதற்குப் புருஷர்களைச் சம்மதிக்கும்படி செய்
வதும் இந்த அழுகையே. கலியாணத்திற்கு அதிக செலவு செய்யும்படி ஏவ
வைக்கிறதும் இந்த அழுகையே. தீபாவளி போன்ற விசேடங்களிலும் அவ
ரவர் மனப்படி நடந்தேறச் செய்விப்பதும் இந்த அழுகையே. சிறுவனும்
சிறுமியும் அந்தரங்கத்திலே ஸ்திரீபுருஷர்களாகிப் பிறகு வீட்டை விட்டு
ஓடமுயலுவதில், அதற்கெல்லாம் அவனை அல்லது அவளைச் சம்மதித்து நடக்
கும்படி செய்வதும் இந்த அழுகையே. இவ்வாறாக இந்த அழுகையிலே
பெரும் விசேஷங்களெல்லாம் நடப்பதாயிருப்பதால் மந்திரியும் மதிமருண்டு
பிரகாஸலக்ஷ்மியின் வசப்பட்டுப் போனான்.

## அத்தியாயம். 9.

ஆரியகுமாரனோடு ஒரு யுவகனும் சேர்ந்து கொண்டு ஓடி மறைந்த
தாக முன்னொரு அத்தியாயத்தில் தெரிவித்திருக்கிறோம். வெகு தூரம்
சென்று ஓரிடத்தில் தங்கினர். யுவகன் தன்னுடைய சரித்திரத்தைத் தெரி
விக்கலானான்.

என் பிரிய ஆரிய குமாரா! இன்று முதற் கொண்டு நீயே எனக்குப்
பிராணமித்திரன். என் சரித்திரம் வெகு விசித்திரமானது.

நவத்துவீபத்தில் ராஜவம்சத்தைச் சேர்ந்த ராஜகேசரி என்பவருக்கு
ஓர் ஆண்குழந்தையும் ஓர் பெண்குழந்தையும் இருந்தன. கொஞ்ச காலத்தில்
ராஜகேசரி உயிர் துறந்தலும், அவருடைய மனைவியான கமலாபாய் தன்
இரண்டு குழந்தைகளையும் பக்கத்துப் பட்டணத்தில் ஓர் பண்டிதரிடம் ஒப்பு
வித்து, தான் தன் ஆஸ்திகளையும் கொண்டு வந்து விற்று ஜீவித்து வந்தனன்.
பையனுக்கு வயது பதினெட்டு; பெண்ணுக்கோ பத்துக்கு மேல் இராது.

பையனின் பெயர் அமரஸிம்ஹன் என்று சொல்வர். பெண்ணின் பெயர் பிரேமநிதி இருவரும் சகல கலைகளிலும் தேர்ந்தனர். அமரஸிம்ஹனுக்கு விவாக காலம் சமீபித்தது. தகப்பனற்ற பிள்ளைகளுக்கு பெரிய இடத்து சம்பந்தம் ஏற்படுவது துர்லபமாகையால் ஓர் ஏழையின் மகளை அவனுக்கு இல்லறத் துணைவி யாக்கினாள். கொஞ்ச காலத்தில் அவளும் தன் நாதன் போன வழியை அடைந்தாள். பிறகு அமரஸிம்ஹன் தன் தங்கையான பிரேமநிதியை ஓர் தளகர்த்தனுக்குப் பாணிக்கிரஹணம் செய்து கொடுத்தான். அவளுக்கு ஓர் பெண்ணும் ஓர் ஆணும் உண்டு; ஆண் பிள்ளையைப் பெற்றவுடன் பிரேமநிதி அந்தகன்பதி யணுகினாள். தளகர்த்தனோ வென்றால் குழந்தைகளை ஓர் கிழவியிடம் ஒப்புவித்து வேசிக்கள்ளனாய்த் திரிந்து உத்தியோகத்தையும் இழந்து பேயன்போல் பல விடங்களிலும் சுற்றித் தன் வாழ்நாட்களைப் போக்கினான். கிழவியோ தன்னிடம் பொருள் அதிக மின்மையால் பெண் குழந்தையை மட்டும் தான் வைத்துக்கொண்டு, ஆண் பிள்ளையை ஓர் அரண்மனை உத்தியோகஸ்தனிடம் கொடுத்து வளர்த்து வரும்படி சொன்னான். அவனுக்கும் குழந்தைகளில்லை யாதலால் இவனையே தன் பாலகனாகப் பாவித்து வந்தான். இந்தச் சிறுவனது துரதிர்ஷ்டமோ என்னவோ அந்த உத்தியோகஸ்தனுக்கு இரண்டு குமாரர்கள் ஜனித்தனர், பிறகு அவன்மீது அவ்வளவு சிரத்தையில்லாமல் போய்விட்டது. அவன் ஏதோ தன் சாமர்த்தியத்தினால் சர்வகலா நிபுணனாக விளங்கினான். அதைக்கண்ட அரசி அவனைத் தனக்கு சகாயமாகக் கொண்டாள். அவன் தான் நான். என்பேர் ராம்மோகனன்.

நிற்க, ராஜகேசரியின் குமாரனான அமரஸிம்ஹனைப்பற்றி கொஞ்சம் சொல்கிறேன். அவனுக்கும் ஓர் பெண் குழந்தை பிறந்தது. அதின் அதிர்ஷ்டம் தானோ என்னவோ தினே தினே அவனுக்கு கஷ்டத்திற்கு மேல் கஷ்டமும் மனைவிக்கு நித்திய வியாதியும் ஏற்பட்டது. ஓர்நாள் தன் மனைவி இறந்து விடுவாள் என்று சந்தேகித்து அவள் படுக்கை யண்டையிலேயே காத்திருந்தான். அவளும் இவனைப் பார்த்து "நானோ சாகப்போகிறேன் என் அருமைக் குழந்தைக்குக் கலியாணத்தை யேனும் செய்வித்துக் கண்ணாரக் காணவேண்டு" மென்றனள். உடனே அவளுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்றெண்ணி தன் வீட்டிலேயே வாசம்செய்து வந்த ஓர் வாலிபனுக்கு நிச்சயம் செய்து மறுதினமே விவாகம் நிறைவேற்றினர். பிறகு நாளுக்குநாள் அவன் மனைவிக்கும் தேகம் சௌக்கியம் அடைய ஆரம்பித்தது. கடைசியாக பூர்ண சொஸ்தமாயிற்று. அவர்கள் குடியிருந்த ஊரில் பஞ்சம் அதிகமாகவே வேறெங்கேனும் போய் உயிர் பிழைக்க எண்ணினர். இச்சமயத்தில் அமரஸிம்ஹனுடைய பால்யநேசர் ஒருவர் அவர்களை உடன் அழைத்துவரும்படி அனுப்பிய ஏவலாட்கள் வந்து சேர்ந்தனர். அச்சமயம் தனது புத்திரியினுடைய கணவன் வெளியூருக்குச் சென்றிருந்ததால் அவன் வந்ததும் அவனுடன் சேர்ந்துகொள்ளும்படியும் ஒரு வருஷத்திற்குள் திரும்பி விடுவதாகவும் சொல்லி தனது புத்திரியை அந்தக் கிராமத்திலே யிக்க



தனவந்தனான ஒரு பிரபுவின் வீட்டில் விட்டுவிட்டு, தானும் தனது மனைவியுமாக தன் நண்பனிருக்கும் நவத்வீபத்தை நோக்கிச் சென்றான். பிறகு அவரைப்பற்றிய செய்திகள் ஒன்றும் தெரிந்துகொள்ள முடியவில்லை. அவனுடைய புத்திரியைப்பற்றிய சமாசாரமும் அறிவதற்குக் கூடவில்லை.

அது நிற்க, நான் இளமை முதற்கொண்டு அரசியின் ஆதரவிலேயே இருந்தேன். இவ்விதம் நாட்கள் கழிகையில் அரசி எங்கு சென்றபோதிலும் நான் கூடப்போவதென்று உத்தரவு செய்தாள். ஓர் நாள் சப்த சிந்தவத்திற்குச் சென்றிருந்தோம். அங்கே இவ்வரசியின் அந்தரங்கத் தோழரும், வயதிலும் புத்தி யுக்தியிலும் மிகுந்தவருமான சந்திரபாலைக் கண்டு இரண்டுதினம் அவர்கள் வீட்டிலிருந்தோம். அப்பெரியவர் குமாரத்தியோ யாரோ ஓர் பெண்வளர்ந்து வந்தாள். பெரியவரும் அரசியும் ராஜாங்க விஷயமான அந்தரங்கம் பேசிக் கொண்டிருக்கையில், நானும் அச்சிறுமியும் சந்தோஷமாய் பூங்காவில் ஓடியாடுவோம். ஒருவருக் கொருவர் செய்து கொண்ட வாக்குறுதியையும் மறக்கவும் மாட்டோம். வயது வந்த உடன் இருவரும் வதுவை செய்து கொள்ளுகிறதென்று நாங்கள் எங்கள் தலைமயிரை அறுத்து மாற்றிக் கொண்டோம். அதுதான் இது. பிறகு எனக்கு அங்கே போகும் பாக்கியம் கிடைக்கவில்லை. நான் வேறு வேலையில் நியமிக்கப்பட்டேன்.

ஒரு சமயம் அரசியை மந்திரி பலாத்காரம் செய்யப்போகையில் அவள் தீபத்தை யணைத்துவிட்டு நானிருக்கும் அறையின் பக்கமாக ஓடினாள். அந்த சப்தத்தைக் கேட்டு வெளிவந்த நான் அவன் முன்பாக எதிர்பட்டு நன்றாக உதைப்பிரயோகங்கள் கொடுத்தேன். இருட்டாயிருந்ததால் நான் என்பதை அவன் அறிந்து கொள்ள முடியவில்லை. ஆயினும் என்கையிலிருந்த புஸ்தகமொன்று அவனிடம் அகப்பட்டுக் கொண்டது. அதை மீட்டுக் கொள்ள சந்தர்ப்பமில்லாமற் போயிற்று. அப்புஸ்தகத்திலிருந்த என் பெயரைப் பார்த்து விட்டு நான் தான் அடித்திருக்க வேண்டு மென்றெண்ணி என் மீது துவேஷம் சாதிக்கலானான். மந்திரியின் கொடுமை நாளுக்கு நாள் அதிகமாயிற்று. ஒரு தரம் பாபம் செய்துவிட்டால் பிறகு அதிலுள்ள பயம் நிவிர்த்திப் பட்டுப்போக, மீண்டும் மீண்டும் அந்த பாவத்தொழிலிலேயே மனது தூண்டப்பட்டு அதிலேயே பிரவர்த்திப்பும், அதற்கான தைரியமும் முற்றிப் போவது லோகசகஜம். மந்திரிக்கும் அரசிக்கும் நாளுக்கு நாள் வார்த்தை வளர்ந்து கொண்டே யிருந்தது. நான் மந்திரியைக் கொலை செய்து விடப் பல சமயம் முயன்றும் அவன் தன் விஷயத்தில் சர்வஜாக்கிரதையுடன் இருந்தபடியால் கூடாமையாயிற்று.

ஒரு நாள் இரவு அமைச்சன் காமாந்தகாரனாய் அரசியின் அந்தப்புரத்திற்கு வந்தான். அப்போது மணி பன்னிரண்டிருக்கும். அரசியும் நானும் கட்டிலில் சயனித்துக் கொண்டு நித்தரித்தபடி யிருந்தோம். சிறு பருவத்திலிருந்து என்னை அன்புடன் வளர்த்தவளாதலாலும், அவளையன்றி நான் வேறொரு தாயையும் அறியாதவனாதலாலும் இளமை தொட்டே அவளிடம் தான் சயனித்துக் கொள்வது என் வழக்கம். இந்த வழக்கத்தை அரசி தன்

காரியத்திற்குச் சாதகமாக மாற்றலானாள். அதாவது பகல் முழுதும் நான் நித்திரை செய்வதும் இரவு முழுதும் அவளருகில் படுத்திருந்து விழித்த கண்களுடன் போலித்தூக்கம் காட்டி அவளைக் காப்பதுமாக ஏற்பாடு செய்து கொண்டாள். எனக்குத் துணையாக ஒரு தாசியும் இருந்தாள். எனக்கும் அவளுக்கும் நடுவில் அரசி சயனிப்பது வழக்கமாக இருந்தது. இவ்வளவு ஏற்பாடுகளுக்கும் அரசி தன் கற்பைக்காக்க முயன்றதே காரணம். இரவில் அந்தப்புரத்தினுள் எவராவது நுழைவாராகில் அந்த சப்தத்தை முன்னதாக நிலத்தில் பதியவைத்திருக்கும் மின்சாரக்கம்பிகள் மணியை யடித்துத் தெரிவித்து விடும். அந்தப் பள்ளியறையிலுள்ள கட்டிலின் கீழ் ஒரு சூக்ஷ்மமான பாதையுண்டு. மணியடித்த மறு நிமிஷமே அந்தப் பாதையின் கதவுதிறந்து கொண்டு இரண்டு நிமிஷத்திற்குள் மறுபடியும் மூடிக் கொண்டு விடும். உடனே தீபங்கள் அனைத்தும் அணைந்து போகும்.

அன்றையதினம் மந்திரி அவ்விடத்துக்கு வரவும் ஏற்கெனவே மணியோசையால் அறிந்து அரசியை எழுப்பினேன். அவள் தக்ஷணமே முன் சொன்ன ரகசியமார்க்கமாகக் கீழிறங்கிச் சென்றுவிட்டாள். தாசியும் நானுமே சயனித்திருந்தோம். மந்திரி உட்பிரவேசித்ததும் எங்களிருவரின் காக்ஷியைக் கண்டு தாசியை அரசி யென்றே நினைத்து என்னைப் பற்றிச் சந்தேகங் கொண்டான். அடுத்த நிமிஷத்தில் மின்சாரக் கம்பிகள் தங்களின் இன்னொருவேலையாகிய விசிறியை விசிறி விளக்குகளை அணைத்து விட்டன. அந்த இருட்டில் மந்திரி என்னைப் பலமாகப் பிடித்துக் கொண்டான். அவனைப் பின் தொடர்ந்து இருவர் துணைக்கு வந்திருந்தார்களானதால், அவர்கள் வசம் நான் ஒப்புவிக்கப்பட்டேன். மறுபடியும் விளக்கைக் கொளுத்த முயன்றும் மின்சார விசிறிகள் தங்கள் வேலையை முன்னிலும் பதின் மடங்கு அதிகமாகச் செய்து கொண்டிருந்ததால் தீக்குச்சிகள் நன்றாகப்பற்றுவதற்கு முன்னரே அணைந்து போவதாக இருந்தது. தாசியை அரசி யென்றே மதித்து அவளுடன் சுகித்துவிட்டு மந்திரி அவ்வறையை விட்டு அகன்றான்.

இருவர் கையில் நான் அகப்பட்டுக் கொண்டதாக மேலே தெரிவித்தேனல்லவா? பிறகு நான் விடப்பட்டுப்போனேன். அதற்கு மறுநாள் மந்திரி என்னை யழைத்து உயிர் பிழைக்கவேண்டுமாயின் ஓடிப்போவென்று கட்டளையிட்டான். அரசியினிடத்திருந்த அபிமானமானது என்னைவிட்டு அகலேனென்றது. இரண்டு மாதங்கள் பீதியுடன் இருந்தேன். ஓர் நாள் அதிகாலையில் வெளியில் எழுந்து வருகையில் நால்வர் என்னை வந்து வளைத்துக்கொண்டு கையையும் காலையும் கட்டி பக்கத்தில் அதற்கென்றே காத்துக்கொண்டிருந்த வண்டியில் ஏற்றினர். எவ்வளவு தூரம் பிரயாணம் செய்தார்கள் என்பது எனக்கே தெரியவில்லை. திடீரென்று வண்டியானது நின்றது. என்னை வண்டியினின்றும் கீழிறக்கினார்கள். உடனே என் கால் கட்டு அவிழ்க்கப்பட்டது. ஒருவன் என்னைப் பார்த்து பரிதாபப்பட்டு இவ்வழகனையோ நாம் வாளுக்கு இரையாக்குவது என்றான். மற்றவனோ யாராயின் நமக்கென்ன நமக்குப் பணந்தானே குறி என்றான். இப்பொழுது



தான் எனக்கு மந்திரியின் சதியாலோசனை தெற்றென விளங்கியது. என்னைக் கொலை செய்யப்போகிறார்கள் என்றும் நிச்சயம் செய்து கொண்டேன். வஸந்தமாலாவை அப்போது நினைத்துக்கொண்டேன். ஐயோ! உன்னை மறந்து உனக்குச் செய்த துரோகத்தினாலல்லவா, நான் உயிர் இழக்கும்படியாயிற்று என்றும், இன்னும் என்னென்னவோ பிதற்றினேன். இந்த சந்தர்ப்பத்தில் சந்திரபோஸ் அந்தக் கூட்டத்துள் நுழைந்து அவர்களை வாளால் வீச ஆரம்பித்தார். நாங்கள் இருவருமாக சண்டை செய்து கொண்டே ஓடினோம். பிறகு அவர்கள் எங்களுடன் எதிர்க்கமுடியாமல் ஓடஆரம்பித்தனர். எனக்கும் பலமான காயங்கள் விழுந்தன. என் நினைவை மறந்தேன். பின்னர் இவ்வளவு நாட்கள் தான் அவ்வறையில் இருந்தேன் என்பது எனக்கே தெரியாது. ஒரு வாரத்திற்குப் பிறகு தான் எனக்குப் பிரக்ஞை உண்டாயிற்றென்று சந்திரபோஸ் சொல்லித்தான் பிறகு எனக்குத் தெரியும். ஓர் நாளிரவில் பற்பல கனவுகண்டு கொண்டிருந்தேன். அதன் மத்தியில் வசந்தமாலாவுடன் சந்தோஷமாக இருப்பதாய்த் தோன்றவே கண்ணை விழித்துப் பார்த்தேன். என்ன ஆச்சரியம்! அதையும் கனவே என்றெண்ணினேன். உடனே உண்மை என்று சித்தாந்தம் செய்யும்படியாக வஸந்தமாலா என்னுடன் வார்த்தையாட ஆரம்பித்தாள்.

எனக்குப் பிரக்ஞை உண்டான காலத்தில் சந்திரபோஸ் என்னைப் பார்த்து, நீ வஸந்தமாலாவுடன் எவ்விதமாகவும் வார்த்தையாடாதே; அவளை உனக்குத் தெரியுமென்பதாகவும் காண்பித்துக் கொள்ளாதே; உனது பெயரையும் மாற்றிவைத்துக் கொள்; காலமிருக்கப்பட்ட நிலைமையில் இப்போது காதலுக்கு நேரமில்லை; பின்னால் பகவத் ஸங்கல்பப்படி நடத்தலாம் என்று புத்திமதிகள் புகன்று எச்சரித்திருந்தார். மேலும் வஸந்தமாலா அறியாதிருப்பதற்காகவே அந்த இரகசியமான அறையில் என்னை வைத்திருப்பதாகவும் கூறினார். எனக்கு மந்திரியால் பிராணபாயம் எவ்விதத்துஞ் சூழும் அதில் நான் மரிக்க நேரின் வஸந்த மாலாவின் கதி யாதாகுமென்பதைச் சிந்தித்தவராய் எங்கள் விவாகத்தில் விருப்பமற்றவர் போன்றுந் தோன்றினார்.

ஆனதால் அப்போது வஸந்தமாலாவைக் கண்டும், உண்மையோடு பேசமுடியாமல் நான் மௌனமாக இருக்கும்படி நேரிட்டது. என் காதலையும் அளவு கடந்த ஆசையையும் அடக்குவதில் நான் மிகுதியானவேதனைக்குள்ளானேன். நெடுநாட்களுக்குப் பிறகு ஊர் திரும்பி இல்லம் புகுந்த தன் நாதனைக் காணச்சிந்தை மிகுந்த மனத்தினளாய் நிற்கும் மங்கையானவள், தன் மாமி நாத்திகளுடைய கொடுமையால் அவனை அன்புடனே காணவும், ஆர்வத்துடன் அணைத்து ஒரு சிறு (?) முத்தமும் ஈந்து க்ஷேமம் வினவவும் உரையாடவும் முடியாமல் எவ்விதம் தவித்துச் சோகமடைவளோ அதே ஸ்திதியில் நான் இருந்தேன்.

ஹா ஹா! வஸந்தமாலாவின் ரூபமே ரூபம்! என்ன லாவண்யம்! என்ன அழகு! என்ன ஒய்யாரம்! என்ன கம்பீரம்! அத்தகைய சுந்தரீரத்தி

னத்தை நான் இதுகாறுங் கண்டவனே யல்ல. என்னோடு சாதாரணமாக
விளையாடிக்கொண்டிருந்த இந்தப் பெண், இவ்வளவு சொற்ப காலத்திற்குள்
ளாக எப்படித்தான் இத்தனை அழகையும் அங்க மாறுதல்களையும் புதிதாகத்
தோன்றியுள்ள இரு பர்வதங்களையும் ஏற்றனளோ ஆச்சரியத்தினும் பெரிய
ஆச்சரியமே யாகும்; அதிலும் அதுவரையில் என் மீதிலேயே அன்புட
னிருந்தவள் என்றுந் தோன்றிற்று. பார்த்து எவ்வளவோ வருஷங்களாகின்
றன. அவளைக் கண்டதில் எனக்கு உண்டான சந்தோஷத்திற்குக் கேட்பா
னேன்? ஆனாலும் என்னைக் காப்பாற்றிக்கொள்ளும் நிமித்தமாகவும், பெரிய
வருடைய ஆக்ஞைக்குட்பட்டும்—நான் அவளுடன் சரியாகப் பேசாததும்
தவிர என் பெயரையுந் தெரிவித்தேனில்லை. வெகு காலத்திற்குப் பிறகு
சந்தித்த காதலர்களின் கதி இப்படியாக ஒருபுறம் முடிய, மற்றொரு புறத்தில்
சந்திரபோஸ் அங்குவந்து சேர்ந்தார். உடனே வஸந்தமாலா மூர்ச்சித்தாள்.
அவளுடைய குரலோசையைக் கேட்டே, அங்கு தான் வந்ததாக சந்திரபோஸ்
கூறி என் மூலமாக நடந்த சங்கதிகளையறிந்து புன்னகை ததும்பியவதனத்
துடன் எனக்கும் வஸந்தத்திற்கும் மூத்திகளீந்து வாழ்த்துதல் கூறி வஸந்தத்
தைத் தூக்கிக் கொண்டு சென்றார்.

எனக்கு இரவில் தான் அன்னபானாதிகள் கொடுக்கப்படும். அவைகள்
மறு நாள் மாலைவரையில் புசிப்பதற்கு யோக்கியமாய் இருக்கும். வழக்கமாக
ஒரு கிழவனே எனக்கு அன்னங்கொண்டு வருபவன். இக்கிழவன் ஓர் நாள்
வழக்கம்போல் வந்து "உயிர் பிழைக்கவேண்டுமானால் உடனே வெளியில்
போய்விடும்; உமக்கு உதவியாக உள்ளது இந்தக் கத்தியும் இப்பையிலுள்ள
ஸ்வல்ப திரவியமுமே" என்று சொன்னார். மேலும் சந்திரபோஸ் அவ்விடத்
தில் இல்லையென்றும் சீக்கிரம் நான் போய்விடவேண்டுமென்றும் சொன்
னான். அதற்குமேல் என்னகேட்டும் அவனிடமிருந்து நான் காரணம் தெரி
ந்துகொள்ள முடியவில்லை. உடனே வெளிக்கிளம்பினேன். என்னுடைய
பிரயாணம் வெகு சந்தோஷகரமே யாயினும், போகும் பொழுது ஓர் நூதன்
மனிதனாகவேனும் வஸந்தமாலாவினிடம் சென்று விடைபெற்றுக்கொள்ளா
மலும், தந்தையினும் மேலாக என்னைப் போஷித்துவந்த சந்திரபோஸுக்கு
வந்தனம் அளிக்காமலும் புறப்படநேர்ந்ததைப்பற்றி ஆற்றொணாத சஞ்சல
மெய்தினேன்.

இன்ன இடத்திற்குச் செல்வதென்ற நிஷ்கரிஷை யில்லாமல் பிர
யாணம் செய்தேன். ஒரு தினம் எவ்விதமாகவோ சிலர் என்னை அடையாளம்
கண்டுபிடித்துக்கொண்டு ஏதோ தங்களுக்குத் தாங்களே பேசியபடி ஓடினார்
கள். எனக்கொன்றும் புலப்படவில்லை. சற்று நேரத்திற்குள் ஒரு கூட்டம்
என்னைத் தொடர்ந்தது. ஏற்கனவே மந்திரி என் விஷயமாக நாலு இடங்
களிலும் ஆட்களை வைத்துத் தேடிக்கொண்டிருப்பதை அப்போது தான்
அறிந்தேன். இந்த ஆபத்தான தருணத்தில் தாங்களும் எதிர்ப்பட்டீர்கள்.
பின்னர் நிகழ்ந்தவை யனைத்தும் தாம் அறிந்ததேயாகும்" என்று ராம்மோக
னன் தன் சரித்திரத்தைக்கூறி முடித்தான்.

## அத்தியாயம். 10.

---

ஆரியகுமாரனும் ராம்மோகனனும் அத்தியந்த நேசர்களாயினர்.
ராம்மோகனனை வேதபுரியிலுள்ளோர் நன்கறிவாராதலால், பக்கத்துள்ள
கிராமமொன்றில் மறைந்து வசிக்கும்படியும் தான் பிரகாஸ லக்ஷ்மியின் பாற்
சென்று, சப்தசிந்தவத்திற்குப் போய்வந்த வர்த்தமான மனைத்தும் தெரி
வித்து விட்டுத் திரும்புவதாகச் சொன்னான். ராம்மோகனன் கூறிய விருத்
தாந்தங்களால், தான் சப்தசிந்தவத்தில் இரகசிய அறையில் தேடியும் காணமற்
போன புருஷன் இந்த ராம்மோகனனே என்பதையறிந்து கொண்டானா
தலால், பிரகாஸலக்ஷ்மியைச் சந்தோஷிப்பிக்கக்கூடிய இச்செய்தியுடனே
தான் அவளிடம் போவது தனக்கு அதிகப் பெருமையைத் தருவதாகு மென்று
குதூகல; மடைந்தான். ராம்மோகனனும் ஆரியகுமாரனால் வஸந்தமாலா
வின் க்ஷேமத்தையறிந்து ஸந்தோஷிக்கலானான். இருவரும் அடுத்த தினங்
களன்று மறுபடியும் அதே இடத்தில் மாலையில் சந்திப்பதாக முடிவு படுத்திக்
கொண்டு பரஸ்பரம் விடை பெற்றுப் பிரிந்தனர்.

ஆரிய குமாரன் போயினபின்னர் ராம்மோகனன் தான் உத்தேசித்த
கிராமத்தை நோக்கி நடக்கலானான். சிறிது தூரத்திற்கு அப்பால் இரண்
டொருவர் இவனைப் பார்த்து ஹிருதய பரவஸ மடைந்தனர். ஒரு பெரிய பிரபு
இவனுக்கு நல் வரவு கூறியழைத்தார். அன்றுதினம் அங்கு தங்கிச் செல்ல
வேண்டு மென்று பிரார்த்திக்கலானார். ராம் மோகனனும் அதை மறுக்க
முடியாதவனானான். ஆரிய குமாரனை மறுபடியும் ஸந்திக்கும் வரையில் அவ்
விடத்திலே தங்கியிருக்கிற தென்று தன்னுள் நிஷ்கரிஷை செய்து
கொண்டான்.

இவ்வளவு தூரம் உபசரித்தவரின் பெயரோ காளீசரணபோஸ்
என்று தெரிய வந்தது. குமாரவனம் என்ற அந்தக் கிராமத்திற்கு அவரே
அதிகாரியாவர். நிரம்பவும் உத்தமமான மனிதரென்றும், தர்ம மார்க்கதரிசி
என்றும், பரம்பரைப் பிரபு என்றும் ஊரார் சொல்லிக்கொள்வர். பலபத்
திர னென்பவர் இவருடைய முக்கியமான நண்பராவர். பலபத்திரர் சாமான்
யரல்லர்; அவர் ஒரு தேசத்திற்கு இப்போது முக்கியாதிபதியாய் இருந்து
வருகின்றார். இவ்விரு மகா புருஷர்களையும் அவதாரமூர்த்திக ளென்றே
சொல்லவேண்டும்! இப்பெரியோர்களின் சரித்திர பாகங்கள் பின்னால்
தெரிவிக்கப்படு மாதலின் இங்கு விஸ்தரிக்கவில்லை.

இது நிற்க, நமது ராம்மோகனன் காளீசரணபோஸின் பிரார்த்
தனைக்கு இசையவும் உடனே அவர் தமது மாளிகைக்கு அவனை இட்டுச்
சென்றார். ஆனால் அதை ஒரு மாளிகை யென்று அழைப்பதற்குக் கூட

வில்லை. அதையோர் அரண்மனை யென்றே சொல்லவேண்டும். அங்கே காணப்படுகின்ற அவ்வளவு விநோத சாமான்களும் நமது தேசத்திற்கு புதியவைகள் தான். இடையே ஒரு சோலை யிருக்கின்றது, அதன் உன்னதம் என்னென்போம்! காளீஸரணர் ராம்மோகனனுடன் அநேக விஷயங்களைப் பற்றிப் பேசியிருந்து சற்று வெளியில் சென்றார். அவர் தலைமறைந்தது தான் தாமதம்! அவருடைய வேலைக்காரனான ஒருவன் நொண்டிய காலுடன் இராமகுமாரனிடம் நெருங்கினான். ஆனால் ஒரு விசேஷம்! பரஸ்பரம் இவ்விருவரும் ஒருவரை யொருவர் இதற்கு முன்பின் அறியாதவர்கள்; அப்படியிருந்தும் ராம்மோகனன் அந்த நொண்டியினிடத்திலே தன் முழுப்பிரீதியையும் செலுத்தினான். அந்த அன்பானது வஸந்தமாலாவிடத்தில் அவன் வைத்த பிரேமையின் அளவுக்குச் சற்றேற ஒத்திருந்தது என்னலாம். அப்படியே நொண்டியும் ராம்மோகனனை அதிகமாக விரும்பி நின்றான். ஆயினும் ராம்மோகனனை அந்த மாளிகையைவிட்டுத் துரத்திவிடவேண்டுமென்ற கெட்ட எண்ணமே மிகுதியுங்கொண்டான். ராம்மோகனன் அங்கிருப்பதில் இந்த நொண்டிக்கு ஏன் இவ்வளவு பொறாமையோ தெரியவில்லை. அந்த நொண்டி போஸ் காளீசரணருடைய உதாரகுணத்தைப்பற்றி விஸ்தாரமாகச் சொல்லி வருகையில், காளீஸரணருக்கு குழந்தைகள் இல்லை யென்றும், பல வருஷங்களாக விவாகம் செய்துகொள்ள இஷ்டப்படாமல் இருந்து வருகிறாரென்றும், காரணம் பரநாரீகமனமே யென்றும் சொன்னான். பிறகு "மற்றபடி எல்லாம் அவர் நல்லவர் தான்; நீங்கள் சாதாரண மநுஷ்யராக வந்திருந்தால் எவ்வளவோ மேன்மையாக இருந்துபோகலாம். என்ன துராகிருதமான செயல்கள்! கொஞ்சம் எச்சரிக்கையாகவே இங்கு இருக்கவேண்டும், பதின்மூன்றவது படியி * * * * *" என்று முடிக்கு முன்னம் காளிசரணன் ஆங்கு வந்து சேரவே நொண்டி போய் விட்டான். பிரபு அந்த நொண்டியைப்பற்றிப் பேசுகையில் அவன் சுத்த வாயாடி யெனறும், பேசயாரேனும் கிடைத்தால் நாளெல்லாம் பேசிக்கொண்டே யிருப்பானென்றும், அவனுக்கு இதனினும் வேறு வேலை கிடையாதென்றும் கோபமாய்ச் சொன்னார்.

பகலெல்லாம் கீழ்க்கட்டிலேயே போஜனம் செய்து பொழுதுபோக்கினர். இரவு சாப்பாடுமுடிப்பதற்குள் பத்து மணி ஆய்விட்டது. காளிசரணர் தாம் சயனிக்கப் போகும்போது, ராம்மோகனனைப் பார்த்து "குழந்தாய் இங்கே படுத்துக்கொள்ள அவ்வளவு சௌகரியமில்லை; மேல் மாடியில் அதிசிலாக்கியமான சயனக்கிருகமும், அதற்கு வேண்டிய இன்றியமையாத சாதனங்களும் தயாராய் சேகரித்து வைத்திருக்கிறேன். இந்த விளக்கை எடுத்துக்கொண்டுபோய் மெத்தைப் படியெல்லாம் கடந்து தெற்கு முகமாய்த் திரும்புவாயேயானால் முதலில் காணப்படும் அறைதான் நான் தெரிவித்த சயனக்கிருகம்; எனக்கோ வயதாகிவிட்டது; நான் மாடியின் மீது செல்வதே கிடையாது; என்னால் மெத்தைப் படிகளைக் கடக்கவும் முடியாது; நீ மட்டும் போ; நாளைக்காலையில் மற்ற சங்கதிகளைப் பேசிக்கொள்வோம்" என்றார்.



ராம்மோகனனுக்கோ மத்தியானம் முதல் அந்த நொண்டி மனிதனை மீண்டுங்கண்டு 13-வது படி என்பதின் விருத்தாந்தங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றிருந்தது. அதற்காகப் பன்முறை முயன்றும் வியர்த்தமாயின. அவனைக் காணவே முடியவில்லை. 13-வது படியில் ஏதேனும் அபாயம் இருக்குமோ என்று யோசித்துக்கொண்டு கை விளக்குடன் படியை யணுகினான். உடனே மின்சாரதீபங்களின் வெளிச்சம் உண்டாயிற்று. அந்தப் பிரகாஸம் மாடியிலிருந்து கீழ் வருவதாகத் தெரிந்தது. இவன் படிகளை ஒவ்வொன்றாக எண்ணிக்கொண்டு ஏறினான். ஒன்று முதல் பன்னிரண்டு வரையில் மெதுவாகவந்தான். பதின்மூன்றாம் படியை யடையும் முன் மனம் நடுக்கமுற்றது. பன்னிரண்டாவது படியிலிருந்தே பதினைந்தாம் படிக்குத் தாண்டினான். இந்த வேகத்தில் அவன் கால் கொஞ்சம் பதின் மூன்றாம் படியில் பட்டதுபோல் தோன்றிற்று. அந்தக்ஷணமே ஓர் பலத்த சப்தத்துடன் எட்டு முதல் பதின் மூன்று வரையுமுள்ள படிகள் கீழே சாய்ந்துகொண்டன. அவற்றின் கீழே என்னென்னவோ பலயந்திரங்கள் வேலை செய்து கொண்டிருந்தன. சமீபத்தில் ஓர் நீரோடையும் நன்றாகத் தெரிந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் படிகளனைத்தும் முன் போலவே பொருந்திக் கொண்டன. ராம்மோகனன் இதென்ன விந்தை யென்று திகைத்துப் போனான். இப்பொழுது அதில் இறங்கிவரவோ தைரியமில்லை. மாடிக்குச் செல்லவும் அச்சமாயிருக்கிறது. ஏதுஞ் செய்யத் தோன்றாதவனாய் அப்படியே நின்று விட்டான். உடனே பத்து மனிதர்கள் அங்கு விரைந்து வந்து அவனைப் பிடித்துக்கொண்டனர். அவர்கள் அவனைப் பார்த்து "உன் பெயர் ராம்மோகனனல்லவா; நீ மந்திரி யவர்களை எதிர்த்தவனல்லவா; இது வரையிலும் எங்கேயோ மறைந்திருந்து இப்போது அகப்பட்டுக் கொண்டாய். அன்று எங்கள் கைக்குத் தப்பி ஓடிவிட்டாயல்லவா; இப்போது நாங்கள் உன்னை என்ன செய்யப் போகிறோமென்பதைச் சீக்கிரம் தெரிந்து கொள்வாய்" என்றனர். ராம்மோகனன் கவலை மேலிட்டவனானான்.

## அத்தியாயம், 11.

ஆரியகுமாரன் ராம்மோகனனிடம் விடை பெற்று வேதபுரிக்கு வந்தான். அங்கு பல முயற்சிகள் செய்து, அதன் பின்னர் பிரகாஸ லக்ஷ்மி மந்திரியின் பலாத்காரத்திலிருக்கிறாளென்று அறிந்தான். ஏற்கனவே பிரகாஸ லக்ஷ்மி தனக்குப் பாங்கியாக இருக்கும்படி ஒரு கிழவியைத் தெரிந்தெடுத்துக் கொண்டிருந்தாளல்லவா? அக்கிழவி வெளியே யாராவது வருகிறார்களாவென்பதைக் கவனித்து வருவதே தொழிலாகக் கொண்டிருந்தாள். இப்படியிருக்கையில் ஆரிய குமாரன் அங்குவர, அவனைப் பற்றிப் பிரகாஸ லக்ஷ்மி ஏற்கனவே தெரிவித்திருந்த அடையாளங்களால் கண்டு கொண்டாள்,

ஆரிய குமாரன் சப்தசிந்தவத்திலிருந்து திரும்பி வந்திருக்கிற செய்தி
உடனே கிழவியால் பிரகாஸ லக்ஷ்மிக்கு எட்டிற்று. அன்று மாலையில் பிரகாஸ
லக்ஷ்மியும் அக்கிழவியும் ஆலயதரிசனார்த்தம் சென்று திரும்புவதாகக் காவற்
காரருக்கு இராஜ மோதிரத்தைக் காண்பித்து விட்டு வெளியில் வந்தனர்.
அத்தருணத்தில் ஆரிய குமாரனும் அவ்விருவருடன் சேர்ந்து கொண்டான்.
பிறகு சந்திரபோஸைக் கைது செய்திருக்கும் இடத்தை யணுகி அவரை விடு
விக்கும் படியாக உத்தரவு பிறந்திருப்பதாகத் தெரிவித்து அதற்கு அடையாள
மாக இராஜ மோதிரத்தைக் காண்பித்து அவரையும் விடுதலை செய்து ஆக
நால்வருமாக அரசியின் அந்தப்புரத்தை நாடிச் சென்றனர்.

## அத்தியாயம். 12.

"ஹே! பாபி! இவ்விதம் பயமுறுத்தி யல்லவோ முன் என் கற்பை
யழிக்க முயன்றாய்? இன்னும் ஏன் என் உயிரை வாங்குகிறாய்? என் சகல
அதிகாரங்களையுந் தான் உன்னிடம் ஒப்புவித்தேனே, வேண்டாமடா, உன்
நிமித்தம் என் பிராணன் கூடிய சீக்கிரம் போவதும் எனக்குத் திருப்தியே.
உன்னாலல்லவோ இவ்வளவு கலகங்களும் கொலைகளும் ராஜ்யத்தில் நடக்கின்
றன. இவ்வளவு போதாதா? இன்னும் உன் மனம் திருப்தியடைய வில்
லையா? என் கணையாழியைக்கொடு வென்றால் அதற்கு இவ்வளவு கஷ்டமா?
உன் விருப்பத்தின்படி யெல்லாம் நான் நடத்திவைக்கவில்லையா? நான் கூறு
வதுபோல நீ நடந்தால் எவ்வளவோ தூரம் க்ஷேமப்படுவாய், என்னை வீணே
ஹிம்ஸிப்பதனால் நீ யாது பயனை அடையப் போகிறாய்?"

"ஹா ஹா! மஹா பதிவிரதா சிரோன்மணி! நீதி சாஸ்திரம் சொல்ல
வந்துவிட்டாயோ! நானும் இதுகாறும் பொறுத்து உனது உபந்நியாஸங்களுக்
கெல்லாம் செவிகொடுத்துக் கேட்டுவந்தேன். உனது இரகசியங்களைத்
தான் இதுவரையில் பிறர் அறியா வண்ணம் நமது பழய ஒப்பந்தத்தின்படி
வெளியிடாம லிருந்தேன். நீயும் அந்த ராம்மோகனப் பையலும் என்னை
ஏமாற்றியதாக வல்லவா எண்ணியிருந்தீர்கள்? இனி ஒரு க்ஷணமும் பொறுக்
கேன். என்னாலா கலகங்கள் உண்டாயின? உன்னுடைய துர்க்கிருத்தியங்க
ளல்லவோ இதற்குக் காரணம். உனது குடிகளைக் கண்டித் தடக்கும் வன்மை
உன்னிடம் இல்லாததால்தான் நான் அதிகாரம் செய்துவருகிறேன். இந்த
க்ஷணத்தில் உன்னையும் கைதியாக்கிவிட எனக்கு வல்லமை யுண்டென்பதை
இனிமேலாவது நீ நம்புகிறாயா? நீ அரசியா யிருந்து என்ன பிரயோஜனம்?"

அரசி:—அடே ப்ரஷ்டா! என்னையா நீ கைதி செய்வது! என்னதான்
இருந்தபோதிலும் நான் அரசி என்பதையும் மறந்து வார்த்தையாடுவதுடன்
மிதமிஞ்சியும் அல்லவோ பேசுகிறாய்? அன்றையதினம் என்ன பசப்பு
வார்த்தைகளை யெல்லாம் சொன்னாய். ஐயோ! அவற்றை உண்மை யென்



றல்லவோ நம்பி மோசம் போய் கணையாழி மோதிரத்தை உன்வசம் ஒப்புவித்
தேன். ஜெகதீசா! உனக்குக் கண் இருக்கிறதானால் எங்கள் இருவருள்
யார் மீது பிழையோ அவர்கள் மேல் இப்போது ஓர் இடி விழட்டும்! சரி;
போனதை யெல்லாம் மறந்து விடுகிறேன், மந்திரி! நீ என் நிமித்தம் ஒன்று
செய்வையோ?

மந்திரி:—என்னவோ பார்க்கிறேன் சொல்.

அரசி:—பார்க்கிறதென்ன; நான் சொல்லப்போவ தென்னவோ உனக்
கும் உன்னைச் சேர்ந்தவர்களுக்கும் நன்மையே.

மந்திரி:—நன்மையோ, தீமையோ! சொல்லென்றால், இதற்குப் பீடி
கை என்னவேண்டி யிருக்கிறது?

அரசி:—உனக்கு எவ்வளவு செல்வம் வேண்டுமென்றாலும் கொடுக்கி
றேன். நீ வேறெந்த தேசத்திற்காவது போய் சௌக்கியமாய் காலக்ஷேபம்
செய்துகொள். பணம் எப்பொழுது வேண்டுமோ அப்பொழுது ஓர் நம்
பிக்கையுள்ள ஆள் மூலமாய்க் கடிதம் கொடுத்தனுப்பினாயானால் அவன் என்
னிடமிருந்து பணத்துடன் திரும்பி வருவானென்பது உண்மை.

மந்திரி:—இல்லை; எங்கும் செல்லாமல் இங்கேயே இருந்தேனானாலோ?

அரசி:—என்ன விரோதம் வருமோ யார் கண்டார்கள்? வீண் ரஸா
பாசம் ஆவதிலும் இருவருக்கும் சௌகரியமான வழியை யநுஷ்டிப்பது
மேலல்லவா என்று யோசித்தேன். பிறகு உன் இஷ்டம்.

மந்திரி.—சரி ஆனால் இதற்குப் பிறகு எனக்கோர் யோசனை தோன்று
கிறது. அதுவும் உனக்கு சௌகரியமாகவே இருக்கும் என்று நம்புகிறேன்.
வது; உனக்கோ குழந்தை குட்டிகள் கிடையாது, நானோ சம்சாரி, நீ ஏகா
ங்கி யாகையால் தோன்றிய விடங்களுக்குப் போய்விடு; வேண்டுமான
பொருள் கொடுக்க நானாயிற்று."

இதைச் செவியேற்றதும் அரசி ருத்திராகாரமாய்ச் சீறி, தனது ஆச
னத்தை விட்டெழுந்து வெகு பயங்கரமான கோபாவேசத்துடன் தோன்றி
னாள். மந்திரிக்கும் இப்பொழுது இவளிடத்தில் சற்று அச்சம் உண்டா
யிற்று. ஆயினும் அதை அவன் லக்ஷியம் செய்தானில்லை.

மந்திரி.—சரி என்ன சொல்லுகிறாய்? உன் இஷ்டம் என்ன? உடனே
தெரிவி. வீணே நேரம் போக்காதே. எனக்கும் எவ்வளவோ அலுவல்களி
ருக்கின்றன.

அரசி.—உனக்கு இவ்வளவு தைரியம் ஏற்பட்டது. எதனால் என்று
தெரியாமலல்லவா விழிக்கிறேன்.

மந்திரி.—உன் சங்கதிகள் எல்லாம் ஊரார்முன் எடுத்துச் சொல்லட்
டுமா?

அரசி.—பாதகா! வேண்டாமடா?

மந்திரி.—அப்படியானால் நான் சொல்லுகிறபடி செய்ய என்ன தடை?

அரசி.—முடியவேமுடியாது.

மந்திரி.—முடியாதென்றா சொல்லுகிறாய்? இதில் யார் வெற்றி பெறுகிறார்களோ பார்ப்போம். உன்னை நீ அரசி என்று கர்வித்துக்கொண்டு திரிகிறாய். இந்த அதிகாரமெல்லாம் எத்தனை தினத்திற்கு நிலைத்திருக்கப் போகிறதென்பதைத் தீவிரத்திற்றானே காண்பாய். இந்த நிமிஷத்தில் உன்னை சமஸ்தான நியாயாதிபதியின் முன் நிறுத்தி உன்னை கைதியாக்கிக் கொலைக் களத்திற்குக் கொண்டுபோகும்படி செய்யக்கூடிய திறமை எனக்குண்டு. என்னைச் சாமானியமாக எண்ணி மதிமோசம் போகாதே. உனது பூர்வீகச் செய்திகள் என்னால் வெளிப்படுமாயின் நீ நாணித் தலை குனிவாய். இந்த அரசி என்ற பிரதாபமெல்லாம் ஒரு நிமிஷ நேரத்தில்தானே பறந்து போய்விடும். என்னையா பாதகன் என்கின்றாய்? ராக்ஷசி! உன்னையல்லவா அப்பெயரால் அழைக்கவேண்டும். உனது முதல் கணவன் இறந்து போய் நீ விதவையாகி என்னுடைய சம்ரக்ஷணையில் இருந்ததை மறந்தா போனாய்? அதை மறைத்து உன்னை புதுப்பெண்போல் செய்து இவ்வூர் அரசனுக்கு உன்னை மணம் செய்வித்து உன் இஷ்டப்படி யெல்லாம் நான் நடந்து கொள்ளவில்லையா? உனது இரண்டாவது கணவனை இவ்வூர் அரசன் காணாமல்போனதற்கும் நீ யல்லவா காரணம்? அநியாயமாக இந்த ராஜ்யத்தை அபகரித்து மகாராணியாக வீற்றிருக்கவெண்ணி உன் புருஷனை இவ்வூர் அரசனைக்கொல்ல முயன்றாய். கொலை செய்யும்படியாக ஆட்களை ஏவி காரியம் முடிந்ததென்று தெரிந்தவுடன் அந்த ஆட்களையும் மரணம் அடையும்படிச் செய்தாயே. இவ்வூர் அரசன் காட்டிலே உன் ஆட்களால் கொல்லப்பட்டபோது இந்த கொலையை என் மனைவியே செய்தாள் என்று மரண சாசனம் எழுதி அதை நியாயாதிபதிக்கு அனுப்பச்சொல்லி உடனிருந்தவர்களிடம் கொடுத்தார். அதை நியாயாதிபதிக்கு எட்டாமற்செய்து உன்னை காப்பாற்றி வைத்திருக்கிறேன். அதனாலல்லவோ நீ மகாராணியானாய். இப்போதும் இறந்த அரசரின் மரண சாசனப் பத்திரம் என்வசமிருக்கிறது. அதைக்கொண்டே உன்னைக் குற்றவாளியாக்கி கொலைக் களத்திற்கு அனுப்பும் சக்தி எனக்கு உண்டு.

என்று சரமாரியாகப் பொழியவே அரசி அப்படியே திகைத்து நின்று போயினாள். பிறகு சற்றுநேரம் தாழ்த்து மந்திரியைப் பார்த்து—"பாபாத்மா உன் இஷ்டம்போல் சகலமும் செய்துகொள். இன்றுமுதல் நான் உனக்கு ஜென்ம விரோதி. இந்த நிமிஷமுதற்கொண்டு என்முன் நிற்காதே. இந்த என் அரண்மனையைவிட்டு வெளியே போய்விடு" என்று சொல்லிச் சொல்லிச் சட்டென்று எழுந்து உள் கட்டிடத்திற்குச் சென்றாள்.

மந்திரியும் தான் வந்த காரியம் நிறைவேறிற்றென்றும் சீக்கிரம் அந்த இராஜ்யம் தனக்கே சொந்தமாய் விடுமென்றும் நம்பிக் களிப்புமிகுந்தவனாய் அரசியின் அரண்மனையை விட்டுப் புறப்பட்டுப் போனான். அவன் சென்றதற்கப்பால் அரசி அதிகமான ஆலோசனை யிலாழ்ந்தவளாய்த் தனக்குத் தானே பேசிக் கொள்ளலானாள்.



"நான் இந்த மந்திரிக்குச் சற்றேனும் பயப்படவேண்டிய நிமித்தமேயில்லை. அவன் என்னைப் பற்றிக் கூறும் அபவாதங்களனைத்தையும் பொய் யென்று நிரூபிக்க சந்திர போஸின் துணை எனக்கிருக்கிறது. ஆனால் சந்திர போஸையும் இப்போது சப்தசிந்தலத்தில் காண வில்லையாதலால் அது எனக்குப் பெருங்கவலையை விளைத்திருக்கிறது. என்னுடைய சகல அந்தரங்கங்களுமறிந்த எனது பர்த்தாவான இவ்வூர் அரசரையும் நான் இழக்கக் கொடுத்து விட்டபடியால் என் மீது ஏற்படக்கூடிய அவதூறுகளை அவ்வளவாக எதிர்த்துப் போராடக் கூடிய திறன் எனக்குப் போதாமலிருக்கிறது. மேலும் இன்று மந்திரியின் வாய் மூலமாகவே ஒரு நூதன வர்த்தமானம் கேள்விப்பட்டேன். எனது பர்த்தாவை நானே ஆட்களை ஏவிக் கொலைசெய்து விட்டதாகவும், அதைப் பற்றி எனது பார்த்தாவே எழுதிக் கையொப்பமிட்ட மரண சாசனபத்திரம் தன்னிடம் இருக்கிறதென்றும் கூறினான். அது வெளிக்கு வருமாயின் மூட ஜனங்கள் அதை உண்மை யென்றே நம்புவர். அப்போது என் கதி யாதாகும்? இன்னும் இதைப் போன்ற பொய்ப்பத்திரங்கள் எவ்வளவு சிருஷ்டினை செய்திருக்கின்றானோ பாவி! இவற்றை யெல்லாம் கருதியும், தற்காலம் இருக்கப்பட்ட அசந்தர்ப்பங்களை யுத்தேசித்தும் நான் அவனுக்குப் பயந்து நடப்பவள் போன்று பாவனை செய்ய வேண்டியவளாக இருக்கின்றேன். மேலும் அன்று தாசியுடன் என் கட்டிலில் சுகித்ததை என்னுடன் சுகித்ததாகவே இந்தத் துராத்மா கருதியிருக்கிறான். அந்த ரகசியம் வெளிவராமல் காத்து மானஸம்ரக்ஷணம் செய்யவேண்டியிருக்கின்றது. இவ்வளவு கஷ்டங்களும் ஒரு பெண்ணுக்கு உண்டானதற்குக் காரணம் அவளுடைய சொந்தமான பர்த்தா சமீபத்தில் இல்லாமற் போனதினாலல்லவா? ஆஹா! இந்த உலகத்தில் யார் இருப்பினும் இல்லாவிடினும் தன்னை மாலையிட்ட கணவன், தன் மானம் அறிந்த கணவன், தன் அந்தரங்கமுணர்ந்த கணவன் ஒருவன் மட்டும் இருந்து விட்டால் அதுவே லக்ஷாதிலக்ஷமாகும்! ஹா என் பிராணநாதா! இவ்வளவு கஷ்டங்களையும் என் தலைமீது சுமத்தி எனிப்படிப் பிரிந்து போனீர்! மொத்த பாகத்துக்கு வெளியே இந்த மந்திரிப்பயலை நேசித்த பாவனையாகவே காண்பித்துக் கொண்டு அவனுடைய இஷ்டப்படிப் போகவிடுத்து தந்திரமாக அவனைக் கைது செய்துவிடவேண்டும். அதற்கான காரியங்களை இந்த நிமிஷ முதற்கொண்டே கவனிக்கவேண்டும்" என்று அரசி தனக்குள் தீர்மானித்துக் கொண்டு தனது அந்தரங்க மாளிகைக்குச் சென்று மேல் நடக்கவேண்டிய விஷயங்களில் தனது கவனத்தைத் திருப்புவதானாள்.

## அத்தியாயம். 13.

---

அறியாப்பாலகன் முதல் அரைகுறையாய்ப் பேச ஆரம்பிக்கும் பசங்
கள் தொட்டே 'நான் ராஜா நீ தோட்டி' என்றும், ஆட்டங்கள் கூத்துகள்
பெரியவர்களின் நாடகங்களில் முதலாய் இராஜா வேடந் தரிப்பவனுக்கு அந்த
ஸ்து மரியதை வணக்கம் ஆர்பாட்டம் கட்டியம் முதலிய கௌரவ மரியாதை
கள் காட்டுவதும் உண்டு. ஆனால் உண்மையிலேயே வேந்தனென்பவன் கடவு
ளுக்கு இரண்டாவது அந்தஸ்தி லிருப்பவனென்பதாகப் பெரியோர் வாக்கு.
அரசு என்றபேர் மூன்றெழுத்துதான். அதை முற்றும் உற்று நோக்கினால்
சித்தப்பிரமை கொள்ளவேண்டியதா யிருக்கிறது. 'கறக்கிறது உழக்கு,
உதைக்கிறது பல்லுபோக' என்பதாய் அரசனாயிருப்பதால் அடையுஞ்சுக
வளைப்போலவும்' 'அறியாமல் வெறியனுக்கு வாழ்க்கைப்பட்டேனே' என்ப
மொருபங்கானால் 'ஆய்விட்ட கலியாணம் போய்ப்பார்த்தால் தெரியு' மென்
பது போலவும்' ஒவ்வொருவர் அந்தஸ்தையும் கண்டு அகத்துற ஆசிக்கும் எவ
ரும் அவரவர்களுடைய அந்தஸ்தை யடைந்து பார்த்தால் தெரியுமென உரை
க்குமாறு ஆயிரம் கஷ்டம் ஆள்வதில் இருக்கின்றதென்பது தெரிந்தபாடு.
வெய்யலுக்குச் சூரியன் உத்தரவாதம்; மழைக்கு வருணன் உத்தரவாரம்;
காற்றுக்கு வாய்வு பகவான் உத்தரவாதம்; நெருப்புக்கு அக்கினிபகவான்
உத்தரவாதம்; நோய்க்கு வைத்தியன் உத்தரவாதம்; உயிருக்கு நமன் உத்தர
வாதம்; பெண்ஜாதிக்குப் புருஷன் உத்தரவாதம்; பிள்ளைகளுக்குத் தகப்பன்
உத்தரவாதம் என்பதாய் ஒரு அத்தில் அளவில் இருக்கிறதென்றால்; அர
சனே எதெதற்கும் உத்தரவாதியாகவேண்டும். என்னென்ன இவன் தலையில்
விடிகிறது பாருங்கள். 'அம்பட்டன் குப்பையைக் கிளறினால் மயிர் மயிராய்ப்
புறப்படுவதுபோல மழை, காற்று, வெய்யல், வெதுப்பு இவைகளுக்கிவனே உத்
தரவாதி; பெய்த மழையை மடக்கிக் கட்டவேண்டியவன் இவனே; பேயாவிட்
டால் குளங் குட்டை கால்வாய் கிணறு வெட்டவேண்டியவன் இவனே, காற்
றடித்தால் அதை அதிக்கிரமிக்கவிடாமல் செய்ய வேண்டியவன் இவனே.
இல்லாவிட்டால் காற்றை யுண்டாக்கவேண்டியவன் இவனே, அடிக்குங்
காற்று உபயோகமாகும்படி செய்யவேண்டியவன் இவனே, நெருப்பை யுண்
டாக்க வேண்டியவன் இவனே, அதைக்கொண்டு சமையல் செய்ய கட்டை
எருமுட்டை கரி செத்தை சுள்ளி சம்பாதித்துக் கொடுக்கவேண்டியன் இவ
னே; நோய்வந்தால் தீர்க்கவேண்டியவன் இவனே, வாந்திபேதி வைசூரி
பிளேக் சுரம் முதலிய பெருநோய்கள் வாராமல் காக்கவேண்டியவன் இவனே,
ஒவ்வொரு வீட்டையும் நாட்டையையும் சுத்தமாய் வைக்கவேண்டியவன் இவ
னே, இரவில் நடமாட விளக்கு வைக்கவேண்டியவன் இவனே, ஒருவன்



பெண்டாட்டியை இன்னொருவன் இழுத்துக்கொண்டுபோகாமல் பாதுகாக்க
வேண்டியவன் இவனே, பெண்ஜாதியைப் புருஷன் காப்பாற்ற வேண்டு
மெனக் கட்டாயப்படுத்த வேண்டியவன் இவனே, பிள்ளைகளையும் பெண்
களையும் படிப்பிக்கவேண்டியவன் இவனே, கலியாணஞ் செய்துவைக்க வேண்
டியவன் இவனே, செத்தால் எடுக்கவேண்டியவன் இவனே, புதைக்கவேண்
டிய விடந்தேடிப் புதைக்கவேண்டியவன் இவனே, யார் சொத்துங் களவுபோ
காமல் காக்கவேண்டியவன் இவனே, பஞ்சம்வந்தால் படியளக்கவேண்டியவன்
இவனே, ஒருவனையொருவன் கைமிஞ்சாது கலகப்படாது உயிரைப்போக்காது
காக்கவேண்டியவன் இவனே, வேலையில்லை என்றால் வேலைகொடுக்கவேண்
டியவன் இவனே, ஒருவர் சேதியனுப்பும் ஓலையை இன்னொரு ஊருக்குக்
கொண்டுபோகவேண்டியவன் இவனே, தண்ணீர்மேலாவது மண்மேலாவது
ஒருவர் யாத்திரை செய்யவேண்டுமானால் அவர்கள் நோகாது நோம்பிட சௌ
கரியஞ் செய்யவேண்டியவன் இவனே, கைத்தொழில் கற்க—அவர்கள் உற்
பத்திசெய்வதை செலவுசெய்ய மார்க்கங் காட்டவேண்டியவனும் இவனே,
இன்னும் இவன் செய்யவேண்டிய வேலைகளை பற்றுப் பற்றாய் உற்றுயோசித்
துக் சொல்லப்புகுந்தால் அரசரின் வாழ்க்கை வெகு பரிதாபகரமாகவே முடி
யும். உதாரணங்கள் தேவையானால் பூர்வகாலத்து இந்திய அரசர்களின் செய்
திகளைக்கூர்ந்து கவனிப்பின் போதுமானது. தற்காலத்திலும் எவ்வளவோ
திருஷ்டாந்தங்கள் உண்டு. இந்நாளில் இவ்விந்தியாவின் ராஜாக்களுக்கு, தம்
பிரஜைகளால் சதிகொலை பயங்கரங்களில்லாமற் போன போதிலும், நாகரீகத்
தில்முற்றிப்பழுத்து ஒழுகுகிற மேல்நாட்டு ராஜாக்களுக்கு நேர்ந்தவிபத்துகளைக்
கேளுங்கள். சென்ற ஐம்பது வருஷங்களுக்குள் பர்மாட்யூக், பிரின்ஸ் சார்லஸ்
*III*, அன்டோனி யோகார்ஸா என்பவனால் 1854-ம் வருஷம் மார்ச்சு மாதம்
24-ந் தேதியிலும்; ஆபிரகாம்லிங்கன், (ஐக்கிய மாகாணங்களின் அதிபதி)
வில்கிஸ்பூத் என்பவனால் 1865-ம் வருஷம் ஏப்பிரல் மாதம் 1-ந் தேதியி
லும்; ஸெர்வியா தேசத்து பிரின்ஸ் மைக்கேல் அலெக்ஸான்டர், காராஜார்ஸ்
விச்சின் தூதர்களால் 1868-ம் வருஷம் ஜூன் மாதம் 10-ந்தேதிலும்; பெரு
தேசத்து பால்டா அதிபர், அவருக்குப் பின் பட்டம் பெற்ற குடியரேஸ் என்
பவரின் உத்தரவினால் 1872-ம் வருஷம் ஜூலைமாதத்திலும்; பெருதேசத்து
குடியேற்ற அதிபர் ஜனக்கூட்டத்தாரால் விளக்குத் தூணிலே 1872 வரு
ஷம் ஜூலை மாதம் 26-ந் தேதியில் தூக்குப் போடப் பெற்றும்; ஈக்குவடர்
தேசத்து மோரீனோ அதிபர் 1872-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 6-ந் தேதிலும்;
அப்துல் அஸிஸ் துருக்கி சுல்தான், முஸ்தாபே ஹஜ் மகமத் என்பவர்களால்
1876-ம் வருஷம் ஜூன் மாதம் 4-ந்தேதிலும்; அலெக்ஸான்டர் (*II*) ருஷிய
ஸார் சக்கிரவர்த்தி, ஓர் சர்வாதிகார விரோதியால் 1881-ம் வருஷம் மார்ச்சு
மாதம் 13-ந்தேதியிலும்; ஐக்கிய நாடுகளின் அதிபராகிய ஜெனரல் கார்பீல்ட்
1881-ம் வருஷம் ஜூலை மாதம் 2-ந் தேதியிலும்; பிரான்ஸ் தேசத்து அதிபரா
கிய சதிகார்னோ, ஸீஸோர் ஜயோவானி ஸான்டோ என்பவனால் 1894-ம் வரு

ஷம் ஜூன் மாதம் 21-ந் தேதியிலும்; கொரியா ராணி, துருப்புகளால் 1895-ம் வருஷம் அக்டோபர் மாதம் 8-ந் தேதியிலும்; நஸருத்தீன் பெர்ஷியா தேசத்து ஷா சக்கரவர்த்தி 1896-ம் வருஷம் மே மாதம் 1-ந் தேதியிலும்; ஆஸ்திரியா தேசத்து சக்கரவர்த்தினி, லுக்செனி என்ற இட்டாலியனால் 1881-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 10-ந் தேதியிலும்; இட்டாலி தேசத்து அரசர், ஹம்பெர்ட், காயிடானோ ப்ரெகி என்பவனால் 1900-ம் வருஷம் ஜூலை மாதம் 2-ந் தேதியிலும்; வில்லியம் மாக்கின்லி (ஐக்கிய நாடுகளின் அதிபதி) லியான்ஸல் கோஸ் என்பவனால் 1901-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் 6-ந் தேதியிலும்; ஸெர்விய அரசராகிய அலெக்ஸான்டர் 1. அவரது ராணி, மந்திரிகள், ஸ்தானாதிபதிகள் முதலாயினோர் சகிதமாக 1903-ம் வருஷம் ஜூன் மாதம் 10-ந் தேதியிலும் கொல்லப்பட்டனர். ஆல்பான்ஸோ அரசர் விவாகம் செய்து ஊர்கோலம் வரும்போது ஒரு சதியினால் வெடிக்கிரையாகக் கொஞ்சம் தப்பினது. நமது எட்வர்ட் அரசர் 1906-ம் வருஷம் எப்பிரல் மாதம் 4-ந் தேதியன்று ப்ரஸ்ஸல்ஸ் ரயில்வே ஸ்டேஷனில் போகும்போது ஸிபிடோ என்ற ஒரு பெல்ஜிய வாலிபன் துப்பாக்கியால் சுட்டான். தெய்வாதீனமாய் அரசர் தப்பினார். இதோடு கூட தற்போது ருஷியா தேசத்துஸார் நிக்கல்லஸ் II சக்கிரவர்த்தி தன் உயிரைக் கையால் பிடித்துக் கொண்டு வெளியே புறப்படவே பயந்து கொண்டிருக்கிறார். தலையைக் காட்டினால் உயிருக்கே மோசமாம்! கடைசியாக கிரேக் தேசத்தரசர் ஜார்ஜ் கிறிஸ்தியன் என்பவரும் 18-3-13ல் ஒரு உபாத்தியாயனால் கொல்லப் பட்டுப்போனார். இப்படியே எவ்வளவோ திருஷ்டாந்தங்களை எடுத்துக் காட்டலாம்.

இது போலவே வேதபுரியை ஆட்சி செய்த மகாராணியாருக்கு எங்கு பார்த்த போதிலும் கவலைகளும் விபத்துகளும் நிர்ப்பந்தங்களும் சூழ்ந்து நின்றன. எந்த இடத்திலும் துன்மார்க்கர்களுக்கு அஞ்சவேண்டி யிருப்பதால் மந்திரி விஷயத்தில் அவளுக்குக்கவலை அதிகமாயிற்று. ராணியா—அவள் யார், என் உபநாயகிதானே என்று நினைத்துக்கொண்டு வெகு அலக்ஷியமாக நடந்துகொண்டான். அவன் செய்த தந்திரமான காரியம் யாதெனில் தான் நடத்துகிற துர்க்கிருத்தியங்களை யெல்லாம் ராணியின் வற்புறுத்துதலினாலேயே செய்வித்துவருவதாக ஜனங்கள் நம்பும்படி செய்து கொண்டு தன்னை நிரபராதிபோலப் பாவிக்க வைத்துக்கொண்டான். இந்த சூழ்ச்சியிலே அரசி பொல்லாத பேரெடுக்கலானாள். ஆகவே ஜனங்கள் மந்திரியிடம் அன்பு செலுத்தினர். அவனை எந்தவிதத்திலேனும் தொலைத்துவிட இராணி பலவித்மான சூழ்ச்சிகள் தேடுவோளாயினாள். அவனும் அவளிடத்தில் அதிக ஜாக்கிரதையாகவே இருந்தான். ஆனதால் எதுவும் பலிக்கவில்லை. இனிக்காரியத்தை மீறவிடுவது உசிதமல்லவென்று மகாராணி ஆலோசிக்கலானாள். நகரத்துப் பிரபுக்களில் சிலருக்கு இரகசியமாக லிகிதங்கள் அனுப்பிவைத்தாள். அரசியினுடைய லிகிதத்தின் கடைசி பாகம் பின் வருகிற ஒரு விநோதமான கதையுடன் முடிவு பெறுகிறதாயிருந்தது.



* * * * ஒரு பிராமணர் வேதபுரியிலிருந்து கல்கத்தாவுக்குப் பிரயாணமானார். அதே சமயத்தில் வேறு வர்ணத்தவனும் கல்கத்தாவுக்குப் புறப்பட்டுச் செல்லும்போது வழியில் ஒருவரையொருவர் சந்தித்து சம்பாஷித்துக்கொண்டனர். பிராமணர் மற்றவனைப் பார்த்து நீ தாழ்ந்த குலத்தவனாயிருப்பதால் ஊழியம் செய்வதற்குத் தான் அருகன். உனக்கு அந்த வேலையும் அதிசீக்கிரத்தில் கிடைத்துவிடும். நானே உனக்காக அவ்வளவு சிரமம் எடுத்துக்கொள்ளுகிறேன். நீ நமது வேலைக்காரனாகவிரு. உனக்கு கிரமப்படி படி கொடுத்துவருகிறேன் என்று சொன்னார். சரிதானென்று அவனும் ஒப்புக்கொண்டான்.

பிராமணர் மிக்க ஏழை. உடுத்தியிருந்த வஸ்திரம் மஹா கந்தல். வேலைக்காரனோ சிலாக்கியமான உடைகளைத் தரித்துக்கொண்டிருந்தான். பிராமணர் "ராமா! (வேலைக்காரனுக்கு அளிக்கப்பட்ட பெயர்) உன் எஜமானனாகிய நான் இந்தக் கந்தை வேஷ்டியுடனிருக்க நீ மட்டும் அவ்வளவு நேர்த்தியானவற்றை யணிந்திருப்பது உனக்கே மானக்கேடன்றோ? இது சரியல்ல. ஜனங்கள் என்னைப்பார்த்து நகைப்பார்கள். ஆனால் அதை நான் லக்ஷியம் செய்யமாட்டேன். எஜமானன் வேலைக்காரனென்ற உயர்வு தாழ்வின்றியிருப்பதால் உன்னைக்கண்டு ஏளனம்செய்ய இடமுண்டாகும். ஆகையால் இருவரும் உடைகளை மாற்றிக்கொள்ளலாம்" என்றார். இது நிரம்பவும் நியாயந்தானென்று வேலைக்காரன் ஒப்புக்கொள்ள உடைகளை மாற்றிக் கொண்டனர். பிறகு பயணமாகி கல்கத்தாவுக்குப் போய்ச் சேர்ந்தனர்.

பிராமணர் சிறிய குடிசை யொன்றை குடிக்கூலிக்குப் பேசி ராமனை ஏதேனும் பணமிருக்கிறதாவென்று கேட்டார். அதற்கவன் "ஆம், வழிச் செலவுக்காக இரண்டு ரூபாய் கொண்டுவந்தேன்" என, பிராமணன் "நல்லது, அந்த இரண்டு ரூபாயையும் என்னிடம்கொடு. நமக்குள்ள செலவுகளைச் செய்துகொள்ள வேண்டாமா? அதுவுமின்றி வீட்டுக்காரனுக்கு வாடகைக்காக ஒரு ரூபாய் முன்பணம் கொடுக்கவேண்டும்" என்றார். எது இல்லாமற் போனாலும் நிற்க நிழல்வேண்டுவது நியாயந்தானே. ராமன் எப்படி ஆக்ஷேபிப்பான்?

பிராமணன் மறுபடியும் "ராமா, நீயோ வேலைக்காரனாய்விட்டாய், நான் எஜமானனாகவிருக்கிறேன். எனக்கு ஒருவித சங்கடமும் நேராதபடி பார்த்துக்கொள்வது உன் பொறுப்பு. நீ வீட்டு வேலைகளை யெல்லாம் கவனித்து வரவேண்டும். சோம்பேறியாயுள்ளவன் இவ்வுலகத்தில் விருத்தியடைவது மஹா துர்லபம். மேலும் நான் சிறிது கண்டிப்புள்ளவன். உன்னிடம் உண்மையை அறிவிக்கிறேன். ஏதேனும் குற்றமிருக்கக்கண்டால் தக்ஷணமே அலுவலினின்றும் நீக்கிவிடுவேன். இப்போது வீட்டு வேலைகளை யெல்லாம் முடித்து விட்டாயா சொல் பார்ப்போம்" என, "ஆம், ஐயா" வென்றான். எஜமான், "வயிறு நிறையச் சாப்பிட்டாயா" என்று கேட்க,

வேலைக்காரன் சாப்பிட்டேன்." என்றான். (ராமனது பணத்திலிருந்து தான் அன்று இருவருக்கும் போஜனத்துக்காகச் செலவழிக்கப்பட்டது. "சத்திரத்து சோற்றுக்கு தாதய்யங்கார் தயவு" என்ன வென்பதைப் போல் அவனுடைய ஐவேஜியிலிருந்து சமயல் செய்து வேதுவாய் உபசரித்தார்.) பிராமணர் சொல்லுகிறார். "ராமா இப்பொழுது நான் அலுப்புதீர சற்று சயனித்துக் கொள்ளுகிறேன். நீ சென்று பிச்சை எடுத்துவா. பத்திரம், ஜாக்கிரதை! அங்குமிங்கும் திரிந்து வீண்காலம் போக்காதே; அப்படி செய்வாயாகில் நீ வசூல் செய்து கொண்டு வரும் தொகையிலிருந்து நான் தெரிந்து கொள்வேன்."

ராமன் யாசிக்கப் புறப்பட்டு விட்டான். அவனது எஜமானர் அயர்ந்து தூங்கினார். அஸ்தமனமானதும் வெளியே சென்ற ராமன் சட்டைகளின் பைகள் நிறைய பைசாக்களுடன் திரும்பி வந்து சேர்ந்தான். எஜமானர் எல்லாவற்றையும் பத்திரமாக வாங்கிவைத்துக் கொண்டார். ராமன் வீட்டுக்காரியங்களை எல்லாம் பார்த்து விட்டுப் பிறகு பிச்சைக்குப் போவதும் அதன் மூலமாகச் சம்பாதிக்கும் திரவியத்தை எஜமானர் பெற்றுக் கொள்வதும் வழக்கமாக விருந்தது. இந்த விதமாகச் சிலமாதங்கள் சென்ற பின்பு பிராமணரிடம் கொஞ்சம் தனம் சேர்ந்து விட்டது.

பிராமணர் ஒரு நாள் தன் வீட்டு விஷயமாய் ராமனிடம் பேசிக் கொண்டிருக்கையில் "அடே, நீ, என் பெண்சாதி யிருப்பிடம் சென்று அவளுக்குக் கொஞ்சம் திரவியம் கொண்டுபோய்க் கொடுத்து வரவேண்டும். அன்றேல் நிரம்பவும் கஷ்டமடைவாள். நீ கொண்டு வருவது சொற்பமாக விருக்கிறபடியால் அதிகப் பணம் அனுப்பக்கூட வில்லையே என்று வருத்தப் படுகிறேன். முட்டாள் என்றே உன்னை சொல்லும்படி யிருக்கிறது. பிறரைப் போல் நெஞ்சில் ஒன்றும் உதட்டிலொன்றுமாகப் பேச எனக்கு வராது. மனதில் உள்ளதை உள்ளபடியே சொல்லுகிறேன். வாஸ்தவத்தில் உன்னை வேலையிலிருந்து தள்ளி விடுவதாகவும் எண்ணியிருந்தேன். அனுதையாய் விட்டு விடு வதற்கும் மனம் துணியவில்லை. ஆயினும் பாதகமில்லை. நான் வெகு ஜாக்கிரதையாய்ச் சேர்த்திருப்பதை நாளையதினம் புறப்பட்டுப் போய்க் கொடுத்துவா. ஓஹோ! ஒரு சமாசாரம் சொல்ல மறந்துபோனேன்; இப்போது நினைவிற்கு வந்தது. நீ சென்று விட்டால் என் கதி யென்ன? நானோ ஒரு பைசாகூட நிறுத்திக் கொள்ளாமல் யாவற்றையும் அனுப்பி விடுகிறேன். ஆதலின் இன்னம் இரண்டு நாள் தங்கியிருந்து காலை முதல் அர்த்த ராத்திரி வரை பிச்சை எடுப்பாயாகில் நீ திரும்பிவரும் வரை அது என் செலவிற்குக் காணும்" என்று சொல்லி முடித்தார்.

இதன் பிறகு, ராமன் வழிச் செலவுக்காகப் பணம் கேட்டான். எஜமானருக்குக் கோபமீறி, "அடே! பயலே!! நான் சாப்பாட்டுக்காக வைத்திருப்பதை உன் வழிச்செலவுக்குக் கொடுத்து விட்டுப் பட்டினிகிடக்கச்



சொல்லுகிறாயே என்ன கல் நெஞ்சமடா உன்னுடையது. வெகு நேர்த்தியான வேலைக்காரன். பேஷ்! ரொம்பவும் நன்றாயிருக்கிறது. "நீ கெட்ட கேட்டுக்கு உனக்கு இரண்டு பட்டாடையும் வேண்டுமா" என்பது போல் ஊழியனுக்குப் பயணச் செலவு கூடவேண்டுமா? அடா கழுதை! போகும் போது வழிமுழுதும் பிச்சை எடுத்துக்கொண்டே செல்வதற்கு என்னகேடு? என்னை வீணாகத் தொந்தரை செய்யாதே. நான் உன் எஜமானன் என்பதை மறந்துவிட்டையோ? உனக்காக இவ்வளவு சிரமப்பட்டு இந்த வீட்டைப் பேசி சரிப்படுத்தா விட்டால் தெருக்களில் கிடந்து சோற்றுக்கின்றி திண்டாடுவையே என்றார்.

ராமன் எஜமானருக்கு வேண்டியவற்றைத் தேடிவைத்து கல்கத்தாவை விட்டுப் புறப்பட்டான். வழிமுழுதும் இரந்து சென்று பசியை யாற்றிக்கொண்டு பிராமணரது சம்ஸாரத்தினிடம் கொண்டு போன திரவியத்தைச் சேர்த்து விட்டான்.

அந்தம்மாள் ராமனுக்குக் கொஞ்சம் உண்டி உதவினாள். அவன் பசியாறின பிறகு "ஏனப்பா அவர் இவ்வளவு சீக்கிரத்தில் என்ன அலுவலில் அமர்ந்தார்" என்று வினவ, அதற்கு ராமன், தாயே அவருக்கு ஒருவிதமான ஜோலியும் கிடையாது, நான் அவருடைய ஊழியன். பிச்சை யெடுத்துக் கொண்டுபோய் அவரிடம் சேர்ப்பது வழக்கம், அப்படி சேர்ந்த தொகையிலிருந்து தான் இப்போது தங்களுக்கனுப்பியிருக்கிறார்" என்றான். பார்ப்பினி சற்று நிதானித்து யோசித்துப் பார்த்து, "நீ தனியே போகிறாயா அல்லது அவரும் உன்னைப்பின் தொடர்ந்து செல்கிறாரா" வென்று கேட்டாள். "இல்லை" என்றான். "அப்படியானால், நீ திரும்பிவரும்போது பிச்சைக்குப் போன வீடுகள் இத்தனை, ஒவ்வொன்றிலும் பெற்று வந்த தொகை இவ்வளவு என்று சரிபார்த்துக்கொள்ளுகிறார் போலிருக்கிறது என்றாள். "அவ்விதமும் கிடையாது" என்று பதில் அளித்தான். "அப்படியா சமாசாரம். அது ஒரு மூடம், ஏதுங்கெட்டது. சுத்தபயித்தியக்காரப் பிராமணர். இவர் ரொம்பதான் குப்பை கொட்டப்போகிறார். லௌகீக சாமர்த்தியம் கொஞ்சம்கூடப்போதாது. ஸர்வ அசடு என்ற எனக்குத் தெரியாதா. வேலைக்காரனிடத்தில் என்ன நம்பிக்கை? கொண்டு வருவதில் கொஞ்சம் ஒளித்து வைத்துக் கொள்வானென்று கூட பிராமணன் மனதிற் படவில்லையே! என்ன இவ்வளவு பேதாளமா யிருக்கிறாரே! இவருடைய தாராளகுணமே இவரைக்கெடுத்து விடும் போலிருக்கிறது. ஆனால், ராமா அவர் இப்படிக் கபடமற்றிருக்கிறாரே என்று ஏதேனும் மோசம் பண்ணப்போகிறாய். உனக்குச் செய்துள்ள நன்மைக்காக எவ்வளவோ நீ அவருக்குக் கடன் பட்டிருக்கிறாய் என்றாள்.

ராமன் கடைசியாகப் பயணமானான். வழிக்குக் கட்டுசாதம் கட்டித் தரும்படி கேட்டான். அதற்கு அந்த பார்ப்பினி போடாபோ! பைத்தியக்

காரா! பிழைக்க வழி தெரியாதிருந்த உன்னை இவ்வளவு தூரம் முன்னுக்குக் கொண்டு வந்து உனக்குத்தினமும் அன்னம் படைக்கிறாரே. அது போதாதா? இன்னம் உனக்குக் கட்டுச் சோறு கூடவா வேண்டும்; போகிற பாதையில் யாசகம் செய்து வயிற்றைச் சரிப்படுத்திக் கொண்டுபோ என்று சொன்னாள். இந்த வார்த்தைகள் ராமன் மனதில் சுறுக்கென்று பட்டது. அவனுடைய சுய புத்தி அவனுக்கு உண்டாயிற்று. உடனே பார்ப்பினியைப் பார்த்து விஸ்வாசமற்ற நாயே! எல்லாம் நான் சம்பாதித்த பணம். உன் புருஷன் என் வீட்டிலிருந்தபடியே என் கஷ்டத்தின் லாபத்தைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். பிராமணனாயிற்றே என்று பார்த்தேன். விஸ்வாசம் வைத்து உழைத்தேன். அவனும் எனக்கு வழிச் செலவுக்குத் தரவில்லை, நீயும் இவ்வளவு கட்டுச் சாதம் கட்டித்தர முடியாதென்று விட்டாய். உங்களுடைய மோசம் இப்போதுதான் எனக்குத் தெரிந்தது! நான் சம்பாதித்த என்னுடைய சொந்தப் பணத்தை நீங்கள் பெற்றுக் கொண்டு என்னை அதிகாரம் செய்து வந்தது மல்லாமல், என்னவோ எனக்கு வெகுவாய் இரங்கிச் சோறு போட்டுக் காப்பாற்றுபவர்களைப் போலவும் நடித்து என்னை நம்பச் செய்தீர்கள். இனி என்னை ஏமாற்ற முடியாது. சீக்கிரம் உன் புருஷனை அந்த சண்டாளன் உன்னிடம் வந்து சேர்ந்து விடுவான். இனிக் கல்கத்தாவில் அவனுக்கு வேலை ஏதும் இருக்கமாட்டாது. நானே அவனை அங்கிருந்து துரத்தி விடுகிறதற்குத் தயாராய் இதோ போகிறேன். இது வரை நான் சம்பாதித்ததை இழந்து போனாலும் இனி மேற் கொண்டு சம்பாதிப்பதைக் காப்பாற்றிக் கொள்வதற்கு இந்த நஷ்டம் வெகு தூரம் ஒத்தாசையாக இருக்கும். ஆரம்பத்தில் நான் பிச்சை எடுத்தாலும் கடைசியில் ஒரு வியாபாரியாக ஆய்விடத் தெரியும் என்று சொல்லி விட்டுச் சென்று விட்டான். அவன் போனமறுவாரத்திலேயே பிராமணன் கல்கத்தா விலிருந்து மனைவியிடம் திரும்பி விட்டான். ராமன் முன் போலில்லை. நம்மை மீறி விட்டதோடு நமது வஞ்சக அக்கிரமத்தையும் கண்டு கொண்டான். என்னைப் பற்றிக் கல்கத்தா முழுமையும் சொல்லித் தெருச் சிரிக்கவைத்து விட்டபடியால் இனி கல்கத்தா நமக்கு சரிப்படாதென்று திரும்பி விட்டேனென்று பிராமணன் தன் மனைவிக்குச் சொன்னான். பார்ப்பினியும் இப்போது ஒன்றும் பேசவகையற்றவளானாள். ராமனுடைய பணம் அதிக நாளைக்கு வரவில்லை. சீக்கிரம் செலவாகிவிடவே மறுபடியும் அன்ன விசாரம் பழயபடி அதிகரித்தது. இவர்கள் நிலைமை இப்படியாக, ராமனோ பிச்சை எடுத்துப் பணம் சேர்த்து அதைக்கொண்டு வர்த்தகத்தில் பிரவேசித்துப் படிப்படியாய் உயர்ந்து இப்போது சிறந்த முதலாளியாக இருக்கின்றான்.

* * * *

மேற்காட்டிய கதையில் வருகிற பிராமணனுடைய ஸ்தானத்தில் மந்திரி இருந்து வர, அரசியாகிய நானோ அந்தப் பிராமணனது வேலைக்காரனுடைய ஸ்தானத்தில் இருந்துகொண்டிருக்கிறேன். வேலைக்காரனால் எப்படி



பிராமணன் முன்னுக்கு வந்தானோ அதேவிதமாகவே இந்த மந்திரியும் என்னால் இந்த உன்னத பதவிக்கு அருகனானான். இப்போது அவனிருந்து வருகிற உயர் நலம் அமைந்த நிலைமையானது எனது சிபார்சினாலும் காலஞ்சென்ற என் நாதரை நான் மிகவும் வேண்டிக்கொண்டதிலிருந்துமே உண்டாயிற்று. உண்மை இவ்வாறிருந்தாலும் மேற்கண்ட கதையில் வருகிற பிராமணனைப் போலவே இவ்வுண்மையை மூடிவிட்டு, தானே அரசி முதற்கொண்டு எல்லோரையும் காப்பாற்றி வருகிறதாக மனோராஜ்யம் செய்து கொண்டிருக்கிறான். மேலும் என்னைப்பற்றி ஜனங்கள் கொடியவள் என்பதான அபிப்பிராயங் கொள்ளும்படியாகப் பலவித காரியங்களையும் செய்திருக்கிறான். நான் கொடுங்கோல் செலுத்துவதாகவும், எனக்கு இந்த இராஜ்யத்தை ஆள்வதற்குச் சாமர்த்தியமில்லை யென்றும் ஒரே அடியாகச் சாதித்து உங்கட்கு எழுதியிருப்பதாகவும் நான் கேள்விப்படுகிறேன். எந்த இராஜ்யமானாலும் அதை நிர்வகித்துக்கொள்வதில் அதன் பரம்பரை அரசர்கள் சாமர்த்தியமில்லாதவர்களென்றும், அந்த இராஜ்யத்துடன் யாதொரு பாத்தியதையும் அற்றிருந்து, புதிதாகப் பத்து வருஷ சம்பந்தம் மட்டுமே பெற்ற மந்திரியைப் போன்றவர்கள் வசமே அதன் நிர்வாகம் இருக்கவேண்டுமென்றும் சாதிப்பது இந்த வேதபுரியில்தான் செல்லுமேயன்றி வேறெங்கும் செல்லாது. மந்திரி இப்படி சாதிப்பதற்கு எவ்வித ஆதாரமுமில்லை; உதாரணங்களுமில்லை.

மந்திரியினுடைய அபிப்பிராயத்தில் இந்த வேதபுரியின் இராஜவமிஸத்தார் மிலேச்ச ஜாதிகள் என்றும், இந்த இராஜ சந்ததியைத் தற்கால நிலைமையில் எவ்விதமாகத் தாழ்த்திச் சொன்னாலும் சொல்லக்கூடுமென்றும் பட்டிருக்கிறதாகக் காண்கிறது. ஐயோ! அநேகாயிர வருஷகாலமாய் ஜனங்கள் நெருங்கி வசித்து, அநேக கிராமங்களும் பட்டணங்களும் இருந்து, விவசாயம் தொழில் முதலிய பலவித நாகரீகச் சின்னங்கள் வளர்ந்து, அகிலமுற்றும் புகழொளி பரப்பி வந்த இந்த இராஜ்யத்தில் அதன் இராஜ வமிஸத்தாருக்கு ஆளுந்திறன் இல்லை யென்று சொன்னால் யார் இதை நம்புவார்கள்? இந்தத் துன்மார்க்க மந்திரி இந்த வேதபுரிக்கு வருவதற்கு முன்னதாக, ராஜாக்களும், ராஜாங்கங்களும் அவைகளை நடத்தின உத்தியோகஸ்தர்களும் இல்லாமல், ஜனங்கள் ஒருவரை யொருவர் பிடித்துத் தின்றுகொண்டிருந்தார்களா? அப்படித் தின்றுகொண்டிருந்தால் இந்த இராஜ்யம் வளப்பத்தையும் செல்வத்தையும் எப்படிப் பெற்றது? வளப்பமும் செல்வமும் இருப்பதைக் கண்டு அவைகளுக்கு ஆசைப்பட்டுத்தானே இந்த மந்திரி இங்கு வந்து புகுந்தான்!

அந்த ஆசை மிகுதியினால் தானே இப்போது இந்த அரசாக்ஷியையும் அபகரிக்கப் பார்க்கிறான்! அதற்காகவன்றோ என்னையும் தொலைக்க வழி தேடுகிறான்.

நானோ இப்போது உண்மையை முற்றிலும் அறிந்து கொண்ட ராமனைப் போல இருக்கிறேன். ராமன் எப்படி அந்தக் கூடர்களான பிராமணன்

பார்ப்பினி இவர்களுடைய வஞ்சனை வலையினின்றும் தன்னை விடுவித்துக் கொண்டு பிறகு ஒரு நல்ல வியாபாரஸ்தனுகமாறி க்ஷேம மெய்தினுனே, அதேவிதமாகவே நானும் இந்த மந்திரியினுடைய மோசங்களை யறிந்து கொண்டு, அவனைக்கைது செய்து அவனது வலையிலிருந்தும் மீட்சி பெற விருப்ப முடையவளாக இருக்கின்றேன். ஏற்கனவே மந்திரியினுடைய இரகசிய அறையின் நிர்மிதத்தைப் பற்றிச் சிறிது தெரிந்திருக்கிறேன். பிரதமத்தில் அந்தரங்கமாக அந்த அறை சோதனைசெய்யப்பட வேண்டும். இதில் சற்றேனும் தாமதம் செய்யப்போகாது. மந்திரியினுடைய கூட்டத்தார் மேலெழும்பி வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய தைரியம் அதிகரித்துவருகிறது. அவர்களுடைய மனோவன்மை பலப்பட்டு வருகின்றது. வேதபுரிவாசிகளாகிய உங்களுடைய மனோ சக்தியோ தாழ்மையடைந்து கொண்டிருக்கிறது. ஆனபடியால் ஜனத்தலைவர்கள் ஒவ்வொரு விஷயத்தையும் தீர ஆலோசித்துப் பார்க்கும்படி வேண்டுகிறேன்.

* * * * * * * * *

* * * * * * * * *

இந்த விஸ்தாரமான நிருபம் நகரத்துப் பிரபுக்களில் பிராதான்யமான நால்வருக்கு அனுப்பப்பட்டது. ஸ்வஹஸ்த லிகிதத்தைப் பார்த்த பிறகு தான் அவர்களுக்கு அரசியின்மீது எவ்வித குற்றமுமில்லை யென்பதை அறியலாயினர். உடனே இரகசிய சபை யொன்றை ஸ்தாபித்தனர். மகாராணி பூமியைக் குடைந்து மந்திரியின் அந்தரங்க அறைக்கு ஒரு சுரங்கம் ஏற்படுத்தினுள். அச்சுரங்கத்தின் வழி இராஜவீதியிலிருந்தது. தன் மீது மந்திரிக்கு ஸம்சயம் தோன்றுதிருப்பதற்காகவே அந்த சுரங்க மார்க்கத்தை தனது அந்தப்புரத்தில் வைத்துக் கொள்ளாமல் இராஜ வீதியிலுள்ள ஒரு சிறு சந்தில் ஏற்படுத்தினுள்.

ஒரு நாள் இரவு பன்னிரண்டுமணி யிருக்கலாம். காமுகரும் கள்வரும் கிரந்த கர்த்தர்களும் தவிர மற்றயாவரும் தூங்கி விட்டார்கள். கொடுத்துவைத்த பாக்கியவதிகளும் பாக்கியவான்களும் தத்தம் நாயகர்களுடனும் தத்தம் நாயகிகளுடனும் சந்தோஷமாயிருந்தனர். ஆங்காங்கு நாய்கள் குலைத்தபடி நின்றன. இத்தருணத்தில் அரசி எங்கேயோ புறப்பட்டுப்போக வெளியில் வந்து நின்றுள். நகரத்துப் பிரபுக்களில் இருவர் திடீரென்று தோன்றினர். உடனே மூவருமாக இராஜ வீதியிலுள்ள ஒரு சிறு சந்தில் வரவும், அங்கு நூறு வீரர்கள் ஆயுதபாணிகளாய் சாதாரண மனிதர்கள் போலத் தூங்கும் பாவனையிலிருந்தனர். மூவரும் சுரங்கத்தின் கதவைத் திறந்து கொண்டு உட்சென்று மந்திரியின் இரகசிய அறையை யடைந்தனர். அந்த அறையானது இரும்புத் தகடுகளால் இணைக்கப்பட்டு வெளியில் கல்கட்டடமாக இருந்தது. கதவு வெகு பலமானது. உடனே அரசி அக்கதவினிடம் அணுகி உள் தாழ்ப்பாள் போட்டுவிட்டனள். இராஜாங்கத்துக்கும் தனக்கும்



விரோதமான ஆறு ரகசியக் கூட்டங்களை மந்திரி ஏற்பாடு செய்திருப்பதையெல்லாம் கண்டு கொண்டாள். அந்தச் சபையின் அங்கத்தினர்களின் பெயர்களெல்லாம் காணப்பட்டிருந்தன. அநேக வருஷங்களுக்கு முன்பு தன்னைப் பற்றித் தனது பிதா எழுதிவைத்துச் சென்றதும் அதில் ஜகத்குருவின் கையொப்பமிடப்பட்டிருப்பதுமான சாசனபத்திரமும் கிடைத்தது. இது மந்திரியின் கைக்கு எப்படி அகப்பட்டதென்பதைத் தெரிந்து கொள்ளமுடியாமல் இன்னும் ஆராயலானுள். இன்னொருகடிதமும் அகப்பட்டது. அது சந்திரபோஸுக்கு ஜெகத்குரு எழுதிய கடிதமாக இருந்தது. அதில் அந்த சாசனபத்திரத்தை அவருடைய விருப்பப்படியே அனுப்பியிருப்பதாகச் சொல்லப்பட்டிருந்தது. பிறகு இன்னொரு கடிதமும் அகப்பட்டது. ஹா என்ன ஆச்சரியம்! எவ்வளவு தைரியமான செய்கை. முன் சொன்ன சாஸனபத்திரத்தை யனுப்பிய அந்த ஜெகத்குருவையே கைதுசெய்துவிடும்படி குமாரவனம் என்ற கிராமத்தின் தலைவனுக்கு எழுதிய கடிதத்தின் மற்றொரு பிரதியாக இருந்தது. அத்துடன் அதற்கு வந்த பதிலும் சேர்த்து வைக்கப்பட்டிருந்தபடியால் அதைப் பிரித்துப் பார்க்கையில் இன்ன இடத்தில் அவரைச் சிறை வைத்திருப்பதாகத் தெரியவந்தது. கடைசியாக ஒரு இரும்புப் பெட்டி மட்டும் திறக்க முடியவில்லை. அது மிகவும் சிறியதாக இருந்தாலும் நிலத்தோடு நிலமாகப் புதைத்து வைக்கப்பட்டிருந்தது. வெகு கஷ்டப்பட்டு அதையும் பெயர்த்தெடுத்து விட்டனர். அந்தப் பெட்டி சகிதமாக மற்ற 'ரிக்கார்டு'களுடன் அச்சுரங்க மார்க்கமாகவே புறப்பட்டு வெளியில் வந்தனர். யாதொரு அபாயமு மில்லை யென்பதைத் தெரிவித்துக் கொள்வதற்காக நீலநிறமான விளக்கு வெளிச்சம் காட்டப்பட்டது. அப்படியே அதற்குப் பதிலாக இவர்களுக்குக் காட்டப்பட்டது. அரசியின் அந்தப்புரத்திற்கு அரசியுடன் இருபிரபுக்களும் சென்றனர். அங்கே அந்த இரும்புப் பெட்டியை உடைத்து விட்டார்கள். அதில் இரண்டு பெரிய கடிதங்களும், நவத்வீப ஜமீனின் ஆதாரவுபத்திரம் முதலியவைகளும் காணப்பட்டன. அரசி வெகு ஆவலுடன் அவற்றைப் படித்தாள்.

ஒரு கடிதத்தில், தான் கொல்லப்பட்டுப் போனதற்குத் தனது மனைவியே காரணம் என்றும் அவள் மகா துன்மார்க்கி, பாவி என்றும் எழுதி அரசியினுடைய பர்த்தாவின் கையொப்பம் வைக்கப்பட்டிருந்தது. மந்திரி தன்னிடம் அன்றுகூறிய மரணசாசனம் இது தான் என்று அரசி கிரகித்துக் கொண்டாள். பிறகு இரண்டாவது கடிதத்தை எடுத்துப் படித்தாள். படித்தது தான் தாமதம். ஐயோ நாதா என்று அலறிக் கொண்டே மூர்ச்சை போயினுள். அச்சமயத்தில் சந்திர போஸ், ஆர்யகுமாரன், பிரகாஸலக்ஷ்மி, கிழவி இந்நால்வரும் அவ்விடம் வரலாயினர்.

## அத்தியாயம். 14.

மந்திரிக்கு வரவர ஆசை அதிகமாயிற்று. சீக்கிரத்தில் அரசியைக் கைது செய்து, அவளே தனது புருஷனான அரசனைக் கொன்றாளென்பதை நிரூபித்து கொலைக்களத்திற்கு அனுப்பிவிட்டு இராஜ்யாதிபத்தியத்தைக் கைக் கொள்ளவேண்டுமென்று முயல்வானாயினான். தனக்கு மகுடாபிஷேகம் நடந்த மூன்றாம் நாள் பிரகாசலக்ஷ்மியைத் தனது பட்டமகிஷியாக ஏற்று அவளை விவாகம் செய்துகொண்டு அன்று முதற்கொண்டு மகா கிரமமாக இல்வாழ்க்கை நடத்தவேண்டுமென்று தீர்மானங்களும் தனக்குள் செய்து கொண்டான். பிறகு சில தினங்கட்குள் சைன்னியங்களைச் சேகரம் செய்யும் வேலையையும் மேற்கொண்டான். அரசியின்கணையாழி தன்னிடம் இருப்பதால் அரை நொடியில் சைந்நியங்களைத் தயாராக்கி விடலாமென்று மனோராஜ்ஜம் செய்து கொண்டு கையைப் பார்க்கவே விரலி லிட்டிருந்த கணையாழியைப் பிரகாசலக்ஷ்மியிடம் கொடுத்த ஞாபகம் நினைவிற்கு வந்தது. உடனே அவளையும் பார்த்துவிட்டுக் கணையாழியையும் பெற்று வர அவளை அடைத்து வைத்திருந்த இடத்திற்குச் சென்றான். அங்கே போய்ப் பார்க்கும் போது அவளைக் காணாததால் திடுக்கிட்டு, அங்கிருந்த காவலாளிகளையெல்லாம் கடிந்து கொண்டு, பிரகாசலக்ஷ்மி தப்பித் தோடிய விருத்தாந்தங்களை யெல்லாம் கேட்டுத் துக்க மடைந்து, தன்னை ஏமாற்றிப் போனவர்களைக் கண்டு பிடிக்க வேண்டு மென்று உறுதி செய்து கொண்டு வெளியில் வந்தான். அவ்விதமே பிரகாசலக்ஷ்மியைத் தேட ஆட்களையனுப்பி விட்டு, கணையாழி மோதிரம் தன்வசம் இல்லாததால் சைந்நியங்களை எப்படிச் சேகரம் செய்கிற தென்று யோசித்த வண்ணம் தனது இருப்பிடத்திற்குப் புறப்பட்டுப் போனான்.

## அத்தியாயம். 15.

அரசி மூர்ச்சை தெளிந்து எழுந்ததும் சந்திர போஸை வணங்கினான். தன்னைக் காப்பாற்றவேண்டு மென்று பிரார்த்தித்தாள். சந்திர போஸ், பிரகாசலக்ஷ்மி இவர்களிருவரும் மந்திரியினால் அநாகிருதமாகச் சிறையிலிடப் பட்டிருந்த விஷயம் இப்போது தான் மஹாராணிக்குத் தெரிந்தது. மிகுந்த உக்கிரகத்துடன் பற்களைக் கடித்துக் கொண்டாள். ஐயோ இது போன்ற



எத்தனை அநீதிகள் என் பேரால் நடக்கின்றனவோ வென்று கலங்கினாள். கணையாழி மோதிரத்தைப் பிரகாசலக்ஷ்மி அரசியிடம் கொடுத்துவிட்டாள். சந்திரபோஸ் இரும்புப் பெட்டியிலிருந்த கடிதங்களை படித்துப் பார்த்து ஆச்சரிய மேலிட்டுப் போனார்.

இரும்புப் பெட்டியில் இருந்த கடிதத்தில் வேதபுரியின் அரசரான நமது மகாராணியின் பர்த்தாவைக் கைது செய்து குமாரவனம் என்ற கிராமத்திலுள்ள ரகசியக்கட்டடத்தில் ஆயுர் பரியந்தம் சிறை வைத்திருக்கும்படியாக கிராமத் தலைவனுக்கு மந்திரி எழுதியிருந்த விஷயங்கள் காணப் பட்டன. அவ்விதமே நடத்தப்பட்டதாக குமாரவனத்தின் தலைவனாகிய காளீசரணபோஸ் பதில் எழுதியிருந்தான். இவ்விதமாகவே ஜெகத் குருவைக் கைது செய்ததற்கும், நவத்துவீபத்தின் ஜமீன்தாரணியான கமலாபாய் என்பவளைக் கைது செய்ததற்கும் ஆதாரமான கடிதங்களும் கிடைத்தன. இவர்களையும் குமாரவனத்திலேயே சிறைவைத்திருப்பதாகவும் அதில் சொல்லப்பட்டிருந்தது. கடைசியாக யாவரும் ஒன்று கூடி ஆலோசித்தனர். அந்த ஆலோசனையின் பயனாக சில அவசரமான ஏற்பாடுகளைச் செய்வதற்காக நகரப்பிரபுக்களிருவரும் வெளிச் சென்றனர். ஆரியகுமாரன், சந்திரபோஸ், பிரகாசலக்ஷ்மி, கிழவி இந்நால்வரும் அரசியின் அந்தப்புரத்திலேயே மறைவாகத் தங்கினர்.

நகரத்துப் பிரபுக்கள் இருவரும் மறுதினம் மந்திரியைக் கண்டு கொண்டனர். அரசியின் கொடுமைகள் சகிக்கமுடியவில்லை யென்றனர். அவள் பெரிய வியபிசாரி என்றும் வைதனர். மந்திரியும் ஆம் ஆம் என்று தலையசைத்தார். பிரபுக்களிருவரும் அதன்மேல் சொல்லலுற்றனர்; பெருமானே! அரசி தங்களைக் கெடுக்க அநேக காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறாள். தர்மஸ்வரூபியாகிய தாங்கள் வெளுத்ததெல்லாம் பாலென மயங்கி அரசியின்பால் நம்பிக்கைகொண்டு ஏமாற்ற முறுகின்றீர்கள். ஐயோ! அன்னவளின் துராகிருதங்கள் கணித்தற்கில்லை. பரிசுத்த ஸ்தானமாகிய தங்களைக்கூட பலாத்கரித்ததாகவும், பரநாரீ ஸகோதரராகிய தேவரீர் அந்த வற்புறுத்துதலை நிராகரித்துத் திரும்பியதாகவுங்கூட எங்களுக்குக் கேள்வியுண்டு. ராம்மோகனன் என்பவன் அரசியின் ரகசியக் கணவன். பிரபூ! இன்னும் கேளுங்கள்; சப்தசிந்துவம் என்கிற தீவில் அரசி ஒரு ரகசிய மாளிகை நிர்மிதம் செய்திருக்கிறாள். தனக்கு ஏதேனும் அபாயம் நேரின் தன்னைத் தற்காத்துக்கொள்ள அநேக உபாயங்கள் அங்கு வைத்துள்ளாள். நாங்கள் இருவரும் தங்களுக்காகத் துணைவருகின்றோம். சகலமும் காண்பிக்கின்றோம். தங்களுடன் சைன்னிய பரிவாரங்கள் வருவதாயிருந்தால் விஷயம் பஹிரங்கம் பெற்றுவிடும். ரகசியமாக அரசி முதலானோர் அறியாவண்ணம் நாம் சென்று கண்டு மேல் நடக்கவேண்டிய விஷயங்களை நிதானித்தலே விவேக பக்ஷம் என்றனர்.

மந்திரி கலங்கிப்போனான். தான் அரசியைப் பலாத்கரித்ததுகூட அவர்கள் அறிந்திருந்தபடியால் சகல உண்மைகளும் அவர்கள் தெரிந்து கொண்டுதான் தன் சார்பாக வார்த்தையாடுகிறார்களென்று நம்பினான். நல்லகாலமாக, தான் அரசியைப் பலாத்கரித்த விஷயம் மறைந்து போய், தன்னை அரசி பலாத்கரித்ததாக வெளியில் சொல்லிக் கொள்ளப் படுவதற்காக மிகவும் சந்தோஷித்தான். மேலும் அரசி இத்தனை நாளும் இல்லாத விதமாக, அன்று நிகழ்வுற்ற சம்பாஷணையில் தன்னை முற்றிலும் திரஸ்கரித்தும் எதிர்த்தும் வார்த்தையாடியதையும் இப்போது ஞாபகத்திற்குக் கொண்டு வரலாயினான். இதை யெல்லாம் நீள நினைத்துப் பார்க்கையில் அரசி அந்தரங்கஸமாஜம் ஸ்தாபித்திருத்தல் கூடு மென்றே தோன்றிற்று. தன்னை நாடி வந்த பிரபுக்களும் சாமான்யர்களல்லவாதலால் உடனே அவ்விருவருடனும் பிரயாணமானான். சப்தசிந்துவதீவிற்குப் போய்ச் சேர்ந்தனர். அங்கே வஸந்தமாலா இவர்களை யுபசரித்தனள். அரசிக்கும் அவளுக்கும் அதிகபேதமில்லாததையும், இருவருடையவும் முகபாவங்களும் ஒத்திருப்பதையும் மந்திரி கண்டு பிரமித்தார். மேலும் வஸந்தமாலாவினிடத்து அளவற்ற மோகமும் பூண்டான். பிரபுக்களிருவரும் மந்திரியைப் பார்த்து ரகசியமாக, வஸந்தமாலா என்ற அந்த கன்னிகை மகாராணியின் துர்க்கிருத்தியங்களின் காரணமாகப் பிறந்தவள் என்றும், உலக நிந்தனைக்குப் பயந்து அவளை இங்கு வைத்து வளர்த்து வருவதாயும் சொன்னார்கள். திரும்பும் போது அப்பெண்ணையும் சிறைப்படுத்திப் போகலா மென்றார்கள். மந்திரியின் எண்ணமும் அது தானாகையால் அதிக ஸந்தோஷத்தையடைந்தான். பிறகு மூவருமாக ராம் மோகனன் முன்னிருந்த ரகசிய கட்டிடத்திற்குள் பிரவேசமாயினர். மந்திரி அக்கட்டடத்தின் அமைப்பைக் கண்டு ஆச்சரியப்பட்டான். அங்கிருப்பவைகளைக் கவனித்து வரும் போது பிரபுக்களிருவரும் ஒரு சூக்ஷ்மமான இடத்தைக் காண்பித்தனர். சாதாரணமாக எலியைப் பிடிப்பதற்கான யந்திரத்தில் உள்ளே மாமிசவஸ்துவை வைத்து, எலி அதைத் தொட்டதும் கழுத்தை அந்த யந்திரம் நெருக்கிக் கொண்டு கொல்வதை அநேகர் எங்கும் கண்டிருக்கலாம். அதைப் போன்ற ஒரு விநோதமானயந்திரம் எவருக்குமே தோற்றாதபடி பூமியின் கீழ் அங்கு பதியவைத்து மேலே வர்ணம் பூசப்பட்டிருந்தது. அதில் ஒரு ஸ்திரியும் பூமானும் ஆநந்தத்துடனிருக்கும் பாவனையாக ஒரு சித்திரமும் வரையப்பட்டிருந்தது. மந்திரி அந்த சித்திரத்தைக்கண்டு மிகவும் மயங்கினான். அதினருகே சென்றான். பிரபுக்கள் இருவரும் மந்திரியை நோக்கி அந்த சித்திரத்தின் தலையில் கால் வைத்து நின்றால் ஒரு விநோதம் காணலாம் என்றனர். மந்திரியும் அவ்விதமே அந்த சித்திரத்திற்கு சமீபமாகச்சென்று அதன் தலையில் தனது காலை வைக்கப்போனான். அவ்வளவுதான் தாமதம்! உடனே நிலத்தினின்று ஒரு யந்திரத்தின் இரண்டுபோகங்கள் தோன்றி மந்திரியின் இடுப்பில் ஒரு வளையமாக விழுந்தது. கீழே இரண்டு கால்களையும் இன்னொன்று உறுதியாகக் கவ்வி பிறகு அது



ஒரு வளையமாக மாறிற்று. மந்திரி திடுக்கிட்டு இது என்ன வென்றான். பிரபுக்களிருவரும் அவனைப்பார்த்து இந்தஸ்தானத்தில் தான் உங்களை இவ்விதமாகக் கைது செய்து விடுகிறதென்று அரசி தீர்மானித்திருந்தாள். அதை முன்னதாகவே நாங்கள் உங்களுக்குக் காண்பித்தோம். ஆ! ஆ! அரசியின் அக்கிரமங்களும், ரகசிய வேலைகளும் எப்படியிருக்கிறது பார்த்தீர்களா வென்றனர். மந்திரியும் கவலையோடு தலையை யசைத்து விட்டு தன்னை அதிலிருந்து விடுவிக்கும்படியும், தன் கால்களிலும் இடுப்பிலும் நெருக்கப்பட்டுள்ள இரும்பு வளையங்களை எடுத்துவிடும்படியும் வேண்டினான். அதற்குப் பிரபுக்கள் இருவரும் அவனைப்பார்த்து, பிரபூ! இந்த மாளிகையின் சூக்ஷ்மங்கள் வெகு அற்பமானது. தாங்கள் குமாரவனத்தில் நிர்மிதம் செய்திருக்கிற பதின்மூன்றவது மாயப்படியுள்ள மாளிகைக்கு இது எம்மாத்திரம்? அதில் அரசியின் கணவரையும் ஜெகத்குருவையும் நவத்வீபத்தினுடைய ஜமீன்தாரின் தர்ம பத்தினியான கமலாபாயையும் சிறைப்படுத்திய அற்புதத்தை என்னென்போம்! தங்களின் பெருமையை எம்மொருநாவால் பேசவுங்கூடுமோ என்று மந்திரியைப் புகழ்ந்தனர். இவற்றைக்கேட்ட மாத்திரத்தில் மந்திரி திடுக்கிட்டுப்போனான். அவனது ஆச்சரியம் அடங்குவதற்குள்ளாக இன்னொரு பிரபு சொல்லலுற்றார். அமைச்சர் திலகமே! தங்களின் சாகஸ குணங்களை எம்போன்ற மதியிலிகள் புகழ்வது சரியன்று. வேதபுரியிலே தங்களுடைய அரண்மனையிலே ரகசியக்கட்டடம் ஒன்று நிர்மிதம் செய்தீர்களே! ஆ! ஆ! எத்தனைச் சாமார்த்தியமான செய்கை! அங்கே நிலத்தோடு நிலமாகப் புதைத்துவைத்திருந்த இரும்புப் பெட்டியை அரசி வெகு நேரம் உடைக்கப்பார்த்தும் முடியவேயில்லை என்றனர்.

மந்திரிக்கு இப்போது உண்மை விளங்கி விட்டது. சகல அந்தரங்கங்களையும் அரசி கண்டுபிடித்து விட்டாள் என்று அறிந்துகொண்டான். இவ்விரு பிரபுக்களின் சாமார்த்தியத்திற்கும் ஆச்சரியப்பட்டான். தன்னை இந்த ரகசியமாளிகையில் சிறைப்படுத்தவே அவர்கள் இட்டுவந்ததாக அவனுக்குத் தெரிந்தது. இன்னும் தனது செயல்களைப் புகழ்ந்து பலவாறு ஸ்தோத்தரிக்கின்ற அவர்களின் காரியங்களைப் பார்த்தபோது. மந்திரிக்கு அந்த நிலைமையில் கொஞ்சம் சிரிப்புகூட உண்டாயிற்று. தனது கால்களிலும் இடுப்பிலும் போடப்பட்டுள்ள இரும்பு வளையங்களை எடுத்துவிடும்படி வேண்டினான். அதற்குப் பிரபுக்கள், அமைச்சர் திலகமே! நாங்கள் என்ன செய்வோம்! பாழாய்ப்போன அரசி எங்களுக்கு இப்படிக் கட்டளை யிடலானாள். உங்களை இங்கே சிறைவைக்கும்படி எங்களுக்கு ஆக்ஞை செய்தாள். தர்மாவதாரமாகிய தாங்கள் இப்படி வருந்துவதைப்பார்க்க எங்கள் மனம் சகிக்கவில்லை என்றனர்.

மந்திரிக்கு அதிகமான கோபம் உண்டாயிற்று. அவன் தன்னைத் தானே அறியாமல் என்னை நீங்கள் இப்படிச் செய்தது பெரிய இராஜத்

துரோகம் என்றான். அதற்கு ஒரு பிரபு சொல்லுகிறார். மூடனே! நீ செய்த கிருத்தியங்கள் இராஜத் துரோகமே தவிர மகாராணியின் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்த எங்களின் காரியங்களில் ஏதும் குற்றமில்லை யென்றார். மந்திரிக்குத் தன்னுடைய ஸ்திதி நன்றாகத் தெரிந்து விட்ட படியால் எதுவும் பேசாமல் மௌனமாக நின்றான். பிரபுக்களில் ஒருவர் ரகசியமாக வெளிச் சென்று ஒரு தங்கக் குடத்தில் எதையோ நிரப்பிக் கொண்டு வந்தார். அதை மந்திரியின் தலையில் அபிஷேகம் செய்தனர். அதன் பரிமளத்தால் அது மாட்டுச் சாணியைக் கரைத்துவிட்டிருக்கிற பரிசுத்தமான ஜலம் என்று தெரிந்தது. பிறகு துடைப்பத்தால் மந்திரிக்கு வீசினார்கள். மந்திரி தன் செயல் குன்றி நாணி நின்றான். சற்று நேரத்திற் கெல்லாம் இருபது மனிதர்கள் அங்கு வந்து மந்திரியை அந்த வளையல் நிர்ப்பந்தத்தினின்றும் விடுவித்தனர். மந்திரி வெகு சந்தோஷத்தோடு பிரபுக்களிருவரையும் பார்த்து உங்களை நான் செய்யப் போகிற சித்திரவதை பிறகு தெரியும் என்றான். தன்னை அந்த உபத்திரவத்திலிருந்து விடுவித்தவர்களைப் பார்த்து அந்தப் பிரபுக்களைக் கைது செய்யும்படி ஆக்ஞாபித்தான். அதற்குள்ளாக வந்தவர்களில் ஒருவன் மந்திரியைப் பேசாதிருக்கும்படி இரண்டு கன்னங்களிலும் பற்களுதிரும் படியாகத் தடவிக் கொடுத்தான். மற்றவர்கள் அவன் கையிலும் காலிலும் வேறு விலங்குகள் போட்டு இன்னோர் அறைக்கு அழைத்துச் சென்றனர். பிரபுக்களிருவரும் வஸந்தமாலாவுடன் வேதபுரிக்குப் பிரயாணமாயினர்.

## அத்தியாயம். 16.

சந்திரபோஸ், ஆரியகுமாரன் இவர்களைத் தலைமையாகக்கொண்டு சைன்யங்களுடன் அரசி, பிரகாஸலக்ஷ்மியோடு குமாரவனத்திற்கு வந்து சேர்ந்து காளீசரணபோஸைக் கைதுசெய்தாள். அரசியின் வருகையைக் கண்டவுடன் யாவரும் பயந்து விட்டார்களாதலால் எவரும் எதிர்க்கத் துணியவில்லை. காளிசரணபோஸைச் சேர்ந்த அனைவரையும் சிறைப்படுத்திவிட்டு அங்குள்ள அறைகளையெல்லாம் சோதித்தாள். முதல் அறையினுள் தான் சிறு பிராயமுதற்கொண்டு ஆசையும் அன்புமாக வளர்த்து, தன் உயிருக்குச் சமமாக எண்ணி, தனது சொந்தக் குழந்தையாகப் பாவித்திருந்த ராம்மோகனன் சங்கிலிகளால் பிணிப்புண்டு கிடக்கக்கண்டு அழுதுவிட்டாள். உடனே அவனை விடுவித்து அன்புடன் தழுவிக்கொண்டாள். மற்றோர் அறையில் கமலாபாய் என்ற ஜமீன்தாரணி இருந்தனள். அந்த அம்மையைக் கண்டதும் நமஸ்கரித்து வணங்கினாள். அந்த அம்மைக்கு அரசியை யடையாளம் தெரியவில்லை.



நீ யார் என்று அரசியைக் கேட்பதற்குள்ளாக சந்திரபோஸ் அங்கு வந்து கமலாபாயைக் கட்டிக்கொண்டு

“ அன்னையே! நின்னை யகன்றய லெய்திய
பின்னருந் தேறவோ பேருல கிருந்தேன் ?

தவாத விவாகச் சடங்கினைக் காண
அவாவிய நீயோ அருஞ்சிறை யானாய்!

மருமக டிருமுக வாரிசங் கண்ட
ஒருநிமி ஷத்தே ஒளிந்ததேன் வியப்பே!

அந்தோ குடும்பம் அலங்கோல மாகி
நொந்தே தவிப்புற நோய்மையு மென்னே!

மனைவியும் மறுமையை வகித்தனள் யானும்
நனைவுறத் துறவறம் நாடினேன் கண்டாய்!

தங்கை யிறந்தனள் தனயர் தமக்கும்
சங்கடம் பற்பல சம்பவித் தனவே !

என்னே என்னே குடும்பமிவ் விதமாய்ச்
சின்னா பின்ன மாகிச் சிதைந்தது!

ஜெயமுறு செல்வஞ் சேர்ந்தினி யேனும்
உயர்நல நமக்குண் டாகுமோ யாதோ! ”

என்று பிரலாபித்து மூர்ச்சைபோயினார். கமலாபாயும் வெகு நேரத்திற்குப் பிறகு மூர்ச்சை தெளிந்தனள். ஒருவரை யொருவர் கண்டு துக்கித்தனர். அவர்களிருவருக்கும் நடந்த சம்பாஷணையினால் அவ்விருவரும் தாயும் புத்திரனு மென்று தெரிந்தது. சந்திரபோஸ் தமது மாதா இருந்த ஸ்திதியைப் பார்த்துப் பார்த்து மிகுந்த வியாகூலத்தை யடைந்தார். இதற்குள் அரசி இன்னொரு அறையைத் திறந்தாள். அங்கு சிறைவைக்கப் பட்டிருந்த சாருதத்த மகாராஜா ஹா! என் கண்மணீ! வந்தாயா என்று கண்ணீரும் கம்பலையுமாக அரசியைத் தழுவிக் கொள்ளவும், மகாராணி அவரைக் கண்டதும் பிரமித்துப்போய் ஹா! நாதா! என்று வாய் விட்டுக்கதறினாள். அடிக்கடி அவரை முத்தமிட்டுக் கொண்டாள். பின்னும் அவரை நோக்கி,

"மனமோத்த நமதுசிறு பருவவிளை யாடலின்
மகிழ்ச்சியைநி னைத்தழுவனே

மரணப்ப டேக்கையுறு தாய்சொற் படிக்கான
வதுவையைநி னைந்தழுவனே

கனகாலம் விதவையாய் நினதுபிரி வென்றனைக்
காட்டியவ கைக்கழுவனே

கண்டேசந் தித்தபின் பலபத்தி ரன்புரி
கடுஞ்சிறை தனக்கழுவனே

இனமான தந்தைதனை மாடிமேல் நின்றுகண்
டேங்கினவ கைக்கழுவனே

இம்மைதரு மந்திரி கொடுஞ்செயலை யெண்ணிநா
னேந்தவித நொந்தழுவனே

முனமே தமைக்கொன்ற தாகவென் மேற்பழி
முடிக்கிய விடிக்கழுவனே

முழுதுநான் பட்டதுயர் போதுமினி போதுமெனை
முறைமையுட னாட்கொள்வையே"

என்று கூறி அவரது பாதங்களில் வீழ்ந்தான் மூர்ச்சையானான். அந்த இடத்திற்கு ராம்மோகனன், சந்திரபோஸ், கமலாபாய், ஆரியகுமாரன் முதலானோர் வந்து சேர்ந்தனர். அதே நிமிஷத்தில் ஜகத் குருவும் இன்னொரு அறையிலிருந்து சந்திர போஸால் விடுவிக்கப் பெற்று வெளிவரலானார். அவரைக் கண்டதும் அனைவரும் அவரடி பணிந்து பயபக்தியுடன் வணங்கினர். வெகு காலமாக ஒருவரை யொருவர் பிரிந்திருந்து இப்போது ஒன்று கூடினார்களாதலால், அவர்களின் சம்பாஷணைகளுக்கு ஒரு முடிவும் இல்லாமற்போயிற்று.

காளிசரணபோஸினால் இராம்மோகனன் அழைக்கப்பட்டு, இந்தப் பதின்மூன்று மாயப்படியுள்ள ரகசிய மாளிகைக்கு விருந்துண்ண வந்தபோது நொண்டியான ஒரு வேலைக்காரன் ராம்மோகனனுடன் பேசிக்கொண்டிருந்ததாகவும், அவனே ராம்மோகனனுக்குப் பதின்மூன்று மாயப்படிகளைப்பற்றி முதன் முதலில் தெரிவித்ததாகவும் முன்பு கூறியிருக்கிறோமல்லவா? அந்த நொண்டியைக் கமலாபாய் சந்திரபோஸுக்குக் காண்பித்து அவருடைய உப



சரணையால் தான் என் உயிர் இன்னும் உடலில் தங்கியிருக்கிறது. மேலும் அவர் அன்னியரல்ல. பரஸ்திரீ கமனத்தால் உண்டான மேகநோயால் அவ்வாறு உடலம் இளைத்து உருமாறி கால்களின் நரம்புகள் உள்ளுக்கிழுத்துக்கொள்ள அவரும் நொண்டி யென்ற பெயரை வகிக்கும்படி நேர்ந்தது. அவர் உனது தங்கையான பிரேமநிதியின் கணவராவார் என்றான். சந்திரபோஸ் பிரமித்து நின்று அழுதகண்களுடன் அவருக்கு உபசாரம் கூறினார். பிறகு நொண்டி போஸைப் பார்த்து எனது அருமை மைத்துனரே! என்னைப்பற்றிச் சில சங்கதிகள் உங்களுக்கு நான் தெரிவிக்கவேண்டும். சந்திரபோஸ் என்பது எனது மாற்றுப்பெயர். எனது சொந்தப் பெயரான அமரஸிம்ஹன் என்பதை எல்லோரும் அறிவாராதலால் சத்துருக்களுக் கஞ்சி மறுபெயர் வைத்துக்கொண்டு இவ்வாறு நான் உருமாறலானேன். எனது குமாரத்தியான கனகதாராவை கிராமத்திலேயே விட்டு விட்டு, எனது நண்பனிடம் நவத்வீபத்திற்குப் புறப்பட்டுப்போனபோது வழியே ஒரு கிழவி என்னை அடையாளம் கண்டு பிடித்துக்கொண்டாள். அவளிடம் எனது தங்கைக்குப் பிறந்த தங்களின் ஆண் குழந்தை யொன்றையும் பெண் குழந்தை யொன்றையும் நீங்கள் ஒப்புவித்துப் போய்விட்டீர்களாம். அதில் ஆண் குழந்தையை வேதபுரியிலுள்ள நம்பிக்கையுள்ள ஒரு உத்தியோகஸ்தரிடம் வளர்க்கும்படி விட்டிருப்பதாயும், தனக்கு மரணகாலம் நெருங்கிக்கொண் டிருக்கிறபடியால் இந்தப் பெண் குழந்தையை ஸம்ரக்ஷிக்கத் தன்னால் முடியவில்லை யென்றும் கூறி என் வசம் ஒப்புவித்தாள் அந்தக் குழந்தைக்குப் பிரகாஸலக்ஷ்மி என்று பெயரிட்டிருப்பதாகவும் சொன்னாள். அப்போது பிரகாஸலக்ஷ்மிக்கு வயது பத்திருக்கும். அவளையும் அழைத்துக்கொண்டு நவத்வீபம் சேர்ந்து சில வருஷங்களிருந்துவிட்டுத் திரும்புகையில் எனது மனைவி கர்ப்பவதியாய் இருந்தாள். இடையே ஒரு ஊரில் பிரஸவம் உண்டாகவே ஒரு அழகிய பெண் குழந்தை பிறந்தது. என் மனைவி அது முதற் கொண்டு தேகம் மெலிந்து கடைசியாகப் பரந்தாமன் திருவடி நிழலையடைந்தாள். நான் இவற்றையெல்லாம் சகித்துக்கொண்டு எனது மனைவிக்குப் பிறந்த பெண்குழந்தைக்கு வஸந்தமாலா என்று பெயரிட்டு அக்குழந்தையையும், பிரகாஸலக்ஷ்மியையும் உடன் அழைத்துக் கொண்டு ஸப்தஸிந்துவதீவிற் கொண்டு போய் என் சம்ரக்ஷணையில் வைத்திருந்தேன். அந்தப் பிரகாஸலக்ஷ்மீ இதோ நிற்கிறாள். உமது இன்னொரு ஆண் குழந்தை தான் இந்த ராம்மோகனன். குழந்தைகாள்! உங்கள் பிதாவை நமஸ்கரித்துக் கொள்ளுங்கள் என்றார். ராம் மோகனனும் பிரகாஸலக்ஷ்மியும் தங்கள் தந்தையான நொண்டி போஸை வணங்கினர். அவர் அத்தியந்த ஆச்சரிய பரவசராய் கண்ணீர் அருவி போற் சோர, அவர்களிருவரையும் அன்புடன் தழுவிக் கொண்டு புளகாங்கித முற்றார்.

அப்பால் அரசி அன்றைக்குப் பதினைந்தாம் நாள் கூடப்போகின்ற சபையின் நடவடிக்கைகளைக் கவனிக்க வேண்டு மென்று ஞாபகப்படுத்தினாள்.

யாவரும் ஒன்று கூடி ஆலோசித்து அதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் இன்ன விதமாக நிறைவேற்றுகிறதென்று ஒரு தீர்மானமும் செய்து முடித்தார்கள். அதன் பின்னர் அவரவர்கள் பட்ட கஷ்ட சுகலாப நஷ்டங்களை ஒருவர்க்கொருவர் சொல்லிக் கொண்டு வேதபுரிக்குப் பிரயாணப் படுவாராயினர்.

## அத்தியாயம். 17.

சப்தசிந்துவ தீவில் வசிக்கத் தொடங்கிய ஆரம்பகாலத்திலே அமரஸிம்ஹர், இப்பிரபஞ்சவாழ்க்கையின் அந்தரங்கங்களையும் செல்வ நிலையாமையையும், பதவிக்கும் பொறுப்புக்கும் ஏற்றபடி கவலைகள் அதிகரித்து மனோநிம்மதியைக் கெடுத்துவிடுவதையும் பற்றிச் செவ்வனே தமக்குள் ஆராய்ந்து பார்க்கத் தொடங்கினார். தமது மூதற்புத்திரியான கனகதாராவானவள், மஹாராணி பதவியை வகித்துங்கூட இன்புற்றிருக்க முடியாமற்போனதை அடிக்கடி சிந்தித்து வந்து, அதிலிருந்து தமது அபிப்பிராயங்களையெல்லாம் ஒருவிதமாக மாற்றிக் கொள்வாராயினர். ஒரு புத்திரிதான் உலகக் கவலைகளை ஏற்று நொந்து போயிருக்கிறாள். இன்னொரு புத்திரியாவது அந்த விசாரமில்லாதவளாய் மனோசமாதானத்துடன் வாழும்படி செய்யவேண்டுமென்று தமக்குள்ளாக நிர்ணயித்துக்கொண்டார். இவ்விதமான எண்ணங்களுடன் இருக்கும்போதுதான், இராம்மோகனனும் வஸந்தமாலாவும் உத்தியானவனத்தில் ஒருவருக்கொருவர் விவாகத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பதைக் கவனிக்கலாயினர். வஸந்தமாலாவுக்கு அந்தக் காதல் விசாரங் கூட வைக்கக்கூடாதென்றும், அவளுக்குப் பக்குவ வயது வந்தபோது பார்த்துக் கொள்ளலாமென்றும், அதுவரையிலேனும் வஸந்தமாலா நிம்மதியாக மனோசாந்தத்துடன் நாள் போக்கட்டுமென்றும் கருதியவராய், அரசியைப்பார்த்து மறுதடவை வருகையில் ராம்மோகனனை உடன் அழைத்துவரவேண்டாமென்றும், அவனை அரண்மனையிலேயே வைத்து ஸம்ரக்ஷித்து வரும்படியும் ஆக்ஞை செய்யலானார். ஆனதால் தான் அரசி பிறகு பலமுறை சப்தசிந்துவத்திற்கு வந்திருந்தும் ராம்மோகனனை உடன் அழைத்து வந்தாளில்லை. இதனால் வஸந்தமாலாவுக்கு மனோவிசாரம் அதிகரிக்கலாயிற்று. ராம்மோகனனுடைய க்ஷேமத்தைச் சொல்வாரெவருமின்றி அதே சிந்தனையாகவிருந்து வாடலானாள். அதற்குப் பிறகு அநேக வருஷங்களுக்கப்பால் ராம்மோகனன் ஸன்மான சகாயங்களோடு சப்தசிந்துவத்திற்கு வந்தது முதலான விவரங்களை நேயர்கள் ஏற்கனவே அறிந்தேயாகும். பிறகு பிரபுக்களுடன் வஸந்தமாலா வேதபுரிக்குப் புறப்பட்டு வந்ததையும் முன்னொரு அத்தியாயத்தில்



தெரிவித்திருக்கிறோம். வேதபுரி வந்த வஸந்தமாலாவை மஹாராணியின் மேல்மாளிகையில் தங்கும்படிசெய்தனர். இவள் இருந்த அறைக்கு அடுத்த அறை ராம்மோகனனுடையதானதால், மாளிகையினுடைய விநோதங்களைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்த இவள் அந்த அறை இன்னாருடையதென்பதை அறிந்து கொள்ளாமலே அந்த அறைக்குள்ளும் புகுந்தாள். ரகசியமாக ராம்மோகனனைப் பற்றிய ஏதாவது குறிப்புகள் அந்த மாளிகையில் எவ்விடத்திலேனும் தனக்கு அகப்படக் கூடாதா என்பதே இவளுடைய பேரவா. அந்த அறையில் அநேக புஸ்தகங்கள் இருக்கக் கண்டு அது யாருடையதென்று திறந்து பார்க்கையில் ராம்மோகனனுடைய பெயர் அதில் காணப்பட்டது. இப்படியே அவ்விடமிருந்த எல்லா புஸ்தகங்களிலும் ராம்மோகனன் பெயரிருக்கக் கண்டு ஆலோசித்தபடி நின்றாள். இத்தருணத்தில் ஒரு யுவகன் அவளுக்குத் தெரியாமல் பின் புறமாக வந்து ஆவலுடன் தழுவிக் கொண்டான். உடனே வஸந்தமாலா திரும்பிப் பார்க்கவும் ராம்மோகனன் தன் எதிரில் நிற்கக் கண்டு பிரமித்தாள். உடனே அவன் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து தாங்கள் சுகுணர் அல்லவென்று நினைக்கிறேன். இப்போதாவது உண்மையைச் சொல்ல வேண்டுமென்று கெஞ்சினாள். நானே ராம்மோகனன் என்று அதற்குப் பதில் கிடைக்கவும், மகாகுதூகலத்தோடு அவன் கைகளை எடுத்துத் தனது நேத்திரங்களில் ஒற்றிக்கொண்டு ஆநந்தக் கண்ணீர் விடலானாள்.

ராம்மோகனன் தன்னை மறைத்து சுகுணன் என்று முன்பு கூறியதற்கான காரணங்களையெல்லாம் விஸ்தாரமாக எடுத்துச் சொல்லி அவளுக்கு மனோதிருப்தியையுண்டாக்கி, என் தேகத்தில் கடைசி சுவாசம் இருக்குமளவும் உனக்கு அடிமையாக இருந்து தாஸத்துவம் செய்யக் காத்திருக்கிறேனென்றான். அதற்கு வஸந்தமாலா, என் பிரிய மோஹனா! நீ அப்படிச் சொல்லாதே என்று அவன் வாயைப் பொத்தி எனக்கு நீ அடிமையல்ல, நானே உனக்கு அடிமையென்று கூறி ஆர்வத்துடனும் அவனுடைய இரு கன்னங்களிலும் முத்தமீந்தாள். ராம்மோகனனும் அதற்குப் பிரதிசெய்து இதோ பார்த்தாயா உனது அன்பின் அடையாளம் என்று அவளுடைய ஞாபகமாக வைத்துக்கொண்டிருக்கிற அவளுடைய கேஸங்களை ஒரு பட்டுப் பையிலிருந்தும் எடுத்துக்காட்டினான். வஸந்தமாலாவும் தனது ரவிக்கைக்குள்ளிருந்தெடுத்து இதோ பார் உனது அன்பின் அடையாளம் என்று ராம்மோகனனின் கேஸங்களைக் காண்பித்துவிட்டு, ‘என்னுடைய ஞாபகப் பொருளைக் காப்பாற்றிவைத்ததுபோல, எனக்குக் கொடுத்த வாக்கையும் காப்பாற்றியிருந்தால் எவ்வளவோ சந்தோஷப்படுவேன்’ என்றான்.

“எந்த வாக்கை நான் காப்பாற்றத் தவறிவிட்டதாக நீ சொல்லுகிறாய்” என்று ராம்மோகனன் வினவினான்.

"யுத்தத்திற்குச் செல்லுவதில்லை என்று எனக்குத் தாங்கள் கொடுத்த வாக்கைத்தான்" என்று வஸந்தம் தெரிவித்தாள்.

"எனக்கோ யுத்தமென்றால் வெகு பிரியம். நீயோ அந்த சப்தத்தைக் கேட்ட மாத்திரத்திலேயே நடுங்கிப்போகிறாயே? நீ இராஜ வமிசத்தில் பிறந்திருந்தும் இப்படி ஆண்மையற்றுப் போனதேன்" என்று ராம்மோகனன் பரிஹஸித்தான்.

"உங்களுடைய யுத்தவுற்சாகம் எனக்கு வெகு சந்தோஷமே. அதை நான் மாற்ற எண்ணங்கொண்டவளில்லை. ஆயினும் வாக்கு தவறியதை எடுத்துக்காட்டவே இந்தப் பிரஸ்தாபம் செய்தேன்; பின்னுங்கேளுங்கள்:—".

"தாயைப்போல் பிள்ளை." ஓர் தேசத்தார் ஞானமும், செல்வமும், வீரமும் புகழும் கொண்டு உன்னத நிலையிலே இருக்கும்போது, அவர்களுக்குள் ஆண்மக்களிடம் மட்டுமே யல்லாது பெண் பாலாரிடத்திலும் கூடத் தர்மாபிமானமும், வீரத்தன்மையும் சிறந்து விளங்கும். ராஜபுத்திரர்கள் உன்னத நிலையிலே இருந்த காலத்தில் ராஜபுத்திர ஸ்திரீகள் காட்டிய வீரக்குணங்கள் இன்றும் கூட உலகத்தாரெல்லாம் கேட்டு மெய் சிலிர்க்கும்படியாக இருக்கின்றன. மகனைப்பெற்றுவிடுதல் எனது கடமை. அவனைத் தக்கோன் ஆக்குதல் அவனது தந்தையின் கடமை. அவனுக்கு வேல் செய்து கொடுத்தல் இரும்புக் கொல்லனது கடமை. அவனுக்கு நன்னடை தருதல் அரசனது கடமை. என்மகனது கடமை யாதோ எனில் யுத்தத்திலே சென்று யானையைக் கொன்று மீளுதலாகும்" என்று ஓர் தமிழ்த்தாய் பாடி யிருக்கின்றாள்.

இனி மற்றொரு தாய், "எனது மகன் யுத்த களத்திலே போர்வீரர் வாளிலே கழுத்தறுப்புண்டு மடிவானானால், அது தான் எனக்கு மேலான தர்மம். அதுவே தானம், அதுவே ஸத்கர்மம்' என்று பாடினள். பின்னுமொரு பெண்புலவர் தமது சுற்றத்திலுள்ள ஓர் அம்மை தன் மகன் போரிலே யானையை வீழ்த்திக் கொன்று தானும் இறந்தான் என்று கேள்வியுற்று, தான் அவனைப்பெற்ற போது அடைந்த மகிழ்ச்சியைக் காட்டிலும் அதிக மகிழ்ச்சியடைந்த சிறப்பைக் கண்டு வியந்து பாடல் சொல்லி யிருக்கின்றார்.

அப்பால், ஒரு தமிழ்த்தாய், தனது தந்தையும், கணவனும் போரிலே சிறிது காலத்திற்கு முன்பு இறந்து போயிருக்கவும், யுத்தப்பறையின் ஒலி கேட்ட சந்தோஷமிகுந்து, தன் மகனுக்கு நல்ல ஆடையுடுத்தி, அவன் குடுமிக்கு எண்ணெயிட்டுச் சீவிமுடித்து, அவன் கையிலே வேலெடுத்துக் கொடுத்துத் தனது ஓரே பிள்ளையைப் போர்க் களத்திற்குப் போ என்று அனுப்பிய பெருமையை ஓர் பெண் புலவர் வியந்திருக்கின்றார். பின்னுமொரு தாய், தன் மகன் யுத்தகளத்திலே வலியழிந்து புறங்கொடுத்து ஓடி வந்து விட்டான், என்று சிலர்



சொல்லக் கேட்டு அப்படி அவன் யுத்தகளத்திலே புறங்கொடுத்து ஓடியது உண்மையாயின், அவன் பால் உண்டு வளர்வதற்குக் காரணமாயிருந்த என் தனங்களை அறுத்திடுவேன், என்று வாளைக் கையிலே கொண்டு போர்களத்திற்குப்போய் அங்கே வீழ்ந்து கிடக்கும் பிணங்களை வாளினால் புரட்டித் தேடுகையிலே அப்பிணங்களினிடையில் தன்மகன் உடலும் இரண்டு துண்டமாகக் கிடந்ததைப் பார்த்து அவனைப் பெற்ற பொழுதைக் காட்டிலும் அதிக மகிழ்ச்சி யடைந்தாளென்று ஓர் பாடலிருக்கிறது. பெண்களின் ஸாஹஸம் இவ்விதமிருக்கும் போது ராஜபுத்திர கன்னிகையான நான் யுத்தத்தை வெறுப்பேனென்று தாங்கள் நம்புதல் முற்றிலும் பிழை. எனக்குத் தங்களிடமிருந்த பிரேமையே அவ்விதம் யுத்தத்திற்குச் செல்லாதிருக்கும்படி வற்புறுத்தியது என்று வஸந்தமாலா கூறினாள்

இவ்வாறாக ஒருவரையொருவர் அன்பளாவி நிற்கும்போது, அமரஸிம்ஹரும், அரசியும் அந்த அறைக்குள் வந்து இவ்விருவரையும் கண்டு அவர்களின் பரஸ்பர அன்புக்கு வியந்து நின்றனர். அரசி வஸந்தமாலாவை நோக்கி என் கண்மணீ! அருமைத் தங்காய்! உன்னை முதன் முதல் சப்தஸிந்தவத்தில் கண்டபோதே நமது தாயின் முகபாவனை முழுதும் உன்னிடம் பொருந்தியிருந்ததால் மாதாவை எண்ணி யெண்ணி வயிறெரிந்தேன். இப்போதோ நீ யுவதிஸ்தானத்தில் நிற்கின்றாய். காலஞ்சென்ற தாயாருடைய பூரண நடை யுடை பாவனைகள் அனைத்தையும் நீ அடைந்து விட்டாய் தாயைப் பறிகொடுத்த பாவியாக நானிருந்தபோதிலும், அவளுடைய கடைசி காலத்தில் அவளுக்கருகில் இருக்கக் கொடுத்துவைக்காவிட்டாலும் இப்போது உன்னையே தாயாகவும் தங்கையாகவும் கொண்டு திருப்தி யடைகிறேன். நீயும் ராம்மோகனனும் எனக்கு இரு கண்மணி யானீர்கள். நீங்கள் சந்தோஷமாக இருங்கள் என்று கூறித் தனது கண்களைத் துடைத்துக்கொண்டாள். பிறகு அரசி அமரஸிம்ஹரை நோக்கி அந்தக்காலத்தில் சப்தஸிந்துவத்தில் இவர்களிருவரையும் தம்பதிகளாகப் பார்க்க விரும்புகிறேன் என்று நான் சொன்னதற்குத் தாங்கள் வேதாந்தம் பேசினீர்கள். இப்போதென்ன சொல்லுகிறீர்கள் என்று பரிஹாஸத்தோடு வினவினாள். அதற்கு அமரஸிம்ஹர் எல்லாம் காலத்தின் விசேஷமாகும். நல்லது கூடும்பொழுது அனைத்தும் நன்மையாகவே முடிகின்றன. தீயது சூழும் போதும் அனைத்தும் விகற்பமாக அமைந்து அலங்கோலம் விளைவிக்கின்றன. வஸந்தமாலாவை ராம்மோகனனுக்கே வாழ்க்கைத் துணைவியாக்க வேண்டுமென்று தான் என் எண்ணம். ஆயினும் நீ அப்போதிருந்த பரிதாபமான கவலை வாழ்வைப் பார்த்த என் கண்கள், வஸந்தமாலாவுக்கு விவாகத்தையே நினைக்க வேண்டாமென்று எனக்கு அறிவுறுத்தின. அத்துடன் உன் தாய் இறந்த துக்கமும் என்னைச் சேர்ந்து வருத்தவும் நான் தாங்க முடியாமல் மூர்ச்சை போயினேன் ஏதோ ஈஸ்வர சங்கல்பத்தினால் இத்தனை வருடங்கட்குப்பிறகு உனக்கும் சுமங்கலி வாழ்வு கிடைத்

தது. வஸந்தமாலாவுக்கும் ராம்மோகனன் பர்த்தாவாகலானான். சீக்கிரம் உன்னிஷ்டப்படியே அவ்விருவரையும் தம்பதிகளாக்கி உன் மனத்தைத் திருப்தி செய்து வைக்கிறேன் என்றார். இதை வஸந்தமாலாவும் ஆரிய குமாரனும் கேட்டுக் கொண்டிருந்தனர். அவ்விருவரின் சந்தோஷம் சொல்லவும் வேண்டுமோ! பிறகு யாவரும் கீழிறங்கி போஜன சாலைக்குச் சென்றனர்.

இது நிற்க, வஸந்தமாலா மாளிகையிலிருக்கும்போது திடீரென்று ராம்மோகனன் அங்கு எப்படி வந்தானென்று வாசகர்கள் ஸம்சயிக்கலாம். குமாரவனத்திலிருந்து யாவரும் புறப்பட்டு வேதபுரி வந்து சேர்ந்ததும், ராம்மோகனன் நெடுநாளாய்த் தான் விட்டுப் பிரிந்திருந்த தனது அறையையும் தன்னுடைய உயிருக்குச் சமானமாகப் பாவித்துவைத்திருந்த புஸ்தகங்களையும் பார்த்து ஆசை தீருவதற்காக எல்லாருக்கும் முன்னதாக மேல் மாளிகைக்கு வந்து தன் அறைக்குள் நுழைந்தான். அங்கே ஆச்சரியப்படத்தக்கவிதமாக வஸந்தமாலா ஆலோசனையிலாழ்ந்தவளாய் நின்று கொண்டிருக்கக்கண்டு புளகாங்கிதமுற்றவனாய் அவளைத்தழுவிக்கொண்டு மகிழ்வானாயினான். குமாரவனத்திலிருந்தும் திரும்பி அரசி தன் அந்தப்புரத்துக்குச் சென்றதும், வஸந்தமாலாவைப் பிரபுக்கள் அழைத்துக் கொண்டு வந்து மேல் மாளிகையிலிருத்தியிருப்பதைத் தாதிகள் தெரிவித்தனர். அதன் பேரில் அத்யந்தமான ஸந்தோஷத்தோடு அமரஸிம்ஹருடன் அரசி மேல் மாளிகைக்கு வருவாளாயினாள். அப்போது வஸந்தமாலாவும் ராம்மோகனனும் பரஸ்பரம் அமோகமான பிரேமையுடன் சம்பாஷித்துக்கொண்டு நிற்கக் கண்டு பூரிப்பு மிகுந்தனர். பிறகு நடந்த விஷயங்கள் அனைத்தும் நமது வாசகர்கள் நன்கறிவாராதலின் இவ்வளவுடன் இந்த அத்தியாயமானது ஸம்பூரணம் பெறுகின்றது.

## அத்தியாயம் 18

குமாரவனத்தின் அந்தரங்கங்கள் வெளியான பதினைந்தாம் நாள் அரசியின் உத்திரவுப்படி வேதபுரியில் இராஜ சபாமண்டபத்தில் நகரவாசிகளெல்லோரும் ஏகமாய்த் திரண்டு கூடியிருந்தனர். ஜகத்குரு சபாநாயகராக அமர்ந்திருந்தார். அதையடுத்து அரசி உன்னதமான ஆசனத்தில் வீற்றிருந்தாள். அரசிக்குப் பின் புறமாய் எல்லாவிஷயங்களையும் கவனிக்கக்கூடிய இடத்தில் சாருதத்தர் மறைவாக அமர்ந்தார். இராணிக்கு அடுத்தபடியில் சந்திரபோஸ், இராம்மோகனன், ஆரியகுமாரன், நொண்டிபோஸ், நவத்வீபத்தின் பிரபல சீமானும் அமரஸிம்ஹரின் நண்பரும் ஆரியகுமாரனின் பிதாவுமான தேவேந்திர நாராயணர், கமலாபாய், பிரகாஸலக்ஷ்மி, வஸந்தமாலா கிழவி முதலியவர்கள் காணப்பட்டார்கள். மூன்றாவதுபடியில் அரசிக்குத் துணையாயிருந்து மந்திரி



யைக் கைது செய்த இரகசிய சங்கத்தைச் சேர்ந்த பிரபுக்கள் வீற்றிருந்தனர். அதற்கடுத்த படியில் வேறு பல முக்கியஸ்தர்களும் ஜனங்களும் உட்கார்ந்திருந்தனர். அவர்களுக்கு இடையிடையே ஆயுதபாணிகளான வீரர்கள் கலக்கப்பட்டு அவர்களும் ஜனங்களுடன் உட்கார்ந்திருந்தனர். சபை நிசப்தமாக இருந்தது.

ஏற்கெனவே செய்திருந்த ஏற்பாடுகளின் பிரகாரம் சபையின் நடவடிக்கைகள் ஆரம்பமாயின. அரசியின் ஆக்ஞையின்படி சில சேவகர்கள் ஒருவனைக் கால் விலங்கு கைவிலங்குகளுடன் கொண்டுவந்து நிறுத்தினார்கள். அவனைப் பார்த்து எல்லோரும் திடுக்கிட்டுப்போயினர். பிறகு காளீசரணனையும் அவ்விதமே கொண்டுவந்து நிறுத்தினர். அரசி எழுந்து பேசத் துவக்கினாள்.

எனது பிரார்த்தனைக்கு இரங்கி இவ்விடத்திற்கு விஜயம் செய்திருக்கும் மஹாஜனங்களுக்கும் பிரபுக்களுக்கும் எனது வந்தனங்களை அன்புடனே ஸமர்ப்பிக்கின்றேன்.

இன்று இந்த மகாசபையில் அநேக விஷயங்கள் கவனிக்கப்பட்டு முடிவடையப் போகின்றன. என்னைப்பற்றி உண்டாயிருக்கும் அபவாதங்களுக்கும் இன்று கடவுள் கிருபையால் விமோசனம் கிடைப்பது நிச்சயம். பின்னுக்கு நான் பேசவேண்டிய விஷயங்கள் விஸ்தாரமாக இருப்பதால் இப்போது முதன் முதலாக எனது பாட்டியாரும், நவத்வீபத்தின் ஜமீன்தாரணியுமான தேவீ கமலாபாய் அவர்கள் பேச ஆரம்பிப்பார்கள். ஜனங்கள் யாவரும் மனம் பொறுத்து ஸாந்தவித்தர்களாய்க் கேட்கவேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டு மகாராணியார் தமது ஆசனத்தில் அமர்ந்தனர்.

* * *

### தேவி கமலாபாய் எழுந்து பேசத் தொடங்கினாள்.

சபையோர்களே! நான் தெரிவிக்கப் போகும் விஷயங்களை நீங்கள் அனைவரும் சிரத்தை யூன்றிக் கேட்கவேண்டுமென்று பிரார்த்தித்துக் கொள்கின்றேன். வடக்கே நவத்துவீபம் என்ற ஒரு பிரபல ராஜ்யமுண்டு. அது வேற்றரசர்களின் படையெடுப்பாலும், பின்னும் பலகாரணங்களாலும் தன்னைச் சேர்ந்திருந்த நகரங்களையெல்லாம் இழக்கக்கொடுத்து கடைசியாக ஒரு பெரிய ஜமீனாகமாறிற்று. அதற்கு அதிபதியாக இருந்த இராஜ்கேசரி என்பவர் க்ஷயரோகத்தினால் பீடிக்கப்பட்டு உயிர் துறந்தார். அவருடைய தர்மபத்தினிக்கு கமலாபாய் என்று பெயர். நான் தான் அந்தக் கமலாபாய். எனது பர்த்தாவின் அந்திய காலத்தில் அவரிடமாக அமரஸிம்ஹன் என்றொரு குமாரனும் பிரேமநிதி என்றொரு புத்திரியும் எனக்கு உண்டு. எனது பர்த்தாவுக்கு தாயாதிகள் மிகுதியாயிருந்தபடியால் இவ்விரு குழந்தைகளுக்கும் ஏதேனும் அபாயம் நேருமோ என்ற கவலை எனக்கு அதிகமாயிற்று.

பணமானது எப்படிப்பட்டவர்களையும் வசீகரிக்கக் கூடிய தானதால், என்னு
டைய வேலைக்காரர்களை அதனால் வசப்படுத்திக் கொண்டு குழந்தைகளை
அபகரிக்கப் பிரயத்தனம் செய்து கொண்டிருப்பதாக நான் கேள்விப் படலா
னேன். இனி நவத்வீபத்தில் தாமதிப்பது அபாயகர மென்று கருதி, அந்த
ஜமீனுக்கு ஆதாரமான பத்திரங்கள் கடிதங்கள் ஆபரணங்கள் அனைத்தையும்
எடுத்துக் கொண்டு என்னிரு குழந்தைகள் சகிதம் இராஜபுரம் என்ற கிராமத்
திற்கு வந்து சேர்ந்தேன். அவ்விடத்தில் விரஜேசுவரர் என்பவர் ஒரு பாட்
சாலை வைத்திருந்தார். என் புத்திரியான பிரேமநிதியையும் குமாரனை
அமரஸிம்ஹனையும் அவர் வசம் ஒப்புவித்து வித்தை கற்பிக்கச் செய்தேன்.
விரஜேஸ்வரர் அத்தியந்த தரித்திர ஸாகரத்தில் மூழ்கியிருந்தார். மேலும்
மிகுந்த விருத்தாப்பியத்தையும் அடைந்திருந்தார். சாதாரணமாக யுவதிகளுக்கு
யௌவன புருஷர்கள் மீதும், என் போன்ற குடும்ப கஷ்டங்களிலுழன்று
இளைத்துப் போன முதியோர்க்கு விருத்தாப்பியர்களிடத்தும் சிந்தை செல்
வது இயல்பு. இப்படியே சிறு குழந்தைகள் அவர்களுக்கேற்ற பிராயத்தின
ரிடம் அன்பு வைப்பர். அந்தந்த பருவம் அததற்குள்ள குணங்களைக் காட்
டுதல் சகஜம். மேலும் விருத்தாப்பியர்களிடம் ஸ்திரீகள் அன்பு பாராட்டு
வதற்கு— அவர்களால் தங்களின் கற்புக்குப் பங்கம் வாராதென்பதும், அவர்
களுடைய சகவாசத்தை உலகமானது விகற்பமாகக் கருதாதென்பதுமே
முக்கிய காரணம். நான் இராஜபுரத்துக்கு வந்த தின முதற் கொண்டு விர
ஜேஸ்வரரின் குடும்பம் என்னால் செழிக்க ஆரம்பித்துச் சில காலத்திற்குள்
சில பூஸ்திதிகளும் உள்ளதாகி மேலோங்கிற்று. அந்தக் கிராமத்தில் அவரை
யே நான் துணையாக நம்பியிருந்தபடியால் எனது குடும்ப ரகசியங்களை
யெல்லாம் அவருக்கு அப்போதைக் கப்போது தெரிவித்து வந்தேன்.
அவருக்குப் பலபத்திரன் என்ற ஒரு சகோதரன் இருந்தான். ஆனால் மிகவும்
சிறு வயதினன். நான் எனது குடும்ப சம்பந்தமான விஷயங்களைப் பிரஸ்
தாபிக்கும் பொழுதெல்லாம் அவன் உற்றுக்கேட்டு வந்ததைக் கண்டு நான்
சம்ஸயித்த தருணங்களும் பல உண்டு. ஆயினும் அவனது இளமைப் பருவம்
எனது சந்தேகத்தைத் தகர்த்துவிட்டது. நவத்வீபஜமீனின் ஆதாரப் பத்தி
ரங்கள் முதலியன சகலமும் என்னிடம் இருப்பதையும் விரஜேஸ்வரருக்கு
நான் கூறியிருக்கிறேன். அதை யெல்லாம் பலபத்திரனும் அறிந்தவனாக
யிருந்தான். மேலும் நான் வேதபுரியின் அரசரான இந்திரதேவரின் உடன்
பிறந்த தங்கை யென்பதையும் தெரிவித்திருந்தேன். ஏதோ திடீரென்று
கண்மூடிக்கொண்டால் நமது பூர்வவிருத்தாந்தங்களைக் குழந்தைகளுக்குச் சொல்லு
வோர் யாருமில்லாமற் போய் விட்டாலென்ன செய்கிற தென்ற எண்ணத்
திடனேயே தான் எனது அந்தரங்கங்களையெல்லாம் விரஜேஸ்வரருக்குத்
தெரிவிக்கும்படியாக நேர்ந்தது. விரஜேஸ்வரருக்கு எவ்வளவு தூரம் என்னைப்
பற்றித்தெரியுமோ அவ்வளவு வரைக்கும் பலபத்திரனும் அறிந்துகொண்டிருந்
தான். இப்படிச் சில வருஷங்கள் சென்றன.



இது இங்ஙனமாக, எனது குமாரன் அமரஸிம்ஹனுக்கு நான் விவாக
த்தை நடத்தியபோது அந்த ஆரவாரத்தில் அன்றிரவு பலபத்திரன் என்னைப்
பெண் வீட்டார் அழைப்பதாகக் கூவித் தன்னுடன் இட்டுக்கொண்டு சென்
றான். திடீரென்று நால்வர் தோன்றி என்வாயில் பாக்குத்தூளைத் திணித்து
ஒரு வண்டியிற் கிடத்தி எங்கோ கொண்டுசென்றனர். பாக்கைத் திணித்ததில்
வாயிலிருந்த ஈரம் வற்றித் தொண்டை வரட்சி யடைந்து அந்த உபாதை சகிக்
கலாற்றாது மார்படைத்துக் கொள்ளவும் நான் பிரக்ஞை தவறிப்போனேன்.
பிறகு என்னை ஓரிடத்தில் பலவருஷங்கள்வரை ஸிறைவைத்திருந்தான். பிறகு
குமாரவனத்திலுள்ள 13 மாயப்படிகளுள்ள மாளிகையில் என் ஸிறையை மாற்
றினான். அவ்விடத்திலேயே எனது வாணாள் முற்றும் கழிந்து பிறகு எனது
பேத்தியான மகாராணியால் விடுவிக்கப்பெற்றேன். காலஞ்சென்ற என்
மருமகளைத் தவிர மற்றெல்லோரையும் இங்கே நான் பார்க்கிறேன். ஐயோ
ஒரு மகனைப்பெற்றேன். அவன் தன் மனைவியோடு வாழ்வதைப் பார்க்கப்
பாக்கியமற்றவளாய்ப் போய் விட்டேன். மணக்கோலத்தில் மகனைக் கண்ட
கண்களால இப்போது அவன் சந்நியாசிக் கோலத்தைக் காண்கின்றேன்.
ஹா! புத்திரியே, என்னருமை மருமகளே என்று உங்களைக் காண்பேன்!

***

கமலாபாய் பேசிமுடிந்ததும் சந்திரபோஸ் பேசத்துவக்கினார்.

எனது விவாகத்தின் இரண்டாம் நாளில் என் தாயார் காணமற்போன
விதங்கள் மேலே தெரிவிக்கப்பட்டன. அவர் போன தினத்திலேயே அவர்
பத்திரமுதலியவைகள் வைத்திருந்த கைப்பெட்டியையும் முக்கியமான ஆபர
ணங்களையும் கன்னமிட்டுக் கொள்ளையிடப்பட்டிருந்தன. நான் விவாகத்தின்
ஸந்தோஷத்தை யநுபவிப்பதா; இந்த சந்தோஷத்தை யநுபவிப்பதாவென்று
கலங்கி நின்றேன். இது நடந்து பலவருடங்களுக்கப்பால் எனது குமாரத்தி
யான கனகதாராவை எனது தாய் மாமனும் வேதபுரியின் அரசருமான இந்
திரதேவரின் புத்திரனாகிய சாருதத்தனுக்கு விவாகம் செய்து வைத்தேன்.
நான் என் நண்பனால் அழைக்கப்பட்டு நவத்வீபத்திற்குப் புறப்படுகையில்,
சாருதத்தன் தனது தந்தையால் அழைக்கப்பட்டு வேதபுரிக்குப் போயிருந்
தான். அவன் வேதபுரியின் அரசாக்ஷியைக் கைக்கொண்டு அப்பால் கனக
தாராவை அழைத்துப் போவானென்று எனக்குத் தெரியுமானதால் கனக
தாராவை அக்கிராமத்திலேயே அவ்விடத்தில் தனவந்தனாயிருந்த பெரிய
மனிதர் வசம் ஒப்புவித்துச் சென்றேன். அவளை எவரும் இச்சியாத வண்
ணம் மாங்கல்ய சூத்திரத்தைக் கழற்றிவிட்டு அவளை விதவை யென்று
பிறர் நினைக்கும்படி செய்துவிட்டுப் போனேன். ஆறு எழு வருஷங்களுக்
குப் பிறகு மறுபடியும் பழய கிராமத்துக்கு வந்தபோது என் குமாரத்திக்கு
விவாகம் நடந்தேறிய விஷயங்களெல்லாம் அவ்விடமிருந்தவர்களால் தெரி
ந்துகொண்டேன். பிறகு வேதபுரிக்குச் சென்று இராஜ வீதி வழியே

போய்க் கொண்டிருக்கையில் சிலர் என்னை மகாராணி அழைப்பதாகத் தெரிவித்து இட்டுச்சென்றனர். எனது புத்திரி கனகதாராவே வேதபுரியின் இராணியாக இருந்தாள். அவள் தனது பர்த்தா வேட்டையாடச் சென்றவர் மீண்டும் திரும்பாமையைப் பற்றிய விஷயங்களைத் தெரிவித்து முன் தன்னை ஒரு பெரிய மனிதர் வசம் ஒப்புவித்துப் போனதை ஞாபகப்படுத்தி அவருக்கு மந்திரி பதவி கொடுத்திருப்பதையும் சொன்னாள். தன்னை விதவை ஸ்திதியிலிருந்து விவாகஸ்திரீயாய் மாற்றியதாக அந்த மந்திரி கர்வித்திருப்பதால் அந்த அகங்காரத்தை யடக்க தனது விவாக சாசன பத்திரம் தேவை யென்று கேட்டாள். ஜெகத்குருவினிடமிருந்து வரவழைத்துக் கொடுப்பதாகவும், என்னை சப்தசிந்துவ தீவில் அடிக்கடி வந்து பார்க்கும்படியும் சொன்னேன். அப்பால் என் தங்கை பிரேமநிதியின் ஆண் குழந்தையை வளர்க்கும் உத்தியோகஸ்தரைக் கண்டுபிடித்து அந்தக் குழந்தையான ராம்மோகனைக் கனகதாராவசம் ஒப்புவித்து அவன் வரலாறும் கூறி வளர்த்து வரும்படிசெய்துவிட்டு விடை பெற்று சப்தசிந்துவத்திற்குத் திரும்பினேன்.

***

அமரஸிம்ஹர் பேசி முடித்த பிறகு மகாராணியான கனகதாரா கைதியாக நிற்கும் மந்திரியைப் பார்த்து உனது வரலாறுகளைத் தெரிவி என்று ஆக்ஞாபித்தார். பல் பிடுங்கிய நாகம் போல் அவன் தன் கதையைச் சொல்வானாயினன்.

என் பெயர் பலபத்திரன். கமலாபாய் தனது குடும்ப ரகசியங்களை என் தமயனான வீரஜேஸ்வரிடம் கூறியபொழுது என் மனதில் ஓர் துரெண்ணமுண்டாயிற்று. அந்த நினைவால் தூண்டப்பட்டு பத்து வருஷ காலம் வெளியிடங்களில் சஞ்சரித்து கள்வர் கூட்டத்தின் சம்பந்தமும் பெற்றேன். அவர்களின் உதவியால் விவாக சந்தர்ப்பத்தில் கமலாபாயைச் சிறை செய்து நவத்வீபஜமீன் சம்பந்தமான பத்திரங்களையும் ஆபரணங்களையும் அபகரித்துக் கொண்டேன். ஆனால் வேதபுரியின் அரசனான இந்திரதேவன் கமலாபாயின் தமயனாதலால் அவனிருக்கு மளவும் எனக்கு நவத்வீபம் கிடைப்பது அசாத்தியம் என்று தெரிந்தது. அதனிமித்தமாகவே இந்திர தேவனுக்கு விஷங் கலந்த பாலை பணத்தால் தாதிகளை வசப்படுத்திக் கொண்டு கொடுக்கச் செய்தேன். ஸய்யாக்கிருஹத்தில் இந்திர தேவர் பக்கமாக அந்தப் பாத்திரம் வைக்கப்பட்டிருந்தது. அதை அவரது தருமபத்தினி விஷ்ணுப்பிரியை தவறுதலாக எடுத்து அருந்திவிடவும், உடனே நேத்திரங்கள் இருண்டு மார்படைத்து ஆவிபிரிந்தாள். பிறகுபல வருடங்கள்கழித்து என் தமயனிருந்த பழய கிராமத்திற்குச் சென்றேன். அதற்குள் அவர் காலமாய் விட்டார். அவருடைய பூஸ்திதிகளைக் கைக் கொண்டு பெரிய பிரபுவாக வாழ்ந்து வருகை



யில் அமரஸிம்ஹர் தமது புத்திரியான கனகதாராவை விதவை யென்று சொல்லி என் வசம் ஒப்புவித்து சீக்கிரம் திரும்பிவிடுவதாகச் சொல்லிச் சென்றார். பிறகு வேதபுரி நகரத்தரசரான சாருதத்தருக்கு கனகதாராவை அவளுடைய விதவை ஸ்திதியை மறைத்து விவாகம் செய்வித்தேன். அதன் பயனாக எனக்கு இந்த வேதபுரியின் மந்திரி ஸ்தானம் கிடைத்தது. பிறகு சாருதத்தரை வேட்டையாட அழைத்துச்சென்று 13 மாயப்படியுள்ள வீட்டில் சிறைவைத்தேன். அவரை ஹிம்ஸித்து, அவரிடமிருந்து, அவரைக் கொலை செய்துவிட்டதாகவும் அதற்கு அவர் பத்தினி கனகதாராவே காரணமென்றும் ஒரு பொய் மரணசாசனப் பத்திரம் எழுதித் தரச்செய்து பெற்றுக் கொண்டேன். இந்த சமயத்தில் கமலாபாயை முன் வைத்திருந்த இடத்திலிருந்து குமாரவனத்திற்கு மாற்றிக்கொண்டேன். சில வருஷங்களுக்குப் பிறகு இராணியாகிய கனகதாராவுக்கு வரும் கடிதங்களை யெல்லாம் ரகசியத்தில் உடைத்துப் பார்த்துவரும் வேலையில் பழகினேன். அந்த வகையில் ஜெகத்குருவினிடமிருந்து வரப்பெற்ற கனகதாராவின் விவாகசாசன பத்திரமும் எனக்குக் கிடைத்தது. அதனால் சாருதத்தருக்கும் கனகதாராவுக்கும் நான் விவாகம் செய்து வைப்பதற்கு முன்னதாகவே அநேக வருஷங்களுக்கு முன் விவாகம் நடந்திருப்பதாக வெளியாயிற்று. கனகதாராவின்மீது விதவையாயிருந்து சாருதத்தனை மணந்தாளென்று நான் ருஜுப்படுத்த எண்ணியிருந்ததற்கு இந்த விவாகசாசனப் பத்திரம் பெரிய இடையூறாக இருந்ததால் அதை அரசிக்கு அனுப்பவில்லை. ஆயினும் ஜெகத்குரு இருக்கும் வரையில் கனகதாரா விதவையாயிருந்து மணந்தாள் என்ற கக்ஷி நிறைவேறுதல் கஷ்டமென்று தோற்றியதால் அவரை இந்த வேதபுரிக்குத் தருவிப்பதுபோல் நடித்து நடுவழியில் காளிசரணபோஸால் கைதி செய்யப்படும்படி செய்தேன். என் காரியங்கள் எல்லாம் இனிது நிறைவேறியது. அரசியைக் கெடுத்து விட்டால் எனக்கு உப பத்தினியாயிருந்து என் சொற்படி நடப்பாளென்று முயற்சித்தேன். அதற்கு இடையூறாக இருந்த ராம்மோகனைத் தொலைத்துவிட வழிகளும் தேடினேன். கடைசியில் அரசியும் என்னால் கற்பழிக்கப்பட்டார். பிறகு நான் அரசியின் வஞ்சனையினால் சப்தசிந்துவத்தில் அநியாயமாக (?)க் கைதியானேன்.

***

பலபத்திரன் கூறி முடித்ததும் கனகதாரா மகாராணி அதிக க்கிரோஷத்துடன் எழுந்து நின்றாள். உடனே ஒரு தாசி அங்கு தோன்றினாள்.

மகா துராத்மாகிய இந்த பலபத்திரன் அரசியின் அந்தப்புரத்துக்கு வந்த போது அவன் வரவை யந்திர சக்தியால் அறிந்து கொண்டு அரசி சுரங்கமார்க்கமாகக் கீழே சென்று விட்டாள். இந்த மகா பாபி என்னை அரசி யென்று

நினைத்துப் பலாத்கரித்து விட்டுப் போனான் என்றாள். ராம் மோகனனும் தாசி கூறியது உண்மையே என்று நடந்த விஷயங்களை விவரித்தான். அரண்மனையிலிருந்த யந்திர விசேஷங்களையும், அங்கிருந்து அந்தப்புரத்துக்குப் போய்விடக் கூடிய சூக்ஷ்ம வழியையும் எடுத்துக் காட்டப்பட்டது.

* * *

## அதன் பிறகு நொண்டி போஸ் எழுந்தார்.

நான் மிகவும் கோரமான ரோகங்களால் பீடிக்கப்பட்டுக் கிடந்ததை என்னை இன்னாரென்று அறியாத காளிசரணபோஸ் தனது வைத்திய சிகிச்சையால் குணப்படுத்தினான். ஆனால் எனக்கு சரீரத்தில் போதுமான சக்தியில்லாததால் அதிகமான அவிழ்த சிகிச்சை சரீரத்திற்கு அபாயமென்று சொல்லி நிறுத்தி விட்டான். பிறகு அவனிடமே இருந்து வந்தேன். கமலாபாயை எனது மாமியாரென்று அந்தம்மாளின் மூலமாகவே ரகசியமாய்த் தெரிந்து கொண்டேன். பிறகு சாருதத்தர் கைதுசெய்யப்பட்டுக் கொண்டு வரப்பட்டார். வெளிப்பார்வையில் இவர்களுக்குக் கொடூர முள்ளவன்போல் காட்டி காளிசரணன் என்னை மெச்சும்படி நடந்து கொண்டேன். ஒரு நாள் எனக்கோர் யோசனை உண்டாகி காகிதமும் எழுதுகோலும் சாருதத்தரிடம் கொடுத்து தங்கள் சரித்திரத்தையும் தாங்கள் அடைபட்டுள்ள இடத்தின் விவரத்தையும் எழுதி இந்தத் தகரக்குழாயில் இட்டு மூடி இக்கால்வாயில் எறிந்து விட்டால் அது எவர் கையிலேனும் சிக்கி அதனால் நன்மை விளையக் கூடுமென்று சொன்னேன். சாருதத்தர் அப்படியே ஒரு கடிதத்தில் எழுதிவருகையில் அதற்குள் வெளிச் சென்றிருந்த காளிசரணன் வந்துவிட்டபடியால் அவர் எழுதிக் கொண்டிருந்ததை அப்படியே பிடுங்கி தகரக்குழாயிலிட்டு மேல் மூடிபோட நேரமில்லாமல் கால்வாயில் எறிந்து விட்டேன். அதற்குள் காளிசரணன் அங்கு வந்து விட்டான். கொட்டடியிலிருந்த சாருதத்தர் வெளிவரக் காரணமென்னவென்றான். அதற்கு நான் இந்த மூடம் காற்று வாங்கவேண்டுமென்றதால் அதை வெளியில் இழுத்து வந்தேனென்று போக்கு காட்டினேன். பிறகு ராம்மோகனன் வர அவனையும் தப்புவிக்க முயன்று 13-ம் படிச் சங்கதியைச் சொன்னேனென்றார். நொண்டிபோஸ் கூறிமுடித்ததும் ஏககாலத்தில் மரியாதைக் குண்டுகள் போடப்பட்டன. உடனே மங்களவாத்தியங்கள் முழங்கின. கனகதாரா மகாராணியார் உட்கார்ந்திருந்த சிம்ஹாஸனத்திலிருந்தும் திடீரென்று ஒரு மாறுதல் ஏற்பட்டது. சாருதத்த மகாராஜா இராணியார் வீற்றிருந்த இடத்தில் வந்து நின்றார். அவர் குமாரவனத்தில் கையிலும் காலிலும் விலங்குகள் போடப்பட்டு எவ்வித அலங்கோல ஸ்திதியிலிருந்தாரோ அதே விதமான கோலத்துடன் தோன்றினார். உடனே கனகதாரா மடமடவென்று சிம்மாசனத்தை விட்டுக் கீழே யிறங்கி விட்டாள். சபை முற்றிலும் நிசப்தமாக இருந்தது.

* * *



## அப்போது கனகதாரா எழுந்து சபையோரைப்பார்த்து மிகுந்த ஆக்குரோஷத்துடன் கூறுவாளாயினாள்.

சபையை அலங்கரித்து நிற்கும் பெரியோர்களே! கனவான்களே! பிரபுக்களே! சீமாட்டிகளே! இதோ சிம்ஹாஸனத்தில் காணப்படுபவரே உங்களின் அரசரான சாருதத்த மஹாராஜா ஆவார். அவரே என்னை மாலையிட்ட மணாளர். ஹா என்ன கோரமான காட்சி! உங்களுடைய அரசரின் கைகளிலும் கால்களிலும் விலங்குகள் போடப்பட்டு அவரது அழகிய மேனியனைத்தும் மாறி, விகாரரூபத்துடன் நிற்பதை நீங்கள் எப்படிக் கண்கொண்டு பார்த்துச் சகித்திருக்கின்றீர்கள்? உங்கட்கு மானமில்லையா? ரோஷமில்லையா? ஐயோ என் அடிவயிறு பற்றி எரிகின்றதே. அவரை இந்த கதிக்குக் கொண்டு வந்தவன்—அவருடைய காலிலும் கைகளிலும் விலங்குகள் போடுவித்துப் பலவருடகாலமாகச் சிறையில் வைத்தவன்—யாவனென்று நீங்கள் இன்னும் அறிந்துகொள்ளவில்லையா? ஹா! எல்லாக் கொடுமைகளையும் துன்மார்க்கனான இந்த மந்திரியல்லவோ செய்தான்? அதோ இன்னோரிடத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் காளிசரணனும் இந்தத் தூர்த்த மந்திரிக்கு ஒத்தாசையாக இருந்து எத்தனையோ அநீதங்களை நிகழ்த்தியுள்ளான். ஐயோ இந்த மந்திரியாகிய மஹா பாதகன் என்னைக் கற்பழிக்கவும் முயன்றான். அந்த நேரத்தில் தாசியும் ராம்மோகனனும் எனக்குத் துணையாக இல்லாமற் போனால் பெண்பாலாகிய என் கதி என்னாம்? மதிப்பறியார் முன் பருக்காங்கல் கௌரவிக்கப்படுவது போல, இவனும் பேதைகளின் முன்பு தனது பலத்தைக்காட்டி இறுமாப்பையடைந்து போய், தலை துலுக்கி, மார் நெளித்து, எனக்கு நிகரெவர், எனக்கு நிகரெவர் எனப் பொலிவுற்றுக் கர்வம் மண்டையேறிப் போய், நாடெல்லாம் தன்பெருமை யோங்க, நகரெல்லாம் புகழ்மிக் கோங்கக் காடெல்லாங் கனம் நின்றோங்கக் கபடர் தம் உள்ளங்களெல்லாங் களிப்பேற்று நிற்கத் தானே தன்னை மதித்துக் கொண்டு கூத்தாடலானான். யானை மதப்பட்டால் அலங்காரமேயன்றி நாய் மதப்பட்டால் சரியாமோ? இப்பேர்ப்பட்ட சூரமகன் வெட்கமில்லாமல், இலச்சை கெட்டுப் பயம் விட்டு மானம் விற்றுப் பதை பதைத்துத் துள்ளித் தொப்பென்று விழுந்து எதிர்த்துப் பேசி என்னைக் கொலைக்களம் அனுப்பத் தனக்குத் திராணியுண்டென்றும் கர்வித்து நின்றான். அதற்கேற்றபடி என் பிராணேஸ்வரரை அவர் இருக்கும் சிறையில் சந்தித்து ஹிம்ஸித்து சித்திரவதை செய்து நானே என் நாயகரைக் கொன்றதாக ஒரு பொய் மரணசாசனமும் பெற்று அதனால் தலை தடுமாறி நின்ற அக்கிரமங்கள் கொஞ்சமா? இவன் என் மீது இப்படி அபாண்டமான பழி சுமத்தவும் அப்போது தான் எனக்கு சரியான விழிப்பு உண்டாயிற்று. உடனே அவனது ஆட்டும் வாலையும், மதத்தின் தலையையும், கல்வியின் நாக்கையும், கருவத்தின் மூக்கையும், ஒட்டப் பிடித்து வேருடனறுத்துச் சுடுகாட்டில் சேர்த்துச்

சுட்டுப் பொசுக்கிச் சுடுநீராக்கி மறு தொழில் பார்ப்பதாகத் துணிவெய்தினேன். மந்திரி என்று தனக்குத்தானே ஙிறிக்கொண்டாடினனே! அவனுக்கு அது எப்படித்தகும்? ஒரு வரியாவது பிழையறப் படிக்கவுந் தெரியுமா? வாரி வைடவித்தையாவது வயிற்றில் தங்கியறியுமா? நெற்றியைக் கொத்திப் பகல் விளக்கேற்றிப் பரிசோதித்தாலும் ஒரு குன்றுமணியளவுக்காவது நல்லொழுக்கத்தின் பசை கிட்டுமா? இவனுக்குத்தானோ மந்திரிப்பட்டம் ஏற்பட்டது? ஞானிகளாடுந் திருக்கூத்தைப் போல நானு மாடுகிறேன் பேய்த்தனத்தாலே என்றபடியல்லவோ இவன் குதிக்கலானன். ஐய்யோ பாபமே! இவனோ மந்திரியாவான்? கள்ளிக்கு ஏனோ முள்வேலி? கழுதைக்கு ஏனோ கடிவாளம்? உள்ளிக்கு ஏனோ பரிமளம்? உவர் நிலத்துக்கு ஏனோ விதைகள்? ஒடித்துப் போடுஞ் சுள்ளிக்கு ஏனோ கோடாலி? இடைப்பத்திற் ஏனோ கவசம்? ஒரு குருவினிடத்திலும் படித்தறியான். ஒரு புஸ்தகமும் அவிழ்த்துக் கட்டின பாபத்துக்கும் போனவனல்ல. ஆசையோ வெட்கத்தையும் பறித்துக் கொண்டு உடல் முழுக்கப் பூரித்துப் போய்க்கிடக்கின்றது. நான் எவ்வளவோ நல்ல மாதிரியில் புத்தி கூறினேன். ஆனல் விபீஷணன் சொல் இராவணன் செவியில் ஏறுமா? நான் இப்போது பேசுவதைப் பார்த்துத் தனது முகத்தைச் சுளித்துக் கொள்கிறான். அடிபட்ட நாய் குலைக்குமென்பது பழமொழி. நியாயமாக அடித்தாலும் அநியாயமாக அடித்தாலும் நாய் குலைத்தே தீரும். நியாயமாகத் தானே அடித்தானென்று கருதி அது குலைக்காமல் சும்மா இருக்கமாட்டாது. இந்த பேய்ப் பிழையாண்டியின் துஷ்கிருத்தியங்களோ மகா பயங்கரமானவை. அம்மம்மா! இப்போது நினைக்கினும் நெஞ்சம் பதறுகின்றது.

ஐயோ! என் தகப்பனர் அமரஸிம்ஹர் எனக்கு விதவாபட்டம் கொடுத்த நேரம் எப்படிப் பட்டதோ அறியேன்! அதனல் நான் அடைய நேரிட்ட தொல்லைகளும் இடுக்கண்களும் போதும் போதும்! பொய் விதவையாக நானிருந்ததற்கே இவ்வளவு கஷ்டங்களானல், உண்மையில் விதவையாய் விட்ட பெண்களின் துன்பசாகரம் எத்தகைத்தோ அறியேன்! இரவு இரண்டு மணியிருக்கும் போது எனது கணவரை சாளர வாயிலாகச் சந்தித்தும் ஈஸ்வர சங்கற்பமேயாகும். அப்படி அருமைச் சந்திப்புவாய்த்தும் மனங்குளிரப் பேசி அவருடன் இருப்பதற்கு ஏது வின்றி அவரை உடனேயனுப்பி விடும்படி நேர்ந்தது. இல்லாவிடில் எவருக்கேனும் தெரிந்து போனல், கண்டு கொண்டு விட்டால், என்னைப் பற்றிக் கேவலமான அபிப்பிராயங்கள் உண்டாகிவிடும். ஒரு பால்யவிதவைக்கு அன்னிய தேசசஞ்சாரியாகிய ஒரு யுவகனுடன் என்ன பேச்சிருக்கிறது என்று ஸம்சயிப்பர். இது இங்ஙனமாக, பிறகு சாருதத்தர் என்னைத் தமது மனைவி யென்று கூறி அழைத்துக் கொண்டு போவதற்கு இல்லாத நிலைமையில் நான் விதவையாக வெளிக்குத் தோற்றப்பட்ட படியால் எப்படி இதற்கு மீட்சி என்று வெகுதூரம் ஆலோசிக்கும்படி நேர்ந்தது. சாருதத்தர் என்னை மறுபடியும் மணமுடித்தாலன்றி



என்னைக் கைப்பற்றுவது முடியாத காரியமென்று தெரிந்து கொண்டு இந்த பலபத்திரன் வசம் நான் இருந்ததால் அவனைக் கேட்டார். நான் என் விதவை ஸ்திதியை மறைத்து விவாகம் செய்துதந்தால் தக்க உதவி செய்வதாகச் சத்தியம் செய்துதர அதன் மீது விவாகமும் நடந்தது. பலபத்திரனுக்கும் மந்திரிவாழ்வு வந்தது. இந் நகரத்துப் பிரபுக்களும் ஜனங்களும் நினைத்திருக்கிறபடி நான் துஷ்டையுமன்று; விபசாரஸ்திரீயு மன்று; ஜனங்களுக்குக் கொடுமை செய்யக் கருதியவளுமன்று; இவ்வளவும் செய்து வைத்த பாதகன் இந்த மந்திரியே யாவான். ஒரு பெண்ணுக்குப் புருஷனிலும் சிறந்த ஐஸ்வரியம், பாக்கியம், சந்தோஷம் வேறில்லை. எனது பர்த்தா வந்து விட்டார். இனி என்னைப்பற்றிய கவலை ஒழிந்தது. எனக்கு இந்த ராஜ்யபாரமும் வேண்டாம், இந்தக் கவலைகளும் வேண்டாம். ஒரு சாமானிய ஸ்திரீ போலிருந்து என் பர்த்தாவின் பணிவிடைகளைக் கவனித்து வரக்கூடிய பதவி எனக்கு வாய்க்குமாயின் அதுவே போதுமானது. என் போன்ற துரதிர்ஷ்டசாலிகளான மனைவிகளுக்கு மறுபடியும் பர்த்தா திரும்பக்கிடைத்தால் அதைக் காட்டிலும் அவர்களுக்கு வேறு சந்தோஷம், ஆனந்தம், பரிசுகள் தேவையிராது. பர்த்தாவுடனே சதாகாலமும் இருந்து வாழ்ந்து வருகிற பெண்களின் குதூகலிப்பைவிட, இப்படி என்னைப்போல அடிக்கடி பார்த்தாவை விட்டுப் பிரிந்து போய் மீண்டும் ஒன்று சேருகிற பெண்களின் புளகாங்கித ஆரவாரிப்பே வெகு ஸ்வாரஸ்யம் தருவனவாக இருக்கும். மகா ஜனங்களே! சாருதத்த மகாராஜா உங்களின் அரசர் என்று நான் சொல்ல வேண்டியதில்லை. இங்கு நான் வற்புறுத்துவது யாதெனில் முதலில் உங்களுக்கே அவர் சொந்தமானவர் என்பதைப் பற்றித்தான். பிறகு நீங்கள் எனக்காக விட்டுக் கொடுக்கிற பாத்தியதையிலே, அவரே எனது பிராண காதர் என்கிற முறையில் சொந்தம் பாராட்ட வேண்டியவளாகிறேன். ஆனதால் மகா ஜனங்களே! நீங்கள் தாமே சிம்ஹாஸனத் தருகே சென்று உங்களின் சாருதத்த மஹாராஜரின் விலங்குகளைத் தகர்த்தெறியுங்கள். எனது வாழ்நாள் முற்றிலும் பிறருடைய காரியங்களுக்காகவே செலவிடப்பட்டிருக்கின்றது.

புவியிலேன் வாழ்நாளை பிறர்நலங் கருதியே
போக்கினேன்; தாய்மனம்போல்
புத்திரிந டப்ப தொரு சட்டத்தின் மணமாலை
பூட்டவு மிசைந்துநின்றேன்;
பவிஷுறுங் கணவனைக் கருதியேன் தந்தைதாய்
பந்துபிரி வைச்சகித்தேன்;
பாவையேன் னழகுபிறர் கண்மேய லாகாமல்
பகிரங்க விதவையானேன்

சுவிகரக் கணவனோடு நகர்புகப் பலபத்ர
துர்த்தனையமைச் சாக்கினேன் ;
சுகராம மோகனன் வசந்தமாலா முனர்த்
தோற்றியுள் ளங்கவர்ந்தார் ;
அவிவேக மந்திரியின் சூதறிந் தனைவரி
னருஞ்சிறை யகற்றினேன் ; முன்
அருந்தவப் பயனஃ திருந்தது திரும்பவு
மடைந்த தென்காதலனையே.

கண்ணீர் விட்டழக் கூடியதான தொனியில் மகாராணியார் பேசிய பேச்சுகளால் சபை முற்றிலும் கலங்கிப் போயிற்று. எல்லோரும் கண்ணீரும் கம்பலையுமாய் நின்றனர். பின்னும் இடையிடையே மகாராணியார் பேசிய உக்கிரகமான பேச்சுகளால் சபையில் உண்டான ஆக்கிரகம் சொல்லி முடியாது. ஆயினும் ஜனங்கள் கலகம் செய்யாதிருக்கும்படியாகப் போதுமான துருப்புகள் வைக்கப்பட்டிருந்ததால் சற்று அமைதியாக விருந்தது. என்றாலும் துருப்புகளால் அடக்கக் கூடவில்லை. ஜனங்கள் யாவரும் ஒன்றுகத் திரண்டு சாருதத்தனைச் சூழ்ந்து கொண்டார்கள். சிலரோ அவரை யப்படியே தூக்கிக்கொண்டனர். விலங்குகள் அனைத்தும் தகர்க்கப்பட்டன. இந்தக் கலவரத்தில் ஜனங்கள் மந்திரியின் மீதும் காளிசரணையோகியின் மீதும் விழுந்து அவ்விருவரையும் நசுக்கி மாம்ஸபிண்டம் செய்து விட்டனர். உடனே வெளியிலிருந்தும் புதுத் துருப்புகள் தருவிக்கப்பட்டு கொந்தளிப்பை அமர்த்தி பழயபடி அமரிக்கையை உண்டுபண்ணினார்கள். மந்திரியும் காளிசரணனும் நசுங்கி மாண்டனர். அந்த சவங்களிரண்டும் உடனே அப்புறப் படுத்தப்பட்டன. சபை முன் போல் நிசப்தமாக விளங்கியது. சாருதத்த மகாராஜாவும் கனகதாரா மகாராணியாரும் ஒரே சிம்ஹாஸனத்திலிருந்து காட்சி தந்தனர்.

## அத்தியாயம். 19.

நம்முன்பாக இப்போது ஒரு நாடகம் நடந்து முடிவு பெற்றுப் போயிற்று. அதில் அநேகர் நடிகர்களாய்த் தோன்றி வெகு நன்றாகத் தங்களின் சாதுர்யத்தைக் காண்பித்தனர். மந்திரியாகிய பலபத்திரன் இவ்வளவு தூரம் துன்மார்க்க சுரங்கத்திற்குள் புகுந்து வேலை செய்து, யாவும்



சமீபத்தில் முடிவு பெற்று விடவேண்டிய தருணம் நெருங்கி விட்டதென்று அவன் மகிழ்ச்சியுடன் எதிர் பார்த்த சந்தர்ப்பத்தில் சப்தசிந்துவத்தில் கைது செய்யப்பட்டுப் போனான். துராத்மாக்களுடைய காரியங்களை யெல்லாம் கடவுள் இப்படியே நெடுநாள் விட்டுக்கொடுத்து அவர்கள் எவ்வளவு தூரம் பாப மூட்டையைத் தூக்கமுடிகிறதோ அதுவரைக்கும் அவர்கள் இஷ்டப்படி விட்டு முடிவில் ஒரே தடவையில் அவர்களை அமிழ்த்திப் போடுகிறார். இவ்வளவு தூரம் கெட்டழிவதற்குக் காரணம் அவனது துராசைதான்.

ஆசையைக் கொடுத்தவர் கடவுள். சிலபேர் ஆசையை யடக்கியே விடவேண்டுமென்று சொல்லுகிறார்கள் ; பெண்ணாசை கூடாதென்பார்கள் ; பெண்களைப் பேய்களென்றும், எமனென்றும் பேசுவார்கள் ; பெண்கள் முகத்தில் விழிக்கக்கூடாதென்று நீட்டுவார்கள் ; பணவாசை கூடவே கூடாதென்பார்கள் ; தாங்கள்மட்டும் பணத்தைக் கெட்டியாக முந்தானியில் முடிபோடுவார்கள் ; மண்ணாசைகூடாதென்று பரக்கப் பிரசங்கிப்பார்கள் ; சொன்னதின்னதென்று அறியவேமாட்டார்கள். ஆசையை நல்ல உபயோகம் செய்யவேண்டும் என்பது கடவுள் கட்டளை ; துர் உபயோகமட்டும் செய்யப்போகாது. ஒருவன் பாஸ்திரீகமனம் செய்யக்கூடாதுதான் ; தன் சொந்த காதலியோடு சுகித்தலுமா கூடாது ? பிறர் சொத்தை யபகரிக்கக் கூடாதென்பது உண்மையே ; தன் சொத்தைக்கூடவா அநுபவிக்கக் கூடாது ? பிறர் மண்ணைக் கவரப்படாது தான் ; தன் பூமியைகூடவா ஒருவன் சீர்திருத்தி க்ஷேமப்படக்கூடாது ? தருமம் செய்யத்தான் வேண்டும் ; தன்னைக் காப்பாற்றிக்கொள்ளாமலா பிறருக்குத் தருமம்செய்வது ? சுவரிருந்தாற்றானே சித்திரம் எழுதக்கூடும். மற்று: ஆசையை அடக்கி யாளுதல் என்றால் என்ன ? விடை வருமாறு:—

ஒருவனிடத்தில் பதினாயிரம் ரூபா இருக்கிறதாகக் கொள்வோம். காலும், அரையும், அரைக்காலுமாக அவன் அந்த சொத்தைக் கண்மூடித்தனமாய்க் கண்ட கண்ட அற்ப விஷயங்கட்கும், அற்ப ஜனங்கட்கும் பாத்திர மறியாமலும் செலவழித்துக்கொண்டே வருகிறானென்று கொள்வோம் ; இதனால் என்ன ஏற்படுகிறது ; இவன் சொத்தை வைத்துப் படைக்க வழி யறியாதவன் என்று ஏற்படும். சொத்தோ சிதறுண்டு பிரயோஜனமற்றுப் போயினது ; பேருங் கீர்த்தியும் இவனுக்கு உண்டாகவில்லை. இவனிடத்தில் அரை வீசம், வீசம், அரைக்கால், காலாகப் பலகால் வாங்கித்தின்றவர்கள்,— என்னவோ! பிரமாதமாகக்கொடுத்து விட்டானோ? என்று வசிப்பேசுகின்றனர். இவனுக்கு மறுபடியும் புதுமையாக வேறு சொத்தும் கிடைப்பது அருமை. மூடனை நம்பிக் கடன் கொடுக்க யாவருக்கு மனம் வரும்? பக்வானும், பணத்தைக் கணக்கெழுதித் தக்கவாறு செலவழிக்கத் தெரிந்து கொள்ளாத இவனுக்கு மீண்டும் உதவிசெய்வது அருமை. எனவே, பத்தாயிரமுள்ள

போதிருந்த கௌரவம், அந்தஸ்து, பேர், சக்தி முதலிய யாவையும் இந்த ஆசாமி இழந்துபோனான் என்றறிக!

பிறிதொரு மனிதனிடத்திலும் பதினாயிரம் ரூபா இருந்ததெனக் கொள்வோம். அவன் எம்மாதிரியாக அதை உபயோகிக்கிறான் காண்போம். ஒரு பாதியைத் தனக்கென்று ஒரு பாங்கியில் போட்டு விடுகிறான்; வட்டி வருவாயைக்கொண்டு ஜீவித்துவருகிறான்; மறுபாதிச்சொத்து ஐயாயிரமிருக்கிறதே அதை யொரு பண்டாக (Fund) ஏற்படுத்தி, தக்கோரை டிரஸ்டிகளாக அமைத்து, அவர்களைக்கொண்டு அதில் கிடைக்கும் வருவாய் மூலமாக, ஒரு தரும பாடசாலை, ஒரு சிறிய அன்ன சத்திரம், ஒரு தரும புஸ்தகசாலை, இன்னோரன்ன தருமம் யாதாமொன்றனைச் செய்வித்து வருகிறான். பலபேர் பிழைக்கின்றனர். அநேகர் அவனை வாழ்த்துகின்றனர். நல்லோர் சிலர் இவன் வைத்திருக்கும் பண்டுக்கு உதவி நிதியாகத் தத்தம்மாலியன்றளவு சிறிது பொருளுதவி செய்து, முதலை அதிகப்படுத்தி விடுகின்றனர்; பகவானும் ஆசீர்வதிக்கின்றார். இவனுக்குச் செல்வம் தினேதினே அதிகரித்து வருகின்றது. பொருள் இவனிடம் வலித்து வந்து பணி கேட்கிறது. பெரும் கீர்த்தியும் எங்கும் பரவிப் போகின்றன. ஊராரெல்லாம் இவனிடம் கொண்டு வந்து தங்கள் பணங்களை வட்டிக்குப் போடவேண்டுமென்கிறார்கள்; வாங்கி வைத்து விடுகிறான். சுபம்! சுபம்!! சுபம்!!!

மேலே கண்ட விதமாகவே, ஆசையையும் நாம் கவனிக்க வேண்டியது. நமக்கு (மனிதர்களுக்கு) சகஜமாய் எதை—எந்த அற்பப் பொருளைக் கண்டாலும் ஆசையுண்டாகும்—தடை யொன்றிலது. ஆனால் அற்பவிஷயங்களிலுண்டாகும் ஆசைகட்கு இடங்கொடுத்து அந்த ஆசையைப் பூர்த்தி செய்து விடப்படாது. பூர்த்தி செய்து விட்டால் அந்த ஆசையிலுள்ள சக்தி (ஈர்க்கும் சக்தி—Attractive Power) விருதாவாய்ப் போய் விடும்; ஆசைதான் போகத்துக்குக் காரணம்.

எவன் எதை எதை வேண்டுமென்று ஆசைப்படுகின்றானோ அதது கிடைத்தே தீரும்; இது சத்தியம்.

ஆசைக்கு—பிரபஞ்ச சொத்துக்களைத் தன்னிடமே ஈர்க்கும் அதாவது கிரகிக்கும் சக்தியுண்டு. மேனாட்டு சாஸ்திர வல்லுநர் இங்ஙனம் கூறுகின்றனர்.

ஆதலால் ஒருவன் எதைக் காண்கிறானோ அதற்கெல்லாம் ஆசைப்படப்போகாது. என்ன செய்ய வேண்டும்? ஆசையை யடக்கிவிடவேண்டும்; ஜீரணம் செய்து விடவேண்டும்; வெளியே வரவிடப்படாது. அப்படிச் செய்வதால் இவன் சக்தி அதிகமாகும். எப்படி? சொல்லுகிறோம் கவனிக்க.



ஒருவன் தெருவழியே போய்க்கொண்டிருந்தான். ஒரு சிறு பொம்மையைப் பிறிதொருவன் கொண்டு வந்தான்; அதற்கு ஆசைப்பட்டு அதை வாங்கிவிட்டான்; அந்த ஆசை அடங்கிப்போய்விட்டது. சில அற்பர் எதிரே வந்தவர்கள், ஐயா! நீங்கள் செய்த நாடகம் பேஷ் பேஷ்! சபாஷ்! என்று புகழ்ந்தார்கள். பிறர் இவனைப்புகழ்வதில் இவனுக்கு அதிக ஆசை; அந்த ஆசையை இந்த அற்பர்கள் வழியாகத் திருப்தி செய்துவிட்டான். ஒரு தாசிப் பெண் வழியே போய்க்கொண்டிருந்தாள்; அவள் மெத்த அழகி; அவளோடு ஒரு வார்த்தையாவது பேசவேண்டுமென்ற ஆசை இவனை யவளிடம் பிடித்துத்தள்ள, இவன் வழியே சென்று கொண்டிருந்த தனது சினேகிதர்களையும் கவனியாது அந்தத் தாசிப் பெண்ணிடம் சென்று பத்தெட்டுக்கொடுத்து அவளுக்கு தாஸத்வம் செய்தான்; அந்த ஆசை ஒழிந்துபோயிற்று.

அப்புறம் மனைவியிடம் வீட்டிற்கு வந்தான். வந்தால் ஒரு ஆசை இவனைப் பிடுங்கித் தின்கிறது. இவன் குடும்பத்திற்கு விரோதியான ஒரு மனிதனது பெண்ஜாதியின் இரகசியம் ஒன்று, பிறரறியாதது இவன் கண்ணுக்கோ காதுக்கோ எப்படியோ எட்டிப்போயிற்று; அதை யடக்கிவைக்க இவனால் ஆகவில்லை; வயிறு வெடித்துப்போகிற திவனுக்கு! உடனே பெண்டாட்டியைக் கூப்பிட்டு அடியே! டியே! டியே! கேட்டாயா! என்று சமாசாரத்தை எடுத்துக் கொட்டிக் கொடுத்துவிட்டான். அவள் உடனே அதை யங்குமிங்கும் பரவவைத்துவிட்டாள். இவன் ஆசையும் சிதறிப்போயிற்று. நல்லது, இதை கேட்கும் சீமாட்டிகளே! கனவான்களே! இவனை என்னவாக மதிக்கின்றீர்கள்? மூடனென்றல்லவா! யாம் முழுமகன் என்றே எண்ணுகிறோம்.

இப்படிப்பட்ட மனுஷனுக்கு ஒரு நன்மையும் நேரிடமாட்டாது. ஆசையை யடக்கிவிட்டால் அது பிறந்த இடமே திரும்பிச் சென்று இவனுக்குப் பெருஞ்சொத்தாய் விடும். அடக்க முடியாத ஆசையால் நாம் என்ன அறிந்து கொள்ளலாம்? அவ்வளவு அற்புத பெருஞ் சக்தி அந்த ஆசைக்கிருக்கிறதென்று நாம் அறியலாம். ஆற்றில் ஜலம் சாதாரண வேகத்தோடு பாய்ந்து செல்கிறது. அந்த வேகம் சாதாரண விஷயங்களை மட்டும் செய்யும். ஒரு அணை அந்த ஆற்றில் கட்டி ஜலத்தைத் தடுத்து விட்டால் என்னவாகும்? அந்த ஜலத்துக்கே அசாத்திய சக்தி உண்டாய் விடும். தடுக்கப்பட்டதால் முன்னிலும் வேகம் அதிகம்; சில வேளை நாம் போட்ட அணையைக்கூட வாரிக்கொண்டுபோய் விடும். அந்த அணையிலே ஒரு சிறு துவாரம் செய்து அதின் வழியே தடுக்கப்பட்ட ஆற்றின் ஜலத்தை வெளியே போகவிட்டால், ஜலம் அந்த துவார மூலமாக என்ன அற்புத ஆவேச வேகத்தோடு ஓடி வரும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? இவ்விதமே ஆசையையடக்கி வைத்துப் பாத்திரமறிந்து அதைச் செலவிடுதலே யுக்தம். ஸ்வாசத்

தை தனக்குள் அடங்க விடுவதில் அதிக சக்தி ஏற்படுவது பிரத்தியக்ஷம். ஆசைக்கும் அப்படியே.

அற்பவிஷயங்களில் உண்டாகும் ஆசை உண்டாகட்டும், வேண்டாமென்னப்படாது. ஆனால் அந்த ஆசையை அப்போதப்போதே திருப்தி செய்து போக்கிவிடப்படாது. அந்த ஆசைகளைத் திருப்தி செய்யாமல், அவைகளைத் தனக்குள்ளேயே செல்லவிட்டு ஜீரணம் செய்துவிடவேண்டும். அவையெல்லாம் தினைதினை சேரச்சேர, சேரச்சேரத் தன்னாசையின் சக்தி அதிகமாகும். பிறகு சமயோசிதமாக, ஒரு பெருங்காரியத்தில் கிரமப்பிரகாரம் அசைச் செல்ல விடுத்தலான் அது அந்தப் பெருங் காரியத்தை முடித்து நமக்குப் பேருங் கீர்த்தியும் பொருளும் அருளும் கிடைக்கும்படி செய்விக்கும். இதைத்தான் ஆசையை வெல்லும் வழி யென்று மேலோர் கூறுகிற்பர். ஆசையை அடியோடு இருந்த இடம் தெரியாமல் தொலைத்து விடவேண்டுமென்று ஆன்றோர் சம்மதமன்று. இந்த விஷயம் சான்றோர்களின் நூல்களை யாழ்ந்து கவனிப்பதால் வெளியாகும். இவ்வாறாகத் தமது ஆசையை யடக்க முயலாதவர்கள் பெரும்பாலும் உலகத்தின் தவறுவழிகளிலே சிக்குண்டு கெடுவது இயல்பு அதிலே மந்திரியாகிய பலபத்திரனு மொருவனவன். ஓர் தேசத்தாரின் அல்லது ஓர் குடும்பத்தின் சன்மார்க்க ஜீவியம் "ஒவ்வொருவனும் தனக்குத் தேவையானவைகளை மாத்திரம் தேடிக்கொள்ளவேண்டியது" என்ற அருவருப்பான கோட்பாட்டை அனுசரிக்கத் துவக்கின அந்த க்ஷணமே கெட்டு நாசமாகிப்போய்விடும். இங்கே பலபத்திரன் ஆரம்ப முதற்கொண்டே தன் ஆசைக்கு இடம் கொடுத்து உடனுக்குடன் திருப்திசெய்விக்க முயன்றதில் அது அவனை இவ்வளவு துன்மார்க்கங்கட்கும் ஆளாக்கிவிட்டது. இப்படியே பிரதமத்தில் ஒரு ஸ்திரீயினிடமோ, அல்லது துர்க்கிருத்தியமான செய்கைகளிலோ, அல்லது தகாத பானவகைகளிலே ஒருவன் தவறிவிட முயலுகிறபோது, அப்படித் தவறிவிடத் தன்னை வற்புறுத்துகிற ஆசையைத் திருப்திசெய்யாமல் அம்மட்டில் நிறுத்திக் கொள்வானாயின் அவனுடைய ஜென்மம் புனித ஜென்மமாக மாறிவிடும். அவ்வாறின்றி அப்போதுண்டான ஆசையை திருப்திசெய்து அதனால் நன்னடக்கை மீறுவானாயின் பிறகு எக்காலத்திலும் அவன் குணப்படுதல் என்பது அரிதாகி பின்னும் பின்னும் கெட்டழியவே நேரும்படியாகும். ஆசைக்கோ ரளவில்லை; அகிலமெல்லாங் கட்டி யாளினுங் கடல் மீதிலும் நினைவு செல்லும். இவ்விதமே பலபத்திரனுமானான். வஞ்சித்து நெடுங்காலம் வாழ்வதிலும் மரணமடைவதே நலம். "ஆசை யிருக்கிறது தாசில் பண்ண—அதிஷ்ட மிருக்கிறது கழுதை மேய்க்க"; அதற்கு யார் தான் என்ன செய்யலாம். பலபத்திரனின் இராஜ்யாபேக்ஷை இறுதியில் மரணத்தோடு சமாப்தியாகும்படி முடிந்தது.

---

## அத்தியாயம். 20.

இராஜ ஸபா மண்டபத்தில் அக்கிராஸனாதிபத்தியம் வகித்திருந்த ஜெகத் குருவினுடைய உபன்யாஸமானது வெகு சிலாக்கியமாயிருந்தது. இந்த இராஜ குடும்பத்தின் வர்த்தமானங்கள் இவ்வளவு தூரம் ஒரு கதைபோல விரிந்து இத்தனைபேர்கள் ஸஞ்சலப்பட்டு நொந்துபோகும்படியாக ஆனதற்குக் கமலாபாயினுடைய அறியாமையைத்தான் காரணமாகச் சொல்லவேண்டுமென்றார். அந்த அம்மை தமது குடும்ப ரகசியத்தை வெளியிடாது காக்கும் சக்திபெற்றிருப்பாளாயின் அவளது குடும்பம் இவ்வளவு தூரம் வருந்தியுழல்வதற் கிடனேற்பட்டிராது. பலபத்திரனுக்கும் வேலையில்லாமற் போயிருக்கும். அவள் தனது பேதமையினால் தனது குடும்ப ரகசியங்களை விராஜேஸ்வரனுக்கு வெளியிட்டுப்போய் இத்தனை விபரீதங்களுக்கு ஏதுவாயிற்று. இரகசியம் என்ற பதம் சாமான்யமானதல்ல. அதிலும் குடும்ப ரகசியம் என்றபதமோ விலைமதிக்க வொண்ணாததாகும். குடும்பம் என்பதை ஒரு சிற்றரசுக்குச் சமமாகச் சொல்லலாம். அதனுள் எவ்வளவோ ரகசியங்கள் மூழ்கிக்கிடக்கலாம். அதை யெல்லாம் வெளியிட்டுக் கொள்ளக்கூடாது. காடிக் கஞ்சியாயினும் மூடிக்குடி என்ற பழமொழியும் ரகசியத்தை வெளிவிடாதே என்பதைத்தான் வற்புறுத்துகிறது.

ஆயிரம் தான் ஆப்தர்களாகப் பழகினவிடத்தும் அவர்களிடத்திலேகூட மறைக்கவேண்டிய இரகசியங்களும் அநேகம் இருக்கலாம். இதை நோக்கியே தோழனோடும் ஏழைமைபேசேல் என்றொரு பழமொழியும் நடையாடுகின்றது. குடும்பங்களில் மறைத்து வைக்கவேண்டிய ரகசியங்கள் எவ்வளவோவிருக்கும். அவைகளை யெல்லாம் வெளியிட்டுக்கொள்ளின் ஆபாசகரமாக முடியும். அதனால் குடும்பத்தின் நல்ல பெயர் மாறிப்போகவும் சம்பவிக்கும். மனைவி தெரிவித்த ஒரு செய்தியைத் தனது தாயாருக்குத் தெரியாமலும், தாய் தெரிவித்ததை மனைவிக்குத் தெரியாமலும் மறைக்கவேண்டிய இரகசியங்களுமிருக்கும்.

பொருளில்லாதவனை ஐயர் "சாணாரப்பயல்" என்று இகழ்ந்து சமீபத்தில் வரக்கூடாதென்று அடிமையாக நடத்துவார். பொருளும் சக்தியும் அவனுக்குச் சேர்ந்தவுடனே அதே ஐயர் "நாடாரவர்கள்" என்று சொல்லி கண்டபோதெல்லாம் ஸம்ஸ்கிருத பாஷையில் ஆசீர்வாதங்கள் பொழிவார். சக்தியும் பொருளும் உள்ளவனுக்கு வாழ்வு என்ற இதுவும் ஒரு இரகசியமேயாகும். "சாராயத்தை ஊற்றிப் பூராயத்தையறி" யென்பதும் ஒரு பழமொழியாக, அதேவிதமாய் ஒரு மனிதனுடைய மேன்மையான சுபாவத்தையறிய விரும்பினால் அவனுக்குக் கோபத்தைத் தூண்டிவிட்டு அதனால் அவனு

டைய குணத்தின் நிதானத்தை அளவெடுத்துக்கொள்ளலாம். ருதுவான பெண்களை நம் நாட்டார் விவாகத்திற்கு முன்பு பரபுருஷ திருஷ்டிக்கெட்ட விடுவதில்லை. இதினும் இரகசியமிருக்கின்றது. புஷ்பவதியானதும் பெண்ணுக்கு எப்போது தனக்கு நாயகன் ஏற்படுவானென்று எதிர்பார்க்கிற வேலையைத் தவிர்த்து வேறு உத்தியோகமில்லை. அந்த சிந்தனாவேகத்திற் கேற்றவாறு அவள் சரீரமாகிய வீடானது இனிவரப்போகிற மணமகனாகிய விருந்தாளி இச்சித்து வசிப்பதற்குத்தக்க விதமாயிருக்கும்படி பழய அமைப்பையே மாற்றி புதுவிதமான மாறுதல்களுடன் கட்டப்படுகிறது. அதாவது அவளுடைய அங்கமுற்றுமே ஒரு நவீனமாறுதலும் தேஜஸும் எய்தப்பெறுகிறது. இந்த நிலைமையில் அவள் பரபுருஷ திருஷ்டிக் கெதிர்ப்பட்டுக்கொண்டிருப்பாளாயின் ஆழமறியாமல் காலையிட்டுக்கொண்ட கதையாக கண்டவர்களையெல்லாம் கணவனாக மதித்துக்கொள்ளத் துணிவேற்படும். அதைத் தடுக்கவும், அவளுடைய ஆசையையெல்லாம் அடக்கி அடக்கி வைத்திருத்து அப்பால் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட கணவனிடம் முன்புசேர்த்து வைத்திருந்த அவ்வளவு ஆசைகளையும் ஒன்று சேர்த்துச் செலுத்தி அவனையே சகலமுமாகக் கருதி, கற்பு லக்ஷண உத்தமியாகும்படி செய்யவுமே பர புருஷ திருஷ்டியை ருதுவாரம்பத்திலேயே தடுத்து விடுகிறார்கள். இப்படியே யுவகனும் அநேக ஸ்திரீகளிடத்து ஆவல் கொள்ளுகிறான். அந்த ஆவலை உடனே நிறைவேற்றாமல் அதிகப்படுத்தி வந்து பெற்றோர் ஏற்படுத்திய பெண்ணை மணந்து அவளிடத்து முந்திய தனது ஆவல்களையெல்லாம் ஒருங்கே செலுத்துவானாயின் அவனது இல்வாழ்க்கை வெகு தூரம் சோபித்து நிற்கும். மேலும் ஸ்திரீ புருஷர்களின் ஹ்ருதயத்தினுள் அநேக ரகசியங்களும் காதல்களும் ஊற்றெடுத்துப் பெருகிக்கொண்டிருக்கவே செய்யும். அவற்றையெல்லாம் வெளிக்குக் கொட்டிவிடுதல் தகுதியாமோ? அப்படி வெளிப்படின் அதனால் நேரும் கற்பு விரோதமும், பழிபாவங்களும், கலகங்களும், மானபங்கமும் இத்தனையதென்று விவரிக்கவும் கூடுமோ? ஸய்யா கிருகத்தின் ரகசியங்களை வெளியிடின் பாபம் சம்பவிக்குமென்று சாஸ்திரங்களெல்லாம் கோஷிக்கின்றன. உலக அமைப்பே இரகசியங்களை முற்றும் வெளியிடாமல் மேற்பார்வையாக வைத்து கௌரவமான வழியில் சென்றுகொண்டிருக்கின்றது. விவாகத்தின் காரணம் தேக சம்பந்தத்திற்காகவே யிருந்தபோதிலும் அதை வெளியிட்டுச்சொல்லுதல் தகுதியோ?, தனது மகன் யௌவனாவஸ்தையில் நொந்து போவதால் அதற்காகத் தங்களின் பெண்ணை அவனுக்கு மனைவியாக்கவேண்டுமென்று சொல்லி பெண் கேட்டால் அவர்களுக்குப் பெண் தருவார்களா? உலகம் அந்த இரகசியத்தையே மூடிவைத்துவிட்டு குழந்தைப் பேறுக்கென்றும் குடும்ப விருத்திக்கென்றும், சொல்லிப் பெண்ணைக் கேட்கும்படிசெய்து வைத்திருக்கிறது. சிறுவர்களின் சரீர அமைப்பு ஆபாசமில்லாததால் அவர்கள் ஆடையுடுக்கும் விஷயத்தில் பெற்றோர் அவ்வளவாகக் கவனம் செலுத்துவதில்லை. சிறுமிகளின் தேக அமைப்பு அருவருக்கத்தக்கதாயிருப்பதில் எப்போதுமே வஸ்திராலங்காரமின்றி



அவர்களையிருக்க விடுவதில்லை. வஸ்திரமில்லாவிட்டால் மானம் போய்விடுமென்கின்றனர். உலகத்தில் வஸ்திர பூஷணாதிகளாலேயே ஸ்திரீகள் சோபிக்கப்பட்டு வசீகரமுள்ளவர்களாகிறார்கள். அந்த வஸ்திர பூஷணாதிகளினுடைய அவசியத்தின் இரகசியம் வெளிப்படின் ஆபாஸகரமாக முடியும். காதலிருவரும் நாணம் விட்டு ஒன்றுபடுங்காலையில் அவர்களுடைய கண்கள் காமத்தால் மறைவுபட்டு விடுகின்றமையின் இன்பநுகர்ச்சியைத் தவிர வேறெதுவுமே அவர்களுக்குப் புலப்படுவதில்லை. தவம்புரியும் மகான்களுக்கு ஈஸ்வர சொரூபம் ஒன்றைத்தவிர வேறெதுவுமே அவர்கள் அறியவசமற்றவர்களாகின்றனரோ, அவ்விதமாகவே காமுகனும், தனது இன்பநுகர்ச்சியைத் தவிர்த்து வேறெந்த ஆபாஸத்தையும் தனது கண்கொண்டு பார்க்கமுடியாதவிதமாகக் குருடனாகிவிடுகிறான். புருஷர்களுடைய புத்தியும் கண்களும் காமத்தாலும் பாசத்தாலும் மறைக்கப்படாவிடின், ஸ்திரீகளின் சரீர ஆபாஸங்களைக் கண்ணுற்ற நிமிஷமே உலக விரக்திகொண்டு விடுவர். இவ்வாறு நேருமாயின் பிரபஞ்சவிர்த்திக்கு மார்க்கமற்று சீக்கிரத்தில் உலகம் சூன்யமாகிவிடும். புத்திமானுக்குப் பயத்தை யுண்டாக்குவது சம்சாரமாகிய காடானாலும் லோக மாய்கையில் வசப்பட்டுப்போய் சுற்றிச் சுற்றி சம்சாரக்காட்டையே தேடி வந்தடைகின்றான். புருஷர்கள் உலகத்தில் ஆசை வைப்பதெல்லாம்கூடி ஸ்திரீகளால் தான். மனைவி இறந்துபோனாலும் தனது அமிஷமாக நிற்கின்ற குழந்தைகளை வைத்துவிட்டுப் போகிறாள். அக்குழந்தைகளிடத்து ஏற்படுகிற பிரியம் காரணமாக உலகபாசம் அவனைப் பின்னும் சூழ்கின்றது. இரண்டாவது விவாகம் செய்து கொள்வதிலும் இரகசியம் இருக்கிறது. முதல் மனைவியிடத்துப் பாராட்டிய அன்பு ஆசைகளின் வெறியானது அவளுடைய மரணத்திற்குப் பிறகு அடங்கிக் காட்டினாலும், அந்த வெறியுடனே நெடுநாள் பழகிவந்த சகவாசத்தினால், அதைவிட்டுவிட முடியாமல், மறுபடியும் அந்த வெறியை உண்டாக்கிக்கொள்ள முயலுகிறான். அதற்காகவே இரண்டாம் முறையும் மணம் புரிந்து முன் மனைவியிடம் செலுத்திய ஆசை அன்பு முதலியவைகளை இவளிடமும் வைத்து, பழைய—தணிந்துபோன வெறியைக் கிளப்பிக்கொள்கிறான். இது எப்படிப்போலவென்றால் குடிகாரன் தனது மதுபான வெறி நீங்கியதும் அந்த வெறியால் உண்டான துன்பங்களையும் அவமானங்களையும் எண்ணிப்பாராமல் மறுபடியும் அதை விரும்பி மதுக்கடைக்கு ஓடுவதைப்போலவாகும்.

இந்தவிதமாக ஸ்திரீகளிடத்தில் வைக்கும் அன்புக்கும் மோகத்திற்கும் பங்கம் ஏற்படாதிருக்கவும், அவர்களுடைய அந்தரங்கமான ஆபாசங்கள் இவனுக்குப் புலப்படாதிருக்கவும் வேண்டி சாஸ்திரங்கள் சில விதிகளை ஏற்படுத்தி யிருக்கின்றன. தன் சொந்த ஸ்திரீ சாப்பிடும்போதும், இறும்பும்போதும், கொட்டுவாய் விடும்போதும், தன்னிஷ்டப்படி உட்கார்ந்திருக்கும்போதும், கண்ணுக்கு மையிட்டுக்கொள்ளும் போதும், எண்ணெய் தேய்த்துக்கொள்ளும்போதும், மேலே வஸ்திர மில்லாதிருக்கும்போதும் பிரசவிக்கும்போதும் புருஷன் பார்க்கக்கூடாதென்று பெரியோர்கள் கண்டிப்பான

விதிகளை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். ஸ்திரீகள் தங்களின் மேல் வஸ்திரம் விலகாதிருக்கப் பார்க்கவேண்டுமென்றும் பூர்வீகர்களின் ஆக்ஞை. மேல் வஸ்திரம் விலகிய பொழுது அவலக்ஷணமும், விலகாதிருக்கும் பொழுது அழகும் வசீகரமும் விருப்பமும் உண்டாகின்றன. இரகசியமாயிருக்கும் எந்த விஷயத்துக்குமே எப்போதும் கௌரவமும் மதிப்புமுண்டு. அந்த ரகசியம் வெளிப்படின் சீ! இவ்வளவு தானா வென்று அலக்ஷியம் மேற்பட்டுவிடும். எக்காலத்திலும் மூடப்பெற்று இரகசியமாக இருக்கும் வஸ்துவுக்குள்ள மகிமை திறந்து வைக்கப்பட்டிருக்கும் பொருளுக்கு ஏற்படுவது முற்றும் அருமையேயாம். கோவில்களில் திரை போடப்பட்டிருக்கும்போது ஸ்வாமியை எப்போது தரிசிப்போம் என்ற நினைவும் ஏக்கமுமே பெரிதாகி மனத்தை வெகுதூரம் வசீகரிக்கின்றது. அந்த வசீகரிப்பு திரை போடப்படாத சமயத்தில் உண்டாகிறதில்லை. இப்படியே நாடகத்திலும் திரை எப்போது எடுப்பார்களோ என்று கவனிக்கிற அவ்வளவு கவனம் திரை எடுத்த பிறகு ஏற்படுவது கிடையாது. ஆகவே திரையிடுவதும், மாதர்கள் தங்களின் மேல் வஸ்திரம் விலகாவண்ணம் காப்பதுவும் ஒரு பெரிய இரகசியமென்றே சொல்லும்படியாயிருக்கிறது.

இப்படிக் கவர்ச்சி ஏற்பட்டு அதினால் ஸ்திரீ புருஷ ஐக்கியத்தை விர்த்தி பெற வைப்பதிலுங் கூட மிதத்தை யநுஸரிக்கும்படி பெரியோர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அளவுக்கு மிஞ்சின் அமிர்தமும் நஞ்சல்லவோ? அமிர்தத்தை நாம் புசித்திரா விடினுங், உப்பை நாம் உண்டிருக்கிறோம். அது அளவுக்கு மீறின் உண்டாக்குகிற கஷ்டத்தை எடுத்துக் காட்டித் தெரிய வேண்டுமென்பதில்லை. எது பண்டங்களுக்கு அதிக ருசிகரத்தை உண்டாக்கிறதோ அந்த உப்பே மிகுதிப்படின் சுவையைக் கெடுத்து விடுவதாயிருக்கிறது. இது நோக்கியே, மிதத்தை யநுசரிக்கும்படியாகப் பெரியோர்கள் பணித்துள்ளார். அதனால் தான், தன் மனைவியுடன் ஒரு பாத்திரத்தில் புசித்தலைத் தவிர்த்தும், ஆடவன் ரமிக்குங் காலந்தவிர வேறு காலத்தில் தனித் தனியாக வெவ்வேறு ஆசனங்களில் சயனித்துறங்கவும் வேண்டுமென்றும் சாஸ்திரங்கள் கட்டுத் திட்டங்களை ஏற்படுத்தியுள்ளன. ஒரே பாத்திரத்திலுண்பதும், ஏகசயனமும் பாசத்தையும் சிற்றின்ப விருத்தியையும் அதிகப்படுத்தச் செய்வனவாதலின் அந்த இரண்டு வழக்கங்களையும் விலக்கி யிருக்கிறார்கள். இவைகளெல்லாம் உலகம் நிலைபெற்று நிற்பதற்கு இன்றியமையாத இரகசியங்களாகும்.

தனக்கு தேகத்தில் பலமில்லா விடினும் அதிக மிருப்பதுபோல் எதிரியை நம்ப வைத்து அதனாலேயே அவன் பின் வாங்கிப்போகும்படி ஒருவன் செய்வதும், தன் பலவீனத்தை வெளிக்குக் காட்டிக்கொள்ளாத இரகசியத்தினாலேயாம். நாடகமேடைகளில், மழை பொழிதல், சமுத்திரம், ஆரண்யம் முதலியவைகளைக் காண்பித்து நடிக்கும் தருணங்களில் விளக்குகளின் பிரகாசத்தைக் குறைத்து விடுவதும் உள்ளிருக்கும் இரகசியம் வெளிக்குவந்து



விடாதிருப்பதற்காகத்தான். இப்படியே வியாபாரியின் ரகசியம் வெளிக்கு வருமாயின் அதற்குப் போட்டி ஏற்பட்டு அத்துடன் வர்த்தகமும் பாழ்பட்டுப் போக நேரும். அவனவன் தன் ஜீவனோபாயத்தை இன்னின்ன மாதிரி வழி வகைகளில் நடத்திச் சென்று உலகத்தில் வாழலாமென்று மனதில் சில உத்தேசங்களைக் கொள்கிறான். அந்த உத்தேச ரகசியத்தை வெளியிட்டாலோ இவனுடைய மனோராஜ்யத்தையும் ஆகாசக்கோட்டை கட்டுவதையும் பாரென்று எல்லோரும் ஏளனம் புரிவர். ஆகவே அந்த ரகசியத்தை வெளிவிடாமல் காத்து, தன் உத்தேசங்களை நடவடிக்கையின் மூலமாக நாளடைவில் காட்டிச் செல்லுவானாயின் எல்லோருக்கும் அவனுடைய காரியங்கள் பிரமிப்பையும் மதிப்பையுங் கொடுத்து அவனையும் மற்றவர்கள் கௌரவித்துப் போற்றும்படியாக ஆகும். ரிஷிமூலம் நதிமூலம் விசாரிக்கக்கூடாதென்பதும் இது பற்றியே. அறைவீட்டு ரகசியம் சீமந்தத்தில் தெரியும் என்ற பழமொழியும் வெகு விநோதமானதுதான். ரகசியம் வெளிப்படவேண்டிய காலத்தில் தானாக அது வெளிவரட்டும். அதற்கு முன்பு நாமே அதை வெளியிட்டுக் கொள்ளப்படாதென்பது இந்தப் பழமொழியின் கம்பீரமான தாத்பரியமாகும். தனது சொந்த தங்கை, தம்பி, குழந்தை, மனைவி முதலிய நெருங்கியவர்களின் களவு, சோரம், இரகசியம், அவர்களின் ஜீவன மர்மம் இவைகளையும் வெளியிட்டுக் கொள்ளப்படாது. அந்த இரகசியம் பகிரங்கம் பெறுமானால் தனது கௌரவத்திற்குத் தாழ்வு சம்பவிக்கும்.

நண்பர்கள் தூர இருத்தலில் அது நேச விருத்திக்குக் காரணமாவதும் ஒரு இரகசியந்தான். நமது நண்பனை எப்போது காண்போமென்ற ஏக்கம் காரணமாக அவர்கள் பரஸ்பரம் அதிக அன்பும் ஐக்கியமும் கொண்டவர்களாகி விடுகிறார்கள். விருந்தினர் வீட்டிற்கு வந்துவிட்ட சமயத்தில் அவர்களை உபசரிப்பதற்காக வீட்டார் பரபரப்புடன் ஓடியாடித் திரிவதில், உப்பில்லை, பருப்பில்லை, நெய் வாங்கவேண்டும், இரண்டு இலைபோதாது என்று ரகசியமாகச் சப்தங்கள் தொனிக்கவும் கூடும். அந்த இரகசியத் தொனிகளைப்பற்றி அவ்வீட்டாரிடம் கேட்பது பொருந்துமா? அவரவர்கள் இரகசியங்கள் அப்படி யப்படித்தான் இருக்கும். அதையெல்லாம் பகிரங்கத்துக்குக் கொண்டு வருவது பரிகசிக்கத்தக்க தல்லவா? ஒருவன் வெளிப்பார்வையில் ஐஸ்வரிய வந்தனாகத்தான் தோன்றுதல் கூடும். அவனுக்கு சொத்துக்கு மேற்பட்ட கடனிருக்கும். அந்த இரகசியமும் வெளிவிடப்படாதுதான். அதை மற்றொருவர் அறிந்தால் அவனது பிரபுத்வம் கெட்டுவிடும். ஒருவன் தனது வருமானத்தைப்பற்றியும் இரகசியம் பாராட்டவேண்டி யிருக்கிறது. அதிக வரவு இருந்தாலும் இல்லாவிடினும் கையை மூடிக்கொண்டு கௌரவம் காட்டவேண்டியதா யிருக்கிறது. ஒரு விலைமாது தன்னிடத்துள்ள ரோகாதிகளின் இரகசியங்களை வெளியிட்டுக் கொள்வாளாயின் அத்துடன் அவளுடைய ஜீவனவழியும் போனதுதானே! இப்படியே மதசம்பந்தமான சாஸ்திரங்களையும் பெரியோர்களிடமிருந்து அறிய ஏற்பாடு செய்துவைத்திருக்கிறார்கள். அதுவும் ஒரு இரகசியமே. கண்டவர்கள் கண்டபடி பிசகான

அர்த்தங்களையும் வியாக்கியானங்களையும் செய்துகொண்டு தான்றோன்றித்தனமாகப் போக வைக்காமல் அது தடுப்பதாக இருக்கிறது.

வைத்தியன் தனது மருந்தின் இரகசியங்களைச் சொல்லி விடுவானாகில் பிறகு அவனை யார் மதிக்கப் போகிறார்கள்? அவிழ்தங்களின் சூக்ஷமமும் அதைச் செய்தவிதமும் நோயாளி எவ்வளவுக்கு அறியாதவனா யிருக்கிறானோ அவ்வளவு சீக்கிரமாகவே அவன் சௌஸ்தமடைவான். அதன் ரகசியம் தெரிந்து போனாலோ அந்த அவுடதத்தைச் சாமானியமாக மதித்துவிட, பிறகு அவநம்பிக்கையும் உண்டாகி, மருந்தின் வீரியமும் கெட்டுப் போகின்றது. மேலும் இறக்கப்போகிற நிலைமையி லுள்ளவனைப் பற்றிக்கூட வைத்தியன் உண்மையைத் தெரிவித்தல் கூடாததாகின்றது. ஜோசியனும் இப்படியே நடக்கப் போகிறதை யெல்லாம் தெரிவிக்க முற்படுவானாயின் அவன் மதிப்பும் கெடுகின்றது. கொஞ்சம் இரகசியத்தை மறைத்தேனும் வைத்தால் தான் உத்தமமென்று காண்கிறது. ஜோசியம் என்பதற்கு உத்தேசம் என்பதே சரியான பொருள். விபசார ஸ்திரீகள் தங்களின் கழுத்தை வெளியில் தெரியக் காட்டுவதிலும் இரகசிய மிருக்கிறது. தாங்கள் மாங்கல்ய தாரணவதிகளல்லவென்று மற்றவர்கள் கண்டு கொண்டால், தங்களை இன்னாரென்று அவர்களே தெரிந்து கொள்ளக் கூடுமென்று இப்படிச் செய்கிறார்கள். பின்னும் தங்களின் சிரிப்பு, கூச்சமின்மை, பரிகாசம், அபிநயம், பார்வை முதலியவற்றாலும் தங்களைப் பொருட் பெண்டிரெனத் தெரியக்காட்டிக் கொள்கின்றனர். ஒவ்வொருவனும் தனது அந்திய காலத்தைப்பற்றி ஞாபகமே யில்லாமல் ஓடியாடி உலகத்திற்கு உழைப்பதிலும் இரகசிய மிருக்கின்றது. அவ்வாறு மறதி இல்லாவிட்டால் இவ்வுலக காரியங்கள் நடந்தேறுவது கூடாததாகி விடுமன்றோ? சில கிழவிகள் தமது வீட்டிற்கு விருந்தினர் எவரேனும் வரின் தமது பேரன், குமாரன் முதலியவர்களைப்பற்றியும், அவர்கள் செய்கிற வியாபாரம் காரியம் இவைகளைப்பற்றியும் பிரஸ்தாபித்து என்ன ஐயா, லாபம் ஒன்றுமில்லை ஐயா; என்னமோ இரவு பகல் கஷ்டப்படுகிறான், என்ன செய்கிறது என்று உள் வீட்டு இரகசியங்களை யெல்லாம் தங்களின் மௌட்டியத்தால் கொட்டி விடுகிறார்கள். இப்படி இரகசியத்தை வெளியிடுவது வெகுதூரம் மதிப்புக்குக் குறைவாகும் பெரிய இடமென்றும் அப்படி இப்படி யிருக்குமென்றும் பிரமாதமாக எண்ணி வந்திருக்கப்பட்டவர்களுக்கு இந்தக் கிழவிகளால உள் இரகசியங்கள் உடைக்கப்பட்டுப்போக சீ! இவ்வளவுதானா என்று அவர்களுக்கு அலக்ஷியம் ஏற்பட்டுப்போய் விடும்.

பிரசித்திபெற்று உலகமெங்கும் பெயர் வாய்ந்திருக்கிற கிரந்த கர்த்தர்களையும், அரசனையும், உயர்ந்த உத்தியோகஸ்தர்களையும், நியாயஸ்தலங்களையும் நேரிற் போய் பார்த்து விடுவதில் அவைகளிடத்துள்ள மதிப்பும் அச்சமும் குறைந்து போகின்றன. கிரந்த கர்த்தாவைப் பார்த்ததும் அவர் எழுதியிருக்கும் நூல்களை வாசித்துப் பிரமிப்படைந்துபோய், அவர் இமயகிரி பர்வதம் போலிருக்கவேண்டுமென்று எண்ணியிருப்பவனுக்கு இவனென்ன நம்



மைப்போன்ற சாமான்ய மனிதனாகத் தானே காணப்படுகிறான் என்பதான தோற்றம் உண்டாகிவிடும். இப்படியே ஏகசக்ராதிபத்தியம் புரிந்து உலகெங்கும் நடுங்கும்படி செய்கிற அரசனையும் நேரில் தரிசித்துவிட்டால் நம்மைப்போன்ற மனிதன் என்கிற ஒரு அகம்பாவமும், சாமான்யமான தோற்றமும் ஏற்பட்டு விடுகிறது. பெரிய உத்தியோகஸ்தர்களையும் நியாயஸ்தலங்களையும் பார்க்குமுன்னதாக இருந்த பயம், மதிப்பு இவைகள் பார்த்த பிறகு சர்வ சாமான்யமாய்ப் போகின்றன. அரசன், கிரந்த கர்த்தா முதலியவர்களெல்லாம் நம்மை யொத்த சாதாரண மனிதர்களே யாயினும் அவர்களிடத்து ஜொலிக்கும் ஈஸ்வராமிஸமானது உலகத்தைப் பிரமிக்க வைக்கிறது. யானை தன்பாட்டில் தான் போய்க்கொண் டிருந்தாலும் வழியிற் போவோரெல்லாம், குதிரை, மாடு முதலிய மிருகங்களும் கூட அதனிடத்து அஞ்சி வழிவிட்டு விலகி தூர நின்று கொள்ளுகிறார்கள். அதுபோலவே தான் கிரந்த கர்த்தர்களும் குருமார்களும் அரசர்களும் தங்களிடத்தே மறைந்து நிற்கும் சக்திப் பிரபாவத்தால் உலகத்தில் தங்களுக்கு மதிப்பை யுண்டாக்கிக்கொள்கிறார்கள். இரண்டு லக்ஷம் ரூபாய் சொத்துள்ளவன் அதை வெளிக்குக் காட்டாமல் ஏழையாகவே தனது நாட்களைக் கழித்துவிட்டுச் சாவதிலும் இரகசியம் இருக்கின்றது. தனது ஸ்திதி இவ்வளவென்று வெளிப்பட்டால் பந்துக்கள் உதவி கேட்கவும், தன்னை அண்டிவாழவும் வருவரென்றுப், தனது பொருளுக்கு வீண் விரயம் நேரிடுமென்றும், உலகப் பிரசித்தி தனக்கில்லா விட்டாலும் தன் பொருளுக்குக் குறைவு வராதிருந்தால் போதுமென்றும் அவன் நினைக்கிறான்.

உலகத்தில் ஒருவனுக்கு எவ்வளவுக் கெவ்வளவு பெருமை, பிரசித்திகள் ஏற்படுகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு அவனுடைய செலவுகள் இரட்டித்துக்கொண்டு போகவே நேரிடும். அவனுடைய பிரசித்திக்குத் தக்கபடி அவனை யறிந்தவர்கள் வெகு பேராகிவிட அவர்களை யெல்லாம் இவன் உபசரிக்கவேண்டியதாகி விடுகிறது. எவ்வளவுக் கெவ்வளவு பொருள் விரயமாகிறதோ அதற்கேற்றபடியே அவனுடைய கீர்த்தியும் வளருகின்றது. கடைசி முடிவு "செத்தால் தெரியும் செட்டியார் வாழ்" வென்பதாகமுடிகிறது. அதாவது அதிகச் செலவுகளுக்காகக் கடன் வாங்கமுயன்று தனது ஸ்திதிக்கு மேற்பட்ட கடனை வைத்துவிட்டு மாள்கின்றான். இது வெல்லாம் பெருமை, கீர்த்தி இவைகளைப்பற்றிய இரகசியங்களாகும். சிறு பையன்கள் தாங்கள் மீசைமுளைத்த பெரிய மனிதர்களாகவேண்டு மென்றும், சிறுமிகள் தாங்கள் தாய்மார்போல் ஆகவேண்டுமென்றும் இளமையில் விருப்பங்கொள்வதிலும் இரகசியமிருக்கின்றது. யௌவனகாலத்தின் துன்பங்களையும், சிக்கல்களையும் அதன் பளுவையும் அவர்கள் அறியாததால், அந்தப்பதவி இன்பகரமானதென்று மயங்கி அதில் விருப்பங் கொள்கின்றனர். இளைஞர்கள் இச்சிக்கும் அந்தப் பெரிய மனித பதவியில் உள்ளவர்களோ அந்த இளைஞர்களின் கவலையற்ற சுகவாழ்க்கையை ஆசித்து ஏங்குகின்றனர்.

வீட்டில் மனைவி யில்லாதவனும், பரஸ்திரீ கமனமற்றவனும்தான் இரா முழுதும் (அவர்கள் கிரந்தகர்த்தர்களாயிருந்தால்) எழுதிக்கொண்டே யிருப்பார்களென்று ஒரு நண்பர் முன்னொருதரம் கூறினார். அதிலும் ரகசியமில்லாமற் போகவில்லை. மூளையைக் கலக்குங் காம வின்பத்தில் முயல்வார்க்கு இரவில் நேரமேது? இன்பந் துய்த்தற் கெண்ணல், ஆயத்தப்படல், ஊடலாற்றல், இன்பந்துய்த்தல், இளைப்பாறல், நித்திரைகொள்ளல் முதலியவற்றிற்கே பொழுது சரியாகும். இதற்கிடையில் கிடைக்கும் சிறிது நேரம் யாது பயனைத்தரும்? இது கருதியே மனைவியும், பரஸ்திரீ கமனமும் இல்லாதவர்கள் தான் இரவு முற்றிலும் எழுதிக்கொண்டு கிடப்பார்கள் என்ற கருத்தடக்கி நவின்றார் போலும்!

இவ்விதமாக, உலகத்தின் ஒவ்வொரு அணுவிலும் ஒவ்வொரு அற்பமான உயர்ந்த, தாழ்ந்த வஸ்துக்களிலும் விஷயங்களிலும் ஆழ்ந்த இரகசியங்கள் மறைந்து கிடக்கின்றன. நாம் அவற்றை யெல்லாம் உள் நுழைந்து பார்ப்பதற்கு முடியாது. அதற்கு நமக்கு சக்தியும் போதாது. அப்படிப் பார்க்கப் புகினும் கடவுள் நமக்கு அதில் காரிய நிறைவேற்றத்தைக் கடாக்ஷிக்க மாட்டார். உலகம் என்பது இன்னது, அது சத்து அற்றது என்பதை ஒவ்வொருவனும் கண்டுகொண்டு அதை மறந்துவிடாதபடி யிருப்பானாயின் உலகம் சீக்கிரம் பிரஜாபிவிர்த்தி குன்றி மூழ்கிப்போய் விடும். ஆகவே உலக இரகசியங்கள் யாவும் இலைமறைந்த காய்போன்று தெரிந்தும் தெரியாமலும் ஒளிமறைவாக இருந்தால் தான் ஸ்வாரஸ்யம் தரும். இரகசியம் என்ற அணுக்களை ஒன்று சேர்த்தே இந்த உலகமானது இணைக்கப்பட்டு உருவகப் படுத்தப்பட்டுள்ளது. ரகசியத்தின பெருமை இவ்வாறெல்லா மிருப்பதால் தான் அதை வெளியிடாமல் காத்துக் கொள்ளுதல் இன்றியமையாததாகிறது. நமது கமலாபாய் அவர்கள் தமது குடும்ப ரகசியங்களின் பிரபாவத்தை யறியாமல் வெளியிட்டுக் கொள்ளப்போய்த் தான் இவ்வளவு தொல்லைகளையும் அநுபவிக்கலானார்கள். அவரைப் பார்த்த பிறகேனும் மற்றவர்கள் புத்தி கற்றுக்கொண்டு தத்தம் இரகசியங்களைப் பேணி க்ஷேமமடையவேண்டுமென்று கோருகிறேன் என்று ஜகத்குரு தமது பிரசங்கத்தை முடிவு படுத்தினார்.

கடைசியாக சாருதத்தமகாராஜா அவர்கள் எழுந்து தமது குடிகளைப் பார்த்து தமக்கியற்கையான சாமர்த்தியத்தோடும், அர்த்த புஷ்டியான பதப் பிரயோகத்தோடும் பேசினார். பலபத்திரனுடைய விஷம் பொருந்திய அபிப்பிராயங்களுக்காக வெகுவாய் வருத்தமடைந்தார். தன்னுடைய நிலைமையை யுணராதவனும், அநுபவமும் நிதானமுமில்லாதவனும் ஆன ஒருவன்—தன் நிலைமையை யுணர்ந்ததுபோலவும் அநுபவமும் நிதானமுமுள்ளவன் போலவும் தன்னைப் பாவித்துக்கொண்டால் எத்தகைய தவறுதல்களெல்லாம் செய்ய அஞ்சமாட்டானோ அதற்கு ஒரு திருஷ்டாந்தமாக பலபத்திரனின் காரியங்களைக் குறிப்பிடலாமென்றார். பின்னும் பலபத்திரன் தனது செய்கைகளால் தனக்கும் ஆழ்ந்த யோசனைக்கும் வெகு தூரமென்பதைக் காட்டிக்கொண்டா



னென்றார். பலபத்திரன் கனகதாராவின்மீது கற்பு விரோதமான குற்றஞ் சாட்டியகாலை, இவ்விதமான துரபிப்பிராயம்கொண்டு பிதற்றுபவனோடு வாதிப்பது சுத்த வீண் என்று தாம் மௌனமாயிருந்ததாகச் சொன்னார் அப்படி அவன் கருதியதானது அவனுடைய குற்றங்காணும் தன்மையைக் குறிக்கிறதே யொழிய உண்மையைக் குறிக்கவில்லை யென்றார். பலபத்திரனால் ஜனங்கள் எவ்வளவோ தூரம் கலைக்கப்பட்டாலும் ஜனங்களுடைய பற்றும் விசுவாசமும் எப்போதும் குறைந்ததல்ல; ஆனால் சிலர் அவ்விதமாகக் குறைந்து விட்டதாகக் கருதியிருக்கிறார்கள்; வேண்டும் வேண்டாதவற்றைப் பகுத்தறிந்து, படித்த ஜனங்கள் சில அமிசங்களில் அதிருப்திகொண்டு அவ்வதிருப்தியை நீக்கவேண்டிய வழிகாட்டியிருக்கிறார்களே தவிர மற்றபடி ஜனப்பற்று குறைந்து விட்டதாக எண்ணக்கூடாது; அப்படிப் படித்தறிந்த ஜனங்கள் அதிருப்திமேலிட்டு இராஜ்ய க்ஷேமத்துக்கு உதவியாகக் காட்டியிருக்கும் வழிகளை நாம் இயன்றளவேனும் அங்கீகரித்துச் செல்லவேண்டுமே தவிர அதை வைத்துக்கொண்டு தர்க்கஞ்செய்வது நீதிப்புலனுமாகாது இராஜ தந்திரமுமாகாது என்றார். ஒவ்வொருவனும் நியாய வரம்பை மீறாமல் தன்னுடைய நிலைமையை விர்த்திசெய்வதில் இடையூறு செய்யக்கூடாதென்பது தன்னுடைய மூலாதாரமான கொள்கை என்றார். கருவிகளின் பலத்தால் பிரஜைகளையடக்கி யாள்வதைவிட அநுதாபத்தால் அரவணைத்துப் பரிபாலிப்பது தன்னுடைய கொள்கை யென்றும், இக்கொள்கை பலபத்திரனுடைய போதனையில் படவில்லை யாதலால் ஜனங்கள் வீணாக வருந்தும்படி நேரிட்டதென்றும் கூறினார். „பலபத்திரனுடைய மூட அபிப்பிராயங்களை விரிவாகக் கண்டிக்க வேண்டிய அவசியமில்லை யானாலும், அவன் தனக்கு வேண்டியவர்களான சில குடிகளைத் திருப்திசெய்து மற்றக் குடிகளைப் புறக்கணித்து, அதனால் இவ்விருதிறத்தாரையும் சாஸ்வதமாய்ப் பகைக்கும்படியாகச் செய்துவிடலாமென்று நினைத்த எண்ணம் மட்டும் வீண் பகற்கனவாகும் என்றார். அரசருடைய உபந்நியாசம் மிகவும் விரிவா யிருந்ததால் இங்கு சுருக்கி ரஸமான அபிப்பிராயங்களை மட்டுமே தெரிவிக்கலானோம்.

அதற்கப்பால் கனகதாரா மஹாராணியார் எழுந்து மகா ஜனங்களே! இந்நாட்டுக்கு அதன் சொந்த அரசர் வந்துவிட்டார். இனி உங்களின் காலம் சுகமாகவே கழியும். பிரஜைகளின் வாக்கே தெய்வத்தின் வாக்கு என்பதாக லத்தீன் பழமொழி யிருக்கிறது. பிரஜைகளின் சொல்தான் முடிவான சொல். அவர்களின் அபிப்பிராயமே முடிவான அபிப்பிராயம். அவர்களுடைய எண்ணத்தை எதிர்க்க யாரால் முடியும்? எத்தனை பலங்கொண்ட அரசாக்ஷியாக இருந்தாலும் அது பிரஜைகளின் கருத்துக்கு அடங்கத்தான் வேண்டும். உங்களுடைய சக்தியையும் பிரபாவத்தையும் நாங்கள் நன்குணர்ந்திருப்பதால் உங்களுக்கு அவ்வாறான சக்திகள் இன்னும் விர்த்தியடையும்படியான வழியில் இராஜாங்க யந்திரத்தைத் திருப்பி நடத்திக்கொண்டு போக நிச்சயித்திருக்கிறோம். இனி நமது நாடு உயர்ந்த நிலைமையி லிருக்கும். தருமமும் தவமும் தழைத்தோங்கும். மனநிச்சிந்தையுடன் கட.

வினைத் தொழிலாம். கைத்தொழிலை உங்கள் இஷ்டப்படி விருத்தி செய்வோம். அனாவசியமான வரிகளை யெடுத்துவிடுவோம். ஆவசியகமான கட்டாயப்படிப்பு முதலியவைகளை நமது பிள்ளைகளுக்கு நாட்டின் செலவில் சொல்லிக்கொடுப்போம். எண்ணிறந்த ஏழைகளுக்கு ஏராளமான பிழைப்புக்கு வழியுண்டாக்குவோம். ஐக்கியத்தைப் பலப்படுத்துவோம். வியாபாரம் விருத்தியாகும். உலகத்தில் நமது நாட்டின் பெயர் ஒரு மரியாதை பெறும் பெயராயிருக்கும். நாடெங்கும் சந்தோஷமும், உத்ஸாஹமும் ஜனங்கள் முகத்தில் உல்லாஸமாய்ப் பிரகாசிக்கும். ஜனங்கள் மனத்திருப்தியுடன் சுகமாக வாழ்வார்கள். மஹா தேஜஸ்விகளாய் விளங்குவார்கள். உங்கள் வேதபுரி முன்போல பூலோகஸ்வர்க்கமாய் ஒளிவீசும்.

இந்த நாடானது நீர்வளம் நிலவளம் முதலியவைகள் நிரம்பியுள்ளது. பழைய நாளைய புஸ்தகங்களைப் பார்த்தால் முதலில் நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு என்ற இரண்டு அத்தியாயங்கள் தனியாக இருக்கின்றன. நமது வேதபுரி முன்னாட்களில் எப்படி கல்விப் பொருளிலும் செல்வப் பொருளிலும் குறைவில்லாதவர்க்கு உறைவிடமாய் இருந்தது என்பதை அதனால் அறியலாம். ஜனங்கள் எவ்வளவு நாகரிகம் அடைந்திருந்தார்கள்; என்னென்ன போகங்களை அனுபவித்து வந்தார்கள்; என்னென்ன யோக வித்தியை யடைந்தார்கள்; என்னென்ன ரமணீயமான திவ்ய ஆச்ரமங்களிருந்தன; எத்தனை தவ முனிவர்கள் திவ்ய தபோ மஹிமையுடன் விளங்கினர். புஜபல பராக்கிரமமுள்ள அரசன் எப்படி யெப்படி பிரஜைகளைப் பரிபாலித்து வந்தான்; எப்படி யெப்படி தர்மிஷ்டனாய் இருந்தான்; என்ற இன்னும் பல அரிய பெரிய விஷயங்களை நாம் தெரிந்துக்கொள்ளத் அன்று அமிர்தமயமான ஞானத்தை புராதன நூல்கள் நமக்கு ஊட்டுகின்றன. நீங்கள் ஜாதி மதவேற்றுமைகளைப் பொது நலத்தில் காட்டாமல் ஒன்று சேர்ந்து ஒரே மனதாய் ஊக்கத்துடன் வேலை செய்யுங்கள். எப்போதும் இராஜ விஸ்வாசிகளாய் அரசாங்கத்திற்கு அடங்கிய குடி ஜனங்களாக இருங்கள். அப்போது ஸர்வமங்களங்களும் உங்களுக்கு சித்திக்கும் என்றார். சற்று நேரத்திற்கெல்லாம் விசேஷ ஆரவாரத்துடன் சபையும் கலைந்தது.

## அத்தியாயம். 21.

ராம்மோகனனும் வஸந்தமாலாவும் அத்தியந்த காதலுடன் வெகு உல்லாஸத்தோடு விவாக தினத்தை எதிர்பார்த்து நின்றனர். அமரஸிம்ஹரைத் தேடிக்கொண்டு சப்த சிந்துவத்திற்குப் புறப்பட்ட ஆர்ய குமாரனை மத்திய மார்க்கத்தில் சந்தித்துத் தன்வயப்படுத்தி அமரஸிம்ஹர்தான் சந்திரபோஸ் என்றும் அவரைக் கைதுசெய்து வேதபுரிக்குக் கொண்டுபோயிருப்பதாகவும் அவனுக்குச் சொல்லி, அவன் துணையுடன் வேதபுரி வந்து தன்னை விடுவித்த பிரகாஸ லக்ஷ்மியை அமரஸிம்ஹர் மிகவும் புகழ்ந்துகொண்டாடினர்.



சப்த சிந்துவத்தில் அமரஸிம்ஹரைக் கைதுசெய்துவரப் புரிந்தவன் பலபத்திரனாவன். தான் கனகதாராவின் மீது கொலைக் குற்றஞ்சாட்டி நிரூபிப்பதற்கு அமரஸிம்ஹர் ஒரு பெருந்தடையாவார் என்று அவரைச் சிறைப்படுத்தலாயினன். தொண்டிபோஸ் தனது புத்திரியையும் புத்திரனையும் ஒரு கிழவியிடம் ஒப்புவித்ததாக முன் சொல்லப்பட்டதல்லவா? பிறகு அந்தக் கிழவி பெண் குழந்தையான பிரகாஸலக்ஷ்மியை அமரஸிம்ஹரிடம் ஒப்புவித்ததும், ஆண் குழந்தையான ராம்மோகனனை அரண்மனை உத்தியோகஸ்தரிடம் ஒப்புவித்ததும் வாசகர்களுக்குத் தெரிந்த விஷயமே. அக்கிழவி விர்த்தாப்பியம் முற்றி மரணப்படுக்கையிற் பலநாளிருந்து பிறகு கடவுளின் அருளால் உயிர்பெற்றெழுந்தாள். பிறகு, தான் ராம்மோகனனை ஒப்புவித்த உத்தியோகஸ்தர் வீட்டுக்குவந்து ராம்மோகனனை விசாரிக்க, அவர் மஹாராணியிடம் அவன் இருப்பதாகத் தெரிவிக்க, பிறகு மஹாராணியைக் கண்டுகொண்டாள். கனகதாராவும் கிழவியை வெகுவாக அபிமானித்துத் தன்னிடம் வைத்துக்கொண்டாள். ராம்மோகனனும் தனது போஷக மாதாவை வெகுவாக நேசித்துவந்தான். ஆனால் கிழவி வெகு புத்திசாலியாதலின் வந்த வாரத்திற்குள்தானே பலபத்திரனின் வஞ்சனைக்திகளை எல்லாம் அறிந்துகொண்டாள். அது முதற்கொண்டு உள்ளுக்கு கனகதாராவின் அந்தரங்க சேவகியாயும் வெளிக்குப் பரமசத்துருவாகவும் தோன்ற வைத்துக்கொண்டு பலபத்திரனுடன் சேர்ந்துகொண்டாள். பலபத்திரனும் இவளிடத்து நம்பிக்கை வைக்கலானன். இவ்வித சூழ்ச்சியால் பலபத்திரனின் அந்தரங்கங்களையெல்லாம் கனகதாராவுக்குத் தெரிவித்து வந்தாள். பலபத்திரனுடைய நிலமாளிகையின் அமைப்பும் அதில் பூமியுடன் புதைக்கப்பட்டுள்ள இரும்புப் பெட்டியின் செய்தியும் கனகதாராவுக்குத் தெரிவித்தவளும் நமது கிழவியே யாவாள். பின்னர் பிரகாஸலக்ஷ்மிக்குக் காவற்காரியாக இருந்து அவளையும் சிறைமீட்டினவளும் இக்கிழவிதான். தான் எடுத்து வளர்த்த பிரகாஸலக்ஷ்மிக்கு, தானே காவற்காரி யானதால் அவளுக்கு வெகு சந்தோஷம். கடைசியில் பிரகாஸலக்ஷ்மியுடன் சென்று அமரஸிம்ஹர் அடைபட்டிருக்குமிடம் தெரிவித்து இராஜ மோதிரத்தின் சகாயத்தால் சிறையினின்றும் விடுவித்ததும் நமது கிழவியே தான். இவ்வாறாக அவள் பெரிதும் இச்சரித்திரத்தில் சம்பந்தப்பட்டிருந்தபடியால் அவளுக்கு மகாராணியினும் உயர்ந்த ஸ்தானம் உதவப்பட்டு நமது கதா புருஷர்கள் ஸ்திரீகள் அனைவரும் அவளை ஆதரவுடன் நேசிக்கலாயினர்.

கனகதாராவுக்கும் சாருதத்தருக்கும் முன்பு அமரஸிம்ஹரால் விவாகம் நடத்திவைக்கப் பட்டபோது விவாகப் பத்திரமொன்றும் தயார்செய்யப்பட்டு அதில் ஸதிபதிகளின் கையொப்பமும் ஜெகத்குரு, அமரஸிம்ஹர் இவர்களுடைய கையொப்பமும் ஆனதாக இக்கதா ஆரம்பத்திலே பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. ஹிந்துக்களுடைய விவாகம் பந்துக்கள் முன்னிலையிலும் தேவர்கள் முன்னிலையிலும் அவர்களை சாக்ஷியங்களாகக் கொண்டு நடத்துவிப்பது வழக்கமாக இருக்க, இந்த விவாகம் மட்டும் அதைத் தழுவாமல் விவா

கப் பத்திர முதலிய நவீனங்களைப் பின்பற்றிச் சென்றிருப்பதேன் என்பது கேள்வி. அதற்குக் காரணங்களும் இல்லாமற் போகவில்லை. சாருதத்தனே ஒரு இராஜபுத்திரன். கனகதாராவும் ஒரு இராஜவம்ஸ கன்னிகை. காலபேதத்தாலும் சத்துருக்களுக்கு அஞ்சியும் உருமாறி, கேவலம் கானக வாசிகள் போன்று கிராம வாழ்வில் இருந்துவந்த சமயம் அது. அத்தகைய காலத்தில் இவ்விவாகம் கட்டாயமாய் நடத்துவிக்கவேண்டிய ஆவசியகம் ஏற்பட்டதின் விவரங்கள் நமது வாசகர்களுக்கு நன்கு தெரியும். பிற்காலத்தில் இந்த விவாகத்தின் பயனால் சந்ததியுண்டானால் அதனை ஜனங்கள் யாவரும் ஒப்புக்கொண்டு அச்சந்ததியை இராஜ்ய பட்டத்திற்குரியதாக அங்கீகரிக்கவேண்டிய பிராதான்யத்துவமும் ஒன்றிருக்கிறது. அதற்கு விவாகம் நடந்தது உண்மையே என்பதை நிரூபிக்க அத்தாக்ஷிப் பத்திரம் ஒன்று இருந்தால் அது பிற்காலத்துக்கு நலஞ்செய்வதாக இருக்கும். இந்த நோக்கங்களுடனே தான் விவாகப் பத்திரம் அமரஸிம்ஹராலும் ஜகத்குருவாலும் தயாரிக்கப்பட்டதேயன்றி மற்றபடி வேறெவ்வித நாகரீக உத்தேசங்களைக்கொண்டுமன்று.

கடைசியாக, சந்தோஷ ஆரவாரத்தினிடையே நாட்களும் போவது தெரியாமலிருந்தது. முகூர்த்த நாளும் வந்தன. வஸந்தமாலாவுக்கும் ராம்மோகனனுக்கும், பிரகாஸலக்ஷ்மிக்கும் ஆரியகுமாரனுக்கும் விவாகம் வெகு வைபவமாக நடந்தேறிற்று. ஜகத்குரு அவர்கள் ஸகலத்தையும் நிறைவேற்றி வைத்துப் பின்பு அனைவரிடத்தும் விடைபெற்று அவர்களால் செய்யப்பெற்ற வந்தனை வழிபாடுகளுடனும் தமது ஆச்ரமத்திற்கு எழுந்தருளினார்கள். இப்போது நவத்வீபம் ஜமீனுக்கு ராம்மோகனனும் வஸந்தமாலாவும் அதிபதியாயினர். ஆரியகுமாரனும் பிரகாஸலக்ஷ்மியும் தேவேந்திர நாராயணரின் ஐஸ்வரியங்களை யநுபவித்துக் கொண்டு இன்புடன் வாழ்ந்தனர். அமரஸிம்ஹர், கமலாபாய், கொண்டிபோஸ், தேவேந்திர நாராயணர் இவர்களனைவரும் துறவறத்தைத் தழுவி சப்தஸிந்துவத்தில் ஞானமார்க்கத்திலே அவர்களின் காலம் கழிகின்றனர். சாருதத்தமஹாராஜாவின் பிதாவான இந்திரதேவமன்னர் இமயகிரிச்சாரலில் தவம்புரிந்துகொண்டிருந்தாராதலின், அவருக்கு இச்செய்திகளெல்லாம் எட்டி ஒரு முறை தமது தேசத்திற்குத் திரும்பிவந்து தமது புத்திரனையும் மருகியையும் மற்றுமுள்ளவர்களையும் ஆசீர்வதித்துவிட்டு மீண்டும் இமயபர்வதச் சாரலுக்கே சென்றுவிட்டனர். சாருதத்தமஹாராஜாவும் கனகதாராவும் முன்னிலும் அத்தியந்த அந்நியோன்னியத்துடன் புத்திரபாக்கியத்தையும் அடைந்து தங்கள் நாட்டைப் பரிபாலனம் செய்துகொண்டு சிறந்து விளங்கலாயினர்.

சுபம்.

கமலாபாய் முற்றிற்று.

## ஒன்று கூடினவர்களே ஒருவருக்கொருவர் எதிர்த்துக் கொண்டு பிறனுக்கு வெட்டிய படுகுழியில் தாங்களே வீழ்ந்த விநோதம்.

### கதாசாரம்.

*"பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா*
*பிற்பகற் றாமே வரும்."*

### அத்தியாயம். 1.

"அப்படியானால் ராகவலு நாயுடுதான் குற்றவாளி என்று தீர்மானித்து விட்டீர்களா?"

"ஏன் அவ்விதம் கேட்கின்றீர்கள்? ராகவலுவே கொலை செய்தானென்பதற்கு கொலையுண்டவனின் மரண வாக்குமூலம் ஒன்று போதுமே. அன்றியும் அதே காலத்தில் குத்துண்டவனின் சாக்ஷியமும் வேறே இருக்கையில் இதில் ஸம்சயம் என்ன?"

"சரி; கேஸினுடைய போக்கு எப்படி?"

"1903-ம் வருஷத்தில் வெங்கடரத்தினம் என்ற அமீனா ஒரு சம்மனைக் கொடுத்துவிட்டு வருவதற்காக சேலம் டவுனிலிருந்து சூரமங்கலத்துக்குப் போய்க்கொண்டிருக்கையில் திடீரென்று துப்பாக்கியினால் சுடப்பட்டுப் போனான். அதே சமயத்தில் சேலம் ரயில்வே ஸ்டேஷனில் இருந்து எதிர்முகமாய் சூரமங்கலம் வழியில் வந்துகொண்டிருந்த இன்னொருவன் துப்பாக்கியால் அமீனா சுடப்படுவதைக் கண்டுகொண்டான். உடனே அவனைப் பிடிக்க ஓடினான். அவனோ கத்தியால் குத்திக் கீழே வீழ்த்திவிட்டு ஓட்டமெடுத்தான்."

"என்ன இது? கேஸ் ஒன்றும் பொருத்தமாயில்லையே? கையிலே துப்பாக்கியை வைத்துக்கொண்டு ஒருவனைச் சுட்டவன், அதே நிமிஷத்தில் இன்னொருவனைக் கத்தியால் குத்தினான் என்றால் இது எப்படிப் பொருந்தும்? எப்போது துப்பாக்கியைக்கொண்டு ஒருவனைச் சுட்டுவிடத் துணிகரம் கொண்டானோ அப்போது அவன் தன்முன் எதிர்ப்படுவோனை யெல்

லாம் துப்பாக்கிக்கு இரை யாக்குவானே தவிர, கத்தியால் குத்த அவனுக்குப் புத்திபோகாதே. மேலும், கையில் மேன்மையான துப்பாக்கியிருக்கும்போது அற்பமான கத்தியை எடுப்பதெதற்கு ?"

"தாங்கள் கேஸையே மாற்றிவிடப் பார்க்கிறீர்கள்; சங்கதி அப்படியல்ல. அமீனாவைச் சுட்டுக்கொன்றவுடன் துப்பாக்கியை அங்கு எறிந்துவிட்டு ஓடி மறைந்துவிடக் குற்றவாளி முயன்றிருக்கவேண்டும். அப்படி எறிந்து ஓடி வருகையில் இன்னொருவன் எதிர்ப்பட, அவனைத் தன்னிடமிருந்த கத்தியால் குத்தித் தள்ளிவிட்டுத் தப்பித்துக்கொண்டு சென்றிருக்கவேண்டும்."

"அவ்வாறானால், துப்பாக்கி அந்த இடத்திலேலே விழுந்துகிடந்ததா ?"

"இல்லை நாங்கள் அங்கு பல இடத்தில் தேடியும் அதைக் காணோம்."

"அங்கே சுடப்பட்டவனிடம் மரணவாக்குமூலம் வாங்கியது யார் ?"

"அந்த மார்க்கத்தில் அப்போது வந்துகொண்டிருந்த முனிஸிபல் இன்ஸ்பெக்டர் உடனே சுடப்பட்டவனிடமிருந்து மரண வாக்குமூலம் வாங்கினார். கத்தியால் குத்துண்டவனுடைய சாக்ஷியமும் அதில் பதிவுசெய்துகொள்ளப்பட்டது. இது நடந்த சில நிமிஷங்களுக்கெல்லாம் நான் அவ்வழியே வந்தவன் இந்தக் காக்ஷியைக் காணும்படி நேரிட்டது. ஆனால் அதற்கு முன்னதாகவே வெங்கடரத்தினம் இறந்துபோனான்."

"மரண வாக்குமூலத்தில் சுடப்பட்டவன் என்ன சொல்லியிருக்கிறான் ?"

"முதலில் தன்னை ராகவலு சுட்டுவிட்டு ஓடியதாயும், பிறகு அவனைப் பிடிக்கவந்த தன் தம்பியையும் குத்திவிட்டு ஓட்டமெடுத்ததாகவும் சொல்லியிருக்கிறான். ஆனால் மரண வாக்குமூலத்தில் கையெழுத்து செய்யப்படுவதற்குமுன் இறந்துபோனான். இறந்த அதே நிமிஷம் நான் அங்கு வந்துசேர அப்போதுதான் மரண வாக்குமூலத்தின் கடைசி வரியும் எழுதப்பட்டு முடிந்தது."

"அப்படியானால் குத்துண்டவன் தம்பியா? சுடப்பட்டவன் அவனுடைய சொந்த அண்ணனா ?"

"ஆம்; இருவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள். குத்துண்ட ராமமூர்த்தி நாயுடு செவ்வாப்பேட்டையில் ஒரு மிராசுதார். சுடப்பட்டவன் சேலம் ஸப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஒரு அமீனா."

"நீங்கள் அவ்விடத்திற்கு எதன் மீதேறி வந்தீர்கள் ?"

"சைகிலில் வந்தேன்."

"மரண வாக்குமூலத்தில் சாக்ஷியம் யாராவது போட்டிருக்கிறார்களா ?"

"ஆஹா! 20-ஆயிரம் ரூபாய்க்கு ஸ்திதியுள்ள ஆராவமுது ஐயங்கார் போட்டிருக்கிறார்?

"அவர் அந்த இடத்துக்கு அந்த நேரத்தில் எப்படி வந்தார் ?"



"சுடப்பட்ட இடத்திற்கு சற்றுத் தூரத்தில் தான் அவருடைய வயலும் தோட்டமும் இருக்கிறது."

"குற்றவாளி ஓடியதை அவரும் பார்த்தாரா ?"

"இல்லை, துப்பாக்கி சப்தத்தையும் கூச்சலையும் கேட்டுத் தமது தோட்டத்திலிருந்து வெளியே வந்தார்."

"ஒரு சமயம் இந்த ஆராவமுது ஐயங்காரே தமது தோட்டத்திலிருந்து சுட்டுக் கொன்றிருப்பாரோ ?"

"தாங்கள் எப்போதும் இப்படித்தான் கேஸைக் கோணல் வழியாகவே கொண்டுபோகிறீர்கள். ஆராவமுது ஐயங்காருக்கு அமுது உண்ணத் தெரியுமே தவிர, இந்த சங்கதிகளிலெல்லாம் அவர் பழகியவரல்ல. அவர் பழைய நாள் மனுஷர்; கள்ளங் கபடு அறியாதவர்."

"சரி, எந்தப் பக்கம் சுடப்பட்டது ?"

"முதுகு பக்கத்தில்"

"குத்துண்டவனுக்கு எவ்விடத்தில் காயம் ?"

"இடது முழங்கையில் பலமான காயம்; ஆனாலும் அவன் பிழைத்துக் கொண்டான்."

"இந்த சம்பவத்தின்போது மணி என்ன இருக்கும் ?"

"அப்போதுதான் சூரியோதயமான நேரம், மணி 7 இருக்கலாம்."

"நல்லது; நானோ கள்ளிக்கோட்டையிலிருந்து கல்கத்தாவுக்கு ரயிலில் போய்க்கொண்டிருந்தவன். சேலம் ஸ்டேஷனில் தாங்கள் என்னை வற்புறுத்தி இறக்கிவிட்டீர்கள். கேஸையும் அறிந்துகொண்டேன். இனி நான் கல்கத்தாவுக்குப் போக விடைகொடுங்கள்."

"என்ன—கல்கத்தாவுக்கா—தாங்களா—போகிறீர்களா? நான் இவ்வளவு தூரம் கேஸை எல்லாம் விவரித்தது எதற்கு? நீங்கள் தயவுசெய்து இப்போது தலைமறைந்திருக்கிற உண்மைக் குற்றவாளியான ராகவலு நாயுடுவைக் கண்டுபிடித்துக் கொடுத்துவிட்டால் போதுமானது. அதற்காகவே தங்களை ரயிலைவிட்டு இறங்கும்படி சொன்னேன்."

"நானோ ஒரு அவசரமாய்க் கல்கத்தாவுக்குப் போகிறேன். வாரத்தில் மறுபடியும் சந்திக்கிறேன். நான் இங்கு வந்ததையாவது, இனி வரப்போவதையாவது, நான் இன்னானென்பதையாவது, என்னுடன் தாங்கள் பேசியதாகவாவது வெளியில் பிரஸ்தாபித்துக்கொள்ளக்கூடாது."

"இல்லை. நீங்கள் அடுத்த வாரத்தில் வந்து விடுவீர்களா ?"

"ஏன்,—அதற்கு முன்னதாகவே"

என்று ஸஞ்சீவபாபு சொல்ல, போலீஸ் இனிஸ்பெக்டரும் அன்போடு விடை கொடுத்தார். அன்றிரவு மெயிலிலேயே சஞ்சீவபாபு கல்கத்தாவுக்கு பிரயாணமாகிச் சென்றார். அவர் தமது வீட்டிற்குப் போனதும் அவருடைய தர்மபத்தினியான பரிமளா சில விசேஷங்களைத் தெரிவித்தாள். அதைக்

கேட்டதும் ஸஞ்சீவபாபு வெகு சுறுசுறுப்புடன் மேல்மாடிக்குச் செல்லவும் அங்கிருந்த ஒருவன் "எஜமானே எனக்குத் தாங்கள் தான் கதி" என்று அவர் காலில் வீழ்ந்தான். அவனைப் பார்த்து ஸஞ்சீவபாபு "உம்முடைய ஸ்வபாவங்களை என்னுடைய இளமை முதற்கொண்டு நான் அறிந்தவன். நீர் எதற்கும் பயப்படவேண்டாம் என்று தைரியப்படுத்தினார்."

## அத்தியாயம். 2.

ஆராவமுதய்யங்காரின் ஆரவாரம் உங்களுக்கெல்லாம் தெரிந்தது தானே. அவர் வெங்கடேச கிருஷ்ணன் கோயிலில் முதல் அர்ச்சகர். கோயிலுக்கு வருகிறவர்களால் அவருக்கு நல்ல வருமானம் ஏற்பட்டிருந்தது. "வண்ணமாடங்கள்" சொல்லிக்கொண்டே வாழப்பழத்தையும் தேங்காயையும் சரிப்படுத்துவார். சக்கரைப்பொங்கல், புளியோதரைப் பொங்கல் எத்தனை நாட்பட்டதாயினும் விற்று விடுவதில் நிரம்பவும் சாமர்த்தியவான். விசேஷித்த உற்சவங்களின்போது வீட்டி விருந்துகூடப் பொங்கல் தயார் செய்யப்பட்டு வந்து கோயிற் பொங்கலுடன் கலக்கப்படுமானதால் அன்று ஐயங்காரின்பாடு வெகு கொண்டாட்டம். கோயில் தீபங்களில் ஊற்றப்படுகிற நெய்யையெல்லாம் பொங்கல்மீது தடவி நெய்ப் பொங்கல் போல் காட்டி விடுவார். திரைபோட்டிருந்தாலும் காசுமட்டும் பலமாகக் கொடுத்துவிட்டால், திரையை அப்படியே தூக்கிக் காட்டியும் ஸ்வாமி தரிசனம் பண்ணும்படி செய்விப்பார். திரையை எடுக்கலாகாதே யன்றி தூக்கிக் காட்டினால் பாதகமில்லை யென்பது அவருடைய மாமூல் சித்தாந்தம். கொஞ்சம் பணப்புஷ்டியுள்ள வாலிபர்களா யிருந்து ஸ்வாமி தரிசனம் செய்ய வந்தால், அவர்களுக்கு வேறு தரிசனமும் செய்துவைத்து அவர்களுடைய யௌவன விசேஷத்திற்குத் தகுந்தபடி மரியாதை உபசாரங்களும் நடத்திக் கொடுப்பார். இதிலே இரண்டிடத்திலும் இவருக்கு நல்ல வருமானம்! இப்படியாக இவருக்கு வெகு சொற்ப காலத்தில் தானே இருபதாயிரம் ரூபாய் போலச் சேர்ந்துவிட்டது. ஆயினும் அவருக்கு தன் காலத்திற்குள் தானே ஒரு லக்ஷம் ரூபாயாவது சேர்த்துவைத்துவிட வேண்டுமென்பது உத்தேசம். அவருடைய தமயனுக்கு நியாய மார்க்கத்தில் ஆர்ஜித்த சொத்தின் மதிப்பு ஒரு முப்பதினாயிரத்துக்குச் சொல்லலாம். அவருக்கு வெகுநாள் புத்திரபாக்கியம் இல்லாதிருந்து சமீபத்தில் தான் உண்டாயிற்று. அந்தக் குழந்தை பிறவாதிருந்தால் தமயனார் சொத்துகூட இவருக்குதான் சொந்தமாயிருக்கவேண்டும். இந்த விஷயத்தில் நமது ஐயங்காரவர்கள் கொஞ்சம் துரதிஷ்டசாலி யென்று ஒப்புக்கொள்ளவேண்டும். நாம் ஒப்புக்கொள்வதென்ன,—அவரே மனப்பூர்வகமாய் ஒப்புக்கொள்வார். நமது ஐயங்கார் ஸ்வாமிகள் தாமிருக்கும் கோயிலைச் சேர்ந்த ஒவ்வொரு தாஸிகளுடையவும் அன்பராய் இருந்தாராதலின் அவர் கொஞ்சம் அதிக செலவாளியாகத்தான் விளங்கினார். அதற்காகச் செட்டிகளிடம் ஆயிரம் இரண்டாயிரமாகக் கடன் வாங்கிவந்தார். கடன்வாங்கும்போதே அதைத் திருப்பிக்கொடாம லிருப்பதற்கான யோசனைகளுடன்தான் வாங்குவார். அவர் ஒரு ஆசார்ய புருஷராகவும் விளங்கினாராதலால் தனவந்தர்களான பல சிஷ்யவர்க்கங்கள் அவருக்கு இருந்தார்கள். அவர்களில் யாராவது உடன் கையெழுத்து போட, நமது ஸ்வாமிகள் கை நிரம்பப்பெற்று வருவார். பிறகு அந்தத் தொகைக்காக உடன் கையெழுத்துப் போட்டவர்களுக்குத்தான் வாரண்டு வருமேயன்றி ஸ்வாமிகளுக்கு வராது. ஏனெனில் ஒரு ஊசி முதற்கொண்டு ஸகலமும் தமது தர்மபத்தினி குமுதவல்லியம்மாள் பேருக்கு எழுதி வைத்திருந்தார். ஆகவே, அவரிடம் செட்டிகள் தங்களின் அதிகாரத்தைச் செலுத்த முடியாது. இந்த விஷயத்தை செட்டிகள் கடன் கொடுக்கும்போதும் அறிவார்களாதலால், உடன் கையெழுத்துப் போடுகிற மனுஷ்யனுடைய ஸ்திதியை மட்டுமே முக்கியமாகக் கவனித்துக்கொண்டு கடன் கொடுப்பார்கள். வேறு உதவி ஒன்றும் வேண்டாம்—கொஞ்சம் கையெழுத்து போட்டால் போதுமென்பார். உடன் கையெழுத்து போடும்படி எப்படிப்பட்டவர்களையும் மயக்கிவிடுவதில் நமது ஸ்வாமிகள் மிகவும் ஸமர்த்தர். சக்கரைப் பொங்கல், சேர்வை பொங்கல், நெய் சொட்டச் சொட்ட சுடச்சுடக் கொடுப்பார். இப்படியே கோயிலில் செய்யப்படுகிற வடை, அதிரஸம், தோசை, எல்லாம் உடன் கையெழுத்து இனிமேல் போடப்போகிற மனிதனுடைய வீடுதேடிப்போகும். ஸ்வாமிகளே நேரில் சென்றும் கொடுப்பார். எவ்வளவு ஜனத்திரளாயிருந்தபோதிலும் அத்தனைபேரையும் கோயில் பரிசாரகர்களைக்கொண்டு விலக்கி, அவர்களை ஸ்வாமியினருகே கொண்டு வந்து தரிசனம் செய்துவைப்பார். அவர்களுக்காகவே கொஞ்சநேரம் ஸ்வாமியை நிறுத்துவார். பிரஸாதம், சடகோபம் முதலிய மரியாதைகளெல்லாம் வெகு திவ்யமாக நடக்கும். இந்த வைபவமான மரியாதைகளிலே எப்படிப்பட்டவர்களும் மயங்கி விடுவாராதலால், நமது ஐயங்காரவர்களுக்கு உடன் கையெழுத்துப்போட "நீ இல்லாவிட்டால் இன்னொருவன்" என்றபடி வேண்டியபேர்கள் கிடைப்பார்கள்.



இப்படியே நமது ஐயங்கார் ஸ்வாமிகளின் சக்கரைப்பொங்கல் தோசைகளிலே மயக்குண்டு சேலம் செவ்வாய்ப்பேட்டை மிராசுதார் ராமமூர்த்தி நாயுடுவும் ஐயாயிரம் ரூபாய்க்கு உடன் கையெழுத்துப்போட்டு விட்டார். வருஷம் இரண்டாகியும் பணம் செலுத்தாததால் செட்டிகள் தமது மாமூல்போல ராமமூர்த்தி நாயுடுவுக்கு வாரண்டனுப்பினார்கள். அந்தச் சமயத்தில் கோர்ட்டில் வேறெவருமில்லாததால் வெங்கடரத்தினம் என்ற அமீனாவே அந்த வாரண்டை எடுத்துக்கொண்டு போகும்படி நேர்ந்தது. வெங்கடரத்தின நாயுடு ராமமூர்த்தியின் உடன் பிறந்த தமயனார் என்று செட்டிகளுக்குத் தெரியுமாதலால், அவர் எங்கே வாரண்டை சரியாய் நிறைவேற்றாமல், வாரண்டு பிறந்திருப்பதைத் தமது தம்பிக்குத்தெரிவித்து மறைந்துகொள்ளும்படி தப்பவிட்டு விடுகிறாரோவென்று செட்டியின் தலைமைக் கணக்குப்பிள்ளையும் அவருடன்

கூட வந்தார். ஆகவே அமீனா வெங்கடரத்தின நாயுடு தம்முடைய தம்பியையே வாரண்டில் பிடிக்கவேண்டியவரானார். தவறினாலோ தமது உத்தியோகமும் போவதன்றி சிக்ஷையும் கிடைக்கும். ஆனதால் வேறொன்றும் தோன்றாதவராய் கணக்குப் பிள்ளையுடன் தமது தம்பியின் வீட்டுக்குவந்தார். அப்போதுதான் ராமமூர்த்தி நாயுடு தன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தபடியால் உடனே செட்டியின் கணக்குப்பிள்ளை அவரை நிறுத்தி அமீனாமூலமாக வாரண்டில் பிடிப்பித்துவிட்டார். கோர்ட்டில் விசாரணையும் ஆயிற்று. நீ சிறைக்குப்போகிறாயா, கடனைச் செலுத்துகிறாயா என்று கேட்கப்பட்டபோது, தான் அச்சமயம் ஆயிரம் ரூபாய் செலுத்திவிடுவதாகவும் பாக்கியை வாரத்தவணையில் கொடுத்து விடுவதாகவும் சொல்லிக்கொள்ளவே, செட்டியும் அதற்கு ஒப்பி ஆயிரம் ரூபாயைப் பெற்றுக்கொள்ள, இராமமூர்த்தி நாயுடுவும் இவ்வளவு தூரம் தனது தமயனல்லவா செய்தானென்று மனதில் திட்டிக்கொண்டு வீடு சேர்ந்தார். நமது ஐயங்காரைப் பலசமயங்களிலும் காணச்சென்றும் அவர் அகப்படவேயில்லை. கடைசியில் பாக்கி நாலாயிரத்தையும் இவரே செலுத்தும்படியாக நேர்ந்துபோயிற்று. இதற்குப் பிறகு ராமமூர்த்தி நாயுடு கத்தியால் குத்தப்பட்டும், அவரது தமயனார் அமீனா வெங்கடரத்தினம் நாயுடு சுடப்பட்டும் கிடக்கப் பிறகு போலீஸ் விசாரணையும் நடந்தேறிற்று. போலீஸ் இன்ஸ்பெக்டரவர்கள் ஸஞ்சீவபாபுவை ரெயிலில் சந்தித்து இணங்கச்செய்து அவ்வளவு தூரம் விவரித்தும் கல்கத்தா சென்ற அவர் திரும்பி வரவேயில்லை.

## அத்தியாயம். 3.

அடித்தாலும் சுக்கிரதிசை இப்படியன்றோ அடிக்கவேண்டும். நமது ஆராவமுது ஐயங்காருக்குத் தமயனார் ஒருவர் உண்டல்லவா? அவருக்கு நரசிம்மய்யங்கார் என்று பெயர். அவருடைய ஒரே குமாரனான லக்ஷ்மிபதியை யாரோ கொன்றுவிட்டனர். கொன்று எவ்விடத்திலாவது புதைத்திருக்கவேண்டுமென்று தெரிகிறது. இதுமட்டுமேயல்ல. ராமமூர்த்தி நாயுடுவின் மூத்த மகனும் கொலையுண்டு போனான். அவனுடைய சரீரம் மட்டும் மணலுக்குள் மறைத்துவைக்கப்பட்டிருந்து கண்டுபிடிக்கப்பட்டது. இந்த சம்பவங்கள் நமது இராமமூர்த்திநாயுடு வாரண்டில் பிடிபடுவதற்குமுன் நடந்தேறியவையாகும். ஆயினும் இவ்விரு சிறுவர்களையும் கொன்ற குற்றவாளி அகப்படாமையால் கேஸ் இன்னும் முடிவுபெறாதிருந்தது. எவரையும் சந்தேகத்தின் மீது பிடிக்கக்கூடவில்லை. லக்ஷ்மிபதி கொலை செய்யப்பட்டவன்று ஆராவமுதய்யங்காருக்கு கோவிலில் வேலை சரியாக இருந்ததால் அவர் அப்படி இப்படி அசையவே முடியவில்லை. ஆனதால் அவர் மீது குற்றத்தை ஏற்றுவதும் சரியல்ல. லக்ஷ்மிபதியின் நகைகள் ஒரு ஆயிரம் ரூபாய் பெறு



மானதை ஒரு மூட்டையாகக் கட்டப்பட்டு ஓரிடத்தில் கிடந்ததையும் கண்டெடுக்கப்பட்டது. அவனைக் கொன்றுவிட்டு நகைகளை மூட்டையாகக் கட்டியவர்கள் அவசரத்திலே எப்படியோ கைதவறிப் போட்டோ, மடியிலிருந்து நழுவி விழுந்தோ இருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

லக்ஷ்மிபதி இறந்துபோனது இருக்கட்டும். இப்போது நமது ஆராவமுதய்யங்காரின் சந்தோஷத்தைக் கவனிப்போம். அவர் தமக்குள்ளாகவே மிகுந்த பூரிப்புடையவராய், சாக்ஷாத் ஸ்ரீமந் நாராயணமூர்த்தியே தமது பக்கத்திலிருப்பதாக நினைத்துக்கொண்டார். இனி தமது தமயனாருடைய சொத்துக்குத் தாமே பாத்தியஸ்தர் என்று பேருவகை யுற்றார். இப்போது அவரை யாரும் நெருங்குவதற்கில்லை. தமக்கு எவராலேனும் தீங்கு சூழக்கூடுமென்று மிகுந்த பலிஷ்டனான லயோடிஸ் என்ற சீன தேசத்தானொருவனைத் தமக்குத் துணையாக வைத்துக்கொண்டிருந்தார். அவனை எப்படியாவது தம்வசம் செய்துகொண்டுவிட வேண்டுமென்பது ராமமூர்த்தி நாயுடுவின் எண்ணமாயிருந்தது. ஆகவே லயோடிஸ் இருவருக்கும் வேண்டியவனாகப் போய்விட்டான். ஆராவமுது ஐயங்கார் ராமமூர்த்தியின் மீது அநேக குற்றங்களை இவனிடம் சொல்லுவார், ராமமூர்த்தியும் லயோடிஸிடம் ஐயங்காரின் மோசங்களை விவரிப்பார். லயோடிஸோ எந்தப் பக்கத்தில் அதிகமான சாப்பாடும் நால்வகைக் காய்கறியும் கிடைக்கிறதோ அந்த இடத்தில் அதிகமாகத் தலையாட்டுவது வழக்கம். லயோடிஸ் ஐயங்காரிடம் வந்து சேர்ந்ததே வெகு விசித்திரம். அவன் பிறந்த இடமே சீனதேசந்தான். சீனாவில் பாக்ஸர் கலகம் முன்பு நடந்தபோது அவன் தன் பத்தினி புத்திர ஸமேதனாய் இந்தியாவுக்கு ஓடிவந்துவிட்டானாம். அவனுடைய மனைவி மக்கள் இப்போது கயா என்ற இடத்தில் இருக்கிறார்களாம். தான்மட்டும் இப்படித் தனியாகப் புறப்பட்டு வந்தானாம். அவனுக்குக் கிராமபோன் வாத்தியப்பெட்டிகள் செய்யவும், மரத்துண்டுகளைக் கொண்டு ஒரு சிறு கத்தியின் உதவியினாலே அநேக விதமான மரப்பொம்மைகளையும், கிளி, யானை, குதிரை முதலிய பல ரூபங்களையும் செய்யத் தெரியுமானதால் அதைத் தாம் தெரிந்துகொள்வதற்காக ஆராவமுது ஐயங்கார் அவனிடம் நேசம் பாராட்டலானார். அவனே இருபது ரூபாய் கொடுத்து ஒரு உன்னதமான பங்களாவில் வாடகைக்கு இருந்தான். வெகு தர்மவான். ஆனால் அவனுக்கு வெளி விருந்துகளும் அதற்கான டிக்கட்டுகளும் விசேஷமாக வந்துகொண்டிருந்தபடியால் வீட்டில் சாப்பிட அவனுக்கு முடிகிறதில்லை.

இப்படி இருக்கும்போது ஒருநாள் ராமமூர்த்தி நாயுடு லயோடிஸைப் பார்க்க வந்தார். லயோடிஸும் அவரை வெகுவாக உபசரித்து, ஹிந்தி பாஷையில் பிரசுரமாகிற ஹிதவாதி பத்திரிகையைக் காண்பித்து தங்களுக்கு ஹிந்தி பாஷை தெரியுமாவென்று கேட்டார். அவர் தமக்குத் தெரியாதென்றும் எதற்காகக் கேட்கிறீர்களென்றும் வினவ, அதற்கு லயோடிஸ் கல்கத்தா பௌபஜாரிலுள்ள சஞ்சீவபாபு என்பவர் ஒரு கேஸை மறைக்கமுயன்று இர

ண்டு லக்ஷம் ரூபா லஞ்சம் பெற்றதாக ஹிதவாதியில் பிரசுரமாயிருக்கிறதாகவும் அந்தக் கேஸ் செஷன்ஸுக்கு கமிட் செய்யப்பட்டிருக்கிறதென்றும் சொன்னார். ராமமூர்த்தி நாயுடு அப்பெயரையுடையவரையே தமக்குத் தெரியாதென்று சொல்ல, லயோடிஸ் "அவன் ஒரு பெரிய அபாயகரமான மனிதன், என்னைக்கூட ஒரு கேஸில் அகப்படும்படி செய்துவிட்டான்" என்று சொன்னான். இராமமூர்த்தி நாயுடுவும் அதற்குத் தலையசைத்துவிட்டு, ஒரு கவரை லயோடிஸிடம் கொடுக்க, அதைத் திறந்து பார்த்ததும் ஆயிரம் ரூபாய்க்கு நோட்டுகளாக இருந்தன. எதற்காக இதுவென்று கேட்க, அதற்கு இராமமூர்த்தி நாயுடு அதற்குப்பதிலாகத் தாங்கள் ஒரு உபகாரம் செய்ய வேண்டுமென்றார். லயோடிஸுக்கு ஆயிரம் ரூபா நோட்டுகளைப் பார்க்கவும் புத்திமாறிப் போயிற்று. உடனே ஒரு வேலைக்கார ஸ்திரீ கோஷா உடையுடன் முகத்தை ஒரு சல்லாவினால் மூடிக்கொண்டு வந்து லயோடிஸுக்கு காபி கொண்டுவந்து தர, அதை லயோடிஸ் கடவுளுக்கு வந்தனம் செலுத்தி விட்டுப்பருகினான்.

லயோடிஸ்.—என்னிடமிருந்து எந்த உதவியைக் கோரினாலும் செய்யத் தயாராயிருக்கிறேன்.

ராமமூர்த்தி.—தாங்கள் என்னுடைய விரோதியான ஒருவனைச் சரிப்படுத்திவிடவேண்டும்.

லயோடிஸ்.—இது எனக்கு எம்மாத்திரம்? எறும்பை நசுக்குவது போல; இதோ பாருங்கள் (என்று ராமமூர்த்தியின் கழுத்தைத் திடீரென்று பிடித்துக்கொண்டு தனது ஒரு கையினால் இறுக்கினான்.)

ராமமூர்த்தி.—"ஐயோ மூச்சுவிட முடியவில்லையே! விட்டு விடுங்கள்" என்று கூவி பேசமுடியாமல் கைகளால் சாடை காட்டினான்.

லயோடிஸ்.—(விட்டுவிட்டு) பார்த்தீர்களா! என்னுடைய பலம் எப்படி? இன்னும் கொஞ்சம் அழுத்தமாக உங்கள் கழுத்தைப் பிடித்திருந்தால் உயிர் போயிருக்குமல்லவா? என்றான்.

ராமமூர்த்தி.—தங்களுடைய பலத்தை என்னிடத்திலேயே காட்டத் தொடங்கிவிட்டீர்களே! போதும் போதும், நான் சொன்ன சங்கதியைப் பற்றி எப்படி முடிவுசெய்தீர்கள்?

லயோடிஸ்.—தாங்கள் சொல்லும் ஆசாமி எங்கேயிருக்கிறான்? அவன் பெயரும் உத்தியோகமும் என்ன?

ராமமூர்த்தி.—அவன் ஒரு முனிசிபல் இன்ஸ்பெக்டர். சேலம் கவரைத் தெருவில் இருக்கிறான். கந்தர்ப்புரி காஸிம் ஸாஹெப் என்று பெயர்.

லயோடிஸ்.—அவனுக்கு என்ன வயதிருக்கும்.

ராமமூர்த்தி.—34-க்கு மேற்பட்டுதான் சொல்லவேண்டும்

லயோடிஸ்.—உங்களுக்கும் அவனுக்கும் என்ன விரோதம்?



ராமமூர்த்தி—தாங்கள் அதையெல்லாம் கேட்காதிருக்கும்படியே தங்களுக்குப் பெருந்தொகையை வெகுமதி செய்திருக்கிறேன். அப்படி விவரம் தேவையானால் இந்தக் கடிதத்தைப் பாருங்கள். ஆனால் அதிலுள்ள விஷயங்களைப்பற்றியொன்றும் என்னைக் கேட்கக்கூடாது என்று ஒரு கடிதத்தைக் கொடுத்தார்.

லயோடிஸ்.—(அதைப் பார்த்துவிட்டு) யார் எப்படியானாலும் எனக்கென்ன? தாங்கள் மட்டும் சௌக்கியமாயிருக்க வேண்டும். காஸிம் ஸாஹெப்பை இன்றைக்கு ஆறாம் நாள் சரிப்படுத்தி விடுகிறேன்.

என்று சொல்லிக்கொண்டே அந்தக் கடிதத்தில் கொஞ்சம் சிகரெட் தூளைச் சுற்றி ஒட்டி விட்டு அதைக் குடிக்கலானான். ராமமூர்த்தியும் வேறு சங்கதிகளைப் பேசிக்கொண்டு சிறிதுநேரமிருந்துவிட்டு, தான் கொடுத்த கடிதத்தைத் திருப்பித் தரும்படிக் கேட்க, லயோடிஸ் அடாடா! நான் அதை மறதியாக சிகரெட் பொடி வைத்துக் குடித்துவிட்டேனே என்று கலக்கத்துடன் கூறினான். ராமமூர்த்தியும் அக்கடிதத்தால் அந்த ஸாஹெப்பைப் பிடிக்கலாமானாலும் அப்போது தானும் அதில் சம்பந்தப்படுவதால் அக்கடிதம் பயனற்றது தானென்றும் அது எரிந்து விட்டதைப்பற்றிக் கலவரப்படவேண்டியதில்லையென்றும் கூறிவிட்டு விடை பெற்றுச் சென்றார்.

## அத்தியாயம் 4.

சஞ்சீவபாபு கல்கத்தாவிலிருந்து எப்போது புறப்பட்டாரோ நாம் அறியோம். முன்பு வெங்கடரத்தினத்தைக் கொலை செய்த இடத்தில் ஏதோ ஒன்றைத் தேடிக்கொண்டிருந்தார். அந்த இடத்துக்கு ஸமீபமாய் ஒரு சிற்றாறு ஓடிக்கொண்டிருந்ததையும் பார்த்தார். ஆனால் அப்போது கோடைகாலமாயிருந்தபடியால் ஜலம் வற்றிப்போயிருந்தது. அந்தச் சிற்றாற்றின் பாலத்தருகே வெகு சிரத்தையுடன் மண்ணைத் தோண்டிப்பார்த்தபடியிருந்தார். அவர் எதிர்பார்த்தவண்ணம் அங்கே துப்பாக்கி ஒன்று கிடைத்தது. அதற்கு வெகு ஸமீபத்திலே ஒரு பேனாக்கத்தி கொத்துச் சாவியுடனும் அகப்பட்டன. அது இன்னாருடையதாகத் தான் இருக்கவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டார். இவ்விரண்டும் அகப்பட்டதிலிருந்து கேஸ் சுலபமாகிக்கொண்டு வருகிறதாக நினைத்து, அங்கு தம்முடன் வந்திருந்த போலீஸ் இன்ஸ்பெக்டரிடமிருந்து அவ்விரண்டும் அங்கே தான் கண்டெடுக்கப்பட்டனவென்று ஒரு ஸாக்ஷியம் எழுதிவாங்கிக்கொண்டார். பிறகு போலீஸ் இனிஸ்பெக்டர் வசம் அவ்விரண்டையும் ஒப்புவித்து ரகசியப்படுத்தும்படி கூறி அனுப்பிவிட்டு, வெங்கடரத்தினத்திடம் மரணவாக்குமூலம் வாங்கிய முனிசிபல் இன்ஸ்பெக்டரின் வீட்டுக்கு ஒரு வைத்திய வேடத்தோடு சென்றார். அப்போது இன்ஸ்பெக்டரின் புது மனைவிக்கு அதிகமான ஜ்வரமாயிருந்தது. இனிஸ்பெக்ட

ரான காஸிம் ஸாஹெப் வைத்தியரைக் கண்டதும் தாங்கள் யார் என்று வினாவினார். இரகசியத்தில் பேசவேண்டுமென்று வைத்தியர் சொல்ல, இருவரும் ஒரு வாய்க்காலை நோக்கிச் சென்றார்கள். அப்போது இரவு 8 மணியிருக்கும்.

வைத்தியர்.—காஸிம் ஸாஹெப்! நம்மிருவருக்கும் ஒரே காலத்தில் மரணத்தை யுண்டுபண்ண ஒருவன் தயாராகக் காத்திருக்கிறான். அதற்கு எப்படி தப்புவது?

காஸிம்.—மரணத்தையா? எனக்கா? ஒன்றும் விளங்கவில்லையே? சற்று நன்றாக விவரித்துச் சொல்லுங்கள்.

வைத்தியர்.—உங்களுடைய அந்தரங்கம் முழுதும் என்னிடத்தில் மறைக்காமற் சொல்லிவிடவேண்டும். அப்போதுதான் நான் எது ஒன்றையும் விவரித்துச் சொல்ல முடியும்.

காஸிம்.—எந்த அந்தரங்கம் தெரிய விரும்புகிறீர்கள்?

வைத்தியர்.—என்னிடத்தில் இப்படி மூடிப் பேசுவதில் பயனில்லை. நான் ஒவ்வொன்றையும் கேட்ட பிறகு நீங்கள் சொல்வதென்றால் அது முடியாது. முதலில் நான் யார் தெரியுமா? நான் இராமமூர்த்தி நாயுடுவின் சிநேகிதர்களில் ஒருவன். அவனிடம் நம்பிவைத்த எனக்குள்ள சொத்தை அவன் முற்றிலும் அபகரித்துக்கொண்டுவிட்டான். இப்போது மெதுவாக என்னையும் வேலை தீர்த்துவிட முயன்றிருக்கிறான். நீங்கள் ராமமூர்த்திக்கு ஒரு கடிதம் அனுப்பி "இது கண்டக்ஷணம் 60 ரூபாயும் ஒரு கலம் நெல்லும் அனுப்பவேண்டுமென்றும், இல்லையேல் அவனுடைய எதிரியாகிய ஆராவமுது ஐயங்கார் அதிகத் தொகை தருவதாய்க் கூறுகிறாரென்றும், தன்னைப் போல ஒரு முனிசிபல் இன்ஸ்பெக்டராக இருக்கும் நாகப்பா தன்னை அடிக்கடி பணம்கேட்பது வெட்கமாயிருக்கிறதென்றும்" எழுதி யனுப்பி யிருந்தீர்களல்லவா? அதின்பேரில் உம்மைக் கொலைசெய்துவிட வேண்டுமென்று ராமமூர்த்தி லயோடிஸ் என்ற சீனாக்காரனைக்கொண்டு தூண்டி யிருக்கிறான்.

காஸிம்.—ஓகோ! அப்படியா சமாசாரம், அதனால் தான் என்னுடைய கடிதத்திற்குப் பதில் அனுப்பவில்லையோ? சரி சரி! ராமமூர்த்தி இவ்வளவு துஷ்டனென்று எனக்குத் தெரியாது. நான் செய்த உபகாரங்களை யெல்லாம் அவன் மறந்துவிட்டானே! என்னுடைய அவசர சமயத்தை அவன் கவனிக்கவில்லையே.

வைத்தியர்.—உங்களுக்கு அப்படிப்பட்ட அவசரமென்ன வந்தது?

காஸிம்.—தாங்கள் ராமமூர்த்தியின் முக்கிய நண்பராதலால் தங்களிடம் எனக்கு மறைப்பென்ன? இரண்டு வருஷத்திற்கு முன்பு என்னுடைய எண்ணத்தில் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று தோன்றியது இதனால் செலவுண்டான நிமித்தம் என்னைப்போன்ற மற்றொரு முனிசிபல் இனிஸ்பெக்டரான நாகப்பாவிடம் அதிகவட்டி கொடுப்பதாய்க் கூறித் தொகை வாங்கினேன். நான் என் மனைவியுடன் வஸிக்கத் தொடங்கு முன்னே நாகப்பா கடனைத் தரும்படி கேட்டான். அவனுக்கு சில தினங்கள் வரை சொன்ன சாக்கு போக்குகள் வியர்த்தமாயின. அவனுடைய தொந்தரவு பொறுக்கமுடியவில்லை. இதன் பேரில் ராமமூர்த்தியை எனக்குத் தெரியுமானதால் அவனிடம் நூறு ரூபாய் கடன் கேட்டேன். அவன் இனாமாகவே தருவதாக ஒப்புக்கொண்டான். பலமுறை கேட்டும் சாக்கு போக்கு கூறி ஏமாற்றிவந்தான். உடனே அவனைப் பயமுறுத்தும் பொருட்டு தாங்கள் பிரஸ்தாபித்த கடிதத்தை அவனுக்கு அனுப்பினேன். அதற்கு அவன் ஒரு பதிலும் கொடுக்கவில்லை.



வைத்தியர்.—ராமமூர்த்தி நூறு ரூபாய் இனாமாகத் தரும்படியான விதமாக நீங்கள் அவனுக்கு என்ன உபகாரம் செய்தீர்கள்?

காஸிம்.—நான் ஒரு உதவியும் செய்தவனல்ல. ஆனால் சிநேகிதம். நட்பை உத்தேசித்தும், கலியாணக் கடன் என்று இரக்கப்பட்டுமே அவன் அப்படி இனாமாய்த் தருவதாகச் சொன்னான்.

வைத்தியர்.—தங்கள் கடிதத்தில் கண்டபடி ஆராவமுது ஐயங்காரும் ராமமூர்த்தியும் பரஸ்பரம் விரோதிகளோ?

காஸிம்.—ஆம்; இவ்விருவருக்குள்ளும் இப்போது பலத்த விரோதம் ஏற்பட்டிருக்கிறது.

வைத்தியர்.—நல்லது. நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள். மற்றொரு சமயம் தங்களைச் சந்திக்கிறேன்.

என்று சொல்லி விட்டு இருவரும் பிரிந்தனர். மறுநாட் காலையில் ஸஞ்சீவபாபுவின் தூண்டுதலின்மீது காஸிம் ஸாஹிப் போலீஸ் இன்ஸ்பெக்டரால் அரஸ்ட் செய்யப்பட்டுப்போனார். அந்த ஸாஹிபுவினுடைய வீடும் பரிசோதிக்கப்பட்டதில் ஆராவமுதய்யங்கார் காஸிம் ஸாஹிபுவுக்கு எழுதிய கடிதமொன்றும் அகப்பட்டது. அக்கடிதத்தில் "எப்படியாவது ராமமூர்த்தியை வெங்கடரத்தினம் கொலைக் கேஸில் சிக்கவைத்துவிட்டால், காஸிம் ஸாஹிபுவின் கலியாணக் கடனை முழுதும் தீர்ப்பதோடு மேற்கொண்டு எழுநூறு ரூபாயும் தருவதாகவும், ராமமூர்த்தி தன்னை அந்தரங்கத்தில் விரோதியாகப் பாவித்துக்கொண்டு ஒருவிதமாக இருந்து வருவதால் அவனை இக்கொலைக் கேஸில் அகப்படவைத்து அவனது அகங்காரத்தை யடக்கவேண்டுமென்றும், கண்டிருந்தது. இக்கடிதத்தைப் போலீஸ் இன்ஸ்பெக்டரிடமிருந்து சஞ்சீவபாபு பெற்றார். ஆராவமுதய்யங்காரின் ஐயாயிர ரூபாய்க் கடனை ராமமூர்த்தி, தான் உடன் கையெழுத்துப் போட்ட தோஷத்திற்காகத் தரும்படி நேரிட்டதிலிருந்து ஐயங்கார் மீது ராமமூர்த்திக்கு அந்தரங்கத்தில் பகையுண்டாயிருக்கவேண்டுமென்றும் ஸஞ்சீவபாபு ஊகித்தார். இப்படி ராமமூர்த்தியைக் கெடுக்க ஐயங்கார் முயன்ற குற்றத்திற்காக, அக்கடிதத்தை ஆதாரமாகக் கொண்டு ஸஞ்சீவபாபுவின் அபிப்பிராயப்படி ஆராவமுதய்யங்காரையும் மறுநாள் போலீஸ் இன்ஸ்பெக்டர் அரஸ்டு செய்தார். அன்றைய தினம் ஆராவ

முதய்யங்காரின் தமயனாரான நரசிம்மய்யங்கார் ஸப்மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஒரு பிரமாணிக்க வாக்குமூலம் கொடுத்தார். ஸஞ்சீவபாபு அதில் சாக்ஷியாக ஒரு கையொப்பமும் வைக்கலானார்.

## அத்தியாயம். 5.

சிறப்புற்றோங்கிய சென்னப்பட்டணத்தில் மதராஸ் சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு அருகிலுள்ள ஆற்றில் இரும்புப் பலகணிகள் வைத்துப் பலமாய்க் கட்டிய பாலத்தின்மீது ஒரு நாள் சாயந்தரம் ஐந்துமணி சுமாருக்கு, அந்த ஊரிலிருந்த புத்திகூர்மையும் தெளிவுமுள்ள பதினாறு வயதுச் சிறுவனொருவன் அப்பாலத்தின்மீது வந்து, கைபிடிச் சுவற்றின்மேல் கையூன்றிக்கொண்டு கவலையுற்றவனாய் நின்றான். அவன் தன்கையில் ஒரு புஸ்தகத்தை விரித்து வைத்துக்கொண்டு சற்று படிக்கிறதும், சற்று ஆற்றின் நீரோடையில் மீன் துள்ளுவதையும், மரங்களைப் படகுகளின் மீதேற்றித் தள்ளிக்கொண்டு போகப்படுவதையும் சமீபத்திலுள்ள மூர்மார்க்கேட்டின் சிறப்பான கட்டடங்களையும் வேடிக்கை பார்க்கிறதுமாய் இருந்தான். அவன் பார்வையையும் படபடப்பையும் பார்த்தால் அன்னியருக்கு சீக்கிரத்தில் வசப்படத்தக்கவன் என்று காணப்பட்டான். அவன் அருகில் ஒரு பெண்ணும் ஒரு ஆண் குழந்தையும் ஒரு சிறு இழுப்பு வண்டியில் கூழாங்கல்லுகளை வைத்து இழுத்து விளையாடிக்கொண் டிருந்தனர். அச்சிறுமியும் அச்சிறு குழந்தையும் உடன் பிறந்தவர்களாகத் தோன்றினர்.

அந்தச் சமயத்தில் அந்தப் பாலத்தின் மீது குதித்த நடையாய் பரபரப்போடு பலவித விகடம் பேசிச் சந்தடிபண்ணிக்கொண்டு, அச்சிறுவனுடைய வயதுக்குச் சரியான மற்றொரு சிறுவன் மூர்மார்க்கெட்டுக்குள் போக அங்கு வந்தான். அவ்விருவரையும் பார்த்தால் ஒரே சாயலாக இருந்தார்கள்; ஆனால் அவர்களுடைய இயல்பும் மனக்கோட்பாடுகளும் பேதப்பட்டிருந்தன. பின்னவனுடைய நடையுடைபாவனைகள் சாதாரணமான வியாபாரி அல்லது தொழிலாளியின் பிள்ளை யென்று குறிப்பித்தன. அட்டமத்துச் சனி கிட்ட வந்ததுபோல் அருகில் வந்து "ஓகோ, ரெங்கசாமி! நீ புத்தகத்தைக் கைவிடமாட்டாய்போல் காணுது" என்று சற்று நின்று வேடிக்கையாகக் கேட்டான்.

"நீயா ஸ்ரீநிவாசா! எங்கே யிருந்து வருகிறாய்? க்ஷேமமா யிருக்கிறாயா" என்று மற்றொருவன் திரும்பிப் பார்த்து விசாரித்தான்.

"க்ஷேமத்துக்கொன்றும் குறைவில்லை; ஒருவாரம் வீட்டில் வந்திருக்கச் சமயம் கிடைத்தது; நான் வேலை செய்கிற கப்பல் வருகிற மாதம் மோரீஸ் தீவுக்குப்போக இருக்கிறது; போய்விட்டால் திரும்பிவர நெடுநாள் செல்லும்; ஆகையால் இனி இப்படிப்பட்ட சமயம் வாய்ப்பது அருமையாயிருக்கும்" என்றான்.



இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் விவரித்த ரெங்கசாமி என்னும் சிறுவன் இதைக்கேட்டு. "கப்பல் ஏது? என்ன வேலை? நீ ஜவுளிக் கடையில் கையாளாய் இருந்ததாகக் கேள்விப்பட்டிருந்தேனே" என

அதற்கு ஸ்ரீநிவாசன்: ஓகோ, என் செய்தி உனக்குத் தெரியாது போல் காணுது; அந்த ஜவுளிக்கடை வேலை, போக்கு வரவுக்கு இடமில்லாமல் கைதிக்குக் கடுஞ்சிறை வீடுபோல் கஷ்டமாயிருந்தது; அதில் எனக்கு சம்மதியில்லை; இன்னும் இரண்டு வாரத்திற்குள் மோரீஸ் தீவுக்குப் போய் விடுவேன்; நான் எனக்குவேண்டிய அளவு திரவியம் தேடிக்கொண்டு தான் திரும்பப்போகிறேன்; அதற்கு நெடுநாள் செல்லாது; அதை நான் நிச்சயமாய்ச் சொல்லமாட்டுவேன்" என்று ஸ்ரீநிவாசன் தீரமாய்ப் பேசினான்.

இந்த சம்பாஷணை நடந்தபோது கூலிஜனங்களை விசேஷமாய் மோரீஸ் தீவுக்கு ஏற்றுகிற காலமாகையால் நான்கு திக்கிலிருந்தும் 'நான் நான்' என்று மேல் விழுந்து கப்பலேற வந்த ஜனங்களில் பெரும்பாலும் வயதுவந்த பிள்ளைகளும் சற்று முதிர்ந்தவர்களுமாயிருந்தார்கள். துறை முகத்திலிருக்கிற கப்பல்களோ ஒன்று தவறாமல் கூலி ஜனங்களை ஏற்றிக்கொண்டு போக ஒப்பந்தம் செய்துகொண்டு பிரயாணத்துக்கு ஆயத்தமாயிருந்தன. ஸாஹஸகுணமும் திரவியாபேக்ஷயும் எங்கே பார்த்தாலும் ஏழை ஜனங்களை மதிமயங்கச் செய்து கொண்டிருந்தன.

ஆகையால் ரெங்கசாமி ஸ்ரீநிவாஸனை பார்த்து: "அப்படியா! மோரிஸுக்கா போகப்போகிறாய்?" என்று ஆவலாய்க் கேட்க, ஸ்ரீநிவாஸன்: ஆம், போகத்தான் நிச்சயித்திருக்கிறேன், இதுவே நல்ல சமயம்; இப்படிப்பட்ட சமயம் கிடைப்பதரிது. ஏனெனில் என் சிறிய தகப்பன் நான் அமர்ந்திருக்கிற, கப்பல் மீகாமனிடத்தில் உக்கிராண விசாரணை வேலையிலிருக்கிறார்; எனக்கும் அந்தக் கப்பலில் ஒரு கையாள் வேலை பேசி வைத்துக் கப்பல் கேள்வியில்லாமலே ஏற்றிக்கொண்டு போவார். இன்னும் ஒரு கையாள் அக்கூலி ஜனம் ஏற்றுகிற கப்பல் ஒன்றில் தேவையிருக்கிறதாய் அவர் சொல்லக் கேட்டேன்; ஜனங்கள் அதிகமாய் ஏறுகிறபடியால் அதற்குத் தக்கவேலைக்காரர்களும் வேண்டியதாய்த்தான் இருக்கும். நீயும் வருகிறாயா? நாம் இருவரும் சேர்ந்து போனால் மிகவும் ஸ்வாரஸ்யமாயிருக்குமல்லவா? ரெங்கு! என்ன சொல்லுகிறாய்?" என்று உற்சாகமாய்க் கேட்டான்.

இப்படி ஸ்ரீநிவாசன் நீயும் வருகிறாயா என்று ரெங்கசாமியைக் கேட்கவும், ரெங்கசாமி கனவு கண்டு விழித்தவன் போலக் கப்பலேற விருப்பமுடையவனாய் ஸ்ரீநிவாஸனைப் பார்த்து; "நீ சொல்லுகிறது சரியே; நான் எப்படி வருவேன்? என் கையில் துட்டு துக்காணி ஒன்றேனுமில்லையே. என் தகப்பனாரோ சேலத்தில் அமீனா வெங்கடரத்தினம் என்பவனைக் கொன்றுவிட்டு ஓடிப்போனாரென்று சொல்லுகிறார்கள். அவர் மறைந்துகொண்டதால் வீடு சொத்துயாவும் ஸர்க்காரில் சுவா

தீனப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். நானும் தாயும் என் தங்கை தம்பியும் ஒரு கூரைவீட்டில் குடியிருந்து வருகிறோம். இந்த ஸ்திதியில் என் பிரயாணத்துக்கு வேண்டியவை எனக்கு எப்படிக் கிடைக்கும்? இதுபோக வீட்டில் தாயார் இருக்கிறாளே," என்று இன்னும் சில நியாயங்கள் சொல்லப் போகையில், ஸ்ரீநிவாஸன் கைகொட்டிச் சிரித்து; "இதென்ன! தாயாம் தந்தையாம்; "என்பெற்ற தாயாருமென்னைப் பிணமென்று இகழ்ந்துவிட்டாள்" என்று தாயுமானவர் (?) சொன்னதை நீ கேட்டதில்லையா; இந்தச் சாக்குபோக்கெல்லாம் என்னத்துக்கு? நான் பேடி! என்று ஒரே தடவையாகச் சொல்லிப் போடேன். நீதான் உலகத்தில் புத்திசிரோமணி என்று நினைக்கிறாயாக்கும், எனக்கும் தாயில்லையோ? பின்னையேன் நான் என் தாயுன்கூட வீட்டிலேயே இருக்கவில்லை? தந்தைதாய் தமர்தார மகவென்னுமிவையெல்லாம் சந்தையிற்கூட்டம் என்று கம்பர் (?) சொல்லியிருக்கிறார். போடாபோ என்று நகைத்து இழித்துச் சொன்னான்.

"என் தகப்பனார் போனவழி தெரியவில்லை. இந்த நிலையில் என் தாயார் நாதனற்ற விதவை போலிருக்கிறாளே!" என்று தன் சங்கடங்களைச் சொல்ல ரெங்கசாமி வாய்திறக்கையில், ஸ்ரீநிவாஸன் தடுத்து, "அதுதான் நானும் சொல்லவந்தது; அவளுடைய ஈனஸ்திதியே—என் உன் குடும்பமிருக்கிற தற்போதைய கேவல ஸ்திதியே—நீ வெளிப்பட்டுப்போய்ப் பணம் சம்பாதிக்கச்செய்ய முதற்காரணமாயிருக்கிறது. நீ சம்பாதிக்கிற அரை ரூபாய் கால் ரூபாயில் உன்னை அவள் எப்படிக் காப்பாற்றுவாள்? திரைகடலோடியுந் திரவியந்தேடு என்று படித்தோமே மறந்தாயா" என்றான்.

ரெங்கசாமி ஏக்கத்தோடு: "ஆம், ஆம், எனக்கு ஒரு மாதத்துக்கு கிடைக்கிற சம்பளம் ஆறே ரூபாய், மெத்தக் கொஞ்சந்தான்." என்று மனத்தாட்சியோடு சொல்ல; "கொஞ்சம் என்று சொல்வதற்குச் சந்தேகம் என்ன? அந்த மோரீஸ் தீவில் ஒவ்வொரு பையன் சம்பாதிப்பதை நீ கேட்டதுண்டா? ஒரு மாதத்துக்கு பதினைந்து இருபது ரூபாய் சம்பளம் கிடைப்பது மல்லாமல் சாப்பாடு எஜமான் போட்டுவிடுகிறானாம். இப்படியாகச் செய்தும் அங்கே ஆள் கிடைப்பது மிக அருமையாயிருக்கின்றதாம். கரும்புத் தோட்டத்தில் சற்று கஷ்டமான வேலையைச் செய்ய இஷ்டமில்லாமற் போனால், கொஞ்சம் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் அத்தீவின் பட்டணத்திலேயே வியாபாரிகளிடத்தில் இலேசான வேலைசெய்து வேண்டிய அளவு சம்பாதித்துக் கொள்ளலாம்" என்று ஸ்ரீநிவாஸன் சிறப்பித்துப் பேசினான்.

"நீசொல்வது ஆச்சரியமாயிருக்கிறது; ஆ! இப்படியா சம்பாதிக்கிறார்கள்!" என்று அவன் சொல்லில் சிக்கிக் கொண்டவனாய் ரெங்கசாமி பிரமித்து நிற்க, மறுபடியும் ஸ்ரீநிவாஸன்: "ஆச்சரியமென்று ஒரு தரம் சொன்னால் போதுமா! ஒரு சமாசாரம் சொல்லுகிறேன் கேள். உனக்குச் சற்றுப் பெரியவனான ஒருவன் அந்தத் தீவில் ஒன்பது மாதந்தான் இருந்தா



னாம்; திரும்பி வருகையில் நாலாயிரம் ரூபாயோடு வீடு வந்து சேர்ந்தான்; இப்படிப் பல பிள்ளைகள் சம்பாதித்து வருகிறார்கள். நாம் தான் ஊரை விடமாட்டாமல் தரித்திரப்பட்டுக்கொண்டிருக்கிறோம்" என்று அவனுக்குத் தைரியம் பிறக்கப் பேசினான்

"எனக்குப் போக இஷ்டமாய்த் தானிருக்கிறது; தாயாரைப் பற்றித்தான் சற்று யோசிக்கிறேன். நான் போய்விட்டால் பாவம்! அவள் கையொடிந்தாப்போல் பாதவிப்பாளே!" என்று ரெங்கசாமி மழமழவெனச்சொல்ல, ஸ்ரீநிவாஸன் மீண்டும் பரிகாஸமாய் "மறுபடியும் பழயவழிக்கு வந்துவிட்டையே! போதும் போதும்; இந்த வீண் கதையை ஏன் வளர்த்துகிறாய்? போகத் தைரியமில்லை என்று ஒரேதரத்தில் வெளிப்படையாய்ச் சொல்லிப் போடேன்." என்று தூற்றிப்பேசினான்.

இதற்கு ரெங்கசாமி சுளித்த முகமாய்: "நான் சொல்வது உண்மையே; நீ என்ன என்னை வீணாய்க்கேலி பண்ணுகிறாய்" என்று கடினமாய்ச் சொல்ல, ஸ்ரீநிவாஸன் துள்ளித்துள்ளிப் பேசுவதைச் சற்று அடக்கி, அடுத்து அடுத்துச் சொன்னால் தொடுத்த காரியம் முடியும் என்று நினைத்து, இதோ வருகிறேனென்று மூர்மார்க்கட்டுக்குள் சென்று 'சிகரெட்' ஒன்றை வாங்கி வாயில் பற்றவைத்துக்கொண்டு மறுபடியும் பாலத்தண்டை வந்து சேர்ந்தான்.

பிறகு ஸ்ரீநிவாசனும், ரெங்கசாமியும் உலாவிக்கொண்டு மோரீஸ் தீவுக்குப் போவதைக் குறித்து மறுபடியும் விவரமாய்ப் பேசத் தொடங்கி, ஒரு நாழிகை காலம் போக்கினார்கள். அச்சமயத்தில் ரெங்கசாமியின் தங்கை சிறு குழந்தையாகிய தன் தம்பியைப் பாலத்தின் கைப்பிடிச்சுவரின் மேல் தூக்கி நிற்கவைத்து வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்கையில், கைதவறிக் குழந்தை ஆற்றின் நீரோடையில் விழுந்துவிட, அந்தப் பெண் அலறிக் கூச்சலிட்டாள். அது கேட்டு இச்சிறுவர் திரும்பிப் பார்க்க, குழந்தை கதறிக்கொண்டு தண்ணீரில் விழுவதைக் கண்டார்கள். தக்ஷணமே ரெங்கசாமி சுவரின்மேல் ஏறி ஆற்றில் குதித்த சத்தம் கேட்டது. அங்கே அவன் அக்குழந்தையை ஒரு கையால் தூக்கிக்கொண்டு, மறுகையால் நிலையாத நீரோட்டத்தில் தண்ணீரைக் கையால் தள்ளிக் கொண்டு தத்தளிக்கையில், அருகில் வலைவீசிக் கொண்டிருந்த செம்படவர் இருவர் இந்த ஆபத்தைப் பார்த்துத் தங்கள் கட்டுமரத்தைத் தள்ளிக்கொண்டு வந்து, பாதி முழுகி எழுந்த அவ்விரண்டு பிள்ளைகளையும் கட்டுமரத்தின்மீது இழுத்துப்போட்டுக்கொண்டுவந்து கரை சேர்த்தார்கள். கரையிலிருந்தவர்கள் ஓடிவந்து கூட்டங்கூட்டமாய்க் கூடி ரெங்கசாமியைப் பார்த்து, தெய்வ கடாக்ஷத்தால் தப்பிப் பிழைத்தீர்களே என்று இரக்கமாய்ச் சொன்னவர் சிலர்; அவனது தீரத்தை மெச்சிக்கொண்டாடினவர் பலர். இப்படியிருக்க, அவன் தன் தம்பியை எடுத்துக்கொண்டு தங்கையுடன் வீட்டுக்குப்போக எத்தனிக்கையில்;

இந்த சமாசாரம் எப்படியோ இதற்கு முன்னமே அவர்கள் தாய்க்குத் தெரிந்து, இந்தப் பெரிய ஆபத்தினின்றும் தன் குழந்தைகளைக் காப்பாற்றின கருணைமிகுந்த கடவுளை உரத்தசத்தமாய் வாழ்த்திக்கொண்டு, வியாகூலத்தோடு எதிரில் ஓடிவந்து இருவரையும் ஒன்றாய்த் தழுவிப் பிடித்துப் பலதரம் முத்தமிட்டு அங்கலாய்த்து வீட்டுக்கிட்டுக்கொண்டுபோய் ஜலதோஷம் நீங்கத் தக்க பரிகாரங்களைச் செய்தாள் அன்றிரவு முழுதும் ரெங்கசாமிக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. அன்று சாயங்காலத்தில் ஆற்றில் விழுந்த ஆபத்தும், அங்கே பிடித்துக்கொள்ள ஒன்றும் அகப்படாமல் ஜலத்துக்குள்ளாகவே போய்த் திக்குமுக்காடும்படியாக நேர்ந்த பயமும், முக்கியமாய் ஸ்ரீநிவாசன் தன்னைக்கண்டு சொன்ன சங்கதியும் ஆகிய இவ்வெண்ணங்கள் அடிக்கடி இவன் ஞாபகத்தில் வந்து கண்மூடவிடாமல் தூக்கமென்னும் சுகத்தை ஒதுக்கிவிட்டன. தரித்திரம் அரிதாயும், சம்பாதித்தல் எளிதாயும் இராநின்ற அந்த ஆச்சரியமான தீபாந்தரத்திலேயே அவனது மனது ஓடி உலாவிக்கொண்டிருந்தது. இந்தச் சமயத்தில் ஸ்ரீநிவாஸன் சொன்ன வார்த்தை மெய்யே; என்னுடைய சொல்ப வருமானங்கொண்டா நம்முடைய தாயார் சமுசாரம் நடத்துகிறான்? அவன் எப்பொழுதும் வெயில் மழை இரவு பகல் என்று ஒன்றும் பாராமல் அங்கங்கே வேலைசெய்து சம்பாதித்தல்லவா சமாளித்து வருகிறான். ஸ்ரீநிவாஸன் சொன்னபடி நான் செய்வேனானால் சீக்கிரத்தில் சுகப்படலாம்" என்று ரெங்கசாமி தனக்குத் தானே சொல்லிக்கொண்டான். இப்படியாக அந்த இராப்பொழுது போயிற்று.

ஹா! நமது ரெங்கசாமியின் மனம் மாறிய விநோதத்தைப் பார்த்தீர்களா? கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையுமல்லவோ! ஸ்ரீநிவாஸனுடைய பசப்பு மொழியில் எவ்வளவு தூரம் மயங்கிவிட்டான்! இப்படியே நம் நாட்டு ஏழை ஜனங்களில் வெகுபேர் ஏதோ வெளித்தேசம் சென்று கோடிகோடியாய் வாரி விடலாமென்று நம்பி, உடன்படிக்கைச் சீட்டு எழுதிக்கொண்டு கூலிகளாய்ப் போய், அங்கு படாதபாடுகள் பட்டு நொந்து வெந்து உருமாறிப் போகிறார்கள். சிலர் தற்கொலையும் செய்துகொள்கிறார்கள்; அழுகிறார்கள்; ஐயோ மோசம் போனோமே என்று கையைக் கடித்துக்கொள்கிறார்கள். இவர்கள் தங்களுக்குக் கப்பல் சார்ஜ் முதலியவைகளெல்லாம் இனாமாகக் கிடைக்கிறதென்று மதிமோசமாய் நினைத்துப் பிறகு துன்பத்தை யநுபவிக்கிறார்கள். ஏதோ பழைய காலத்தில்—கையெழுத்துப்போடத் தெரியாதவர்கள் தாசில்தார் உத்தியோகம் செய்த நாளில் வெளித்தேசங்களுக்கு ஓடிய சிலர் லக்ஷநிறையச் சம்பாதித்து மூட்டைகட்டிக்கொண்டு வந்தது உண்மைதான் அதைப்பார்த்து இவர்கள் மதிமயங்கி இப்படிப் பேராசை கொண்டு தீபாந்தரம் செல்லத் துணிந்து விடுகிறார்கள். அன்னிய தேசத்துத் தோட்டங்களில் தங்களை ஊஞ்சலில் வைத்து ஆட்டுகிறதாக நினைத்துச் செல்லும் இப்பேதைகள் தங்களுக்கு அங்கு எவ்வளவு ஆபத்துகளிருக்கின்றனவென்பதை அறிகிறதேயில்லை.



ஐயோ இவர்களுடைய அறியாமையை என்னென்போம்! இவர்களை முதல் முதலாகக் கூலிகளாய்த் தங்களுடைய வலையை வீசிப் பிடிக்கிற கங்காணிகளும் கூலி டிப்போக்காரர்களும், முதலில் இவர்களுக்கு நமது ஸ்ரீநிவாசன்போல வெகுவான ஆசை வார்த்தைகளையெல்லாம் சொல்லி வசப்படுத்தித் தங்களுக்கு மேற்பட்ட இடங்களில் அவர்களை ஒப்புவித்து, அவர்களுடைய சாப்பாட்டுச் செலவுக்கு எட்டணா ஆயிருந்தாலும் ஐந்து ஆறு ரூபா என்று கைப்பற்றிக்கொண்டு, அப்பால் ஆள் ஒன்றுக்கு பத்து, பன்னிரண்டு ரூபாய் வீதமும் வாங்கிக் கொள்கிறார்கள். பிறகு இந்த ஏழை ஜனங்கள் உடன்படிக்கைப் பத்திரத்தில் கையெழுத்திட்ட பிறகு, கொஞ்சம் முன் பணமும் இவர்களுக்குக் கொடுக்கப்பட, அதை இவர்கள் தங்களுக்கு இனாமாகக் கொடுத்ததுபோல நினைத்துக்கொண்டு பரவசப்பட்டுப் போகிறார்கள். பிறகு ரயிலிலும் கப்பலிலும் ஏற்றி, அவர்களை அடிமைகள் போல அந்நிய நாடுகளுக்குக் கொண்டுபோகிறார்கள். அங்கே இவர்களுக்காகக் கங்காணி முதலியவர்களிடம் கொடுத்த பணத்திற்கும், இவர்கள் பெற்ற பணத்திற்கும், சாப்பாட்டுச் செலவிற்கான பணத்துக்கும் கப்பல் சார்ஜ் ரெயில் சார்ஜ் முதலியவைகளில் ஆன செலவுத் தொகைக்குமாகச் சேர்த்து ஒரு முழுத்தொகைக்கு இவர்களிடம் கடன் பத்திரம் எழுதி வாங்கிக் கொள்ளப்படுகிறது. ஐயோ அநியாயமே! இந்தக் கடனை அவர்கள் அங்கு உழைத்து அடைக்கவேண்டும். இந்த லக்ஷணத்தில் அங்கே அவர்கள் ஆடுமாடு மிருகங்கள் போலவே நடத்தப்படுகிறார்கள். காலையில் 4 மணி முதற்கொண்டு மாலை வரையும் அங்கே தோட்டங்களில் வேலை செய்யவேண்டும். நல்ல நிலாக்காலமாக இருந்தாலோ அப்போதைக்கும் வேலை செய்யும்படி இராப்பொழுதிலுங்கூட ஏவப்படுகிறார்கள் ஐயோ! இவ்வளவு உழைப்பு தங்கள் சொந்ததேசத்தில் பட்டால் எவ்வளவோ சம்பாதிக்கலாமே! இப்போது நமது தேசத்தில் கூலி விகிதங்கள் அதிகரித்திருப்பதால், அந்நிய நாட்டில் முன்பின் முகமறியாதவர்களிடத்தில் படும் பாட்டில் பாதி பட்டாலும் இங்கு மகாராஜனாகச் சீவிக்கலாமே! இக்கரைக்கு அக்கரை பச்சை என்று ஏமாறுகின்றார்களே! அப்படி அந்நியதேசம் போகிறவர்கள் ஒப்பந்தக் கூலிகளாய்ச் செல்லாமல் தாங்களே சகல செலவுகளையும் செய்துகொண்டு போனால், யாதொரு நிர்ப்பந்தமுமின்றி இஷ்டமிருந்தால் வேலை செய்கிறது—இல்லாவிட்டால் தேவையில்லை என்ற சுதந்தரத்துடன் அங்கு இருந்துவிட்டு வரலாம். வேறு விதமாயும் சொந்தத்தில் வியாபாரம் செய்தும் நன்றாக ஜீவிக்கலாம். அத்தகைய புத்தி நம்மவர்களுக்கு உண்டாகிறதேயில்லை. மேலும் அப்படி அன்னிய நாடுகள் போக இதுகாலமுமல்ல. சீனா தேசத்திற்கு சில இந்தியர்கள் போய்க்கொண்டிருந்தார்கள். அங்கு அவர்களுக்குப் பிழைப்பில்லையென்றும் வேலை கிடைக்காதென்றும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் முன்னெச்சரிக்கை செய்திருக்கிறார்கள். மலேயா, ஆஸ்திரேலியா முதலிய இடங்களுக்கு இந்தியர்கள் போய் படாத பாடுகள் பட்டு நொந்து வெந்துபோய்க்

கொண்டிருக்கிறார்கள். பிரிட்டிஷ் குடியேற்ற நாடாகிய கானடாவில் 4500 சீக்கியர்கள் குடியேறி இருக்கிறார்கள். இவர்கள் 2¼ கோடி ரூபாய் வரையில் பூசொத்துகளிலும் தொழில்களிலும் போட்டிருக்கிறார்கள். அங்கு கானடா கவர்ன்மெண்டார் இவர்களைக் கூடியமட்டும் சரியாகவே நடத்துகிறார்களென்று சொல்லப்பட்டாலும், அங்கு குடியேறப்போகும் ஒவ்வொரு அன்னியனும் 600 ரூபாய் கையிற்கொண்டுபோய் அதைக் கவர்ன்மெண்டுக்குக் காட்டவேண்டுமென்ற பெருந்தொல்லை யொருபுறமிருக்கிறது. அப்படிக் காட்டாவிட்டால் அங்கு குடியேற அவர்கள் இடம்பெறார். இதன்றி இந்தியாவுக்கும் கானடாவுக்கும் கப்பற் கூலி 400 ரூபா ஆகின்றது. எனவே ஆயிரம் ரூபாய் கையிலிருந்தாலொழிய எந்த இந்தியனும் அங்கு குடியேற முடியாது. இப்படிக் கானடாவுக்குப் போவதிலும் பல கஷ்டங்களிருக்கின்றன. அதாவது இந்தியாவிலிருந்து கானடாவுக்குப் போகிறவர்கள், கப்பல் யாத்திரைக்கு டிக்கட் பெற்றுப்போகும்போது நடுவில் இறங்காமல் போகவேண்டும் ஆனால் இப்படி ஒரேயடியாய் டிக்கட் கொடுக்கும் கப்பற் கம்பெனிகள் இல்லை கானடாவுக்குப் போகிறவர்கள் சைனாத் துறைமுகங்களொன்றில் இறங்கிப் போகவேண்டியிருக்கின்றது. இதனால் சீக்கியர்கள் கானடாவுக்குப் போவதில் தடைபட்டிருக்கிறார்கள். இந்தியாவிலிருந்து எங்கும் இறங்காமல் நேராய் வாராத சீக்கியர்களைக் கானடாவுக்குள் விடுவதில்லையென்ற ஏற்பாடு 1907-ம் வருஷத்தில் செய்யப்பட்டபடியால் கானடாவிலிருக்கும் 4500 சீக்கியர்களும் அவ்வருஷத்திற்கு முன்னாலேயே போனவர்களாவர். அவர்களுடைய மனைவி மக்கள் இந்தியாவில் இருப்பதால் இவர்களைத் தருவித்துக்கொள்ள வேண்டுமென்று கானடாவிலுள்ள சீக்கியர்கள் விரும்புவதானது மேற்கண்ட ஏற்பாட்டால் முடியாமலிருக்கின்றது.

சீக்கிய ஜாதியார் ஆண்மையும் தைரியமும் உள்ள ஜாதியாராவர். அவர்களுக்குச் சமானமான போர்வீரர் இல்லையென்று ஆங்கிலேயர் கூட ஒப்புக்கொள்கிறார்கள். இப்படிப்பட்ட போர்வீரர்களைக் கொடுக்கும் ஜாதியார் ஆண் பெண் குழந்தை உட்பட ஜன கணிதக் கணக்குப்படி பஞ்சாப் மாகாணத்தில் சுமார் 20 லக்ஷத்துக்கு அதிகமில்லை. அப்படியிருந்தும் கானடாவுக்கு 400 வரையும் செலவிட்டுக்கொண்டு கையிலும் 600 ரூபா ஐவேஜியுடன் அங்கு தங்களுக்கு நல்ல பிழைப்புக் கிடைக்குமென்று போய்விடுகின்றனர். அந்த ஆயிர ரூபாயைக்கொண்டு இங்கு எவ்வளவோ நேர்த்தியாக ஜீவனம் நடத்தலாமே. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் பற்பல குடியேற்ற நாடுகளிருக்கின்றன. மொத்தத்துக்கு இந்தப் பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் பத்து லக்ஷத்துக்குக் குறைவில்லையென்று சொல்லலாம். அவர்கள் அங்கு மிலேச்சத்தனமான நிலையில்தான் இருக்கிறார்கள்.

தென்னாப்பிரிக்காவிலோ சொல்லவே வேண்டாம்! அங்கு இந்தியர்கள் நரகத்தில் வதைக்கப்படுவது போலத் துன்பசாகரத்தில் உழன்று கொண்டிருக்கிறார்கள். விசேஷமாக, அங்கே நெட்டாலில் வசிக்கும் இந்தியர்களுடைய குறைகளில் முக்கியமானது அவர்கள் தலைவரியாக வருஷா வருஷம் கொடுக்கவேண்டிய மூன்று பவுன் அல்லது நாற்பத்தைந்து ரூபாய் தான் பெரிய தலைச்சுமையாக இருக்கின்றது. ஒவ்வொரு இந்தியரும் புருஷனாகட்டும், ஸ்திரீயாகட்டும், இந்த வரியைக் கொடுத்தே தீரவேண்டும். இல்லாவிட்டால் காவல் தண்டனை விதிக்கப்படும். இந்த வரியை ஸ்திரீகள் கூடக் கொடுக்க வேண்டுமென்று சட்டமிருப்பதால், வெகுபேர் கொடுக்கவகையில்லாமல் வருந்துகிறார்கள். இந்த வரியைக் கொடுப்பதற்காக அங்குள்ள ஸ்திரீகளிற் சிலர் செய்யத்தகாத தொழில்கள் செய்வதும், துன்மார்க்கத்தில் பிரவேசிப்பதும் வழக்கமாயிருக்கின்றது. எவ்வளவு காலம் அங்கு இவ்விதமாய்க் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பது? பின்னும் நமது ஊர்களில் பறச்சேரிகளை ஊருக்கு வெளியில் ஒதுக்கியிருப்பதைப்போல, இந்தியர்களுடைய வாஸம் அங்கு ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. அங்கு ஒரு வருஷத்தில் கிடைக்கிற வியாபார லைசென்ஸ் மறு வருஷம் கிடைக்குமென்ற நிச்சயமில்லை. கிடைக்காவிட்டாலோ அத்துடன் வியாபாரத்தை எடுத்துவிடவேண்டியது தான். போதாக்குறைக்கு இப்போது இந்தியர்கள் அங்கே ஒரு மனைவி மட்டும் உடையவர்களாயிருக்கவேண்டுமென்றும், அந்த வகதாரக்காரர்களின் மனைவிகள் மட்டுமே அங்குவிடப் படுவார்களென்றும் வருஷத்திற்கு இத்தனைபேரைத் தவிர அதற்குமேல் அங்கு வர விடப்படமாட்டாதென்று சட்டமும் ஏற்பட்டு விட்டிருக்கிறது.



முன்பு ஒரு தடவை ஜெ. எல். ஆர்மிட்டேஜ் என்ற ஒரு ஐரோப்பியர் ஒரு இந்தியனுடைய காதையே அறுத்து விட்டார். காதை யறுத்ததுமல்லாமல், அவர் ஒரு ஆட்டுக்குச் சமானமான இவ்விந்தியன் காதை நான் அறுத்தால் என்ன, என்று தற்காப்பாக நியாயமும் பேசினாராம்! காதறுபட்ட இந்தியன் தமது வீட்டில் வேலையாயிருந்தபோது தம் மனைவியோடு அடிதடி செய்ததை மனதில் வைத்துக்கொண்டிருந்து, அதற்கப்புறம் சில மாதங்களான பின்பு அவனை "டர்பா"னிலிருந்து ஒரு ஆளைவிட்டுக் கூட்டிவரச் சொல்லி, "நீ ஏனடா, என் மனைவியைத் தாக்கினாய் என்று அவனை ஒரு இடி இடித்துக் கீழே தள்ளி அவன் தோள் மேலேறி உட்கார்ந்து அவன் வலது காது மடலை யறுத்துவிட்டார். இக்கொடிய செய்கைக்காக முப்பது பவுன் தான் அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. இந்தியன் காதை யறுத்த குற்றத்துக்கு முப்பது பவுன் அபராதம் விதிக்கப்பட்ட மட்டில், இந்தியன் கழுத்தை யறுத்தால் 40 பவுன் அபராதம் என்றல்லவோ கருதப்படும்? இந்தியருக்கும் ஆடுகளுக்கும் வித்தியாஸமில்லையென்ற நிலைமைக்கு இந்தியக் கூலிகளின் ஸ்திதி வந்துவிட்ட மட்டில் அவர்களின் காதைமட்டுமா அறுக்கலாம்? அவர்களின் மூக்கை யறுக்கலாம்! அவர்களின் கண்களையும் பிடுங்கலாம்!! வெளி நாடுகளுக்குச் சென்று பணத்தை மூட்டைக்கட்டிக் கொண்டு வரலாமென்று மோசம் போகிறவர்களே! இதைக் கவனியுங்கள்!

புத்திபெறுங்கள்! உங்கள் சொந்த நாட்டிலேயே இருந்து வாழப்பாருங்கள்!

கடைசியாக சிலோன் சம்பந்தமாகவும் ஒரு குறிப்பு தெரிவித்துவிட விரும்புகிறோம்.

"ஸிலோன் அப்ஸர்வர்" என்ற பத்திரிகையின் பிரதிநிதி, ஸிலோன் லேபர் கமிஷனரான மிஸ்டர் H. ஸ்கோபிள் நிக்கல்ஸனை சமீபத்தில் கண்டு பேசியபோது, கடந்த அரை வருஷத்திலே, அதற்கு முந்தின அரை வருஷத்தில் இந்தியாவிலிருந்து ஸிலோனுக்கு வந்த கூலிகளைவிட 10,000 பெயர்களதிகமாக வந்திருக்கிறார்களென்றாராம். மலேயா ஸிலோன் முதலிய க்ரௌன் காலனி (சுய ஆட்சி பெறாத குடியேற்ற நாடு)களின் கவர்ன்மெண்டுகள், தங்கள் தேசத்திய தோட்டத் தொழில்காரர்களின் நன்மையைக் கோரி இந்தியாவிலிருந்து கூலியாட்களை அங்கு தருவித்துக் கொள்வதற்கனுகூலமானவற்றைச் செய்யும்படி தனியே உத்தியோகஸ்தர்களை நியமித்திருக்கிறார்கள். இவர்கள், இந்தியாவில் வந்தோ வராமலோ கூலியாட்கள் இங்கிருந்து கிளம்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறவர்கள். மிஸ்டர் நிக்கல்ஸன், ஸிலோனுக்கு இந்தியக் கூலிகள் கூலி வேலைக்கு வருவதற்குரிய காரியாதிகளைச் செய்யும்படி ஸிலோன் கவர்ன்மெண்டால் நியமிக்கப்பட்டவராவார். இவர் இந்தியா (முக்கியமாய் தென்னிந்தியா)வில், கூலிகளின் நிலைமை வெகுவாய் விருத்தியடைந்திருக்கிறதென்றும், அதற்கேற்றவாறு ஸிலோனிலும் சம்பள விகிதங்கள் உயர்ந்திருப்பதால், ஸிலோனுக்கு வருவதில் கூலிகளுக்கு விருப்பம் குறைந்துபோகவில்லையென்றும் சொன்னார். ஸிலோனில் தற்போது கூலிகளின் நிலைமை அபிவிருத்தியடைந்திருப்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்களென்றார். ஸிலோனில் கொடுக்கப்படும் சம்பளத்தை மெச்சுகிறார்களாம். இந்தியக் கூலிகளை, ஸிலோனுக்குக் கொண்டு வருவதில் "கமிஷன்" கூடியவரையில் முயற்சி செய்து வருகிறதென்றார். ஸிலோனில் கூலிகளின் நிலைமை வெகு நன்றாயிருக்கிறதென வேண்டியமட்டும் இந்தியாவில் விளம்பரங்கள் செய்யப்பட்டு வருகின்றனவென்றும் அவர் சொன்னாராம். ஸிலோனில் எதிர்காலத்தில் எப்போதாவது கூலியாட்கள் இல்லாமல் வருந்த நேரிடுமோவென்று மேற்படி பிரதிநிதி, மிஸ்டர் நிக்கல்ஸனைக் கேட்டதற்கு, இது விஷயமாய்ப் பிரத்தியேக முயற்சிகள் செய்யப்பட்டு வருவதால் ஒரு போதும் கூலியாட்களுக்கு ஸிலோனில் முடையேற்படாதென்றாராம். புதிதாகத் தற்போது ஸிலோனுக்கும் இந்தியாவுக்கும் போடப்பட்டுவரும் ரெயில் பாதையானது, கடல் யாத்திரை செய்து கூலி வேலை செய்யப்போவதில் பிரியப்படாத தமிழர்களை அதிகமாக ஸிலோனுக்குக் கொண்டுவர ஏதுவாயிருக்குமென்றும் அவர் சொன்னார். ஸிலோனிலுள்ள இந்தியக் கூலி வருப்பாருக்குள் சிசுமரணங்கள் அதிகரித்திருப்பதைப்பற்றிக் கேட்டதற்கு, மிஸ்டர் நிக்கல்ஸன், அவ்விஷயம் கூலிகளை வேலைவாங்கும் தோட்டக்காரர்களின் கவனத்தைச் சார்ந்ததென்றார். தாம் சமீபத்தில், குடியேற்



றப்பட்ட இந்தியக் கூலிகள் வேலை செய்யு மிடங்களுக்குச் சென்று பார்வை
யிட்டதாகவும், அங்கு சுக சரீரமுள்ள அநேக குழந்தைகள் இருந்து வருவதாக
வும் சொன்னாராம். கூலி ஸ்திரீகளின் தேக சௌக்கியத்தைக் கவனிக்க,
ஸ்திரீ வைத்தியர்களை தோட்டக்காரர்கள் நியமிப்பது அவசியமாகுமென்று
தாம் அபிப்பிராயப்படுவதாயும் சொன்னாராம்.

ஸிலோன் தோட்டக்காரர் சொந்தத்தில் இந்தியாவுக்குக் கங்காணி
களை யனுப்பி கூலியாட்களைத் திரட்டி வரும்படி செய்வதின் பலாபலனைப்
பற்றி அவர் கொள்ளும் அபிப்பிராயத்தைப் பற்றிக் கேட்டதற்கு, மிஸ்டர்
நிக்கல்ஸன், கங்காணிகளைக் கொண்டு ஆட்கள் சேர்ப்பது அவ்வளவு தூரம்
பயன் தரத்தக்கதாய்க் காணவில்லையென்றார். அதிக கூலி ஜனங்கள் உள்ள
தும், குறைந்த மழையுள்ளதுமான தெலுங்கு ஜில்லாக்களில் கங்காணியினு
டைய உதவியின்றியே ஏராளமான கூலிகளைத் திரட்டி அங்கு இறக்குமதி
செய்யலாமென்றார். கங்காணிகள் பெரும் பணக்காரராயிருந்தாலொழிய
தற்காலத்தில், கூலியாட்கள் சாதாரண கங்காணிகள் வலையில் சிக்குவதில்லை
யென்றும், வெகுவாய் அவர்கள் முன்போல் கங்காணிகளின் கையிலகப்படா
மல் சுயேச்சையாகவே இருக்கப் பிரியப்படுகிறார்களென்றும் தாம் நினைப்ப
தாய்ச் சொன்னார். மலேயா நாடுகள், இந்தியக் கூலிகளைக்கொண்டு போவ
தில் ஸிலோனுக்குப் பெரிய போட்டிக்காரர்களாயிருப்பார்களோ வென்று
கேட்டதற்கு, மிஸ்டர் நிக்கல்ஸன் மலேய நாடுகளின் போட்டி ஸிலோனைப்
பாதிக்காதென்றாராம். 5 நாட்கள் யாத்திரை செய்து மலேயநாடுகளுக்குப்
போவதைவிட, அங்கு அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளத்தைவிட அதி
கப் பணம் கொடுக்கப்படுகிற ஸிலோனிலுள்ள சில பாகங்களுக்கு வருவதில்
தான் கூலிகள் பிரியப்படுவார்களென்றார்.

"ஸிலோன் அப்ஸர்வர்" பத்திரிகையிலே காணப்படும் மேற் கண்ட
விஷயங்களிலிருந்து ஸிலோனில் இந்தியக் கூலிகளின் உண்மையான நிலை
மை எப்படியிருக்கிறதென்று வெளிப்படாவிடினும், இந்தியக் கூலிகளை
இங்கிருந்து ஏற்றுமதி செய்துகொண்டு போவதற்குரிய பிரயத்தனங்கள் பல
மாய்ச் செய்யப்படுகின்றனவென்று நன்கு தெரிகிறது. கங்காணிகளாக
விருந்து பேதைகளான கூலிகளைத் துரோகஞ் செய்து சம்பாதித்த சிலரைத்
தவிர, ஸிலோனுக்காவது மலேயா நாட்டிற்காவது சென்று வெகு வருஷங்
கள் கஷ்டப்பட்டு உழைத்தும், அவர்கள் உழைப்புக்குத் தகுந்த சம்பாத்தியத்
தையாவது அடைந்து, பொருளுடன் பணக்காரர்களாய்த் திருப்பும் கூலி
களும் இருக்கிறார்களென்று நாம் நினைக்கவில்லை ஒப்பந்தச் சீட்டின்மீது
சென்று மூன்று வருஷங்களும் அதற்குமேலும் உழைத்துப் பிறகு திரும்பி
இச்சென்னை, இராஜதானியின் துறைமுகங்களிலே வந்திறங்கும் கூலிகள்
கொண்டுவரும் பணத்தைக் கணக்கிட்டால், சராசரி தலைக்கு ரூபாய் 10 அல்
லது 15-க்கு மேலிருக்கவில்லையென்று நாம் கூறுவது புதுமையாகமாட்

டாது. இந்தியக் கூலிகள் பிறதேசங்களில் படும் கஷ்டங்களோ கொஞ்சமல்ல. அப்படியிருந்தும் அவர்கள் செல்கிறார்களே என்றால், அதற்குப் பல காரணங்களிருக்கின்றன. சம்பளம் அதிகம் கிடைக்கிறதென்ற நம்பிக்கையும், அதற்குத் தகுந்த செலவுகளிருக்குமென்பதைப்பற்றிய அறியாமையுமுள்ளவர்களாய் நமது கூலியாட்களிருக்கிறார்கள். மிராசுதார்களின் உபேக்ஷை முக்கியமான காரணங்களிலொன்று. கூலியாட்கள் அயல்தேசம் செல்வதால் மிராசுதார்களுந் தங்களுக்குண்டாகும் கஷ்டநஷ்டங்களையறிகிறார்கள் ஆனால் அதைத் தடைப்படுத்துவதற்குற்ற பிரயத்தனங்களைச் செய்வதில்லை. மிராசுதார்கள் ஆட்களுக்கு வேண்டிய சௌகரியங்களை அபிவிருத்தியுடன் செய்து கொடுக்கவேண்டும். அயல்நாடுகளுக்குச் செல்வதால் அவர்களுக்குண்டாகும் கஷ்டநஷ்டங்களைப் பிரசங்கங்கள் மூலமாய் ஆட்களுக்குப் போதிக்கவேண்டும். சுய தேசத்திலேயே கூலியாட்களின் நிலைமை அபிவிருத்தியாகுமாறு மிராசுதார்கள் முயன்றாலொழிய, இருவகுப்பாருடைய கஷ்டங்களும் இலகுவில் நீங்காது அதிகமாய்க் கொண்டே போகும்.

## அத்தியாயம். 6.

மறுநாள் அருணோதயத்தில் ரெங்கசாமி எழுந்திருந்து வழக்கப்படி தன் காரியங்களை முடித்துக்கொண்டு சாப்பாட்டில் உட்கார்ந்து சாப்பிடுகையில், அவன் முகம் வாடியிருப்பதைத் தாய் கண்டு, “என்னடா மகனே! ஒருவகையாயிருக்கிறாய்? நேற்றுச் சாயங்காலம் நேரிட்ட ஆபததினால் உனக்கு ஏதாவது வருத்தமுண்டாயிருக்கிறதோ” என்று கேட்க, அதற்கு அவன் அதைக்குறித்து ஒன்றுமில்லையென்றும், வேறொரு சங்கதிதான் சொல்லிக்கொள்ளவேண்டியிருக்கிறதென்றும், அதைத் தன் தங்கை தம்பி இராதவிடத்தில் தனித்துச் சொல்லவேண்டியிருக்கிறதென்றும் சொன்னான். அவன் சாப்பிட்டு எழுந்தவுடனே அந்த திக்கற்ற தாயானவள், அவன் என்ன சொல்லப்போகிறானோவென்று கவலைப்பட்டு பக்கத்தறையில் அவனை அழைத்துப்போய் இருவருமாய்ப் பேசினார்கள்.

ஹா! தாயின் அன்புக்கு நிகராக இந்த உலகத்தில் வேறொன்றைச் சொல்லக்கூடுமா? தாயானவள் தன் ஹிருதயத்திலிருந்தும் சுரந்து வருகின்ற பாலைத் தன் மகவுக்கு ஊட்டுவதன்றி, அதைப் பத்து மாதம் தன் வயிற்றிற் சுமந்திருந்து பெற்றவளாதலின் தகப்பன் அன்பினும் தாயின் அன்பே சிறந்ததாமென்க. அடா மகனே! என்று அழைத்த சொல்லில் கேவலமான வார்த்தையாகிய அடா என்பதற்கு இந்த இடத்தில் எவ்வளவு உள்ளன்பும் மதிப்பும் ஏற்பட்டுப் போய்விட்டது பார்த்தீர்களா? பூவுடன் சேர்ந்த நார்போல், அடா என்ற இழிந்த பதமானது தாயின் அன்புடன், கலந்து கௌரவம் பெற்று விட்டது! ஒரு பெண் தன் மகனை முத்தமிடுகிறபோது எவ்வளவு கல்மிஷமற்றமனத்தினளாய் அன்பேஉருவமாக நின்றொளிர்கின்றனளோ அவ்வித நிலையில் “அடா மகனே” என்ற பதப்பிரயோகமும் பரிசுத்தமுள்ள தாய் அன்பிற்குறைவிடமாய் விளங்குன்றது. அந்தப்பெண்ணே தனது நாதனைத்தழுவி முத்தமிடுகையில் எவ்வளவு நாணமும் களங்கமும் காமமும் கலப்புண்டு, கலங்கிய குளத்தின் ஜலத்தைப்போல பலவகை அசுசிகளுடன் தோற்றப்படுகிறாள்? அவ்வித நிலையிலேயே அடா என்றபதமும் ஒரு சமயம் ஈனச்சொல்லாக நின்று பலவகைத்தான விரோதங்கட்கும், கலகமனஸ்தாபங்கட்கும் ஆளாக்கிவிடுகின்றது. இப்படியே, ஒரு பச்சைக் குழந்தை தனது தாயின் தனங்களைக் கரங்களால் பற்றி பாலுண்கைக்கும், ஒரு யௌவன ஆடவன் அவ்விதக்காரியத்தைச் செய்வதற்கும் எவ்வளவு தூரம் பேதம் ஏற்படுகின்றதோ அதுபோலவே அடா என்ற பதப்பிரயோகமும் அன்புடையோரால் பிரயோகிக்கப்படுகைக்கும், மற்றவர் அதை உபயோகப்படுத்துகைக்கும் தக்கவாறு பேதப்படுகின்றன. என்னடா மகனே! என்று ரெங்கசாமியின் தாய் சொன்னது எத்தனை உருக்கம்நிறைந்த சந்தர்ப்பமென்பதைச் சற்று சிந்தித்துப்பார்ப்போமாயின் அவளுடைய அன்பின் ஆழத்திற்குக் கல்லுங்கரையுமன்றோ? தாயின்மேன்மையைப்பற்றிப் பட்டணத்துப் பிள்ளையார் என்ற மகாஞானியார் கூறியிருக்கும் பாக்களை ஒவ்வொரு தமிழனும் ஆர்வத்துடனும் ஓதக்கடவானாக.

நிற்க, அன்று காலையில் ரெங்கசாமி வழக்கப்படித் தன் தொழிலுக்குப் போனபோது, கண்களில் நீர் ததும்பத் துக்கத்தோடு போனான். இவன் தாயை விட்டுவந்த அறையினின்றும் பெருமூச்சும் விம்மிவிம்மி அழுகிற சப்தமும் கேட்டது. அன்று சாயங்காலமும் இவனும் ஸ்ரீநிவாஸனும் பாலத்தண்டையே மறுபடி சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தனர். ஸ்ரீநிவாஸனுடைய சிறிய தகப்பன் வீட்டிற்கு வந்து விட்டதாயும், ரெங்கசாமியைப் பார்க்க விரும்புகிறதாயும் இவர்களுக்குத் தெரியவந்து, உடனே இருவரும் அவனைப் பார்க்க விரைந்தோடினார்கள். அவனைக்கண்ட விடத்தில், ஸ்ரீநிவாஸன் ரெங்கசாமிக்கு உற்சாகம் உண்டாகும்படி, முன்னாள் சாயங்காலம் இவன் பிராணனுக்கு வந்த ஆபத்தையும், ஆற்றில் குதித்து விழுந்து குழந்தையைக் காப்பாற்றின இவன் தீரத்தையும் புகழ்ந்து பேசினான். ரெங்கசாமி அன்று காலமே தான் கப்பலேறிப்போகும் சங்கதியைத் தன் தாயுடன் வெளியிட்டதாயும், அவள் மிகவருந்தத்தோடு முடிவில் சம்மதித்ததாயும் சொன்னான்.

இதையெல்லாம் கேட்ட அந்த ஸ்ரீநிவாஸனுடைய சிறிய தந்தையாகிய கப்பல் உக்கிராணக்காரன் ரெங்கசாமியைக் குறித்துக் கப்பற்காரனுக்கு எழுத நிச்சயித்துக் கடிதம் வரைய, அந்த நிருபம் நல்ல சமயத்தில் போய்ச் சேர்ந்தமையால், அவன் உடனே காலியாயிருக்கிற கையாள் வேலைக்கு ரெங்கசாமியை அழைத்து வரவேண்டுமென்று தன் உக்கிராணக்காரனுக்கு உத்தரம் எழுதியனுப்பினான். இந்த உக்கிராணக்காரன் வேண்டிய ஏற்பாடுகளை ரெங்கசாமிக்குச்சொல்லி, பிரயாணச்சாமான்களைக் கூடியவரையில் சேகரித்து கப்

பலுக்குத் தன்னுடன் கொண்டுபோக உடன்பட்டான். ஸ்ரீநிவாஸனுடைய பிரயாணச் சாமானோ, முன்னமே கப்பலில் போய்ச்சேர்ந்து விட்டது. ரெங்கசாமியின் பிரயாண நாள் சமீபிக்கச் சமீபிக்க, அவன் தாய், பிள்ளை தீவாந்தரம் போகப் போகிறனே என்னும் மனோ வேஷ்டையால் நாளுக்கு நாள் தேஹ சொஸ்த மில்லாதவளானாள். அவன் தங்கையும் தம்பியும் மிகச் சிறியவர்களாயிருந்தும் முகக்களை மாறி ஏக்கமுற்று, அவனைப் பார்க்கும்போதெல்லாம் திகிலும் திகைப்பும் உள்ளவர்களாய்த் தங்கள் தகப்பனார் ஓடிப்போன தினத்தில் பரதவித்தது போல் இப்போதும் பரதவிப்பதை ரெங்கசாமி கண்டான். இப்படி ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துப் பரிதபித்துக் கொண்டிருக்கும்போது பிரயாணகாலமும் வந்து விட்டது; அவன் போய் வருகிறேன் என்று சொல்லிப் பிரிந்து போனான். ஹா போய்வருகிறேன் என்ற சொல்தான் எவ்வளவு உருக்கமான கடைசிச் சொல்! அதன் அருமையை, பிரிவு நேரத்தில் துன்பமும் பாசமும் காட்டியவர்களே அறியவல்லார்கள். அது போலவே போய் வருகிறேன் என்று ரெங்கசாமி விடை பெற்றுப் போன அப்பிரிவுகாலத்தில் அவர்கள் பட்ட வருத்தத்தை இவ்வித மென்று சொற்களால் அறிவிப்பது அசாத்தியம்! சென்னப்பட்டணத்தின் சமுத்திரக் கரையோரமாய்ச் சேரப்புறப்பட்டு, பணச்செலவைச் சுருக்கும் பொருட்டும் வழியில் வந்து ஒருவரைக் கண்டு பிரயாணச் செய்தியைச் சொல்லும் பொருட்டும் தேனாம் பேட்டை வரையில் கால் நடையாய் வந்து, அங்கிருந்து கூலி வண்டியிலேறி துறைமுகம் போய்ச் சேருகிற தென்று முன்னமே ஏற்பாடு செய்யப்பட் டிருந்தது.

அந்தப்படியே வந்து ஸ்ரீநிவாசன் சந்திக்க, ரெங்கசாமி கண்ணுங் கண்ணீருமாய் இருப்பதைப் பார்த்து "இந்தப் பேய்த்தனமெல்லாம் இந்த ஊரிலேயே வைத்து விடு; பரதேசத்துக்கு இது வெல்லாம் உதவாது" என்று தெளிவு பிறக்கச் சொன்னான். "பிரிந்து வருவது எனக்கு மிகுந்த வருத்தத்தைத் தந்ததப்பா! என் தாயின் மனது உருகிப்போயிற்று; ஆயிரம் தடவை என்னைக் கட்டிப் பிடித்து தேகமெல்லாம் முத்தமிட்டுக் கொண்டாள்; என் உள்ளங்கையை எடுத்துத் தன் கன்னத்திலும் கண்களிலும் ஒத்திக் கொண்டு முத்தி செய்தாள். உன் தகப்பனைப் பிரிந்தது போதாமல் உன்னையும் பிரியவேண்டியவளாய் விட்டேனடா மகனே என்று பெருங்குரல் பாய்ச்சி அழத்தொடங்கிக் கொண்டாளப்பா! நான் பயணம் சொல்லிக் கொண்டு வீட்டைக் கடந்து சிறிது தூரம் வந்த பிறகு, என் அன்புள்ள தாய் கண்ணீருங் கம்பலையுமாய் ஓடி வந்து வெறி கொண்டவள் போல் என்னைப் பிடித்துக் கொண்டு மறுபடியும் ஒரு முறை உன் அழகான முகத்தைக் காட்டடா மகனே என்று முகத்தைத் தன் பக்கமாகத் திருப்பிப் பார்த்து முத்தமிட்டுக் கொண்டு, ஐயோ இந்த அருமை முகத்தை என்று நான் காண்பேனடா அப்பா! என்று அழுதாள்! பிறகு நான் சமாதானப்படுத்தி அவளை அங்கேயே நிறுத்தி விட்டுப் புறப்



பட்டேன். நான் ரோட்டிற்கு வரும்போது எனக்கு முன்னதாகவே குறுக்குச் சந்துகளின் வழியாய் என் தாய் ஓடி வந்திருக்க வேண்டு மென்று காண்கிறது. அங்கே அவள் என்னை எதிர்பார்த்து நின்று கொண்டிருந்து என்னைக் கண்டதும் அலறிக் கொண்டு ஓடிவந்து கட்டிப் பிடித்துக் கொண்டாள். எங்கே இன்னொரு தடவை உன் முகத்தைக் காட்டடா என்று என் முகத்தைத் தன்னிரு கைகளாலும் பிடித்துக் கொண்டு கண்ணீருதிர்த்து, அடாமகனே! சீக்கிரம் நீ திரும்பிவந்து இந்த முகத்தை எனக்குக் காட்டுகிறாயாடா என்று அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய்க் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள். பிறகு அவளே தன் மனதைத் தேறுதல் செய்து கொண்டு என்னைப் போய் வாடா என்று அனுப்புவித்தாள். நான் இரண்டடி எடுத்து வைத்தவுடனே அப்பா மகனே! நான் நெல்லுக் குத்தியாவது, நாலு வீடு போய் பிச்சை யெடுத்தாவது உன்னைக் காப்பாற்றுகிறேனே, நீ இங்கு தானே இருந்து விடப்பா என்று கூறினாள். பிறகு மறுபடியும் "உன் இஷ்டத்தைக் கெடுக்கப்படாது சுகமாய்ப் போய் வா" என்று சொல்லி அனுப்பி வீட்டுக்குப் புறப்பட்டுப் போனாள். வீட்டிலே குழந்தைகளும் என் தாயைப்போலவே துக்கித்தார்கள். அவர்கள் வெளியில் என்னுடன் ஓடிவாராதபடி அறையில் போட்டு பூட்டி விட்டு என்னை வழியனுப்பியபோது உள்ளே யிருந்து என் தங்கையும் தம்பியும் தங்களின் அழகிய மதலைச் சொற்களால் சிறு வாயைத்திறந்து அண்ணா அண்ணா! ஐயோ அண்ணா! என்ற அழுதபோது என்மனம் பிளந்துபோய் விட்டது. என் தாய் என்னிடத்தில் அன்பினால் அவள் கஷ்டத்தோடு கஷ்டமாய் ஐந்து ரூபாய் முடிச்சொன்று என் கையில் வைத்து, இதைக்கொண்டு போடா மகனே! என்றாள். நான் "வேண்டாமம்மா தாயே, நீயே செலவுக்கு வைத்துக்கொள்" என்று அநேகந்தரம் சொல்லியும், அவள் மறுத்து மறுத்து, "உனக்கு வழியில் பணம் வேண்டியிருக்கும்; ஆகையால் நீ இதைக் கையில் கொண்டுபோ" என்று பிடிவாதம் செய்தாள். நான் அதை வாங்கி மடியில் வைத்துக்கொள்ளுகிறவன்போல் வைத்துக்கொண்டு, அவளறியாமல் மடியினின்றும் நழுகவிட்டு அங்கே நிற்காமல் உடனே ஓடிவந்து விட்டேன். ஹா ஹா! தாயினுடைய அடி ஆழத்திலிருக்கிற அன்பைக்கூட இன்று கண்டு கொண்டு உள்ளம் உருகினேனப்பா! தாய்–தாய்–தாய்-தாய்–தாய்–தாய்–தாய்-தாய்–தாய்–தாய்-அம்மா–அம்மா – அம்மா–அம்மா–அம்மா–அம்மா–அம்மா– ஹா! ஹா! எவ்வளவு உருக்கமான சொல்! இந்த சொல்லை மறுபடியும் நான் சொல்லி என் தாயைப் பிரியத்தோடும் கூப்பிடும்படியான நாள் எப்போதோ" என்று தேம்பித் தேம்பி அழுதான்.

அதற்கு ஸ்ரீநிவாஸன், "என்னடா சுத்தப் பைத்தியக்காரனாய் இருக்கிறாய்? அந்தப் பெண்பிள்ளைக்காக இவ்வளவு வருத்தமென்ன? ஓடிப்போன உன் தகப்பனைப்பிரிந்து அவள் இருக்கவில்லையா? அவள் கொடுத்ததை இதுவும் ஒரு லாபமென்று கைப்பற்றாமல் ஏன் போட்டுவிட்டு வந்தாய்? இன்

றைக்கே மோரிஸ் தீவுபோய்ச் சேர்ந்து விடலாமென்று நினைக்கிறாயோ? நெடுநாள் பிரயாணத்தில் ஏதாகிலும் செலவு நேரிடுமென்று உனக்குத் தெரியாதா?" என்றான்.

அதற்கு ரெங்கசாமி, "என் செலவிருக்கட்டும், என்னைவிட அவனுக்கு அந்த ஐந்து ரூபாய் எத்தனையோ செலவுக்கு உதவுமே; அதை நீ நினையாமல் பணத்தையே பெரிதாய்ப் பாவிக்கிறாய். நீ இப்படிப் பெரியோரைக் குறித்து அலக்ஷியமாய்ப் பேசுகிறதினால் உன்னிடத்தில் எனக்கு அதிக விசுவாசம் உண்டாக மாட்டாதென்று நினை" என்று கடிந்து சொன்னான். இப்படி ரெங்கசாமிக்குக் கோபம் வந்ததை ஸ்ரீநிவாஸன் அறிந்து ஸமயோசிதமாய் இதம்பேசி வேறு சங்கதி யெடுத்துப் பராக்குக் காட்டிக் கோபத்தைத் தணித்தான். பின்பு ஸஹஜமாய்ப் பேசிக்கொண்டு போய்த் தேனாம்பேட்டைத் தாண்டி ஆயிரம் விளக்கண்டை வருகையில், நடை வருத்தத்தால் சிலருடன் கூட்டாக ஒரு கூலி வண்டி வைத்துக்கொண்டு தங்கள் பிரயாண மூட்டை முடிச்சுகளைப் பத்திரமாய் அதில் ஒரு பக்கத்தில் வைத்துத் தாங்களும் குதித்தேறி உட்கார்ந்தார்கள். வண்டிக்காரன் பட்டணத்துக் குஜிலிக்கடையில் கொண்டுபோய்விடக் கூலிபேரஞ் செய்து எல்லாம் இசைந்து புறப்படச் சற்றுக் காலதாமதமாயிற்று.

"மூட்டை முடிச்சுகளைச் சீராய் வைத்துக்கொண்டு முன்பளுவில்லாமல் எல்லோரும் சரியாய் நிரவி உட்கார்ந்தீர்களா? வண்டி விடலாமா?" என்று வண்டிக்காரன் கேட்க, "எல்லாம் சரிதான் நீ ஓட்டு" என்று வண்டியிலுள்ளவரெல்லோரும் உரத்துக் கூவிச்சொல்ல, அவன் குதிரையை அடித்தோட்டினான். குதிரை நாலைந்தடி வைப்பதற்குமுன் ஒரு பெண்பிள்ளை பெருமூச்சு விட்டுக்கொண்டு வியர்வை தேகாத்தியந்தம் ஒழுக ஒழுக ஓட்டமும் பெருநடையுமாய் வண்டி சக்கரத்தின் பக்கமாய் வந்து, "சற்று நிற்கட்டும் நிற்கட்டும்" என்று கூவினாள். ரெங்கசாமி திரும்பிப்பார்த்துத் தன் தாயென்று அறிந்து, "ஏனம்மா! இப்படி ஓடிவந்தாய்" என்றான்.

அவள், "அப்பாமகனே! நான் கொடுத்த முடிச்சைப் போட்டுவிட்டு வந்தாயே" என்று அதை அவன் மடிமேல் போட்டதைப் பார்த்து: "நில்லம்மா, நான்போய் வருகிறேன், இதற்காக இவ்வளவு தூரம் ஏன் ஓடிவந்தாய்" என்று ரெங்கசாமி சொல்லவே, வண்டிக்காரன் குதிரையைத்தட்டி வேகமாய்விட, வண்டி விரைவாய் ஓடிற்று.

அந்த ஆதாரமற்ற அநாதைப் பெண்பிள்ளையானவள் நெடுந்தூரம் கால் கடுக்க ஓடிவந்த இளைப்பினாலும் பிள்ளை பிரிந்துபோன துயரத்தினாலும் வீட்டிற்குத் திரும்புகையில், மண்காற்று வீசுகிற மேடுபள்ளமான பாதையில் நடக்கமாட்டாமல் கால் பின்னிக்கொண்டு அடிமேலடி வைத்துத் தள்ளாடிக்கொண்டு சென்றாள். அவள் இவ்விதமாய்ப் போய்க்கொண்டிருக்கும்போதே தன் அருமை மகனுக்கு என்னென்ன அபாயம் நேரிடுமோ, என்னென்ன



மோசத்தில் அகப்பட்டுக்கொண்டு வருந்துவானோ என்று சிந்தித்துக்கொண்டு மனம் அவன் பின்னேயும் உடல் மாத்திரம் வழியிலேயுமாகப் போனாள். இப்படியாகக் கொஞ்சந்தூரம் செல்லுகையில், சூரியன் மறைந்து இருட்டு அதிகரித்துவர, அவள் அடி யெடுத்து வைக்க மாட்டாமல் சாலையிலிருந்த ஒரு மரத்தின்மேல் சாய்ந்து நின்று பிள்ளையை நினைத்துக் கதறியழுதாள். பிறகு கணவனையும் நினைத்துக்கொண்டு "அவர் இருந்தால் இப்படி நடக்குமா" என்று பிரலாபித்தாள். அப்புறம் தனக்குத் தானே தேறி, வீட்டிலிருக்கிற குழந்தைகளை நினைத்துக்கொண்டு கூடியமட்டும் நடந்து கொண்டே போகையில், "தெய்வமே என் பிள்ளைக்கு யாதொரு அபாயமும் வரவொட்டாமல் காத்து க்ஷேமமாய் வீடு வந்துசேரும்படி கிருபை செய்ய வேண்டும்," என்று மனவுருக்கத்தோடு ஆபத்பாந்தவனை அத்தியந்த பக்தியுடன் துத்தியஞ்செய்தாள். இந்த ஏழையின் பிரார்த்தனையை அந்த அந்தகாரத்தில் காது கொடுத்துக் கேட்க ஒருவரும் இல்லாமற் போயினும், எங்கும் வியாபித்துச் சர்வாந்தரியாமியா யிராநின்ற ஜகதீசன் காதுக்கு எட்டாமலிருக்கவில்லை; அகதிக்கு ஆகாயமே துணை.

இவள் தட்டுத்தடுமாறிக் கொண்டு வீட்டிற்குச் சமீபத்திற் போகையில், இவள் வருகைக்கு எதிர் பார்த்துக் கதவு திறந்து வைக்கப்பட்டிருந்தது. வெளியில் லயோடிஸ் என்ற சீனத்தேசத்தான் உட்கார்ந்திருந்தான். வாசற்படி ஏறின வுடனே இவள் மகன் ரெங்கசாமி வீட்டிலிருந்து வந்து, அம்மா! என்று கட்டிக்கொள்ள, அவள் சந்தோஷ மிகுதியால் "மகனே! என்மகனே!" என்று பிள்ளையைக் கட்டிக்கொண்டு வெறிகொண்டவள் போலக் கூவினாள். இவ்வித அமளி யடங்கிச் சற்று தெளிவு பிறந்தவுடனே, ரெங்கசாமி தன் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக ஒழுக ஒழுக, தன் தாய் தன்னைப் பின்தொடர்ந்து ஓடிவந்து வண்டியண்டைக் கண்டது முதல் தன்மனம் நிலை கொள்ளாமல் தத்தளித்து, போகப் போகப் பிரயாணத்தின்மேல் வெறுப்பும் வியாகூலமும் அதிகரித்துத் தன் பிரயாணத்திற்கு அவள் ஒருவாறு ஒப்புக்கொண்ட போதிலும், தன் தகப்பன் தன் தாயை எப்போதும் கை விடாதே யென்று சொன்ன புத்திமதியை மறந்து தாயின் உட்கருத்துக்கு விரோதமாய்த் தான் அவளை நிர்க்கதியாக விட்டுப் பரதேசம் போவது தன் கடமைக்குப் புறம்பென மனசாக்ஷி தனக்கு இடித்துரைத்த தென்று சொன்னான். அதனால் தன் மனவருத்தத்தைப் பொறுக்கமாட்டாமல் ஓரிடத்தில் வண்டி சற்று நின்ற சமயத்தில் இவன் அதினின்று இறங்கி, ஸ்ரீநிவாஸனை ஒரு நிமிஷகாலம் இறங்கி வரச்சொல்லி, அவனை நாலடி அப்புறம் அழைத்துக்கொண்டு போய்த் தன் மனோபாவத்தைத் தெரிவித்து, "அஷ்டமத்துச்சனி அரைத் துணியும் உரிந்து கொண்டது என்பதற் கேற்க, கையிலிருந்த ரூபாய் முடிச்சை அவன் கையில் கொடுத்து, "உன் சிற்றப்பன் எனக்காகப்

பிரயாணச் சாமான்களைச் சேகரித்ததில் நேரிட்ட நஷ்டத்திற்கு இதைச் சொற்ப ஈடாக அவரிடத்தில் கொடுத்து, நான் வாராமையை மன்னிக்கச் சொல்லப்பா" என்று கூறிவிட்டு, ஸ்ரீநிவாசன் தடுத்துத் தர்க்கம்பேச இடங்கொடாமலே க்ஷணம் திரும்பிக் கிளைவழி மிதித்தோடிக் காற்றாய்ப் பறந்து தாய்க்குமுன் வீடு வந்துசேர்ந்துவிட்டான். அதே நேரத்தில் லயோடிஸ்ஸும் அங்கு வந்து சேர்ந்து ரெங்கசாமியைப் பார்த்து "நான் உன் தகப்பனுடைய நண்பன்; உனக்கும் அப்படியே விளையாட்டுத் தோழனாக இருந்து வருவேன். இனி நீ இந்த மாதிரி எங்கேயாவது போய்விடுவதான காரியத்தில் மனதைச் செலுத்தாதே; உன் வீட்டுச் செலவுக்காக தினம் ஒரு ரூபாய் தருவதோடு அரிசி முதலியவைகளையும் நான் குறிப்பிடுகிற கடையில் இனாமாகப் பெற்றுக் கொள்; எவ்வளவு தேவையானாலும் கொடுக்கும்படி செய்திருக்கிறேன்; அதுவும் தவிர இந்தா ரூபா 500 இதைப் பத்திரமாக நீ வைத்துக் கொண்டு உன் வேடிக்கைச் செலவுக்கு உபயோகப் படுத்திக்கொள். உன் பேருக்கு ஐயாயிரம் ரூபாய் போல இன்னும் ஆறுமாதத்தில் பாங்கியில் போட்டு விடுகிறேன். இது சத்தியமாகச் சொன்னவார்த்தை. இவ்வளவும் உனக்குக் கொடுபடுவது என்னாலல்ல. நீ உன் தாயின் அன்பினுடைய ஆழம் தெரிந்து அவளை நிர்க்கதியாக விடாமல் மறுபடியும் அவளைக்காத்துவர வீடு சேர்ந்த உத்தம குணத்துக்காகக் கடவுள் என் மூலமாக உனக்கு இந்த நன்மையை அனுப்பியிருக்கிறாரென்றான். இப்போது ரெங்கசாமியின் சந்தோஷம் எவ்வாறிருக்கவேண்டும்; அவனோ பிரமித்துப்போனான். தான் இனி தீவாந்திரத்தில் எலும்பு நோக உழைத்துப் பணம் தேடி வருவவற்கு முன், இப்போது தனக்கே சொந்தமாக, தன் தாயை ஆதரிக்க முற்பட்ட கடமைக்காக 500 ரூபா ரொக்கமாக ஒரு பையாகக் கிடைத்ததென்றால் அவனுடைய மனப்பூரிப்பைக் கேட்பானேன்? லயோடிஸ்ஸின் காலில் வீழ்ந்து நமஸ்கரித்துவிட்டு ஏதும் பேச வாயெழாமல் நின்ற சமயத்தில் அவன் தாயும் தள்ளாடிக்கொண்டுவந்து சேர்ந்தாள். அவள் லயோடிஸ்ஸின் உதாரத்வத்தை வெகுவாகப் புகழ்ந்து தனது பிரார்த்தனையைக் கடவுள் உடனே கேட்டு தன்மகனைத் தன்னிடம் ஒப்புவித்ததன்றி ஒரு தயாளுவைக் கூடத் தனக்குக் காண்பித்த கருணைக்காக வெகு உருக்கத்தோடும் பரந்தாமனை வழிபடலானாள். அன்று முதற்கொண்டு லயோடிஸ் தான் சொன்ன வாக்குப் பிசகாமல் அவர்களுக்கு சகாய புருஷனாக இருந்து கொண்டிருந்ததன்றி ரெங்கசாமியின் பிராணபதமான நண்பனுமாகி விட்டான்.

மறுநாட்காலையில் அக்கம்பக்கத்திலுள்ளோரும் சுற்றத்தாரும் "திரவியம் தேடத்துணிந்து புறப்பட்ட பிரயாணம் வெகு சீக்கிரத்தில் முடிந்தது போல் காணுது. நீ மிகுந்த ஆண்மையுள்ளவன் தான்" என்று ஏளனம் செய்தனர். ஆகிலும் இவன் பாலத்தினின்று ஆற்றில் விழுந்து முழுகிப்போன குழந்தையாகிய தன் தம்பியைத் தன் உயிருக்கு அஞ்சாமல் குதித்து எடுத்த



சங்கதி ஊர்முழுதும் அறிந்திருக்கிறபடியால், இவனை அதைரியஸ்தன் என்று ஒருவரும் இழிவாய்ச் சொல்லவில்லை. மேலும் சில வாரம் சென்றபின் இவனைக் கேலி செய்தவர்களெல்லாம் வாய்மூடும்படி நேரிட்டது. இவன் ஏறிப்போக உத்தேசித்திருந்த கப்பல் மோரீசுக்குப்போகும் பெருங்கடலில் பிரமாதமான ஒரு புசலில் அகப்பட்டு உருத்தெரியாமல்முழுகிப்போய் விட்டதென்று சமாசாரம் தெரியவந்தது. இப்படி இவன் திரவியாபேக்ஷையைப்பற்றிக் கப்பலேறாமல் தன் கடமையை நாடி நின்றதனாலல்லவா கடலில் அநியாயமாய் முழுகிப்போகாமல், கடவுளின் அநுக்கிரகம் பெற்றுத் தாய்க்குப் பிள்ளையாய் வீடுவந்து சேர்ந்தான் என்று ரெங்கசாமியைக் கொண்டாடினார்கள்.

இவ்வளவு தூரம் நமது ரெங்கசாமி வருந்தும்படியும் தான் தாயைப் பரிதபிக்க விட்டு தீவாந்தரம் செல்ல முயலும்படியும் நேர்ந்தது ஸ்ரீநிவாஸனுடைய அற்ப சகவாசத்தாலல்லவா? ஆகவே சிறியோரே! பெரியோரே! நீங்கள் உங்களுடன் சகவாசம் செய்கிறவர்களை ஸத்பாத்திரர்களாயிருக்கும்படி தெரிந்தெடுத்துக் கொள்ளுங்கள். உலகத்தில் அநேகர் பலவிதங்களாகக் கெட்டுப்போவதற்கு சகவாஸதோஷமே காரணமாயிருக்கின்றது. சுத்தமான வெள்ளை வஸ்திரத்தில் எவ்விதமான சாயத்தையும் ஏற்றி அந்த சாயத்தின் வர்ணத்திற்கு அதைத் திருப்பலாம். ஆனால் பழையபடி வெள்ளை வஸ்திரமாக மாற்றமட்டும் முடியாது. அப்படியே போல நிர்மல சித்தர்களாயிருப்பவர்கள் துஷ்டசகவாசங்கள் செய்து அத்துஷ்டர்களைப்போலக் கொடிய மனதுடையவர்களாக மாறி விடலாம். ஆனால் முன்பு தாங்கள் இருந்த பரிசுத்தமான ஸ்தானத்திற்கு மட்டும் மறுபடியும் வரமுடியாது. என்னதான் முயன்றாலும், துற்சகவாசத்தினிடமே மனது செல்லும். நல்லசகவாசத்திற்குள்ள சக்தியைப்பார்க்கினும் துற்சகவாசத்திற்கே விசேஷித்த திறனும் வசீகரிப்பும் இருத்தலால் உங்கள்வாணாட்களை மிகுந்த எச்சரிக்கையுடனும் செலுத்தப் பாருங்கள். பொடி, சுருட்டு, மதுபானம், வேசையரில்லம்நாடல், தன்னைத் தான் அழித்தல் முதலிய துர்கிரியைகளும் இன்னும் இவை போன்ற அனேக கேடு பாடுகளும் ஒருவனுக்கு உண்டாவது ஸஹவாச தோஷத்தினாலேயே தான். ஆகவே உலகமாந்தர்காள்! ஒருவனிடம் ஸகவாசம் செய்யும் விஷயத்தில் நீங்கள் வெகு எச்சரிக்கை கொள்ளுங்கள்.

## அத்தியாயம். 7.

அந்தக்கல் நெஞ்சினனான மார்வாடியைக் கண்டால் தலைமறைவாய்ச் செல்லாதவர் கிடையாது. எந்த வீட்டில் பணத்துக்குத் தடையாயிருப்பினும் அது மார்வாடி மூக்கில் வேர்க்கும். நயவஞ்சகத்திலும் அடாவடித்தனத்திலும், அக்கிரமவட்டி வாங்குவதிலும் அவன் லோகப்பிரசித்தன். அவனால் அதோகதியான குடித்தனம் அநேகம். ராதாதேவி தன்

தந்தை தள்ளாமைக்காலத்தில் சீக்காக விழுந்து விட்டபடியால், தான் ஒரு தனவந்தர் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த தொழிலையும் விட்டுவிட்டு தந்தைக்கு சிசுருஷை செய்து பாதுகாக்கத் தன் வீடுவந்தான். அவன் கொண்டு வந்த கொஞ்சம் பணமும் சிலநாட்களுக்குள் செலவழிந்து விட்டது. தகப்பனாரும் தமது வியாதி சொஸ்த மாகாததால் பம்பாயில் தனது பந்து ஒருவர் வீட்டுக்குச் சென்றார். பருவபக்குவமாகக்கூடிய ஸ்திதியில் இருந்த தனது பெண்ணை அங்கு அழைத்துச் செல்வது கௌரவக்குறைவென்று கருதி, எப்பாடுபட்டேனும் சென்னையிலே யிருவென்று வற்புறுத்தி விட்டுப்போனார். இங்கே ராதாதேவியோ கையிலிருந்ததும் செலவழிந்து போனதால் ஜீவனத்திற்கு ஒன்றும் ஹேதுவில்லாமல் மிக்க ஸங்கடப்பட்டுக் கொண்டிருக்குங் காலத்தில், மார்வாடி அவ்விடம் வந்து குதித்து, வீட்டு அடமானத்தின்மேல் தான் வேண்டிய பணம் கொடுப்பதாக உற்சாகப்படுத்தினான். வேறு திக்கில்லாத ராதாதேவி, பின்வரும் கெடுதியைச் சிறிதும் உணராது, தகப்பனார் அக்கடனைத்தீர்த்து விடுவாரென்று நம்பி,—அப்படி அவர் தீர்க்காவிட்டாலும் தான் இளமை முதற்கொண்டு நேசித்துவரும் ரெங்கசாமி தீர்த்துவிடக்கூடு மென்று கருதி,—சூதுக்கார மார்வாடியின் வார்த்தையை நம்பி கடன் வாங்கினாள். இது அவளுடைய பன்னிரண்டாவது பிராயத்தில் நடந்தது. அவள் மைனராக இருந்த போதிலும் அந்த வீடு அவளுடைய தாயாரின் சீதனமாக அவளுக்குக் கிடைத்து பத்திர மூலமாக அவளுக்கே உரிமை யாக்கப்பட்டிருந்த விஷயம் மார்வாடிக்குத் தெரியுமானதால், அவனும் தாராளமாகக் கடன் தரலானான். அவ்விதமாக ராதாவின் வீடு தனக்கு சுளுவில் பலிதமாயிற்றென்று களித்து தீவிரமாய் நடந்து சென்ற மார்வாடி, சிறிது தொலையில் விவசாய சாஸ்திர நிபுணனான ரெங்கசாமி தன்னுடைய பயிற்சியின் நிமித்தமாக வயலில் வேலிகட்டிக் கொண்டிருப்பதைக்கண்டு அவனிடம் சென்று "ரெங்கா இந்த உக்கிரமான வெய்யிலில் ஏன் இப்படி உழைக்கிறாய்" என்றான். அதற்கு ரெங்கன் "உன்னைப் போன்ற இரத்தம் உறிஞ்சிகளின் வலையில் சிக்காதிருக்கும் பொருட்டுத்தான் என்றான். அதற்கு மார்வாடி "இப்படி வயலில் வேலைசெய்து பிழைத்தும் இறுமாப்பு மாத்திரம் அகலவில்லையே. இக்காலத்தில் பெரியவர்(?)களுக்கு மரியாதை செய்வதே அற்றுப் போய்விட்டது என்றான். அதற்கு ரெங்கசாமி "நான் ஏதோ கண்ணியமாய்ப் பிறருக்கு இம்சையின்றி ஜீவனஞ் செய்து வருகிறேன்; அதேவிதமாக உன்னைச் சொல்வதற்கில்லையன்றோ? உண்மையில் பெரியவர்களுக்குப் பரிஷ்காரமாக இக்காலத்திலும் மரியாதை நடந்து வருகிறது. ஆனால் நீ செய்யும் அக்கிரமங்கள் கணக்கு வழக்கற்றது, குடியானவர்களுடைய ஆடு மாடுகளையும், நிலத்தையும், தானியத்தையும், சிறிதும் ஈர இரக்கமின்றி நீ கட்டிக்கொண்டு விடுகிறாய். எத்தனையோ ஏழைக் குடும்பங்களின் கண்ணீருக்கும் கம்பலைக்கும் நீ வழி சொல்ல வேண்டிவரும். அவர்களுடைய சாபம் சும்மா போகுமா?" என்றான்.



OFFICE OF THE REGISTRAR ... REGISTERED 3-NOV.1913 MADRAS.

மார்வாடி.—கொஞ்சமும் பயபக்தியின்றி நீ இவ்விதம் பேசுகிறாயல்லவா? நீயே ஒருநாள் என்னிடம் வந்து கெஞ்சிக் கூத்தாடும்படிக்குச் செய்கிறேன். இல்லாவிடில் நான் மார்வாடி யாவேனோ?

ரெங்கசாமி.—போடா துன்மார்க்கா! ஜாஸ்தி பேசினாலோ உதைதான். பட்டினியிருந்தாலு மிருப்பேனேயன்றி உன்னிடம் கடன் மாத்திரம் வாங்க மாட்டேனே என்றான்.

மார்வாடிக்கு இந்தப் பேச்சைக்கேட்டதும் சற்று தெளிவு பிறந்தது. இவன் கெட்டவன். அதிகமாகப் பேசினால் சொன்னபடி உதைப்பிரயோகம் செய்து விடுவானென்று பயந்து பரபரப்பாய் அவ்விடம் விட்டுச்சென்றான்.

இந்த சங்கதிகள் நடந்து நான்கு வருடங்களாயின. பம்பாய்க்குச்சென்ற அவளுடைய பிதாவின் கதி யாதொன்றும் தெரியவில்லை. இருக்கிறாரோ இறந்தாரோ நிச்சயிக்க முடியவில்லை. இப்போது மார்வாடியிடமிருந்து வாங்கிய கடனைத்திரும்பச் செலுத்த அவளால் கூடவில்லை. பாவம் பெண் என்ன செய்வாள்; அவளுடைய கெட்டகாலத்திற்குத்தக்கபடி அவளுடைய பாலிய நண்பனான ரெங்கசாமியோ இப்போது கேவலஸ்திதிக்கு வந்து ஒரு கூலிக்காரனைப்போல மாறிவிட்டான். அவனுடைய தகப்பனார் ராகவலு நாயுடு கொலையில் சம்பந்தப்பட்டு ஒளிந்து கொண்டதால் அவருடைய அற்ப சொற்பமான சொத்துக்களும் ஸர்க்கார் வசமாயின. ராதாதேவியின் கடனை அடைப்பதற்கு இப்போது ரெங்கசாமிக்கு சக்தி கிடையாது. அவள் பெரிதுங் கவலைமேலிட்டவளானாள். இந்த ஸ்திதியில் அவள் புஷ்பவதியாகி இரண்டு வருஷமாயிற்று. வீட்டில் துணைக்காகவும், வெளியிலிருந்து சாமான்கள் வாங்கி வருவதற்காகவும் வேறு மனுஷர்கள் கிடையாது. அந்த வேலையை ரெங்கசாமியின் தாயார் பார்த்து வந்தாள். அவளே ராதாவுக்கு இப்போது முக்கியமான துணையாக இருந்தாள். இப்படிப்பட்ட சமயத்தில் ரெங்கசாமி தீவாந்தரம் செல்வது கேட்டு புழுத்துடிப்பதுபோல் துடித்தாள். ஆனால் தன்மனதிற்குள் இருந்த ஆசையை வெளியிட்டுச்சொல்ல நாணி சகலத்தையும் மனதிற்குள் அடக்கிக்கொண்டு நின்றாள். தான் ரெங்கசாமியை மயக்கி அவனைக்கெடுத்து விட்டதாக அவன் தாயார் கருதிவிட்டால், அவளுடைய அருந்துணையையும் தான் இழக்கும்படியாகி விடுமே என்று கருதினவளாய்த் தன் மனோ அபிப்பிராயத்தை வெளியிடவில்லை.

ராதாதேவியை ரெங்கசாமிக்குப் பாலிய முதல் நன்றாகத் தெரியும். இருவரும் சேர்ந்து பள்ளிக்கூடம் சென்று படித்து வருவது வழக்கம். அவ்விளமைப் பருவத்திலேயே ராதா மூக்கும் விழியும் லக்ஷணமாயும், சாதுர்யமாகப் பேசியும் கண்டோர் மனதைக் கவரச்செய்தாள். ஐந்தாறு வருஷமாக அவன் பட்டணத்தில் ஒரு தனவந்தர் வீட்டில் சில்லரை வேலைகள் செய்து தன் தந்தைக்கு ஜீவனத்துக்கு அனுப்பித் தானும் பிழைத்து வந்தான். அவளுடைய

பூர்வீகஸ்திதி வெகு நன்றாக இருந்தது. அவளுடைய தந்தை ஒரு பிரபல வர்த்தகர். கூட்டு வியாபாரம் செய்ததில் பங்காளியின் மோசத்தினால் பெரிய நஷ்டத்தை யடைந்து தெருத்திண்ணையைக் கெதியாக அடைந்தார். வீடு ராதாதேவியின் பெயருக்கு ஸ்வாதீனப்படுத்தப்பட்டு அவளுடைய தாய் வீட்டு சீதனமாக இருந்ததால் கடன்காரர்கள் அதைக் கைப்பற்ற வழியின்றி விட்டு விட்டனர். கோர்ட்டில் இன்ஸால்வெண்ட் மனுபோட்டும் கணக்குகள்பங்காளியால் கிரமத்தவறாக எழுதப்பட்டிருந்ததால் ஜட்ஜிகள் மனுவைத் தள்ளிவிட்டார்கள். அதே விசாரத்தினால் தந்தை இளைத்து மேனிவாடி வியாதியஸ்தராய்ப்போனார். அவருக்கு ஒத்தாசையாயிருப்பதற்காக வீடு திரும்பிவந்த ராதாவை ரெங்கசாமி பார்த்தபொழுது அவளது வனப்பையும், வடிவையும், வளர்ச்சியையும் நோக்கி மனம் பூரித்தான். இந்தத் திருமேனி வாய்ந்த அப்பெண்மணியை அநேக தனவந்தர்கள் மனைவியாக அடையவேண்டுவார்கள் என்று அவனுக்கு நன்றாகத்தெரியும். அதனால் அப்பெண்ணை தனக்கு அவன் கிட்டாதபாக்கியமென்று மனஉறுதி செய்து கொண்டான். அதனால் அவன் தனக்கு ராதாதேவியின் மீதுள்ள காதலையாவது நன்மதிப்பையாவது வெளிப்படுத்தாதிருந்தான். இதனிடையே அவன் தந்தையும் மறைந்து கொண்டுவிட, அவனது நிலைமையும் கேவலஸ்திதிக்கு வந்துவிட்டது. அவனுடைய தீபாந்தரவாஸ ஆசையும் அடங்கி இப்போது வீட்டில் தாய்க்குத்துணையாக இருந்து வந்தான். அவனுக்கு லயோடிஸ் அன்றையதினம் கொடுத்த ஐந்நூறு ரூபாதான் ஆஸ்தியாக இப்போதிருந்தது. அவனிடம் லயோடிஸ்ஸுக்கு மதிப்பும் விசுவாசமும் அதிகம்.

ஒருநாள் காலையில் ராதாவின் வீடு ஏலம் போடப்படுமென்று ஊரெல்லாம் தண்டோரா போடப்பட்டதுமன்றி அச்சடித்த விளம்பரங்களும் அனுப்பப்பட்டன. லயோடிஸ் ரெங்கசாமியின் வீட்டுக்காகக் கடைக்குச்சென்று சாமான் வாங்கிவர வண்டி பூட்டி, தெருவில் நின்று கொண்டிருந்த ரெங்கசாமியை நோக்கி, "நீயும் கடைக்கு வருகிறாயா" என்று கேட்டான். ரெங்கசாமியும் ஆக்ஷேபனை சொல்லாமல் வண்டியிலேறிக்கொண்டான். வழியில் ராதாதேவியின் வீடு ஏலம் போடப்படவிருப்பதையும் அது என்ன விலைக்குப் போகுமென்பதைப் பற்றியும் ஸம்பாஷித்துச் சென்றார்கள். லயோடிஸ், ரெங்கசாமியைப் பார்த்து "அந்த வீடு எண்ணூறு ரூபாய்க்கு அகப்பட்டால் மலிவே; ஆனால் மார்வாடி அதில் கால் விலைக்குங் குறைத்தே கொள்ளப்பார்ப்பான்; அப்படியானால் நான் விலையை உயர்த்தலாமென்றிருக்கிறேன்" என்றான். அதற்கு ரெங்கசாமி ஒன்றும் பேசாமல் மௌனமாக விருந்தான். தனக்கு ராதாதேவியின் மீதுள்ள மதிப்பையுங் காதலையும் லயோடிஸ்ஸிடம் உரைப்பதற்கு மிகவும் மனம் நாணினான். லயோடிஸ் மறுபடியும் அவனைப்பார்த்து "ராதாதேவியின் வீடென்னவோ அவள் கையை விட்டுப் போய்விடு மென்பது உண்மை; அந்த மார்வாடியோ நிஷ்கண்டகன்; புண்ணிய பாவத்துக்குச் சிறிது மஞ்சா



தவன்; நூறு வருஷகாலமாகப் பரம்பரையாக இருந்து வந்த குடித்தனம் இப்பொழுது அந்த வீட்டை விட்டுத் துரத்தப்படப்போகிறது, ஏன் ஒன்றும் பேசமாட்டேனென்கிறாய்; உன் அபிப்பிராயமென்ன?" வென்று கேட்டான். அதற்கு இதுவரை மௌனமாயிருந்த ரெங்கசாமி "திரும்பவும் ராதாதேவி பிழைப்பதற்காக வேறெங்கேயாவது போகலாமென்றாலோ அவள் பருவம்வந்த பெண்ணாக இருக்கிறாள். ஏழையாகிய நான் அவளுக்கு என்ன செய்யப்போகிறேன். ஏலம் எப்படி முடியுமோ தெரியவில்லை. என்னிடம் இருக்கிற ஐந்நூறு ரூபாயைக் கொண்டு ஏதாவது ஒரு கை பார்க்கவேண்டுமென்று ஏலநோட்டீஸ் கண்டபோதே தீர்மானித்துக் கொண்டிருக்கிறேன்" என்றான்.

இதற்குள் வண்டி ஏலம் போடுமிடம் வந்தது. அநேக ஜனங்கள் கூடியிருந்தார்கள். ரெங்சாமி வண்டியினின்றும் இறங்கி ஒரு மூலையில் போய் உட்கார்ந்து கொண்டான். அவன் மனம் ஊசலாடிற்று. நெஞ்சம்பதறிற்று. மார்பு அடித்துக் கொண்டது. இருதயம் துடித்தது. ஏலம் போடுபவன் சற்றுநேரத்துக் கெல்லாம் வந்து "இந்த வீடு ஏலத்துக்கு இருக்கிறது; என்ன விலை கொடுக்கிறீர்கள்; ஆரம்பியுங்கள் பார்ப்போம்" என்றான். உடனே மார்வாடி "நூறு ரூபாய்" என்றான். உடனே ரெங்கசாமி "நூற்றைம்பது" என்றான். இது சொல்வதற்குள் அவனுக்கு நாவரண்டு குரல்மாறி முகத்தில் வியர்வை சொரிந்தது. ஐயோ ராதாவின் வீடுகூடவா இத்தனை அலங்கோலமாக ஏலத்திற்கு வந்து விட்டது என்று மனது வெதும்பினான். இதற்குள் "இருநூறு" என்றான் மார்வாடி. "முன்னூறு" என்றான் ரெங்கசாமி. "நானூறு" என்றான் மார்வாடி. "ஐந்நூறு" என்றான் ரெங்கசாமி. "ஐந்நூற்றைம்பது என்றான் மார்வாடி. ரெங்கசாமிக்கு கையில் ஐந்நூற்றுக்குமேல் பணமில்லாதபடியால் உயர்த்த முடியாமல் பெருமூச்சு விட்டுச் சற்று நேரம் சும்மா இருந்தான். இதைக் கவனித்துக் கொண்டிருந்த லயோடிஸ் "நண்பா! ராதாதேவிக்காகத்தான் நீ வீட்டை வாங்க எண்ணுகிறாய் என்பதெனக்குத்தெரியும். அவள் உனக்கு மனைவியாக வேண்டுமென்ற கோரிக்கையேயில்லாமல், அவளுடைய உயரிய அந்தஸ்துக்குத்தக்கபடி நல்லவரனையடையட்டும். ஆனால்; அவளுடைய பழைய காலத்து வீடுமட்டும் அவளை விட்டுப்போகக்கூடாதென்று உன்னிடமிருந்த ஐந்நூறு ரூபாயைக்கொண்டு ஏலங்கேட்டு அவளுக்கு வாங்கிக்கொடுத்து விட நினைத்த,பிரதி பிரயோஜனம் வேண்டாத உன்னுடைய பெருந்தன்மையை,—அதிலும் தரித்திர ஸ்திதியிலிருக்கிற நீ ஐந்நூறு ரூபாயையும் அவள் விஷயத்தில் உதவச் சம்மதித்துக் காட்டுகிற—கம்பீரமான குணவிசேஷத்தை நான் எப்படிப் புகழப்போகிறேன். நண்பா! சஞ்சலப்படாதே; நீ தொகையை உயர்த்து; நான்பணம் தருகிறேன். நான் சொல்லும்போது நிறுத்து; அதுவரையில் அந்த விஷப்பாம்பாகிய மார்வாடிக்கு இடங்கொடாதே" என்றான். உடனே ரெங்கசாமி உள்ளங்களித்து "அறுநூறு" என்றான். மார்

வாடி பிரமித்துப்போனான். தான் மிக்க லகுவாகப் பிடுங்கிக்கொள்ளலாமென்றிருந்த ஆஸ்தியை ரெங்கசாமி வந்துஉயர்த்தியதும் மிக்க ஏக்கத்தை விளைத்தது. மார்வாடி ஏலம் போடுகிற உத்தியோகஸ்தனிடம்'' "அவன் ஒரு கூலியாள்; வீம்புக்காக விலையை உயர்த்துகிறான்; அவனிடத்தில் பணமும் கிடையாது; காசுங்கிடையாது" என்றான். உடனே லயோடிஸ் முன்வந்து "அப்படிச் சொல்லாதே; எவ்வளவு பணம் வேண்டுமாயினும் நான் கொடுக்கத்தயாராயிருக்கிறேன்; ரெங்கசாமியின் வார்த்தையை நிறைவேற்றுவதற்கு நான் உத்தரவாதம்" என்றான். இதைக்கேட்ட மார்வாடி வேறுவகை தோன்றாதவனாய் "அறுநூற்றைம்பது"என்று உயர்த்தினான்; ரெங்கசாமி சற்றும் தாமதியாமல் "எழுநூறு" என்றான். கிருபணசிரோமணியாகிய மார்வாடியும் இனி உயர்த்தினால் தனக்கு நஷ்டமேயென்று சோர்ந்து ரெங்கசாமியிடம் தீர்க்க விரோதம் காட்டிக் கொண்டு ஏமாந்த வெட்கமும் கோபமும் தோன்றும் வதனத்துடன் மௌனஞ் சாதித்தான். லயோடிஸினுடைய உதவியால் ரெங்கசாமி தொகையைச் செலுத்தி வீட்டைத் தன்பேருக்குக் கிரயம் செய்துகொண்டான். ரெங்சாமியினுடைய காதலையும், உள்ளன்பையும், தன்மறுப்பையும், நற்குணசீலங்களையும் நன்கறிந்த லயோடிஸ், ரெங்கசாமியிடம் சொல்லாமல் ராதாதேவியினிடம்சென்று ரெங்கசாமியின் உதாரச் செய்கையைப் புகழ்ந்து கொண்டிருந்தான்.

ரெங்கசாமியோ ராதாதேவியிடம் எவ்விதமாக ஸம்பாஷணையை ஆரம்பிப்பதென்று தோன்றாமல் தியங்கி,ஓர் வீட்டு வாயிலிலிருந்த ஒரு மாத்தடியில் நின்று யோசனையிலாழ்ந்திருந்தான். அச்சமயம் ராதாதேவி தன்னை நோக்கி வருவதையாவது, கொஞ்ச தூரத்துக்கப்பால் அவள் சிறிதுநேரம் நின்று தன்னை உற்றுப்பார்த்து விட்டுப்பிறகு தன்னருகாமையில் சேர்ந்ததையாவது அவன் கவனிக்கவில்லை. அவள் சிறிது நகைப்பும், சிறிது வெட்கமும் கூடிய குரலுடன் இருகையையும் நீட்டி தன்னைக் கூப்பிட்டபோதுதான் அவள் பக்கமாகத் திரும்பிப்பார்த்தான். 'ஆனால் உனக்கு விஷயம் தெரியுமோ! லயோடிஸ் முன்னதாக வந்து சொல்லிவிட்டார் போலிருக்கிறது" என்றான். ராதாதேவி, "ஆம், அவர் தான் அனைத்தையும் சொன்னார். நீங்கள் ஏன் அவ்வளவு பெருவிலையைக்கொடுத்து இவ்வீட்டைக்கொண்டீர்கள்" என்றாள். ரெங்கசாமி "இந்த வீடு உன்னுடையதேயாகும்" என்றான். அதற்கு ராதாதேவி "இல்லை இல்லை இது தங்களுடையதே" என்றாள். அதை மறுத்து ரெங்கசாமி: "நீ இதில் தங்கியிருக்கவேண்டும்; உனக்காகவே இதை வாங்கினேன்; நாளை உன்பேருக்கு சாசனம் செய்து விடுகிறேன்" என்றான். அதற்கு ராதாதேவி: "இதுவோ இப்பொழுது தங்களுடைய வீடாகிவிட்டது, நானும் இவ்வீட்டுக்கு உடையவளாகவேண்டுமாகில் தாங்களும் இவ்வீட்டுக்கும், இவ்வீட்டுக்காரியாகிய எனக்கும் சொந்தமுடையவர்களாக வேண்டுமென்றாள். ரெங்கசாமி ராதாதேவியுடன் வீட்டுக்குள்வந்து நீ சொன்னது விவரப்படவில்லையே என்றான். "நான் சொல்வது உங்களுக்கு எப்படி விளங்



கும்" என்று ராதா சொல்லிவிட்டு "நீங்கள்தான் எனக்கு இந்த உலகத்தில் ஸமஸ்தமும்" என்று அவன் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரிக்க, ரெங்கசாமி அவளை இறுகத்தழுவி முத்தமிட்டான். "என் கண்ணே முழுதுஞ்சொல்" என்றான். அதற்கு ராதாதேவி சிரித்துக்கொண்டு பூமியைப்பார்த்த வண்ணம் "அகமுடையோனாக வேண்டும்" என்று சொல்லவந்தேன்" என்றாள்.

## அத்தியாயம். 8.

லயோடிஸ்ஸுக்கும் ராமமூர்த்தி நாயுடுவுக்கும் நெருங்கிய நட்பென்பதை ஸஞ்சீவபாபு அறிந்திருந்தார். ஆனதால் லயோடிஸ்போல வேடம் புனைந்து எல்லா விதத்திலும் லயோடிஸ்ஸாகவேமாறி, ராமமூர்த்தி நாயுடு வெளியே போகவேண்டிய நல்ல சந்தர்ப்பம் பார்த்து, அவர் வீட்டையணுகினார். ஸஞ்சீவபாபுவை அந்த இருட்டில் லயோடிஸ்ஸாகவே கருதினார். அவருக்கு அன்றையதினம் வெகு அவசரம். அவருடைய நேசிகளில் ஒருத்தியான மோகனாம்பாள் அன்றையதினந்தான் பர்மாவிலிருந்து வந்திருந்தாள். அன்றிரவை அவளோடு சல்லாபமாகப் போக்குவதற்காக முன்னேரத்தில் தானே புறப்படலானார். இந்த சங்கதியை அன்று காலையிலேயே ஸஞ்சீவபாபு அறிந்து கொண்டார். இரவும் பகலுமாக ராமமூர்த்தியை அவரறியாதபடி பின்தொடர்ந்து கொண்டிருந்தபடியால், காலையில் ரெயில்வே ஸ்டேஷனுக்கு ராமமூர்த்தி சென்றதும், மோகனாம்பாள் இறங்கியதும், இரவு ஏழு மணிக்கு அவசியம் வீட்டிற்கு வருவதாகச் சொல்லி மோகனாம்பாள் வீட்டிலிருந்து ராமமூர்த்தி புறப்பட்டதும், ஸஞ்சீவபாபுவுக்குத் தெரியும். ஆகவே கழுத்தைப் பிடித்துக் கொள்ளக்கூடிய நெருக்கமான சமயத்தில் லயோடிஸ் வேடத்துடன் சென்றார். ராமமூர்த்திக்கு இவர் வருகை வெகு கஷ்டமாய் விட்டது. அவரை "வாருங்கள்" என்று சொல்லக்கூட அவருக்கு சாவகாசமில்லை. வீட்டின் கதவைப் பூட்டியவர் மறுபடியும் திறந்து விளக்கேற்றிவிட்டு நீங்கள் வீட்டிலேயே இருங்கள் நான் மூன்றுமணி நேரத்தில் திரும்புகிறேனென்றார். அதற்கு லயோடிஸ் வேடத்துடனிருந்த ஸஞ்சீவபாபு "இல்லை தாங்கள் ஸாவகாசமாக வரலாம், குடிப்பதற்குக் கொஞ்சம் "சிகரெட்" இருந்தால் போதுமானது" என்றார். உடனே ராமமூர்த்தி தமது ஜேபியிலிருந்து எடுத்து "அக்பர்ஷா சிகரெட்" ஒரு பெட்டியைக் கொடுத்து "வருகிறேன்" என்று சொல்லி வண்டியேறவும், உடனே வண்டி வெகு வேகமாகப் புறப்பட்டு கண்ணுக்கு மறைந்து விட்டது. ஸஞ்சீவபாபு தனது வேடம் பலித்ததென்று தமக்குத்தாமே சிரித்துக்கொண்டார். லயோடிஸ்ஸிடம் ராமமூர்த்தி அவ்வளவு தூரம் நம்பிக்கைகொண்டதற்கு, ஸஞ்சீவபாபுவால் முனிசிபல் இனிஸ்பெக்டர் அரஸ்ட் செய்யப்பட, அதை லயோடிஸ் தானே ஒரு கொலைக்குற்றம் முனிசிபல் இனிஸ்பெக்டர் மீது சுமத்தி அரஸ்டு செய்து விட்டதுபோல ராமமூர்த்தியிடம் சொல்லியிருந்ததே கார

ணம். லயோடிஸ் இப்படித் தனக்கு அந்தரங்க நேசனாக இருந்ததால்தான் அவன் வேடம் பூண்டு வந்த சஞ்சீவபாபுவை லயோடிஸ் என்றே கருதி வீட்டுச் சாவியை அவரிடம் கொடுத்து விட்டுப் போவானாயினான்.

சஞ்சீவபாபுவுக்கு ராமமூர்த்தி காலையில் தான் வருவானென்று நன்றாகத்தெரியும். மோகனாம்பாள் நிரம்பவும் சதுரை. நல்ல வசீகரமான லக்ஷணமுடையவள். ஆகவே அவளை இந்த நல்ல இராத்திரி வேளையில் விட்டு வருவதற்கு ராமமூர்த்தி அத்தகைய வைராக்கிய பிரம்மாச்சாரியல்லவென்பதை சஞ்சீவபாபு நன்றாக அறிந்திருந்தார். வெளிக்கதவை உள்ளுக்குப்பூட்டிக் கொண்டு ஸாவகாசமாக ஒவ்வொன்றையும் ஆராயத்தலைப்பட்டார். தான் முன்பு துப்பாக்கியுடன் கண்டெடுத்த பேனாக்கத்தியுடன் கூடிய சாவிக்கொத்திலுள்ள சாவிகள் எட்டும், அங்கிருந்த பெட்டிகளுக்குச் சேருமா என்று கவனிக்கலானார். ஒரு சாவி ஒரு இரும்புப்பெட்டிக்குச் சேர்ந்தது. அதைக் கொண்டு திறக்கும்படியாகவும் இருந்தது. இரும்புப்பெட்டியில் ரூபாய்களும் பத்திரங்களும் இருந்தன. அந்தப் பத்திரங்களைச் சோதித்து வருகையில் ஒரு ஏழுவருஷங்களுக்கு முன்பு ஆராவமுது ஐயங்கார் தமது ஐயாயிரம் ரூபாய் பெறுமான நிலத்தை ராமமூர்த்திக்கு இனாமாக சாஸனம் செய்து கொடுத்திருந்ததைக் கண்டார். ஏதோ ஒரு காரணத்திற்காகத்தான் அந்தப் போக்கிரி ஐயங்கார் இப்படி இவருக்கு இனாமாகக் கொடுத்திருக்கவேண்டுமென்று நினைத்தார். இன்னும் கொஞ்சம் யோசித்தபோது ஆராவமுதய்யங்காருடைய தமயனாரின் பிள்ளை லக்ஷ்மிபதியின் கொலை நடந்த இரண்டாவது மாதத்தில் இந்தப் பத்திரம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறதென்பது விளங்கிற்று. அப்படியானால் அந்தக் கொலைக்கும் இந்தப் பத்திரத்துக்கும் ஏதாவது ஸம்பந்தம் இருக்குமோவென்று ஊகித்தார். லக்ஷ்மிபதி கொலையுண்ட தினத்திலேயே ராமமூர்த்தியின் குமாரனும் கொல்லப்பட்டுப் போயிருக்கிறதைப்பற்றியும் யோசித்தபோது ஒரே இடத்தில் ஏக காலத்தில் தானே லக்ஷ்மீபதியும் ராமமூர்த்தியின்குமாரனும் கொலையுண்டிருப்பதால்,அக்கொலை இன்னொருவரால் நடந்திருக்கவேண்டுமே யன்றி ராமமூர்த்தியால் நடந்திராதென்று மனதிற்குத் தோன்றிற்று. பிறகு, சரி, இது இருக்கட்டும், முதலில் இந்தக்கொத்துச்சாவி சம்பந்தமான சங்கதி ஒரு விதமுடிவுக்கு வந்தால் லக்ஷ்மிபதியின் கொலையைக் குறித்தும் விவரங்கள் கிடைக்கக் கூடுமென்றுசொல்லிக் கொண்டார். உடனே பாக்கியுள்ள ஏழுசாவிகளையும் ஒவ்வொரு பெட்டி, பீரோ, முதலியவைகளிலெல்லாம் உபயோகப்படுத்திப் பார்த்தார். நான்கு சாவிகள் அங்குள்ள பெட்டிகளுக்குச் சரியாக இருந்தது. உடனே மெத்தைக்குச் சென்று அங்கிருந்த கொட்டடிகளின் பூட்டுகள் இரண்டிற்குப்போட ஒன்றுக்குச் சரியாக இருந்தது. மற்ற இரண்டு சாவிகளையும் கவனித்ததில் ஒன்றும் விளங்கவில்லை. மறுபடியும் கீழ் இறங்கி தெருவாசற் கதவுக்குப் போட்டுப் பார்த்தார். சரியாக இருந்தது. இன்னொரு சாவி ராமமூர்த்தி வண்டியில் வைத்துக்கொண்டுபோன கைப்பெட்டிக்குச் சரியாக இருக்குமென்று தெரிந்து கொண்டார். உடனே சஞ்சீவபாபுவுக்குச் சந்தோஷம் அதிகரித்தது. கேஸ் சுலபமாகிக்கொண்டு வருகிறதென்று பூரித்து ‘அப்பாடா’ வென்று ஒரு நாற்காலியில் சாய்ந்தார். மீண்டும் யோசிக்கலானார். மறுபடியும் எழுந்து ஒவ்வொன்றையும் ஆராய்ந்தார். ஆச்சரியப்படும்படியான கடிதங்கள் பல தபால் முத்திரையிட்ட உறைகள் சகிதமாகக்கிடைத்தன. பார்த்துப் பெருமூச்சு விடுவோராயினார். இன்னொரு பெட்டியிலிருந்து ஒரு துப்பாக்கி லைசென்ஸ் பத்திரம் கிடைத்தது. துப்பாக்கி இருக்கிறதா என்று வீடு முழுதும் தேடினார். கிடைக்கவில்லை. ஆனால் லைசென்ஸ் மட்டும் இருக்கிறது. துப்பாக்கியைக் காணோம். சரிதான் இனி பார்க்க வேண்டியதொன்றுமில்லை யென்று தீர்மானித்துக்கொண்டு சகல ரிக்கார்டுகளையும் கைப்பற்றி, கதவைப் பூட்டிவிட்டு போலீஸ் இனிஸ்பெக்டர் வீட்டிற்குப் போனார்.



ஏற்கெனவே இரவு ஒரு மணிக்கு சஞ்சீவபாபு போலீஸ் இனிஸ்பெக்டரைச் சந்திப்பதாகச் சொல்லி யிருந்தபடியால், இவர் வரவை எதிர்பார்த்து கண்விழித்துக் கொண்டிருந்தார். சஞ்சீவபாபு போலீஸ் இனிஸ்பெக்டரைச் சந்தித்து, மறுநாட்காலையில் ராமமூர்த்தியினிடம் சென்று செய்ய வேண்டிய சில விஷயங்களைச் சொன்னார். பிறகு வெகுநேரம் வரையில் பேசிக்கொண்டிருந்து விட்டு மறுபடியும் ராமமூர்த்தியின் வீட்டுக்குச்சென்று சுகமே தூங்கினார். அதிகாலையில் நான்கு மணிக்கு ராமமூர்த்திவந்து கதவைத்தட்ட இவரும் திறந்து, எங்கே இவ்வளவு நேரம் என்று கேலி செய்தார். அதற்கு ராமமூர்த்தி உங்களுக்குத் தெரியாத ரகசியமாவென்று சொல்லி பதில் சிரிப்பு சிரித்தார். பிறகு ஸஞ்சீவபாபு அந்த இருட்டில் தானே ராமமூர்த்தியிடம் விடைபெற்றுக் கொண்டு சென்றார்.

பொழுது விடிந்தது. போலீஸ் இனிஸ்பெக்டர் ராமமூர்த்தியின் வீட்டுக்கு வந்து துப்பாக்கி லைசென்ஸைக் காட்டும்படி கேட்டார். அப்படியே ராமமூர்த்தியும் காட்டினார். துப்பாக்கியைக்கொண்டு வரும்படி இனிஸ்பெக்டர் உத்தரவு செய்ய, ராமமூர்த்தி வீடு முற்றிலும் தேடிப்பார்த்துவிட்டு யாரோ களவு செய்திருக்கிறார்கள் காணோம் என்று வாயுளறிச்சொன்னார். அபாயமான ஆயுதத்தை அவ்வளவு அஜாக்கிரதையாக வைக்கலாமாவென்று இனிஸ்பெக்டர் கடிந்துகொண்டு தம் ஆட்களை விட்டு வீடுமுற்றிலும் தேடச் சொன்னார். கிடைக்கவில்லை. அதன் பேரில் இனிஸ்பெக்டர் ராமமூர்த்தியைக் கைது செய்துவிட்டார். அதே நேரத்தில் ஆராவமுதய்யங்கார் வீடும் போலீஸ் சூபரின்டெண்டால் பரிசோதிக்கப்பட்டு யாவும் கைப்பற்றப்பட்டன. சேலம் முழுதும் எங்கு பார்த்தாலும் இதே பேச்சாக இருந்தது. ராமமூர்த்தி அரஸ்ட் செய்யப்பட்டதற்கு மூன்றாம் நாள், கல்கத்தா போலீஸாரிடம் உண்மையான குற்றவாளியாயிருந்து ஓடிப்போன ராகவலுநாயுடுவையும் மற்றொரு பிராமணப் பையனையும் ஸஞ்சீவபாபு ஒப்புவித்து அவ்விருவரையும் நிரம்பவும் மரியாதையாக சேலத்துக்குக் கொண்டுபோகும்படி செய்தார். பத்திரிகைகளெல்லாம் ஸஞ்சீவபாபுவின் துப்பறியும் விசேஷத்

தைப்பற்றிப் பத்தி பத்தியாகப் புகழ்ந்தெழுதலாயின. 19 * * வருஷம் செப்டம்பர் மாதம் ஏழாம் தேதி யன்று சேலம் செஷன்ஸ் கோர்ட்டில் விசாரணை யென்று நாளும் குறிக்கப்பட்டது.

## அத்தியாயம். 9.

சேலம் செஷன்ஸ் கோர்ட்டில் அமீனா வெங்கடரத்தினத்தைக் கொன்றதின் சம்பந்தமான விசாரணை ஆரம்பமாயிற்று. ராகவலுநாயுடு தமது வாக்குமூலத்தைக் கொடுக்கலானார். தான் சென்னப்பட்டணத்தில் வாசமென்றும், ராமமூர்த்தி நாயுடு தமது வீட்டிலிருந்த சாமான்கள் அனைத்தையும் கூட்ஸ் மூலமாக ரயிலில் தமது பேருக்கு அனுப்பியதாகவும், அந்த சாமான்களை ஒப்புக்கொண்டு தம் வீட்டில் அவைகளைப் பந்தோபஸ்து செய்து வைப்பதற்குப் பிரியமற்று,—அப்படித் தான் செய்தால் தம்வீட்டில் ராமமூர்த்தியின் சாமான்கள் இருக்கிறதென்று ஜப்தி செய்ய வருவார்களென்றும், ஆனபடியால் மேற்படி சாமான்களை மறுபடியும் சேலத்திற்கே திருப்பி யிருப்பதாக ராமமூர்த்திக்குக் கடிதம் அனுப்பிவிட்டு, அவ்விதமே சாமான்களைத்திருப்பி விட்டதாயும், அதை ராமமூர்த்தி மனதில் வைத்துக்கொண்டிருந்து தன்மீது அபாண்டமாக இக்கொலைக் குற்றத்தைச் சுமத்தினாரென்றும், கொலைநடந்த தினத்திற்கு மூன்று நாட்களுக்குமுன் ராமமூர்த்தி தம்மை வரும்படி எழுதிய கடிதத்தை நம்பி சேலத்துக்குப்போனதைத் தவிர வேறொன்றும் தான் அறியமாட்டே னென்றும், தன்மீது கொலைக்குற்றம் ஏற்படவே, உடனே லக்ஷ்மீபதியை உடன் அழைத்துக் கொண்டு கல்கத்தாவிற்குப் போய் சஞ்சீவபாபுவை விசாரித்ததில் அவர் கள்ளிக்கோட்டையிலிருந்து மூன்றாவது நாள் வந்து சேருவாரெனத் தெரிந்ததால், அவருடைய தர்மபத்தினியின் ஆதரவில் இருந்ததாயும், பிறகு சஞ்சீவபாபு வந்து சேரவே சகலமும் அவருக்கு அறிவித்துக் காப்பாற்றவேண்டுமென்று தெரிவித்துக் கொண்டதாயும், பிறகு சென்ற வாரத்தில்தான் சஞ்சீவபாபு உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடித்து விட்டதாகத் தமக்குச்சொல்லி பயப்படவேண்டாமென்று தேறுதல் புகன்று, கல்கத்தா போலீஸார்வசம் தம்மையும் லக்ஷ்மீபதியையும் ஒப்புவித்ததாகச் சொல்லி முடித்தார். ராமமூர்த்தி நாயுடுவும் ஆராவமுதய்யங்காரும் தங்கள் பேரில் ஏற்பட்ட குற்றங்களை ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் சஞ்சீவபாபுவால் கண்டெடுக்கப்பட்ட துப்பாக்கியையும் பேனாக் கத்தியுடன்கூடிய கொத்துச்சாவியையும் காட்டப்பட்டபோது இராமமூர்த்தி நாயுடு அவ்விரண்டும் தம்முடையதே யென்று ஒப்புக்கொண்டார். கேஸ் வெகு விரிவாக வளர்ந்துகொண்டு போயிற்று. கடைசியாக சஞ்சிவபாபு விசாரிக்கப்படலானார்.

"நான் கள்ளிக்கோட்டையிலிருந்து கல்கத்தாவுக்குப் போகும்போது சேலம் ஸ்டேஷனில் போலீஸ் இன்ஸ்பெக்டரைச்சந்திக்க, அவர் இந்தக்கேஸ்



சம்பந்தமாக விவரித்தார். அப்போதே ஆராவமுதய்யங்கார்மீது எனக்குக் கொஞ்சம் சந்போயிற்று. துப்பாக்கியால் ஒருவனைச் சுட்டுவிட்டு இன்னொருவனைக் கத்தியால் குத்தினானென்ற விஷயம் எனக்கு அசம்பாவிதமாகக் காணப்பட்டது. துப்பாக்கியால் சுட்டவனே அதை எங்கேனும் எறிந்து விட்டுக் கத்தியால் தன்னையும் குத்திக்கொண்டு, அக்கத்தியையும் எறிந்துவிட்டு மூன்றாவது மனுஷன் இப்படிச் செய்ததுபோல நடித்திருக்கவேண்டுமென்று தோன்றிற்று. போலீஸ் இன்ஸ்பெக்டரோ ராகவலு நாயுடுவே குற்றவாளியென்று நிச்சயமாய்ச் சொன்னார். நான் என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்க அது சமயமில்லையென்று உடனே புறப்பட்டு கல்கத்தா சேர்ந்தேன். என் மனைவி, ராகவலுநாயுடுவும் இலக்ஷ்மீபதியும் வந்திருப்பதை எனக்குக் கூறினாள். உடனே மேல்மாடிக்குச்சென்றேன். ராகவலு நாயுடு தம்மைக் காப்பாற்ற வேண்டுமென்று காலில் வீழ்ந்து லக்ஷ்மீபதியையும் வீழ்ந்து நமஸ்கரிக்கும்படி சொன்னார். ராகவலுநாயுடுவைச் சிறுபோதிலிருந்தே எனக்குத்தெரியும். அவர் வாயிலிருந்து தவறிக்கூட ஒரு பொய் வார்த்தை வராது. அவ்வளவு தூரம் ஸத்தியத்துக்குக் கட்டுப்பட்ட மனிதர். எவ்வளவு தொகைக்கும் அவரை நம்பலாம். அப்படிப்பட்ட மனிதர் கொலையில் சம்பந்தப்பட்டிருப்பாரென்று நான் நம்பமுடியவில்லை. ராமமூர்த்தி நாயுடு தம்மை வரும்படி எழுதியிருந்த கடிதத்தையும் ராகவலு நாயுடு எனக்குக் காட்டினார். அப்போது எனக்கு ராமமூர்த்தியே இக்கொலைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டு அக்கொலையை ராகவலுநாயுடுவின்மீது ஏற்றுவதற்காக நயவஞ்சகமாய் இப்படி கடிதம் எழுதியிருக்க வேண்டுமென்று தோன்றிற்று. இவ்வளவு விரோதம் ராகவலுநாயுடுவின் மீது ஏற்படக்காரணமென்னவென்று ஆராய்கையில், அவர் ராமமூர்த்தி யனுப்பிய சாமான்களை ஒப்புக்கொள்ளாமல் திருப்பிவிட்டதாலென்று காணப்பட்டது. பிறகு லக்ஷ்மீபதியின் சங்கதிகளை யறிந்துகொண்டு அவனிடம் ஒரு வாக்குமூலம் பெற்று சேலத்திற்கு வந்து ஆராவமுதய்யங்காரின் தமயனான நரசிம்மய்யங்காரைக் கண்டு அவரிடம் என்னை இன்னான் என்று தெரிவித்து லக்ஷ்மீபதியின் வாக்குமூலத்தைக் காட்டினேன். அதிற்கண்ட அவ்வளவும் உண்மையே யென்று அவரும் அந்த வாக்குமூலத்தில் கையொப்பம் வைத்தார். அந்த வாக்குமூலத்தில் லக்ஷ்மீபதி பதினெட்டாம் பண்டிகைக்காக உபாத்தியாயருடனும் மற்ற பிள்ளைகளுடனும் ஒரு காட்டுப்பக்கத்திலிருந்த பிள்ளையார் கோவிலுக்குப் போனதாயும், அங்கே தான் பாராக்கா யிருந்த சமயம் வாத்தியார் கூப்பிடுவதாகச் சொல்லி ராமமூர்த்தி தன்னை யழைத்ததாகவும் சிறிது தூரம் தன்னைக் கூப்பிட்டுக் கொண்டுபோய் ஒரு வண்டியில் போட்டு, கூவினால் கழுத்தைப் பிசைந்து கொன்று விடுவதாகப் பயமுறுத்தி வெகு தூரம் கொண்டுபோய் ஒரு வீட்டில் இறக்கி அங்குள்ள பெஞ்சில் தன்னைப் படுக்கவைத்து, அப்படி இப்படி எழுந்தால் கொன்றுவிடுவதாகக் கூறி உட்சென்றதாயும், உடனே தான் தன்னுடைய நகைகளுக்காக ஆசைப்பட்டே கொண்டு வந்திருக்கிறார்க

னென்று நினைத்து நகைகளைக் கழற்றி அவ்விடம் போட்டுவிட்டு பக்கத்திலிருந்த கோயில் மண்டபத்தில் ஏறி உட்கார்ந்ததாயும், அப்போது யாரோ ஒரு பையன் தான் இருந்த பெஞ்சின் மீது படுத்துக் கொண்டதாயும் பிறகு அவன் எழுந்திராதபடியால் தூங்கியிருக்க வேண்டுமென்றும் அவனை இன்னாரென்று இருட்டில் கண்டு சொல்ல முடியவில்லையென்றும், கொஞ்சநேரத்துக்குப் பிறகு ராமமூர்த்தி கையில் கத்தியோடு வந்து அவனைக் கொன்றுவிட்டுப் போனதாயும், ராமமூர்த்தியின் வேஷ்டியாலும் ஆள் பருமனாலும் ராமமூர்த்தி யென்றே நிச்சயித்ததாயும், பிறகு அந்த இடத்தில் இருக்கப்பயந்து தனக்கு அந்தக் காட்டுவழி தெரியுமானதால் வழி பிடித்துக்கொண்டு தகப்பனாரிடம் வந்துவிட்டதாயும் அவர் ஸகலமும் கேட்டுவிட்டு அன்றிரவே தன்னை அழைத்துக்கொண்டு சென்னப்பட்டணம் போய் ராகவலு நாயுடுவிடம் விட்டு எல்லா சங்கதியும் சொல்லி உன்பிள்ளை இவன் என் பிள்ளையல்ல என்று அழுததாயும், பிறகு தகப்பனார் ஊருக்குப் போய்விட்டதாயும், ராகவலு நாயுடு தன்னை வீட்டிற்குள் ரகசியமாக எவருமறியாதபடி வைத்துக்கொண்டு தானே உபாத்தியாயராக இருந்து படிப்புச் சொல்லித் தந்ததாயும், ஒரு பிராமணப் பெண்ணை ஏற்பாடு செய்து அவள் சமைத்த போஜனத்தைச் சாப்பிடும்படி செய்து வந்தாரென்றும், பிறகு சேலம் போய்த் திரும்பியதும் தன்னை யழைத்துக்கொண்டு கல்கத்தாவில் சஞ்ஜீவபாபு வீட்டிற்குக் கொண்டுபோய் விட்டதாகவும் இலக்ஷ்மீபதியின் வாக்குமூலத்தில் சொல்லப்பட்டிருந்தது. பிறகு சேலத்தில் நரசிம்மய்யங்காரிடம் ரகசியத்தில் பேசி தன்னை சீனதேசத்தானென்றும், தன் பெயர் லயோடிஸ் என்றும் வெளியில் சொல்லிக்கொள்ளும்படி செய்ய வைத்தேன். நரசிம்மய்யங்கார் என்னை ஆராவமுதய்யங்காருக்குப் பரிச்சயம் செய்து வைத்தார். நான் லயோடிஸ் என்ற பெயருடன் ஆராவமுதய்யங்காரை நேசித்தேன். அவர் பார்க்கும்படியாக நரசிம்மய்யங்காருடன் போலிச்சண்டை போட்டு அவரை யடித்தேன். இதனால் நரசிம்மய்யங்காருக்கும் எனக்கும் பலமான விரோதம் ஏற்பட்டு விட்டதாக ஆராவமுதய்யங்கார் எண்ணும்படியாகி அந்த விரோதத்தைப் பலவிதத்திலும் பலப்படுத்தினார். நான் நரசிம்மய்யங்காரைக்கொன்றே போடுவதாகச் சொல்லி நரசிம்மய்யங்காரின் கழுத்தையும் பிசைந்தேன். ஆராவமுதய்யங்கார் ஓடிவந்து எனக்காகவாவது என் முகம் பார்த்து என் தமயனை விட்டு விடவேண்டுமென்று கெஞ்சினார். அதன்பேரில் விட்டுவிட்டு நரசிம்மய்யங்காரைப் பார்த்து "உம்முடைய தம்பிக்காக உம்மைவிட்டு விட்டேன். இல்லாவிட்டால் உம்மைக் கழுத்தைப் பிசைந்தே கொன்றிருப்பேன் என்று சொல்லி கோபத்துடன் ஆராவமுதய்யங்கார் வீட்டுக்குப் போய்விட்டேன். நான் அவர் வீட்டிற்குள் போனதும் என்னைப் பார்த்து இன்னொரு தடவையில் தாம் இல்லாத காலம் பார்த்து அவசியம் தமது தமயனைக் கொன்றுவிட வேண்டுமென்றும், அதற்குப் பரிசாக இந்தா இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகளென்றும் கொடுத்தார். அந்த நோட்டின் பின் புறத்தில் எவரும் சந்தேகப்படாதிருக்கக் கையெழுத்துப் போடும்படி



செய்து பெற்றுக்கொண்டேன். அந்த நோட்டுகளும் கோர்ட்டில் ஆஜர் செய்திருக்கிறேன். பிறகு நரசிம்மய்யங்காரை ரகசியத்தில் கண்டு சங்கதியைத் தெரிவித்து, எப்போதும் பத்து ஆட்களுடன் இருக்கும்படியும் போலீஸ்டேஷனுக்கு அருகில் ஒரு வீட்டைப் பேசிக்கொண்டு அங்கிருந்தால் தான் பந்தோபஸ்தென்றும் சொல்லி அவ்விதமே நடக்கச் செய்வித்தேன். பிறகு வெங்கடரத்தினம் கொலையுண்ட இடத்துக்குப் போய்ப்பார்த்து அங்கேயொரு சிற்றாறு காணப்பட்டதால் அவன் கொலை செய்யப்பட்டபோது, அந்த சிற்றாற்றில் ஜலம் ஓடிக்கொண்டிருந்திருக்க வேண்டுமென்று அப்போது சேறாக இருந்ததால் யூகித்தேன். துப்பாக்கியை அந்த ஆற்றின் ஜலத்தில் எவர் கண்ணுக்கும் புலப்படாதபடி எறிந்திருக்க வேண்டுமேயன்றி வெளி வயல்களில் பலர் பார்வைக்குப் படும்படியாக எறிந்திருக்க முடியாதென்றும் நினைத்து, ஆற்றுப் பாலத்தருகில் தேடினேன். துப்பாக்கி என் உத்தேசப்படி கிடைத்தது. இன்னும் அதற்கு சமீபத்தில் ஏதாவது கிடைக்குமாவென்று பார்த்ததில் அதற்குக் கொஞ்சதூரத்தில் பேனாக்கத்தியுடன் கூடிய கொத்துச்சாவியும் அகப்பட்டது. துப்பாக்கியையும் கொத்துச்சாவியையும் போலீஸ் இனிஸ்பெக்டருக்குக் காட்டி ரிக்கார்டு செய்துவிட்டு துப்பாக்கியை மட்டும் அவரிடம் கொடுத்துவிட்டு கொத்துச்சாவியை என்னிடம் வைத்துக்கொண்டேன். துப்பாக்கியும் பேனாக்கத்தியுள்ள கொத்துச்சாவியும் ஓரிடத்திலேயே அகப்பட்டதால் ஒருவனே சுட்டுவிட்டு உடனே துப்பாக்கியை எறிந்துவிட்டிருக்க வேண்டுமென்றும், திடீரென்று அப்போது ஒரு யோசனை தோன்றி தன்னையும் கொஞ்சம் குத்திக் காயம்செய்து கொண்டால் மூன்றாவது மனிதன் சுட்டுவிட்டு ஓடினது போலவும், தான் அவனைப் பிடிக்க ஓடியதில் அவன் தன்னை கத்தியால் குத்திவிட்டு ஓட்டமெடுத்ததுபோலவும் கேஸை ஜோடித்துவிடலாமென்று நினைத்து, பேனாக்கத்தியால் தன்னையே குத்திக்கொண்டு பிறகு அதையும் அந்த ஆற்றிலேயே எறிந்திருக்க வேண்டுமென்றும் யூகித்தேன்.

பிறகு நான் லயோடிஸ் என்ற பேருடன் வசித்துவந்த பங்களாவுக்கு வந்து சேர்ந்தேன். அங்கே போலீஸ் இனிஸ்பெக்டர் கோஷா வேஷத்துடன் முகத்தை மூடிக்கொண்டு பெண் பாவனையில் அடிக்கடி இருந்து வரும் வழக்கம் போல் அன்றும் இருந்தார். நான் போன சற்று நேரத்தில் ராமமூர்த்தி நாயுடுவும் அங்கு வந்தார். அவருக்கும் எனக்கும் அப்போது கொஞ்சம் நேசம் பலமாகிக்கொண்டிருந்தது. நான் நரசிம்மய்யங்காரைக் கொன்றுவிடுவதாகச் சொன்னதின் பேரில் அதற்காக அவர் பயந்து போலீஸ் ஸ்டேஷனுக்கருகில் குடிபோய்விட்டாரென்று ராமமூர்த்தியும் ஆராவமுதய்யங்காரும் நம்பியிருந்தார்கள். அந்த நம்பிக்கை காரணமாக என் பேரில் விஸ்வாசமும் பாராட்டி வந்தார்கள். ஆனதால் ராமமூர்த்தி நாயுடு என்னிடம் நேசம் பாராட்ட இடம் வாய்த்தது. என்னைத் தேடி வந்த ராமமூர்த்தி ஆயிரம் ரூபாய் உள்ள நூறு ரூபாய் நோட்டுகள் பத்தை ஒரு கவருக்குள் வைத்து என்னிடம் தந்தார். எதற்கென்று வினவினேன். அதற்கு முனிசிபல்

இனிஸ்பெக்டரான கந்தர்ப்புரிகாஸிம் ஸாஹெப்பைக் கொன்றுவிடவேண்டுமென்று சொன்னார். எதற்காக என்று நான் கேட்டபோது அந்த விவரங்களை விசாரிக்காதிருப்பதற்காகவே ஆயிரம் ரூபாய் கொடுத்திருப்பதாகவும், வேண்டுமானால் இந்தக் கடிதத்தைப் பாருங்களென்று சொல்லி ஒரு கடிதத்தைத் தந்து அதைப்பற்றித் தன்னையொன்றும் கேட்கக்கூடாதென்றும் வற்புறுத்தினார். அக்கடிதத்தில் காஸிம் ஸாஹெப்—" ராமமூர்த்தி அதைக் கண்டதக்ஷணம் நூறு ரூபாயும் இரண்டு கலம் அரிசியும் அனுப்பவேண்டுமென்றும், இல்லையேல் ராமமூர்த்தியின் விரோதியாகிய ஆறுவழுதய்யங்கார் அதிகத் தொகை தருவதாகக் கூறுகிறாரென்றும், தன்னைப் போன்ற ஒரு முனிசிபல் இனிஸ்பெக்டரான நாகப்பா தன்னை அடிக்கடி பணம் கேட்பது வெட்கமாயிருக்கிறதென்று"ம் எழுதியிருந்தான். அந்த நேரத்தில் போலீஸ் இனிஸ்பெக்டர் கோஷாவேஷத்துடன் காபிகொண்டு வந்து தந்துவிட்டு நின்றிருந்தாராதலால் அக்காப்பியிருந்த லோட்டாவில் அக்கடிதத்தை நான் போட்டுவிட அவர் லோட்டாவை எடுத்துச் செல்லுவதுபோல எடுத்துக்கொண்டு போய்விட்டார். உடனே நான் பக்கத்திலிருந்த இன்னொரு கடிதத்தை எடுத்து அதில் சிகரெட் தூளை வைத்துச் சுருட்டிக்குடித்து, பிறகு ராமமூர்த்தி அக்கடிதத்தைக் கேட்டபோது அதில் மறதியாய் தூள் வைத்து சுருட்டிக் குடித்து விட்டேனே என்று கலங்குவதுபோல் நடித்துவிட்டேன். அப்போது ராமமூர்த்தி "அந்தக் கடிதத்தால் அந்த ஸாகிபுவைப் பிடிக்கலாமானாலும், தான் அதில் சம்பந்தப்படுவதால் அக்கடிதம் பயனற்றது என்று சொன்னார். நானும் அதைக் குறிப்பாய்க் கேட்டுக் கொண்டேன். பிறகு திருட்டு நோட்டுகள் என்று மற்றவர்கள் சொல்லாதிருக்கும்படி நோட்டுகளின் பின்பக்கம் கையெழுத்துச் செய்யுங்களென அவரும் அப்படியே செய்தார். அந்த நோட்டுகளையும் ஸாகிபுவினுடைய கடிதத்தையும் கோர்ட்டில் ஆஜர்படுத்தி யிருக்கிறேன்.

சுடப்பட்டுப்போன வெங்கடரத்தினத்தினிடம் மரண வாக்குமூலம் வாங்கியதாகச் சொல்லப்படுபவன் காஸிம்ஸாஹேப்பானதால், அவனை ஒரு வைத்தியன் போன்ற வேடத்துடன் போய்ப்பார்த்து என்னை ராமமூர்த்தியின் நண்பன் என்று சொல்லிக்கொண்டு என்னையும் உன்னையும் கொல்ல ராமமூர்த்தி வழிதேடி யிருக்கிறானென்று, அவனுக்கு வேண்டியவன் போல் பேசி அவனிடமிருந்து ஏதாவது சங்கதியைக் கிரகிக்கலாமென்று பார்த்தேன். அவன் ஒன்றையும் வெளியிடுகிறவனாகத் தோன்றவில்லை. பிறகு அவன் தப்பியோடிவிடா வண்ணம், முன்னர் அவன் ராமமூர்த்திக்கு எழுதிய காகிதத்தின் ஆதாரத்தின்பேரில் போலீஸ் இனிஸ்பெக்டரைக் கொண்டு அரஸ்டாக்கினேன். பிறகு வெங்கடரத்தினத்தின் மனைவியைப் பற்றி விசாரிக்கையில் அவள் புருஷன் சுடப்பட்டுப்போன பிறகு, தன் குழந்தைகளை யழைத்துக்கொண்டு சென்னப்பட்டணத்துக்குத் தன் தாய் வீட்டிற்குப் போய்விட்டதாகத் தெரிந்தது. அதன் பேரில் நான் சென்னப்பட்டணத்துக்குச் சென்று அவளைக் கண்டு அவள் புருஷனுக்கும் ராமமூர்த்திக்கும் விரோ



தம் உண்டா என்று விசாரித்தேன். அப்போது என்னுடன் சேலம் போலீஸ் இனிஸ்பெக்டரும் கூட வந்திருந்தார். நாங்கள் இருவரும் மாறு வேடத்துடன் சென்றிருந்தோம். வெங்கடரத்தினத்தின் மனைவி தன் புருஷனுக்கும் அவருடைய தம்பியாகிய ராமமூர்த்திக்கும் யாதொரு விரோதமும் கிடையாதென்றும், ஒரு தடவைமட்டும் கோர்ட் உத்தரவுப்படி ராமமூர்த்திக்கு வாரண்டு கொண்டுபோயிருந்ததாகவும், உடன் கணக்குப்பிள்ளையும் வந்திருந்ததால் தம்பியைத் தப்பித்துக்கொண்டு விடும்படி செய்ய தன்னாலாகாமற் போயிற்றென்று அவர் மிகவும் வருத்தப்பட்டு அது தன் போதாத காலமென்று நொந்து கொண்டாரென்றும், இப்படி அவர் பேசிக்கொண்டிருக்கையிலேயே, ராமமூர்த்தியின் மனைவி தன் வீட்டிற்கு வந்து, "நாசமாய்ப் போக—உன் அமீனா வேலையிலே மண் விழ, தெய்வமே என்று வீட்டிலிருந்தவரைக் கைப்பிடியாகப் பிடித்துக் கொடுத்தாயே பாவி யென்று தன் புருஷனை வெங்கடரத்தினத்தைத் திட்டியதாகவும், அதன் மேல் வார்த்தைக்கு வார்த்தை வளர்ந்து பிரமாதமாகச் சண்டையாகிவிட, வெங்கடரத்தினம் அவளைக் கழுத்தைப் பிடித்து வெளியேதள்ளி உதைத்ததாகவும் தெருவாரெல்லாம் ஒன்றுகூடியதாயும், பிறகு சிலர் ஒன்று சேர்ந்து அவளை வீட்டிற்கழைத்துப் போய் விட்டுவிட்டு வந்ததாகவும், அதற்குப் பிறகு ராமமூர்த்தி விடுதலை பெற்று வீடுவந்து தனது மனைவியை உதைத்த சங்கதியெல்லாம் அறிந்து தன் தமயனை வெங்கடரத்தினத்திடம் வந்து பெரிய சண்டை போட்டதாயும், பரஸ்பரம் இரத்தக் காயங்கள் உண்டாகும்படியான விதமாக அடிதடிகள் நடந்ததென்றும் பிறகு ராமமூர்த்தி அதிக ஆங்காரத்துடன் வீடு சென்றதாகவும் சொன்னாள். வெங்கடரத்தினம் இறப்பதற்கு எத்தனை நாளைக்கு முன்பு இக்கலகம் நடந்ததென்று கேட்டேன். இறப்பதற்கு மூன்று தினங்கட்கு முன்பு நடந்ததென்று தெரிவித்தாள். அதற்குப் பிறகு நான் உன்னுடைய புருஷர் ஏழையாய்க் கோர்ட்டில் அமீனாவாக இருக்க, அவருடைய தம்பி மட்டும் பெரிய மிராஸ்தாராய் விளங்க வேண்டியதின் காரணமென்ன வென்று கேட்டேன். அதற்கு அந்தம்மாள் தன் புருஷனும் ராமமூர்த்தியும் ஏழைக் குடும்பத்தினரே யென்றும், சகோதரர்கட்கு விவாகமான பிறகு வெவ்வேறு குடித்தனமாகிவிட்டதாயும் சேலத்தில் ராமமூர்த்தி ஒரு மளிகைக் கடையில் வேலைக்கு இருந்தாயும் பிறகு எப்படியோ மிராஸ்தாராய் விட்டாரென்றும் சொன்னாள். எப்போது முதற்கொண்டு மிராஸ்தார் ஆனார் என்று கேட்டதற்கு ஏழு வருஷங்களுக்கு முன்பு என்றும் அப்போது தான் இவன் பிறந்தானென்று தனது மகனைச் சுட்டிக்காட்டினாள். பிறகு அதை ஒரு வாக்குமூலமாக வாங்கி போலீஸ் இனிஸ்பெக்டரிடம் தந்து சேலத்துக் கனுப்பிவிட்டு, ராகவலு நாயுடுவின் வீட்டிற்குப் போக, அப்போது தான் ரெங்கசாமி கப்பலேறச் சென்றானென்றும், அவன் வைத்துவிட்டுப்போன ஐந்து ரூபாய் முடிப்பைக் கொடுத்துவிட்டு வரத் தாயார் போயிருப்பதாயும் வீட்டிலிருந்த ரெங்கசாமியின் தங்கை

சொல்ல நான் உடனே கப்பலுக்கு விரைந்து சென்றேன். தம்புசெட்டித் தெருவில் போய்க்கொண்டிருக்கும்போது ரெங்கசாமி எதிரே வரக்கண்டு, அவனை யறியாமல் தொடர்ந்து அவன் வீடுசென்று அவன் தகப்பனருடைய நண்பனென்று சொல்லி அப்போதென்னிடமிருந்த ஐந்நூறு ரூபாய்களையும் அவனுக்குக் கொடுத்து அன்று முதல் அவ்வீட்டின் சகல செலவுகளையும் நானே நடத்தி வருவதாகத் தைரியப்படுத்தினேன். சில தினங்களுக்குப் பிறகு சேலம் வந்து சேர்ந்து ராமமூர்த்தியின் காரியங்களைக் கருத்தாய்க் கவனித்துக்கொண்டிருந்து, அவன் தாசி மோகனம்பாள் வீட்டிற்குச் செல்லுகிற சமயத்தில் நான் லயோடிஸ் வேடத்துடன் போய் அவன் வருமளவும் அவ்வீட்டிலேயே இருப்பதாகச் சொல்லி அவனையனுப்பிவிட்டேன். பிறகு நான் துப்பாக்கியுடன் முன்பு கண்டெடுத்த பேனாக்கத்தியுடன் கூடிய சாவிகள் ராமமூர்த்தியினுடையதுதானா என்று, அந்தச் சாவிகளைக்கொண்டு ஒவ்வொரு பெட்டியிலும் போட்டுப் பார்த்தபோது அதிலிருந்த எட்டுச் சாவிகளில் ஏழு சாவிகள் சரியாக இருக்கக்கண்டேன். பெட்டிகளில் இருந்த பத்திரங்களையும் கடிதங்களையும் பரிசோதிக்கையில் துப்பாக்கி லைசென்ஸ் பத்திரமிருக்கக் கண்டேன். துப்பாக்கிமட்டும் அவ்வீட்டில் எங்கும் தேடியும் காணோம். பிறகு ஆருவமுதய்யங்கார் ஐயாயிரம் ரூபாய் பெறுமான தன் நிலத்தை ராமமூர்த்திக்கு ஏழு வருஷங்களுக்கு முன்பு இனாமாக சாசனம் செய்துகொடுத்திருந்த பத்திரம் கிடைத்தது. வெங்கடரத்தினத்தின் மனைவி சென்னையில் கொடுத்த வாக்குமூலத்தின்படியே அந்தப் பத்திரம் ஏழு வருஷங்களுக்குமுன் எழுதப்பட்டதாயிருந்தது. அந்தப் பத்திரம் ஏற்பட்ட வாரத்திற்குப் பிறகு தான் ராமமூர்த்தி லக்ஷ்மீபதியைக் கொலை செய்ய முயன்றதாக லக்ஷ்மீபதி வாக்குமூலம் கொடுத்திருந்த தேதி மாதம் வருஷங்களைக் கணக்கிட்டு முடிவு செய்யலானேன். ஆருவமுதய்யங்கார் தனது தமயனின் சொத்துகளை அவர் காலத்திற்குப் பிறகு தமது வசம் செய்துகொள்ள விரும்பி, அதற்கு இடையூறாக இருக்கிற லக்ஷ்மீபதியைத் தொலைத்துவிட ராமமூர்த்தியைக்கொண்டு வழி தேடியிருக்கவேண்டுமென்று ஊகித்தேன். அதற்குத் தக்கபடி ராமமூர்த்தி முன்பு இருந்த பலசரக்குக் கடையிலேயே ஆராவமுதய்யங்கார் பத்துவரவு வைத்து சகல சாமான்களும் பெற்றுவந்ததாக அந்தப் பல சரக்குக்கடை முதலாளியால் நான் அறிந்திருந்தபடியால், அதின் மூலமாக அங்கு வேலையாளாக இருந்த ராமமூர்த்தியின் நட்பைப்பெற்று, ராமமூர்த்தியால் லக்ஷ்மீபதியைக் கொலைசெய்துவிட ஏற்பாடுசெய்து அதற்காகவே ஐயாயிரம் ரூபாய் நிலத்தை ராமமூர்த்திக்குத் தந்திருக்கவேண்டுமென்றும் யூகித்தேன். ராமமூர்த்தி இருட்டில் தவறிப்போய், அப்போதுதான் லக்ஷ்மீபதி படுத்திருந்த பெஞ்சில் ஸயனித்த தன் மகனைக்கொன்றிருக்கவேண்டுமென்றும் ஊகித்துக்கொண்டேன்.

இவ்வளவு யோசனைகளும் செய்துகொண்டு ராமமூர்த்தியின் பெட்டியிலிருந்த பழைய கடிதங்களைப் பார்த்துவருகையில் "பதினை சீக்கிரம் சரிப்படுத்திவிட வேண்டும்" என்று மறைபொருளாய் ஆராவமுதய்யங்கார் எழுதியிருந்த கடிதமும், அதைத் தொடர்ந்த பல கடிதங்களும் கிடைத்தன. அதற்குப் பிறகு மற்றொரு கடிதத்தில் "நான் நாளை என் தோட்டத்தில் தயாராய்க் காத்திருப்பேன். காரியம் முடிந்தவுடன் சாக்ஷி சொல்ல வருபவன் போல் வந்து நிற்கத்தயார். அவநம் பிக்கை வேண்டாம். நான் செய்கிற இந்த உதவிக்காக நீ நேரில் சொல்லியபடி நான் பட்டுள்ள கடனை, அதாவது நீ ஜாமீன் உடன்கையெழுத்துப் போட்டிருக்கிற ஐயாயிர ரூபாய்க் கடனை நீயே செலுத்தி என்னை அந்தொந்தரையிலிருந்து விடுதலை செய்யவேண்டும். நீ இப்படி உன்வாக்கு பிசகாமல் எனக்கு இந்த சகாயம் செய்வா யென்று நம்பியே, நீ தயாரிக்கும் மரண வாக்குமூலத்தில் நான் கையெழுத்துப் போடவருகிறேன் என்பதைத் தெரிந்துகொள்" என்று ஒரு கடிதம் ஆராவமுதய்யங்கார் எழுதியிருப்பதைப் பார்த்தபோது, அதில் நாளை என்று கண்டிருந்த வார்த்தையைக் கொண்டு, அக்கடிதம் எழுதப்பட்ட தேதியைப் பார்த்ததில் வெங்கடரத்தினம் சுடப்பட்ட தினத்திற்கு—நாளை என்ற வார்த்தையில் போடவேண்டிய தேதியும் பொருத்தமாயிருந்தது. பிறகு மற்றொரு கடிதத்தில் காஸிம் ஸாஹேப் தன் விவாகக்கடனைத் தான் மரணவாக்குமூலம் எடுத்த மறுதினத்திலேயே தந்துவிட வேண்டுமென்று வெகு கண்டிப்பாயும் தெளிவாயும் கண்டிருந்தான். மேற்படி கடிதங்களையும் பத்திர வகைகளையும் கோர்ட்டில் ஆஜர்படுத்தி யிருக்கிறேன். காஸிம் ஸாஹேப் இரண்டாவது தடவை எழுதியதும் லயோடிஸ்ஸான என்னிடம் ராமமூர்த்தியால் கொடுக்கப்பட்டதுமான கடிதத்தில் ராமமூர்த்தியின் விரோதியாகிய ஆறுவமுதய்யங்கார் என்றிருப்பதைப் பற்றிய உண்மையை யறிய முயன்று, ராமமூர்த்தியினிடம் அய்யங்கார் பெரிய போக்கிரி என்று அவன் மனதுக்குத் தகுந்தபடி பேசியதில், ஆருவமுதய்யங்கார் செட்டியிடத்தில் தன்னை உடன் கையெழுத்துப்போடச் செய்து ஐயாயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டு பிறகு செலுத்தாமற்போக, தானே வாரண்டில் அகப்பட்டு அத்தொகையைச் செலுத்தும்படியாயிற்றென்றும் அவன் மகா வஞ்சகன் என்றும், அந்த வாரண்டிற்குப் பிறகு தனது சொத்துக்களை மறைப்பதற்காக தனது சென்னை நண்பனை ராகவலு நாயுடுவை நம்பி கூட்ஸில் சகலத்தையும் ஏற்றியனுப்ப, அந்த நேசத்துரோகி அதைத்திருப்பி விட்டானென்றும், எல்லாப் பயல்களும் இப்படித்தான் இருக்கிறார்களென்றும் தன் வயிற்றெரிச்சலைச் சரமாரியாகக் கொட்டினர். அதிலிருந்து இருவருக்கும் உண்டான விரோதத்தைக் கிரகித்துக்கொண்டு, ஆருவமுதய்யங்கார், தான் ராமமூர்த்திக்குத் தந்த ஐயாயிரம் ரூபாயையும் மறுபடியும் கைப்பற்றுவதற்காக ராமமூர்த்தியை உடன் கையெழுத்துப் போடச் செய்து அவ்வகையில் தன் தொகையை மீட்டுக் கொண்டாரென்றும் ஊகிக்கலானேன். பிறகு ஆருவமுதய்யங்காரின் வீட்டில் பரிசோதனை போடச்செய்து அதில் கிடைத்த இந்தக் கேஸுக்குச் சார்பான பல கடிதங்களையும் இப்போது கோர்ட்டில்

ஆஜர் செய்திருக்கிறேன். அதன் பிறகு நான் கல்கத்தாவுக்குச் சென்று என் வீட்டில் கல்கத்தா போலீஸ் கமிஷனரின் அநுமதியின்பேரில் மறைத்து வைத்திருந்த இராகவலுநாயுடுவையும் லக்ஷ்மீபதியையும் அழைத்துக்கொண்டு போய் போலீஸ் கமிஷனர் வசம் ஒப்புவித்து, உண்மையான குற்றவாளிகள் அகப்பட்டுவிட்டார்களாதலால், வெளிக்குக் குற்றவாளியாகக் கருதப்படுகிற ராகவலுநாயுடுவை நிரம்பவும் மரியாதையாக நடப்பித்து சேலத்திற்குக் கொண்டுபோகப்பட வேண்டுமென்று சொல்லி, லக்ஷ்மிபதி கொலைசெய்யப்பட்டுப்போனவனாகக் கருதப்பட்டு அக்கேஸ் கிரமமாக முடிவுபெறு திருப்பதால் அவனையும் போலீஸ் பந்தோபஸ்துடன் சேலத்துக்குக்கொண்டுபோகும்படியும் தெரிவித்துக்கொண்டேன். அந்தப்படியே ஸகலமும் நிறைவேறின. பிறகு நான் சேலம் வந்து காஸிம் ஸாஹெப்புவுக்குக் கடன் கொடுத்தவரான நாகப்பாவை விசாரித்ததில் காஸிமுக்கு கலியாணத்துக்காக ரூபாய்க்கு மூன்று பைசா வட்டிக்கு ஆசைப்பட்டு 80-ரூபா தந்ததாகவும், வட்டியானது முதலைக் கெடுத்ததென்பதாக முடிந்திருக்கிறதென்றும் சொன்னார்.

இது நிற்க, வெங்கடரத்தினம் முதுகுபக்கமாகச் சுடப்பட்டிருப்பதால், அவனை சுடுவதற்காக ஏற்கெனவே ராமமூர்த்தி அந்த இடத்தில் மறைந்துகொண்டிருந்து, தன்னைக் கடந்து வெங்கடரத்தினம் சென்றதும் முதுகுபக்கமாகச் சுட்டிருக்கிறானென்று காண்கிறது. முதுகுபக்கமாகச் சுட்டதற்கு அவன் தன்னைப் பாராமலிருக்கட்டுமென்றெண்ணிச் சுட்டதாயிருக்க வேண்டும். அவன் கீழே விழுந்த பிறகு தனக்கு தற்செயலாய் உண்டான யோசனையால் கொத்துச்சாவியிலிருந்த பேனாக்கத்தியைக்கொண்டு ஆபத்தில்லாததும் ஊனமாகாததுமான இடமாகப் பார்த்து இடது முழங்கையில் அறுத்துக்கொண்டிருக்கிறான். பிறனொருவனால் செய்யப்பட்ட அவசரமான கத்திக்காயமாக இருந்தால் அது பெரும்பாலும் குத்தப்பட்டே யிருக்க வேண்டும். உயிர் போகக்கூடிய இடமான வயிறு, கழுத்து இவைகளில் கத்திபடாமல் இடது முழங்கையில் பட்டிருப்பது ராமமூர்த்தியே அப்படிச் செய்துகொண்டானென்பதை சூசிப்பிக்கின்றது. மேலும் வெங்கடரத்தினம் கொலையுண்டதற்கு முதல் நாள் ராமமூர்த்தி கோர்ட்டில் விசாரித்தாகவும், ஒரு சம்மன் வெங்கடரத்தினம் மறுநாட் காலையில் கொண்டுபோவான் என்று ராமமூர்த்திக்கு இன்னொரு அமினாவால் சொல்லப்பட்டதாயும் என் விசாரிப்பில் அறிந்தேன். ஆகவே முன்னதாகவே எல்லாம் ஜாக்கிரதைசெய்துவிட்டு ஆருவமுதய்யங்காரையும் காஸிம்ஸாஹிப்புவையும் அந்த இடத்திற்கு வரும்படி செய்துவிட்டு, பிறகுதான் கொலை நடத்தியிருப்பதாகத் தெரிகிறது. தன்னை அறுத்துக்கொள்ளும்படி உண்டான யோசனை தற்செயலாய் உண்டானதென்பதற்கு கொத்துச்சாவிகளுடன் கூடிய கத்தியை எறிந்திருப்பதே காரணம். முன்கூட்டியே இந்த யோசனை தோன்றியிருந்தால் அதற்கென்று ஒரு கத்தி இராமமூர்த்தி தயார் செய்துகொண்டு வந்திருக்கக்கூடும். அப்போது அந்த யோசனை வராமல், சுட்டுவிட்டு எவனோ சுட்டதாகச் சொல்லி மரண வாக்குமூலம் தயாரிக்கலாமென்று நினைத்திருந்தான்.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS - FEB 1913 MADRAS

பிறகு தற்செயலாய் அப்போது தோன்றிய புதிய யோசனையால் தன்னையும் அறுத்துக் கொண்டு பிறர்செய்தது போலக்காட்டுதல் இன்னும் பொருத்தமாயிருக்குமென்று மனதிற்பட்டு அப்படியே செய்ய முயன்றதில், குத்திக்கொள்ள மனம் துணியாததால் கொஞ்சம் அறுத்துமட்டும் விட்டுக்கொண்டு, அதற்கான தடயம் தன்னிடமிருக்கக் கூடாதென்று கொத்துச் சாவியுடன் கூடிய கத்தியை ஜலத்தில் எறிந்தால் யாரும் அறியார் என்றெண்ணி அங்கு ஓடும் சிற்றாற்றில் எறிந்திருக்கிறான். நான் பழைய இரும்புக் கடைகளில் விசாரித்ததில் வெங்கடரத்தினம் கொலையுண்ட மறுநாள் ராமமூர்த்தி தனது பெட்டிகளுக்கெல்லாம் சாவிபோட இரும்புக் கடையிலிருந்து ஒருவனை அழைத்துப்போய் சாவிபோட்டதாகத் தெரிகிறது. ஆகவே கண்டெடுத்த கத்தியுடன் கூடிய கொத்துச்சாவி ராமமூர்த்தியினுடையதே என்று பின்னும் பலமாய் உறுதிப்படுகிறது.

இது வரையிலும் நான் விவரித்த விஷயங்களாலும், கோர்ட்டில் ஆஜர்படுத்தியிருக்கிற ரிக்கார்டுகளாலும், ராமமூர்த்தி வெங்கடரத்தினத்தைச்சுட்டானென்றும், சுடப்பட்டு அவன் கீழே விழுந்த பிற்பாடுதான் தனக்குள் அப்போதுண்டான யுக்தியைக் கொண்டு, கொத்துச்சாவியிலுள்ள கத்தியால் தன்னையும் ஆபத்தில்லாத இடமாகப்பார்த்து இடது முழங்கையில் அறுத்துக் கொண்டிருக்கிறானென்றும், அக்கொலைக்கு ஆருவமுதய்யங்காரும் பொய் மரண வாக்குமூலம் வாங்கிய காஸிம் சாஹிப்புவும் உடந்தையாயிருந்திருக்கிறார்களென்றும், அதற்கு முன்பு நடந்த மற்றொரு கொலையில் ராமமூர்த்தியே தன் குமாரனைத் தவறிக் கொன்றிருக்கிறானென்றும், அதற்கு உடந்தையாக ஆருவமுதய்யங்கார் இருந்திருக்கிறாரென்றும், இப்போது குற்றவாளியாகக் கருதப்படுகிற இராகவலு நாயுடு யாதொரு பாவமும் அறியாத பரிசுத்தரென்றும் கோர்ட்டாரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று சொல்லி சஞ்சீவபாபு தமது ஆசனத்திலமர்ந்தார். வெங்கிடரத்தினத்தின் மனைவி கோர்ட்டில் கொடுத்த வாக்குமூலமும் சஞ்சீவபாபு சொன்னதை ஒத்தே யிருந்தது.

லயோடிஸ் தான் சஞ்சீவ பாபு என்று தெரிந்தபோது ராமமூர்த்திக்கும் ஆராவமுதய்யங்காருக்கும் பாதி உயிர் போய்விட்டதென்னலாம். காஸிம் ஸாஹெப், வெங்கடரத்தினம் இறந்த பிறகுதான், மரண வாக்குமூலம் போல் தான் தயார் செய்ததாயும், அவன் தருவதாகச் சொன்ன தன் கலியாணக் கடனை நூறு ரூபாய்க்கு ஆசைப்பட்டு இப்படிச் செய்ததாயும் சொல்லிக்கொண்டான். ராமமூர்த்தியும் ஆருவமுதய்யங்காரும் சஞ்சீவ பாபு அவ்வளவு சங்கதிகளையும் தமது யூகத்தால் உத்தேசித்துச் சொன்னபோதிலும் அவ்வளவும் உண்மையே என்று தங்களின் குற்றத்தை ஒப்புக்கொண்டார்கள். ராமமூர்த்தி தனது குமாரனைத் தானே வகை மோசமாகக் கொன்றுவிட்டது உண்மையென்றும், லக்ஷ்மீபதியைக் கொல்ல நினைத்து முயன்றது தனக்கே கெடுதியாக ஆயிற்றென்றும், லக்ஷ்மீபதியைக் கொல்லும்படி ஆராவமுதய்யங்கார் தனக்கு ஐயாயிரம் ரூபாய் பெறுமான நிலத்தை வெகுமதியாகத்

தர், அதிலிருந்தே தான் வறுமையினின்றும் நீங்கி மிராஸ்தார் என்ற பெயருடன் வெளிப்பட்டதாகவும், அநியாயத்தில் சம்பாதித்த சொத்து அநியாயத்திலேயே செலவழிந்து போய் இப்போது தனக்கு இரண்டாயிரம் ரூபாய் கடனேற்பட்டிருப்பதாகவும், சஞ்சீவபாபுவைத் தான் லயோடிஸ் என்றே நம்பியிருந்து ஏமாந்ததாகவும், அவருடைய யூகிப்புகள் யாவும் சரியே யென்றும், தனது தமயன் வெங்கடரத்தினம் தன்னை வாரண்டில் பிடித்துக்கொண்டு போனதுமல்லாமல், அவன் வீட்டுக்குப்போன தன் மனைவியையும் கண்டபடி துற்பாஷிதங்களால் வைது உதைப்பேனென்றும் சொல்லி அப்படியே உதைத்து கழுத்தைப் பிடித்தும் வெளியே தள்ளியதால் தனக்கு அதிக ஆத்திரம் உண்டாயிற்றென்றும், பிறகு அவனைக் குத்திக்கொன்று போட்டுவிடுவதென்று கத்தியுடன் அவன் வீட்டிற்குப் போகையில், அவனைக் குத்தி வெளிப்படையாகக் கொன்றால் தானும் தூக்கிடப்பட்டுப் போகவேண்டி வருமென்ற ஞாபகம் உண்டாகி, அந்த எண்ணத்தை விட்டு விட்டு, அவன் வீட்டில் அவனைப் போய்ப்பார்த்து திட்டியதில், அவன் தன்னையும் பதிலுக்குப் பதில் திட்ட, பிறகு கைகலந்து சண்டைகள் உண்டாகி இரத்தக் காயங்கள் ஏற்பட்டதென்றும், உடனே தான் அடக்கமுடியாத ஆங்காரத்துடன் வீட்டிற்குத் திரும்பி வருகையில் ஆராவமுதய்யங்காரைச் சந்திக்க, அவருக்கு விஷயங்களைச் சொல்லி மரண வாக்குமூலத்தில் சாக்ஷியும் போடவேண்டுமென்று வேண்ட, அதற்கவர் தனது ஐயாயிர ரூபாய் கடனையும் நான் ஒப்புக்கொண்டு செலுத்திவிட்டால் மரண வாக்குமூலத்தில் சாக்ஷியம் போடுவதாகச் சொல்ல அதற்குச் சம்மதித்துக்கொண்டதாயும், பிறகு கல்யாணக் கடனால் கஷ்டப்படும் காஸிம் சாஹிபுவுக்கு உதவி செய்வதாகச் சொல்லி, பொய்மரணவாக்குமூலம் எழுத அவனையும் ஒப்பும்படி செய்து கொண்டதாயும், பிறகு கோர்ட்டில் விசாரித்தபோது வெள்ளிக்கிழமை ஒரு சம்மனை சூரமங்கலத்தில் கொடுத்து வர வெங்கடரத்தினம் அதிகாலையில் போகக்கூடுமென்று அங்கிருந்த ஒரு அமீனா சொன்னதாகவும், அதன் பேரில் சஞ்சீவபாபுவின் யூகிப்புகளின்படியே சகலமும் செய்ததாகவும், மரண வாக்குமூலம் வெங்கடரத்தினம் கொடுத்ததல்லவென்றும் அவனைத் தான் முதுகுபக்கம் சுட்டதும் உடனே கீழே வீழ்ந்தானென்றும், மறு நிமிஷத்திலேயே அவன் இறந்து விட்டானென்றும், இறக்கும்போது தன் கையை எடுத்து தன் மார்பில் வைத்துக்கொண்டு பிரியத்துடன் அன்பு நிறைந்த கண்களால் தன்னைப் பார்த்தபடியே உயிரை விட்டதாயும், அப்பார்வை — அக்கடைசிப்பார்வை இன்னும் தன் மனத்தை உருக்கி வருவதாயும், அவன் இறந்த பிறகே காஸிம் ஸாஹெப்பு வாக்குமூலம் தயார்ப் படுத்தினரென்றும், அது முடிவதற்குள் போலீஸ் இனிஸ்பெக்டர் வந்து விட்டதால் முன் ஏற்பாட்டின்படி நன்றாக விவரித்து எழுத முடியாமல் சுருக்கி முடித்துவிட்டதாகவும் சொன்னான். ஆராவமுதய்யங்கார் ஒன்றுமே பேசாமல் திகில்பட்ட மனதுடன் நடுங்கிக்கொண்டு நின்றபடியிருந்தார்.



கடைசியாக ராமமூர்த்தி நாயுடு மரணதண்டனை விதிக்கப்பட்டார். ஆராவமுதய்யங்காருக்கு தீபாந்தர வாசம் லபித்தது. காஸிம் ஸாஹெப்புவின் கலியாண ஆசையின் பயனாக அவனுக்கு ஐந்து வருஷ கடினசிக்ஷை கிடைத்தது. காஸிம் ஸாஹெப் கலியாணம் செய்யாதிருந்தால் ஜெயில் வாஸமடைந்திரான். இவனுக்கு விவாகத்தினால் இந்த விபத்து விளைந்தது. அவனுடைய போக்கிரித்தனத்தைவிட மூடத்தனம் விசேஷமாய் இருக்கிறதென்று ஜட்ஜ் அபிப்பிராயப்பட்டார். இராமமூர்த்தி, ஆராவமுதய்யங்கார், காஸிம் சாஹிபு இம்மூவரும் ஒரு கொலைபாதகத்தை நடத்தி முடிக்க எவ்வளவோ ஒற்றுமையுடனிருந்து ஒன்றுகூடிச் செய்தவர்களாயிருந்தும் அவர்களுக்குள்ளாகவேயிருந்த மோசபுத்தியால் ஒருவருக்கொருவர் எதிர்த்துக்கொண்டு, ராகவலு நாயுடுவைத் தூக்கில் போட்டுத் தண்டிக்கத் தயார் செய்த படுகுழியில் தாங்களே வீழ்ந்து அகப்பட்டுக்கொண்டார்கள். பிறருக்கு வெட்டிய படுகுழி தங்கட்கே வந்து முடிந்தது! மோசமே புரிந்து பிறரை வஞ்சித்து தாங்கள் மட்டுமே வாழப்பார்க்கின்ற மோசக்கூட்டத்தாருடைய ஐக்கியம் எப்போதுமே பிரிவினைக்குத் தயாராக நிற்கும். இந்த விதமான மோசக்கூட்டத்தாருள்ளும் அக்கூட்டத்திலேயே ஒருவனை ஒருவன் கெடுக்கும் மோசச்சூழ்ச்சிகள் அநேகம் பொதிந்து நிற்பதும் உலக அநுபவமே. நினைக்கும் கேடு தனக்கே என்பதற்கு ராமமூர்த்தி லக்ஷ்மிபதியைக் கொல்லப்போய் தன் குமாரனையே கொல்லும்படியாக நேர்ந்ததை ஒரு சீர்த்தியான உதாரணமாகக் கொள்ளலாமென்றும் நீதியதிபர் விவரித்தார். மோசக்காரர்களே மோசக்காரர்களை மோசம் பண்ணுவார்களென்றும் சொன்னார். ஒற்றுமை என்பது நல்லோர்களிடத்து அபிவிர்த்திபெறுமே யன்றி, மோசக்கூட்டங்களுக்குள் ஒற்றுமை நீடித்து நில்லாதென்றுங் கூறினார்.

பிறகு இராகவலு நாயுடுவை நிரபராதி யென்று கோர்ட்டார் விடுதலை செய்து, லக்ஷ்மிபதியை அவர் காப்பாற்றியதற்கும், தாம் குற்றவாளியாக நின்று கல்கத்தாவுக்கு ஓடிப்போதுகூட, நரசிம்மய்யங்காரிடம் லக்ஷ்மீபதியைக் காப்பாற்றுவதாகச் சொன்ன சத்தியத்தைக் கைவிடாமல் அவனையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு போய்விட்டதையும் எடுத்துச்சொல்லி நீதியதிபர் இராகவலுநாயுடுவை மிகவும் புகழ்ந்து பேசினார். ஸர்க்காரால் வசப்படுத்தப்பட்டிருந்த சொத்துகளை அவருக்குத் திரும்பவும் கொடுத்துவிடப்படவேண்டுமென்றும் உத்தரவு செய்யப்பட்டது. இந்தக் கேஸுக்கு சஞ்சீவபாபுவைப் பொறுக்கி யெடுத்த போலீஸ் இனிஸ்பெக்டரையும், இக்கேஸ் சம்பந்தமாக அபாரமான சிரமமெடுத்துக்கொண்ட சஞ்சீவபாபுவையும் ஜட்ஜி மிகவும் சிலாகித்தார். விசாரணையும் இவ்விதமாக ஒருவாறாய் முடிவுபெற்றது.

161299

## அத்தியாயம். 9.

ஸஞ்சீவபாபு பம்பாயில் புதிதாகப் பெரிய வீடொன்று கட்டி முடித்திருந்தார். அவ்வீட்டில் கிரகப்பிரவேசத்திற்கு மறுதினம் ஒரு விவாகமும் நடக்கும்படி செய்தால் மனதிற்கு அதிக உத்ஸாகமாய் இருக்குமென்று எண்ணினார். ராதாதேவியின் மீதும் ரெங்கசாமியின் மீதும் அவருக்கு விசேஷித்த அன்பு இருந்ததால் அவ்விருவருக்கும் தமது புது வீட்டில் தமது சொந்தச் செலவில் விவாகத்தை நடப்பித்துக் கொண்டாட வேண்டுமென்று விரும்பினார். ராகவலு நாயுடுவும் அவரது தர்ம பத்தினியும் ஸம்மதிக்கவே எல்லோருமாகப் பிரயாணப்பட்டு பம்பாய்க்குப் போய்ச் சேர்ந்தனர். மிகுந்த ஆரவாரத்துடன் முதல்நாள் கிரகப்பிரவேசம் நடந்தது. மறுதினம் ராதாதேவிக்கும் ரெங்கசாமிக்கும் விவாகம் குறிப்பிடப்பட்டிருந்தது. ஸஞ்சீவபாபு அவரால் ஆனமட்டும் ராதாதேவியின் பிதாவைக் கண்டுபிடிக்க முயன்றும் கூடாமற்போயிற்று. அவர் இவ்வுலகில் இருக்கிறாரோ இல்லையோ வென்பதுகூட ஸந்தேகமாயிருந்தது. கடைசியாக விவாகதினமும் வந்து பம்பாயிலுள்ள பிரபல கனவான்களெல்லாம் விவாகத்திற்கு விஜயம் செய்திருக்க ராதாதேவிக்கும் ரெங்கசாமிக்கும் கல்யாணம் வெகு விமரிசையாக நடந்தேறிற்று. அதற்கு மூன்றாவதுநாள் சாந்திமுகூர்த்தமும் நிறைவேறின. ராதாதேவியும் ரெங்கசாமியும் இல்வாழ்க்கையிற் புகுந்து பம்பாயில் தானே சில மாதங்கள் தங்கியிருந்தனர்.

இது நிற்க, ராதாதேவியின் பிதா யாதாயினாரென்று கவனிப்போம். அவர் வியாதியாப் பம்பாயில் தனது பந்துவின் ஆதரவுபெறச் சென்றவர் ஒரு வருஷம் போல் அங்கிருந்தார். அவரது உறவினர் இங்கிலாந்துக்குப் புறப்பட அவரால் அழைக்கப்பட்டு இவரும் உடன் சென்றார். அங்கு மறுபடியும் வியாதியில் விழுந்துவிட, அவரது உறவினர் அவரைக் கப்பலில் அழைத்துவருவது அபாயகரமென்று அவ்விடத்திலேயே ஒரு கனவானுடைய சம்ரக்ஷணையில் ஒப்புவித்துவிட்டுத் தாம் மாத்திரம் திரும்பலானார். இது நடந்து சில வருஷங்களும் சென்றன. அவருக்கும் அதிஷ்டவசத்தால் தேகம் சுகமாகி நேராகச் சென்னைக்கு வந்து சேர்ந்தார். தமது புத்திரியைப் பற்றி விசாரித்துக்கொண்டிருக்கையில் நமது மார்வாடியும் எதிர்ப்படலானான். தனக்கு ராதாவின் வீடு கிடைக்காதபடி ரெங்கசாமி அதிக தொகை கூறி ஏலத்தில் எடுத்த விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டிருந்தானாதலால் அவனுக்கு எப்படியாவது கெடுதி செய்யவேண்டுமென்று தீர்மானித்தான். ராதாவின் பிதாவிடத்தில், ரெங்கசாமி அவர் வீட்டை ஏலத்தில் சொற்ப தொகைக்கு எடுத்து மோசம் செய்ததாயும், அவளையும் மயக்கி பலாத்



காரமாகப் பம்பாய்க்கு இட்டுச் சென்று கலியாணத்தை நடப்பித்துக்கொண்டதாயும், அது தனக்கு அதிக துக்கத்தைக் கொடுத்ததென்றும், ரெங்கசாமியின் மீது கேஸ் எடுக்கவேண்டுமென்றும், அதற்கான செலவுகளுக்குத்தான் ஆயிரம் ரூபாய் தருவதாகவும் கூறி, அப்படியே அவருக்குக் கொடுத்துத் தன்வசமாக்கிக்கொண்டான். ராதாவின் பிதாவுக்கு சொந்தயோசனை, சொந்தபுத்தி என்பதே கிடையாது. அதனால் தான் முன் வியாபாரத்திலும் தன் பங்காளியின் இஷ்டப்படி எல்லாம் நடந்து மோசம் போய் வியாபாரத்தையும் கெடுத்துக் கொண்டார். இப்போதும் மார்வாடியின் வசமாகலானார். அன்றியும் கரைப்பார் கரைத்தால் கல்லுங் கரையுந்தானே. தனது புத்திரியான ராதாதேவியை வகை மோசமாக ஏமாற்றி அவள் வீட்டையும் அவளையும் அபகரித்த ரெங்கசாமியை இலகுவில் விடக்கூடாதென்று தீர்மானித்தார்.

அந்தப்படியே ரெங்கசாமியின் மீதும், இராகவலு நாயுடு ஸஞ்சீவ பாபு இவர்களிருவர் மீதும் இந்தியன் பினல்கோட் சட்டப்படி "ஆளைத்திருடல்" என்னும் குற்றம் செய்தார்களென்று ராதாதேவியின் தகப்பனார் பம்பாய் முதலாவது வகுப்பு மாஜிஸ்திரேட்டினிடம் பிராதுகொடுத்தார். பிராதில் மேற்படி ராதாதேவி 16-வயதுக்குட்பட்டவளென்று கண்டிருந்தது. 1, 2, 3, குற்றவாளிகள் தன் சம்ரக்ஷணையிலிருந்த ராதாதேவிக்குத் துர்ப்போதனை செய்து அழைத்துப் போனதாகக் குறிக்கப்பட்டிருந்தது. கேஸும் விரிவாக விசாரணையாயிற்று. கேஸ் விசாரணையிலிருக்கும்போதே, ராதாதேவியின் பிதா சஞ்சீவபாபுவால் உண்மையான விவரங்களையறிந்து, தான் தெரியாமல் மார்வாடியின் வலையிற் சிக்குண்டதற்காக வருந்தலானார். இராகவலுநாயுடுவையும், ஸஞ்சீவபாபுவையும், ரெங்கசாமியையும் மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டார். ராதாதேவியை எடுத்து முத்தமிட்டுக்கொண்டு தான்செய்துவிட்ட மௌட்டியச் செய்கைக்காகப் பெரிதும் இரங்கினார். தான் இங்கிலாந்து சென்றதும் செத்துப் பிழைத்துத் திரும்பியதுமான ஸகலமும் ராதாவுக்குச் சொன்னார்.

இதனிடையே விசாரணையும் முடிவு பெற்று இக்கேஸை விசாரித்த முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் அடியிற்கண்டபடி தீர்மானம் செய்தார்.

1-வது வயது விஷயம். ராதாதேவிக்கு 16-வயது ஆய்விட்டதா இல்லையா வென்பது இந்தக் கேஸின் முக்கிய அம்சம். ஸிவில் சர்ஜன் ராதாதேவிக்கு 16-வயது ஆகவில்லை யென்றும், குறைந்த விசாரணையில் 16-வயதுக்குமேல் மூன்று மாதங்களாயிருந்தால் அதைக் கண்டுபிடிப்பதரிதென்றும் சொல்லியிருக்கிறார். வேறு இரண்டு டாக்டர்கள் ஷையாளுக்கு 17-வயதுக்கு மேலாயிற்றென்று கூறுகிறார்கள். இப்படி டாக்டர்களின் அபிப்பிராயம் ஒன்றுக்கொன்று இணங்கியிருக்கவில்லை. முனிசிபாலிடியாரால் வைக்கப்பட்டுள்ள ஜெனன மரண ரிஜிஸ்தரில் ராதா என்பதை ருக்மணி என்று மாற்றப்பட்டிருப்பதால் அது நம்பத்தக்கதல்ல. என்னுடைய மனசாக்ஷி ராதாதேவி தனக்கு 18-வயதென்று சொல்லியிருப்பதையே நம்பும்படி கூறுகிறது. மேலும் அவள் பம்பாய் பிரஸிடென்ஸி மாஜிஸ்திரேட் முன் கொடுத்திருக்

கும் பிரமாணப் பத்திரிகையில் தன்னுடைய வயது 18-என்று சொல்லியிருக்கிறாள். ஜாதகமிருந்தால் வயதை நிர்ணயிக்கப் போதுமான சாக்ஷியமாகும். அது கிடையாது. இதன்றி 16-வயதுக்குட்பட்டவளாயிருப்பின், குற்றஞ் சாட்டப்பெற்ற மூவரும் அவளை யழைத்துப் போவதற்கு அத்தனை மூடர்களாயிருக்கவில்லை. ராதாதேவியின் அத்தை அவளுக்கு 18-வயதென்கிறாள். ஆதலின் நாம் ஷெபாளுக்கு 18-வயதென்றே நிர்ணயிக்கிறோம். ராதாதேவிக்கு துர்ப்போதனை செய்தார்களென்று கூறுவது அயுக்தம். மேலும் ராதாதேவியின் பிதா சென்ற இடமே தெரியாதிருந்து இப்போதுதான் இங்கிலாந்திலிருந்து திரும்பியவரென்றும் தெரிகிறது. ராதாவைக் குற்றஞ் சாட்டப்பெற்றவர்கள் துர்ப்போதனை செய்து அழைத்து வந்தார்களென்பது நம்பத்தக்கதல்ல. இந்தக் கேஸில் வாதி பக்கம் ஸாக்ஷியாக நிற்கும் மார்வாடி கோர்ட் முன்பு நிற்பதற்குக்கூட யோக்கியதை பெறுவண்ணம் அநேக தப்பிதங்களைச் செய்திருப்பவனென்று ஸஞ்சீவ பாபுவால் ருஜு செய்யப்பட்டிருக்கிறது. மேற்படி ஸாக்ஷியும் அதை ஒப்புக்கொள்வதால் அவனுடைய ஸாக்ஷியம் பயனற்றது. ராதாதேவியே முதற் குற்றவாளியைத் தூண்டி தன்னை விவாகம் செய்துகொள்ளும்படி வேண்டியிருப்பாளென்று நினைக்கிறோம். மேலும் பம்பாயில் பல கனவான்கள் முன்னிலையில் இவ்விருவருக்கும் விவாகம் நடந்தேறியது. உள்ளூரில் செய்தால் தந்தையின் கக்ஷியாரால் கலகமுண்டாகுமென்று பம்பாய்க்கு வந்திருக்கலாம். கடைசி விஷயமான கார்டியன் பாத்தியதையைப்பற்றிக் கூறுவது அனாவசியமாயினும் அதையும் இங்கே சொல்லி விடுவோம். வாதி தன்னுடைய போஷணையிலிருந்த தன் பெண் ராதாதேவியை அழைத்துப் போனது பிசகு என்கிறான். அவனுடைய போஷணையில் ராதா இருக்கவில்லை என்பதற்கு அவன் இப்போது தான் இங்கிலாந்திலிருந்து வந்தானென்பதே போதிய சாக்ஷி. சட்டப்படி கல்யாணமான க்ஷணமே ஒரு பெண்ணுக்கு அவள் சிறியவளாயிருந்தாலும் பெரியவளாயிருந்தாலும் புருஷனே கார்டியனாகிறான். அவன் ஹிந்து லாவின் பிரகாரம் வேறு கோத்திரத்தைச் சேர்ந்துவிட்டதால் தகப்பன் கார்டியனல்ல. புருஷன் இறந்த பிறகு அவனுடைய ஸமீப பந்து கார்டியன். அதுவும் அப்போது அப்பெண் மைனராக இருந்தாற்றான். ஆகலின் பிரஸ்தாப கேஸில் தகப்பன் எவ்விதத்திலும் கார்டியனாகமாட்டான். ஆனதால் மூன்று குற்றவாளிகளையும் விடுதலை செய்கிறோம்."

மேற்கண்ட சங்கதிகள் நடந்து பல வருஷங்களாயின. இராகவலு நாயுடுவும் அவரது தர்மபத்தினியும் சென்னப்பட்டணத்தில் சுகமாக இருக்கின்றார்கள். அவரது இளைய குமாரனும் குமாரத்தியும் பாடசாலையில் வாசித்து வருகின்றனர். ராதாதேவியின் பிதாவுக்கும் ஸஞ்சீவபாபுவுக்கும் இப்போது அத்தியந்த நேசம். ரெங்கசாமி இப்போது பிரபலமான வியாபாரியாய் ராதாதேவியுடன் வாழ்க்கை நடத்தி சந்தோஷத்துடனிருந்துகொண்டிருக்கிறான். ராதா கையிலொரு ஆண் குழந்தையுடனும் இடுப்பிலொரு பெண் குழந்தையுடனும் காணப்படுகிறாள். அவள் காலம் சுகமே சென்றுகொண்டிருக்கின்றது. சேலத்தில் நரசிம்மய்யங்கார் தமது புத்திரனான லக்ஷ்மீபதிக்கு விவாகம் செய்து வைத்து அவரும் சந்தோஷத்துடன் நாட்களைக் கழித்துவருகின்றார். கடவுளருளால் யாவரும் சௌக்கியமாக வாழ்ந்து வருகின்றனர். சுபம்.

முற்றிற்று.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 - JAN 1914
MADRAS.

# பிரஜாநுகூலன்.

திரிச்சிராப்பள்ளி.

புத்தகம் 8. 1914-ம் ௵ ஜனவரி ௴ 1௳ சஞ்சிகை 9.

## மனோகரமான குறிப்புகள்.

அபரிமிதமான சந்தோஷத்துடனும் 1914-ம் வருடத்திற்கு நல்வரவு கூறியழைக்கின்றோம். 'இன்று மிகவும் உற்சாககரமான நாள். எல்லோரும் தங்கள் தினசரி (டைரி)யை இன்று தான் எழுதத்தொடங்குவார்கள். ஒரு தினசரியைக் கடையிலிருந்து கிரயத்திற்குப் பெறும் ஒருவன் அதைப் பார்த்து அடையும் புளகாங்கிதத்திற்கு எல்லையில்லை. ஆனால் அந்தத்தினசரி அவனது சுகங்களைத்தான் அதிகமாக ஏற்கப்போகின்றதோ, அல்லது அவனது சோகபாகங்களைத்தான் அதிகமாக ஏற்கப்போகின்றதோ அதை அவன் அறியமாட்டான். உலகத்திலே மனிதனிடத்து அக்ஞானம் இவ்வளவு புஷ்டித்து நிற்கையில் அவன் தன்னைப்பற்றிக் கர்விக்க என்ன காரணமிருக்கப் போகிறதோ தெரியவில்லை.

---

ரஸாயனத் தொழில்கள் என்றால், எந்தச்சாமான்கள் செய்வதற்கு உப்பு முதலிய மருந்துகளைக் கலந்து உபயோகித்துச் செய்யவேண்டுமோ, அந்த சாமான்களைச்செய்யும் தொழில்களுக்குப் பெயர். உதாரணமாக, தோல் பதனிடுதல், கண்ணாடி, காகிதம் செய்தல் முதலிய தொழில்களைக் குறிப்பிடலாம்.

---

கடன் வாங்கினவர் கொடுப்பதென்ன? காலைப்பிரவர்த்திக்கு சாப்பிடுவதென்ன? (கடுக்கா)
பெரியவர்கள் ஏறுவது எதன்மேல்? பெண் கொடுத்தவனுக்குப் பேரென்ன? (மாமா) மா-பெரிய மா-குதிரை.
சுகாதாரத்துக்கு வேண்டியதென்ன? துளையில் ஆணியை ஏற்றுவது எது? (சுத்தி.)

---

1. வீட்டு எண்ணமில்லாது மேலான பதவியிலிருப்பவனெவன்?
2. துக்கந்தெரியாது சுகத்தில் மூழ்கித் துயரற்றிருப்பவனெவன்?
3. சமயத்து சத்தியனெனப் பெயரெடுப்பவனெவன்?
4. நித்தியானந்தங்கொண்டு நிர்மல நித்திரை கொள்பவன் யார்?

1-கூத்திக் கள்ளன் (2) சூதன் (3) பொய்யன் (4) குடியன்.

---

"தங்கமொழி." நீ ஆளுகை செய்ய மனதானால் ஊழியஞ்செய்; படிப்பிக்க மனதானால் படித்துக்கொண்டிரு; சுகித்திருக்க மனதானால்பாடுபடு; பிழைக்க மனதானால், செத்துப்போ; சம்பாதிக்க மனதானால், கொடு; அறுக்க மனதானால், விதை; வாங்க மனதானால், விசுவாசி; விசுவாசிக்க மனதானால், கேட்கிறவனாயிரு.

**"ஜெபத் தோணி."** ஒருவர் வீடு முழுவதும் அதிரத்தக்கதாக அவசியமற்ற பிரகாரம் சப்தம் போட்டுச் செபம் செய்கிறதைக் கண்ட ஒரு பெண் தன் தாயைப்பார்த்து, அம்மா, இந்தப் பெரியவர் ஆண்டவரை அடுத்திருக்கிறார் என்று நான் நினைக்க இடமில்லை. அவர் சத்தம் பண்ணுகிறதைப்பார்த்தால் அவர் கடவுளுக்கு வெகு தூரத்தில் இருப்பதாகக் காணுகிறது என்றாள்.

---

**"எது ஏழை வீடு?"** மதுபானம் குடிப்பதற்கு ஆரம்பித்த ஒரு துரை குருவைப்பார்த்து: ஏழைகள் வீடு எங்கிருக்கிறது. நான் போய்ப் பார்க்க வேண்டும் என்க,, குரு: நீர் இப்போது ஆரம்பித்திருக்கிற அப்பியாசத்தை விடாதிருப்பீரானால் உமது வீடே ஏழை வீடாகும். நீர் ஏழை வீட்டைத் தேடிப்போகும் சங்கடம் உமக்கிராது என்றார்.

---

**"ஒரு தேசம்"** உன்னத ஸ்திதியிலிருக்கிற தென்பதற்கு அத்தேச புத்திரிகளின் நிலைமைதான் அத்தாக்ஷி. தன் மனைவியின் குணகுணங்களுக்கு ஒத்ததாகவே ஒருவன் அநுபவிக்கும் இன்பமும் துன்பமும் அவனுக்குப் பொருந்தியிருக்கும். பெண்களின் மேன்மையே நமது விருத்திக்குச் சாதனம்.

---

**"தலைமையான பாவங்கள் ஏழு."** அதில் உண்ட வீட்டுக்கே ரண்டகம் பண்ணுவது. 2-வது ஊராருடைமைக்குப் பேயாய்ப்பறப்பது. 3-வது நன்றி செய்தவர்களைச் சத்துராதியாக்கிக்கொள்வது 4-வது வாயிலொன்று வயிற்றிலொன்று வைத்துப்பேசுவது 5-வது நல்லவனைப்போல் அடுத்துக் கெடுப்பது. 6-வது பிழைப்பு கொடுத்தவனுக்கே படுகுழி வெட்டுகிறது 7-வது நல்லவர்கள் மீதெல்லாம் பொய்க்கதை கட்டிப்பேசுவது.

---

**"பரலோக மட்டும் அபயமிடுகிற"** தலைமையான புண்ணியங்கள் ஏழு. அதில் முதலாவது உத்தமர் சிநேகம் வைத்தல் 2-வது தெய்வசரித்திர பஜனை செய்தல் 3-வது பலபேரறியாதபடி இரகசியமாய் பிச்சையிடுதல் 4-வது பணத்துக்குப் பூசை பண்ணாதிருத்தல் 5-வது ஒரே மனைவி ஒரே புருஷனோடு வாழ்தல் 6-வது கடன் கொடுத்தவர்களுக்கு சரணத்தோடு திரும்பக் கொடுத்துவருதல் 7-வது உழைத்தவர்கள் கூலியைஉண்மையாகத் தந்துவிடுதல்.

---

**எந்தெந்த நேரத்திற்கு** எதை விடக்கூடாது? வெயிற்காலத்தில் செருப்பையும், குளிர் காலத்திலே போர்வையும்பத்தினியையும் தூரவிடக்கூடாது. இதன் பிரயோஜனம் அந்தந்த நேரத்திலேதான் தெரியும்.

---

**ஏழையைப்பிடித்து** எப்போதும் இலவசமாய் வேலை வாங்கிக்கொள்ளும் மகாராஜனுடைய சிநேகத்தை எப்படி வெட்டிக்கொள்ளலாம்? உன்னை தொந்தரை கொடுக்கிற மகாராஜனிடம் ஒரு நாளைக்கு ஒரு நூறு ரூபா கடன் கேட்டுவிடு. அப்பால் அவன் உன்னை என் கூப்பிடுகிறான்? பேசாமல் தனக்குத்தானே அடங்கிக் கொள்வான். இதுதான் யுக்தி.

எப்போதுமே துட்டுக்குத்தொந்தரை கொடுக்கிற ஒருவனை எப்படிக் கழித்துக்கொள்ளலாம்? ஒரு நாளைக்கு அந்த தொந்தரைக்காரனுக்கு இரண்டொரு ரூபா கடன் கொடுத்துவிடு. அப்பால் என் அவன் உன் வீட்டுவழி நோக்குவான்? உன்னைக்கண்டாலும் பதுங்குவான். அவன் சள்ளை அதோடு ஒழிந்தது.

# பார்லிமெண்டு ஸ்தாபனம்.

**பார்லிமெண்டென்றால்** என்ன? அது எப்படி உண்டாயிற்று? அதனுடைய காரியங்கள் யாவை? அதனால் ஜனங்களுக்கு என்ன உபயோகம்? இந்தப்பிரசினைகள் நம் நாட்டு ஜனங்களுக்கு நிரம்பவும் பிரயோஜனகரமானது. பார்லிமெண்டு சபையானது பிரபுக்களாலும் ஜனங்களாலும் உண்டானது. அச்சபையின் ஆரம்பம் **குடியரசுக்கு** மூலம். அச்சபையானது **ஜான்** என்ற ஒரு ஆங்கிலேயராஜன், கொடுங்கோல் புரிந்து வருங்காலத்தில் 1213-ம் வருஷத்தில் ஜனங்கள் அரசனுக்கு விரோதமாய்க் கிளம்பி ஒருசிறு சபையாகக்கூட்டி அவருடைய சுவாதந்தர்யங்களுக்கு **எல்லைகள்** நியமித்தார்கள். இதிலிருந்துதான் பார்லிமெண்டு துவக்கமாயிற்று. அக்கால்முதல், சபையில் இரண்டு பிரிவுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு பிரிவு பிரபுக்களால் உண்டானது. இதற்கு லார்ட் **சபை** என்று பெயர். மற்றொரு பிரிவு ஜனப்பிரதிநிதிகளால் நியமிக்கப்பட்டது. இதைக் **காமன்ஸ் சபை** என்று சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட சபையில் பிரபுக்கள் கூட்டத்தைப்பற்றி சிறிது யோசிப்போம். இவர்களில் சாதாரணமாய்வித்தியாசங்கள் உண்டாகா. ஏனெனில் இதிலுள்ளவர் சாகிறவரைக்கும் யோக்கியராயிருந்தால் மெம்பராயிருக்கலாம். அவர்களுக்குப்பின் அவர்கள் பிள்ளைகள் யோக்கியதை யுடையவரானால் மெம்பர்களாவார்கள். அரசர் சிலரை, விசேஷயோக்கியதைப்பற்றி அவர்களுக்கு பிரபுப்பட்டம் அளித்து, இச்சபைக்கு மெம்பர்களாக ஆக்கலாம். ஆதலால் இச்சபையில் விசேஷ மாறுபாடுகள் உண்டாகக்காரணம் இல்லை. ஜனசபை அப்படி அல்ல. ஏனெனில் ஒரு சமயத்தில் நியமிக்கப்பட்டவர்கள் மறுபடியும் நியமிக்கப்படுவார்களென்பது நிச்சயமில்லை. ஆகையால் ஒரு கூட்டத்திற்கும் மற்றொரு கூட்டத்திற்கும் விசேஷ வித்தியாசங்கள் இருக்கும். இப்பார்லிமெண்டில் இஜ்ஜனசபையே விசேஷ சக்தியையுடையது. ஏனெனில் பிரபுக்களின் அபிப்பிராயம் சிலவேளைகளில் ஜனசபைக்கு விரோதமாயிருக்கும். அப்போது அவர்கள் அரசரை தங்கள் அபிப்பிராயப்படி ஒரு காரியத்தை செய்யச்சொல்ல முடியாது. ஆனால் அரசரும் பிரபுக்களோடு கலந்தால், பிரபுக்களின் வேண்டுகோளின்மேல் ஜனசபையைக்கலைத்துவிட்டு மற்றொரு சபை கூட உத்திரவு செய்யலாம். இவ்வளவுதான் செய்யலாமே யொழிய மற்றொரு ஜனசபை கூடினபோது அச்சபையும் முந்திய சபையின் அபிப்பிராயமே கொண்டால் பிரபுக்கள் என்ன செய்யலாம்? அரசனுடன் சொல்லி சபையைக்கலைத்து மறு சபையைக் கூட்டலாம். ஆனால் அச்சபையும் முன் அபிப்பிராயமே கொண்டதாகில் பிரபுக்கள் வழிகொடுக்கவேண்டியதுதான். அரசனும் அவர்கள் இஷ்டப்படியே நடக்கவேண்டும். ஆனால் புதிய சபை பிரபுக்

களிஷ்டப்படியானால், பிரபுக்கள் ஜெயித்தார்கள். ஆகையால் அரசனும், பிரபுக்களாலும், ஜனங்களாலும் உண்டான பார்லிமெண்டு சபையும் எப்படிப் புணைந்திருக்கின்றன பாருங்கள். இராஜ்ஜிய காரியங்களில் எதையாவது ஒன்றை நடத்தவேண்டுமாகில், அவ்விஷயத்தை அரசனாலும் பார்லிமெண்டாலும் உண்டான தராசில் நிறுத்திப் பிறகுதான், அவ்விஷயத்தை சட்டமாக்கலாம். இதனால் பார்லிமெண்டானது ஜனங்களுக்காக ஏற்பட்டதென்றும், பார்லிமெண்ட் ஸ்தாபனத்தினால் அரசரின் ஸ்வதந்திரங்களுக்கு ஒரு எல்லை அமைக்கப்பட்டபோதிலும், அரசரின் கீர்த்தி பார்லிமெண்டினால் பதின்மடங்கு சோபிக்கின்றனவென்றும் அறிகிறோம். பார்லிமெண்டுள்ள ஜப்பானுக்கும், பார்லிமெண்டில்லாத ருஷியாவுக்கும் எவ்வளவு பேதமிருக்கின்றது?

---

# இங்கிலாந்தில் இந்தியன் கக்ஷியார்.

---

இங்கிலாந்து தேசமானது நமது நாட்டை யாளும் ஆங்கிலேயர்களினிருப்பிடம். அத்தேசத்து ஜனங்களுடைய பிரதிநிதிகளின் சங்கத்துக்குப் பார்லிமெண்டென்று பெயர். இந்தப் பார்லிமெண்டில் இரண்டு வகையுண்டென்று முன்னரே கூறியிருக்கிறோம். அவையாவன: காமன்ஸ் சபை, லார்ட்ஸ் சபை ஆகிய இரண்டுமாம். இவ்விரண்டு சபையோர்களும் மகாசக்ரவர்த்தியும் நமது தேசத்தை யாளுகின்றனர். மகா சக்ரவர்த்தியாருக்குத் தற்காலமிருக்கும் பிரதான மந்திரி மிஸ்டர் ஆஸ்க்வித் என்பவர். இவர் லிபரல் கக்ஷியைச்சார்ந்தவர். இதற்கு எதிர்க்கக்ஷி கன்ஸர்வேடிவ் கக்ஷியெனப்படும். இந்த இரண்டு கக்ஷிகள் இங்கிலாந்தில் வெகுகாலமாக இருக்கின்றன. கன்ஸர்வேடிவ் கக்ஷியாரென்றால், புராதன சம்பிரதாயங்களை யனுசரிப்பவரென்றும் இனிபுதிதாய் ஏற்பாடுகள் செய்யவேண்டாமென்றும் அபிப்பிராயப்படுகிறவர்கள். இவர்கள் இத்தனை காலமாக நடந்துவரும் ஏற்பாடுகளால் நன்மையுண்டாயிருக்கிறதென்று தெரிய வருவதால் இனி நவீன ஏற்பாடுகள் வேண்டாமென்று கூறுகின்றனர். அநேகமாய் இந்த கக்ஷியார் இராஜாங்கத்தாரைச் சார்ந்தவர்கள். மற்றொரு கக்ஷியான லிபரல் வகுப்பினர், புதிய சீர்திருத்தங்களை யுண்டாக்க வேண்டுமென்றும், முன் ஏற்பட்ட சட்டங்களால் நன்மை யுண்டாயிற்றென்பது உண்மையானாலும், இன்னும் அதிகமான நன்மைகளையடையவேண்டி நூதனமான ஏற்பாடுகளைச் செய்யவேண்டு மென்றும் கோருகிறவர்கள். இக்கக்ஷியார் அநேகமாய்ச் சனங்களைச் சார்ந்தவர்கள். ஆகவே இராஜாங்கத்தாரும் பிரஜைகளும் சேர்ந்தே பிரிட்டிஷ்ராஜ்யங்களையாளுகின்றனரென்பது ஸ்பஷ்டம். ஒவ்



வொரு காலத்தில் ஒவ்வொரு கக்ஷி பலப்படும். முன் மிஸ்டர் கிளாட்ஸ்டன் பிரதான மந்திரியாயிருந்தபோது லிபரல் கக்ஷியார் பலமுற்றிருந்தனர். இராஜாங்க உத்தியோகங்களில் லிபரல் கக்ஷியாரே அமர்ந்திருந்தார்கள். பிறகு லார்ட்ஸாலிஸ்பரி பிரபு பிரதான மந்திரியான காலத்தில் கன்ஸர்வேடிவ் கக்ஷியாரே பிரபல முற்றனர். இப்போது மிஸ்டர்ஆஸ்க்வித் பிரபு பிரதான மந்திரியாயிருப்பதில் லிபரல் கக்ஷிக்கே விசேஷித்த செல்வாக்கு ஏற்பட்டுள்ளது.

இது நிற்க, பிரிட்டிஷ்காரர்களுக்கு இப்பூமண்டலத்தில் ஏராளமான ராஜ்யங்களிருக்கின்றன. அவைகளெல்லாவற்றிலும் நாம் வசிக்கும் இவ்விந்தியாவே மிகப்பெரிதும் பணவரும்படி அதிகமுள்ளதுமான முக்கிய ராஜ்யம். இந்தியாவை பிடித்துக்கொண்டது முதல், ஆங்கிலேயர்களுக்கு அதிகமான செல்வாக்கும் பெருமையும் உண்டாயிற்று. மற்ற அரசர்களுக்கு பிரிட்டிஷ்காரர்களிடம் அதிக மதிப்புண்டு. நமது துரைத்தனத்தாருக்கு ஆபிரிக்கா, அமெரிக்கா, ஆசியா, ஆஸ்திரேலியா முதலிய எல்லாக்கண்டங்களிலும் ராஜ்யங்களிருப்பதால் எந்த இடத்தில் சண்டை நேர்ந்தாலும் இவர்கள் தலையிட்டுக் கொள்ளாதிருக்க முடியாது. இவ்வாறு பற்பல ராஜ்யங்களிருப்பதால் அவைகளை யாள்வதற்காக மகா சக்கரவர்த்தியார் தேசாதிபதிகளை நேமித்திருக்கின்றனர். இந்த கவர்னர்களெல்லாம் மகா சக்கரவர்த்தியின் மந்திரிகளுக்கு அடங்கினவர்களே. இந்தியாவை ஆண்டுவரும் கவர்னர் ஜெனரலான இராஜப்பிரதிநிதியார் இந்தியா செக்ரடரியின் அதாவது இந்தியா மந்திரியின் சொற்படி நடக்கவேண்டியவராவர். ஆகிலும்சிலகாரியங்களில் மட்டும் சுயாதீனமாக விருக்கலாம். மேலே கூறிய இந்திய செக்ரடேரியானவர் மகாராஜாவின் மந்திரிகளுள் ஒருவர். இந்தியாவைப்பற்றிய ஸகல விஷயங்களுக்கும் இவரே ஜவாபுதாரி. பார்லிமெண்டு மெம்பர்கள் இந்தியாவைப்பற்றி ஏதேனும் கேள்வி கேட்டால் இந்திய செக்ரடரி தான் விடைகொடுக்கப்பாத்தியப்பட்டவர். இந்த செக்ரடரி இங்கிலாந்திலிருக்கிறார். இவருக்கு ஓர் ஆலோசனை சபையுண்டு. நிற்க, இந்தியர்களாகிய நமக்கு ஏதேனும் ஓர் நன்மை கிடைக்கவேண்டுமானால் இந்திய செக்ரடரியின் தயவு அவசியம். இவர் நமது குறைகளைக் கவனிக்காத பக்ஷத்தில் பார்லிமெண்டாரிடம் முறையிட்டுக்கொள்ளலாம். அதாவது, இங்கிலாந்திலுள்ள ஜனங்களிடம் முறையிட வேண்டுமென்பது கருத்து. தற்காலம் ஆங்கிலேயர்களிற் பெரும்பாலோர் இந்தியாவுக்கு வந்தது மில்லை. இத்தேசத்தாருடன் பேசினது மில்லை. பழகினது மில்லை. இவர்கள் பத்திரிகை, புஸ்தகம், * ஆங்கிலோ இந்தியர் ஆகிய இவர்கள் மூலமாய் இந்தியர்களின் குணாகுணங்களை யொருவாறு அறிந்துகொண்டிருக்கின்றனர். இதன்றி பலர் இந்தியாவைப் பற்றி விசாரிக்கிறதேயில்லை. தத்தம் ஊர்க்காரியத்தை மட்டும் கவனிக்கி

* 'ஆங்கிலோ இந்தியர்' என்றால், இந்தியாவில் இருக்கும் ஆங்கிலேயர் என்ப.

ன்றனர். நமது தேசத்தில் மதாபிமானம் எப்படியோ அப்படியே இங்கிலாந்தில் தேசாபிமானம் சிறந்திருக்கிறது. இராஜ்ய தந்திர விஷயங்களைப் பற்றி அங்குள்ள ஜட்கா வண்டிக்காரன் முதல் பெரியஜமீன்தார்கள் வரையில் பிரதிதினமும் அறிந்துகொள்வார்கள். அத்தேசத்தில் ஆயிரக்கணக்கான பத்திரிகைகளுண்டு. ஒவ்வொரு பத்திரிகையும் இராஜாங்க சமாசாரங்களையடக்கி யுலாவும். எத்தனை ஏழையாயினும் பத்திரிகைகளை வாங்கிப்படிக்காமலிரார். இவ்வளவு தேசாபிமானம் படிந்துள்ள ஆங்கியலயர்களுக்கு நமது இந்தியாவைப்பற்றிய காரியங்களைத் தெரிவிக்கவேண்டும். இதற்காகத்தான் இந்தியன் நாஷனல். காங்கிரஸும், அதன் சார்பாக "இந்தியா" என்ற இங்கிலீஷ் பத்திரிகையும் தோன்றி வேலைசெய்து வருகின்றன.

இந்தியாவுக்குப் பார்லிமெண்டில் பிரதிநிதிகள் இல்லையாதலின், பார்லிமெண்டில் மெம்பர்களாயுள்ள ஆங்கிலேய பிரமுகர்களைக் கொண்டு இந்தியரின் குறைகளைப்பற்றிப் பார்லிமெண்டில் அவர்கள் மூலமாகப் பிரஸ்தாபிக்க வேண்டியதாய் இருக்கின்றது. இப்படியாக இந்தியாவினிடத்து அன்பு வைத்து இந்தியர்களின் கக்ஷியாகப்பேசும் பார்லிமெண்டு மெம்பர்களான ஆங்கிலேய கனவான்கள் பலர் இங்கிலாந்தில் இருக்கிறார்கள். இவர்கள் இந்திய விஷயங்களைப்பற்றி பார்லிமெண்டில் அடிக்கடி கேள்வி கேட்பதால் அநேக ஸாதகங்கள் உண்டாயிருக்கின்றன. தற்காலம் அதிக நன்மை கிடைக்காவிட்டாலும் சில காலம் சென்ற பிறகாவது கிடைக்குமென்ற நம்பிக்கையுண்டு. இதற்காக நாம் செய்யவேண்டிய கடமையாதெனில், இத்தேசத்துக்கு வரும் ஆங்கிலேயர்களை சிநேகம் செய்து கொண்டு, அவர்களுக்கு நமது நிலைமையைப்பற்றி நன்றாகப் போதிக்க வேண்டியதே. முன் மிஸ்டர் கெயின் என்ற பார்லிமெண்டு மெம்பர் பம்பாய்க்கு வந்தபோது, மிஸ்டர் வாச்சா, டயாப்ஜி என்ற இரண்டு கனவான்கள் அவரிடம் சென்று வார்த்தையாடி அவருக்கு நம்மவர்களின் நிலைமையையும் குணகுணங்களையும் பற்றி நன்றாகப் போதித்தார்கள். அதுமுதல் மிஸ்டர் கெயின் துரைக்கு நம்மவர்கள் மீது மிகுந்த அபிமானமுண்டாகத் தலைப்பட்டது. பிறகு காங்கிரஸ் மகாசபைக்கும் அவர் உற்ற நண்பரானார். இம்மாதிரியே முன்னர் சீமைக்குச் சென்றிருந்த மிஸ்டர் வொமெஸ்சந்தர்பானர்ஜியவர்கள் காலஞ்சென்ற பிராட்லா துரையைக்கண்டு வார்த்தையாடி அவருடைய நட்பை யடைந்து அவரை இந்தியாவுக்கு உழைக்கும்படி செய்துவிட்டார். இவ்விதமாக, நமது ஜனத்தலைவர்கள் நட்புபாராட்டி, நமது தேசத்தாரின் க்ஷேமத்தைக்கருதக்கூடிய பல ஆங்கில நண்பர்களைப் பெற்று வருகின்றனர். இந்த ஆங்கில நண்பர்களைப்பற்றித்தான் "இங்கிலாந்தில் இந்தியன் கக்ஷியார்" என்று மேலே குறிப்பிடலானோம்.

# அந்தமான் தீவினரைப்பற்றிச் சில ரஸமான விஷயங்கள்.

அந்தமான் தீவினர் நாளுக்குநாள் தங்கள் தொகையில் குறைந்து வருகிறார்கள். ஒருவேளை இன்னும் கொஞ்ச வருஷகாலங்களுக்குள்ளே அவர்கள் குலம் முழுதும் அழிந்து போய் விடும் போலத் தோன்றுகிறது. ஆதலால் அவர்களைப்பற்றிய விசேஷங்களை நாம் அறிந்து கொள்வது மிகவும் உபயோகமாயிருக்கும்.

அந்தமான் தீவுகளானது நாளுக்கு நாள் சமுத்திரத்தில் ஆழ்ந்துபோய்க்கொண்டே வருகிறதென்று தெரிய வருகிறது. அவர்களுக்குள்ளேயும் முன்னொரு காலத்தில் ஓர் புராணக் கோட்பாட்டின்படி தங்கள் தீவுகளின் ஒரு பெரும்பகுதி சமுத்திரத்தில் அழுந்திப்போய்விட்டதென்றும் சொல்லப்படுகிறது.

அந்தமான் தீவுகளின்காலநிலையானது மிகவும் சூடாயில்லாமலும் குளிர்ச்சியாயில்லாமலும் நடுத்தரமாய் இருக்கின்றது. வருஷத்தில் 6மாதம் மழைபெய்துக் கொண்டிருக்கும். இதனால் அத்தீவுகளில் மலை ஜ்வரம் முதலிய கொடூரவியாதிகள் அதிகமாயிருக்கின்றன. தீவுகள் முழுதும் காடுகள் அடர்ந்திருக்கின்றன.

சிற்சில விடங்களில் அந்தமானியரும் போகமுடியாமல் காடுகள் அடர்த்தியா யிருக்கின்றன. அநேக விடங்களில் காடுகளைப் பார்ப்பதற்கு மிகவும் அழகாயிருக்கும். ஆனால் அத்தீவினர்களுக்கு அதைப் பார்த்து ஆநந்திக்க சக்தியில்லை. அக்காடுகளில் பெரிய காட்டு மிருகங்கள் ஒன்றும் காணப்படுவதில்லை. அங்கே ஜனங்கள் காய் கிழங்குகளையும் மீன் முதலியவற்றையும் புசிக்கின்றார்கள்.

இவர்கள் இனத்தைச் சேர்ந்த மனிதர் இந்தியாவில் சிலர் மலைப்பிரதேசங்களில் இன்னும் வசித்து வருகின்றார்கள். 1856-ம் வருஷத்தில் பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் அந்தமானைக்கைப்பற்றியபோது 8000 அந்தமானியர் இருந்தார்களாம். ஆனால் இப்பொழுது 1901-ம் வருஷத்திய பிரஜைக்கணக்கின்படி உயிரோடிருக்கும் அந்தமானியரின்மொத்தத்தொகை 1882. இதில் 1036 புருஷர்களும் 846பெண்களும் இருக்கின்றார்களாம்.

இத்தீவுகளுக்கு ஏன் அந்தமான் என்ற பெயர் வந்ததென்பதற்கு மிஸ்டர் போர்ட்மென் என்பவர் சொல்லுகிறார். "முன்காலத்தில் மலேயநாட்டு ஜனங்கள் கப்பலில் வந்து இவர்களைப் பிடித்துக்கொண்டுபோய் அடிமைகளாக விற்றுவிடுவது வழக்கம். அப்பொழுது அவர்கள் இவர்களை ராமாயணத்தில் வரும் அனுமான் வம்சத்தவரென்று, அனுமான் என்றும் அண்டமான் என்றும் கூப்பிட்டு வந்தார்

கள். அண்டமோன் என்பது நாளடைவில் மருவி அந்தமன் என்று வழங்கி வருகின்றது.'' அவர்களுக்கு குளிர் ஓர் பெருந்தொந்தரை. ஆனால் அவர்களை இந்தியாவில் குளிர்ந்த பிரதேசத்திற்குக் கொண்டுவந்தால் அவர்கள் வருந்துவதில்லை. மேலும் அவர்கள் இங்கே வந்தபிறகு மிகவும் திடகாத்திரர்களாக மாறியிருக்கின்றனர். அவர்கள் வெய்யிலில் வெகுநேரம் நின்று உஷ்ணம் தாங்குவார்கள். சில சமயங்களில் அவர்கள் இப்படி சூரிய வெப்பத்தில் நின்றுகொண்டிருப்பதால் ஜுரமும் தலைவலி முதலிய வியாதிகளும் வந்து விடுகின்றன. வேனிற் காலத்திலும் அவர்கள் உடலில் ஒன்றும் தரிக்காமல் தரையிலும் கடலிலும் போவார்கள். சமுத்திரத்தில் போகும்போது சில சமயங்களில் அவர்கள் ஓலைக்குடை பிடித்துக்கொள்ளுகின்றார்கள். அவர்களுக்கு பட்டினியாவது தாகமாவது பொறுக்காது. ஆகையினால் ஒருநாளும் அனாவசியமாக பட்டினியிருக்க மாட்டார்கள். அவர்கள் சாதாரணமாய் 24 மணி நேரத்திற்குமேல் கண்விழிக்க மாட்டார்கள். ஆனால் விசேஷ காலங்களிலும் உத்ஸவங்களிலும், ஒரே முறையாய் நான்கு நாட்களுக்கு தூங்காமலும் சிலர் இருக்கின்றார்கள். ஆனால், அதற்குப்பிறகு அவர்கள் மிகவும் அலுத்துப்போய் விடுகிறார்கள்.

அவர்களில் சிலருக்கு குரல் கனமாயிருக்கும். ஆனால்பெரும் பகுதியார் குரல் மிகவும் இனிமையாயும் அழகாயுமிருக்கும். அவர்கள் அடிக்கடி தங்கள் தேகங்களை சாயமடித்துக்கொள்ளுகிறார்கள். இப்படிச் செய்வதனால் அவர்கள் மிகவும் விகாரமாய்க் காணப்படுகிறார்கள். அவர்களில் சிறுவர் அவ்வளவுக்கு விகாரமாயில்லாமல் நிதானமாயிருக்கிறார்கள் அவர்களின் நிறம் மிகவும் கருப்பு. சிலர் சிறிது மாநிறமாயிருப்பார்கள். அவர்கள் தலைமயிர் மிகவும் கருப்பா யிருக்கும். ஒவ்வொரு வகுப்பினரும் ஒவ்வொரு மாதிரி தங்கள் மயிரை எடுத்துக் கட்டிக்கொள்ளுகிறார்கள். அவர்களுக்கு தாடி மீசை முதலியவை அதிகமாய் வளருவதில்லை. இப்படி ஓரிரண்டு பேருக்கு கொஞ்சமிருந்தால் அவர்கள் அதைப்பற்றி மிகவும் இறுமாப்படைந்து விடுகிறார்கள்.

அவர்களுள் குருடன் நொண்டி செவிடன் முதலியோர் அரிது. அவர்கள் 60 வயது, 65 வயது வரையிலும் உயிரோடிருக்கிறார்கள். அவர்களுக்குள் பரம்பரையாக பைத்தியம்பிடித்தவர்களும் இடையாது. ஒவ்வொருவனுக்கு பைத்தியம் பிடித்து அவன் மாமிசத்தை பச்சையாய் புசிக்கவாரம்பித்து விடுவான். மனிதனைக்கொன்றால் அவன் ரத்தத்தையுங் குடித்து மாமிசத்தையும் தின்று விடுவான். ஆனால் சீக்கிரம் எவனாவது ஒருவன் தன் பந்துவைக் கொன்றதற்காக அவனைக்கொன்று விடுவான்.

அந்தமானியச் சிறுவர்கள் மிகவும் புத்திசாலிகளாயும் சுருசுருப்புள்ளவர்களாயுமிருக்கின்றார்கள். அவர்களுள் பெயரிடுதல் பின் வருமாறு:



(1) குழந்தை தாய் வயிற்றில் இருக்கும்போது அதற்கிடும் பெயர்தான் குழந்தையின் பெயர். ஒவ்வொரு குடும்பத்தில் 20 பெயர்கள் யிருப்பர். இரட்டைக் குழந்தைகள் பிறந்தால் அவைகளுக்குப்பெயர் பிறந்த பிறகு இடுவார்கள். முதற் குழந்தை யிறந்து விட்டால் அதே பெயரை இரண்டாவது குழந்தைக்கிடுவார்கள். அப்பெயருடன் ஈல் என்று இரண்டு எழுத்துக்களும் சேர்ப்பார்கள். "ஈல்'' என்றால் "மறுபடியும் பிறந்தது'' என்றர்த்தம். அதாவது முதற்பிறந்த குழந்தையே மறுபடியும் பிறந்திருப்பதாக அவர்களுக்குள் கோட்பாடு. இதற்காக ஒருவருக்கு அடிக்கடி வரிசையாய் குழந்தைகள் இறந்து வந்தால் அக்குழந்தையின் அங்கம் ஒன்றை (முக்கியமாய்க் காதை) பங்கப்படுத்தி விடுவார்கள். அதனால் அந்தக்குழந்தை திரும்பிப் பிறந்தால் அங்கபங்கத்தினின்றும் தெரிந்து கொள்ளலாமென்றுதான்:-

(2) பரிகாசப்பெயர். அதாவது குழந்தைக்கு ஏதாவது பிறவிக் குறையிருந்தால் அதைப்பற்றி பரிகாசப் பெயர் வைத்து கூப்பிடுவதுண்டு.

(3) பெண்கள் ருதுவானால் அக்காலத்தில் புஷ்பித்திருக்கும் புஷ்பத்தின் பெயரை அப்பெண்களுக்குக் கொடுப்பார்கள்.

அவர்களில் பெரியவர்களை மிகவும் மரியாதையாய் "மியா'' என்றும் "மாம்'' என்றும் அழைப்பார்கள். பிள்ளைகள் தகப்பனை பெயர் சொல்லி யழைப்பதில்லை. பரிகாசப்பெயரையும் சொல்லி யழைப்பதில்லை.

அந்தமானியர் ஒரே கலியாணம் தான் செய்துகொள்வார்கள். அவர்களுக்கு ஜுரம் தலைவலி வந்தால் "ரெட் ஆகர்'' என்னுமோர் மருந்தை உபயோகிக்கின்றார்கள். தேகத்தின் மீது கட்டிகள் புறப்பட்டால் அவற்றைக்குத்தி இரத்தத்தை யெடுத்து ஆற்றி விடுகிறார்கள். அவர்களுக்கு தேகத்தில் எங்கேயாவது வீக்கம் கண்டாலாவது சுளுக்கிக்கொண்டாலாவது எலும்புகளை மாலையாகக் கட்டிப் போட்டுக்கொள்ளுகிறார்கள்.

அவர்கள் மிகவும் விரைவாய் நடக்கவும் ஓடவும் மரங்கள் ஏறவும் பழகி யிருக்கிறார்கள். அவர்களுக்கு இரண்டு வரையும்தான் சரியாய் எண்ணத்தெரியும்! சிலர் ஐந்துவரையும் தப்பித்தவறி எண்ணுவார்கள். அவர்கள் அங்குமிங்கும் திரிந்து காலத்தைத் தள்ளுகின்றார்கள். ஓரிரண்டு இடங்களில் தவிர மற்றெவ்விடத்திலும் வீடுகள் கட்டுவதுகூடக்கிடையாது.

கிராமத்திலும் 10-14 வீடுகள் தான் உண்டு. அவைகள் குடிசைகள் வண்ணமாயிருக்கும். ஒவ்வொரு கிராமத்திலும் உற்சவங்களுக்காக வேண்டி ஓர் தனிவெளியுண்டு. குடிசைகளுக்கு ஓலையால் கூறை போடப்பட்டிருக்கின்றது.

அவர்களில் எழுதிய பாஷையொன்றும் கிடையாது. ஆனால் பேசும்பொழுது குறிகளும் சைகைகளும் காட்டுவதும் கிடையாது. ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனி பாஷையுண்டு. ஆகையினால் ஒரு பிரி

வைச்சேர்ந்தவர் மற்றொருவர் பாஷையைத் தெரிவது சிறிது கஷ்டம்.

அவர்களின் கலியாணம் மிகவும் வேடிக்கையாயிருக்கின்றது. ஒருவன் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று இஷ்டமிருந்தால், அவன் காட்டுக்குள் ஓடிப்போய்விடுவது வழக்கம். பெண் வீட்டுக்காரர் பெண்ணை ஓர் புதிய வீட்டில் உட்காரவைத்துவிட்டு மாப்பிள்ளையை அழைத்துவரப் போவார்கள். மாப்பிள்ளை சிறிது இஷ்டமில்லாதவன் போல நடித்துப்பிறகு நிர்ப்பந்தத்தினால் திரும்பிவந்து பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கொள்வான். பிறகு புருஷனும் பெண்ணும் ஓரே வீட்டில் வசிப்பார்கள்.

குழந்தைகள் இறந்தால், அவர்களை வீட்டிலேயே தரையில் புதைத்து விடுவார்கள். பெரியவர்கள் சிறிய குழிகளில் புதைக்கப்படுகிறார்கள். அல்லது மிகவும் மரியாதையுள்ளவர்களாயிருப்பவர்களானால் அவர்களை ஓர் மூட்டையாய்க் கட்டி கிராமத்தின் ஓர் ஓரத்தில் மரத்தின்மேல் வைத்துவிட்டு மூன்று மாதத்திற்குப் பிறகு அதைக்கீழே எடுத்து எலும்புகளைக் கழுவி மாலையாக்கித் தரித்துக்கொள்ளுவார்கள். இந்த மூன்றுமாத காலமும் பிணத்தை வைத்திருக்கும் மரத்தின் வழியே ஒருவரும் போவது கிடையாது. மூன்று மாதமும் கழிந்த பிறகுதான் அவர்களுக்கு சுத்தி வருவதாக ஏற்பாடு. சிநேகிதர்களை வெகு நாட்களுக்குப்பிறகு கண்டால் அவர்களைக்கட்டிக்கொண்டு அழுவது இவர்களின் வழக்கம். மற்றொரு குடும்பத்தார் சிநேகிதரை வெகு நாட்களுக்குப் பிறகு சந்தித்தால், ஒருவர் மற்றவர் மடியில் உட்கார்ந்துகொண்டு ஒருவரையொருவர் தேற்றிக்கொள்வது வழக்கம். சிநேகிதர் ஒருவரையொருவர் விட்டுப்பிரியும் பொழுது ஒருவர் மற்றவர் கையில் ஊதிக்கொள்வது வழக்கம். அந்த சமயத்தில் ஒருவரும் அழக்கூடாது. அவர்களுடைய முக்கிய வேடிக்கைகள் கூத்தும் டமாரமுந்தான். அந்தமானியர், கடவுள் என்னும் ஒருவர் ஆகாயத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கிறாரென்றும் அவர் தன்னிஷ்டம்போல் மழையைப் பெய்யவும் இடி யிடிக்கவும் புசலடிக்கவும் செய்கிறாரென்றும் நினைக்கிறார்கள். அவரைத் திருப்தி செய்வது முடியாத காரியமெனஎண்ணுவர். அதனால் அவருக்குகோபமுண்டாக ஒன்றும் அவர்கள் செய்வதில்லை. இக்கடவுளைத்தவிர பிசாசுகளும் அநேகம் அவர்களுக்குண்டு. அவர்கள் நரகமாவது ஸ்வர்க்கமாவது இருப்பதாக நினைப்பதில்லை.

அவர்கள் துணிகளொன்றும் தரிப்பது கிடையாது. பெண்கள் இடுப்பில் சில செடிகளையும் இலைகளையும் கட்டிக் கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு வியவசாயம் என்பதே தெரியாது. அவர்கள் பட்டைகள் மரத்தினின்றும் செதுக்கி யெடுப்பார்கள். சட்டிபானைகளும் செய்துகொள்வார்கள். கூடைகள் முதலிய மூங்கில் பாண்டங்கள் அவர்களுக்கு நன்றாய் செய்யத்தெரியும். அவர்கள் மரப்பட்டைகளினின்றும் கயிறு முடைவார்கள். பிரப்பம் பாய்களும் அவர்களுக்கு முடையத்தெரியும்.

---

☞ பிரஜாநுகூலனின் 9-வது வால்யம் ஜூலை மாதத்தில் ஆரம்பமாகின்றது. புது வருஷ சந்தாவுக்காக எல்லோருக்கும் வி. பி. ஜூலை மாதத்தில் அனுப்பப்படுமாதலின் அடுத்த வருஷத்திற்கு சந்தாதாரர்களாக இருக்கப் பிரியமில்லாதவர்கள் உடனே தெரிவித்துவிடவேண்டுகிறோம்.

# பிரஜாநுகூலன்.

திரிச்சிராப்பள்ளி.
புத்தகம் 8. } 1914-ம் வருஷம் ஜூன் மீ } சஞ்சிகை 12.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
JUN 1914
MADRAS.

## மனோகரமான குறிப்புகள்.

“சுக துக்கங்களுக்குக் காரணம் அபிமானம்.” ஒருவனுடைய தந்தை இருமல் வியாதியால் பீடிக்கப்படுகிறான். உடனே வீட்டுக்காரனாகிய புத்திரன் “அப்பா” உனக்குப் பசும்பால் கொண்டு வந்திருக்கிறேன், இதோ உட்கொள்ளு” என்று பிரார்த்திக்கிறான். மறுநாள் அடுத்த வீட்டுக் கிழவன் லொக்குலொக்கென்று இருமுவதைக்கேட்டு “கிழட்டுப் பிணம் இருமுகிறது, நித்திரை வரவில்லை, இந்தப் பிணம் எப்போது சாகும்” என்று திட்டுகிறான். இருமலால் அவஸ்தைப்படும் இரண்டு கிழவர்களில் ஒரு கிழவனுக்குமட்டும் பால் கொடுப்பானேன்? மற்றொரு கிழவனைத் திட்டுவானேன்? தன் தந்தை என்ற அபிமானமல்லவா? நேற்று வாங்கிய காளைமாட்டை ஒருவன் அடித்தால் அவனை அடிப்பதற்கு உலக்கையையெடுத்துக் கொண்டோடுகிறோம். இன்று விற்ற நமது மாடு நம்முடைய புல்லைத்தின்றால் தடியாலடித்து விரட்டி “ஓய், கிர்ஷ்ணையரே, மாட்டை விலைக்கு வாங்கியும், புல் போடவேணுமென்ற ஸ்மரணையில்லையோ? என் வீட்டுப் புல்லைத்தின்னுகிறது” என்கிறோம். இப்படி ஒவ்வொரு ஸமயத்தில் சுகமாயும் துக்கமாயும் தோன்றுவதற்கு அபிமானமே காரணமாதலின் அவ்வபிமானத்தை விட்டொழிக்கும்படி பெரியோர் கூறுகின்றனர். அவிவேகிகளிடம் வைக்கும் அபிமானத்தை யொழிப்பது கிரகஸ்தனது கடமை.

“கனவிற் கண்ட பொருள்” கைக்குதவாது என்பது உண்மைதான். அது போல் இவ்வுலகத்தில் அனுபவிக்கும் அற்பசுகங்கள் இறந்தபின் உபயோகமாகா. ஸ்வப்னத்தில் ஒருவர் நம்முடைய விரலில் மோதிரம் போடுவது போற் காணுகிறோம். அப்போது அந்த மோதிரத்தைப் பிறர் எடுத்துக்கொள்ளாத வண்ணம் கை

யை முடக்கிப் பத்திரமாய் வைத்துக் கொள்வதுமுண்டு. ஸ்வப்னாவஸ்தை நீங்கி ஜாக்கிராவஸ்தை யுண்டானால் மோதிரம் எங்கே? எங்கேயோ ஓடிப் போய் விட்டது. இப்படியே ஜாக்கிராவஸ்தையிற் கண்ட பண்டங்கள் ஸ்வப்னாவஸ்தையில் பொய்யாய்ப் போகின்றன. கனவு காணாத ஸுஷுப்தி அவஸ்தையில் ஒன்றுமே தெரிவதில்லை. மரணத்துக்கும் அவ்வவஸ்தைக்கும் அநேகமாய் வித்யாஸம் கிடையாது. ஆகவே எது பொய்? எது மெய்? எல்லா சுகங்களும் ஒவ்வொரு அவஸ்தையில் தோன்றி மற்றொரு அவஸ்தையில் மறைந்துபோகின்றன. ஆதலின் இவ்வுலக சுகங்களெல்லாம் அற்பமென்றெண்ணி பெரியோர் அவற்றைத் துறந்து விடுகின்றனர்.

### “இராதையும் கிருஷ்ணனும்.”

இராதை பரமபக்தை. அவளுடைய பக்திக்கு ஈடுபட்ட ஸ்ரீ கிருஷ்ணன் ஒரு ஸமயம் கோபிகைகளின் வேண்டுகோளுக்கிரங்கி துவாரகையைவிட்டு கோகுலத்துக்கு வந்தார். அப்போது, கிரீடம், கேயூரம், ஹாரம் முதலிய அணிந்து அரசனைப்போல் விளங்கினார். இராதை அவரைக் கண்டவுடன் கண்ணை மூடிக்கொண்டாளாம். கிருஷ்ணன் திகைத்து நிற்கவே, இராதை அவரை நோக்கி “இது யார் என் முன்னே நிற்கிறது? இந்த வேஷம் எனக்கு வேண்டாம். புள்ளாங்குழலை யூதும் என் கிருஷ்ணனிடம் எனக்குப் பிரீதியேயன்றி கிரீடம், கேயூரம், ஹாரம் முதலியவற்றில் எனக்குப் பிரீதியில்லை, முன் நான் நேசித்த கிருஷ்ணன் எந்த நிலைமையிலிருந்தாரோ அதே நிலைமைதான் எனக்கு தியானப்பொருள்” என்றாள். உடனே கண்ணன் வெட்கமடைந்து முன்னிருந்த கோபால வேஷத்தைப் பூண்டு எதிரில் நின்றார். தக்ஷணமே இராதை அவரை யடிபணிந்து தலை வணங்கி நின்றாள். இதைப்போல் இக்காலத்தும் விவேகத்திற் சிறந்த மாதர்கள் தங்கள் கணவர்களிடம் மனதை சமர்ப்பிப்பரேயன்றி ஆபரணத்தில் சமர்ப்பியார். பொருளில் மனம் சென்றால் அப்பொருள் இருளாகி உண்மையான பக்தியை மறைத்து விடும். பகவானுடைய பாதமிருக்குமிடம் தெரியாமல், ஜீவன் தேடி யலைந்து அற்பவின்பங்களாகிய கருங்கற்களில் முட்டிக்கொள்ளுமன்றோ?

“எலும்பைக் கடிந்த நாய் போல” என்று ஒரு பழமொழி வழங்குகிறது. இதன் கருத்தைச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம். நாயானது எலும்பில் யாதொரு சத்துமில்லையென்று உணரும் சக்தியின்றி அதைக் கடித்துக்கொண்டேயிருக்கும். எலும்பு உறுதியுள்ளதாதலின், நாயின் பற்களால் பிளவுபடாமல் அப்பற்களிலிருந்து இரத்த மொழுகச் செய்யும். அதை நாய் எலும்பின் இரத்தமென்றெண்ணி குடித்து ஸந்தோஷப்படும். அதுபோல், மந்த மதியுள்ளோர் அப்பிரயோஜனமான காரியத்திற் றலையிட்டுக்கொண்டு தங்கள் காலம் வியர்த்தமாவதையும் மனம் கெடுவதையும் யோசியாமல் பிறர்மீது குற்றம் கண்டுபிடித்ததா யெண்ணி ஸந்தோஷம் அடைவர்.

# ஏன் கிழத்தனத்தை யடைகிறீர்கள்?

(*All Rights Reserved.*)

ஏன் கிழத்தனத்தை யடைகிறோம் என்ற கேள்வியை எவரும் கேட்கின்றாரில்லை. ஆனால் ஆயிரத்திலொருவர் அதைப்பற்றி யோசிப்பினும், வயதாய் விட்டபடியால் கிழத்தனத்தையடைந்து விட்டதாக எண்ணுவார்களே யொழிய உண்மையை உணர்ந்தாரில்லை. வயதாய் விட்டால் கிழத்தனம் வந்துவிடுமோ என்ற கேள்வியைக் கேட்போமானால், எத்தனை வயதானவுடன் கிழட்டுத்தனம் வரும் என்பதை நிர்ணயிக்கவேண்டிய அவசரம் ஏற்படும். அதாவது அறுபதாவது வயதில் மனிதர்களுக்கு வார்த்திப காலம் வரும் என்று வைத்துக் கொள்ளுவோமானால், அறுபது வயதிற்கு மேற்பட்ட மனிதர்களிற் சிலருடைய அழகிய உருவமும், கம்பீரமான நடையும், தளராத ஊக்கத்துடன் கூடிய மனோசக்தியும் எல்லோராலும் கொண்டாடப்படுவதற்கு யோக்கியமானவையாக இருக்கின்றனவே! ஆனால் நாற்பது வயதிற்கு மேற்படாத பலருடைய கிழட்டு உருவத்தையும், நரைத்த மயிரையும், பலமற்ற காத்திரத்தையும் நாகரீக முதிர்ச்சியுற்றிருக்கும் தேசத்தவருள்ளும் ஜாதியாருள்ளும் காண்பது சர்வ சாதாரணமாக இருக்கிறது. இவ்விரண்டினையும் நாம் ஆழ ஆராய்வோமாயின், கிழட்டுத்தனம் என்பது இன்ன வயதிற்கு மேற்றான் வரும் என்பதை யாரும் இது வரையில் கண்டு பிடிக்கவில்லை என்பதையும், அந்தவிதமான வார்த்திப காலம் வருவதற்கு வயதுமட்டும் முக்கிய காரணமாகாதென்பதையும், வேறு எதனுடைய சக்திப் பிரபாவத்தினாலோ இளமை நீடித்திருக்கின்றதென்பதையும், அந்தச் சக்தியே கிழட்டுத்தனத்தையும் கொடுக்க வல்லதென்பதையும் நன்கு உணர்ந்து கொள்ளலாம். இந்தவிதமான தீர்மானத்திற்கு வந்தவர்களாகிய நாம்—இளையோராயினுஞ் சரியே, முதியோராயினுஞ் சரியே—அந்த சக்தி யாதென்பதைத் தெரிந்து கொள்ளுவதோடு, அதை மாந்தர்களால் அடையமுடியுமாவென்பதையும், அதை யடைவதோடு நில்லாமல், நம்முடைய நோக்கங்களுக்கு இணங்க அதைக் கொண்டு வந்து வைத்து சதா இளமையுடன் இருக்க முடியுமாவென்பதையும் பற்றி யோசிக்கவேண்டுவது அவசியத்தினும் அவசியம்.

இவ்விதம் எக்காலமும் நீங்கா யௌவனத்துடன் இருப்பதற்கு என்ன மருந்து புசிப்பது என்றாவது எந்தக் கம்பேனியின் லேகியம் சாப்பிடலாமென்றாவது யோசிக்கவேண்டாம். ஆயினும், நாம் சாப்பிடவேண்டிய மருந்தும் லேகியமும் இல்லாமலில்லை. அவை யாவை? எங்கிருக்கின்றன? என்று கேட்பீர்களாயின் அவை

ஒவ்வொருவரிடமும் இருக்கின்றனவென்றும்; அதுவும் அவரவர்களுடைய இஷ்டமிருந்தால் எச்சமயத்திலும், —என்சதாகாலமுங்கூட, அவைகளை ஒரு பைசாவும் செலவு செய்யாமலே பிரயோசனப்படுத்திக்கொள்ளலாம் என்றும் சொல்லலாம்.

**ஹா!** மனிதனிடத்தில் இவ்வளவு சிலாக்கியமான வஸ்துக்களிருக்கின்றனவா என்று ஆச்சரியப்படவேண்டிய அவசியமும் இல்லை. ஏனெனின், மனித சரீரம் அத்தகைய மாண்புடைத்து. இது பற்றியன்றோ "அரிதரிது மானிடர் ஆதல்" என்று ஔவையாரும் அருளியது. ஆனால் நாம் இவ்விடத்தில் ஆச்சரியப்படவேண்டிய விஷயம்—துக்கப்படவேண்டிய விஷயமுங்கூட யாதெனின், இத்தகைய அதிசய சக்தியினை நாம் பெற்றிருந்தும் அதனால் பயன் பெறாமல் போகின்றோமே என்பது தான். இந்த அபூர்வ சக்தியினை இதற்கு முன்னர் யாராவது கண்டு பிடித்து இதன் பயனை அனுபவித்திருக்கின்றார்களா? அல்லது இந்த இருபதாவது நூற்றாண்டின் **கொழுந்த நாகரீகத்தின்(!)** பலனாக யாரேனும் கண்டு பிடித்து சொல் மாத்திரையில் அனுபவிக்காமல் எழுதி வைத்திருக்கிறாரா? என்ற பிரச்னைகளைக் கேட்போமாயின் பின்னர் சொல்லப்பட்டதுபோல் நவீன நாகரீக முதிர்ச்சியின் பயனாக வித்தையிற்றேர்ந்த மேதாவி இந்தச் சக்தியினைக் கற்றுக்கொள்ளவில்லை என்றும் இதன் பலனை யனுபவிக்கவில்லை என்றும் தெரிந்துகொள்ளுவதோடு; தேகதத்வம், மனோதத்வம், ஆன்மதத்வம், முதலிய பல வேறு தத்வங்களையும் கண்டறிந்த பரமயோகிகளாகிய நம் முன்னோர்களால் அந்தச் சக்தி கண்டு பிடிக்கப்பட்டதென்றும், அதன் பலனை அவர்கள் அனுபவித்து நூற்றுக் கணக்கான வருஷங்கள் **யௌவனத்தன்மையுடன்** இருந்துவந்தார்கள் என்றும் நன்றே சித்தாந்தப்படுத்திக்கொள்ளலாம். விஸ்வாமித்திர முனிவர் அநேக நூறு வருஷ காலம் யோகாப்பியாஸம் செய்ததாகவும், அத்தனை வருஷ காலமும் அவர் கிழட்டுத்தனத்தையடையவில்லை என்றும் நாம் இதிகாசங்களால் தெரிந்துகொள்ளுகிறோம். இவ்விதம் யோகிகளாகிய எத்தனையோ பெயர்கள் வெகு நாட்கள் வரையில் யௌவனத்துடன் கூடி இருந்ததாக நம்முடைய புராணங்களும் கூறுகின்றன. இதற்கு அறுபதினாயிர வருஷ காலம் அரசு செலுத்தி வந்த அயோத்தி மன்னரான தசரத பூபதியும் போதிய சாக்ஷியன்றோ?

அந்த சக்தியின் பிரபாவம் இத்தன்மைத்தாக இருக்கையில், அஃது யாதென்று அறியவேண்டுவது நம்முடைய 'முக்கியமான கடமைகளில் முதன்மைபற்றியதன்றோ? அஃது யாதெனின், அதுவே **மனோஸக்தி!** அதாவது, மனிதனுடைய எண்ணத்தின் சக்தி. எந்தச் சக்தியினுடைய பிரபாவத்தினால் நீராவி யந்திரம், புகைக்கப்பல், மின்சாரம், முதலிய அற்புதச் சக்திகளெல்லாம் கண்டு பிடிக்கப்பட்டு மனிதர்களுக்கு உபயோகமாகும்படி செய்யப்பட்டிருக்கின்றனவோ, அந்தச் சக்தியே மனிதனுடைய கிழட்டுத்தனத்தையும் வரவொட்டாதபடி தடுக்கும் சக்தியாகும். இவ்வளவு திறன்வாய்ந்த சக்திக்கு நாம் எங்கும் செல்லவேண்டிய அவசியமுமின்று. நம்மிடத்தில் இந்தச் சக்தி இல்லாமலில்லை. அதை நாம் பொருட்படுத்தாதது தான் காரணம்.



12 JUN 1914 MADRAS

நீங்காத யௌவனத்துடன் இருக்கவேண்டுமானால் சுவர்க்கலோகத்திற்குச் செல்லவேண்டுமென்று புராணங்களின் மூலமாக நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் அங்கு செல்லாமலே நீங்காத யௌவனத்தை நாம் இந்தப் பூலோகத்திலேயே பெறலாம், நம்முடைய மனோசக்தியினால்—என்பது தெற்றென விளங்குகின்றது.

ஆகையால் ஒவ்வொருவரும் கீழ்கண்ட பிரகாரம் பிரதிநித்யமும் அநுஷ்டித்துப் பார்ப்பார்களாயின் வெகு சீக்கிரம் இதன் உண்மையைத் தெரிந்துகொள்ளலாம். மற்றவைகளைப்பற்றிப் பேசுவதற்கு முன்னர் கிழட்டுத்தனத்தின் குறிகளைச் சற்றே கவனிப்போம். வெளிப்படையாக முகத்தின் பளபளப்பு குன்றி சரீரத்தின் தோல் சுருக்கம் கொடுக்க, சரீர உருப்புகள் எல்லாம் பலஹீனமாகப் போய்விடுவதும், அந்தரங்கமாக மனம் பற்பலவிதமான கவலைக்குள்ளாவதுமே. இவைகளுடன் என்று இறந்து விடுவோமோவென்ற ஏக்கம் மிக்கப் பெரியது!

சரீரத்தின் உறுப்புகளாகிய கால் முதலியவைகளும் மூளையும் சிறு சிறு அறைகளாலாக்கப்பட்டிருக்கின்றனவென்றும், அந்தவிதமான அறைகள் (cells) விருத்தியடைதலே சரீரம் வன்மையுடனும் வனப்புடனும் இருப்பதற்குக் காரணமாமென்றும்; அவைகள் நசித்துப்போவதே கிழட்டுத்தனம் வருவதற்குக் காரணமாமென்றும், அவைகள் விருத்தியுற்று வளருவதற்கும், விருத்தியற்று நசித்துப் போவதற்கும் மனத்தினுள் உண்டாகும் சலனமே காரணமாமென்றும், பிரபல சரீர தத்வ சாஸ்திரிகள் எல்லோரும் அபிப்பிராயப்படுகின்றனர்.

நம் தேசத்தில் சாதாரணமாக ஒருவனோ, ஒருத்தியோ முப்பது வயதை யடைந்தால், "நான் கிழவனாக ஆய்விட்டேன், கிழவியாக ஆய்விட்டேன்; இனிமேல் எனக்கென்ன சுகம் வேண்டும்; என்னுடைய வாழ்நாட்களில் செழிப்பான காலங்களெல்லாம் கழிந்தும் மறைந்தும் போய்விட்டன; எனது தாயாரும் தந்தையாரும் நாற்பதாவது வயதில் உயிர் துறந்திருக்கிறார்கள்; நானும் அவ்விதமே, அதாவது அவர்களைப்போல இன்னும் பத்து வருஷங்களுக்குள் இறந்து படுவேன்" என்று சொல்லிக்கொள்ளுவதை நாம் கண்டிருக்கிறோம். ஆனால் இப்பேர்ப்பட்டவர்கள் மரணத்திற்குத் துணிந்தவர்களா? என்று யோசித்துப் பார்ப்போமாயின்; அல்லர் என்ற முடிவிற்கே வருவோம். இவர்கள் மரணத்திற்குப் பயப்படுவதோடு, அந்தமரணத்

ளைத ஒவ்வொரு சமயமும் எதிர்பார்த்தும் இருக்கிறார்கள். ஹா! என்ன மதியீனம் இஃது! இறைவன் பக்ஷபாதமற்றவரென்றும் பரம கருணாநிதியென்றும் சொல்லிக்கொள்ளும் நாம், அவர், ஒருவனை நீடூழி காலம் யௌவனத்துடன் இருக்கவைத்து, மற்றவனை அதிபால்ய வயதிலேயே இறக்கும்படி செய்வாரா? ஆகையால் அவருடைய சட்டதிட்டங்களெல்லாம் எல்லா சாதியாருக்கும், எல்லா மதஸ்தர்களுக்கும், எல்லா வயதினர்களுக்கும், ஆண் பெண் இருபாலார்களுக்கும் சமமாகவேயிருக்கின்றனவென்று உறுதிப்படலாம். என்றாலும்,—அவைகளை வெகு சிலரேயன்றி மற்றவர்கள் கவலையுடன் கவனிக்கிறார்களில்லை.

வயது ஆவதற்குள்ளாகவே கிழட்டுத்தனத்தின் நினைப்பையும், மரணத்தின் ஞாபகத்தையும் ஏன் நம்முடைய மனத்தில் கொள்ளவேண்டும்? நாம் பூமியில் ஜனித்ததின் பிரயோசனம் மரணத்தை யடைவதன்றென்றும், அதைவிட உத்கிருஷ்டமானது ஆன்ம அபிவிருத்தியே என்றும், நாம் நம்முடைய யௌவனத்தை வெகு நாட்கள் வரையில் கைவிடாமல் காப்பாற்றிக்கொண்டிருந்து, பூலோக அநுபவத்தைத் தெரிந்து ஆன்மாவின் விருத்தியைப் பெறலாமென்றும், அந்தவிதமான விருத்தியை யடைந்தாலன்றி இறந்திறந்து பிறக்கவேண்டுமென்றும், அந்த விருத்தியடைந்துவிட்டோமாயின் பிறவிப்பிணி நீங்குமென்றும், இவ்விதமான அபிவிருத்தியை நம்முடைய மனோசக்தியொன்றினால் மட்டும் பெறலாமென்றும் ஒவ்வொருவரும் மனோதைரியம் செய்துகொள்ளுங்கள். மரணம் என்பது, உங்களுடைய ஆன்மா பக்குவமானாலொழிய உங்களை வந்து அடையாது. ஆகையால் யௌவனத்துடன் அநேக நூறு வருஷகாலம் நீங்கள் இருந்து அந்த யௌவனத்துடனேயே அந்திய காலத்தையும் முக்தியையும் அடைவீர்கள். அப்பேர்ப்பட்ட காலம் எல்லோருக்கும் இதோ வந்து விட்டது! இப்பொழுதே வந்துவிட்டது. இனிமேல் நம்முடைய தேசத்தில் அகால மரணமென்பதே கிடையாமற் போய் விடுகிற காலம் சமீபித்து விட்டது. நீங்கள் கிழட்டுத்தனத்தை எதிர்பாராதீர்கள்! மனதிற்குள் கிழட்டுத்தனத்தைச் சதா சிந்தித்துக்கொண்டிருந்து, வெளி வேஷத்தில் தினமும் முகக்ஷவரம் செய்துகொள்ளுவதினாலும், விலையுயர்ந்த உடை உடுத்திக்கொள்ளுவதினாலும், களப கஸ்தூரியாதிய வாஸனைகளைப் பூசிக்கொள்ளுவதினாலும், ஒருபொழுதும் கிழட்டுத்தன்மையை வரவொட்டாமல் தடுக்க முடியாது. தீப்பற்றிய இடத்து அதைத் தண்ணீரால் அணைப்பதற்குப் பதிலாக ஒரு வண்டி எரு முட்டையால் மூடிடில் எப்படி அஃது திடீரென்று தீப் பற்றிக்கொள்ளுமோ அஃதேபோல், மனத்தில் கிழட்டுத் தன்மையின் சிந்தனையுடன் இருந்து வெளியில் யுவா புருஷர்களைப்போல் வேஷம் பூணுவதினால் ஜரையைத் தடுக்க முடியாது. ஆகையால் உங்களுடைய



எண்ணங்கள் யுவா புருஷர்களுடையவை போல் சந்தோஷத்தை எதிர் பார்ப்பனவாகவும், தளராத ஊக்கத்துடன் கூடியனவாகவும் இருக்கும்படி செய்துகொள்ளுங்கள். உங்களுடைய ஜீவிய காலத்தில் நடந்த, நடக்கிற, துக்கமான சம்பவங்களையும், மனதிற்கு ஒவ்வாத விஷயங்களையும் நீக்கிக்கொள்ளுங்கள். ஒரு நாள் ஆய்விட்டதே, நான் நேற்றய தினத்தை விட இன்று ஒரு நாட் கிழவன் என்னும் ஞாபகத்தை அறவே ஒழிக்கவேண்டும்.

தொண்ணூறுவயதை யடைந்த ஒருவரைப் பார்த்து நீங்கள் யாங்ஙனம் இந்தப் பிராயத்திலும் இளமையுடன் இருக்கிறீர்கள் என்று சிலர் கேட்டதற்கு அவர், "நான் முப்பது வருஷ காலம் ஒரு ஹைஸ்கூலுக்கு பிரதம உபாத்தியாயராக இருந்தேன்; அச்சமயத்தில் நான் பள்ளிச் சிறார்களுடன் விளையாடுவதிலும் ஓடியாடுவதிலும் புத்தியைச் செலுத்துவேன்; அவர்களுக்கு எந்தெந்த விஷயங்களில் பிரியம் அதிகமோ அவைகளில் எனக்கும் பிரீதியுண்டு; அந்தச்சமயம் என்னுடைய வயது இவ்வளவு என்பதையும் மறந்தேன். மறந்ததோடு நில்லாமல், என் முழு எண்ணமும் சிறுவர்களுடைய எண்ணத்தைப்போல், இளமையான பருவத்தின் மீதும், வரவர நாடும் அபிவிருத்தியின் மீதும், நினைத்ததைச் சாதிக்கும் வல்லமையுடைய வரப்போகிற காலத்தின் மீதுமே இருந்தது; அந்த அப்பியாஸத்தையே இன்னும் நான் கையாடிக்கொண்டிருக்கிறேன்; இஃது எனக்கு வழக்கமாகப் போய்விட்டது;" என்று அவர் பதிலளித்ததாக ஸ்வெட் மார்டன் என்னும் அமெரிக்கா கனவான் ஒருவர் தம்முடைய புஸ்தகங்களொன்றில் எழுதுகிறார்.

இன்னொரு ஆங்கிலேய கதாசிரியர், "திடீரென்று தன் காதலனைப் பிரிந்த ஒரு காதலி, பிரதி தினமும் தன் மனதுக்குகந்த மன்னவனை எதிர் பார்த்த வண்ணமே இருந்தாள். "இன்று வந்துவிடுவான், இதோ வந்துவிடுவான் என் காதலன்" என்று-காதலிலும், தன் காதலனின் மீதுமே கருத்தாக இருந்தாள். அப்பெண்மணி இவ்விதம் சுமார் ஐம்பது வருஷங்களைக் கழித்தாள். அப்பொழுதும் அவள் இருபது வயது இளம் பெண்ணை யொத்தே இருந்தாள்" என்றும் கூறுகிறார்.

இந்தவிதமான திருஷ்டாங்களிலிருந்தும், கிழட்டுத்தனம் உண்டாவது மனதிலேயே யொழிய சரீரத்தில் அல்ல என்பது தெற்றென விளங்குகின்றதன்றோ?

பின்னும் உங்களை யாராவது பார்த்து, "உனக்கு வயதாய் விட்டது" என்றாவது, "கிழட்டுத்தனம் உன்னிடத்தில் வளருகின்றது" என்றாவது சொல்லுவார்களானால் நீங்கள் அதை மறுத்துவிட்டு, "உண்மை ஒருபொழுதும் கிழட்டுத்தனத்தையடையாதென்றும், நான் உண்மை" என்றும், உங்களுடைய மனத்திற்குள்

சொல்லித்தைரியம்செய்துகொள்ளுங்கள். **கிழத்தன எண்ணத்துடன் ஒருபொழுதும் இரவில் நித்திரை செய்யச்சொல்லாதீர்கள்!** இரவில் நித்திரை செய்யும்பொழுதுதான் முக்கியமாக நீங்கள் இளமையான எண்ணத்துடன் இருக்கவேண்டும்; கிழத்தனத்தின் எண்ணங்களையும், அதன் குறிகளையும் அதின் அபிப்பிராயத்தையும் உங்கள் மனதிலிருந்து முற்றும் அடைத்துவிட்டே நித்திரை செய்யச் செல்லுங்கள்!

மூளையின் உதவிகொண்டு தத்தம் வேலைகளைச்செய்துகொள்வதில் முகத்தில்பிரதிபிம்பிக்கப்பண்ணும் கவலையையும், விசனத்தையும் தீவிரமாக விலக்கிக்கொள்ளுங்கள். ஏனெனில் விசனத்தையுடைய மனதானது மூளையில் ஒருவிதமான சுண்ணாம்பை உண்டாக்கிவிடுகின்றது. அந்தச் சுண்ணாம்பினால் மூளையின் சிறிய அறைகள் மிருதுத்தன்மையற்றுப்போம். அவைகள் மிருதுத் தன்மையற்றுப்போகுமேயானால் மூளையால் எந்த வேலையும் செய்யமுடியாது.

ஆகையால் கவலைக்குள்ளாக்கும் விஷயங்களை நீங்கள் நீத்துவிட்டு, உங்களுக்கு எது சந்தோஷத்தைக் கொடுக்குமோ, எது உங்களுடைய மனதிற்கு மிகுதியும் பிரீதிகரமாக இருக்குமோ, எந்த நற்கருமத்தைச் செய்தால் உங்களுடைய உள்ளும் புறமும் ஒருமிக்கக் குளிருமோ, அதையே நினைத்துக்கொண்டு நீங்கள் இரவு நித்திரை செய்யப் போங்கள். நற்கருமம் என்றது எதற்கெனில், கெட்ட காரியங்களை நினைக்குமொருவனுடைய மூளையானது அந்த விஷயத்தில் ஈடுபட்டு அவனைப் பின்னும் பின்னும் கேடான விஷயங்களிலேயே ஆழ்த்துகின்றது. அவன் இறுதியில் கேட்டையே யடைந்து சுருங்குகின்றான்.

ஒழுக்காறற்ற எண்ணமும், எடுத்த காரியத்தை நிறைவேற்றவேண்டுமென்ற ஆசையும், கிடைக்கக் கூடியதில் சிலாக்கியமானதையே விரும்புவதாகிய நோக்கமுமே, நித்திரை செய்யப் போகும்பொழுது ஒவ்வொருவரும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டிய விஷயங்களாகும்.

உண்மையைக் கூறவேண்டுமானால், இயற்கையாகிய நங்கை நமக்கு சதா யௌவனத்தையேகொடுத்துக் கொண்டிருக்கிறாள். அதாவது நம்முடைய சரீர முற்றும் அறை மயமாக இருக்கிறதாக ஏற்கெனவே சொல்லியிருக்கிறோமாகையால்; அந்த அறைகள் யாவும் இயற்கையாகவே புதிது புதிதாக ஆகின்றன. ஆகையால் நம்முடைய சரீர அறைகளில் எதுவும் கிழட்டுத்தனத்தை யடையும்படியாக அமைக்கப்படவில்லை. இந்தவிதமான அறைகள் புதுப்பிக்கப்படுவதினால் சரீரமானது அடிக்கடி புதிது புதிதான சக்தியுடன் கூடியதாக ஆகிறதேயொழிய தளர்வடைவதில்லை. எந்த அறைகள் அதிக சுருசுருப்பாக வேலை செய்கின்றனவோ அவைகள் யாவும் அடிக்கடி, நிமிஷத்திற்கு நிமிஷம் கூடப் புதுப்பிக்கப்படுகின்றன. ஆகையால் வயதானது மனிதனுக்கு கிழத்தனத்தை யுண்டுபண்ணுகிறதென்பது நாமாகச் செய்துகொண்டகாரிய மென்றும், இயற்கைக்கு விரோதமென்றும் அறியுங்கள்.



மனிதன் இயற்கைக்கு மீறி ஆகாயத்தில் பறப்பதற்கு எண்ணி பூமியிலிருந்து தாவுவானாயின், அவன் கீழே விழுந்து காலை ஒடித்துக்கொள்ளுவானன்றோ? அஃதேபோல், நாமும் இயற்கைக்கு விரோதமான எண்ணங்களை எண்ணி கிழத்தனத்தையும் விரூபத்தையும் வருவித்துக்கொள்ளுவதென்பது மிகுந்த மதியீனத்தையே குறிக்கும்.

ஆகையால் பிரியமான வாசகர்களே! நீங்கள் நீங்காத யௌவனத்துடன் கூடி இருக்கலாமென்று எண்ணுவீர்களாயின், அநேக நூறு வருஷங்கள் கூட அவ்விதமே இருக்கலாம். இருபதாவது வயது முதலே கிழத்தனத்தை வருவித்துக்கொள்ளுவதென்றாலும் உங்களுக்கு அதுவும் சாத்தியமே. மற்ற மிருகங்களைவிட மேன்மையான மனிதன், அதாவது ஆறாவது அறிவாகிய பகுத்தறிவையுடைய மனிதன், நல்லவை இவையென்று கண்டுபிடித்தும், அல்லவை இவையென்று தெரிந்து அகற்றியும், நடந்து சுகம் பெறானாயின் அவன் மிருகத்திற்கு ஒப்பானவனேயன்றோ? ஆதலால் பிறருக்குக் கேட்டை விளைக்காமல், உங்களுக்கு நலத்தைச் செய்யக்கூடிய விஷயங்களைப்பற்றியும், அவற்றை முடிக்கும் ஆற்றல் எனக்குண்டு என்ற நம்பிக்கையுடனும், சந்தோஷத்துடனும் இருப்பதோடு அநேக நூறு வருஷங்கள் வரையில், அதாவது நான் எடுத்த ஜன்மத்தின் காரியங்கள் யாவும் முடிவடைந்து விடுகிற வரையில், யௌவனத்துடன் இருப்பேன், இஃதே இயற்கைச் சட்டம் என்றும் மனோதிடம் செய்துகொண்டு நீங்கள் நடந்து வருவீர்களாயின், நம் நாட்டில் அகால மரணமும், கிழத்தனமும் தலைநீட்டா. அப்பேர்பட்டகாலம் இதோ வந்துவிட்டது.

பண்டிதர் *T. S.* இராஜம் ஐயர்.

## துண்டு துணுக்குகள்.

எந்த ஜாதியை அல்லது மதத்தைச் சேர்ந்தவனானாலும் இந்தியன் இந்தியனென்றே சொல்லப்படுகிறான். இந்தியர்களில் அநேகர் கிறிஸ்தவர்களாகி விட்டதால் அவர்கள் ஐரோப்பியர்களாகிவிடவில்லை. மேனாட்டார் அவர்களை இந்தியர்களென்றே மதிக்கிறார்கள்.

இந்தியாவை யாண்ட சிறப்புற்றோங்கிய அக்பர் சக்ரவர்த்தியின் தாயார் தாம் கர்ப்பமாயிருந்த காலத்தில் தமது கால்களில் ஊசியினால் புஷ்பம் வரைந்து கொண்டனராம். அக்பர் பிறந்த பொழுது அவருடைய கால்களில் புஷ்பரேகை பொருந்தி யிருந்ததென்று சொல்லப்படுகின்றது.

இந்தியரின் புத்தி எவ்வளவு நுட்பமும் உயர்வும் அடையக்கூடுமென்பது இந்தியாபழைய காலத்தில்செய்த அரும்பெரும் காரியங்களை அறிந்தவர்களுக்கு மட்டும் விளங்கும்.

---

லக்ஷம் கோடி என்று முதல்வைத்து வியாபாரம் செய்வது சாஸ்திர ஞானத்தாலும் அனுபோகத்தாலுமே சாத்தியம்.

---

நாம் நிகழ் காலத்தை உபயோகிக்கும் முறையைப் பொறுத்ததாயிருக்கும் வருங்காலத்தில் நிகழும் சம்பவம்.

---

வட இந்தியாவில், தென்னிந்தியாவிலிருப்பதுபோல தேவாலயங்களும் உத்ஸவங்களும் விசேஷமாயில்லை. புண்ணிய நதிகளில் ஸ்நானம் செய்வதையே அங்குள்ள ஹிந்துக்கள் பெரும் புண்ணியமாயுங் கடமையாயும் கருதி அளவற்ற உத்ஸாகத்தையும் திருப்தியையும் அடைகின்றார்கள்.

---

புது டைரியும், புது நட்பும் புதுப்புஸ்தகங்களும், புதிய இடமும், புது விருந்தும்,—என்இன்னும் எத்தனையோ புதியனவெல்லாம், ஆரம்பத்தில் அளவற்ற ஆர்வம் விளைத்து அப்பால் அலக்ஷியிக்கப்படுதல் பிரபஞ்ச அநுபவம். புது டைரியை இளைய மனைவிக்கும், சென்ற வருஷ டைரியை மூத்த மனைவிக்கும் ஸமமாகச் சொல்லலாம்.

---

உறவினர் என்பதெல்லாம்,—“காரியம் ஆகிறவரைக்குந்தான் சுற்றித்திரிவது” என்ற சித்தாந்தத்தைக் கொண்ட நன்றி விசுவாசமற்ற கூட்டத்துக்குச் சொல்லும் வார்த்தையாகும்.

---

ஒருவன் பொறுமையைக் கற்றுக்கொள்ளவேண்டியதாயின் மிகுந்த பிரயாசையேயாம். ஆனால் அத்தகைய பொறுமையைக் கற்றுக்கொள்ள சென்னை டிராம் வண்டியில் ஆறு காசு கொடுத்து ஹாரிஸ் பிரிட்ஜிலிருந்து சென்ட்றல் ஸ்டேஷன்வரைபிரயாணஞ்செய்தால் போதுமானதாயிருக்கும். வண்டியில் ஏறிய சீக்கிரத்தில் மூட்டுப்பூச்சிகள் எரித்து விடுகின்றன. மூட்டுப்பூச்சிக் கடிபாதை பொறுக்க கூடாமல் சற்று எழுந்து நின்றாலோ கண்டக்டர் உட்கார்—உட்காரென்று கூச்சலிடத் தொடங்கி விடுகிறார். என்ன செய்வது? பொறுமையைக்கையாடவேண்டியதே! அப்புறம் என்ன அலங்கப்பானை கண்டக்டரிடம் ஒரு ரூபாய்க்குச் சில்லறை கிடைப்பது மெத்த அரிது. சில்லறை யில்லாமல் ரூபாயைக் கொடுத்தால் டிக்கட்டின் பின்னால் 0—15—6. என்று எழுதி கைநாட்டு வைத்து விடுகிறார். அவர் அவசரத்தில் செய்கிற கைநாட்டோ எகிப்திய பாஷையான சித்திர எழுத்தேயாம். இதற்கு என்ன செய்வது? பொறுமையைக்கையாடவேண்டியதே!

---

# கர்ண—துரியோதனர்களின் தர்மம்.

“கொடுத்தல் பிறவிக்குணம்.” ஒருவனுக்குக் கொடுக்குங்குணம் வருவது கஷ்டம். எத்தனையோ மண்டலீகர்கள் தம் பொருளை ஏழைகட்குக் கொடுத்துதவாமல் பூமியிற் புதைத்துவிட்டிறந்துபோயினர். சிலர் பொருளைப்புதைத்து மற்றொருகால் அதனை எடுக்கச்சென்று அகப்படாமல் வருந்துகிறார்கள். இத்தகைய கொடும்பாவிகள் கண்ணில் அப்பொருளைக் காட்டக்கூடாதென்று பூமிதேவி மறைத்துவிடுகிறாள் போலும். தமக்கொருவரும் நிகரின்றி பிரபஞ்ச முழுதும் கட்டியாளினும், அளகேசனையொத்த சம்பத்துடையவராயினும் கொடுக்குந்தன்மையிற் பூஜ்யராகிறார்கள்.

* * *

“அறஞ்செய விரும்பு” என்று ஔவையார் சொன்னார்; ‘நமக்கது தெரியாதா’ வென்பாரு முளர். எல்லார்க்குந்தெரியும், தெரிந்தும் செய்வோர் மாத்திரம் சிலரே. ஏன்? அதன் உண்மை யறியாமையினால். அறத்தின் உண்மை யறிந்தோரும் அறஞ்செய்யாதொழிகின்றனரே. ஏன்? சீவகாருண்யமின்மையினால். சீவகாருண்ணிய மென்பது யாது? உயிர்கள்மேல் வைக்கத்தகுங் கருணை; அதாவது உயிர்களிடத்து இரக்கம். உயிர்களிடத்து இரக்கம் வைப்பதெதற்கு? உலகிலுள்ள உயிர்களெல்லாம் பக்தவத்ஸலனாகிய ஒரே பரமபிதாவின் பிள்ளைகள். ஒரே பிதாவின் பிள்ளைகளாகிய உயிர்களெல்லாம் சகோதரர்கள். ஒரு குடும்பத்தில் சில சகோதரர்களிருப்பின் ஒருவருக்கொருவர் அன்புடையவராயிருக்கின்றனர். ஒருவருக்கு ஒரு துன்பம் வந்தகாலையில் மற்றச் சகோதரர் அத்துன்பம் தங்களுக்கு வந்ததாக நினைத்து வருந்துகிறார்கள். இது உலகியற்கை. நேற்றுப்பிறந்து, இன்றிருந்து, நாளையழியும் அநித்திய வாழ்வாகிய இகத்திலுள்ள தந்தைக்குப்பிறந்த சகோதரர்களிடத்தில் ஒருவன் இவ்வளவு அன்பும் இரக்கமும் வைப்பானாயின்; என்றும் அழிவில்லாத நித்திய வாழ்வாகிய பரலோக பரமபிதாவின் திருவருளாற் பிறந்த சகோதரர்களாகிய சர்வசீவர்களிடத்தும் எத்தகைய அன்பும் அருளும் இரக்கமும் காட்டவேண்டியவனாவான்? இதனை மறந்து அந்தோ! இவ்வுலகில் அறத்தை மறுத்துவிடுகின்றனரே; அறஞ்செய்தலால் இம்மையிற் புகழேயன்றி மறுமையிற் புண்ணியமுமுண்டன்றோ?

"அறத்தான் வருவதே இன்பம்" என்றார் திருவள்ளுவர். இவ்வுலகில் அறஞ்செய்தார் மறு பிறப்பில் இவ்வுடம்பே பெற்று மேலாகிய செல்வ இன்பத்தைப்பெறலாம். இப்பொழுது செல்வர்களாயுள்ளவர்களெல்லாம் முற்பிறப்பில் அறஞ்செய்தவர்களென்று சொல்லப்படுவார்கள். ஒத்த மனிதப்பிறவியில் ஒருவன் பல்லக்கின்மீதூர்ந்து செல்கிறான். மற்றவன் அவனைச் சுமந்துசெல்கிறான். பல்லக்கிலிருப்பவனும் பல்லக்கைச் சுமந்துசெல்பவனும் மனிதப் பிறவியாகவேயிருக்க இவர்களுள் இப்படி உயர்வு தாழ்வு வருவானேன்? பல்லக்கிலிருப்பவன் முன் அறஞ்செய்தான்; பல்லக்கைத் தூக்கிச்செல்பவன் முன் மறஞ் செய்தான். (மறம்-பாவம்) பாடுபட்டுத் தேடிப் பணத்தைச் சேகரித்ததினால் பல்லக்கிலிருக்கிறான் என்பாருமுளர். பாடுபட்டுத் தேடாமலே சிறு பிராயமுதல் தொடங்கியே பல்லக்கிலிருக்கும் பாக்கியவான்களில்லையா என்னும் கேள்விக்கு அவர்கள் பதில்சொல்ல முடியாது. உதயாதி முதல் அஸ்தமனம்வரையும் நெற்றித்தண்ணீர் நிலத்தில் விழும்படி அரும்பாடுபட்டுழைக்கும் ஆண்மகன் வீட்டிலும் அடுப்பெரியாமலிருப்பதேன்? அதைமாத்திரம் அவன் அதிர்ஷ்டம் எனலாமோ? அப்படியாயின் அதிர்ஷ்டம்என்பதொன்றுண்டு. அதிர்ஷ்டமே எல்லாஞ் செய்விக்கும். உழைக்காமலிருந்தாலும் அதிர்ஷ்டமிருந்தால் எப்படியும் செல்வம்பெறலாம். அதிர்ஷ்டமென்பதென்ன? அதுதான் முன்செய்த அறமென்பது.

***

"கொடையிற் கர்ணன்" என்பது ஒரு பழமொழி. முற்பிறப்பில் அறஞ்செய்தார்க்கு இப்பிறப்பிற் செல்வம் கிடைக்கும் என்றாலும் இப்பிறப்பிற் செய்யும் அறத்திற்குப் பலன் இப்பொழுதே கிடைக்கினும் கிடைக்கும். பாரத யுத்தத்தில் கர்ணன் என்பவனை எல்லார்க்குந் தெரியும். கர்ணன் கொடையாளி. இல்லையென்றிரப்போர்க்கில்லையென்று உரையா இயல்பினை யுடையவன். 'கர்ணன் கொடைபோல' என்னும் உலகவழக்கம் எல்லோரும் அறிவார்கள். சொர்ணதானஞ் செய்வதிற் கர்ணனைப்போலில்லை யென்பார்கள். தானஞ்செய்வதையே கர்ணன் தவமாகவெண்ணினான், துரியோதனனுக்கு ஒருகாலத்தில் ஓர் தூர் எண்ணம் விழுந்தது. 'நம்முடைய சொத்தைத்தானே கர்ணன் கொடைகொடுக்கிறான் நாமே அது செய்யலாகாதா' என்பதே. வெளியிற் பறையறைவித்துவிட்டான்; துரியோதன மகாராஜன் தர்மஞ் செய்கிறபடியால் (!) எல்லோரும் அவரிடம் தர்மத்திற்கு வரலாமென்று.

***



"அகங்காரம் அவமானப்படுத்தும்." துரியோதனனிடம் வரும் யாசகர்களைநோக்கி, ஏ! யாசகர்களே! யாம் கேட்போர்க்கு வரையாது கொடுக்கும் தருமம் எவ்வளவு தூரம் எட்டியிருக்கிறது என்று கேட்பான். அதற்கு யாசகர்கள், அரசர் பெருமானே! தங்கள் பெயர் நெடுந்தூரம்வரையில் எட்டி யிருக்கிறது என்பர். அதற்ககமகிழ்ந்த துரியோதனன் அவர்களுக்குச் சிறிது பொருளைக்கொடுத்து, என் பெருமையை ஊரெங்கும் சொல்லுங்கள் என்று அனுப்புவன். இங்ஙனம் நிகழுநாளில் ஓர்நாள் துரியோதனனது அகங்காரத்தையும் அற்பத்தனத்தையும் அறிந்த ஒருவன் அவனிடம் வந்து ஹே! மஹாப்பிரபுடீக மண்டலீகா! தேவரீருடைய வள்ளற்றன்மையை நானூறுகாத தூரத்திற் கேட்டு இப்படியும் தருமஞ் செய்பவர் உலகிலிருப்பாரா? அங்கு சென்று நமது மிடியை நீக்கிக்கொள்ளலாமா வென்று சந்தேகத்தோடு வரும் வழியில் சுமார் ஓர் ஐஞ்ஞூறு தவசிரேஷ்டர்கள் ஒன்றுகூடியிருந்தார்கள். அதில் ஒரு பெரிய தவசிரேஷ்டர், தாம் சிறந்த யாகமொன்று செய்யவேண்டுமென்றும், அதற்காக இரண்டு யானை சுமக்கத்தக்க பொருள் வேண்டுவதாயும், அவ்வளவு பொருளைத் தடையின்றி நமக்கு யார் கொடுக்கப்போகிறார்கள் என்றும் அம்முனிவர்களிடம் யோசித்துக்கொண்டிருந்தார். அதற்கு அவர்களெல்லாம் ஒரே வாக்காக தத்துவங்களைக் கடந்த தவசிரேஷ்டரே! வேண்டிய வேண்டியாங்கு கொடுத்துதவத்தக்க ஓர் வள்ளல் தோன்றியிருப்பதை தேவரீர் அறியீர்போலும் என்றார்கள். அதனைக்கேட்ட அம்மஹாரிஷி, அப்படியா! யார் அவர்? என்றார். அதற்கவர்கள் நாம் இப்போதிருக்குமிடத்திற்கும் அவ்வரசர்பிரானிருப்பதற்கும் சுமார் நானூறுகாததூரம் இருக்கும்; அவர் பெயர் துரியோதனமஹாராஜா என்றனர். அதற்கு அப்பெரியவர், ஆனால் நாம் செய்தது நல்ல பாக்கியமே. சாமானியர்களுக்கெல்லாம் அளவிறந்த பொன் கொடுக்கும்போது இயற்கையிலேயே முனிவர்கள் மீது அரசர்க்கு அன்பதிகமாதலால் நாம் சென்று யாகம் செய்வதற்குப் பொருள் வேண்டுமென்றால் தடைசெய்யமாட்டார். ஆனால் நம்மில் யார் அவ்வளவு தொலைதூரம் போகக்கூடியவர்கள் என்று வினவுகையில், எல்லோரும் ஆந்தைபோல் விழித்து, என்னாலாகாது என்று ஒவ்வொருவரும் சொல்லிவிட்டனர். இதற்குள் நான் அங்கு நின்றிருந்ததைக்கண்டு "நீவிர் யார்?" என்று வினவினர். சுவாமிகளே நான் மிகு தரித்திரன்; நானிருக்குமிடத்தில் எத்தனையோ தனிகர்களிருக்கிறார்கள். இருந்தும் என்ன பிரயோஜனம்? முன் கர்ணனென்னும் ஒருவன் இருந்தானன்றோ? அவன் சிறிது நாள் அயலார் சொத்தையெடுத்து பாத்திரமறியாமல் செலவு செய்துவந்தான். அப்பொருளையாசிக்க எனக்கு இஷ்ட

யில்லை. இப்போது துரியோதனமகாராஜா என்பவர் தமது சொந்தப் பொருளைக் கொண்டு பாத்திரமறிந்து தானஞ்செய்கிறாரென்று கேள்வியுற்று அங்கு செல்கின்றேனென்று யான் கூறுதலும், அவர்கள் பரமானந்தபரிதர்களாய்,

* * *

“வருவது வழியில் நிற்காது” என்னும் பழமொழிப்படி, தேடிச் சென்ற பொருள் காலில் தட்டியதுபோல் நீர் எங்களுக்குக் கிடைத்தீர். இனி எங்கள் யாகம் ஈடேறினதாயிற்று. நெடுநாளாய் அன்னாகாரமின்றி இக்காட்டில் கிடைத்தபோது கந்தமூல பழங்களைப் புசித்து நடக்க சக்தியின்றி கிடக்கும் நாங்கள் தொலைதூரம் நடப்பதென்றால் கஷ்டமாம். நாங்கள் அரசனுக்கோர் திருமுகமெழுதித்தருகிறோம்; அதனை தயை செய்து எடுத்துக்கொண்டுபோய் அவரிடங்கொடுத்தால் அவர் இரண்டானை சுமக்கும் பொருள் கொடுப்பார். அதனை எம்மிடங் கொண்டுவந்து கொடுக்கும்படி பிரார்த்திக்கிறோமென்றார்கள். அங்ஙனமே அடியேனும் அதனை வாங்கிக்கொண்டுவந்தேன். இதோ அஃதிருக்கிறது பாருங்களென்று துரியோதன மன்னனிடம் அதனைக் கொடுத்தான்.

* * *

“பாமரர் துதிக்கப் பரமானந்தங்கொள்வர்.” அறிவிலிகளை வசப்படுத்துவதற்குத் தக்க மருந்தாவது அவர்களைப்பற்றி அளவுகடந்து புகழவேண்டுவதொன்றே. அப்போதுதான் அப்பேதையர்நெஞ்சம் வெகு உல்லாசப்பட்டு புகழ்பவனுக்கு வேண்டிய உதவிசெய்வார். அதுபோல, இவ்வரசனும், அத்திருமுகத்தைப் பிரித்துப்பார்த்தான். அதில், “நாங்கள் இச்சித்தபொருளை அனுப்பினால் யாகத்தினாற் கிடைக்கும் புண்ணியத்திற் பாதி உமக்குத் தத்தம் செய்கிறோம்” என்றெழுதியிருந்ததுந் தவிர, ஐந்நூறு கையெழுத்துக்கள் அவ்வோலையில் பதியப்பட்டுமிருந்தது. ஏட்டில் அவ்வாறெழுதியுள்ளதைக்கண்ட அரசன் இவ்வளவு தொலைவில் நம்முடைய கீர்த்தி பரவிற்றா? ஹா! நாம் செய்த புண்ணியமே புண்ணியம் என்று அரைமணிநேரம் ஆநந்தம் பொங்கித் ததும்பிப் பூரித்து அது கீழே வழிந்தோடும்படிக் களித்திருந்தான்.

* * *

ஓலைகொண்டுபோன தரித்திரன், ஏது அரசன் யோசனையில் விழுந்துவிட்டான். நாம் புளுகின புளுகிற்கு ஏதேனும் பிரயோஜனம் கிடைக்கிறதோ இல்லையோவென்றெண்ணி வருத்தமுற்றவனானான்



அவ்வற்பானந்தத்தைவிட்டு, நித்திரைசெய்தவன் விழித்துக்கொள்வதுபோல் விழித்து, எதிரிலுள்ள ஏழையைநோக்கி உனக்கெவ்வளவுபொன் வேண்டும்? கேள் என்றான். (தரித்திரனுக்குவந்த சந்தோஷத்தின் அளவை நாம் இங்கு சொல்லாமலே இதனை வாசிப்போர் தெரிந்து கொள்வர்.) ஹே! இராஜாதிராஜப்பிரபோ! என் உயிருள்ளளவும் என் மனைவி, மக்கள், சுற்றத்தார் முதலியவர்களோடு யாதொரு குறைவின்றி உண்டுடுத்தி வரவேண்டுவதற்கு எவ்வளவு திரவியம் வேண்டுமோ அதனைத் தாங்களே கணித்துக்கொடுக்கவேண்டும். ' அரசர் பெருமானே! எனக்கும் அம்முனிகளுக்கும் தாங்கள் பொருள் கொடுத்துதவுவதனால் உம்முடைய கீர்த்தி கடல்சூழ்ந்த பூமியெங்கும் பரவி கருடன் காலிற்கட்டிய சஜ்ஜைபோலாம் என்றனன். நீ என்னுடைய கீர்த்தியைக்கேள்வியுற்று இவ்வளவுதூரம் வந்தமையால் உனக்கு ஓர் யானை சுமக்கத்தக்க பொன்னும், அம்முனிவர்களுக்கு இரண்டு யானை சுமக்கும் பொன்னும் கொடுத்தேன். இப்படிக் கொடுக்கும் வள்ளலை எங்கேனும் நீ பார்த்தாவது கேட்டாவது இருக்கிறாயா? என்றான் அரசன். அதற்கவன், இல்லை இல்லை; என்றால்தான் உங்களுடைய கீர்த்தி ஊரெங்கும் பரவப்போகிறதென்று பலவாறு அரசனைப்புகழ்ந்து மூன்று யானைகளின்மீதும் பொருளைச் சுமத்தப் பெற்றுக்கொண்டு சுகமே தன் வீடுபோய்ச் சேர்ந்தான். தரித்திரன் பெருமிதமான பொன்னைப் பெற்றுக்கொண்ட பின்னர், ஸ்ரீகிருஷ்ணபகவான் துரியோதனனுடைய படாடோபமான தர்மத்தைச் சோதிக்கவேண்டுமென்று கருதி முற்பட்டு ஒருவைதீகக் கிழப்பிராமணன் போலத் துரியோதனனிடத்திற்கு வந்தார்.

துரியோதனன்:—சுவாமி தாங்கள் யார், எங்கே வந்தீர்கள்?

வைதீகக்கிழப்பிராமணர்:—மகாராஜா, நானிருப்பது ஸ்ரீவைகுந்தம். ஒரு யாகஞ்செய்யப்போகிறேன். அதற்குவேண்டிய விறகுகள் வேண்டும். அதுபற்றியே சமுகத்திற்கு வந்தேன்.

துரியோதனன்:—இதற்குத்தானா வந்தீர். பைத்தியகாரப் பிராமணரே. நம்முடைய சமுகத்தையடைந்தும் உம்முடைய தரித்திரமொழியவில்லையே. போம் போம் வேண்டும்போது வந்து வாங்கிக்கொண்டு போம்.

வை-கீ-பி:—ஆஹா! எனக்கு வேண்டும்போது வருவேன். தடை சொல்லக்கூடாது. அதுதான் கேட்டுக்கொள்கிறேன். தடைசொன்னாலோ எனக்கு வேறு வழியில்லை. யாகமும் நின்றுவிடும். தங்கட்குப் பாவமுண்டாகும், சொன்னேன் சொன்னேன். காலம் சரியாயில்லை.

அது சரியில்லை. இது சரியில்லையென்று அப்பொழுது சொல்லக்கூடாது. முடியாவிட்டால் இப்பொழுதே சொல்லிவிடுங்கள். முடியாதது அல்லது விருப்பமில்லாத பொருளை இல்லை முடியாது, அல்லது எனக்கு விருப்பமில்லையென்று இப்பொழுது சொல்லிவிடுவது ஒரு குற்றமல்ல. அது உலகியற்கை. ஆகட்டுமென்று சொல்லி ஆசைகாட்டி அலையவைத்து நேநோட்சழித்துத் தருணத்தில் இல்லையென்று சொல்வதுதான் பிசகு. 'தருவார் தருவார்' என்று நம்பிக்கொண்டிருந்து வேலையைத் தொடங்கித் தங்களிடம் வரும்பொழுது தாங்கள் இல்லை முடியாது என்றுவிட்டால் நான் அப்பொழுது யாரைப்போய்க்கேட்கக்கூடும். பிறகு என்னசெய்வேன்! இப்பொழுதே இல்லையென்றிட்டாலும் நான் இன்னும் தங்களைப்போன்றவர் யாரிடத்தேனும் போய்ச்சேகரித்து வைத்துக்கொள்ளுவேன், என்ன சொல்லுகிறீர்கள்? திட்டமாய்ச்சொல்லுங்கள். என்மீது கோபம்வேண்டாம். உள்ளதைச்சொன்னேன். மகாராஜாவின் சித்தம் எப்படியோ அப்படி நடக்கிறேன்.

துரி—சரிதான் ஐயா போம் போம். வேண்டும்போதுவாரும். (பிராமணர் அதைக் கேட்டுக்கொண்டு போய்விட்டார்.)

* * *

“ஆண்டவன் நினைத்தால் ஆகாததுண்டா?” சிலகாலங்கழித்து சப்தமேகங்களுங்கூடி யுகாந்தகாலப்போல மழைபொழியத் தொடங்கிவிட்டன. ஒருமாதகாலம் விடாமழை. அந்த சமயத்தில் முன்சொன்ன வைதீகக்கிழப்பிராமணர் ஓடிவந்தார்.

துரி—ஐயரே நீர் யார், இப்பொழுது எங்கு வந்தீர்?

வை-கி-பி—மகாராஜா நான் முன்வந்தவனல்லவா? ஸ்ரீவைகுந்தம் என்று சொன்னேனே. யாகத்திற்கு விறகு கேட்டேனே.

துரி—யாகத்திற்காக, விறகா: நன்றாய்க்கேட்கிறீர் பைத்தியக்காரபிராமணரே, உமக்கறிவில்லையா? ஒரு மாதகாலமாய் விடாமழை பொழிகிறது. இப்பொழுது வந்து விறகு கேட்கிறீரே, எவ்வளவு விறகு வேண்டும்?

வை-கி-பி—அதிகமில்லை, நூறுவண்டி விறகுதான்வேண்டும்.

துரி—நூறு வண்டியா? அதுவும் அதிகமில்லையாம். கெட்டிக்காரன்தான் நீ. சமயம்பார்த்துக் கேட்கவந்தீரே.

வை-கி-பி—நான் சமுகத்தில் முன்னமேயே கேட்டுக்கொண்டேன்.



துரி—முன்னுங்கேட்டாய் இப்பொழுதுங் கேட்டாய். சரிதான் போம் போம். விறகு இப்பொழுது கிடைக்கமாட்டாது. இன்னொரு சமயம் பார்த்துக்கொள்ளலாம் போம். நான் பூசைக்குப்போகவேண்டும். நில்லாதீர் போம்.

வை-கி-பி—போகவா, ஐயோ! நான் இப்பொழுது என்னசெய்வேன்; யாரைப் போய்க் கேட்பேன். முன்னமேயே சொன்னேனே.

துரி—சரிதான் ஐயா போமென்றேனே; கேட்கமாட்டீரா? அடே யாரடா அங்கே; பிராமணனைப் போகச்சொல்லு. (பிராமணர் திரும்பிவிட்டார். கர்ணனிடம் போனார். அவன் அவரை வந்தனை வழிபாடுகள்செய்து,)

கர்ணன்:—சுவாமி, தாங்கள்யார் எங்கே வந்தீர்கள்? என்னவேண்டும்? வேண்டுவதுண்டானால் அது எதுவாயினும் கொடுக்க அடியேன் சித்தமாயிருக்கிறேன்.

வை-கி-பி—ஈஸ்வரானுக்கிரக முண்டாகவேண்டும். நான் ஒரு யாகஞ் செய்யத்தொடங்கினேன். 7-8-மாதத்திற்குமுன் இங்கேவந்து துரியோதன மகாராஜாவைக் கண்டு யாகத்திற்கு வேண்டிய விறகுகள் கொடுக்கவேண்டுமென்று கேட்டேன். அவரும் தருவதாக ஒப்புக்கொண்டார். தருவதாயிருந்தால் நிச்சயமாய்ச் சொல்லுங்கள் என்றும் பலவாறுயெடுத்துச்சொன்னேன். அவசியம் தருவேன் என்று சொன்னார். அவரை நம்பினேன். அவர் இப்பொழுது இப்படிச் சொல்வாரென்று தெரிந்தால் நான் இன்னும் யாரேனும் புண்ணியவான்களைப்போயேனுங்கேட்டிருப்பேன். யாகத்தை தொடங்கிவிட்டேன். வந்துகேட்டேன். மழைகாலத்தில் எப்படி விறகு கிடைக்கும், இல்லை பேர்வென்று சொல்லிவிட்டார். இன்னும் சற்றுநேரம் நான் அங்கு நின்று நியாயஞ்சொல்லப்புகுந்தால் அங்குள்ள வேலைக்காரர் என்னை அடிப்பார்கள் போலிருந்தது, தப்பி வந்துவிட்டேன். இதுதான் எனது வேண்டுகோள்-

கர்ணன்—இதுதானு, தாங்கள் கவலைபடவேண்டாம். துரியோதனன் பைத்தியக்காரன். தருமத்தின் அருமை யறியான். போகட்டும் தங்கட்கு வேண்டும் விறகுகளை நான் கொடுக்கிறேன். எவ்வளவு வேண்டும்?

வை-கி-பி—அதிகமில்லை; நூறு வண்டி விறகுதான் வேண்டும். அதுவும் இன்னும் சற்றுப் பொறுத்தென்று சொல்லவுங்கூடாது, இப்பொழுதே வேண்டும்.

கர்ணன்:—அப்படியே தருகிறேன் கொஞ்சமிருங்கள். ஆரடா அங்கே, (வேலைக்காரனைக்கூவி) நீ போய் அந்தக் கீழ அரண்மனை நர்த்தனசாலையை இடித்து அதிலுள்ள தூண், உத்திரம், போதிகை முதலிய எல்லா மரங்களையும் விறகுகளாகவெட்டி நூறுவண்டிவிறகுகள் இன்னும் 5- நிமிஷத்தில் இங்கேவரவேண்டும். சீக்கிரம் போ (என்று அனுப்பிவிட்டுச் சற்றுநேரம் ஐயரோடு பேசிக்கொண்டிருக்க விறகு வண்டிகளும் வரிசையாய் வந்துவிட்டன.)

கர்ணன்—சுவாமி, வண்டிகள் வந்துவிட்டன: தங்கள் மனம் திருப்தியாய்விட்டதா? சரி போய்வாருங்கள்.

வை-கி.பி—"தங்களுக்குச் சர்வ மங்கள முண்டாகட்டும். துரியோதனமகாராஜன் செய்த மோசத்திற்கு நான் தியங்காமலிருக்கும்படித் தாங்கள் இவ்வேளை உதவி செய்தீர்களே; கடவுள் உங்ககளுக்குக் கைவல்யமாவார்.

* * *

"கல்லெல்லா மாணிக்கக்கல்லாமா" எல்லோரும் கொடையாளியாவார்களா? தலை கீழாய்நின்றாலும் தர்மசிந்தை எல்லோருக்கும் வந்துவிடுமா? டம்பத்தைக்கருதி தருமஞ்செய்பவன் எப்படி உய்வான், புகழ், பொருள், புண்ணியமொன்றுங் கருதாது செய்யும் தருமமல்லவா சிறந்தது. டம்பங்கருதிச்செய்யும் தருமம் எப்படித் திடம்பெறும். ஆயிரத்திலொருவர் பதினாயிரத்திலொருவரே தருமசிந்தையுடையவராயிருப்பார்கள். தருமசிந்தை யுண்டாவதே அரிது. அது உண்டாயினும் டம்பமுதலியவின்றிச் சீவகாருண்ணியம் ஒன்றே கருதிச் செய்யப்படும் தருமம் அமைதல் அரிதினு மரிதாகும். தாங்கள் தருமத்திற்கென்று பிறந்திருக்கிறீர்கள்" என்று வாழ்த்திப் போய்விட்டார்.

* * *

"தாட்சணியம் தனநாசம்" என்பது பழமொழி. இப்படிக் கொடையில் மிகுந்த கர்ணன் அருச்சுனனோடு நின்று போர்செய்கிறான். கடும்போர் நடக்கிறது. கிருஷ்ணபகவானுடைய சூழ்ச்சியால் முன் தேவேந்திரன் வந்து கர்ணனுடைய கவசத்தையும் வாங்கிக்கொண்டுபோய்விட்டான். நாகபாசத்தை ஒரு முறைக்குமேல் அருச்சுனன்மேல் விடலாகாதென்று குந்தியும் முன் வரம் வாங்கிக்கொண்டுபோய்விட்டாள். நாகபாசத்தைவிட்டான். அது அர்ச்சுனன்மேல் கடுங் கோபமாய் வருகிறது.

* * *



"தலைக்கு வந்தது தலைப்பாகையோ டொழிந்தது" என்று உலகிற் சொல்லிக்கொள்வார்கள். தன்மேல்வரும் நாகபாசத்தைக்கண்டு அருச்சுனன் நடுங்கினான். கிருஷ்ணபகவான் பார்த்து அருச்சுனனைத்தேற்றித் தன் காற்பெருவிரலாற் தேரைப்பூமியில் அழுத்தினார். நாகபாசம் வரும் மேலிடத்திற்குச்சரியாய் நின்றது அருச்சுனன் தலைக்கிரீடம்! நாகபாசம் கிரீடத்தை விழுங்கிப்போய்விட்டது. அது பற்றித்தான் "தலைக்கு வந்தது தலைப்பாகையோடொழிந்தது" என்று சொல்லத்தொடங்கினார்கள்.

* * *

"தர்மம் தலைகாக்கும்." நாகபாசமும் தொலைந்தது. அருச்சுனன் சரமாரிபொழிகிறான். கிருஷ்ண சகாயமுள்ளவரையும் அருச்சுனன் முன் நிற்பவர் யார்? கர்ணன் இப்பொழுது வலியெல்லாங் குறைந்தான். கையில் வேறு தக்க அஸ்திரங்களுமில்லை. தேகமெல்லாம் அருச்சுனன் விட்ட பாணங்கள் தைத்து மெலிந்துதேர்த்தட்டில் சாய்ந்துவிட்டான். வேறு உதவியுமில்லை. இந்தச் சமயம் பார்த்துக் கர்ணன் முன் செய்த தருமமே தெய்வரூபமாக நின்று அருச்சுனன்விடும் அஸ்திரங்களை வாரிவிழுங்கத்தொடங்கிற்று. அருச்சுனன் எத்தனை அஸ்திரங்கள் எவ்வளவு காத்திரமானவைகளாய் விட்டாலும் அவை யெல்லாம் தருமதேவதை வாய்மடுக்கின்றது. அருச்சுனனுக்கு ஆச்சரியம் வந்துவிட்டது. கிருஷ்ணனைப் பார்த்து 'மைத்துனா, நான் விடும் இத்தனை அஸ்திரங்களும் இன்னவழியாய்ப் போயொழிகின்றனவென்று தெரிய வில்லையே, யென்றான். கிருஷ்ணபகவானுக்கு அந்த உண்மை தெரியாதிராதா? 'சற்றே பொறு' என்று அருச்சுனனை விட்டெழும்பி ஒரு கிழப்பிராமண வடிவங்கொண்டு கர்ணனிடம் போனார்.

* * *

"கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே" என்பது பொய்யாமா? குற்றுயிராய்த் தேர்த்தட்டில் வீழ்ந்து கிடக்கும் தருணத்திலும் கர்ணனுக்குத் தரும சிந்தை மாத்திரம் விட்டொழியவில்லை. தருமசிந்தையுள்ளார்க்கு எப்பொழுதும் தருமத்திற்கு வருபவர்களை எதிர்பார்க்கும் வழக்கமே பெரிதுமுண்டு. கிழப்பிராமணரைக் கண்டுகொண்டான். வழக்கம்போல "சுவாமிகளே! யார், எங்குவந்தது என்றுகேட்டான். கிழப்பிராமணர்: மகாராஜனே! எனக்கொன்றுவேண்டியுளது அதுபற்றி வந்தேனென்றார். அதற்குக் கர்ணன்! ஆவியோ நிலையிற் கலங்கியது, ஆக்கை அகத்ததோ புறத்ததோ அறியேன், பாவியேன்—வேண்டும் பொருளெல்லாம் நல்கும் பக்குவந்தன்னில் வந்திலையால், என்செய்வேன்? ஆயினும் இல்லையென்று சொல்லும் வழக்கம் என்னைச்சாராதிருக்கவேண்டும். நான் முன்செய்த புண்ணியங்களே என்னிடத்திப்பொழுதுள்ளன. வேண்டுமாயின் அதனைத் தருகிறேனென்று தான் செய்த புண்ணியமனைத்தையும் பிராமணருக்குத் தத்தஞ்செய்தளித்தான். இதுவன்றோ அறமென்பது! இப்பிறப்பிற் செய்த அறம் இப்பிறப்பிலேயே பயனைத்தரு மென்பதற்கு இதுவே போதிய பிரமாணமன்றோ? ஆதலின் அஞ்சாது அறஞ்செய விரும்பு.

# வேடிக்கை விநோதங்கள்.

சட்டி கழுவக்கூட யோக்கியதை இல்லாதவன் என்று தன் எஜமானனைக்குறித்துச் சில துன்மார்க்கர் தூஷணையாய்ப் பேச, அதைக்கேட்ட அவரது சேவகன் ஏன் அவருக்கு அப்படி யோக்கியதையில்லை என்று சொல்லி அவர்களுடன் சண்டை போட்டானாம்.

---

ஒரு வைதிகர் கோயிலுக்குப் போய்க்கொண்டிருக்கையில் வழியில் அவர் ஒரு ரூபாயைக்கண்டெடுத்தார். அந்த ரூபாய் நன்றாகச் சப்தம் பண்ணாததினால் அதை மாற்றுவதற்கு ஒரு அணா வட்டம் கொடுக்கவேண்டியதாய் வந்தது. பிற்பாடு மற்றொரு நாளும் மற்றொரு ரூபாய் கிடைக்க,—சீ! பாழும் ரூபாய்! போன தடவை ஒரு அணா வட்டம் கொடுத்தேன்; இந்தத்தடவையும் கொடுப்பேனா என்று சொல்லிக்கொண்டு அந்த ரூபாயை வீசி எறிந்தாராம்.

---

சென்னை பீபில்ஸ்பார்க்கிலேயுள்ள ஜெந்துக்களைப் பார்க்கப்போனபொழுது, ஒரு சிறு பையன் தன் அக்காளைப் பார்த்து, "அக்கா ஆனைக்கு ரெண்டு வால் என்னத்துக்கு?" என்று கேட்டுக் கொஞ்ச நேரமான பிறகு **"ரெண்டு பக்கத்திலே வீசிக்கொள்ளவா"** என்று சொல்லித் தானே காரணம் தெரிந்துகொண்டு சந்தோஷித்தான்.

---

தாய் எவ்வளவோ கோபத்தோடே கையில் பிரம்பு எடுத்துக்கொண்டு வந்து— "எத்தனை தரம் சொல்லியிருக்கேன்-கிருஷ்ணன் ஜோலிக்குப்போகவேண்டாமென்று எத்தனை தரம் சொல்லியிருக்கிறேன் என்று குழந்தையை அதட்ட, அதற்குக் குழந்தை "ஏழுதரம் சொன்னே" என்று பதில் கூறிற்று.

---

குழந்தை—"எவ்வளவோ ஆலோசித்துக்கொண்டு தாயினிடம் வந்து—அப்பதியா இது—இது—என் கண்ணாலத்துக்கு ஒன்னைக் கூப்பிடுவேனா பாரு" என,

தாய்—சிரித்துக் கொண்டே—"என்னைக்கூப்பிடமாட்டாயா அப்பா"

குழந்தை—கூப்பிட மாத்தேன் போ.

தாய்:— என்னத்துக்காக?

குழந்தை—உன் கண்ணாலத்துக்கு என்னை கூப்பிட்டையா என்ன?

---

ஒரு மொட்டைத் தலை விதவை க்ஷவரம் பண்ணிக்கொள்வதற்கு அம்பட்டனை எவ்வளவோ நேரம் பார்த்துக்கொண்டிருந்தும், அவன் அந்த வழியே வராததினாலும், அவனை அழைத்துக்கொண்டு வருவதற்கு வீட்டில் ஆள் ஒருவரும் இல்லாததினாலேயும், மிகவும் விசாரப்பட்டுக்கொண்டு "என் புருஷன் பிழைத்திருந்தால் அம்பட்டனை அரை நொடியில் அழைத்துக்



REGISTERED 1914 MADRAS.

கொண்டு வருவாரல்லவா" என்று சொல்லிக் கண்ணீர் சொரிந்தாள்.

---

ஒரு தையற்காரன் தனக்கு சொக்காய் தைத்துக் கொண்டிருக்கும்போது, அரை கஜம் துணியைத் திருடி எடுத்து ஒளித்து வைத்தான். அதைக் கண்டு "அப்படி ஏன் செய்தாய்?" என்று அவனது மனைவி கேட்டதற்கு அவன்—"வழக்கம் மாறாமல் இருக்கும் பொருட்டே அப்படிச் செய்தேன்" என்று பதில் கூறினான்.

---

கழுதையை ஓட்டிக் கொண்டு போகிறவனைக் குறிப்பிட்டு தன் மனைவியை நோக்கி, அவன் உங்களுக்கு உறவல்லவா என, அதற்கு மனைவி "ஆம் ஆம்! உங்கள் பக்கத்து உறவு தான்" என்று பதில் சொல்லி பார்த்தாவின் வாயை யடக்கினாள்.

---

பரமலோபி ஒருவன் நிலைக்கண்ணாடி வாங்கி, பிரதிதினமும் அதற்கு எதிரில் போஜனம் செய்ய, ஒருவர்க்கிருவர் புசிப்பதைக்கண்டு தன் உதார குணத்துக்குத் தானே சந்தோஷித்துக் கொண்டிருந்தானாம்.

---

முனிவு மூன்று பங்கு, அழுகை ஆறு பங்கு, இழவு எட்டுப்பங்கு, பொய் முப்பத்து மூன்று பங்கு,—இந்தவிதமாய்க் கலந்து கட்டி செய்தால், காணப்படுவது காதல் என்பர்.

---

யாராவது ஒரு பெரிய மனுஷ்யர் மரணமடைந்தபொழுது உடனே எல்லாரும் கூட்டங்கூடி அவரது சுகுணசம்பத்துகளையும் அவர் ஜனோபகாரமாய்ச் செய்த காரியங்களையும் புகழ்ந்து, அவர் பெயர் சாஸ்வதமாய் நிலைத்திருக்கும்படி ஏதாவது தர்மப் பிரதிஷ்டை செய்யவேண்டுமென்று நிச்சயித்தல்—முதல் காரியம். நிச்சயித்த காரியத்தை நிறைவேற்றாமல் அவரவர்கள் பாட்டில் சும்மா இருத்தல்—இரண்டாவது காரியம்.

---

உன் சிநேகிதன் எவனாகிலும் தன் மனைவியையாவது தான் அபிமானித்த அணங்கையாவது கோபத்துடன் தூஷிக்கும்பொழுது, நீயும் கூட அவனுடன் சேர்ந்து தூஷிக்காதே. ஸ்திரீயின்மேல் ஸ்திரமாய்க் கோபங்கொள்ளும் ஆடவர் லக்ஷத்தில் ஒருவர் கூட இல்லை. அப்படி இருந்திருப்பார்களானால் எத்தனையோ குடித்தனங்கள் அப்போதே முடிவுபட்டுப்போயிருக்கும்.

---

அவருக்கிவரும், இவருக்கவரும் தலையாட்டிக்கொண்டு அவர் சொல்வது இவருக்காவது இவர் சொல்வது அவருக்காவது தெரியாதிருந்தும் தெரிந்ததாக நடித்து எது சொன்னாலும், சொல்பவனுக்குக்கூடத் தெரியாத பக்ஷத்தில் அதற்கு—வேதாந்தமென்று பெயர்.

---

ஒரு ஸ்திரீ தன் பக்கம் பார்த்த மாத்திரத்திலே தன்னை இச்சித்தாள் என்று நினைத்துக்கொள்ளுதல்,—தன் வயதைக் குறைத்துச் சொல்லித் தான் சிறுவன் என்று தானே நம்புதல்,—

தனக்கு வராத வித்தை வந்ததுபோல் நடித்தல்,— தன் மனைவியின் குணங்களைத் தானே வர்ணித்து, அதனைக் கேட்டோர் நம்பினார்களென்று சந்தோஷித்தல்,—தனக்கு உபகாரம் செய்தவர்களை நிஷ்காரணமாய் மறைவில் தூஷித்தல்,—நூறு சம்பாதிக்காமலே நானூறு சம்பாதிப்பதாகச் சொல்லிக்கொண்டு, தனக்கு மேல்போன வேஷம் போடுதல்,—வருந்தி அழையாத விருந்துக்குப் போதல்,—சேற்றுக்குளத்தில் நீராடிக்கொண்டு, பன்னீர் ஸ்நானம் செய்கிறதாகச் சொல்லித் திரிதல், கழுத்தைப் பிடித்துத் தள்ளினாலும் தூணைப் பிடித்துத் தொங்குதல் இவை தற்கால நாகரீக லக்ஷணங்களாம்.

---

“ஏதாவதொரு வஸ்து இன்ன இடத்திலிருக்கிறது என்று தெரிந்திருக்கும்பொழுது, அது போயிற்றென்று சொல்லலாமா?”—என்று ஒரு மனத்தெளிவுள்ள சேவகன் தன் எஜமானனை விநயமாய்க் கேட்டான். சொல்லக்கூடாது என்று சொல்லிவிட்டு “ஏன் அப்படிக் கேட்டாய்” என்று எஜமான் கேட்க, “நேற்றையதினம் படகில் நாம் வரும்பொழுது, பாம்பனுக்குப் பத்து மைல் தூரத்தில் நமது பஞ்சபாத்திரம் கால்வாயில் விழுந்துவிட்டது” என்று சேவகன் பதில் சொன்னான்.

---

ஒரு வேலைக்காரனை வைத்தால், வேலை நன்றாய் நிறைவேறும். இருவரை வைத்தால் பாதி வேலை கூட நன்றாய் நடவாது. மூவரை வைப்பதினும் அவ்வேலையை நீயே செய்துகொள்வது உத்தமம்.

---

“அடித்தாலும் வைதாலும் சும்மாயிரு. எந்நேரமும் கண்ணீர் சொரிந்துகொண்டு அழுதுகொண்டிரு. உன் புருஷன் எவ்வளவு கெட்டிக்காரனானாலும் சரி. எவ்வளவு முன்கோபியானாலும் சரி. எவ்வளவு துன்மார்க்கனானாலும் சரி. எவ்வளவு கௌரவஸ்தனானாலும் சரி. கடைசியில் தானே வந்து உன் காலைப் பிடித்துக் கெஞ்சிக்கொள்வான். இது எனக்கு அநுபவம். அணங்கினுக்கு அழுகையைப் போன்ற ஔஷதம் யாதும் இல்லை. அழுகை ஐந்து ராஜ்யம் ஜெயிக்கும்” என்று சொல்லிச் சாமர்த்தியமுள்ள சேஷம்மாள் தன் தங்கை கிருஷ்ணம்மாளுக்குப் போதித்தாள்.

---

ஆயிரக்கணக்காகத் திரவியத்தைச் சம்பாதித்த ஒரு லாயருக்கு சந்ததியில்லாமற் போக, தன் சொத்தை பைத்தியக்காரர்கட்கும் அவிவேகிகட்கும் பங்கிட்டுக் கொடுக்கும்படி மரண சாசனம் எழுதி வைத்துவிட்டு மரணமானார். எவர்களிடமிருந்து தனக்கு அதிகமாகப் பணம் கிடைத்ததோ அவர்களுக்கே கொடுத்துவிடுதல் நியாயமென்று அந்த மரண சாசனத்தில் எழுதினாராம்.

---

மறு நாள் தூக்குத் தண்டனைக்கு ஆளாகப் போகும் இரண்டு குற்றவாளிகளில் ஒருவன் தனக்கு அஜீரணம் உண்டுபண்ணுமாகையால், சோளச் சோற்றைப் போடவேண்டாமென்று வேண்டிக்கொண்டானாம். மற்றொருவன் தனக்குச் சரீரத்தில் ஆரோக்கியம் இல்லாதபடியால், சிலநாள் வரையில் தண்டனையை நிறைவேற்றாமல் தள்ளி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டானாம்.



---

இட்டென்று மறியாத விதவை பல்நீதிகள்
இயம்பலிற் பெரியளாவள்;
ஏசலுறு மலடிக்கோ இடிகுரல் வாய்பெரியது
எத்தையும் சாதிக்குமத்
துட்டிலா வக்கீலும் ஜம்பத்திலே பெரியன்;
துத்தலுக் கில்லாதவோர்
சுத்தவேழைக் குளத் தேயுள்ள கோரிக்கை
சொல்லொணு வண்ணம்பெரிது;
சட்டம்படிக்கின்ற அற்பவித்வான் பெரியன்
சாற்றுமா க்ஷேபனைக்கே
சாந்தமறியா மூர்க்கன் கோபத்திலே பெரியன்
சாறுசெய் கோலத்தகண்
பொட்டைமாம் புரவியும் கொள்ளுண்ணலிற் பெரிது;
ஆவேறுபெரிது சதையில்;
புக்க வைணவனுமம் பெரிது; சோறளியாத
புருடன் திட்டிற்பெரியனே.

---

பத்து பெரிய மனிதர்கள் மேஜையைச்சுற்றி உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கையில் ஒருவர் வெகு விசாரமுள்ளவராகக் காணப்பட, அதற்கு மற்றொருவர் காரணங்கேட்டார். அதற்கவர் “கடைசியாக வந்தே தீர்ந்தது—ஆறு மாசமாகப் பயந்துகொண்டேயிருந்தேன். டாக்டர் சொல்லவே சொன்னார்” என்றார். என்ன ஐயா அப்படி வந்தது என்று வினவ. அதற்கு அவர் “ஐயோ பக்ஷவாதம் பிராப்தமாயிருக்கிறது. இந்நேரம் எனது இடது காலைச் சொறிந்தும் கிள்ளியும் எத்தனையோ விதமாகப் பரீக்ஷித்தும் நோவவேயில்லை. இது எப்போது தீருமோ” என்று அதிக விசாரத்துடன் அவர் கூறினார்” அப்படியானால் விசாரத்தை விட்டொழிக்கலாம். இவ்வளவுநேரம் நீங்கள் சொறிந்ததும் கிள்ளியதும் என் காலையே யொழிய உம் காலையல்ல” என்று சொல்லி அவரது சந்தேகம் தீர்த்தார்.

---

ஒரு ஹைகோர்ட் வக்கீல் காலையில் ஒரு மருந்து ஷாப்புக்குச் சென்று விரோசனத்திற்கு கொஞ்சம் எண்ணெய் வேண்டுமென்று சொல்லி, வாசனை தெரியாதிருக்க எதிலேனும் சர்ப்பத்தில் கலந்து கொடுக்கக்கேட்டுக்கொண்டார். ஷாப்புக்காரர் அவரை உபசரித்து, கொஞ்சம் சர்ப்பத்தாவது சோடா வாடராவது சாப்பிட்டுவிட்டுப்போங்கள் என்று கூற, வக்கீலும் ரோஜா சர்ப்பத் தாருங்கள் என அப்ப

டியே அந்த சர்ப்பத்தில் அவருக்குத் தெரியாதபடி சிற்றுமணக்கெண்ணெயைக் கலந்து இதோ ரோஜா சர்ப்பத் சாப்பிடுங்கள் என்று தர அவரும் பிரியத்தோடு சாப்பிட்டுவிட்டார். சற்று நேரம் பொறுத்து "எங்கே நான் கேட்ட எண்ணெய்" என்று வினவ,— இப்பொழுது கொடுத்தேனே சர்ப்பத் போலவே இருந்ததா என்று கடைக்காரர் சொல்ல, அதற்கு வக்கீல்— "ஐயோ எண்ணெயை எனது பையனுக்காகவன்றோ விரும்பிக்கேட்டேன். எனக்கா கொடுத்தீர்கள்" என்று சொல்லி வெட்கமுற்று மலப்பிரவர்த்திக்காக வக்கீல் உடனே வீட்டிற்குப் புறப்பட்டார். அன்று கச்சேரிக்குப் போகமுடியவில்லை. காரணம் கக்கூஸ் உத்தியோகத்தால் தான்!

---

போஜனத்துக்கு நல்ல வேளை எது? என்று ஒரு பெரிய வைத்தியரைக் கேட்க,— "பாக்கியவானுக்கு இஷ்டம் வந்தபோது— ஏழைக்கு சாதம் கிடைத்தபோது— என்று அவர் பதில் சொன்னார்.

---

ஒரு தாவாவில் 12-வயதுள்ள பையன் வாதித்தரப்பில் முக்கியமான சாக்ஷியாய் வர, பிரதிவாதித்தரப்பின் லாயர், அவனை எத்தனையோ குறுக்குக்கேள்விகள் கேட்டும் மடக்கமுடியாமல் கடைசியில்— "அப்பனே! இந்த சாட்சியத்தைக் குறித்து உன்னுடன் உன் தகப்பனார் நேற்றையத்தினம் பேசிக்கொண்டிருந்தாரென்று நினைக்கிறேன்" என்று தந்திரமாய்க் கேட்டார்.

பையன்:—ஆம் பேசினார்.

லாயர்:—"அப்படியானால், எவ்விதம் சாட்சி சொல்லும்படி உனக்குப் போதித்தார்?"

பையன்:—"உள்ள வாஸ்தவத்தை உரைக்கும்படி போதித்தார்" என்று சொல்ல லாயர் தலை குனிந்து உட்கார்ந்தார்.

---

ஒரு ஜட்கா வண்டிக்காரனுக்கு வாடகைக்காக ஒரு ரூபாய் கொடுக்க, அது நன்றாய் சப்திக்கவில்லையென்று, அவன் அதைத் திருப்பிக்கொடுத்து வேறொரு ரூபாய் கேட்டான். "உன் வண்டிமட்டும் வெகு வேகமாய்ப் போயிற்றோ" என்று சொல்லி, வண்டியில் போய் வந்த வாதய்யர் அந்த ரூபாயையே திரும்பவும் அவனுக்குக் கொடுத்தாராம்.

---

வக்கீலாயிருந்து அதிகப் பணம் சம்பாதித்த அப்பாசாமி ஐயர், வேதாந்தியாகித் தன் கேசுகள் அனைத்தையும் புதிதாய் ஸன்னது பெற்ற தன் தம்பியினிடம் ஒப்புவித்தார். ஒரு வருஷமான பிறகு அந்தப் புத்திமான் தன் தமயனிடம் எவ்வளவோ சந்தோஷத்துடனும் போய்,—"அண்ணா! நமது நத்தம் ஜமீன்தார் தாவாவை எப்படியோ நான் ராஜி செய்துவிட்டேன்" —என்று தான் ஏதோ ஒரு பெரிய காரியத்தைச் சாதித்ததாகச் சொல்லத் தமயன்,—'ஐயோ! அறியாப் பையா! அந்த தாவா உனக்கு ஆயுசு பரியந்தம் பென்ஷனாக விருக்குமென்று நினைத்தேனே, கெடுத்தையா காரியத்தை"—என்று விசாரத்துடன் விளம்பினார்.



---

தீய்ந்த ரொட்டி தின்று வயிற்று வலியை வரவழைத்துக்கொண்ட ஒருவன் வைத்தியரிடம் போக—அவர் அவனது கண்ணுக்கு மருந்து போட்டாராம். அது என்னவென்று கேட்க, "கண் நன்றாய் இருந்திருக்கும்பக்ஷத்தில், தீய்ந்த ரொட்டியைத் தின்றிருக்கமாட்டாய்" என்று வைத்தியர் பதில் சொன்னார்.

---

புகையிலை விலையைக்காட்டிலும் குறைவாய் புகைச் சுருட்டுகளை விற்பனை செய்துகொண்டிருக்கும் ஒரு சுருட்டு வர்த்தகன், தன்னைக்காட்டிலும் குறைத்து விற்றுக்கொண்டிருக்கும் மற்றொரு சுருட்டு வர்த்தகனைப் பார்த்து ஆச்சரியமுற்று—"ஓய்! நான் அங்கங்கே புகையிலை திருடிக் கொணர்ந்து நானே கஷ்டப்பட்டுச் சுருட்டிச் சுருட்டி இந்த விலைக்கு விற்றாலும் எனக்குக் கண்டு முதல் ஆகவில்லையே! என்னைக்காட்டிலும் நீ குறைந்த விலைக்கு விற்கிறாய். உனக்கு எப்படி கட்டி வருகிறது? "என்று கேட்டான், அதற்கு மற்றவன் சிரித்து—" நீ புகையிலை திருடுகிறாய், நானோ சுருட்டே திருடி விற்கிறேன்" என்று பதில் சொன்னான்.

---

ஒரு கடன்காரன் பாக்கிதாரனுடைய வீட்டிற்குச் சென்று பணம் கொடுக்கும்படி பலவந்தம் பண்ண, அவன் எவ்வளவோ நிதானமாய்— நாளை ஞாயிற்றுக்கிழமை சாயந்திரம் நாலு மணிக்குத் தவறாமல் வாரும். மறுபடி எப்போது வரச்சொல்லுகிறதென்பதை அப்போது சொல்லுகிறேன்" என்று சொன்னான். கடன்காரன் பெருமூச்சுவிட்டான்.

---

ஒரு திருடன் அயல் வீட்டிற்குப்போய் ஒரு சொம்பைத் திருடிக்கொண்டு தன் வீட்டிற்கு வந்து பார்க்க, அது தன் சொம்பென்று தெரியவந்தது. அப்போது அவன் உதடு கடித்து— "திருட்டுத் தடியன்; அவனைக்கொன்றாலும் பாவமில்லை" என்று அயல்வீட்டுக்காரனைத் தூஷித்தானாம்.

---

இருவருக்கென்று கொண்டுவந்த பால் அனைத்தையும் ஒருவனே குடித்து விட்டு, தன் பாகத்திற்கேற்பட்ட பால் அடியில் இருந்ததனால் முழுவதையும் தானே குடிக்கும்படி நேர்ந்ததென்று காரணம் சொன்னானாம்.

---

தூக்குத் தண்டனை அடைந்த ஒருவன், தான் தூக்குண்டு சாகும் காலத்தில் தன் குழந்தைகள் பார்த்துக் கொண்டிருப்பதற்குச் சம்மதிக்காமற் போனான். அதற்கு அவன் மனைவி— "எப்போதும் ஒரே பிடிவாதமா? குழந்தைகளுக்குச் சந்தோஷமான வேடிக்கையென்றால் சாகிற காலத்தில் கூடச் சரிப்படாமல் போகவேண்டுமோ? "என்று சொல்லி கோபித்துக்கொண்டாளாம்.

---

பால்காரன்:—அப்போ நான் என்ன செய்துகொண்டிருக்கிறேன்.

பையன்:—பாலில் ஜலம் கலக்

கிறாய்

**பால்காரன்:**—இல்லை யில்லை. ஜலத்தில் பாலைக் கலக்கிறேன். அருகே வா. வந்து பார்த்துக் கற்றுக் கொள்ளு.

---

ஒரு சீனா தேசத் திருடன் ஒரு பாதிரியின் கடியாரத்தைத் திருடிக் கொண்டு போய், சாவி கொடுக்கும் விதத்தைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு மறுநாள் அப்பாதிரியினிடமே அதைக் கொண்டுவந்தானாம்.

---

தலையணையில்லாத தாதமய்யங்கார் இரும்பு உழக்கைத் தலையணையாக வைத்துக்கொண்டு, அது மிருதுவாக இருக்கும் பொருட்டு பிடி புல்லை உழக்குக்குள் வைத்தாராம்.

---

**டாக்டர்:**—நான் கொடுத்த மருந்தால் உங்கள் குழந்தைகளுக்கு இருமல் ஏதாவது தீர்ந்ததா?

**கங்கம்மாள்:**—வெகு நன்றாய்த் தீர்ந்தது. நேற்றுக் காலை முதல் ஒரு பையனாவது இருமினால் ஆணை. அந்த மருந்தின் கசப்புக்குப் பயந்து இருமுகிறதையே விட்டுவிட்டார்கள்.

---

**ராமன்:**— காற்று அதிகமாக இருக்கிறதே. இந்தத் துறையில் படகு கவிழ்ந்து எப்போதாவது மனுஷர்கள் விழுந்து மூழ்கிப்போனது உண்டா? என்று கேட்க

**படகுக்காரன்:**—எப்பொழுதும் மூழ்கிப் போகவில்லை. விழுந்தவர்கள் மறுநாளே மேலே மிதப்பார்கள் என்றான்.

---

வேறொரு சமயத்தில் பார்வதி நாடகம் பார்க்கப் போன செங்கண் செல்லமய்யன், தனக்குக் கொஞ்ச தூரத்தில் உட்கார்ந்திருந்த ஒருவரைத் தன் சிநேகிதராகப் பாவித்துத் தன் பக்கத்திலிருந்த ஒரு பெரிய மனுஷ்யருக்குக்காட்டி—"ஐயா! தயவு செய்து அந்தக் கருப்புக்குல்லா மனுஷ்யனை உங்கள் பிரம்பால் கொஞ்சம் தட்டுங்கள்" என்று வேண்டினான். அவர் அப்படியே செய்யக் கருப்புக்குல்லா திரும்பிப்பார்த்தது. கூப்பிடச்சொன்ன செல்லமய்யன், அம்மனுஷ்யன் தன் சிநேகிதன் அல்லன் என்றுதெரிந்துகொண்டு, ஒன்றும் தெரியாதவன் போல் நாடகத்தைக் கவனத்துடன் பார்த்திருந்தான். எவ்வளவு நேரமாயும் பேசாமல் இருப்பது கண்டு—ஏன் என்னைப் பிரம்பால் தட்டினாய்?" என்று கருப்புக்குல்லா கேட்டது. அந்தப்பெரிய மனுஷ்யர், கூப்பிடச் சொன்ன செல்லமய்யனைக் கையினால் தட்டியழைத்து—"நீ கூப்பிடும்படி சொல்லவில்லையா?" என்று கேட்டார். ஆமென்று செல்லமையன் பதில் சொன்னான். "அப்படியானால் ஏன் கூப்பிடச்சொன்னாய்?" என்று அவர் வினவ,—"கூப்பிடுவீரோ மாட்டீரோ பார்க்கவேண்டுமென்று சொன்னேன்" என்று செல்லமய்யன் நிதானமாய்ப் பதில் சொன்னான்.

---

# இரண்டாம் பிரிவு.

## சிறு கதைகளின் தொகுதி.

### 1. நள மகாராஜன்.

முற்காலத்தில் இருந்த நளமகாராஜன் நவத்வீபங்களையும் அதாவது, பிலக்ஷம், குசம், சாகம், சான்மலி, புஷ்கரம், கிரவுஞ்சம், ஜம்பூ முதலிய ஒன்பது தீவுகளையும் ஆண்டு வந்தனனென்றும் அக்காலத்தில் நியாயம் தவறாது செழித்தோங்கிய தென்றும் புஸ்தகங்களிற் படித்திருக்கிறோம். ஓர் சமயம் நாரதர் இந்த நளசக்கரவர்த்தியின் நீதியைத் தாம் நேரிற் கண்டு திருப்தியடையவேண்டி ஓர் தீவுக்குள் போனார். அங்கே ஓடும் ஆற்றில் ஒரு பசு ஜலம் குடித்துக்கொண்டிருந்தது. அதே துறையில் பசுவுக்கு சமீபமாக ஓர் புலிவந்து, தண்ணீர் அருந்திய பசுவின்மேற் பாயவேண்டுமென்னும் கெட்ட எண்ணத்துடன் புருவத்தை நெறித்து வாலை முறிக்கித் தயாராயிருப்பதை நாரதர் பார்த்தார். அந்தக்ஷணமே நளசக்கரவர்த்தி அங்கே அம்பும் வில்லுடன் தோன்றி புலியின் தலையைக் கொய்தெரிந்தான். உடனே நாரதர் ஏனப்பா, இந்தப் புலியைக் கொன்றாய் என, நளன் 'ஐயா, இந்தப் புலி பசுவைக் கொல்லவேண்டுமென்ற கெட்ட எண்ணங்கொண்டது. ஆகையால் இதைக்கொன்று விட்டேன்' என்றான். நாரதர் அதிசயித்து நளன் வசிக்கும்படியான நிஷதபுரிக்கு அந்தக்ஷணமே வந்து கொலுமண்டபத்தில் நுழைந்தார். அங்கே நளசக்ரவர்த்தி சகல சிற்றரசர்களும் வித்வான்களும் சேனாதிபதிகளும் மந்திரிமார்களும் புடைசூழ சிம்மாஸனத்தில் இருந்தான். நாரதரைக் கண்டவுடன் எழுந்து ஓடிவந்து, நளன் நமஸ்காரம் செய்தான். நாரதர் 'ஓ அரசனே உன் ராஜ்யத்தில் அநியாயமே மிகுந்திருக்கிறது. ஒரு தீவில் பசுவும் புலியும் ஜலம் குடித்துக் கொண்டிருக்கையில் ஒருவன் ஓடிவந்து அக்கிரமமாக அந்தப் புலியைக்கொன்று விட்டான். அவனுக்கு நீ என்ன தண்டனை விதித்தாய்' என்றார். அதற்கு நளன் சுவாமி தங்கள் முன்னிலையில் நான் புலியின் கெட்ட எண்ணத்தைத் தெரிவித்திருக்கிறேன். அந்தப் புலி பசுவைக் கொல்ல எத்தனித்தது. ஆதலின் அதை நான் கொன்றது நியாயம்' என்றான். உடனே நாரதர் நளசக்கரவர்த்தியின் கர்மயோக மகிமையைக் கண்டு ஆச்சரியப்பட்டார்.

## 2 பட்டணத்துக்குப் பாடப்போனவர்கள்.

ஒரு ஊரில் ஒரு மனிதன் கழுதையொன்று வைத்திருந்தான். அந்தக் கழுதை தன்னால் வஞ்சனையில்லாமல் அம்மனிதனுக்கு நெடுநாள் வேலைசெய்து வந்தது. வெகுகாலம் உழைக்கவே உடம்பிலிருந்த சத்துவமெல்லாம் போய் அக்கழுதை வேலைக்கு உதவாமற் போயிற்று. அதனால் அதனுடைய யஜமானன், இனி இந்தக் கழுதையால் யாதொரு உதவியுமில்லை; இதைக் கொன்றால் இதன் தோலினாலாவது ஏதேனும் கொஞ்சம் லாபமுண்டாகுமோவென்று ஆலோசித்தான். அது தெரிந்து அந்தக் கழுதை இப்போது இங்கே நமக்கு நல்லகாலமில்லை; பட்டணத்திற்குப்போய் அங்கேதான் ஏதாவது பிழைப்பு தேடிக்கொள்ள வேண்டுமென்றெண்ணி அவ்வூரைவிட்டு ஓடிப்போயிற்று. போகும்போது பட்டணத்துப் பாடகனாகவேண்டுமென்று எண்ணிக்கொண்டே போயிற்று. சிறிது தூரம் போகையில் வழியோரத்தில் மிகவும் உழைத்து ஓய்ந்து போனதுபோல வாயைத் திறந்து கொண்டு வேட்டை நாயொன்று நின்றது; அதைக் கண்டு கழுதை அதனண்டை போய் ஏன் நீ இப்படி வாயைத்திறந்து கொண்டு பாதையோரத்தில் நிற்கிறாய் என்று கேட்டது.

அதற்கு அந்த நாய், ஐயா! நான் என் தலைவிதியை என்னென்று சொல்வேன்! இத்தனை நாள் செய்த வேலையினால் தேக வலிமையுங் குறைந்து தள்ளாத வயதும் வந்துவிடவே இன்னும் வேட்டைக்குப்போக என்னாலாகவில்லை, நான் உபயோக மற்றவனாய்ப் போனேனென்று தெரிந்து என் யஜமானன் என்னை உயிர் மாளப் புடைத்தான். அதனால் ஓடிவந்துவிட்டேன். இனி எவ்விதமாய் இரை தேடிப் பிழைப்பேனோ தெரியாதென்றது.

அதைக்கேட்டுக் கழுதை, நல்லது; நானொன்று சொல்லுகிறேன் கேட்கிறாயா? நான் பட்டணத்துப் பாடகனாக வேண்டுமென்று பட்டணத்துக்குப் போய்க்கொண்டிருக்கிறேன். என்னோடு கூடவா உனக்கு விருப்பமுண்டா? அங்கே போய் நான் வீணையெடுத்து வாசிப்பேனானால் நீ கடவாத்தியம் வாசிக்கலாம் என்று சொல்ல, நாய் சந்தோஷமாய் அதற்குச் சம்மதிக்கவே, இரண்டுமாய் கூடிப் பட்டணத்துக்குப்போயின.

அவை அங்கிருந்து போகையில் சிறிது தூரத்துக்கு அப்பால் நடுவழியில் பூனையொன்று தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தது. அதைக்கண்டு கழுதை, ஓ கிழப்பூனையே! ஏன் இப்படி நீ



தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கிறாய்? உனக்கு என்ன துன்பம் நேர்ந்ததென்று கேட்க, பூனை, ஐயா! கழுத்து முறிந்துபோன பிறகு எவனுக்குத்தான் உற்சாகமிருக்கும்? எனக்கு வயதாய்ப் போகவே என் பற்களெல்லாம் தளர்ந்து பலவீனமாய்ப்போயின. ஆகையால் எலிகளைத் துரத்திப்பிடிக்க எனக்குச் சக்தியில்லை. அடுப்பங்கரையில் குளிர் காய்ந்துகொண்டு உட்கார்ந்திருக்க என்னாலாகுமேயொழிய மற்றப்படி ஒரு காரியமும் செய்யமாளாது. அதனால் என் வீட்டுக்காரி என்னைப் புடைத்துத் தண்ணீரில் அமிழ்த்த எத்தனிக்கவே நான் ஓடிவந்து விட்டேன். இனி நான் பிழைக்கவேண்டியவழி என்னவோ தெரியவில்லை என்றது.

அதைக்கேட்டு அவை, ஆனால் நீயும் எங்களோடுகூடப் பட்டணத்துக்கு வருவாயா? உனக்குத்தான் இராத்திரிகளில் பாட்டுப்பாட நன்றாய்த் தெரியுமே. நீயும் ஒரு பட்டணத்துப் பாடகனாகலாம்; எங்களுடன் வாவென்று அழைக்க, பூனையும் அதற்கு உடன்பட்டு அவைகளோடு கூடவே போயிற்று. இம்மூன்று நாலுகாற்பிராணிகளும் அங்கிருந்து பட்டணம் நோக்கிச் சென்றன. சிறிது தூரத்தில் நடுவழியே ஒரு புலத்தில் சேவலொன்று தன் வலிமையெல்லாம் கொண்டு கூவிக்கொண்டிருந்தது. அதனண்டைபோய், நீ இப்படித் தொண்டை கிழியும்படி விடிய யாமம் முதல் கத்துகிறாயே; ஏனிப்படி வருத்தப்படுகிறாய் என்று கழுதை கேட்கக் கோழி, வருங்காலத்தின் குறி எனக்கு நன்றாய்த் தெரியுமாதலால் அதை யாவர்க்கும் தெரிவிப்பதற்காக நான் இப்படிக் கூவுவது வழக்கம். அதிருக்கட்டும்; இப்போது நாளை ஞாயிற்றுக்கிழமை யாரோ புதியதாய் விருந்தினர் வருகிறாரென்று அதற்காக இவ்வீட்டுக்காரி என்னிடத்தில் சிறிதும் தயையில்லாமல் என்னையே கொன்று விருந்தளிக்கக் காத்திருக்கிறாள். இன்று சாயங்காலம் உயிர்போகப் போகிறதேயென்று துக்கித்துக் கத்துகிறேன் என்று சொல்லிற்று.

கழுதை அதைக்கேட்டு ஆனால் நீயும் எங்களோடு கூடவே வந்துவிடு; நீ பார்வைக்கு வெகு அழகாயிருக்கிறாய்; எங்கே போனாலும் உனக்கு நல்ல பிழைப்பு கிடைக்கும்; மேலும் உன் குரல் வெகு மதுரமாயிருப்பதால் நாம் எல்லோரும் கூடிப் பாடினால் வெகு நன்றாயிருக்கும்; பட்டணத்துக்குப் பாடப்போகலாம் வாவென்று அழைக்க, அதுவும் அதற்கு உடன்படவே அவை நான்கும் ஒன்றாய்ச் சேர்ந்து புறப்பட்டுப் போயின. அவை நினைத்துப் போன பட்டணம் வெகு தூரத்திலிருந்ததனால் அன்றைய தினமே அவ்விடம் போய்ச் சேரக்கூடாமல் மாலைவேளையில் ஒரு காடு

போய்ச் சேர்ந்து அன்றிரவை அங்கேயே யொழிக்க நினைத்தன. கழுதையும் நாயும் ஒரு பெரிய மரத்தின் கீழே படுத்தன; கோழியும் பூனையும் அம்மரத்தின்மேல் ஏறிக்கொண்டன. கோழி மாத்திரம் உச்சிக் கிளையில் ஏறிக்கொண்டு அங்கேயே சுகமாயிருந்தது. தூக்கம் வருவதற்கு முன் அது நாற்புறமும் நன்றாய்ச் சுற்றிப் பார்க்க, ஒரு புறத்தில் கொஞ்சந் தூரத்துக் கப்பால் சிறிதாய் விளக்கு வெளிச்ச மொன்று தெரியக்கண்டு தன் தோழர்களைக் கூவியழைத்து, இதோ அருகாமையில் வெளிச்ச மொன்று தெரிகிறது; சமீபத்திலேயே ஒரு ஊர் இருப்பதுபோல் காண்கிறதென்று சொல்லக் கேட்டுக் கழுதை அப்படியானால் நாம் எல்லாரும் எழுந்து அங்கேயே போய்ச் சேருவோம்; இங்கே மேயப் புல்லுகூட நன்றாயிருக்கவில்லை என்று சொல்ல நாயும், ஆம்; அவ்விடத்துக்குப் போவது தான் சரி; அங்கே போனால் பசையோடு கூட எலும்புகள் விழுந்து கிடக்கும்; எடுத்து கடிக்கலாம் என்றது. அப்படியே அவை எல்லாம் எழுந்து அந்த விளக்கு வெளிச்சத்தை நோக்கிச் சென்றன. போகப்போக அவ்விடம் நெருங்கவே வெளிச்சமும் அதிக ஒளியாய்ப் பிரகாசித்தது. அவ்விடம் திருடர்களெல்லாம் இரவில் வந்து கூடும்படியாக நடுகாட்டிலே கட்டிக் கொண்டிருந்த ஒரு குடிசை; இவை நான்கும் அவ்விடம் போய்ச் சேர்ந்தபோது அவ்வீட்டுக்குள் திருடர்களெல்லாம் வந்து சேர்ந்து உணவு அருந்துகிற தருணமாயிருந்தது. இவையெல்லாம் அவ்வீட்டோரத்திலே போய் நின்ற பிறகு, அவைகளுள் கழுதை மிகவும் பெரிய பிராணியாதலால், அது சாளரத்தின் வழியாய் எட்டிப் பார்த்தது. அதைக் கண்டு கோழி, ஓ வெள்ளைக் குதிரையே உள்ளே என்னதெரிகிறது? அங்கே என்ன விசேஷம்? என்று கேட்டதற்கு,கழுதை, இங்கேயா கலங்களில் புசிக்கப் பலவித மதுரமான பண்டங்களும் பானவகைகளும் வைத்துக்கொண்டு அதைச் சுற்றிப் பல திருடர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள் என்று சொல்லக் கேட்டுக் கோழி, அப்படியா , ஆனால் இது தான் நல்ல தருணம்; நாம் எல்லாரும் உள்ளே போக வேண்டுமென்றது.

ஆம்,ஆம்' எனக்குக் கூட அதுதான் விருப்பமாய் இருக்கிறது என்று நாய் சொல்ல, அவையெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து, அந்தத் திருடர்களைத் துரத்திவிட்டுத் தாம் எல்லாம் உள்ளே புகுவதற்குத்தகுந்த உபாயம் என்னவென்று ஆலோசிக்கலாயிற்று. சிறிதுநேரம் ஆலோசித்துக் கடைசியில் ஒருவிதமாய்த் தீர்மானம்செய்தன. அதன்படியே கழுதை தன் முன்னங்கால் இரண்டையும் ஜன்னலின்மேல் தூக்கிவைத்துக் கொண்டு கீழேநிற்க, நாய் அதன் முதுகில் ஏறிக்கொண்டது. பூனை நாயின்மேல் ஏறிக்கொள்ள, கடைசியில் கோழி பறந்தெழும்பிப் பூனையின்மேல் உட்



OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 5 JAN 1914 MADRAS.

கார்ந்தது. இவ்வளவானபிறகு அவைகளின் சங்கேதப்படியே எல்லாம் ஒன்றாய்ச்சேர்ந்து பாட்டுப்பாட ஆரம்பித்தன. கழுதை ஊளையிட்டது. நாய் குரைத்தது; பூனை உறுமிற்று; கோழிகூவிற்று. இவை ஒவ்வொன்றும் அததற்குள்ள பலத்தையெல்லாங் கொண்டு அந்தச் சாளரங்கூடப் பிளந்துபோம்படி உரத்துக்கூவின. ஒருநாளும் இல்லாத இந்தப் புதுமையான கூச்சலைக்கேட்டுத் திருடர்களெல்லாரும் மிகவும் பயந்து திகிலடைந்து உடனே எழுந்து. பூதமோ பேயோ பிசாசோ வந்திருக்கிறதென்று மனநடுங்கி ஓடிப்போனார்கள். சுவரோரத்தில் வந்து நின்றிருந்த நான்கு கூட்டாளிகளும் உடனே உள்ளே நுழைந்து கலங்களில் வைத்திருந்த உணவுகளையெல்லாம் ஒருமாதப் பட்டினி கிடந்தவைபோல் அதிக ஆவலோடு ஒரு நிமிஷத்தில் தின்று விட்டன.

அவை நான்கும் நன்றாய்த் தின்றானபிறகு தந்தமக்கேற்ற விடத்தில் படுத்துக்கொண்டன ;முற்றத்தில் பரப்பியிருந்த வைக்கோலில் கழுதை படுத்துக்கொண்டது; நாய் ஒரு கதவின்கீழே சுருட்டிக்கொண்டது. கோழி உயர எழும்பி ஒரு தூலத்தின் மேல் மடங்கிற்று. வழி நடந்துவந்த அலுப்பினால் எல்லாம் படுத்தவுடனே அயர்ந்து தூங்கிப்போயின; உடனே விளக்கும் தானே நின்றுபோயிற்று.

இராத்திரி யாவும் மெய்மறந்து தூங்குகிறவேளையில், ஓடிப்போய் வெகுதூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த திருடர்கள் தங்கள் வீட்டில். விளக்குவெளிச்சம் நின்றுபோயிருப்பதையும், ஒரு சத்தமுமின்றி அமைதியாயிருப்பதையும் கண்டார்கள். அது தெரிந்து அவர்களுடைய தலைவன், நாம் ஏதோ ஒரு கூச்சலைக்கேட்டு இப்படித் திகில் பிடித்திருக்கலாகாது என்று சொல்லி மிக்க சமர்த்தனான ஒரு வீரனை அழைத்து, நீ போய் நமது வீட்டில் நடக்கிற செய்தியென்ன பார்த்துவாவென்று சொல்லியனுப்பினான். அப்படியே ஆகட்டுமென்று அவன் புறப்பட்டுத் தங்கள் வீட்டிற்குப்போய் கம்மென்று ஓசை யடங்கியிருக்கக்கண்டு உள்ளே புகுந்து, வெளிச்சமில்லாமையால் விளக்கேற்றுவதற்காகச் சரேலென்று அடுப்பண்டைபோய், அங்கே பளபளவென்று பிரகாசித்துக்கொண்டிருந்த பூனையின்கண்ணைக் கொள்ளிக்கட்டையென்றெண்ணி அதன் மேல் ஒரு கந்தகவர்த்தியைக் கொண்டுவைத்து விளக்கேற்றப்பார்த்தான்.. குச்சைக்கொண்டு அவன் தன் கண்ணைக் குத்துவதாக நினைத்துப் பூனை உடனே அவன் மேற்பாய்ந்து பற்களாலும் நகங்களாலும் அவன் உடலை நன்றாய்ப் பீறி ரத்தம் பெருகச்செய்தது. அதைக்கண்டு அவன், ஐயோ! இதென்னவென்று பயந்து புறக்கடைவழியாய் ஓடிப்போகப்பார்த்தான்.

அங்கேபோய் கதவைத்திறக்கையில் அதன் கீழே படுத்திருந்த நாய் எழுந்து அவன்மேல் தாவிக் காலை நன்றாய்க் கவ்விப்பிடுங்கிற்று. ஓகோ! இதென்ன சங்கடமென்று முற்றத்திலிருந்த வைக்கோலின்மேற் குதிக்க அங்கே படுத்திருந்த கழுதை பின்னங்காலால் விண் விண்ணென்று நான்கு உதை உதைத்தது. இவ்வளவு மாத்திரமேயோ? இந்த ஆரவாரத்தினால் உத்திரத்தின்மேல் படுத்திருந்த கோழி விழித்துக்கொண்டு சிறகடித்துக்கூவ ஆரம்பித்தது.

இவைகளையெல்லாம் பார்க்கவே அந்தத் திருடன், இதென்ன விபரீதம்! இப்படிப்பட்ட சங்கடத்தை நான் ஒருநாளும் அனுபவித்ததில்லையேயென்று மனம் பதைக்கப்பதைக்க ஓரே ஓட்டமாய் ஓடித் தன் எஜமானனிடம் சேர்ந்தான். அவனைப்பார்த்து அந்த எஜமானன் வீட்டில் நடக்கிற விசேஷம் என்னவென்று கேட்க, அவன் ஐயா! அதை நான் என்னென்று சொல்வேன்! நமது வீட்டில் அநேகம் பேய்கள்வந்து குடிகொண்டிருக்கின்றன. ஒரு புறத்தில் ஒன்று வாளாயுதத்தைத்கண்டு என் உடம்பு முழுதும் பீறிற்று; முகத்தில் எலும்புகூட முறிந்துபோயிற்று. கதவண்டையொன்று கத்தியும் கையுமாய் உட்கார்ந்திருக்கிறது. அங்கே போனவுடனே அது என் காலைவெட்ட பார்த்தது. அதினின்று மெதுவாய்த் தப்பித்துக்கொண்டு கொஞ்சம் அப்பால் ஒதுங்கினேன்; நடுவீட்டில் பெரும்பூதம் ஒன்று கையில் இருப்புத்தடியை வைத்துக் கொண்டு இடிப்பொடியப் புடைத்தது. இவை மாத்திரமேயல்ல; இரப்பில் நியாயாதிபதி ஒருவன் உட்கார்ந்திருக்கிறான். அவன் என்னைப் பார்த்தவுடனே, பிடித்துவா இங்கே அந்தத் திருடனை; பிடித்துவா என்றது. அது தெரிந்து நான் திரும்பிப்பாராமல் ஒரு குதியாய்க் குதித்து ஓடிவந்துவிட்டேன் என்றான்.

அந்த அதிசயமான நடத்தையைக் கேட்டுத் திருடர்கள் எல்லாரும் பயந்தாலும், பெருத்த அபாயமொன்றுமில்லாமல் இவ்வளவோடு தப்பினோமேயென்று சந்தோஷமடைந்து அப்படியே நடுக்காட்டில் ஓடிப்போனார்கள். மறுபடி அவ்வீட்டுக்குத் திரும்பவேயில்லை. பட்டணத்துப் பாடகர்கள் பெற்ற பாக்கியத்தைப் பாருங்கள்! அன்றுமுதல் கழுதையும் நாயும் பூனையும் கோழியும் ஆகிய நான்கும் நாளுக்குநாள் தங்களால்கூடிய வரையில் உழைத்து வேலைசெய்து வெகு க்ஷேமமாய் அங்கேயே குடிகொண்டிருந்தன.

## 3. கதவு சாத்து.

பெரியோர்கள் எக்காலத்திலும் எவ்விடத்திலும் எந்தக்காரியஞ் செய்தாலும், எந்தப்பேச்சுபேசினாலும் அவ்வப்போது வாய்க்கிறதருணங்களில் சிறுவர்களுக்குச் சிற்சிலவாய் இயன்றமட்டும் நீதிகளைக் கற்பிப்பதிலேயே கண்ணாயிருப்பார்கள். இப்படிச்செய்து சிறுவர்களைக் காக்காத பெரியோர்கள் அவர்களுக்குப் பகைவர்களேயன்றி வேறல்ல. பிள்ளைகளுக்கு எளிதிலேயே நீதி கற்பிக்கும் விதம் இத்தன்மையதென்று அடியில் குறிக்கிற சம்பாஷணையால் தெளிவாய்த் தெரியவரும்.

மாரிகாலத்தில் ஒருநாள் ஒரு கிழவன் தன்வீட்டு நடைத்திண்ணையில் உட்கார்ந்திருந்தான். அப்போது சில்லென்று குளிர்ந்த கீழ்காற்று வீசவே, அவன் அந்தக் குளிரைத் தாளமாட்டாமல் அண்டையிலிருந்த தன் பேரப்பிள்ளையை அழைத்து: குழந்தாய்! கதவைச்சாத்தென்றான். அம்மகன் அதைக் கவனியாமல் விளையாட்டுத்தனத்தால் பராக்காயிருக்கவே பாட்டன் மறுபடியும் பேரனைக்கூவி. அப்பா! கதவைமூடு என்றான். அச்சிறுவன் அதையும் கவனியாமல் எங்கேயோ ஒரு மூலையைப்பார்த்து நிற்கவே, கிழவன் அவனைக் கொஞ்சம் அதட்டியழைத்து: அடா! கதவை மூடென்று நான் பலதரம் சொல்லுகிறேன்; நீ எங்கேயோ பார்த்து நிற்கிறையே; எனக்குக் குளிரால் உடம்பு நடுங்குகிறதே என்றான். அதன்மேல் நடந்த சம்பாஷணையாவது:

பேரன்:— ஐயா! நான் விளையாட்டுப் புத்தியால் தங்கள் பேச்சைக் கவனியாமற் போனது பிசகுதான். இப்போது மாத்திரம் பொறுத்துக் கொள்ளுங்கள்; இனிச் சரியாய் நடக்கிறேன்.

பாட்டன்:—குழந்தாய்! நான் இப்போது என்னவோ சொல்லுகிறேனென்று என்னிடத்தில் நீ கோபங்கொள்ளாதே. இப்போது நான் சொன்னபேச்சு உனக்கு ஒரு நற்புத்தி போதிக்கின்றது. நீ உன் வாழ்நாளில் பிறருடைய சவுக்கியத்தையே பெரிதாய்ப் பார்த்து வரும்படியாகக் கற்கவேண்டும். இதுமாத்திரமேயல்ல, இந்தச் சிறு விஷயத்திற்குச் சொன்ன செய்தி இன்னும் பெருத்த பல விஷயங்களுக்குக்கூட மிகவும் உபயோகமாகும். இந்த வீட்டுவாயிற் கதவு மாத்திரமேயல்லாமல், நீ பத்திரமாய்த் திறவாமல் மூடிவைக்கவேண்டிய வேறு சில கதவுகளுமுண்டு.

பே.— அவை எவ்வகைக் கதவுகள் ஐயா?

பா.— ஒருநிமிஷம் இங்கே உட்கார்; அவற்றுள் சிலவற்றை உனக்கு எடுத்துச்சொல்லுகிறேன்.

"திட்டு முதலிய கெட்டபேச்சுகளும், துஷ்டச் சிறுவர்களுடைய துராலோசனைகளும் உள்ளே வந்து புகாதபடி உன் காதுகளின் கதவைக் கவனமாய் மூடிவைக்கவேண்டும்; இல்லாவிட்டால் நீ சுகப்படமாட்டாய். எப்போதாவது ஒருதடவை கொஞ்சம் அஜாக்கிறதையாய் உன் காதில் அவற்றிற்கு இடங்கொடுப்பாயானால் பின்பு அவை ஒருபோதும் வெளியே போகாமல் இன்னும் தன் நேசர்களையும் அநேகமாய் உள்ளே வரவழைத்துக்கொள்ளும்.

"இப்படியே உன் கண்களின் கதவுகளைப்பற்றியும் நீ கொஞ்சம் கவனமாயிருக்கவேண்டும். கெட்ட விஷயங்கள் வீண்கதைகள் முதலியவை அடங்கிய புத்தகங்களைப் பார்க்கக்கூடாது. அவைகளைப் பார்க்கத்தலைப்பட்டால் அவசியமான படிப்பில் ஆதரவு குறைந்து கடைசியில் மூடனாய் ஒன்றுக்கும் உதவாமற்போவாய். மேலும் கெட்ட காட்சிகளைப் பாராமல் கண்ணை மூடிக்கொள்ளவேண்டும்; இல்லாவிடில் விவேகமற்று அழிந்து போவாய். இவை மாத்திரமேயன்று; விற்பனைக்காகக் கடைத்தெருவில் பரப்பிவைத்திருக்கும் அற்புதப்பொருள்களிடத்தில் அதிகமாய்க் கண்ணைத் திறந்து விடக்கூடாது. அப்படிச்செய்தால் கையில் ஒருதுட்டு சேர்க்க வேண்டியவழியும் இன்னதென்று தெரியாமற்போம்; பஞ்சை பரதேசிகளுக்குப் பொருள்கொடுத்து உதவுவதற்கும் கையில் காசு கிடைக்காது.

"முக்கியமாய் உன் உதடுகளாகிய கதவுகளைப்பற்றி நீ மிகக் கவனமாயிருக்கவேண்டும்; ஏனெனில் அந்தக்கதவுகள், காது கண் இவற்றின் கதவுகளை உறுத்தியடித்துத்திறக்கச்செய்வதான பல கெட்ட விஷயங்களை அதிகமாய் உபயோகிக்கின்ற ஓரிடத்தைப் பத்திரமாய்க் காக்கின்றன. அந்தக் கதவுகள் தமக்குத்தாமே வெகு சுலபத்தில் திறந்துகொள்ளுந் தன்மையுடையவை. ஆதலின் நாமும் அந்த வாயிலைப் பத்திரமாய்க் காத்துக் கொண்டிராமல் கொஞ்சம் உபேட்சைசெய்துவிட்டால்,

"தீயினாற் சுட்டபுண்ணுள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்டவடு"

என்கிறபடி பலபேர்க்கு மனவருத்தம் உண்டாக்கத்தக்கவையும், தனக்கே கெடுதிவிளைக்கத்தக்கவையுமான பல துர்ப்பாஷைகள் தாமே வெளிப்படும். ஆதலால் நீ உனக்குவேண்டிய அறிவாவது, அல்லது நன்றாய்ப் பேசுவதற்கு வேண்டிய பல விஷயங்களாவது பூர்த்தியாயத் தேடிக்கொள்கிற வரையில் நீ அதைத் திறவாமல் மூடிவைப்பாயாகில் மிக்க நன்மையடைவாய்.

ஸ்ரீ

# ஆனந்த சந்திர கல்பகம்

## இரண்டாம் வால்யம்.

உலகத்திலே பெரும் பிரக்யாதியுமாக வாழ நினைத்த 'நாகரீகன்' என்போன், தற்கால ஆடம்பரங்களின் ரகசியங்களை அறிந்துகொண்ட விநோதம்.

### கதாசாரம்.

"உலகிலே மிகுபிரக் கியாதியுடன் வாழவா
  யூறுவோர் வெகுபேர்கள்தாம்;
உற்றிடும் பிரசித்தி யாற்செலவு மிகுந்திட
  வுறுதொல்லை யிவர்களுணரார்;
நலமிகுங் கிராமத்திற் சுகிர்தநிலை தன்னிலே
  நல்வாழ்வு வாழ்ந்தவொருவன்
நாளுமே புதுநாக ரீகமோ கத்தினால்
  நலமில் வீண்டம்பத்தினால்
பலருமே தற்புகழ வேண்டுமென் றும்மிகு
  கவுரவ மமைந்தவான
பட்டங்கள் பெறவேண்டு மென்றுமே பொருளெலாம்
  பாராது செலவுசெய்து
நிலமதனில் நகரவா சத்தினை விரும்பியே
  நிலையிலா ஆரவாரம்
நிகழ்த்தினான்; உலகியலும் கீர்த்திநிலை யாமையுமு
  ணெஞ்சிலுண ராமையாலே."

### அத்தியாயம். 1.

#### "தந்தி எதற்காக?"

என்ன, வாமன சாஸ்திரியாரே! உமது அழகுள்ள விலாஸவதியை எனக்கு விவாகம் செய்து கொடுக்கத் தீர்மானித்துவிட்டீரா? ஏனென்றால், என் வீட்டு வேலையைக் கவனிக்க ஒரு

தகுந்த மனைவியில்லாமல் எனக்கு மிகவும் கஷ்டமாயிருக்கிறது; என்ன! உண்டா இல்லையா? நான் வீணே காக்கமுடியாது. தக்க மறுமொழி நீர் எனக்குக் கொடுக்காவிட்டால், வேறிடத்தில் வேண்டிய ஏற்பாடு செய்வதற்கு நான் இன்றிரவு தானே வசந்திபுரம் போகிறேன்" என்று சீதாநகரம் என்னும் சிறிய கிராமத்தில், பெரிய தெருவில் ஒரு வீட்டின் வாயிலில் ஒருவர், திண்ணையிலுட்கார்ந்துகொண்டிருந்த வீட்டுக்காரரான வாமன சாஸ்திரியாரைக் கேட்டார். அவர் முகம் மிகவும் ஸந்தோஷத்தால் பிரகாசித்துக்கொண்டிருந்தது. வெள்ளி நாணயங்களும் நோட்டுகளும் ஸப்தித்துக்கொண்டிருக்கிற ஒரு தோல்பை அவர் கையிலிருந்தது. அவர் கிராமாதிகாரி யாதலின் செல்வாக்குக்குக் கேட்பானேன்?

இந்த ஸம்பாஷணையின்போது இரவு சுமார் எட்டுமணியிருக்கும். வீட்டிற்குள் எப்படியிருக்கிறது; கொஞ்சம் எட்டிப்பார்ப்போம். வாமன சாஸ்திரியாரின் மனைவி சுசீலை சமையல் செய்துகொண்டிருக்கிறாள். அவளுடைய ஒரே அருமைக் குமாரத்தியான விலாஸவதி அவள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு பேசியபடியும் நாட்டுப்புறத்துப் பாட்டுகளைப் பாடியபடியும் இருக்கிறாள். இப்போது திடீரெனப் பாடுவதைவிட்டுச் சமையல் வேலையில் தன் தாய்க்கு உதவி செய்ய எழுந்திருக்கிறாள். கிராம தேவதையின் கோயிலிலிருந்து அப்போதுதான் திரும்பி வந்த வாமன சாஸ்திரியார் சந்தியாவந்தனம் செய்யும் பொருட்டு, அர்க்கியத்திற்காகத் தீர்த்தம் நிறைத்து வைத்த பித்தளைப் பாத்திரங்கள் முற்றத்தில் இருக்கின்றன. கோயில் மணியோசை நமது காதுகளிலும் அங்கே வாசற்றிண்ணையில் பேசிக் கொண்டிருக்கும் அவ்விருவரின் காதுகளிலும் சகுனமுண்டாகும்படி கணீரென்று கேட்கிறது.

"எல்லாம் சரிதான்! ஆனால் நீர் இவ்வளவு அவசரப்படக் கூடாது ஒரு அற்ப விஷயத்துக்காக அந்த மூடாத்மாவாகிய லக்ஷ்மண சாஸ்திரியாரால் நான் மிகவும் வருந்துகின்றேன். அவருடைய குமாரன் லண்டனுக்குப் போய்ப் படித்துத் திரும்பியதில் மது மாம்ஸப் பிரியனானான். அதற்காக ஜாதிப்பிரஷ்டம் செய்ய வேண்டுமென்று நான் சொன்னதற்கு, என்மீது மானநஷ்ட வியாஜ்யம் கொடுத்து, கேஸும் அவன் சார்பாகவே முடிந்துவிட்டது. அந்த வகையில் அவனுக்கு நான் 2500 ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கின்றது. இந்தக் காலத்தில் பணப் புஷ்டியுள்ளவர்களிடத்தில் ஆசார விமரிசைகளைப் பற்றிப் பிரஸ்தாபித்தால், என்னைப் போலத்தான் திண்டாடும்படியாகி விடுகிறது. இந்த என்னுடைய நிர்ப்பந்தமும் உமக்குத் தெரியும். நீர் 4000 ரூபாய் எனக்குக் கொடுத்தாலொழிய என் செல்வப்புதல்வியை உமக்கு மணம் செய்விக்க நான் சம்மதப்படமாட்டேன். நிச்சயமாய், பாவம்! அவள் வீணாகப் பிடிக்கவில்லை அவளுக்கு வயது பன்னிரண்டு ஆகிவிட்டது. இந்த வருஷம் அவளுக்கு விவாகம் செய்யாவிட்டால் தலைகினைப்புவதற்கில்லை. இரும்! இரும்! என்ன அது? அது கோயில் மணியோசை



யல்லவா? நல்ல சகுனந்தான். பாவம் வீட்டிலே எனக்காகக் காத்துக்கொண்டிருப்பார்கள். என்ன சொல்கிறீர்? ஒரு காசு குறைந்தாலும் சரிப்படாது போம் போம்" என்று சொல்லிக்கொண்டே வாமன சாஸ்திரியார் எழுந்திருந்து வீட்டிற்குள்ளே நுழையப்போனார். "போகாதேயும்! போகாதேயும், இரும் ஐயா;" என்று சொல்லி வாமன சாஸ்திரியாரை மறுபடியும் முன்போலவே இருக்கச்செய்து, "என்ன சாஸ்திரீ! நீர் மிகவும் பேராசை பிடித்தவராயிருக்கிறீர். எப்படியானாலும் சரிதான்; இதோ பணம், ரூபாய் 4000 பெற்றுக்கொள்ளும்; நாளை நான் திரும்பிவரும் பொழுது முகூர்த்தம் பார்ப்பதற்காக பஞ்சாங்கமும் கையுமாக இரும், நான் இதோ போகிறேன்; எல்லா விஷயத்தையும் யோசித்துப் பார்த்தால் காரியம் நிச்சயந்தானே! சாஸ்திரியாரே! நான் போகிறேன், நீர் சந்தோஷமாக இரும். எனக்குக் கொடுப்பதாக நிச்சயம் செய்திருக்கிற பெண் விலாஸவதி க்ஷேமமாயிருக்கட்டும்" என்று சொல்லிக்கொண்டு, முதலில் பேசியவர் கோயிலுக்கு மற்றொரு பக்கத்தில் ஒரு வீதியிலிருந்த தன் வீட்டுக்குப் போய்விட்டார்.

இப்படியாக வியாபாரம் பேசின தகப்பன், "இந்த கிராமாதிகாரியாகிய மகா பாபி சங்கர சாஸ்திரிக்கு என் பெண்ணை விற்கும்படி செய்தது என் வறுமையல்லவா? நான் யாதொரு காரணமுமில்லாமல் மான நஷ்ட பரிகாரத்திற்கென்று 2500 ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறது. அதற்காகவே சங்கர சாஸ்திரிக்குத் தர யோசிக்கிறேன். ஆனால் என் மனைவியோ, தனது தம்பி சாமிநாதனுக்கு விலாஸவதியை மணம் செய்யும்படி பிடிவாதம் செய்கிறாள்; ஐயோ! எனக்கு இன்னது செய்வதென்று தோன்றவில்லையே; என்ன வேளையிற் பிறந்தேனோ நான்?" என்று தன்னைத் தானே நிந்தித்துக் கொண்டு வீட்டிற்குள் போக, வழக்கம் போல் அவர் புதல்வி "அப்பா! ஏன் பிரதி தினமும் நாழிகை கழித்து வருகின்றீர்? இனிமேல் இப்படிச் செய்வதாயிருந்தால் உங்களுக்காக அம்மாள் கண்விழித்துக் காத்துப் பழயபடி பாயும்படுக்கையுமாக இருக்கநேரும்" என்று சொன்னாள். "கண்ணே, விலாஸம்! இனிமேல் நான் இப்படிச் செய்யவில்லை. இன்றைக்கு காளஹஸ்தி ஜமீன்தார் தன்னுடைய குமாஸ்தாவை யனுப்பி சுவாமி அம்மனுக்கு அபிஷேகம் செய்வித்தார். அதற்காக நானும் இருந்து அப்பொழுது வேத அத்தியயனம் செய்துகொண்டிருந்தேன்" என்று சாஸ்திரியார் சொன்னார். "கோயிலிலிருந்து ஏதாவது பிரஸாதம் கொண்டு வந்தீர்களா?" என்றாள் குழந்தை. "ஆகா! இன்னும் ஒன்றுகூடக் கொண்டு வந்தேன்" என்று சொல்லிக் கொண்டே தகப்பனார் ஒரு சிறு மூட்டையை அவள் கையில் கொடுத்து, "இன்றையதினம் உனக்கு நல்ல அதிர்ஷ்டம்; உன்னுடைய விவாகம் சீக்கிரத்தில் நடக்க வேண்டியதற்காக ஏற்பாடு செய்திருக்கிறேன். விலாஸம்! என்ன, இது உனக்கு நல்ல சமாசாரமல்லவா" என்றார் தகப்பனார். இந்தத் திடீரென்ற சமாசாரத்தைக் கேட்டவுடன் அவள் அசட்டையாய் மறுமொழி கூறினாள்.

"எப்பொழுதும் உமக்குப் பரிஹாஸந்தான் அப்பா! எனக்குப் பசியாயிருக்கிறது. சந்தியா வந்தனத்தைச் சீக்கிரத்திற் செய்து விட்டு போஜனம் செய்ய வாரும்" என்று சொல்லிக்கொண்டு பரிமாறுவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யும் பொருட்டு கவலையோடு போய்விட்டாள். இந்த விலாஸவதி மிகுந்த லாவண்யமும் நாகரிகமும் கொண்டவள். அவள் ஆங்கிலத்தில் அத்துணைத் தேர்ச்சி பெறவில்லை. என்றாலும் அவள் தமிழ், தெலுங்கு, ஸம்ஸ்கிருதம் இந்த பாஷைகளில் மிகவும் பயிற்சியடைந்தவளாகி மைசூர் செலுங்கு லோயர் சகண்டரி பரீக்ஷையில் வெகுமானம் பெற்றவள். அவளுக்கு இப்பொழுது விவாகம் செய்யும்படியான வயது வந்துவிட்டது. அவளுக்குத் தகுந்த வரன் எங்கும் கிடைக்கவில்லை. அவள் பிதா வாமன சாஸ்திரி, தன்னாலியன்றமட்டும் எங்கும் தேடிப் பார்த்தார். ஆனால் மருமகன் ஒரு பி. ஏ. யாகவாவது, அல்லது பி. ஏ; பி. எல். ஆகவாவது இருக்க வேண்டுமென்பது விலாஸவதியினுடையவும் அவள் தாயினுடையவும் முழுக்கருத்தாக விருந்தது. அவளை மணக்கும் பொருட்டு வந்தவர்களில் ஒருவரையாவது குறிப்பிட நம்முடைய சாஸ்திரியார் எவ்வளவு முயன்றும் முடியவில்லை. ஏனென்றால், ஒவ்வொருவருடைய ஜாதகரீதியும் நம்முடைய விலாஸவதியின் க்ஷேமத்திற்கு மாறாகவே இருந்தது. ஆகையால் எல்லா வரன்களையும் தட்டி விடும்படியாகி விட்டதில் அவருக்கு அவநம்பிக்கையும் அதைரியமும் உண்டாயின. ஸ்திதி பதி முதலியவைகளைப் பற்றி இனி கவனிக்காமல், யாராயிரும் ஒருவரைப் பார்ப்பதாய் அவர் தீர்மானித்துக் கொண்டார். ஆனால் புதிய தடங்கல் ஒன்று ஏற்பட்டது. தன்னுடைய யோக்கியதைக்குத் தக்கபடி விவாகத்தை விமரிசையாய் நடத்தப் போதுமான பணம் தன்னிடம் இல்லை. ஏனெனில், தீக்குணக் களஞ்சியமாகிய லக்ஷ்மண சாஸ்திரியாரால் மிகவும் உபத்திரவப் படுத்தப்படவும், நியாயஸ்தலத்திற்கு இழுக்கப்படவுமாகி அதனால் மிகுந்த தரித்திர ஸ்திதியில் இருந்தார். தனக்கு வேண்டிய பணத்தை யார் கொடுப்பார்கள்? ஒரு தரித்திரனை யார் நம்புவார்கள்? மிகவும் செல்வம்படைத்த ஒரு தனவானைத் தவிர, வேறொருவராலும் அவருக்குப் பயனில்லை. இப்படிப்பட்டவர் அந்தக் கிராமத்திலேயே இருந்தார். அவர்தான் எல்லோராலும் பணத்திற் பெரியவரென்று மிகுதியும் விரும்பப்பட்ட கிராமமுன்சீப்பாகிய சங்கர சாஸ்திரி. அவருடைய வீட்டிற்கு வாமன சாஸ்திரி நினைத்தபோது போகலாம். அவரிடமிருந்து கடன் வாங்க நினைத்து வாமன சாஸ்திரி பிரஸ்தாபிக்கும் போதெல்லாம், சங்கர சாஸ்திரியினுடைய கண்கள் சந்தோஷத்தினால் விகசிக்கும். தான் நெடுநாளாய் நினைத்திருந்த எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளும்படியான தருணம் வாய்த்ததேயென்று அவர் ஆநந்தித்தார். அவருடைய முதல் மனைவி அவரது கொடுமையைப் பொறுக்கமுடியாமல் தற்கொலைசெய்து கொண்டோ, எப்படியோ இறந்துபோய்விட்டாள். இது கிராமமுற்றிலுமே யறிந்திருந்த பரம ரகசியம்! ஆனதால் தான் சங்கர சாஸ்திரிக்கு யாரும் பெண்ணைத்தர மன மொப்பவில்லை. இப்படிப்பட்ட



குணவானுடன் வாமன சாஸ்திரிகள் சம்பந்தம் செய்துகொள்ள முயன்றார். முன்சீப்பினுடைய வீட்டிற்கு இந்த உட்கருத்துடன் பிரதிநித்யமும் சென்று வருவதாக இருந்தார். பணம் பாதாளமட்டும் பாயுமல்லவோ?

* * *

இக்கதாரம்பத்திலே தெரிவித்த இவ்விருவரது சம்பாஷணைகளும் நடப்பதற்குச் சிலநாள் முந்தியிருக்கும். அன்றைக்கு வெகு மனோரம்யமான சந்திரிகை. சந்திரன் தன்னுடைய பிரகாஸமான துல்லிய நிலவை எரித்துக் கொண்டு, மேகங்களினிடையே மறைவதும் பிரகாஸிப்பதுமா யிருந்தான். தமது முன்னோர்கள் பந்து மித்திரர்களுடன் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பதற்கென்று போட்டிருந்த தெருத்திண்ணையில் வாமன சாஸ்திரி குளிர்ந்த இளந்தென்றல் காற்றை அநுபவித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தபொழுது, சங்கர சாஸ்திரியும் அங்கு வந்து நமஸ்காரம் செய்து எதிர் திண்ணையில் அமர்ந்தார்.

"நல்லது சாஸ்திரியாரே! க்ஷேமமா? நீர் என்னிடம் கடனாகப் பணம் கேட்டீரே, அதை எம்மட்டில் வைத்திருக்கிறீர்? உறக்கப் பேசாதேயும்; உம்மை நான் ஒரு விஷயம் கேட்கவேண்டும். 12, 13, வயதில் உமக்கு ஒருபெண்ணில்லையா? நீர் எப்பொழுது அந்தப் பெண்ணுக்கு விவாகம் செய்து வைக்கப்போகிறீர்? மணாளன் பார்த்தாய்விட்டதா? சீக்கிரமாகவே செய்துவிடும்; இல்லாவிட்டால் நீர் அநியாயமாகப் போய்விடுவீர். சங்கராச்சாரியார் ஒப்புக்கொள்ளமாட்டார்! நானே முதலில் ஒப்புக்கொள்ளமாட்டேன். பின்னால் வரும் தண்டனையைப் பற்றி முந்தியே ஜாக்கிரதையாயிரும்" என்றார் சங்கரசாஸ்திரி. "என்ன தண்டனை" என்றார் வாமன சாஸ்திரி. "என்ன தண்டனையா? ஏன்? ஜாதிப் பிரஷ்டந்தான். கிருஷ்ணதலத்து நியோகிப் பிராமணன் கதி யாதாயிற்று? தெரியாதோ?" என்றார் சங்கரசாஸ்திரி. "ஆமாம் ஐயா; என்னால் கூடியவரையில் நான் முயன்று பார்த்தும் முடியவில்லை. கிழவனோ, சிறுபிள்ளையோ யாராயிருந்தாலும் சரிதான்; அவனுக்குக் கொடுத்து விடுகிறேன்; அவனுடைய ஸ்திதி மதி குலம் கோத்திரம் முதலியவற்றை நான் கவனிக்கிறதேயில்லை. நீர் என்ன சொல்லுகிறீர்?" என்றார் வாமன சாஸ்திரி. "ஆமாம், என்னுடைய அபிப்பிராயமும் அப்படித் தான்; அவ்வாறாயின் மருமகன் உமக்கு முன்னிலையிலேயே யிருக்கும்பொழுது ஒரு காசுமில்லாத ஒரு கிழவனை நீர் ஏன் தேடச் செல்லவேண்டும்" என்று ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்துக்கொண்டு, "ஒரு ஸ்திரீ எனக்கு அவசியமா யிருக்கிறதென்பது உமக்குத் தெரியும். உம்மை நிர்ப்பந்தம் செய்ய எனக்கு இஷ்டமில்லை; பணம் வேண்டுமானால் நான் கொடுக்கிறேன்; யோசனை பண்ணும்" என்றார் சங்கர சாஸ்திரி.

"ஆமாம், நானும் அப்படித் தான் நினைத்தேன். ஆனால் விவாக விஷயத்தை நானே முதலிற் பிரஸ்தாபிக்கப் பயந்து கொண்டிருந்தேன்.

என்னுடைய மகளை உமக்குக் கொடுக்க எனக்கு முற்றிலும் சம்மதந்தான்; ஆனால் என் பெண்சாதி—" என்று வாமன சாஸ்திரி சொல்லி நிறுத்தினார்.

"சரிதான், சரிதான் தெரிந்தது. ஒரு தாலூக்கா கச்சேரியில் ஒரு பதினைந்து ரூபாய் வேலைக்குத் தடுமாடுகிற ஒரு பி. ஏ. யோ? இந்தக் காலத்துப் பி. ஏ. படிப்பு யோக்கியதை தெரியாதாக்கும். ஆம்-ஆம்-உன் மகளுக்கு ஒரு பி. ஏ. மருமகன் வேண்டுமோ? ஓகோ! ஞாபகம் வந்தது. உம்முடைய சம்சாரத்துத் தம்பி மகனும் ஒரு பி. ஏ. யோ? அவன் வெகு தடபுடல் பேர்வழி. என்னையும் என்னுடைய கிராம முனிஸிப் அந்தஸ்தையும் வெகுவாகத் தாழ்த்திப் பேசினான். "உம்முடைய அதிகார எல்லையை அறிந்த என் போன்ற சிலர் இந்தக் கிராமத்தில் இருந்துவிட்டால் உம்முடைய லஞ்சம் வாங்குதல் முதலிய இழிந்த செயல்கள் வெகு சீக்கிரத்தில் கோட்டின் முன்பு ஏறிவிடும்" என்றான். எடுத்த பேச்சுக்கெல்லாம் போலீஸைக் கூப்பிடுகிறான். வற்றி உலர்ந்த தேகத்தை யுடையவனுப் சுமார் இரண்டு வருஷத்திற்கு முன் இங்கே வந்து தான் ஏதோ தேவலோகத்திலே யிருந்து குதித்தவன் போல நம்மையொத்த வைதீகர்களையும் அவர்களின் சமயாசாரங்களையும் சீர்திருத்துவான்போல் தூஷித்தான். நடந்து கொண்டிருக்கிற விஷயங்கள் எனக்கு ஒன்றும் தெரியாமலிருக்கவில்லை. உம்முடைய விலாஸவதியின் பேரில் அவனுக்கு ரொம்பவும் இஷ்டம் பிறந்தது என்பதும் கேட்டிருக்கிறேன். அவளைக் கூப்பிடும்படியாய் அவ்வளவு துணிச்சல் கூட இருந்ததாம். பிரம்மாவே தனக்காக அவளை சிருஷ்டித்ததாக நினைவு. அவன் எண்ணத்தில் சீக்கிரம் மண்விழுந்து விடுவது நிச்சயம். அவனைப்பற்றி நினைத்துக் கொண்டிருப்பானேன்? அவன் தன்னுடைய கிழப்பாட்டனோடு சண்டை போட்டுக்கொண்டு எங்கே-அது-என்னவோ சொல்லுகிறார்களே-பட்டணமா-மதிராஸாம்-அங்கே ஓடிப்போய் விட்டான். அந்தப் பட்டணமென்கிறது நமது புராணத்திலே சொல்லுகிற ஏழு சமுத்திரங்கள் (!) சூழ்ந்ததாம். அந்த இடமே இந்த பாதகண்டத்திற்குள்ளே மகா அசௌக்கியமானது; எச்சில் தீட்டு என்கிறதே கிடையாது. அங்கே பஞ்சமர்கள் தான் பிராமணர்களுக்குச் சாதம் ஆக்கிப் படைப்பராம். அது மகா பாப (!) த்திற்கு ஏதுவான இடம். அங்கே எங்கே பார்த்தாலும் துன்மார்க்கம் அதிகம். அங்கே பிராமணன் நீசன் இருவரும் சமானந்தான். அங்கு அசுத்தமான ஒரு மூலையில் அவனிருந்தான். அவன் இருக்கிறானோ இறந்துபோய் விட்டானோ அது எனக்குத் தெரியாது. ஏது அவன் பிழைத்திருப்பானென்று எனக்குத் தோன்றவில்லை. அப்படியிருந்தாலும் அவன் மகா மூர்க்கன்; அவன் பி. ஏ. யாக இருந்தாலென்ன? எங்கே எந்த பி. ஏ. யாகட்டும் எனக்குச் சரியாய் வரி வசூல் கணக்கு தயார் செய்யட்டும் பார்ப்போம்!"

"ஆ! முன்ஸீப்தாரே! ஏன் அவ்வளவு ஓயாது பேசுகிறவரா யிருக்கிறீரே? என்னுடைய ஸம்சாரத்தின் தம்பி சாமிநாதன் இன்னும் சென்னப் பட்டணத்தையே அறியான். அவன் திரிச்சினாப்பள்ளி ஸெயிண்ட் ஜோஸப் காலேஜில் படித்து பி. ஏ. தேறியவன். அவன் நீர் நினைக்கிறபடி மூர்க்கனு



மல்ல, வைதீக விரோதியுமல்ல. அவனைப்பற்றி நீர் தாழ்வாகப் பேசியதை அவன் கேட்டுவிட்டால்,—அவன் மிகுந்த செல்வாக்குடையவனாதலால், உடனே மானநஷ்டக் கேஸ் கொண்டுவந்து விடுவான். ஆகவே நாக்கை இழுத்து வைத்தே பேசும். அதைப்பற்றி இப்போதென்ன பிரஸ்தாபம்? என்னுடைய செல்வப்புதல்வியை அவனுக்குக் கொடுப்பதாக எண்ணமே கிடையாது. ஒரு நாளுமில்லை. கொடுக்கவும் மாட்டேன். அவனிடம் பெண்ணைக்கொடுத்துப் பணத்தைத் தா என்றால் அந்த கன்யா சுல்கத்துக்கு அவன் இசைந்து வரமாட்டான். என் மனைவிக்கு என்னவோ பைத்தியம்! முடியாத விஷயத்தைப்பற்றி யெல்லாம் யோசனை செய்துகொண்டிருப்பாள். ஒரு வைாக்கம்மல் போட்டால் அதற்குமேல் அவள் பேசமாட்டாள், நீர் என்ன முடிவு சொல்லுகிறீர்?

"சரிதான், உம்முடைய பெண்ணை எனக்குக் கொடும். நகை, விவாகச் செலவு இவைகளுக்காக நான் 4000 ரூபா உமக்குக் கொடுக்கிறது நிச்சயம். இது சங்கதி நமக்குள்ளேயே இருக்கட்டும். தெரிந்ததா? ஆமாம், ஞாபகமிருக்கட்டும், ஒரு வார்த்தைகூட வெளியில் வரக்கூடாது."

"ஆனால் நான் நிச்சயமாய்ச் சொல்லமாட்டேன். மனைவியோடு யோசனை செய்து உமக்கு மறுமொழி சொல்லுகிறேன். அதற்குள் நீர் பணத்தைக் கொடும்."

"ஐயா, சரிப்படாது; நீர் வீட்டுக்குப்போம். நாளன்றைக்கு நீர் நிச்சயம் சொல்லும். இதற்குள் நானும் லக்ஷ்மண சாஸ்திரியைக் கொண்டு பத்திரம் எழுதி வைக்கிறேன். அதற்கு மறுநாள் நாமிருவரும் சப் ரிஜிஸ்தரார் நரசிங்கராவிடம் போய் ரிஜிஸ்தர் செய்து கொள்வோம். அவசியம் என்னைப் பாரும். நான் கோயிலுக்குப் போகும்போது உம்முடைய வீட்டிற்கு வருகிறேன்."

"அதற்கு நான் சம்மதிக்க முடியாது. பத்திரம் எழுதுவதாம்! அதுவும் என் விரோதியாகிய லக்ஷ்மண சாஸ்திரியைக் கொண்டு தயாரிப்பதாம்! பிறகு அதை ரிஜிஸ்தர் செய்வதாம்! இதுவெல்லாமென்ன? அவ்வளவு நிர்ப்பந்தங்கட்கு உட்பட்டு உமக்குப் பெண்தர, என் வீட்டில் பெண்கள் மலிந்துபோய்க் கிடக்கவில்லை. நீர் இல்லாவிட்டால் இன்னொருவர்! போம் போம்! எனக்கு ரொக்கமாகக் கையில் கொடுத்துவிட வேண்டும். நான் என் மனைவியை எந்த விதத்திலும் சம்மதிக்க வைத்து உமக்கு நிச்சயத்தைத் தெரிவித்து விடுகிறேன். தெரிவித்தவுடனே என் கையில் பணம் வந்து சேர்ந்துவிட வேண்டும்."

'ஏது வெகு கண்டிப்பா யிருக்கிறீர்? உமது மனம்போலாகட்டும். இனிமேல் மாமனாரல்லவா! உட்பட்டுத்தானே போகவேண்டும்!"

என்று சங்கரசாஸ்திரி சொல்ல, பிறகு இருவரும் மகிழ்பூத்த முகத்துடன் பிரிந்தனர். அதற்குப் பிறகு நடந்தனவற்றையே கதாரம்பத்தில் கண்டிருக்கின்றோம்.

*** *** ***

பொழுது விடிந்தது; கதிரவனும் குணதிசையில் தன் கதிர்களாகிய அம்புகளைத் தன் அம்புறாத் தூணியிலிருந்து பிரயோகித்துக் கொண்டிருந்தான். சீதா நகரம் என்னும் கிராமத்தில் ஒவ்வொருவரும் விடியற்கால முதல் எழுந்து நடமாடிக் கொண்டிருந்தனர். அந்தக் கிராமத்திலுள்ள எல்லோருக்கும் தை மாதத்தின் 13-ம் தேதி மிகவும் ஸந்தோஷகரமானது. வாமன சாஸ்திரி வீட்டில் ஒரு விவாகம். அதற்கு கிராமத்திலுள்ள எல்லோரும் போகவேண்டும்.

விவாக சம்பிரமங்களில் வழக்கமாயிருப்பது போல் வீட்டு வாயிலில் பல நிறமான அழகும், வாசனையும் பொருந்திய இலைக் கொத்துகளால் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. வீட்டிற்குள் வெகு அழகாய் வளைவாய் அமைக்கப்பட்ட இளந்தென்னை ஓலைக் குருத்துகளும், வரிசை வரிசையான வாழை மரங்களும் கட்டப்பட்டிருந்தன. பிராமணர்கள் (எத்தனையோ தப்புகளுடன்) வேத மந்திரோச்சாரணம் செய்து கொண்டு பண ஆசையோடு,—என் போஜனப் பிரியத்தோடுங் கூட முகூர்த்த காலத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இந்நாட்டு வாத்தியங்கள் முழங்கிக்கொண்டிருந்தன. தென்னாட்டில் பெயர் பெற்ற வாத்தியக்காரனாகிய கந்தன் சிஷ்யன் என்ற ஒரு நாகசுரக்காரன் இதற்காகவே வரவழைக்கப்பட்டு தன்னாலானமட்டும் மிகவும் நன்றாக வாசித்துக் கொண்டிருந்தான். மேளம், தாளம், நாட்டியம் இவைகளும் நடந்து கொண்டிருந்தன. உள்ளே முற்றத்தில் நம்முடைய அழகுள்ள விலாஸவதி உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவளுக்கு இடது பக்கத்தில் மணாளன் (?) உட்கார்ந்து கொண்டிருந்தான். கண்ணைப்பறிக்கும் அழகு இல்லாதவனாயிருந்தும் சிறுவனாய்த் தோன்ற மிகவும் முயன்றவனாயிருந்தான். மைத்தீட்டின(!) கண்களுடனும், நன்றாய் க்ஷவரம் செய்துகொண்ட முகத்துடனும், காதுகளில் வைரக்கடுக்கன் (!) களுடனும் அவன் அழகு (?) வாய்ந்தவனாகக் காணப்பட்டான். சிறு பிள்ளையாகவும் தோன்றினான்!

வீட்டின் பின்புறத்திலேயோ என்ன நடக்கிறதென்று பார்ப்போம். விலாஸவதியின் தாய் சுசீலை ஒரு ஓரத்திலுட்கார்ந்து சற்று அழுவதும், சற்று தன் துக்கத்தை ஆற்றிக்கொண்டும் இருக்கிறாள். எங் "ஸஹோதரன் வந்து விட்டானா? அவன் எங்கே?" என்று முணு முணுக்கிறாள்.

"ஏன் இந்தத் தாமதம்? என்ன இப்படி மோசம் செய்து விட்டானே! நான் அவனிடத்தில் மிகவும் அன்பு பாராட்டினேன். என் ஒரே அருமைத் தம்பியென்று அவன் பிறந்த நாள் தொட்டு இதுவரையிலும் அவனிடத்து வாஞ்சை செலுத்தி வருகிறேன். அப்படியிருக்க எனக்குத் துரோகம் புரிவனோ? என்னுடைய தந்தி அவனுக்குச் சரியான காலத்தில் கிடைக்கவில்லையோ? ஐயோ, தம்பி! சீக்கிரம் நீ இங்கு வந்து என்னையும் என் பெண்ணையும், என்னுடைய புத்தியற்ற கணவனையும் காப்பாற்றுவாய். இன்னும் ஒரு மணி போனால் அவள் அந்தக் கிழவனுக்கு மனைவியாகி விடுவாள். இப்படிக் கொண்டுபோய்த் தள்ளிவிடவா அவள் பிறந்தாள்?" என்று



இவ்வாறான விசனகரமான எண்ணங்கள் ஒன்றின்பின் ஒன்றாய் அவள் மனதில் உதித்து அவள் மூளையைக் கலக்கி மிகுந்த கவலைக்குள்ளாக்கின.

இப்பொழுது திடீரென்று மேளத்தின் ஓசை அதிகரிக்கின்றது. அங்குள்ள ஒவ்வொருவருக்கும் மிக்க ஆனந்தத்தை யுண்டாக்கும்படி மிகவும் இனிமையான ராகங்களை நாகசுரக்காரன் வாசிக்கிறான். "என்ன விசேஷம்? முகூர்த்தகாலம் கிட்டுகின்றதா? மனதின் வேதனையை, ஐயோ! என்னால் இனிச் சகிக்க முடியாது தம்பி!" என்று சொல்லிக்கொண்டு அந்த முகூர்த்த நாழிகை உண்மையாகவே வந்து விட்டதா" என்று அறியும்பொருட்டுத் தானிருந்த இடத்தை விட்டு எழுந்தாள். "ஐயோ என் வீட்டுக்காருடைய மோசத்தை நான் என்ன சொல்வேன். என் இஷ்டப்படியே என் தம்பிக்குத் தருவதாக நேற்று மத்தியானம் வரை சொல்லிக்கொண்டிருந்து விட்டுப் பிறகு மாலையில் அந்தக் கிழவனுக்கே நிச்சயித்திருக்கிறது என்று இடிவிழுந்தாற்போலத் தெரிவித்து விட்டாரே! அதன் பிறகல்லவா என் வீட்டுக்காருக்குத் தெரியாமல் விலாஸவதியைக் கொண்டு எழுதி தம்பிக்குத் தந்தி கொடுத்தேன். முன்னதாகவே இந்த மோசத்தை நான் அறிந்திருந்தால் ரிஜிஸ்தர் கடிதம் விவரமாக எழுதியனுப்பியிருப்பேனே; அவனும் தவறாது வந்திருப்பானே! என்ன செய்வேன் ஈஸ்வரா" என்று சிந்தித்தபடி கல்யாணம் நடக்குமிடத்துக்கு வந்தாள். அதற்குள் சுசீலையைத் தேடிக்கொண்டு பலர் அவளிருந்த இடத்திற்கு ஓடினர்.

"சீக்கிரம்! சீக்கிரம்!! வழி விடுங்கள்! வழி விடுங்கள்!! அவள் எங்கே? அவளை அழைத்து வாருங்கள். அவளில்லாமல் நாம் எப்படி கன்னியாதானம் (?) நடத்துவது? நாழிகை வந்துவிட்டது. வாமன சாஸ்திரி, போம், போம், உமது மனையாளை அழைத்து வாரும்," என்று சொல்லிக்கொண்டு புரோகிதர் (!) பஞ்சு தீக்ஷிதர் (நம்முடைய) துக்கத்திலாழ்ந்த சுசீலையை அழைத்து வரச்சென்றார். இந்த வார்த்தைகள் சுசீலையின் காதில் விழுந்தவுடன் அவளுடைய தம்பியின் பழக்கமான வார்த்தைகள் போலிருந்தன. எங்கிருந்து இந்த வார்த்தை பிறந்ததென்று அறியும் பொருட்டு அவள் அங்குமிங்கும் ஓடினாள். இப்படிப் பேசியது புரோகிதரென்று அறிந்தவுடன் தான் எதிர் பார்த்தபடி இல்லாமையால் வருத்தப்பட்டு உடனே மூர்ச்சையாயினாள்.

ஆனால் இப்பொழுது வேறு வார்த்தைகள் அவள் காதுகளிற் படுகின்றன. "அவள் எங்கே? அக்கா! அக்கா! நீ ஏன் என்னை வரவழைத்தாய்? "தந்தி எதற்காக?" ஏதாவது ஆபத்தா? வா, சங்கதி என்ன சொல்லு" என்று கூறிக் கொண்டு போலீஸ் ஆபீஸர்கள் இருவர் பின் தொடர நாலைந்து பெரிய உத்தியோகஸ்தர்களோடு, மிகவும் அழகான இருபது வயதுள்ள ஒரு வாலிப கனவான் பிராமணர்களின் கூட்டத்தில் இடித்துத் தள்ளிக் கொண்டு வந்தார். உடனே சுசீலை மூர்ச்சை தெளிந்து வஸ்திரத்தைச் சீர்ப்படுத்திக்கொண்டு அவனுக்கு எதிரில் ஓடினாள். "தம்பி! தம்பி! வந்தாயா! என்னுடைய குமாரத்தியை இந்த அபமிருத்யுவினின்றும் காப்பாற்ற

நீ கடைசியாக வந்தாயா? ஐயோ! பாவம்! ஒன்றுந் தெரியாதவன்; இப்பொழுது பேசுவதற்கு நேரமில்லை. பந்தலுக்குள் ஓடி விவாகத்தை நிறுத்து; மற்ற விசேஷங்கள் பிற்பாடு சொல்லுகிறேன். நான் சொன்னதைச் செய். முகூர்த்தம் வந்து விட்டது" என்றாள். அவளுடைய ஸகோதரன் உடனே பந்தலுக்குள் ஓடி, ஒரு உயர்ந்த ஆசனத்தின்மேல் நின்று கொண்டு தன்னாலியன்ற மட்டும் உரத்தகுரலுடன், "நான் இந்தவிவாகத்தை நிராகரிக்கிறேன்; ஒரு கெட்ட துற்சகுனம் நேர்ந்தது; இந்த விவாகம் நடந்தேறினால் அவமானம், தீங்கு, நாசம் இவைகள் அந்தப் பெண்ணுக்கு அவசியம் நேருமென்பது சுசீலையம்மாளுடைய அபிப்பிராயம்; ஆகையினாலே, அவள் விஷயமாகவும், அவன் மகள் விஷயமாகவும் பாத்தியதைக்கு அருஹனான நான் பகிரங்கமாய் இந்த விவாகத்தைத் தடுக்கிறேன்" என்று சமயத்துக்கு வேண்டிய கொடிய வார்த்தைகளை இறைந்து கொண்டு, விலாஸவதி வருத்தத்தால் அழுது கொண்டு தன்னைப் பின்தொடர, தான் வீட்டிற்குள் ஓரறைக்குட் சென்றான்.

* * *

மேலே விவரித்தபடி அந்த துரதிஷ்டமான விவாகம் தடுக்கப்பட்டு, அதனால் அந்தக் கிராம முனிஸீப்பான சங்கர சாஸ்திரி மிகவும் தாழ்ந்த நிலையடைந்து அநேக மாதங்களாயின. அந்தக் கம்பீரமான முனிஸீப் இப்படி சீர்கெட அநேகருக்குச் சந்தோஷமாயிருந்தது. ஆனால் யுத்தகளத்தில் காயப்படுத்தப்பட்ட ஒருவனைப்போல வெகு கோபத்துடன் அவன் இருந்தான். என்ன இருந்தாலும் சுசீலையின் தம்பியான சாமிநாதரின் முன்பு அவன் மந்திரத்திற்குட்பட்ட பாம்புக் குட்டிபோல் அடங்கும்படி நேர்ந்தது. என்றாலும், அவனால் வாமனசாஸ்திரியின் குடும்பத்தில் உண்டான அநேக துக்க சம்பவங்களும் கஷ்டங்களும் இன்னின்னவென உரைப்பதாயின் விஷயம் மிகுதியும் விரிவு பெற்றுவிடும். "நம்பிக்கைத்துரோகம்" என்னும் குற்றம்சாட்டப்பட்டு வாமன சாஸ்திரி கச்சேரிக்கு இழுக்கப்பட்டார். சங்கரசாஸ்திரி அந்த வியாஜ்யத்தில் அநேக பொய்ச்சாக்ஷிகளைத் தயார் பண்ணி வெகு பணம் விரயம் செய்தார். தன்னுடைய குற்ற நிவாரணத்திற்காக வாமன சாஸ்திரி மிகவும் பெயர் பெற்ற இரண்டு நியாயவாதிகளை ஏற்படுத்தினர். அவர்களும் தக்கபடி பேசினர்கள். எல்லா செலவுகளும் சாமிநாதனே பொறுத்துக்கொண்டான். ஆகையால் வாமன சாஸ்திரிக்கு நல்ல அதிர்ஷ்டம்! அவருடைய வக்கீல் நியாயாதிபதிக்கு திருப்திகரமாய் தன்னுடைய கக்ஷிக்காரன் மேல் குற்றமில்லாததை எடுத்துக் காட்டினர். கச்சேரி முழுதும் மூச்சுவிடுவதற் கிடமில்லாமல் ஒரே கூட்டம். அந்த நியாயவாதியினுடைய ஒவ்வொரு வார்த்தையையும் யாவரும் மிகவும் ஆவலோடு கேட்டுக் கொண்டிருந்தனர். வாயன சாஸ்திரி விடுதலை செய்யப்பட்டார். உடனே மூர்ச்சையாகிவிட்டார். ஆனாலும் அவர் சீக்கிரத்தில் ஆசுவாசப்படுத்தப்பட்டதும், அவருடைய முதல் உணர்ச்சியாகத் தன்னை விடுதலை செய்வித்த நீதியதிபருக்கு நன்றி பாராட்டினர். அவர் நன்றி பாராட்டல் வெறும் வார்த்தையோடு நிற்கவில்லை; அதுவே யாவருக்கும் சந்தோஷத்தை உண்டாக்கும்படியான ஒரு செய்கையாயிருந்தது.



சங்கர சாஸ்திரியாரோ இப்போது மிகவும் ஏழையாகி விட்டார். கோர்ட்டுச் செலவும், வக்கீல் பீசும், பொய்சாட்சி தயாரிப்பும் அவர்பணத்தையெல்லாம் சாப்பிட்டு விட்டன. வாமன சாஸ்திரியிடம் கொடுத்த 4000-ரூபாயும்,—அது ரகசியத்தில் கொடுத்ததானபடியால் அதைத் திரும்பவும் பெற ஏதுவின்றிப் போய்விட்டது. வாமன சாஸ்திரியிடமும் அந்தப்பணம் இருக்கவில்லை. கோர்ட்டுச் செலவுக்கும் லக்ஷ்மண சாஸ்திரிக்குமாகக் கொடுத்துத் தொலைத்து விட்டார். எனவே இப்போது சங்கர சாஸ்திரியின் துக்கம் சொல்லுந் தரமன்று. அத்துடனில்லை! அவருக்கு நேர்ந்த அவமானம் அவரால் சிறிதாவது தாங்குவதற்குக் கூடவில்லை. தமது வீட்டிற்குள் தூக்கிட்டுக் கொண்டு தொங்கலானார்: மறுநாள் இந்த விஷயம் கிராம முழுதும் பரவிற்று. நல்லவேளையாக, இனி இன்னொரு பெண்ணையும் எங்கேயாவது சென்று "பலி" கொள்ளாமல் இத்தமட்டில் ஒழிந்து வைகுண்டப் பிராப்தியானது பொதுவாக எல்லாருக்கும் ஸந்தோஷமே. என்றாலும், அவருடைய பெண்டாட்டி ஆசையால் அவர் பட்டபாடுகள் மிக்க பரிதாபகரமான தென்பதை எவருமே ஒப்புக்கொள்வார்கள்.

உடனே அந்தச் சிறிய கிராமத்தில் வேறொரு விவாகம் நடந்தது. மணாட்டி விலாஸவதி, மணாளன் சாமிநாதசாஸ்திரியேயாம். விவாகம் முன்னிலும் அதிக சம்பிரமத்துடன் நடந்தது. விவாகத்தில் ஒருவருக்காவது மனஸ்தாபமென்பதே கிடையாது. மிகவும் சந்தோஷகரமாய் நிறைவேறிற்று. விலாஸவதியோ தனக்குப் படித்த சிறுவயதுள்ள கணவன்,அதுவும், தாய்மாமன்,—அதுவும்,—ஒரு பி. ஏ. கிடைத்ததைப்பற்றி மிகுதியும் புளகாங்கிதமுற்றாள். சுசீலையம்மாளின் ஆநந்தத்திற்குச் சொல்லவும் வேண்டுமோ? அதற்குப் பிறகு சில மாதங்களுக்கெல்லாம் விலாஸவதி பக்குவமடைந்து தன் புருஷன் வீடு சென்றாள்.

இப்பொழுது சகல செல்வமும் பெற்று வாழ்ந்து கொண்டிருக்கிறாள். விலாஸவதியின் முழங்கால்களில் இரண்டு குழந்தைகள் ஏறி விளையாடிக் கொண்டிருக்கின்றன. அக்காட்சி இரண்டு கந்தர்வர்கள் நிற்பதுபோன்றுள்ளன. அவளுடைய கணவன் அவள்மேல் மிகவும் அன்பு பாராட்டிக்கொண்டு வருகிறான். ஒரு ஸ்திரீக்கு இதனைவிட வேறு என்ன செல்வங்கள் வேண்டும்?

## அத்தியாயம் 2.

## எதிர்பாராத வரவு.

கௌரதை என்பதற்கும் அகௌரதை என்பதற்கும் வித்தியாஸம் யாது? ஒரு மனிதனால் செய்யப்படும் காரியம் கௌரதையாகவும் அதே காரியம் மற்றவனால் செய்யப்படுமாயின் அகௌரதையாகவும் தோற்றுகிறது. ஆகையால் கௌரதை, அகௌரதை என்பவைகள் காரியத்திற்

கன்று; அந்தந்தக் காரியத்தைச் செய்யும் மனிதனைப் பொறுத்திருக்கிறது என்று தெரிந்துகொண்டேன். உதாரணமாக, ஒரு மனிதன் வியபிசாரம் செய்வானாயின், அதைத் தனக்கோர் கௌரவதையாகத் தன்னுடைய அந்தரங்க நேயர்களிடம் சொல்லிக்கொள்ளுகிறான். அதே விஷயத்தை ஒரு பெண் மற்றவளிடம் சொன்னால் அதனினும் மானக்கேடு வேறு கிடையாது. கடைசியாகக் காரியம் ஒன்றேயாயினும், ஒரு வகுப்பாரால் அஃது கௌரவதையாகவும், மற்றொரு வகுப்பாரால் அகௌரவதையாகவும் பாவிக்கப்படுகிறது. ஆகலால் மனிதர்களாற் பாவிக்கப்படும் கௌரவதை அகௌரவதை என்பவைகளின் உண்மையை அறிய ஆவல்கொண்டவனாயினேன்.

நான் திரிச்சினாப்பள்ளியைச் சேர்ந்த குளித்தலை என்னும் ஊரில் பிறந்தவன். எனது பத்தாவது வயதில் என் தந்தையாரைப் பிரிந்தேன். பதினைந்தில் தாயாரும் உயிர் துறந்தாள். நான் என்னுடைய பெற்றோர்களுக்கு ஏக புத்திரனாகையால் அவர்களுடைய ஆஸ்தியாகிய நான்கு லக்ஷ ரூபாய்க்கும் நானே பாத்தியஸ்தனானேன். பெண் மலிந்து கிடக்கும் இந்தக் காலத்தில்,—நான்காவது வகுப்பில் படிக்கும் பையன்களுக்கும் நாலாயிரம் ஐயாயிரம் எதிர் ஜாமீன் கொடுக்கும் இந்தக் காலத்தில்,—ஆஸ்தியின் நிமித்தம் அறுபது வயது கிழவர்களுக்கும் அங்கனைகளை அர்ப்பணம் செய்யும் இந்த அநியாய காலத்தில், எனக்கு இருபதாவது வயதில் கலியாணமானதென்றால் அது ஆச்சரியமாகத்தான் இருக்கும். அந்தக் கதையைப்பற்றி என்னைவிட வாசகர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்குமானதால் மறுபடியும் விவரிக்க விரும்பவில்லை. இப்போது நானும் எனது மனைவி விலாஸவதியும் வெகு அந்யோந்யமாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

என் தாயார் இறந்தபிறகு நான் பள்ளிக்கூடம் போக முடியாதவனானேன். ஏராளமான ஆஸ்திக்கு அதிபனாகிய நான் சிறுவனாக இருந்தபோதிலும், பி. ஏ. பரீக்ஷைக்குமேல் படிக்கும் பாக்கியமற்றவனானதைப்பற்றி பன்முறையும் மனம் வருந்தினேன். ஆயினும் நான் ஏற்கெனவே பாடசாலையில் படித்த கல்வியைக் கொண்டு, ஆங்கிலம், தமிழ் இவற்றிலுள்ள நாவல்களைப் படித்துக் கொண்டிருந்தேன். எனது இருபத்து மூன்றாவது வயதில் என் மனைவி என் வீடு புகுந்தாள். அவ்வளவு சீக்கிரமாக நான் வாழ்க்கையின் சுவையை உணரும்வாறாக அவள் என்னைச் சந்தோஷப்படுத்தியதில் எனக்கு வெகு திர்ப்தி. ஒரு நாள் சாயங்காலம் என்னுடைய புஸ்தக அறையில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருக்கையில், படபடவென்ற சப்தம் கேட்டது. அஃது இன்னதென்று அறியவெண்ணி அறையை விட்டு வெளியில் வந்தேன். வந்து நடுக்கூடத்தில் நிற்கும் ஒரு மனிதனைச் சந்தித்தேன். அவன் கைச்சட்டை காற்சட்டை யணிந்து கொண்டிருந்தான். கேசங்களைக் கத்திரித்துக் கொண்டு "வகுடு" பிளந்து விட்டிருந்தான். அவனுடைய முகத்தில் விளங்கிய கறுத்தமீசையும், அவனது இடக்கையில் புகைந்து கொண்டிருந்த சிகரெட்டின் பாதியும் அவனுக்குப் பறையனுடைய உருவத்தை யளித்தன.



அவனைப் பார்த்தவுடன் எனக்குக் கோபமும் அச்சமும் உண்டாயின. அவன் தன்னுடைய பாதரக்ஷையைக் கழற்றாமல் உள்ளே வந்ததற்காகக் கோபமும், இந்த சங்கதியையும் அவன் அறிந்து, ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தனாகவும் இருப்பானாயின், என்னை என்ன செய்வானோவென்ற பயமும் எனது பேசும் சக்தியைத் தடுத்தன. அவனுடைய மூக்கில் அணிந்து கொண்டிருந்த தங்கக் கட்டுக்கண்ணாடி அவனுடைய முகரூபத்தை விருத்தி செய்ததாயினும் அவன் பார்வையை நான் அறிய ஒரு தடையாக இருந்தது. இவ்விதமான அவனுடைய ரூபத்தைக்கொண்டு அவன் யாவனென்பதையும் எதன் நிமித்தம் என்னிடம் வந்திருக்கிறான் என்பதையும் கண்டு கொள்ள முடியாமல் தியங்குகையில்,

"என்ன சாமிநாதா! நீ என்னைத் தெரிந்து கொள்ள முடியவில்லையா? நீயே இந்தவிதம் மயங்கினையாயின் என்னுடைய நேயர்களில் யார்தான் என்னைத் தெரிந்து கொள்ளுவார்கள்!" என்று புன்சிரிப்புடன் என்னைக்கேட்டு என்னுடைய தோளில் தட்டிக் கொடுத்தான். ஆடுமாடுகளைத் தட்டிக் கொடுப்பதுபோல் அவன் என்னைத் தட்டிக்கொடுத்ததிலிருந்தும் அவன் பல ஆடுமாடுகளுடன் அதிகமாகப் பழக்கமுள்ளவன் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

அவன் அவ்வளவு தூரம் சொல்லியும், அதிகப் பழக்கமான நண்பர்களுக்கே உரிய ஏகவசனப் பிரயோகமாகிய "சாமிநாதா" என்ற வார்த்தையை உபயோகப் படுத்தியும் நான் அவனை இன்னானென்று தெரிந்து கொள்ள முடியவில்லை. அந்த சமயத்தில் அவனுடைய கண்ணாடியை மூக்கினின்றும் எடுத்துத் தன் கைக்குட்டையால் துடைத்து மறுபடியும் மூக்கிலணிந்து கொண்டான். அவன் கண்களில் கண்ணாடி இல்லாதபோதுதான் அவனுடைய முகத்தைப் பல வருஷங்களுக்கு முன்னர் எங்கோ நான் கண்ட ஞாபகம் வந்தது.

"உங்களை நான் பார்த்த ஞாபகம் இருக்கிறதேயொழிய நீங்கள் யார் என்பதை நான் அறிதற்குக் கூடவில்லை" என்று சொன்னேன்.

"ஆம், அப்பா! நீ என்னை அறிவாயா? குளித்தலைப் பள்ளிக்கூடத்திற்குச் சிரங்கும் சொறியும் கொண்டு வந்து வியாபாரம் செய்யும் சாமிநாதனாக இருந்தால், நாலாவது பாரத்தில் ஆதித்திய சாஸ்திரிகளிடம் அடிபட்டுக் கொண்டிருந்த சாமிநாதனாக இருந்தால், பேசுவதற்கு முன் அழுங்குணமுடைய சாமிநாதனாக இருந்தால், என்னைத் தெரிந்து கொள்ளுவாய். இப்பொழுது நீ இலக்ஷாதிபதியாகப் போயினதோடு உன்னுடைய தேகமும் ஒருவித காந்தியை யடைந்து விட்டது. உனக்குக் கலியாணம் ஆயிருக்கும் என்றும் நினைக்கிறேன். குழந்தைகளும் இருக்கலாம். பெரிய மனுஷ்யன். இப்பொழுது என்னைத் தெரியாது தான்." என்று வாய் ஓயாமல் பேசினான்.

"தெரிந்து கொண்டேனடா உன்னை!" என்று கூவி, "நீ, சீப்பளாப் புத்தூர் சீனிவாசனல்லவா?" என்றவுடன் அவன் முகத்தில் புன்சிரிப்பு உண்டானது. "நல்லவேளை இப்பொழுதாவது என்னைக் கண்டு பிடித்தாயே அப்பா. அதுவே போதும். நீயும் உன்னுடைய மனைவி மக்களெல்லோரும் சௌக்கியந்தானே?" என்று குசலம் விசாரித்தான்.

"எல்லோரும் சௌக்கியந்தான். வெகுநேரமாக நாம் நிற்கிறோம் போய் உட்காரலாம் வா." என்று அழைத்துப்போய் என்னுடைய புஸ்தக அறையில் உட்காரவைத்து நானும் உட்கார்ந்து கொண்டேன்.

சீனிவாசன் என்னுடன் வெகுநாட்கள் வரை படித்தவன். அவனுடைய ரூபமாறுதலால் நான் அவனைக் கண்டுகொள்ள முடியாமற் போயிற்று. ஐந்தாறு வருஷங்களாக அவன் சென்ற இடமே நான் அறியேன். பள்ளிக்கூடத்தில் படிக்கும்பொழுது நேசம் செய்வதற்கும், அதைவிட்டு நீங்கிய பிறகு அதைக் காப்பாற்றுவதற்கும் வித்தியாஸமுண்டு. பாடசாலையில் படிக்கும் பொழுது நாம் ஜாதி, மதம், ஐஸ்வரியம், புத்தி இவைகளைப் பற்றி யோசித்து ஒருவனுடன் நேசம் பாராட்டுவது கிடையாது. ஆனால் பள்ளிக்கூடத்தை விட்ட பிறகோ அநேகமாக மேற்சொன்ன விஷயங்களில் எதற்காகவாவது தான் நேசிக்கிறோம். இதுவே இந்த யுகதருமம்.

என்னுடன் வந்து உட்கார்ந்த சீனிவாசன் எனது புஸ்தக அறையையும், அதனுள் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் புஸ்தக பீரோக்களையும், சுவரில் தொங்கவிடப்பட்டிருக்கும் எண்ணெய்ப் படங்களையும் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்தான்.

"சீனிவாசா 95 க்குப் பிறகு உன்னுடைய சரித்திரத்தை நான் கேட்கும்படி சொல்லு" என்று கேட்டேன்.

உடனே சீனிவாசன் தூங்கி விழித்தவன்போல் என்பக்கம் திரும்பி, தன்னுடைய சட்டைப் பையிலிருந்தும் சிறியதொரு கடித மூட்டையை எடுத்து அவிழ்த்து ஒரு வெள்ளி டப்பியை என் மேசையின்மீது வைத்தான்.

"இது என்ன சீனிவாசா?" என்றேன்.

"இஃது லாகூர் கண்காட்சியில் ஒரு வங்காளி வாலிபனால் செய்யப்பட்டு கொண்டு வரப்பட்டது. பார்ப்பதற்கு அழகாக இருந்தமையால் நான் வாங்கினேன்" என்றான்.

ஆகா! என்ன அழகமைந்த டப்பி! அஃது ஆறங்குல நீளமும் நாலங்குல அகலமுமானது. அதன் மேல்புறத்தில், அன்னப்பறவைகளும், நீர்ப்பக்ஷிகளும், தாமரை மலர்களும் நிறைந்த தடாகமொன்றிருப்பது போலும், அத்தடாகத்தில் புஷ்பித்திருக்கும் சிவந்த தாமரை மலரின் மீது வசீகரப் பார்வையையுடைய வனிதாமணியாகிய மகாலக்ஷ்மி தன்னுடைய சதுர்கரங்களுடன் நிற்பது போலும், அத்தடாகக் கரையில் பலசாதி விருக்ஷங்கள் நேத்ரோத்ஸவமான புஷ்பங்களைத் தாங்கி ஒளிர்வது போலும், அத்தருக்களுக்குப்



பின் புறத்தில் மரகதங்களைப் பதித்த பசுமை நிறத்துடன் கூடிய குன்றுகளிருப்பது போலும், அக்குன்றுகளிலிருந்து இறங்கிவந்த யானையொன்று தன் துதிக்கையில் புஷ்பமாலையைத் தாங்கி மகாலக்ஷ்மியண்டை தண்ணீரில் நீந்திவருவது போலும், சித்திரிக்கப்பட்டிருந்தது.

"சாமிநாதா, நான் குளித்தலைப் பள்ளிக்கூடத்தை விட்ட பிறகு சென்னையில் போய் ஒரு வருஷம் படித்து பிரவேச பரிக்ஷையில் தேர்ச்சியடைந்தேன். அதற்குமேல் படிப்பதற்குப் பணம் கொடுக்க என் தந்தையார் தயாராக இருந்தாரேனும், எவ்வளவு தூரம் படித்தபோதிலும் உத்தியோகத்திற்கே போக வேண்டுவது தான் என்கிற சென்னை இராஜதானியின் ஐதீகத்தை நினைத்து, ஜீவனம் செய்யப் போதுமான கல்வி இருந்தமையால், உலக விவகாரங்களைத் தெரிந்து கொள்ளவேண்டி, மேலே படிப்பைத் தொடராமல் தேசாடனத்திற்கு ஆரம்பம் செய்தேன். இந்தியா முழுவதையும் சுற்ற சுமார் இரண்டு வருஷங்கள் போலாயின. பிறகு ஐரோப்பிய நாடுகளைப் பார்த்துவர எண்ணிச் சென்றேன் இத்தாலி, பிரான்ஸு, ஜர்மனி, நார்வே, சுவீடன் இப்பிராந்தியங்களைப் பார்த்து விட்டு உலாந்தையும் கண்டு இங்கிலாந்திற்குப் போனேன். அங்கு சிலகாலமிருந்து அமெரிக்கா, ஆஸ்திரேலியாவிலும் கொஞ்சகாலம் வசித்து, ஜப்பான் போனேன். இப்பொழுது தான் இங்கு வந்திருக்கிறேன்" என்றான்.

"இவைகளை எல்லாம் கேட்ட என் காதையே நான் நம்புவதற்கு இடமில்லாமலிருக்கிறதே. ஆ!" என்று அவனைப் பார்த்து, "இங்கெல்லாம் செல்ல உனக்குப் பணம் எவ்வளவு செலவாயது?" என்று வினவினேன்.

"நான் இந்தியாவினின்றும் புறப்படும்போது ஐந்து ரூபா தான் என்னிடமிருந்தது. நான் மறுபடியும் திரும்பி வரும்போது ஐயாயிரம் ரூபா கொண்டு வந்தேன்." என்று அந்தப் பண விஷயத்தை வெகு அலக்ஷியமாகச் சொன்னான்.

"உன்னுடைய கதைகேட்பதற்கு வெகு ரம்மியமாக இருக்கிறதே! நீ எவ்விதம் பணம் சம்பாதித்தாய்?" என்று வெகு ஆவலோடு கேட்டேன்.

"பணம் சம்பாதிப்பதென்ன பிரமாதம்! யோக்கியதையையல்லவா காப்பாற்ற வேண்டும். இந்தியாவிலிருந்தபோதே நான் புகையிலைச் சுருட்டுச் செய்யக் கற்றுக்கொண்டிருந்தேன். இத்தாலி சென்றதும் சுருட்டுக்கடை வைக்கும்படி அங்கொரு கனவானைத் தூண்டினேன். அவன் கடைவைத்து ஏராளமான பணம் சம்பாதித்ததோடு எனக்கும் நல்ல சம்பளம் கொடுத்தான். நான் அவ்வூரிலிருக்கும்போதே, எண்ணெய்ப் படம் எழுதுவதையும் கற்சித்திரவேலை செய்வதையும் கற்றுக் கொண்டேன். இவ்விதமே ஒவ்வொரு ஊரிலுள்ள கைத்தொழிலையும் கற்றுப்போய், மற்றத் தேயங்களில் அதை விருத்தி செய்து பிழைத்தேன். ஆயினும் எனக்கு நல்லகாலமில்லையாகையால் அதிக ஊதியம் கிடைக்கவில்லை." என்று பதில் பகர்ந்தான்.

என் நண்பனாகிய சீனிவாசன். இவ்விதம் நானா விஷயங்களைப்பற்றி பேசிக் கொண்டிருக்கையில்,

"சீனிவாசா, நீ ஏன் உன்னுடைய கட்டுக்கடங்காத கரியகூந்தலை வெட்டி எறிந்து மொட்டைத் தலையாக இருக்கிறாய்?" என்று நான் வினவினேன்.

"என்னுடைய சௌகரியத்திற்காகச் செய்துகொண்டேன்" என்றான்.

"உன்னுடைய சௌகரியத்திற்காகத்தானா? ஆனால் அங்கிருக்கிறவர்கள், உன்னை மொட்டையடித்துக்கொள்ளவாவது காற்சட்டை அணியவாவது சொல்லுவது கிடையாதா?" என்று வினவினேன்.

"அவர்கள் ஒன்றும் சொல்லுவது கிடையாது. நம்முடைய கூந்தலும், நெற்றியில் விளங்கும் வைதீகக் குறியும் அவர்களைச் சந்தோஷப்படுத்துகின்றன. சில தறுதலைகள் தான் இரங்கூன் பினாங்குக்குப் போய் தலையை மொட்டையிட்டுக்கொண்டு வருவதும், யாராவது அதற்குக் காரணங் கேட்டால் தலைமொட்டையாக இருந்தால் தான் துரை அதிகச் சம்பளம் (!) கொடுப்பார் என்று சொல்லுவதும் வாடிக்கை. இவர்களுடைய வேலைத் திறனையும் புத்திக்கூர்மையையும் மெச்சாமல் மொட்டைத்தலையை மெச்சுகிறார்கள் என்று அவர்கள் சொல்லுவதும், அதை உண்மை என்று நம் பெரியவர்கள் நம்புவதும் கேட்க எனக்கு நகைப்பு வருகிறது." என்றான்.

அன்றிரவு சீனிவாசன் என்னுடன் போஜனஞ் செய்திருந்து மறுநாட் காலையில் ஊர்போயினான்.

அத்தியாயம். 3.

## கோகிலாவின் கடிதம்.

நல்ல நடத்தை என்றால் என்ன? தீயநடத்தை என்றால் என்ன? மனத்திற்குள் கெட்ட எண்ணங்கள் பலவற்றுடன் கோவில் திருப்பணி செய்வது தான் நல்ல நடத்தையோ? மேலுக்குத் தன்னை நல்லவன் என்று எவருமே நினைக்கட்டும் என்று உருத்திராக்ஷப் பூனையாக இருப்பது தான் நல்ல நடத்தையோ? தன்னுடைய சரீரம் திடனுடன் இருக்கவேண்டி மது மாம்சம் குடிப்பதும் உண்பதும் தீய நடத்தைகளோ? மது மாம்சம் உபயோகப்படுத்துவது மேல் நாட்டில் சாதாரண வழக்கமாக இருப்பதோடு தீய நடத்தையாகவும் பாவிக்கப்படுவதில்லை; நம் நாட்டிலோ பஞ்ச மகா பாதகங்களுள் ஒன்றாகப் பாவிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நன்மை தீமை என்பவைகள் அந்தந்த சீதோஷ்ணத்திற்கும் அனுஷ்டானத்திற்கும் பொருந்தி இருக்கின்றன.



சீனிவாசன் மேல்நாட்டில் சென்றிருந்தபொழுது தலை மொட்டை செய்து கொண்டது சௌகரியத்திற்காக வாயினும் அவனை இவ்வூரில் கோபித்துக் கொள்ளாதவர்கள் கிடையாது. அவன் போய் வந்த விவரத்தையும், அவனுடைய புத்திக் கூர்மையான கைத்தொழில் ஊக்கத்தையும் நான் கேட்ட தக்ஷணத்தில் அவன் மீது எனக்கேகே ஒருவிதமான பிரியமும், லோக கௌரவத்தில் வாஞ்சையும் ஏற்பட்டது. எந்தக் காரியம் செய்வதாக இருந்த போதிலும் அவனைக் கேட்காமல் நான் செய்வதில்லை. சீனிவாசன் அடிக்கடி சென்னைக்குப் போய் விடுவான். ஒரு சமயம் நானும் அவனுடன் சென்னைக்குப் போயிருந்தேன்.

நான் அவனுடன் சென்னைக்குப் போனதில் அதுவே முதல் முறை: சென்னைக் கடலோரத்தில் ரெயிலை விட்டிறங்கி "பெரிய காப்பி கிளப்" புக்குப் போனோம். அதை ஐரோப்பியர் காப்பிக்கடை என்றே நினைத்தேன். அதில் போடப்பட்டிருந்த மேஜை நாற்காலிகளும், மாடியிலிருந்தும் தொங்க விடப்பட்டிருந்த காந்த விசிறிகளும், காந்தவிளக்குகளும் ஐரோப்பிய கிளப்பின் தோற்றத்தையளித்தன. நாங்கள் அதில்போய் உட்கார்ந்தோம், எங்களுடைய நாற்காலியின் பக்கத்து நாற்காலியில் ஈசீப் சேட் வந்து உட்கார்ந்தார். அவருக்குப் பக்கத்தில் மரியசூசைப் பிள்ளையும், அவருடைய பக்கத்தில் மதார்சா ராவுத்தரும் வந்து உட்கார்ந்து சீனிவாசனை க்ஷேமம் விசாரித்தனர். எனது நண்பன் எனக்கு அவர்களையும், அவர்களை எனக்கும் பரஸ்பரம் பரிச்சயம் செய்து வைத்தான். உடனே சீனிவாசனுடைய உத்தரவின் பேரில் எங்கள் ஐவருக்கும் உப்புமா, ரவாதோசை, இனமல் தட்டில் கொண்டுவந்து வைக்கப்பட்டன. பேர் ஒன்றுக்கு ஒரு கரண்டி கொடுக்கப் பட்டது. அக்கரண்டியால் அவர்கள் நால்வரும் தட்டிலுள்ளவைகளைத் தின்று காப்பியைக் குடித்தனர். ஒருவருடைய காப்பியை மற்றவரும், மற்றவருடையதை வேறொருவரும் உதவிக் கொண்டனர். இவைகளையெல்லாம் நான் பார்த்துக் கொண்டிருந்தேனே யொழிய ஒன்றையும் தொட்டேனில்லை.

"ஏன் சாமிநாதா, சாப்பிட வில்லையோ?" என்று சீனிவாசன் கேட்டான்.

"ஐயர் மெட்ராசக்குப் புதியவர் போலிருக்கிறது," என்றார் மரியசூசைப் பிள்ளை.

"ஆமாம் அப்படித்தான் தோன்றுகின்றது. இன்னும் இரண்டு தடவை வந்து போனானால் சகஜமாகப் போய்விடும்." என்றார் ஈசீப் சேட்.

இவர்கள் சொல்வதொன்றிற்கும் நான் செவிகொடுத்திலேன். கடைசியாக அவர்கள் என்னை வெகுதூரம் வேண்டியும் நான் யாதொன்றையும் தொட்டேனல்லேன். அன்று பகல் போசனம் ஒரு கிளப்பில்

செய்தோம். சாயங்காலம் என்னை வேறொரு காப்பிக் கிளப்புக்கு அழைத்துப் போனான் சீனிவாசன். அங்கு பிராமணர்களுக்குப் பிரத்தியேகமான இடம் விடப்பட்டிருந்தது. அதிலிருந்த மனிதன் யோக்கியன்.

சென்னையிலுள்ள காப்பிக்கிளப்பையும் அதில் வேலை செய்பவர்களையும் நான் நினைப்பேனேல், என் புத்தி தடுமாறுகின்றது. அந்த இடங்களில் கீழ்சாதியார்களே சகல வேலைக்கும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். பலபேர் எச்சிலைத் தின்ன வேண்டுமானால் ஒருவன் சென்னைக்குப்போய் சிலகாலம் வாசம் செய்தால் போதுமென்று நான் நிச்சயம் செய்துகொண்டேன். என்னுடையசொந்தஊரின்பேரிலுள்ள அன்பினாலோஎன்னவோ குளித்தலையைப் போல் அவ்வளவு சௌக்கியமான மற்றொரு ஊர் இருப்பதாகவே தோன்றவில்லை. பிராமணர்களின் ஆசாரவிமரிசைகள் தென்னிந்தியாவில் ஒருமாதிரியாகவும், வட இந்தியாவிலோ வேறொரு விதமாகவும், இந்த இந்தியாவின் கரையைத் தாண்டினாலோ அந்த ஆசாரங்களே அந்தர்த்தானமாய் விடுவதையும் கண்டு ஏக்கமுற்றேன். பிறகு அடிக்கடி என்னைச் சீனிவாசன் சென்னைக்கு அழைத்துவர ஏற்பாடு செய்தான். முதலில் எவை யெவைகளை நான் வெறுத்தேனோ அவைகள் யாவும் சர்வசாதாரண விஷயங்களாகி விட்டன. "பெரிய கிளப்பி"லும் சாப்பிட ஆரம்பம் செய்தேன். அந்த சமயம் என்னுடைய நேயர்கள் ராவ் பகதூர் முதலிய பட்டக்காரர்கள், பாளையக்காரர்கள், ஜமீன்தார்கள், முதலிய பெரிய மனிதர்களே யாவார். என்னைத் திருப்தி செய்வதற்காகஅல்லவாயினும், அவர்களுடைய இச்சையைப் பூர்த்தி செய்ய வேண்டியாவது பல விஷயங்களைச் செய்வேன். எல்லாம் புகழ்ச்சி கருதித் தான். நானும் சீனிவாசனும் ஒரு நாள் பேசிக்கொண்டிருக்கையில்,

"நாம் அடிக்கடி இங்கு வந்து தங்குகிறவர்களாக இருக்கிறோமே; நமக்கென்று ஒரு வீடிருந்தால் எவ்வளவு சௌகரியமாக இருக்கும்." என்றான் சீனிவாசன்.

அவன் சொல்லியது எனக்கும் சரியானதென்றே தோன்றினமையால் அவனைக் கொண்டே ஒரு வீடு வாங்கும்படியாக ஏற்பாடு செய்தேன். சுமார் நான்கு மாதங்களுக்குள் ஒரு வீட்டையும் தோட்டத்தையும் இருபத்தையாயிரம் ரூபாய்க்குப் பேசிவிட்டு இந்த விஷயத்தை எனக்குத் தந்திமூலமாகத் தெரியப்படுத்தினான் சீனிவாசன். உடனே அன்றையதினமே பணத்தை மணியார்டர் செய்தேன். இரண்டு தினங்களில் என் பெயருக்கு ரிஜிஸ்தரான பத்திரம் வந்து சேர்ந்தது. தான் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்காமல் தகப்பனார், பாட்டனார் ஆர்ஜித்து வைத்துச் சென்ற பணத்தை எவ்வளவுக்கு வேண்டுமாயினும் செலவிடுவதில் கஷ்டம் தோன்றாது தானே! ஒருநாள் தபால் கடிதங்கள் பல வந்தன. அவைகளில் நேயர்களின் கடிதங்கள் சில; உறவினரின் கடிதங்கள் சில; அவைகள் யாவையும் படித்துக் கொண்டே வரும் பொழுது ஒன்று புதிய கடிதமாக இருந்தது. அதாவது அந்தக் கடிதத்தின்



மேல்விலாஸத்தைக் கொண்டு அஃது யாரிடமிருந்து வந்தது என்பதை யூகித்து அறிய முடியவில்லை. அக்கடிதம் பின் வருமாறு:—

"செண்பகவிலாஸ்" சென்னை.
20—12—03.

"என் அன்பு சுந்தரமே,

தங்களை இவ்விதம் அழைத்ததற்கு என்னை மன்னிக்கும்படி முதலில் தானே வேண்டிக் கொள்கின்றேன். தாங்கள் சென்னைக்கு வந்திருந்த பொழுதே பன்முறை தங்களைக் கண்டுபேச ஆசைகொண்டேன். ஆயினும் சாவகாசப்படவில்லை. போனது போகட்டும். 24-ந்தேதியன்று என்னுடைய வீட்டில் ஒரு தோட்டக்கச்சேரி வைக்கப்போவதால், அந்த சமயத்தைத் தங்கள் வரவால் கௌரவிப்பீர்கள் என்ற முழு நம்பிக்கையுடனிருக்கும்

கோகிலா."

அக்கடிதத்தின் தாத்பரியம் எனக்கொன்றும் விளங்கவில்லை. சீனிவாசனையே கேட்க வேண்டுமென்று நிச்சயம் செய்து அவனுடைய வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். அன்று சாயங்காலம் சீனிவாசன் வந்து சேர்ந்தான். அவனைப் பார்த்து "சீனிவாசா, தோட்டக் கச்சேரி என்றால் என்ன?" என்று வினவினேன்.

"அஃதிருக்கட்டும்; கோகிலாவிடமிருந்து கடிதம் வந்திருக்கின்றதா?" என்று அவன் என்னைக்கேட்க,

"வந்திருக்கிறது" என்று வியப்புடன் கூறினேன்.

"அதனால் தான் இந்த சந்தேகம் வந்தது போலும். சாதாரண விருந்து தான் தோட்டக் கச்சேரி யெனப்படுவது. சாயங்காலம் ஆண்பெண்களாகிய நண்பர்களெல்லோரும் சேர்ந்து சிற்றுண்டி யருந்தி தங்களுக்கு இஷ்டமான விளையாட்டையோ, சங்கீதத்தையோ யனுபவிக்கலாம். இஃது தோட்டத்தில் நடப்பதால் தோட்டக் கச்சேரி என்று பெயர். இதிலென்ன உனக்கு இவ்வளவு சந்தேகம்?" என்று விவரித்துக் கூறினான்.

சிறிது நேரம் நான் மௌனம் சாதிப்பதைப் பார்த்து, சீனிவாசன்

"சாமினாதா, என்ன பிரமாதமான யோசனையி லாழ்ந்துவிட்டாய்?" என்று உசாவினான்.

"நீ உண்மையை ஊகித்தறிந்து விட்டாய். இந்தத் தோட்டக் கச்சேரியைப் பற்றியே யோசித்துக் கொண்டிருக்கிறேன். இந்தப் பாழும் கச்சேரி எவ்விதம் இந்தியத் துறைமுகத்தில் வந்து ஏறியது? இதற்கு ஜனனபூமியில் யோக்கியதை குறைந்தா போயிற்று? அஃது வந்து சேர்ந்ததும் அதைக் காப்பாற்றும் ஜீவகாருண்யமாவது நம் குழந்தைகளுக்கு இருக்கிறதே! இருக்கட்டும், சாயங்காலம் ஆணும் பெண்ணும் தோட்டக் கச்சேரிக்கு வருவார்களென்று சொன்னாயே; சந்தியா தேவதையை உபாஸனம் செய்து அதன்

மூலியமாக இறைவனைத் தியானிக்கும் சமயமல்லவா சாயங்காலம்? அந்த நேரத்தில் தியானத்திலிருக்கும் ஆண்களுக்குப் பெண்மணிகள் வேண்டிய சிசுரூஷை செய்ய வேண்டாவா? நம்மை எல்லாம் சிருஷ்டி செய்த இறைவனைப் பணியும் நேரத்தில் அவரையே மறந்து போவதென்றால், அவருடைய கருணைக்குரியவர்களாக நாம் ஆவோமா? விளையாட்டை விளையாடுவதாகச் சொன்னாயன்றோ? இறைவனுடைய விளையாட்டின் காரணமாக சிருஷ்டிக்கப்பட்ட வேடிக்கைகளையும், நதி, மலை, கடல் முதலியனவைகளையும், சந்திர சூரிய நக்ஷத்திராதி அண்ட கோடிகளையும் கண்டு நாம் சந்தோஷம் அடைந்தோமானால் அதிலுள்ள ஆநந்தம் வேறெதிலாவது உண்டா? சங்கீதம் கேட்பதென்றாய். சங்கீதத்தின் முக்கியமெதற்கென்றால் மனதைஒருவழிப்படுத்தவே. முதலில் சங்கீதம் செய்து கொண்டிருந்து மனதை ஒரு வழி நிறுத்திய பின்னர், சட்டென்று இறைவனுடைய இலக்ஷணத்தில் மனதைத் திருப்ப ஒரு நாளில் முடியாதாயினும், நாளாக ஆக உண்மையை அறியலாம் என்பதற்காகவல்லவா சங்கீதம் கையாடத் தகுந்ததென்றும், விலை மதிப்பில்லாததென்றும், தேவதா அம்சமென்றுங் கூடக்கொள்ள வேண்டியதாகிறது. வேறு தேசத்து சங்கீதத்திற்கும் நம் ஹிந்து சங்கீதத்திற்கும் உள்ள வித்தியாஸம் இஃதொன்றேதான். மற்ற தேசத்து சங்கீதம் உலகாயதமானது. இந்து சங்கீதமோ தேவாம்சமானது. இதற்கு உதாரணமாக நம் இந்து சங்கீதம் அறிவு முதிர்ச்சியில்லாத சிறு குழந்தைகளையும், பகுத்தறிவு சிறிதும் வாய்க்கப்பெறாத பசு பக்ஷிகளையும் தன் வசப்படுத்துகின்றது. மற்ற தேசத்து சங்கீதத்திற்கு இந்த யோக்கியதை சிறிதும் கிடையாது. இஃது உலகமறிந்த விஷயம். அப்படியிருக்க, கோகிலமாம், தோட்டக் கச்சேரியாம், ஆண் பெண்கள் வருவதாம், சந்தியா வேளையிலே விளையாட்டாம், சந்தோஷமாம் இவைகளெல்லாம் என்னடா இது?" என்றேன். அதற்கு சீநிவாசன், "என்ன சாமிநாதா! நீ இன்றைக்கு ஒரு பிரசங்கம் செய்துவிட்டாய்; உன்னுடைய வாக் சாதுரியத்திற்கும் மனப்போக்குக்கும் நான் சந்தோஷம் அடைந்தேன்; நீ கூறிய யாவும் உண்மையே" என்று அந்த விஷயத்தை மெதுவாக நழுவவிட முயன்றான்.

"சரிதான், இந்தக் கோகிலா என்பவள் யார்? அவளை ஏற்கெனவே நீ அறிந்து வைத்திருக்கிறாய்போலிருக்கிறதே! அந்த வியாபாரக்கூட உனக்குத் தெரியுமா?" என்றேன்.

"சாமிநாதா! நீ இன்னும் உலக இயல்பே இன்னதென்று அறியாதவன். யார் யார்,—அவர்கள் விவாகம் அற்றவர்களாயிருந்தபோதிலும், வெகு யோக்கியர்கள்போல் வெளியில் காண்பித்துக்கொள்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் எங்கேயாவது அந்தரங்கத்தில் அவர்களின் ஆவலைத் தீர்க்கத்தக்க ஒரு சுந்தரமான கனி எவ்விடத்திலாவது தொங்கிக்கொண்டிருக்கும். இந்த நாகரீக காலத்திலே நாயுடு, ஐயர், ராவ், பிள்ளை, ஆச்சாரியார், முதலியார் என்ற தங்களின் ஜாதிப்பட்டத்தோடு திருப்தியடைகிறவர்கள் வெகு அருமை. அந்தப் பட்டத்தோடு ஒரு கௌரவப்பட்டத்தையும் எந்த விதத்திலாவது சம்பாதித்துக்கொள்ளவே ஒவ்வொருவருக்கும் ஆசை! அப்படியே சொந்தத்தில் மனைவியிருந்தாலும், வெளியிலும் கிடைக்கிற வரையில் நாலைந்துபேரைத் தெரிந்து வைத்துக்கொள்வதும், அதை ஒரு கௌரவமாக நினைப்பதும் இக்காலத்து வழக்கமாகும். தங்களின் தேகத்தை உயிரோடு பங்கிட்டு விலைக்கு விற்கின்ற அவ்வனிதாமணி(!)களின் நட்பால் ஏற்கெனவே அவர்களுக்குப் பரிச்சியமாயிருக்கிற பல பெரிய (?) மனிதர்களின் தயவுக்கும் இவர்கள் பாத்திரராய், அந்த வழியில் அவர்களிடம் "வோட்" (சிபாரிசு) பெறக்கூடுமானதாகவும் ஆகிவிடுகிறபடியால், லோகப் பிரக்யாதிக்கு இப் பொதுமகளிர்களின் அநுக்கிரகமும் ஒரு சார் இன்றியமையாததாகின்றது. அந்த வழியில் இந்த கோகிலாவும் ஒருத்தியாக இருந்து அநேக பெரியமனிதர்கட்கு,—அவர்கள் கௌரவம் பெறுதற் கேதுவான காரியங்கட்கு ஒரு உபகரணமாக இருந்து மிகுந்த உதவிபுரிந்து வருகின்றாள்" என்றான் ஸ்ரீநிவாசன்.



"போதுமப்பா! உன் உபன்யாஸம்! இன்னும் வளர்த்தாமல் சுருக்கமாய் முடிவுபடுத்து" என்றேன்.

"என்ன சாமிநாதா! நீ இப்படி ஆபாசப்படுகிறாய். ஒரு விஷயத்தை எடுத்துக் கொண்டால் விவரமாகச் சொல்ல வேண்டாமா! கோகிலாவோ இப்போது பெரிய பணக்காரி. அவள் மூன்று வருஷத்திற்குள் நாற்பத்தேழாயிரம் பெறுமான சொத்துக்களுக்கு பாத்தியக்காரியாகிவிட்டாள். முதலிலேயே அவள் ஒரு பால்ய விதவை. அவளுடைய புருஷன் சொத்துக்களை யெல்லாம் அவளது அண்ணன் மெதுவாகப் பறித்துக்கொண்டு விட்டான். அதற்கு முன்னதாகவே இவளும் ஒரு முதலியாரோடு வீட்டைவிட்டு வெளியேறினாள். இரங்கூனிலிருந்து சென்னைக்குத் திரும்புகையில் நாற்பத்தேழாயிரம் ரூபா சொத்துடன் வந்து சேர்ந்தாள். இரங்கூனிலிருந்த நாட்டுக்கோட்டைச் செட்டியாரால் அவளுக்கு சொத்து சேர்ந்ததென்று பிரஸ்தாபம். அவள் சென்னையில் இப்போது வெகு தடபுடலாகப் பல தோட்டக்கச்சேரி உல்லாசங்கள் நடத்தி உயரிய பதவியில் விளங்குகிறாள். இப்போது சென்னையில் கூடப்போகிற காங்கிரஸ் மகா சபையை யொட்டி அதற்காக விஜயம் செய்திருக்கிற கனவான்களுக்கு ஒருதோட்டக்கச்சேரி நடத்தப்போகிறாள். அதற்காக எல்லோருக்கும் அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. உன்னுடைய பரோபகாரச் செய்கைகட்காகப் பெரிதும் பாராட்டி உனக்கு மட்டும் ஸ்வஹஸ்த லிகிதமாக நிருபம் விடுத்திருக்கின்றாள். அவள் ஒரு பெரிய தேசாபிமானியாகவும் விளங்குவதால் எல்லா பெரிய மனிதர்களும் அவளுடைய தோட்டக்கச்சேரிக்கு அவசியம் செல்வார்கள். நீயும் நானும் அதற்குத் தடையின்றி போகவேண்டியது கட்டாயம். என்னைவிட நீ செல்வது அதிக அவசரம். சென்னப்பட்டணத்து வக்கீல்களிற் பெரும்பாலோர் கோகிலாவின் கையில் அடக்கமென்றால் அவளுடைய மகிமைப் பிரதாபத்திற்குக் கேட்பானேன்?" என்று சீநிவாசன்

ஒரு பெரிய பிரசங்கம் செய்தான். கடைசியில் அவன் இஷ்டப்படியே நடக்கவும் சென்னை செல்லவும் சம்மதித்தேன். எனக்குப் பிரியமில்லாவிடினும், சீநிவாசனுக்காக அதில் நான் விருப்பம் காட்டவேண்டியது கட்டாயமாயிற்று.

என் மனத்திலிருந்த எல்லாவற்றையும் சீனிவாசன் முன் காலியாக்கிவிட்டேனாயினும், இரவு என்னுடைய பத்தினியுடன் ஸய்யாக்கிருகம் போகும்பொழுதும் அவன் சொன்ன விஷயங்கள் ஞாபகத்திற்கு வந்தன. சிறிது நேரம் என் மனைவியும் நானும் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருந்தோம். தேக அசௌக்கியத்தால் அவள் முதலில் நித்திரை செய்து விட்டாள். எனக்குத் தூக்கம் வாராமையால் சுவாமி விவேகாநந்தருடைய இராஜயோகப் பிரசங்கத்தைப் படித்துக்கொண்டிருந்தேன். இருந்தாற்போலிருந்து என் மனைவியின் வதனத்தைப் பார்த்தேன். நிஷ்களங்கமான ஹிருதயத்தின் ஜோதி அவளுடைய பூர்ணச் சந்திரன் போன்ற முகத்தில் பிரதிபலித்தது. அன்பென்னும் வெள்ளம் அவளது குளிர்ந்த பார்வையையுடைய கண்களின் வழியோடியதை அக்கண்கள் மூடப்பட்டிருந்தனவாயினும் நான் கண்டுகொண்டேன். புன்சிரிப்புடன் கூடிய வதனத்தைப் பார்த்துக்கொண்டிருந்த நான் அவளுடைய எழிலில் என்னையே மறந்து விட்டேன். சிறு குழந்தைகள் போல, கனவின் உபத்திரவமின்றி நித்திரை செய்தாள். அச்சமயம் காலையில் வந்த கடிதத்தின் ஞாபகம் வந்தது. முன்பின் அறியாத என்னை அன்ப என்று அழைத்த கோகிலா என்னும் பெண்ணின் துணிவுதான் என்னே! அந்த ஒரு பதப் பிரயோகத்திலிருந்தே அவளுடைய கற்பு லக்ஷணம் இத்தன்மைத்தென்பதை அறிந்துகொண்டேன். என் பத்தினியாகிய விலாஸவதியின் களங்கமற்ற ஆத்மரூபமெங்கே; அழகென்னும் மண்வலையால் ஆடவரை,—மௌடீகத்திலாழ்ந்து மயங்கும் ஆடவரைத் தன் வயப்படுத்தும் கோகிலாவின் தேக இலக்ஷணமெங்கே என்று யோசித்திருந்து, விலாஸவதியை எனக்கு இல்லறத்துணைவியாகக் கொடுத்தருளியதற்குப் பன்முறையும் இறைவனை மனதாரப் பணிந்தேன்.

## அத்தியாயம் 4.

## "நாகரீகர்" என்ற கௌரவப்பட்டம்.

அவசியமென்பதென்ன? அனாவசியமென்பதென்ன? பிறர் தன்னைப் பெரிய மனிதனாக (!) நினைக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் குதிரை வண்டி வாங்குவது அவசியமோ? தன்னுடைய ஜீவனார்த்தம் வெள்ளை வஸ்திர முடுத்திக்கொண்டு உத்தியோகத்திற்குச் செல்லுதல் அனாவசியமோ? தனவந்தர்களுக்கு அவசியமானவைகளே ஏழைகளுக்கு அனாவசியமானவைகளாக இருக்கின்றன. ஆகையால் இந்த விஷயமும் மனிதர்களுடைய அந்தஸ்தையே பொறுத்திருக்கிறது. நான் கொஞ்ச நாட்களுக்கு முன்னர்



சென்னையில் வாங்கிய "ரமணீய விலாஸம்" சாதாரண ஜனங்களுக்கு அனாவசியமேயாயினும், எனக்கு அஃது அத்தியாவசியமானதாகவே இருந்தது.

இவ்விதமான வீண் டம்பச் செலவுகள் செய்யக்கூடாதென்று என் மனதைப் பன்முறை திடப்படுத்திக்கொண்டும் சீனிவாசனைக் கண்டால் அந்த எண்ணங்களெல்லாம், சிம்மத்தைக் கண்ட யானைகளைப்போல் இருந்தவிடம் தெரியாமல் பதுங்கிக்கொள்ளுகின்றன. சென்னைத் தோட்டக் கச்சேரிக்குப் போகவேண்டாமென்று எவ்வளவோ தடவைகளில் எண்ணுவேன். மறுநிமிஷம்,போனதால் யாதொரு குற்றமும் வராது என்று நிச்சயம் செய்துகொள்ளுவேன்.

கடைசியாக 23-ந்தேதியும் விடிந்தது. அதிகாலையில் சீனிவாசன் என்னைப் பார்க்க வந்தான்.

"என்ன சாமிநாதா, இன்று மாலை "மெயிலுக்கு" நீ தயார் தானே?" என்று வினவினான்.

"எனக்குப் போகவேண்டுமென்றுந் தோன்றுகின்றது, வேண்டாமென்றுந் தோன்றுகின்றது. எப்படி இருந்தபோதிலும் இம்முறை சென்னைக்கு வருகிறேன். நம்முடைய பங்களா காவற்காரனை நாளை காலையில் வண்டியுடன் எழும்பூர் ஸ்டேஷனுக்கு வரும்படியாகத் தந்தி கொடுத்துவிடு" என்று சொல்லி விட்டு உள்ளே போனேன்.

அங்கு என்னுடைய காதலி எனக்கு காலைச் சாப்பாட்டிற்கு சிற்றுண்டி தயாரித்துக் கொண்டிருந்தாள். நான் அந்தக்கட்டில் போய் உட்கார்ந்து தோசையைப் புசித்துக் கொண்டே,

"விலாஸம்! இன்றைய மாலை நான் சென்னப்பட்டணம் போகிறேன்; உனக்கு ஏதாவது வேண்டுமோ?" என்று கேட்டேன்.

அதற்குள் தோசை சுட்டு முடிந்து விட்டபடியால் கையைச் சுத்தி செய்துகொண்டிருந்த என் மனைவி ஓடி என்னருகில் வந்து என்னைத்தழுவி முத்தமிட்டு "இது தான் எனக்கு வேண்டியது" என்று என்னைத் தொட்டுக் காண்பித்தாள்.

பின்னும் விலாஸம் "இதைவிட எனக்கு அதிகமான விலை மதிப்புள்ளதும், சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியதும், சிரேஷ்டமானதுமான வேறு பதார்த்தம் ஒன்றும் இல்லை என்பதை நான் நன்கு அறிவேனாகையால் இது தான் நான் வேண்டுவது என்று கேட்டேன்" என்று மறுபடியும் எனது கபோலங்களில் முத்தங்கொடுத்தாள். அந்த சமயம் நான் சகலத்தையும் மறந்தவனானேன். எப்படி ஒரு யோகியானவன் தன்னையும் பரமான்மாவையுந் தவிர வேறொருவரில்லை என்று கருதியவனாய், மற்றெல்லா வஸ்துக்களையும் தன்னுடைய மனக்கண்ணால் பார்க்க முடியாதவனாகிறானோ அப்படியே அந்த சந்தர்ப்பத்தில் என்னையும் என் காதலி விலாஸவதியையும் தவிர வேறு பூலோக விஷயமே கிடையாதென்று நிச்சயம் செய்துவிட்டேன்.

"காதலிருவர் கருத்தொத்து ஆதரவுபட்டதே இன்பம்" என்று சொல்லப்பட்ட முதுமொழிக்கு நானே ஒரு சாக்ஷியுமாயினேன். இன்பம் இன்பம் என்பதெல்லாம் இஃதொன்றே தவிர பணத்தினாலாவது புகழினாலாவது கௌரவப்பட்டங்களினாலாவது வருவது இன்பமேயல்லவென்று நிச்சயம் செய்து கொண்டேன்.

அன்று சாயங்காலம் நானும் சீனிவாசனும் இரண்டாவது வகுப்பு "டிக்கட்" பெற்று மெயிலேறி மறுநாள் அதிகாலையில் எழும்பூர் ஸ்டேஷன் வந்து சேர்ந்தோம். அங்கிருந்து எங்களுக்கென்று வந்திருந்த வண்டியில் ஏறி "இரமணீய விலாஸம்" போய்ச் சேர்ந்தோம். அன்றைப் பகலை என் பங்களாவில் கழித்தோம். எனக்குத் தெரிந்தவர்களும் தெரியாதவர்களுமாக சுமார் நாற்பது ஐம்பது பெயர்கள் என்னை என்னுடைய பங்களாவில் பார்த்துச் சென்றனர். பலர் என்னுடைய தோட்டத்தைப் புகழ்ந்தனர். சிலர் நடுக்கூடத்தில் போடப்பட்டிருந்த மேசை நாற்காலிகளைச் சிலாகித்துப் பேசினர். வேறு சிலர் என்னுடைய பங்களாவின் அமைப்பையும் அஃது எனக்குக் கிடைத்த பாக்கியத்தையும் விசேஷமாகச் சிறப்பித்து கூறினர். இவ்வளவு பெயர்களுக்கும் நான் ஒரே பதிலாகச் சொல்லிவிட்டேன். "இவ்வளவு புகழ்ச்சிக்கும் என் ஆப்தர் சீனிவாசரே காரணம்" என்று சொல்லிவிட்டேன். அன்று மாலையில் வெளியான ஆங்கிலப் பத்திரிகைகளிலும், சுதேசமித்திரனிலுங்கூட நான் சென்னைக்கு வந்திருக்கிறேனென்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. அன்றையதினம் சாயங்காலம் நானும் சீனிவாசனும் செண்பக விலாஸம்போய் வண்டியை விட்டிறங்கியவுடன் ஒரு சிறுவன் வழிகாட்ட நாங்கள் உள்ளே சென்றோம். நாங்கள் முதல் வாயிற்படியண்டை சென்றவுடன் ஒரு பெண்மணி, அவளுக்கு சுமார் பத்தொன்பது வயதுக்கு மேலிராது, அவள் எனக்கும் சீனிவாசனுக்கும் கைலாகு கொடுத்து நல்வரவு கூறி உள்ளே அழைத்துப் போய் ஏற்கெனவே, பல கனவான்களால் (!) கூடப்பெற்றிருக்கும் நடுக்கூடத்திற்குக் கொண்டுபோய் விட்டு மறுபடியும் தன்னுடைய பழைய ஸ்தானத்தையடைந்தாள்.

அவள் என் கையைப்பற்றிய ஒரு விநாடியில் என் மண்டையில் ஒரு பெரிய பாரத்தைத் தூக்கிவைத்தாற்போலிருந்தது. அவள் என்னுடைய கையை விட்டவுடனேயே நான் என்னுடைய நிலைக்கு வந்தேன். பத்தொன்பதே வயதுள்ள பருவமங்கை, அழகே உருவெடுத்து வந்த அங்கனை, எங்களைச் சற்றும் அச்சமில்லாமல் கைப்பற்றியதை நினைத்து நினைத்து மனம் வருந்தினேன் ஒரு முதல்தரமான தாசியும் வேசியும்கூட இவ்விதம் நடந்து கொள்ளமாட்டாளே; இவள் அவர்களிலும் கேடுகெட்டல்லவா போய்விட்டாள். தனது பர்த்தா ஒருவனுக்கே உரிய அவளுடைய கரத்தை இவ்விதம் எத்தனை பெயர்களுக்குக் கொடுத்துவிட்டாளோ? இவளைப் பிரியாச் சகோதரிகளாகிய அச்சமும் நாணமும் இவளைவிட்டு என்—எவ்விதம் சென்றனரோ தெரியவில்லை என்று இவ்விதமெல்லாம் யோசித்துக் கொண்டிருக்கையில்,



அநேகம் நேயர்கள் என்னை வந்து கண்டுபோயினர். நானும் ஒவ்வொருவருக்கும் ஒரு பல்லிளிப்பும் கையெடுப்பும் செய்தேன். அந்தப் பெண் யார் என்பதைச் சீனுவினிடம் அறிய எண்ணினேன். ஆயினும் அவன் வேறுவிதமாக நினைத்தானாயின் என்ன செய்வதென்று வெட்கப்பட்டுக் கேட்காமலிருந்து விட்டேன். என்றாலும், அவள் ஒரு தாசிப்பெண் என்றும், வரும் கனவான்களை எதிர்கொண்டு உபசரிக்க அவளைத் தயார் செய்து வைத்திருந்தார்களென்றும் பிறகு அறிந்து கொண்டேன். இதற்குள் அநேக ஆண்களும் பெண்களும் அந்த வீட்டைச் சுற்றிக்கொண்டனர். வேறொரு கூடத்தில் எல்லோருக்கும் சிற்றுண்டி மேசைகளின்மீது வட்டிக்கப்பெற்றிருந்தது. நாங்களெல்லோரும் அதையுண்டு தேத்தண்ணீர் குடித்து உட்கார்ந்திருந்தோம். எங்களுடைய ஆநந்த சமயத்தைப் பார்க்க எண்ணி சந்திரனும் வந்து தோன்றினான். மந்தமாருதம் ஒருபுறமிருந்து வீசத்தலைப்பட்டது. எல்லோருமாகப் புறப்பட்டு தோட்டத்தை யடைந்து அந்தத் தோட்டத்தின் நடுவே போடப்பட்டிருந்த பந்தலுக்குப் போய்ச் சேர்ந்தோம். எல்லோரும் அந்தப் பந்தலின் இருக்கைகளில் அமர்ந்துவிட்டனர். நான் போனது தான் தாமதம்! உடனே நீண்ட கரகோஷம் செய்தனர். கோகிலா என்னை எதிர்கொண்டழைத்து புஷ்பஹாரம் சூட்டி வணங்கினாள். எனக்கு விஷயம் இன்னதென்று தெரியவில்லை. நானும் ஒரு நாற்காலியை அடைந்தேன். அவர்களில் சற்று வயது முதிர்ந்தவரும், நல்ல படிப்பாளியினுடைய உருவத்தையுடையவருமாகிய ஒருவர், ஏற்கெனவே தயாராக இருந்த மேடையின்மீது ஏறி நின்று தன்னுடைய தங்க மூக்குக் கண்ணாடியைத் துடைத்துப் போட்டுக் கொண்டு,

"என் பிரிய சகோதர சகோதரிகளே,

இன்றையதினம் நாமெல்லோரும் இங்கு கூடியது எதன் நிமித்தமென்பதை நீங்கள் அறிவீர்கள் என்றே எண்ணுகின்றேன்: ஆயினும் சிலர் தெரிந்துகொள்ளவில்லை போலிருப்பதால் அவர்களுக்கு முதலில் நம்முடைய கூட்டத்தின் முக்கிய நோக்கத்தைத் தெரியப்படுத்தி விட்டு நாம் யோசித்த விஷயத்தில் பிரவர்த்திப்போம். இதுவரையில் எவர்களுக்கும் கொடுக்கப்படாததும், நம்மால் அதிகம் விரும்பப்பட்டதும், தகுந்த அந்தஸ்துடையவர்களுக்கு மாத்திரம் பொருத்தமானதுமாகிய "நாகரீகன்" என்ற கௌரவப்பட்டத்தைச் சூட்டவே நாம் இன்று கூடியது. இது வரையில் பல தடவை நாம் கூடியிருக்கிறோமாயினும் பயனற்ற கூட்டமாகவே முடிந்திருக்கின்றன. இப்பொழுதும் அப்படிப் போகாதென்று நினைக்கிறேன். இக்கூட்டத்தில் என்னை "பேசுபவனாக" எடுத்ததின் நிமித்தம் எனக்குத் தோன்றுகிற ஒருவரை இந்தப் பட்டத்திற்கு உரியவராக்கலாமென்றெண்ணுகிறேன். அவர் அதிக செல்வவானும், கல்விமானும், நன்னடத்தை யுடையவருமாகிய துளித்தலை சாமிநாத சாஸ்திரியார் அவர்களே" என்று சொல்லியவுடன் "சரி,

சரி, எங்களெல்லோருக்கும் சந்தோஷம் சந்தோஷம்" என்ற பெருங் கூச்சலுடன் கரகோஷமும் காதுகளைத் துளைத்தது. உடனே என் கழுத்தில் பூமாலை வந்து விழுந்தது. அஃது எந்தவிதம் விழுந்ததென்பதை இன்னும் நான் அறிந்துகொள்ள முடியவில்லை. பார்த்தீர்களா பணம் செய்கிற கூத்தை! நான் எழுந்து அந்த மேடையின்மீது ஏறுகையில் நீண்ட கரகோஷம் ஆரம்பமாக, அக்கரகோஷம் முடிந்தவுடன் நான்,

"சகோதர சகோதரிகளே!

இப்பெரும் பட்டத்திற்கு யான் எத்துணையும் பொருத்த மற்றவனேயாயினும், இவ்வளவு பெயர்களில் என்னைத் தேர்ந்தெடுத்ததற்கு என்னுடைய மனமார்ந்த வந்தனம் செய்யக் கடமைப்பட்டவனாகிறேன். மற்றவர்களை விட யான் கல்வியிலாவது, செல்வத்திலாவது, அறிவிலாவது அநுபோகத்திலாவது விசேஷித்தவனல்லன். ஆயினும் உங்களுக்கு என்பேரிலுள்ள அன்பின் மிகுதியால் இந்த இல்லாத விசேஷங்களனைத்தையும் எனக்கு இருப்பதாகக் கற்பித்து, இந்தப் பட்டத்தையும் கொடுத்திருக்கிறீர்கள். நவீன நாகரீகம் தலை எடுத்தாடும் இக்காலத்தில் உள்ளபடியே உண்மையான நாகரீகம் என்பதின் பொருள் தெரியாமலே பலர் இருக்கின்றார்கள் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. சிலர் தலையை மொட்டையடித்துக்கொண்டு ஜாதிவித்தியாசம் பார்க்காமல் சேர்ந்து உண்பதும் உலாவுவதுமே நாகரீகமாக எண்ணி இருக்கின்றார்கள்; சிலர் விதவா விவாகம் செய்வதையும் மதுமாம்சம் உண்பதையும் நாகரீகமாகக் கொண்டிருக்கிறார்கள்; சிலர் நல்ல கல்வியறிவை யடைந்தும் நிரீஸ்வரவாதம் செய்வதையும், பஞ்சமர்களைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு உண்பதையும் மட்டும் நாகரீகமாக எண்ணுகின்றார்கள். இவைகள் யாவும் நாகரீகமே யன்று. உள்ளபடியே நாகரீகத்தின் பொருள்களைத் தெரிந்தோராயிருப்போர், நம் இந்தியாவில் வெகுகாலத்திற்கு முன் நிலைபெற்றிருந்து தற்காலம் நசித்துப்போயிருக்கும் கைத்தொழில், சிற்பம், வியாபாரம் போன்றவைகளைப் பெருகச் செய்வதற்கு வேண்டிய சாதனங்களை விருத்தி செய்தும், அதற்கு எதிரிடையாயிருந்து தடைசெய்பவைகளைக் கண்டித்தும் வருகின்றார்கள். விபசாரத் தடுப்பு முயற்சியும் நாகரீக முதிர்ச்சியின் பயன் என்றே சொல்லல் வேண்டும். ஆகையால் நம்முடைய நாகரீகச் செயல்கள் யாவும் நம்முடைய தேசத்திற்கும், நமது இந்து ஜனசமூகத்திற்கும் பயனுள்ளதாக இருக்கவேண்டியது அவசியம். வீண் இடம்பத்தால் நாம் யாது பயனையடையப்போகிறோம்? உண்மை நாகரீகத்தின் பொருளை நம்மனைவருக்கும் இறைவன் தந்தருளுவாராக! நம் சகோதர சகோதரிகளுக்கு நீண்ட (!) ஆயுளையும் அரோகதிடகாத்திரத்தையும் கருணையங் கடலாகிய கடவுள் கடாக்ஷிப்பாராக!" என்று கூறி நான் மேடையை விட்டிறங்கி ஐந்து நிமிஷங்கள் ஆகியும் கரகோஷம் அடங்கினபாடில்லை.

## அத்தியாயம் 5.

## நரஸ்துதி.

இன்பமென்றால் என்ன? துன்பமென்றால் என்ன? வாதி பிரதிவாதிகள் கோர்ட்டுக்கு வழக்குகொண்டு போகிறார்கள். அந்த வழக்கு ஜெயமானவனுக்கு இன்பமாகவும், தோற்றுப்போனவனுக்குத் துன்பமாகவும் இருக்கிறது. ஒரே விஷயம் இவ்விதம் சிலருக்கு இன்பத்தையும் சிலருக்குத் துன்பத்தையும் கொடுப்பதாகிறது. ஒரு ஆட்டையடித்து ஒருவன் உண்ணுகிறான். உண்ணுகிறவனுக்கு இன்பமும், ஆட்டுக்குத் துன்பமுமாக இருக்கிறது. ஆகையால் சிலருக்கு இன்பமாக இருப்பவைகள் பலருக்குத் துன்பமாக இருப்பதையும், பலருக்குத் துன்பமாக இருப்பவை அநேகருக்கு இன்பமாக இருப்பதையும் நாம் பிரதிதினமும் கண்டிருக்கிறோம்.

நான் பெற்ற பட்டத்தினால் நானும் என்னுடைய ஆப்த நண்பர்களும் மட்டும் இன்பத்தை யடைந்தோமே யொழிய, அப்பட்டம் தங்களுக்குக் கிடைக்குமென்று வந்தவர்கள் எல்லோருக்கும் துன்பமாகவேதான் இருந்திருக்கும். என்றாலும் அவர்களும் என்னுடைய அபிவிருத்தியை நாடினவர்களாகவே நடித்தார்கள். இந்தவிதமான வைபவங்களுடன் நானும் எனது நண்பனும் குளித்தலைபோய்ச் சேர்ந்தோம். மறுநாட்காலையில் சீனிவாஸன் வந்து சில நேரம் பலபல விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்து கடைசியாக,

"சாமினாதா, — உம் — நாகரீகா, உன்னுடைய விருந்து எப்பொழுது?" என்று வினவினான்.

"நான் இப்பொழுது விருந்து செய்யவேண்டிய அவசியமென்ன?" என்று கேட்டதற்கு விடையாக, "உனக்குக் கிடைத்த பட்டத்தைப் பிரபலப்படுத்த வேண்டாமா? அதன் நிமித்தமே விருந்து. சாதாரண முனிசியல் கௌன்சிலர் நியமனமானதற்கும் அல்லவோ அநேகவிடங்களில் விருந்தும் கச்சேரிகளும் நடைபெறுகின்றன. இதுவரையில் இந்தியாவிலே எவருக்கும் அளிக்கப்படாத பட்டத்தை யன்றோ உனக்கு அளித்திருக்கின்றார்கள். அதன் கௌரவத்தை நீ இன்னும் நன்கு உணரவில்லைபோலும்" என்று ஒருமாதிரியாகப் பதிலளித்தான்.

"சீனிவாசா, உள்ளபடி இந்தப் பூலோக கௌரவத்தை நான் உணராதவனாக இருக்கின்றதைப்பற்றித் துக்கப்படுவதைவிட பன்மடங்கு சந்தோஷப்படுகிறேன். அப்படி என்ன நான் கௌரவத்துக்குப் பார்த்தியஸ்தனாயது? பெரிய யுத்தத்தில் வெற்றிபெற்றேனா? அல்லது அந்தகாரத்தி லாழ்ந்திக் கிடக்கும் நம் சகோதரர்களுக்கு, பௌத்தர், சங்கராசாரியார் போன்று ஞான

ஒளியைக் கொடுக்கும்வண்ணம் ஞானநூல் முதலிய விசேஷித்த கிரந்தங்கள் எழுதியுள்ளேனா? அல்லது வேறுஎந்தவிதமான சாஸ்திரப்பரிசீலனையிலாவது புதிதான விஷயத்தைக் கண்டுபிடித்து விட்டேனா—இவ்வளவு கௌரதைக்கு நான் உரியவனாக! ஷேக்ஸ்பியர், மில்டன், காளிதாசன், கம்பன்போன்ற கவிகுல சிகாமணிகளும், முதலில் புகைவண்டியைக் கண்டுபிடித்த ஜேம்ஸ் வாட்போன்ற சாஸ்திர அறிவாளனும், சாக்ரடீஸ்,பிளேடோ போன்ற தத்துவ சாஸ்திரிகளும், சங்கராசாரியார், மத்வாசாரியார் போன்ற மதாசார்யர்களும், நெப்போலியன், அலக்ஸாண்டர் போன்ற சக்ரவர்த்திகளும் அடையக்கூடிய இப்பெரும் கௌரதைக்கு நானா யோக்கியன்? மேலே சொல்லப்பட்டவர்களுக்கே கௌரதை, மரியாதை எல்லாந்தகும். இவ்விதமான வீண் ஆடம்பரங்களால் பணச்செலவே யொழிய வேறு எந்தவிதமான சௌகரியத்தையுங் காணேம்" என்றேன்.

இப்படி நாங்கள் பேசிக்கொண்டிருக்கையில் தபால்காரன் வந்து ஒரு காகிதத்தையும் மற்றொரு காகிதமூட்டையையும் கொடுத்துச்சென்றான். அந்தக் கடிதத்தை ஒருமுறை படித்துப்பார்த்தேன். மறுமுறை படிக்க, சீனிவாஸனிடம் கொடுத்தேன்.

## கடிதம்.

சிந்தாதிரிப்பேட்டை,<br>சென்னை.<br>**1—1—04**

"ம-ா-ா-ஸ்ரீ, ஸ்ரீமான் சாஸ்திரியார் அவர்களுடைய பாதகமலங்களில் அடியேன் அநேககோடி தண்டம் சமர்ப்பித்து எழுதிக்கொள்ளும் விஞ்ஞாபனம்:

நான் செய்தது தப்பிதமென்று தங்களுக்குத் தோன்றினும் என்னை மன்னிக்கும்படியாக வேண்டுகிறேன்; அதாவது நான் எழுதியிருக்கும் **செண்பகசுந்தரம்** என்னும் புஸ்தகத்தை அர்ப்பணம் செய்வதற்கு வேறு தகுந்தவர்களில்லாமையாலும், தங்களுடைய வித்தியா விசேஷத்தை நான் பலதடவைகளில் கேட்டிருக்கின்றமையாலும் இந்தப் புஸ்தகத்தைத் தங்களுக்கு அர்ப்பணம் செய்திருக்கிறேன். அப்படி தங்களுடைய பெயரை அச்சிடுவதற்குத் தங்களிடமிருந்து உத்தரவுபெறவில்லை என்றெண்ணவேண்டாம்.

அச்சாபீஸுக்காரர்களுடைய தொந்தரவினால் உடனே அச்சாக்கும்படி சொல்லிவிட்டேன். இத்துடன் பன்னிரண்டு புஸ்தகங்களும் புக்போஸ்டில் அனுப்பியிருக்கிறேன். தயவுசெய்து அவைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன். "புலவர் வறுமை பூமியினும் பெரிது" என்பதைத்



தாங்களும் அறிந்திருப்பீர்கள் என்றே எண்ணுகிறேன். எளியேனை ஒரு பொழுதும் மறக்கமாட்டீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்."

தங்கள் ஊழியன்,<br>வரகவி. சொக்கலிங்க ஞானியார்.

இதைப் படித்தவுடன் அந்தப் புஸ்தக மூட்டையை அவிழ்த்து ஒரு புஸ்தகத்தைத் திறந்துபார்த்தேன். முதல் பக்கத்திற்கு அடுத்தபக்கத்தில்,

இந்தப் புஸ்தகம்<br>கனம் பொருந்திய<br>**நாகரீகருக்கு**<br>அன்புசகிதம் அர்ப்பணம்<br>செய்யப்பட்டது.

என்று எழுதப்பட்டிருந்தது.

"சீனிவாசா! இந்த மனிதனைப்பற்றி உன்னுடைய அபிப்பிராயம் யாது? இந்தக் கடிதத்தால் என்னிடமிருந்து பணவுதவியை அவன் எதிர்பார்க்கிறான் என்பதை நீ அறிந்து கொள்கிறாய் அன்றா?" என்று நான் வினவினேன்.

"அவருடைய எண்ணம் அப்படி இராவிட்டால் உன்னுடைய பெயருக்கு அர்ப்பணம் செய்ய யாதுகாரணம்?" என்றான் சீனிவாஸன்.

"இதற்கு நாம் ஏதாவது அவருக்கு மரியாதை செய்யவேண்டாமா? உள்ளூர மனப்பூர்த்தியாகப் பணங்கொடாவிடினும் அவருடைய மனம் சந்தோஷம் அடையும்படியாக ரூபாய் 100 கொடுக்க நினைக்கிறேன்" என்றேன்.

"உன் இஷ்டம்போல் செய். அப்படி நீ கொடுப்பதற்கு முன் அவர் யோக்கியரா என்பதை யறிந்து கொடுப்பாயே யானால் உனது கொடை சிறப்பு வாய்ந்ததாகும்" என்றான்.

அதுவே நல்ல யோசனையாக மனதிற் பட்டமையால் அவருக்கு—வா
கவி (?) க்கு ஒரு கடிதம் இங்கு வரும்படி எழுதிவிட்டு அந்த விஷயத்தினின்
றும் வேறு பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்து பிரிந்தோம்.

வரகவி என்று வெகுபேர் பட்டம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.
இவர்கள் ஸாக்ஷாத் ஈஸ்வரனிடமே நேரில் சென்று வரம்பெற்று அவதரித்த
புலவர்கள்போலும்! இந்த வீண் வரகவிப் பட்டத்தைக்கண்டு சிலர் ஏமாந்து
போகிறார்கள். "தேசமெங்கும் புலவர்களெனத் திரியலாமே" என்ற
முன்னோரது கூற்று மிக்க ரஸமானது. இப்படியே ஞானியார் என்ற
பட்டத்தையும் சிலர் சூட்டிக்கொள்கின்றனர். இதுவும் வீண் ஆர்ப்பாட்டமே.
ஆச்சாரியார் என்ற பட்டத்தை ஜாதிப்பட்டமாகப் புனைந்திருப்போர் எப்படி
உண்மையில் ஆசார்ய புருஷர்களாகி விடுவதில்லையோ,-எப்படி பிள்ளை என்ற
ஜாதிப்பட்டத்தை சூட்டிக்கொண்டவர்கள் பிள்ளைகளாக—அதாவது குழந்
தைகளாக இல்லாமல் மீசை முளைத்தவர்களாக இருக்கிறார்களோ,—அப்
படியேபோல,—இந்த ஞானியார் என்பதும் ஒரு ஜாதிப்பட்டம் போன்றதே
யன்றி—இவர்கள் ஞானிகள் என்ற அம்ஸத்தில் சேர்ந்தவர்களாகமாட்டார்
கள். ஞானியார் என்பதனாலேயே ஏதோ பெரிய (!) வேதாந்தி—மகாநு
பாவர்—மகரிஷி—என்று மயங்கிவிடவேண்டாம்! எனக்கே நேரில் தெரிந்த
ஒருவர்— அவர் எப்போதோ முனிசிபல் கௌன்ஸிலராக இருந்துவிட்டவர்.—
இன்னும் அந்தக் கௌரவத்தை ஸ்தாபித்துக் கொள்வதற்காக இப்போதுங்
கூட தமது பெயருக்குக் கடைசியில் தம்மை லேட் முனிசிபல் கௌன்ஸிலர்
என்று குறிப்பிட்டுக்கொண்டு கீர்த்தி சம்பாதிக்கின்றார். ஐயோ! மூன்று
வருஷ வாழ்வான முனிசிபல் கௌன்ஸிலர் பதவியைக்கூட ஒரு பெரியபட்
டம்போலப் பாவித்துத் தடபுடல் செய்கின்றார்களே இவர்கள்! உலகத்து
விநோதங்கள் எப்படியிருக்கிறது பாருங்கள்!

ஒரு வாரத்திற்கெல்லாம் என்னுடைய பெயர் சகல தமிழ் ஆங்கிலப்
பத்திரிகைகளிலும் வாத்தலைப்பட்டது. என்னை முன்பின் அறியாதவர்க
ளெல்லாம் என்னைப்பற்றித் தங்களுக்குப் பிரமாதமாகத்தெரியுமென்று பட்
டாங்கடித்து தலையங்கம், கிளையங்கம், குறிப்பு, விசேஷக்குறிப்பு முதலி
யன எழுதலாயினர். அப்பத்திரிகைகள் யாவும் எனக்கு அனுப்பப்பட்டன.
இவ்விதமான வீண் ஆடம்பரத்தைக் கண்டு நான் மிகுதியும் வருந்தினேன்.

பொது நன்மையான விஷயங்களையும், பல்லாயிரம் மைல்களுக்கப்பா
லுள்ள வர்த்தமானங்களையும், புதிது புதிதாக ஆக்கப்பட்டும் அழிக்கப்பட்டும்
வரும் சட்டதிட்டங்களையும் தெரியப்படுத்துவதற்காக உள்ள பத்திரிகைகள்
இம்மாதிரி நரஸ்துதியில் ஏன் பிரவர்த்திக்கின்றனவோ தெரியவில்லை. பின்
னும் சில பத்திரிகைகளில் வீண் விதண்டாவாதங்களையும், அனாவசியமான—
எந்தவிதத்திலும் எவருக்கும் பயன்படாதனவாகிய—பல வினாக்களையும், அவ்
வினாக்களுக்கு விடைகளையும் எழுதி, பத்திரிகையின் பத்தியை நிரப்புகின்



றனர். இம்மாதிரியான பத்திரிகா அதிபர்கள் தங்களுடைய உண்மையான
பொறுப்பை நன்கு அறிகின்றார்களில்லை யென்றே சொல்லவேண்டும். வேறு
சில பத்திராதிபர்கள் தாம் பிழைக்கும் வழியை மட்டும் நன்கு தெரிந்துகொண்
டவர்களாக இருக்கிறார்களே யொழிய, உலகம் உய்யும்வழியைச் சிறிதும்
எடுத்துக் காட்டுகின்றார்களில்லை.

பொதுவாகப் பத்திராதிபர்களை மூன்று வகையாகப் பிரித்துக்
கூறலாம். அதாவது:—வெகு நாட்களாகப் பத்திரிகை நடத்திவந்து—நடத்தி
வருகிற—ஏராளமான தனத்தையும் கீர்த்தியையும் சம்பாதித்தவர்கள் ஓர்
சாரார். பத்திரிகைகளைப் பிரசுரிக்க முயன்று நிர்வகிக்க சக்தியற்றமையாலோ
வேறெந்தக் காரணத்தாலோ பத்திரிகைகளை நிறுத்திவிட்டவர்கள் மற்றோர்
வகுப்பார். "புலியைக்கண்ட நரி தன்மீது சூடுபோட்டுக்கொண்டதுபோல"
மேற்கண்ட இருவரையும் பார்த்துத் தாமும் பத்திரிகையை ஆரம்பம்செய்து
கீர்த்தி சம்பாதிக்க எண்ணும் பத்திரிகா ஆசிரியர் போன்றவர் மூன்றாவது பிர
வினர் ஆவர். முதலில் சொல்லப்பட்டவர்கள் வெகுகாலத்திற்கு முன்னர்—
அதாவது ஏறினால் குற்றம், இறங்கினால் அபராதம் என்று பயமுறுத்தப்பட்ட
காலத்திற்கு முன்னர்—ஆரம்பம்செய்து வந்தவர்களாகவேண்டும். அந்தக்
காலத்தில் பத்திரிகையின் தாத்பரியம் தெரியாதபோதிலும், தினமும் தன்
வீட்டுக்குத் தபால்காரன் வந்தால் அதுவும் ஓர் கௌரதை என்றெண்ணி வர
வழைத்து வந்தவர்கள் அநேகர். பத்திரிகை என்பது நூதனமாகையாலும்,
நம் மனமானது எப்பொழுதும் நவீனமானதிலேயே செல்லும் இயற்கை
யுடையதாகையாலும் அநேகர் ஏதேஷ்டமான பொருளுதவிசெய்து அவை
களை ஆதரித்துவந்தனர். இன்னும் விளம்பரம் என்னும் படாடோபத்தில்
பவுனையே சம்பாதிக்கும்படியான ஹேதுவும் இருந்தது. இப்பொழுதல்
லவோ தகுந்த பொருள்களைப்பற்றி உண்மையானபடி விளம்பரம் செய்த
போதிலும், படிப்பாளிகள் கவனிப்பதில்லை. அக்காலத்தில் அச்சானதை அச
ரீரி வாக்கியமாகக் கொண்டிருந்தனர். இவைகளுக்கெல்லாம் ஆதிகாரண
மாகிய அச்சாபீஸின் இரகசியம் வெகு சிலருக்கே தெரியவரும். நிற்க,
இந்தத் தலைப்பின் கீழ் வந்துள்ள பத்திராதிபர்கள் வெகு சிலரே யாவர்.

இரண்டாவதாகிய—ஆரம்பம்செய்து நிறுத்திவிட்டவர்களின் சங்
கதியோ வெகு விநோதம். ஆரம்பகாலத்தில் இவர்களுடைய அட்டஹாஸம்
செப்புந்திறனில் அடங்காது. இவர்கள் பெயர் எடுக்காமல் போவதற்குப்
பல காரணங்கள் உள. முதன்மையானது இவர்களை ஆதரிப்போர் இல்லாமை.
கையில் பணம் உள்ளவரையில் அச்சாபீஸையும் ஏதேஷ்டமான சித்திரவேலை
களையும் பணம்கொடுத்து வாங்கிப் பத்திரிகையை வெகு அழகாக நடத்தி,
"பணம்" என்றுகேட்டால் பெரிய மனுஷ்யர்கள் எங்கு கோபம்கொள்
வார்களோ அல்லது அகௌரதையாக நினைப்பார்களோ என்று அஞ்சி, பத்
திரிகையை அனுப்பிக்கொண்டே இருப்பார்கள். பணம் என்ன இவர்க
ளுடைய வீட்டில் விளையுமோ? வெகு சீக்கிரம் "இவால்" தான்! பத்திரி

கையை நிறுத்தி அச்சாபீஸையும், விற்றலன்றி ஜீவனோபாயத்திற்கு வழியில்லை என்றாய்விட்டால், வேறென்ன செய்யமுடியும்? “இடிக்கிறவன் ஒன்றை நினைத்துக்கொண்டு இடித்தால் குடிக்கிறவன் ஒன்றை நினைத்துக் கொண்டு குடிப்பான்” என்று சொல்வதுபோல இவர்கள் ஏதாவது ஓர் விஷயத்தைப்பற்றி எழுதினால், இவர்களை அறியாமலே காரமான வார்த்தைகள் விழுந்து விடுவதும், இதன் தாத்பரியம் எழுதினவனுக்கோர் விதமாகவும் படிப்பவருக்கு வேறு மாதிரியாகவும் பட்டுவிட்டால் அனர்த்தந்தான். இந்த நிலைமையில் பத்திரிகையை நிறுத்திவிட்டாலன்றி இலக்ஷ ரூபாய் கட்டிடத் தீர்ந்துச் செல்லவேண்டியவராக இருக்கையில் வேறு வழியேது?

மூன்றாவது பிரிவினராகிய ஆரம்பப் பத்திரிகாதிபர்கள் முன் சொல்லப்பட்ட முதல் வகுப்பினர்களைக் கண்டு பொறாமை கொண்டும், இரண்டாவது தலைப்பின் கீழ்வந்தவர்களைக்கண்டு நகைத்தும் இறுமாப்புக்கொண்டு பத்திரிகைகளை ஆரம்பம் செய்வார்கள். இவர்களைப்பற்றி எழுத ஆரம்பிப்போமானால் இடமும் போதாது, நேரமும் இல்லை. கலெக்டர் உத்தரவு பெறுவதே மஹாகடினம். அதைப்பெற்று ஆரம்பம் செய்ய அச்சாபீஸின் தயவைச் சம்பாதிப்பதில் படும் கஷ்டம் அனுபவித்தவர்களுக்கே தெரியும். முதல் இரண்டு மாதங்கள் வெளிவரும் நேர்மையும் பத்திராதிபரின் ஊக்கமும் சாமானியமானதாக இராது. ஒவ்வோர் பிரசுரமும் ஆயிரம் இரண்டாயிரம் பிரதிகளுக்குக் குறையாமல் வெளியில்போகும். அந்தப் பத்திரிகை யார் யாருக்கு அனுப்பப்பட்டதோ அவர்கள் சந்தோஷமாகப் பெற்றுக்கொள்வதோடு பலரிடம் புகழ்ந்தும் பேசுவார்கள். பணம் என்பதைக் கேட்டுவிட்டால் இந்தப் பத்திரிகையைப்பற்றிக் கனவிலும் நினையார்கள். நாட்கள் செல்லச் செல்ல பத்திரிகையை நிர்வகிப்பதின் பொறுப்பை நன்கறிவார்கள்.

பத்திராதிபர்களின் வகுப்பு இவ்விதமாக,-இனிப் பத்திரிகை நடத்துவதில் உள்ள கஷ்டநஷ்டங்களை ஆராயப்புகுமிடத்துக் கொஞ்ச‘நஞ்ச’மல்ல. ஒவ்வோர் பத்திரிகைக்கும் சொந்த அச்சாபீஸ் அத்தியாவசியம். இதற்குச் சக்தியற்றவர்கள் அச்சாபீஸ்காரர்களை நல்ல வார்த்தைகளால் சமாதானப்படுத்த வேண்டும். சிலருக்குச் சொந்தமாகவே எல்லா விஷயங்களையும் எழுத முடியாது. அதற்கென்று பிறருடைய தயவை எதிர்பார்க்கவேண்டும். சில பத்திராதிபர்களுக்கு நல்லகாலம் இருந்தால் தானாகவே பலரும் அருமையான கதைகளையும், விஷயங்களையும் எழுதியனுப்புகின்றார்கள். இதை வைத்துக் கொண்டு அட்டஹாஸம் செய்வோர் பலர். இதில் வெளிவருகின்ற அநேக நவீன கதைகளைப் பல புத்தகங்களாக்கி ஏராளமான லாபத்தை அடைகிறார்கள். ஆனால் அவைகளை எழுதியவர்களுக்கு அந்தப் பணத்தில் ஒட்டிய தூசியும் கிடைப்பதில்லை. ஐயோ பாவம்! “கிளியை வளர்த்துப் பூனை கையில் கொடுத்ததுபோல்” எவ்வளவோ கஷ்டப்பட்டு எழுதிய கதைகளை இவர்களிடம் கொடுக்கிறார்களே! இவர்களை நினைக்கையில் தான் பரிதாபமாக



இருக்கிறது. இன்னும் சிலர் கத்தரிக்கோலைக் கையிலேந்திப் பத்திராதிபர்கள் என்னும் பெயரை வகிக்கிறார்கள். இறகை வைத்து இந்தப் பெயர் வாங்குவதைவிடக் கத்தரிக்கோலை வைத்து எல்லாப் பத்திரிகைகளிலிருந்தும் விஷயங்களை எளிதில் கத்தரித்து விடலாமென்று கண்டுபிடித்த இவர்களுடைய மதியூகித்தனம் பெரிதும் பாராட்டற்பாலது. ஆனால் ஒரு விஷயம்; கத்தரிக்கோலின் உதவி ஒவ்வொரு பத்திரிகாசாலைக்கும் தேவையே. இன்னொரு பத்திரிகையில் விசேஷித்த செய்தி இருந்தால் அதைத் தமது பத்திரிகையில் பிரசுரித்துக்கொள்ள நேரிடுவது சகஜம். ஆங்கிலத் தினசரிப் பத்திரிகைகள் தந்திகளைப் பார்த்துக் கொண்டு விஷயங்கள் எழுத, சுதேச பாஷைப் பத்திரிகைகளோ அந்த ஆங்கிலப் பத்திரிகைகளைப் பார்த்துக்கொண்டு அதன் மொழிபெயர்ப்பாக எழுதத் துவக்குகின்றன.

இதில் இன்னொரு வேடிக்கை! பத்திரிகைகளுக்கு நிருபம் எழுதுவோரின் பெயர்கள் வெகு விநோதமாயிருக்கும். “கண்டதுரைப்போன்” “உற்றது சொல்வோன்” “குதிரைக்குட்டி” “கூழைக்குடுமி”—இப்படிப்பட்ட அழகான மறுபெயர்களுடனும் தோன்றுவார்கள். இந்த நிருபர்கள் தாங்கள் எழுதிய விஷயம் பத்திரிகையில் வந்ததைப் பார்த்தவுடனே தங்களுக்கு இந்திரபட்டம் கிடைத்தது போன்று மகிழ்வார்கள். தங்கள் பெயர் எங்கும் பரவிவிட்டதென்பது இந்த நிருபர்களின் குருட்டு எண்ணம்! பத்திராதிபரோ இப்படிப்பட்ட குருட்டு எண்ணக்காரர்களின் வியாசங்களால் பத்திரிகையை நிரப்பிவிட்டு தமது வேலையைச் சுலபத்தில் முடித்துக்கொள்கிறவராயிருக்கின்றார். இவர்களுக்கு ஒரு பத்திரிகை இனாமாக வருவதைத் தவிர்த்து வேறொரு பிரயோஜனமும் கிடையாது. இதுபோக, இனி பத்திரிகைக்கு ஏஜண்டு ஆக இருப்பதாய் கௌரவம் (?) பாராட்டுகிறவர்களும் சிலர் உண்டு. இந்த—பத்திரிகை ஏஜண்டு வேலை தபாற்காரனுடைய வேலையிலும்,—ஏன், கூலிக்காரனுடைய வேலையிலும் கடைகெட்டது. தபால்காரனுடைய வேலை குறிப்பிட்ட ஒரு இடத்திற்குள் தானே சுற்றுவதாயிருக்க, இவர்களுடைய வேலையோ ஊர் முற்றிலும் சுற்றி, நாயைப்போல் அலைந்து, பத்திரிகைகளைக் கொடுத்துவிட்டு வரவேண்டியதாயிருக்கும். சிலர் இரண்டொரு வேலைக்காரர்களை வைத்துக்கொண்டு அவர்கள் மூலம் பத்திரிகைகளையனுப்பி, வெளிப்பார்வையில் மிகுந்த ஆரவாரம் காட்டிச் செல்வதுமுண்டு. என்னகாட்டினாலும், ஒரு உதவிப்பத்திராசிரியருக்குள்ள,—ஏன், ஒருநிருபருக்குள்ள—பெருமை, அந்தஸ்து இவைகள் ஏஜண்டுகட்குக் குட்டிக்கரணம் போட்டாலும் கிடைக்காது. பத்திரிகை சந்தாதார்களில் ஏமாந்தவர்களிடத்தில் தான் இவர்கள் தங்களுடைய ஏஜண்டுத் தனத்தைக் காட்டலாம். பத்திராதிபரோ இவர்களுக்கு எழுதும் ஒவ்வொரு கடிதத்திலும் “புதிய சந்தாதார்களைச் சேர்த்தனுப்பவும்” என்ற பல்லவியைத் தவறாமல் குறிப்பிட்டு வருவார். மொத்தத்திற்கு இந்த ஏஜண்டுகளால் பத்திராதிபருக்குக் கொழுத்த காசே தவிர, ஏஜண்டுகளுக்கு ஒரு லாபமும் இல்லை. இல்லையானாலும்,

வெளிப்பார்வைக்கு ஏதோ இருப்பதுபோலத் தான் காண்பித்துக்கொண்டு காலந்தள்ளவேண்டியிருக்கிறது. இரண்டு நாள்வேலை செய்யாதிருந்துவிட்டால் ஏஜண்டு வேலை ஓடிப்போகும். புது ஏஜண்டு அந்த வேலைக்கு வந்துவிட, முந்திய ஏஜண்டு பட்ட பாடெல்லாம் மண்ணாகிப்போம்! ஏஜண்டு பதவியின் யோக்கியதையும், பத்திராதிபர்களின் லக்ஷணமும் இவ்வளவிலிருக்கிறது. இன்னும் எவ்வளவோ சொல்லலாம்; விவரிக்கிற பெருகும்.

கொஞ்சநாளைக்குப் பிறகு எனக்குப் பல கவிதைகள் வந்தன. அவைகள் யாவும் தமிழ் வித்வான்களால் எனக்குப் பாடப்பட்ட வாழி விருத்தங்களாக இருந்தன. இவர்கள் வாழி என்றதனால் அதிக சுகஜீவியாகவும், இல்லாவிட்டால் சுகஹீனனாகவும் நான் ஆகமாட்டேன் என்பதை இவர்கள் உணராமல் போனதுதான் மிகவும் வியசனப்படக்கூடிய விஷயமாக இருந்தது. இவர்களுக்குப் பாடும் சக்தியையும், ரோகமற்ற சரீரத்தையும், மற்றெல்லாப் பிறவிகளையும் விடச் சிறந்த மானிடப்பிறவியையும் தந்தருளிய எந்தையை, தயாளுதராகிய இறைவனை, மாசற்ற குணநிதியை, மனமாறப் பாடி வழிபடுவார்களானால்; இவர்கள் இறைவனுடைய எல்லையற்ற நற்குணங்களைப்பற்றியும் அவரால் உண்டாக்கப்பட்ட சிருஷ்டி வர்க்கங்களைப் பற்றியும் பாடுவார்களாயின்,—பாடுபவர்களுக்கும்—அப்பதங்களைக் கேட்பவர்களுக்கும் எவ்வளவு ஆநந்தமாக இருக்கும்! வீண்.நரஸ்துதியால் பயனென்ன? காலணா கொடுக்கும் இந்த மனிதர்களைப் பாடவா நம்முடைய அழகிய நா உண்டாக்கப்பட்டிருக்கிறது? அதனுடைய அமைப்பையும் அழகையும் துவளுந் தன்மையையும் கண்ட நாம்,—பகுத்தறிவுடைய மனிதர்களாகிய நாம்,—அஃது இறைவனுடைய குணாதிசயங்களைப் பாடவேற்படுத்தப்பட்டிருக்கிறதென்பதை ஏன் அறிந்துகொள்ளக் கூடாது? நான் இவ்வித யோசனையிலாழ்ந்திருக்கும் நேரத்தில், எனது அன்பிற்குரிய இன்னுயிர்க்காதலியாம் விலாஸவதி என்னை யணுகி, "அத்தான், போஜனம் தயாராக இருக்கிறது" என்று வணக்கத்துடன் புகன்றாள்.

"கண்மணீ, விலாஸம்! என்னருகே வந்துட்கார். வேறு அலுவலதிகம் இருக்கிறதோ?" என்றேன்.

"நாதா! தங்களுடைய உத்தரவை விட வேறு அலுவல் எனக்கென்ன இருக்கிறது." என்று சொல்லிக்கொண்டு .என்னைச் சமீபித்தாள். முதலில் அவளைப் பரீக்ஷிக்கவே அவ்விதம் கேட்டேன். அதாவது நான் சொன்னபடி நடக்கிறாளா என்று அறியவே. நான் உட்காரும்படி சொல்லியதற்கு அவள் என்னைச் சமீபித்ததே அவளுடைய நாணத்தைக் குறிப்பித்தது.

அவளை நான் கட்டியணைத்து என் மடியின் மீதிருத்தி "விலாஸம்! நீயே என்னுடைய உயிரின் மற்றைப்பாதி. ஒவ்வொரு ஜீவனுக்கும் மற்றொருபாதி என்பதுண்டு; அந்த மற்றொரு பாதியை அடைந்த பிறகே



ஜீவனுக்கு ஸக்தி அதிகமாகின்றது; பிறகு அவன் [ஜீவன்] இறைவனைக்கண்டு கொள்ளக் கூடியவனாகிறான். இந்த விதமான மற்றைப் பாதி 'தேவசரீரத்திலிருக்குமோ மனித சரீரத்திலிருக்குமோ என்று கண்டறியவே—நம்முடைய புத்தியை ஒருநிலைப்படுத்தி, நம்முள் அழுந்திக்கிடக்கும் ,அளவற்ற மின்சார சக்தியை விருத்திசெய்துகொண்டு போகவேண்டும். இந்தப் பாதியை அறிந்துகொண்டபிறகு இறைவனுடைய தத்துவத்தை உணர்தல் அதிக சுலபம். நானோவெனில் இந்தவிதமான எந்த சிரமும் எடுத்துக்கொள்ளாமலே உன்னைக் கண்டுபிடித்து உனக்கு நாயகனானேன். இனி நம்முடைய ஜீவன் மோக்ஷத்தை யடையும் என்ற முழு நம்பிக்கையுடனும் இருக்கலாம்" என்று இறைவனைப்பற்றியும், மானிட மின்சாரத்தைப் பற்றியும் என்னுடைய உண்மையான கருத்தைத் தெரிவித்தேன். நான் மானிடமின்சாரத்தைப்பற்றியும்,ஜீவனின் மற்றொரு பாதியைப் பற்றியும் சொல்லும்பொழுது அவளுடைய முகம் ஒருவிதமான புதுமாதிரியாய்ப் பிரகாசித்தது. அந்த மாறுதல்களால் முன்னையினும் அதிகமான எழிலுடன் அவள் விளங்கினாள். அஃதொன்றிலிருந்தே அவளைத் தேவாம்ஸமான புனிதவதி என்றும் நிச்சயம் செய்தேன்.

பிறகு இருவருமாகப் போனகம் அருந்தப் பாகசாலையிற் புகுந்தோம்.

## அத்தியாயம். 6.

## அறிமுகமானவரே! கடைசி வந்தனம்.

கௌரதை அகௌரதை, நன்மை தீமை, அவசியம் அனாவசியம் இன்பம் துன்பம், இவையும் இவைபோன்ற சுகம் துக்கம் முதலியவையும் சொல் மாத்திரையில் வேறுபட்டிருக்கின்றனவே யொழிய, உண்மையான கருத்து ஒன்றே என்பது என்னுடைய கொள்கை. நம்முடைய சாதாரண அறிவைக்கொண்டு மேல் காட்டி இருக்கும் பதார்த்தங்களைத் தெரிந்துகொள்ளுவது என்பது இயலாத காரியம். மனதை ஒரு நிலைப்படுத்தி இவைகளைக் கவனித்தால் உண்மை விளங்கும். இப்பூவுலகம் சம்பந்தப்பட்ட மட்டில் மேற்காட்டப்பட்டுள்ள பதங்கள் வேறு வேறாகவே தோன்றுமாயினும், நம்முடைய ஜீவன் சம்பந்தப்பட்ட மட்டில் ஒன்றாகவே தான் தோன்றும்.

ஆகையால் மனிதர்கள் இவைகளை வேறுவிதமான கருத்துடன் கூடியவைகளென்று எண்ணுவார்களாயினும் இவைகளைப்பற்றி எனது அபிப்பிராயம் வேறு. செல்வவானாக இருப்பது கௌரதை எனவும், தரித்திரனாக இருத்தல் அகௌரதை எனவும் எண்ணுவது பேதமை யென்றும்; கல்யாண குணங்களனைத்தும் நிறைந்த கருணைக்கடலாகிய கடவுளை ஏமாற்றினோமென்று எண்ணுதல் தான் அகௌரதை என்றும்; அவரை ஏமாற்றுவதென்பது நம்

முடைய சக்தியில்லை என்பதை அறிந்துகொண்டோமாயின் அஃதே கேள்ர்தை என்றும்; நம்முடைய வாழ்நாட்களில் எதிர்ப்படும் ஒவ்வொன்றும் நம்முடைய நன்மைக்கே இறைவனால் அளிக்கப்பட்டிருக்கின்றன வெனவும், நாம் இப்புவியில் ஏன் உண்டானோம், உண்டாவதற்குமுன் எந்த விதமாக இருந்தோம், கடைசியில் எந்தவிதத்திலிருப்போம் என்பதையும் இவ்வளவு கருமங்கட்கும் ஆதிகாரணர் யார் என்பதையும் அறிந்துகொள்ள வேண்டியதே அவசியமென்றும்; மற்றவை யனைத்தும் அனாவசிய மென்றும்; சகலபுவனங்களும் அண்டாண்ட சராசரங்களும் யாருடைய கட்டளையின் பிரகாரம் தத்தம் தொழில்களைச் செய்கின்றனவோ, எவருடைய உண்மையான ரூபத்தையும் குணங்களையும் வேதங்கள் கூட முற்றும் சொல்லுவதற்கு சாத்தியப்படாமல் விழிக்கின்றனவோ, அப்பரஞ்சோதியை அவ்வருட்சாகரத்தைக் கண்டானந்திப்பதே இன்பம் என்றும்; அத்தகையாருக்குத் துன்பமே கிடையாது என்றும், நான் சித்தாந்தப்படுத்திக் கொண்டிருப்பதைச் சிறிதும் அறியாதவர்களாகிய என் நேயர்கள் இந்த வீண் கௌரதையையும், பயனற்ற நன்மையையும், தோன்றி மறையும் இன்பத்தையும் பற்றி என்னிடம் பலவாறு பேசினார்கள்.

என்னுடைய கருத்தையும் மனப்போக்கையும் இவர்களுக்குச் சொல்லுவதவமே என்பதை யறிந்து வாளாவிருந்தேன். இந்தவிதமான விஷயங்களை யோசிக்கவேண்டுமாயினும், விருத்தி செய்யவேண்டுமாயினும் என் காதலி விலாஸவதியை மட்டும் நான் அழைத்துக்கொள்ளுவேன். அவளோ மஹா புத்திசாலி. ஆயினும் மாதரார்க்கென்றே அமைந்த நான்கு நற்குணங்களில் ஒன்றான மடமையென்னும் போர்வையால் போர்த்தப்பட்டவள். நான் கேட்டாலன்றி ஒருவிதமான பதிலாவது அபிப்பிராயமாவது சொல்ல முன்வராள். ஆம், உண்மையே. யாவும் அறிந்திருந்தும் அறியாதது போன்று காட்டி கணவனிலும் தான் மேன்பாடுற்றவளென்று தோன்றவைத்துக் கொள்ளாமல், அரசனுக்கு அமைச்சன்போன்று அடங்கி நடந்து — "வரும் பொருளுரைத்து" நிகர்வியாக விளங்குதற்கே மடமை என்று சிறப்பிக்கப்படுகின்றது. எனது நேயர்களுடைய சேர்க்கையால் சுமார் நான்கு லக்ஷரூபாய் போல் வீண் செலவாயது. பணச்செலவை யான் சிறிதும் இலக்ஷியம் செய்பவனில்லையாயினும், அவர்களுடைய சம்ஸர்க்கத்தைச் சிறிதும் விரும்பினேனல்லேன். அவர்களுடைய சேர்க்கையைத் தவிர்க்க எண்ணி ஒரு யோசனைசெய்து சீனிவாஸனை யழைத்து "சீனிவாசா, நீ எனக்கு வெகு நாளைய நண்பனாகையால் உன்னிடம் இதைச்சொல்ல முன்வந்தேன். நாம் சிலவருஷங்களுக்குமுன்னர் சென்னையில் வாங்கிய "இரமணீய விலாஸ" த்தை சென்றவாரத்தில் விற்றுவிட்டேன்" என்றேன்.

இதைக்கேட்ட சீனிவாசனுடைய முகம் திடீரென்று இருளடைந்தது. நான் கூறிய மொழிகளால் கட்டுப்பட்டவனாகிப் பேசவும் சக்தியற்றுப் பிரமித்தான்.



"அன்பா, உன்னுடைய மனோவேதனையை இந்த நிமிஷமே போக்குகிறேன்.

இப்பொழுது நான் சொல்லப் போவது எங்களுடைய சொந்த ரகசியம். என்னுடைய சொத்து சுமார் நான்கு லக்ஷமிருக்கும், அதில் இரண்டு லக்ஷத்திற்குமேல் சென்னை வகையில்,—அதாவது "இரமணீய விலாஸம்" வாங்கியதிலும், "நகரீகான்" என்ற பட்டத்தைப் பெற முயன்றதிலும், முன்சிபல் கௌன்சிலராகப் பிரயத்தனப்பட்டு போட்டி போட்டு விருந்து ஏற்பாடுகள் செய்ததிலும், மகாசபைக்கு மெம்பராவதற்காக முயன்றவகையிலும் மற்றுமுள்ள சில்லரையிலுமாகச் செலவாய்விட்டது. காப்பி கிளப்புக்குமட்டும் ஐம்பது ஆயிரம்ரூபாய் செலவழிந்திருக்கலாம். இந்த நாளில் காபிகிளப்பும் தாசிவீடும் பணவிரயத்திற்கு வெகு பொருத்தமானதாகக் காண்கிறது. காபிகிளப்பில் எவ்வளவு உண்டாலும் பசியைஜெயிக்க முடிகிறதில்லை. அப்படியே தாசிகளில்லத்திலும் காமத்தை ஜெயிக்க சாத்தியமாகிறதில்லை. வரவர விருத்தி பெறுகிறதேயன்றி தணிந்து காட்டுவதில்லை. நமது சொந்த இல்லத்தில் உண்டாலோ எவ்வளவோ திருப்தியும் சந்தோஷமும் ஜீரணசக்தியும் ஏற்படுகின்றன. அப்படியே சொந்தமனைவியினுடன் சுகித்தல் ஈருலகவாழ்க்கைக்கும் உத்தமமாக அமைவதன்றி, சிற்றின்பத்தை சகித்து நிர்வகிக்கவும் இல்லற நியமங்களால் கூடுமானதாக இருக்கிறது. இது நிற்க, எனக்கு இருக்கப்பட்ட சொத்துகளுக்கு மேற்பட்டே கடன் இருப்பதால் யாவற்றையும் இரகசியமாகவே விற்றுவிட்டேன். இப்போதுமிருந்தது நானும் என் மனைவியும் என் குழந்தைகளுந்தான். உலகத்தில் கௌரவம் தேட முயன்றதிலும், வீண் ஆடம்பரத்தைக் கருதியதிலும், பயனற்ற மடையர்களைப் பெரியோர்களாக அவர்களின்—அட்டகாசங்களால் மதித்து, அவர்களுடன் சகவாசம் செய்து கண்டபடி செலவிட்டத்திலுமிருந்து நான் கண்டபலன் கடைசியாக இது தான்" என்று முகத்தை மூடிக்கொண்டு புலம்பினேன்.

என் வார்த்தைகளைக் கேட்டதும் சீநிவாசன் மிகுதியும் வருந்துவான் என்று நம்பினேன். அவனோ சொல்லென்று சிரித்துவிட்டு "எனக்கு மிகுதியும் அறிமுகமானவரே! உமக்கு எனது கடைசி வந்தனம்" என்று கூறி, தனது மோட்டார் சைகிலில் ஏறிக்கொண்டு போய்விட்டான். நான் அவன் நடந்துகொண்ட விதத்தைப்பார்த்துப் பிரமித்துப்போனேன்! ஆஹா! தோழனோடும் ஏழைமைப்பேசேல் என்பது என் விஷயத்தில் இப்படியா உண்மையாகவேண்டும்? இதுவரை என்னை நண்பன் என்று அழைத்தவன் இப்போது நான் எளிய நிலைக்கு வந்ததும் வெகு தெளிவாக அறிமுகமானவரே என்று அழைத்தனனே! என்ன ஆச்சரியம்!! ஆம் அதுவும் சரியே. பணம் இருக்கும்வரையில் நண்பன்; அது அகன்றால் அறிமுகமுள்ளவன்: சரிதானே இது; என்று எனக்குள்ளாகவே சொல்லிக்கொண்டேன். மறுநாள

சீனிவாசனை விசாரித்ததில் அவன் ஜப்பானுக்குப் புறப்பட்டுப் போய்விட்டானென்றும் கேள்விப்பட்டேன். பத்திரிகைகளிலும் அந்த செய்தியைப் பார்த்தேன். ஐயோ சீனிவாசனைக் காணாமலே யிருந்திருந்தால் இந்த நாகரீக ஆடம்பரங்களெல்லாம் நமக்குப் பழக்கமாகாமல். நமது சொத்துகளும் அழியாமல், நாம்எவ்வளவோசுகமாக கிராமவாழ்விலிருந்திருக்கலாமே. என்று ஏங்கினேன்! என்னுடைய சொத்துகள ஒழிந்துபோனாலும் அதைச் செலவிட்டதிலிருந்தும் நான் பெற்ற அநுபவம் வெகு பெரிது. சீநிவாசனால் எனக்கு இந்த ஒரு உபகாரம் மட்டும் கிடைத்தது. இந்தக் காலத்தில் எவரை உண்மையான சிநேகிதர்களெனச் சொல்லுதென்று என்னுடைய பெரிய அநுபவந்திலிருந்துங் கூடத் தெரிந்து கொள்வதற்கு முடியாதவனாக இருக்கின்றேன். எல்லா நண்பர்களுமே நேரிற்கண்டால் வெகு ஆப்தர்களாகவும் நமது இஷ்டம்போல் நடப்பவர்களாகவும், அவர்களைப் பிரிந்துவந்த பிறகோ உடனே நம்மை மறந்தவர்களாகவும், ஆனால் காகிதத்தில் மட்டும் வெகு விஸ்வாசமும் பக்ஷமும் காண்பிப்போராகவும், சிலர் அந்தக்காகிதம் கூட எழுத மனம் வராதவர்களாகவும், சிலர் கடிதத்தை எழுதிப் பெட்டியிலே வைதது விட்டு அந்த நண்பர்கள் மறுபடி சந்திக்கையில்,– "தங்களுக்குக் கடிதம் எழுதிவிட்டேன்; ஆனால் தபாலில் போடத்தருணம் வாய்க்கா தொழிந்த" தென்று அக்கடிதத்தை அப்போதெடுத்துக் காட்டுவோராகவும் இப்படிப் பலமாதிரியான வகையில் காணப்படுகின்றார்கள். எல்லாவற்றிலும் சீநிவாசன் கடைசியில் என்னிடத்தில் நடந்துகொண்ட விதம்தான் எனக்குப் பெரிய திகைப்பாயிருந்தது. என்னுடைய செல்வத்தின் நிமித்தம் எனக்கு நேயரான பலருடைய உண்மை அன்பைச் சோதிக்கும் வண்ணம் ஒருமுறை சென்னைக்குச் சென்றேன். பலர் என்னைப்பார்த்து எனக்கு ஏற்பட்ட நஷ்டத்தைப் பற்றி விசனம் பாராட்டுபவர் போலப் பாவனைசெய்தனர். சிலர் எனக்கு அறவுபதேசம் செய்யத் தலைப்பட்டு "எல்லாம் ஈசன் செயல்" என்றனர். வேறு சிலர் என்னைக் கண்டும் காணாதவர்போல நடித்துச் சென்றனர். கடைசியாக ஒருவராவது என்னைப் போஜனத்திற்காவது, காப்பி ஹோட்டலுக்காவது அழைத்தார்க ளிலர். நான்பெற்ற நாகரீகன் என்பனவாதிய பட்டங்கள் அப்போது எனக்குப் பசியை ஆற்றுமா வென்று பரிசோதித்தேன். ஐயோ! அவற்றின் யதார்த்தமான உண்மையை அப்போதுதான் கண்டறிந்தேன். என்செய்வேன்! பசிப்பிணி அதிகரித்தது. பிறகு ராஜா ஸர் சவலை ராமசாமி முதலியாரது சத்திரத்திற்குச் சென்று அங்கு இருக்கவிட்டு வந்த விலாஸவதியையும் உடன் அழைத்துக்கொண்டு, கண்காணாத நாட்டிற்கு ஓடிவிடத் தீர்மானித்துக்கொள்ளலானேன். நன்றாய் வாழ்ந்த ஊரில் நலங்கெட வாழ்தற்கு மனந்தான் எப்படி ஒப்பும்?

நான் எண்ணிய எண்ணம்—அதாவது இந்தப் போலி நேயர்களை விட்டு விலகவேண்டுமென்னும் எண்ணம் கைகூடியவுடன் ஸந்தோஷத்தோடு புறப்பட்டு கங்கா யாத்திரையாய்ப் பிரயாணம் தொடங்கினேன்.



"இந்தக்காலத்தில் நேயமென்பதெல்லாம், அநேகமாகப் பணத்தைப்பற்றியதாக இருக்கிறது. அப்படிப்பட்ட நேயம் பணத்தைப்போல்அழியுந் தன்மைத்தாகவே விளங்கும். ஆனால் மனவொற்றுமையினால் உண்டாகிற நேயம்மட்டும் ஒருபொழுதும் நீங்காது. என்னுடைய பணத்தின் நிமித்தம் சேர்ந்த நேயர்களனைவரையும் தியஜித்துவிட்டேன். இவர்களுடைய சேர்க்கையினாலும், இவர்களுடைய சம்பிரதாயத்தைச் சிறிதுகாலம் அனுஷ்டித்ததாலும், பல போலி நாகரீகக் கொள்கைகளை அறிந்து கொண்டேன். என்னுடைய மற்றொரு பாதியாகிய எனது உண்மைக்காதலியிடம் என் நேயர்களைப்பற்றிய சகல சங்கதிகளையும் சொன்னேன். அதற்கு அவள் "நேசர்களைத்தான் பார்த்தாய்விட்டது, இனி கோகிலா இடம் போய்ப் பாருங்கள்" என்றாள். அப்படியே அங்கும் போனேன். ஹா என்ன ஆச்சரியம்! கோகிலாவின் வீட்டில் சீநிவாசனைக் கண்டேன்! அவன் ஜப்பானுக்குப் போகவில்லையென்ற உண்மை அப்போதுதான் தெரிந்தது. பிரமித்து நின்றேன். பிறகு ஸ்ரீநிவாசனைத் தேடியதில் அவன் இன்னொரு வாசல் வழியாக வெளியில் சென்றுவிட்டதாக அறிந்தேன். அதில் நம்பிக்கையின்றி கோகிலாவின் வீடு முற்றிலும் பரிசோதித்தேன். காணோம். அவன் அன்றுமாலை ஜப்பானுக்குப் போவதாகத்தெரிந்தேன். கோகிலாமட்டும் என் விஷயத்தில் மிகுதியும் அநுதாபப்பட்டு, தான் திரவியசகாயம் செய்வதாகவும் அதைக்கொண்டு வர்த்தகத்தில் பிரபலமடையும்படியும் கூறினாள். எல்லாம் தித்திப்பான வாய்ப்பேச்சே தவிர, பணங் கொடுத்தனுப்பியவளல்ல. கடைசியாக கல்கத்தாவில் ஒரு பாங்கிக்கு நாலாயிரம் ரூபாய்க்கு ஒரு செக் கொடுத்தாள். சந்தோஷத்துடன் பெற்றுக்கொண்டு திரும்பினேன். அதைக் கல்கத்தாவில் மாற்ற முயன்றபோது அதில் குறிப்பிட்டிருந்த பாங்க் முறிந்து ஒழிந்துபோய் மூன்றுவருஷம் ஆகிறதென்று ஒரு பைராகி கூறினான். பலரை விசாரித்தபோது அது உண்மையேயென்றறிந்து கோகிலாவின் நயவஞ்சகச் சூழ்ச்சியை எண்ணி மனம்புண்ணானேன். அந்தமட்டில் கோகிலா வெகு கெட்டிக்காரிதான். அவள் என்பால் பாராட்டிய அநுதாபம் இப்படியாக முடிந்தது. பொதுவாக விலைமகளிரின் அநுதாபமே இப்படித்தான் இருக்குமென்ற உண்மையை நன்கு கண்டுகொண்டேன்.

மனிதர்கள் நாகரீகமுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்றால்,—ஆத்மஞானிகளாக இருக்கிறார்கள் என்பதுதான் உண்மையான பொருளேயொழிய,—உலகாயதமான பொருள்களை நவீன முறையில் ஆண்டு அநுபவிப்பது அன்று என்பதை விளக்க, என்னுடைய உண்மைச் சரிதையை இங்கு கூறலானேன். உண்மை நாகரீகமாகிய ஞானத்தை நம் ஸகோதரர்களுக்கு அளித்து, இந்தப் போலி ஆடம்பரக் கௌரவப் பிரதாபக் காட்சி விநோத விலாசங்களான அஞ்ஞானத்தினின்றும் மீட்பித்து, எல்லாம் வல்ல

இறைவன் நம்மை இரக்ஷிப்பாராக. கடைசியாக ஒரு வார்த்தை; கதாரம்பத்தில் உங்கள் முன்னர் தோன்றியபோது நான் லக்ஷாதிபதி! உங்களிடமிருந்து விடைபெற்றுச் செல்லுகின்ற இப்போதோ நான் பிக்ஷாதிபதி!! வாசகர்களே போய்வருகின்றேன் நீங்கள் நீடுழி வாழ்க.

## அத்தியாயம் 7.

## இறந்தபின் கீர்த்தி.

என்ன செய்கிறது; திவான் பகதூர் ராமநாதமுதலியாரன்றோ அழைப்புப்பத்திரிகை அனுப்பியிருக்கிறார். போகாவிட்டால் நன்றாயிராது. பத்திரிகைகளில் நாமும் பேசினோம் என்று பிரசுரமானால் தானே நமக்கும் கீர்த்தி. அந்த ஸர்வமூடன் எக்கேடு கெட்டாலுந்தான் நமக்கென்ன? அவனிடத்திலிருந்து நான்;—என் எல்லோருமே, எவ்வளவோ பிடுங்கித்தின்றிருந்தாலும், அவனுடைய ஆடம்பரங்களுக்கு அவன் அடைந்த கதி, அவனுக்கு வேண்டியதே தான். அன்றையதினம் பிச்சைக்காரனைப்போல என் வீட்டுவாயிலில் வெகு நேரம் உட்கார்ந்திருந்தும், நான் வெளியில் சென்றிருப்பதாக வேலையாளிடம் கூறி மெதுவாக அனுப்பிவிட்டேன். நாகரீகன் பட்டத்தை நான் பெற நினைத்திருக்க, இவன் பெற்றுக்கொண்டது தான்எனக்குப் பெரிய ஆத்திரம். சென்ற திங்களன்று மாலையில் வெளியான சென்னைத் தினசரிப் பத்திரிகைகளில் அவன் கங்கை யோரத்தில் காசியில் இறந்துபோனான் என்று பிரசுரிக்கப்பட்டிருந்ததைப் பார்த்த பின்னர் தான் எனக்குத் திருப்தியுண்டாயிற்று. இந்த வேலைமெனக்கிட்ட பத்திரிகைகள் அவனுக்கு ஞாபகச்சின்னம் ஏற்படுத்த வேண்டுமென்று ஆரவாரிக்கின்றனவே! அதிலும் தமிழ்ப்பத்திரிகைகளோ சரமாரியாக அதை ஆதரித்து எழுதுகின்றன. பத்திரிகைகளுக்கும் பண்டிதர்களுக்கும் அவன் வெகுவாய் உதவி, பல பத்திராதிபர்களையும் கிரந்த கர்த்தர்களையும் கை தூக்கி விட்டதும் உண்மையே. அதனிமித்தம் ஞாபகச் சின்னம்வேண்டுமோ? இன்று மீட்டிங்கில் அதற்காக சந்தா பட்டி தயாரித்து என்னையும் கையொப்பம் போடச்சொன்னால் "மாட்டேன்" என்று எப்படிச் சொல்வது? அது பெரிய அகௌரவ மன்றோ? மேலும், எல்லோருடைய கையொப்பத்தைக் காட்டிலும் நமது கையொப்பம் அதிகமான தொகையைக் கொண்டதாய் விளங்கினாலன்றோ நமக்குக் கீர்த்தி! ஒருக்கால் இன்னொன்று செய்யலாமே "வரமுடியாததற்காகத் துக்கிக்கிறேன்---காலஞ்சென்றவர் என் அரிய நண்பர்—ஞாபகச் சின்னம் வெகு முக்கியம்" என்று ஒரு தந்தி கொடுத்துவிடலாமா? அப்படிச் செய்தால் மீட்டிங் ஆரம்பத்தில் சபைக்கு விஜயம் செய்ய முடியாத கனவான்களின் தந்திகள் என்று கௌரவத்தோடு நமது தந்தியையும் வாசிப்பார்கள். அது வெகு மதிப்புக் கிடமாயிருக்கும். ஆனால் அப்படிச் செய்தால் பத்திரிகைகளில் நம்முடைய பெயர்



அதிகமான பிரஸ்தாபத்துக்குவருவதிராது. ஆனதால் எப்படியும் இன்று மீட்டிங்குக்குப் போவதுதான் சரியென்று நீண்ட பட்டங்களும் எழுத்துகளும் உடைய ஒரு கனவான் தமக்குத்தாமே பிரசினோத்தரங்கள் செய்துகொள்ளலானார்.

அன்றையதினம் மீட்டிங் வெகு வைபவமாக நடந்தது. சென்னை விக்டோரியா பப்ளிக் ஹாலில் ஏராளமான ஜனங்கள் நிறைந்திருந்தார்கள். பத்திரிகைகளின் நிரூபர்களும் வெகு அவசர அவசரமாய் சபையின் நடவடிக்கைகளைக் குறித்துக்கொண்டிருந்தார்கள். நாகரீகர் காலஞ்சென்றதைப் பற்றியும் அவரின் உதாரகுணங்களைப் பற்றியும் வெகு விஸ்தாரமாகச் சொல்லப்பட்டன. ஒரு பெரிய கனவானை நாம் இழந்துவிட்டோம் என்று எல்லோரும் அனுதாபம் பாராட்டினார்கள். ராய்பகதூர் இராஜபாதம் ஐயரவர்கள் எழுந்து, நாகரீகருக்கு ஞாபகச்சின்னம் ஸ்தாபிக்கப்பட வேண்டிய அவசியத்தைப் பற்றி வெகு விரிவாகப்பேசி தாம் ஆயிரம் ரூபாய்க்குக் கையொப்பம் செய்தார். மேல் பாராவில் பிரஸ்தாபித்த கனவானும் ஒரு நீண்ட பேச்சுப் பேசி நாட்டுக்கோட்டைச் செட்டிக் கடையையும், 100க்கு ரூபா $2\frac{1}{4}$ வட்டிக்கு வாங்கிவிடலாமென்பதையும் நம்பினவராய் 1500 ரூபாய்க்குக் கையொப்பம் செய்யவும், சபையோர் அதை யறிந்து பெரிய கரகோஷம் புரிந்தனர். இப்படியாக அன்றையதினம் 50 ஆயிரம் ரூபாய்க்குக் கையொப்பமாயிற்று. மறுதினம் பத்திரிகைகளின் தலையங்கங்கள் இந்த விஷயத்தையே அதிகமாகப் பிரஸ்தாபித்து "நாகரீகரின் சரித்திரம்" என்று வெகு விரிவாகக் கண்டதும் கேட்டதும், உள்ளதும் இல்லாததுமான சங்கதிகளை யெல்லாம் கூட்டி எழுதின. 'லண்டன் டைம்ஸ்' முதலிய பத்திரிகைகளிலும் ராய்டர் தந்திகளால் நாகரீகரின் மரணம் என்ற விஷயம் அலங்கரிக்கப்பட்டிருந்தது. லண்டனிலுள்ள இந்திய சகோதர சங்கத்தாரும் ஒரு பெரிய மீட்டிங்கூடி தங்கள் அனுதாபத்தை யுணர்த்தினர். தமிழ்ப்புலவர்களெல்லாம் "தவத்தால் தோன்றினோன்" "கர்ணனை யொத்தோன்" "தயாநாதன்" என்று பலவாறு புகழ்க்கவிகள் செய்து அச்சிட்டு நாகரீகரின் நண்பரான ஸ்ரீநிவாச ஐயரவர்களைக் குளித்தலையிற் போய்க் கண்டு சென்றனர். அவர்களுக்கெல்லாம் ஸ்ரீநிவாசன் பணத்தை வெகுவாய் வாரியிறைத்தான். ஒரு வித்துவான் "நாகரீகர் காலஞ் சென்றதானது தசரத சக்ரவர்த்தியார் காலஞ்சென்றதற்குச் சமானமாகும்" என்று வெகுவாய்ப் புகழ்ந்து அதை அச்சிட்டு எடுத்துக்கொண்டு ஸ்ரீநிவாச ஐயரவர்களைப் போய்ப் பார்த்தார். ஆயிரக் கணக்கான அனுதாபத் தந்திகளையும், அவற்றை வாங்குவதற்கும் பதில் தந்திகள் கொடுப்பதற்குமாக அநேக குமஸ்தாக்களையும் பெற்று, அதிக ஆரவாரத்துடனே சோபாவில் வீற்றிருந்த ஸ்ரீநிவாச ஐயரவர்கள் அப்பாக்களைப் படித்துப் பார்த்து விட்டுத் தம்முள்ளேயே சிரித்தார். தாம் பாடிய கவிகள் கனவானுக்கு சந்தோஷத்தைத் விளைவித்தன வென்று வித்துவான் நினைத்து "பிரபுவே, அடியேனுடைய கவிகள் எப்படி யிருக்கின்றன?" என்று ஆவ

லோடும் உற்சாகத்தோடும் கேட்டார். "தங்களுடைய தரித்திர நிலையையும் அசத்திய வாக்கையும் தெளிவாக விளக்குகின்றன" என்று ஸ்ரீநிவாசர் பதில் உரைத்தார். அதற்கடுத்த நாள் பத்திரிகையில் ஒரு விளம்பரத்தை ஸ்ரீநிவாசர் பிரசுரம் செய்தார். "எனது நண்பரான நாகரீகரது அகால மரணத்தைப்பற்றி அநுதாபப்பட்டுக் கணக்கற்ற அநுதாபத் தந்திகள் என்னைக் கெட்டியிருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் தனித் தனியாகப் பதில் சொல்லக் கூடாமையால் இப்பத்திரிகையின் மூலமாக அவர்களெல்லோருக்கும் எனது நன்றி யறிதலைச் செலுத்துகின்றேன். காலஞ் சென்ற என் நண்பர் விஷயமாக ஞாபகச் சின்னம் ஏற்படுத்த முயல்வதற்கும் நான் அவர்களுடன் ஒத்தாசையாய் இருந்து வரவும் காத்திருக்கின்றேன்" என்று ஒவ்வொரு பத்திரிகையிலும் பிரசுரித்தார். நாகரீகரது உருவச்சிலை இங்கிலாந்தில் மிகப் பிரசித்தி பெற்ற மெக்ளூர் என்னும் பெயருடைய சிற்ப சாஸ்திரியால் சலவைக் கல்லில் அமைக்கப்பட்டு சென்னப்பட்டணம் வந்து சேர்ந்தது. நாகரீகரின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட உத்தியான வனத்தோடும் கூடிய சுந்தரமான மாளிகையில் ஒரு பெரிய புஸ்தகாலயமும், அதன் முகப்பில் நாகரீகரின் உருவச்சிலையும் அமைக்கப்பட்டு "திறப்பு விசேஷம்" வெகு வைபவமாக நடந்தேறிற்று. பத்திரிகைகளிலெல்லாம் ஒருமாதம் வரையில் இதுவே பெரிய பிரஸ்தாபமாக இருந்தது.

## அத்தியாயம். 8.

## எல்லாம் நானே!

பார்த்தாயா சாமிநாதா! உலகத்தினுடைய கௌரவங்கள் எப்படியிருக்கின்றன? அதனால் தாங்கொணாச் சுமையும், பணவிரயமும், வீண் ஆடம்பரங்களுமாகவே இருக்கிறதன்றி இகபரங்கட்கு அவற்றால் யாதேனும் பிரயோஜனமுண்டா? இங்கிலாந்து முதலிய நாடுகட்குச்சென்று திரும்பிய ஒவ்வொருவரும் நமதுதேசம்—கேவலம் சுத்த வைதீகத்தில் உழன்றுகொண்டு தாழ்மைப்பட்டுப் போகிறதென்று கூறி நமது மகரிஷிகளான முன்னோர்கள் ஏற்படுத்திய ஸ்தாபனங்களையும் காரியாதிகளையும் பழித்து இந்தியாவைப் புதுவிதமான நாடாக மாற்றிவிடவேண்டுமென்று மனோரதங் கொள்கின்றார்கள். இந்தியாவுக்கு ஏற்பட்ட பெருமையெல்லாம் அதன் உன்னதமான கோயில்களாலும், வைதீக தர்ம ஸ்தாபனங்களாலுமே உண்டாயது. மனிதன் தன் வாணாளெல்லாம் சுகத்தைப் பலவிதங்களிலும் அதிகப்படுத்திக்கொண்டு அநுபவித்தாலும், முடிவில் மரணத்தை ஜெயிப்பதற்கு அவன் சக்தியுள்ளவனாகிறதில்லையே? மரணத்திற்குப் பிறகு நாமடையும் நிலைக்குத் தேவையானவைகளைச் சேகரித்துக்கொள்ளும்படி போதிப்பதற்கே வைதீகம் என்று பெயர். நாம் தற்கால நாகரீகத்தினால் நம்மைக் கபோதிகளாக்கிக் கொள்ளாமல்



முதலில் வைதீகத்தை,—அதின்மீது படிந்துள்ள மாசு மருவுகளைக் களைந்து அழகுபடுத்தி அதைப் பலமாக ஸ்தாபித்துவிட்டு, அதற்கப்பால் நமது லௌகிக சுகத்தைப் பெருக்குவித்து, உலகத்தில் இந்தியாவும் ஒருநாடாக நிற்பதற்கான வழிதேட முற்படுகையே பரமோத்கிருஷ்டமானது. அதைத் தவிர்த்து நாம் வேறுவழி செல்லுகை திரிசங்கு சொர்க்கத்துக்கே நம்மைக்கொண்டு போய்ச் சேர்க்கும்.

தற்காலத்தில் வைதீகத்தைப் பழிப்போரெல்லாம் தேசாபிமானிகளென்றும், ஜனத்தலைவர்களென்றும், பெரிய பெரிய பட்டங்களை வைத்துக் கொள்கிறார்கள் இவர்களுக்கு வைதீகத்தில் பற்றில்லாமையாலேதான் உலக கௌரவத்தையே பெரிதாகக்கருதி வீணாக அதில் பிரமைகொண்டு, அந்த உலக கௌரவத்துக்காகவே பொதுநலத்தில் பிரவேசித்து, அந்த உலக கௌரவத்துக்காகவே பொதுவிஷயங்களுக்குப் பணத்தையும் தங்கள் காலத்தையும் செலுத்தி,—அந்த உலக கௌரவத்திற்காகவே பாடுபடுகின்றார்கள். இவர்கள் லௌகீகத்தையே சிறப்பிப்போரானதால், வைதீகச் சார்பாக நிஷ்காம்யமாகத் தங்களின் கடமையை நிறைவேற்ற அசக்தராகிறர்கள். மேல்நாட்டு வாழ்க்கையை நம்மவர்கள் சிலாகிக்கிறார்களே யொழிய அவர்களின் வாழ்க்கையினூடே தன்மறுப்பும் தியாகமும் கலந்துசெல்வதை நம்மவர்கள் ஏனோ உணருகிறதில்லை? வைதீகம், வைதீகம் என்று பழிக்கிறார்களே! வைதீகத்தின் உண்மையான பொருளென்ன? தியாகமும் தன்னலமறுப்புந்தானே! இந்தியா மதத்தால் கெடுகிறதென்றால், அப்போது இங்கிலாந்து தன்னுடைய கிறிஸ்து மதத்தைக் கைவிட்டா இருக்கின்றது? அதை உலக முழுதும் பரப்புவிக்க எத்தனைப் பொருட்செலவையும் உழைப்பையும் அது ஏற்று நிற்கிறது? இதையேன் நமதுதேசத்து ஆடம்பரஸ்தர்கள் அறியவில்லை?

நீ உன்னுடைய லக்ஷக்கணக்கான ஆஸ்திமுழுமையும் செலவிட்டுவிட்டாயன்றோ? நீ அதை லோககௌரவத்தைத் தேடுவதற்காகச் செலவிட்டாயா? அல்லது தேசநன்மையைக் கருதிச் செலவிட்டாயா? நன்றாக யோசித்துப் பார். உலக கௌரவத்தைத் தேடுவதே உன்னுடைய உள் உத்தேசம். அதை வெளிச்சார்பில் தேசநன்மைக்கும் பாடுபடுவதுபோல் பாவனை காண்பித்து பொய்நடிப்பு நடித்து வந்தாய். எத்தனையோ தோட்டக் கச்சேரிகள், விருந்துபசாரங்கள் எல்லாம் செய்து எவருக்கும் கிடைக்கொணாத நாகரீகன் என்ற கௌரவப் பட்டத்தையும் பெற்றாய். கடைசியில் முடிவு என்ன? அதனால் நீ அளவுக்கு மீறிச் செலவிடும்படியாகி வறுமை நோயுற்றனை. பிறகு உன்னுடைய நண்மை நண்பனை நான் என்ன விதமாக மாறிப்போனேன் பார்த்தாயா? அறிமுகமானவரே என்று உன்னை அழைக்கும்படியாக சேர்ந்து நம்முடைய சிநேகமெல்லாம் மாயமாய்ப் போய்விட்டது. நானும் தக்ஷணமே மறைந்து போனேன். ஜப்பானுக்குப் போவதாக ஒரு கதையும் கட்டிவிட்டேன். அதை உண்மைப்படுத்தப் பத்திரிகைகளிலும் பிரசுரம் செய்து யதார்த்தமாக்கி விட்டேன். நீ

சென்னையிலும், உன்னை யறிந்த பல ஊர்களிலும் உன்னுடன் பழகிய ஒவ்வொருவரையும் உதவிகோர நாடிச்சென்றாய். எவனாவது—எந்தப்பெரிய மனிதனாவது உன்னை எட்டிப் பார்த்தானா? வாவென்று அழைத்தானா? எப்போது நீ தரித்திரனானாயோ அப்போதே உன்னுடைய வாழ்வு, அந்தஸ்து, பிரக்யாதி, நாகரீகன் என்ற பட்டங்களின் பெருமை யாவும் அதன் பிரகாசத்தை இழந்து போயின. உன்னுடைய எதிர் பாராத வரவினால் நான் கோகிலாவின் வீட்டில் உன் கண்ணெதிர்ப்பட்டுக் கொண்டேன். உடனே வேறொரு வாசல் வழியாகச் சென்றுவிட்டேன். அன்றுமாலை நான் ஜப்பானுக்குப் போவதாகக் கோகிலாவும் உனக்குப் பொய் கூறினாள். உனக்கும் எனக்கும் பெரிய மனஸ்தாப மென்று கோகிலாவுடன் ஏற்கனவே சொல்லியிருந்தேன் கடைசியில் கோகிலாவும் போலி அன்புகாட்டி உன்னை ஏமாற்றிவிட்டாள். பார்த்தாயா பெரிய மனிதர்களுடைய வாழ்வும், உலகம் இருக்கிற ஸ்திதியும்! கடைசியாக, நீ யாதாயினாய்? உன்னுடைய குழந்தைகளை உனது மாமனார் வீட்டிற்கு அனுப்பிவிட்டு, உன்னை அந்தக் கேவல காலத்திலும் விட்டுப் பிரியாத உன் மனைவி சகிதம் காசியில் கங்கையில் விழப் போய்விட்டாய். விழுந்து விடப் போகும் சமயத்தில் ஒரு பைராகி உன் கண்ணெதிர்பட்டு உன்னை ரக்ஷித்தான். பிறகு அன்றுமாலையில் மோட்டார் வண்டியில் நான் செல்வதைக் கண்டு மூர்ச்சித்து நிலத்தில் வீழ்ந்தாய். உன்னைக் கங்கையில் விழாதபடி ரக்ஷித்த பைராகியும், உன்னோடேயே மறைவாகச் சுற்றித் திரிந்த பைராகியும், பாங்கி செக் செல்லாதென்று தெரிவித்த பைராகியும் யாரென்று நினைக்கிறாய்? எல்லாம் நானே! பிறகும், உன்னைக் காசியிலேயே வைத்துவிட்டு உன் கைப்பட எழுத்துப் பெற்று நீ இறந்துபோனாய் என்று பத்திரிகைகளுக்கெல்லாம் தந்திகள் அனுப்பினேன். நானும் சென்னை போய்ச்சேர்ந்தேன். பிறகு நடந்த அட்டஹாஸங்களெல்லாம் நீ அறிந்ததேயாகும். உன்னை வாவென்று கூப்பிடாதவர்கள் கூட உன்னுடைய ஞாபகசின்ன நிதிக்கும் உன்னைப்போல உருவச்சிலைசெய்து ஸ்தாபிப்பதற்கும் ஆயிரக்கணக்காகவும் நூற்றுக்கணக்காகவும் பணத்தை எண்ணித் தொலைத்தார்கள். அவ்வளவும் முழுமனதுடன் அல்ல; லோக கௌரவத்தைக் கருதியேயாகும் தற்காலத்தில் நமதுதேசம் இப்படி வெளி ஆடம்பரத்தில் மூழ்கிக்கிடக்கிறதேயன்றி தனது முன்னேற்றத்தை நாடுவதில் தனது கவனத்தைத் திருப்பவேயில்லை. முனிஸிபல் கௌன்ஸிலர் பதவியையும், இன்னும் அதுபோன்ற பதவிகளையும் அடைவதில் நம்மவர்கள் உப்புமா, காபி, பணம் இவைகளுடன் முயலுகின்றார்களே! இவர்கள் தேசத்தின் நன்மைக்குப் பாடுபடவேண்டுமென்ற உத்தேசத்துடனும் அந்தஉள்ளன்புடனுமா முயலுகின்றார்கள்? ஒருபோதுமில்லை. அந்த வழியில் கௌரவத்தைத் தேடவும், பிரக்யாதிபெறவும் எண்ணி அவைகட்கு ஸாதகமாகத் தேசாபிமானத்தை ஒரு கருவியாய் உபயோகப்படுத்துகிறார்களே தவிர, உண்மையாக உள்ளன்புடன் தேச நலத்தைச் சிந்தித்து உழைப்பதற்காக முற்பட்டவர்களல்லர். அப்படி உண்மையுடன் உழைப்போர் வெகு சிலரேயாவார். அவர்கள் பலராயிருந்தால் நமதுதேசம் எப்போதே முன்னுக்கு வந்திருக்குமே. நமது ஜாதியார் பெரும்பாலும் ஏன் ஏழைகளாயிருக்கிறார்களென்று கேட்டால், அவர்கள் சாதுக்கள்; ஆகையால் ஏழைகளாயிருக்கிறார்கள் என்று சொல்வது சரியான சமாதானமாகாது ஆனால் அவர்கள் பலஹீனர்களாகவும், செட்டற்றவர்களாகவும், ஒற்றுமை கெட்டவர்களாயும், சோம்பேறிகளாகவும், வீண் ஆடம்பரஸ்தர்களாகவும், தன்னலத்திற்கும் வீண் பிரக்யாதிக்குமே தேசாபிமானம்பாராட்டுகிற நடிப்புக்காரர்களாகவும் இருப்பதே சரியான காரணம்.



நான் முதன் முதலாக உன்னைப் பார்த்தபோது நீ என்னையும் எனது நாகரீகக் கோலங்களையும் கண்டு வெகுவாகப் பிரமித்துப்போனாய். நானோ அநேக நாடுகளைச் சுற்றிப்பார்த்ததின் காரணமாக விசேஷித்த அநுபவத்தையடையப் பெற்றவனாய், இக்கால நாகரிகமே வீண் ஆடம்பரமும், அதிகச் செலவுமுள்ளதென்றும் கண்டுகொண்டு வெறுப்புடன் திரும்பியவன். நான் அந்தத்தேசங்களை சுற்றியதின்பலனாக செட்டான வாழ்க்கையைக் கடைபிடித்து இரண்டுகோடி ரூபாய்க்குமேல் ஆஸ்தியுடையவனாக ஜென்மதேசம் புகுந்தேன். உன்னுடைய பிரமிப்பைப் பார்த்ததில் உனக்கு இக்கால நாகரிக வைபவத்தை எடுத்து விளக்க வேண்டுமென்ற எண்ணமேற்பட, அதனால் உன்னுடைய நான்குலக்ஷம் ரூபாய் செலவானாலும் அது ஒரு பெரிதல்லவென்று கருதி, வெகு சுககரமான நிலையில் கிராம வாழ்விலிருந்த உன்னை நாகரீக ஆடம்பரத்தில் இழுத்துவிட்டேன். நீ நிலத்தை விற்றதும், வீடுவாசல்களை விற்றதும், கனகாஜல முதலியாருக்கானாலும் நானே அவர் மூலமாக அனைத்தும் வாங்கிக்கொண்டேன். தற்கால ஆடம்பரங்களின் ரகசியத்தையும், நாகரீகன் என்பன போன்ற கௌரவப்பட்டங்களின் விருப்பத்தால் ஒரு மனிதன் எவ்வளவு தூரம் பொருள் விரயம் செய்து ஏழையாகின்றான் என்பதையும், உன் அநுபவத்திலேயே கண்டுகொள்ளும்படியாகவும், அதை உனக்கு நன்றாக மெய்ப்பிக்கும் பொருட்டுமே நான் இவ்வளவுக்கும் பிரயாசை எடுத்தேன். நீ எப்போது வீட்டைவிட்டுச் சென்றாயோ அன்றையதினமே உன்னுடைய ஸர்வ சொத்துக்களையும் உனக்குப் பத்திரம் மூலமாக ரிஜிஸ்தர் செய்து உன் பேருக்குத் திருப்பிவிட்டேன். ஆனதால் நீ அவைகளை அன்போடேற்றுக்கொள். நீயும் நானுமாக ஜனோபகாரமான கைத்தொழிற்சாலைகளை ஸ்தாபித்து ஆடம்பரமற்ற வாழ்க்கையில் வைதீகமுறையில் நமது காலத்தை இனிது கழிக்கலாம். மேனாட்டு நாகரிகத்துடன் பூர்வீக இந்தியாவின் செட்டுத்தனம், மதம், கலைகள் இவற்றையும் தழுவிச் சென்றால்—அதுதான் இக்காலத்திற்குச் சரியான வழியாகும். நீ என்ன சொல்லுகிறாய் என்றான் சீநிவாசன்.

## அத்தியாயம் 9.

## இராஜலக்ஷ்மி.

சாமிநாதன் பிரமித்துப்போனான். அவன் இப்போது உலகத்தில் பெரிய அநுபவஞானியாகிவிட்டான். உலக ஆடம்பரங்களினூடே சிக்கிக்கொண்டு தான் பட்ட கஷ்டங்களை எண்ணி எண்ணி வெகுநேரம் சிந்தையிலாழ்ந்திருந்தான் தனது உயிர்நண்பனான ஸ்ரீநிவாசனை வெகுதூரம் கொண்டாடி வியந்தான். விலாசவதியும் ஸ்ரீனிவாசனது நட்பின் பெருக்கைநோக்கி இறும்பூதுற்றாள்.

“ஸ்ரீநிவாசா! என் பொருட்டு நீ அதிகமான சிரமம் ஏற்றாய். உலகம் என்பதையே இன்ன விதமென்று அறியாதிருந்த எனக்கு அதை நன்றாகக் காண்பித்து விட்டாய். உனக்கு நான் என்ன கைம்மாறு புரியப் போகின்றேன்.”

“சாமிநாதா! என்னை வீணில் புகழாதே! நட்பு என்றால் அதைத் தக்க

படி காண்பிக்க வேண்டும். வெளிநட்டில் காரியமில்லை. இந்த போலிநேசந்தான் இந்நாளில் அதிகம். அதுநிற்க உன்னிடத்திலிருந்து இப்போது எனக்கு ஒரு உதவிவேண்டும்; ஆனால் நீ என்ன சொல்வாயோ?

"ஸ்ரீநிவாசா! என்னுயிரைக் கேட்டாலும் தரத் தயார். அப்படியிருக்க நீ என் பின்வாங்குகிறாய்?"

"நான் கேட்டுக்கொள்வதெல்லாம் என்னை கிருகஸ்தாசிரமத்திற்கு அழைத்துச் செல்லவேண்டு மென்பதுதான்."

"ஆஹா! அதற்கா கேட்கின்றாய்? வெகு சந்தோஷம்! என் குமாரத்தி இராஜலக்ஷ்மியை விவாகம் செய்து கொள்கின்றாயா? விலாஸவதி அவளை உனக்குத் தரத் தயாராகக் காத்திருக்கின்றாள். சற்று முன் நேரத்தில்தான் அவள் புஷ்பவதியாகும் பக்குவதிசையில் இருக்கும்போது அவளது விவாக விஷயத்தைப் பற்றிய சிந்தையேயின்றி வெளியூரில் இருந்து வருவது சரியல்லவென்று மாமனார் வருத்தப்பட்டு எழுதியிருந்த கடிதம் வரப்பெற்றேன். இவ்வளவு தீவிரத்தில் எனக்கு மருமகன் கிடைப்பானென்று நான் எண்ணவேயில்லை."

"சாமிநாதா! நான் உனக்கு எப்படி உண்மையான நண்பனானேனோ அவ்விதமே நீயும் எனக்கு இருந்து வருகிறாய். நமது இராஜ லக்ஷ்மியோ சிறு பருவதில் தானே ஞானநூல்களில் மிகுதியும் பிரீதி வாய்ந்தவள். அக்கண்மணியையே யானும் நாடிப் பிரஸ்தாபித்தேன். உன்னைப் பார்த்தவன்றே அக் குணமணியையும் பார்த்தேன். அப்பொழுதே காதலும் உதயமாயிற்று."

"காதலாம்! காதல்! ஸ்ரீநிவாசா! எவ்வளவு சிறிய பதத்தைப் பிரயோகம் செய்துவிட்டாய்? இந்தப் பதத்தில் எழுத்துகள் மட்டும் கொஞ்சமேயொழிய, இதிலுள்ள சக்தியை,—தெய்வீகமான சக்தியை—யாரே அறிந்தவர்கள்? காதல் என்பதென்ன அவ்வளவு லேசில் கிடைக்கக்கூடிய பொருளா? பதினாயிரம் பிறவிகள்தான் ஒருவன் எடுத்தானாயினும், உண்மைக்காதலை உணரவாவது, பெறவாவது—தெய்வீக ஸக்தியின்றி கூடுமா? ஒருவன் ஒருத்தியையும், ஒருத்தி ஒருவனையும் காதலிப்பதென்பது ஏற்கெனவே ரோஸ்லிவைத்துக்கொண்டு செய்கிற காரியமா? ரூபத்தின் நிமித்தம் உண்டாகிற உள்ள நெகிழ்ச்சியா காதல்? பணத்திற்காக ஏற்படும் அவாவா காதல்? மாம்ஸ இச்சையைப் பூர்த்திசெய்ய உதிக்கும் உணர்வா காதல்? உலகத்திலுள்ள ஸர்வ ஸக்திகளையும்விட மேம்பட்டதாய், வாக்கு—மனம் முதலியவைகளால் சொல்லவும் நினைக்கவும் முடியாததாய், அநுபவித்தவர்களுக்கன்றி ஏனையோருக்குப் பன்முறை எடுத்தெடுத்துரைப்பினும் விளங்காததாய் நிற்கும் தெய்வீக ஸக்தியல்லவோ காதல்! காதல் அழகைப் பார்க்குமா? பணத்தைப் பார்க்குமா? குணத்தைப் பார்க்குமா? இப்பொழுது இன்னாரிடத்தில் தோன்றி இன்னாரிடத்தில் முற்றுப் பெறுவேன் என்று சொல்லிக்கொண்டு வருமா? உண்மைக் காதலைப்பற்றி விவரித்துக் கூறச் சொற்கள் ஏது? இக்காதல் காரணமாகவே என் மாமனாரின் ஏழ்மையையும் கருதாது அவரது புத்திரியான விலாஸவதிக்கு நாயகனானேன். அவ்விதமே உனது காதலும், தற்போதைய எனது ஏழ்மையை கூடக் கருதாதிருக்க வைத்து இராஜ லக்ஷ்மியை விரும்புகின்றதுபோலும்! என்று சாமிநாதன் ஒருபெரிய காதற் பிரசங்கம் செய்யலானான். ஸ்ரீநிவாசன் விலாஸவதியை நோக்கி மாமி, தங்களுடைய அபிப்பிராயம் எப்படி என்றுகேட்க, அதற்கு விலாஸவதி, 'சிகரெட்' சுருட்டு



முதலிய பழக்கங்களை விட்டு விடுவதானால் இராஜ லக்ஷ்மியைத் தாராளமாக விவாகம் செய்துகொள்ளலா மென்றாள். அதற்கு ஸ்ரீநிவாசன் நான் ஆதியில் சாமிநாதனுக்கு ஒரு புதுத்தோற்றமாகக் காணப்படுவதற்காக மட்டுமே 'சிகரெட்'டுடன் தோன்றினேனே யன்றி பிறகு என்னை அவ்வித கோலத்துடன் எவரும் கண்டிரார்; அந்த மேல்நாட்டு ஸம்பிரதாயங்களைத் தலைமுழுகி வெகு நாளாயின வென்றான். பிறகு எல்லோருமாகப் பிரயாணமாகிக் குளித்தலை சேர்ந்தனர். சாமிநாதன் தான் முன்பு விற்றுவிட்ட சொத்து முழுமையும் மறுபடியும் அடைவதானான்.

## அத்தியாயம் 10.

## விவாகம்.

இராஜலக்ஷ்மிக்கும் ஸ்ரீநிவாசனுக்கும் குளித்தலையில் வெகு வைபவமாக விவாகம் நடந்தேறியது. நாகரீகர் பிழைத்து தமது கிராமத்திற்கு வந்திருக்கிறாரென்ற செய்திபத்திரிகைகளுக்கு எட்டி வெகு ஆரவாரமாயிற்று. மூன்று வருஷத்திற்குப் பிறகு ஸ்ரீனிவாசனும் இராஜலக்ஷ்மியும் இல்வாழ்க்கையினுட் பிரவேசித்து கிருகஸ்தாசிரம தர்மத்தை இனிது நடத்தத் தொடங்கினர். இராஜலக்ஷ்மியினுடைய புத்திரன் சாந்தகிருஷ்ணன் இப்போது பள்ளியில் வாசித்து வருகிறான். ஸ்ரீநிவாசனும் சாமிநாதனும் திரிச்சிராப்பள்ளியில் காகிதம் செய்யும் தொழிற்சாலைகள் இரண்டையும், ஒரு பஞ்சாலையையும் ஸ்தாபித்து நடத்தி வருகின்றார்கள். ஸ்வல்பமான சந்தாவில் தமிழ்த் தினசரிப் பத்திரிகை யொன்றும் அவர்களால் நடத்தப்பட்டு வருகின்றது. திரிச்னாப்பள்ளியிலிருந்த நாஷனல் ஹைஸ்கூலைத் தங்களுடைய திரவியசகாயத்தால் இப்போது பெரிய காலேஜாக மாற்றி விருத்தி செய்திருக்கிறார்கள். தங்கள் நிலத்தில் விளைகின்ற நெல்முதலிய ஆகாரவஸ்துக்களை வர்த்தகர்களுக்கு விற்காமல் சேர்த்துவைத்து, அதை ஜனங்களுக்கே யாதொரு லாபமும் கூட்டாமல் விற்பனை செய்து பஞ்சம் என்பதையே ஜனங்கள் கூடியவரையில் உணராதிருக்கும்படியாக முயன்று வருகின்றார்கள். இலவச புஸ்தகசாலைகளும், சிறு சிறு தொழிற் பாடசாலைகளும் ஆங்காங்கு ஸ்தாபிக்கப்பட்டு அவைகளும் செவ்வையாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. அநாதைக்குழந்தைகளை எடுத்துவளர்த்து அவர்களை தக்கவழியில்பயிற்றுதற்கு அநாதாலயங்களும் விதவாச்சிரமங்களும் உபந்யாஸ கூடங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கிரந்த கர்த்தர்களையும் பண்டிதர்களையும் ஆதரிக்கப் பிரத்தியேகமான நிதிகளையும் ஸ்தாபித்து அவற்றை மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரிப்பில் விட்டு, அச்சங்கத்தையும் பல அம்சங்களில் சீர்படுத்த முயற்சி எடுத்துக்கொண்டிருப்பது பெரிதும் சந்தோஷிக்கத் தக்க விஷயம். இப்போது மதுரைத் தமிழ்ச் சங்கம் தமிழ் ஜனங்கள் எல்லோருக்கும் பொதுவான சங்கம் என்றாவது, சாதாரண தமிழ் மக்கள் அனைவருக்கும் நலமளிக்கும் சங்கமென்றாவது நினைக்க முடியாமல், பாண்டித்தியப்போர் நிகழ்த்தும் வித்துவான்களுக்கே உரிய காணியாட்சியாக இருக்கின்றது. சங்கப் பதிப்பான "செந்தமிழ்" பிரசுர முறையில் மாத்திர மன்று; தன்கண் எழுதப்பெறும் விஷயங்களிலும் பல திருத்தங்களை வேண்டி நிற்கின்றது. பொது ஜனங்

களுக்குப் பயன்படும்படியும், சாதாரண கல்வி யுடையவர்கள் படித்தறியும்படியும் விஷயங்கள் அதில் அதிகம் தோன்றுகின்றில என்பது பெரும்பாலாருடைய அபிப்பிராயம். இம்மாதிரியான பல குறைகளும் தீவிரத்தில் நிவர்த்திக்கப்பட்டுப் போமென்று எதிர்பார்க்கும்படியாக நமது கதாநாயகர்கள் மிகுதியும் முயன்றுவருகின்றார்கள். கூடிய சீக்கிரத்தில் இச்சங்கம் இந்தியாவின் பிரபலமான சங்கங்களுள் ஒன்றாகிவிடுமென்று எல்லோரும் சொல்லுகிறார்கள். காங்கிரஸ் மகாசபையும், அவ்வப்போது கூடும் மகா சபைகளும் நமது கதா நாயகர்களின் உதவியைப் பெரும விருப்ப தில்லை. மாட்சிமை தங்கிய இராஜப் பிரதிநிதியான லார்ட் ஹார்டிஞ்ச் பிரபு அவர்களும் தமது திரிச்சிராப்பள்ளி விஜயத்தின் போது நமது கதாநாயகர்களைப் பிரத்தியேகமாகத் தருவித்து, தமது பேட்டி கொடுத்து, அவர்களின் நிஷ்காம்யமான—ஆடம்பர மற்ற உபகாரச்செய்கைகளைப்பற்றி மிகுதியும் சிலாகித்துப்பேசி, அவ்விருவருடையவும் ஞாபகம் எப்போதும் தமது மனதில் இருக்குமென்றும் கூறிக் கௌரவித்தார். "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்றவாறு நமது கதாநாயகர்கள் இவ்வாறாக உண்மைப்புகழுடன் விளங்கி பிரஜாநுகூலர்களாய் ஜ்வலித்தனர்.

நமது நாகரீகரது ஞாபகச்சின்ன நிதிக்கு சென்னையில் வெளி அட்டஹாஸமாக ரூபாய் 1500க்குக் கையொப்பமிட்ட கனவரின், அதுபோன்ற பல ஆடம்பரச்செலவுகளின் காரணமாக கடைசியாகக் கடன் ஜெயிலுக்குச் செல்வாராயினர். எத்தனையோ பேர்கள் சாதாரண முனிசிபல் கௌன்ஸிலர் கௌரதைக்கு ஆசித்தே அதிகமான செலவால் இன்ஸால்வெண்டுகளா யிருக்கின்றனர். எவ்வளவு பட்டங்கள் பெற்றாலென்ன? அவர்களுக்கே சொந்தமாயுள்ள—அவர்களுடைய ஈனத்துவமான பண்டைச்செயல்களை அவர்கள் மறப்பதில்லை. அவர்கள் பெரிய (!) மனிதர்களாதலின், அன்னாரது ஈனத்துவத்தைப் பகிரங்கமாகப் பிறர் எடுத்துககாட்டினால் அது அவதூறு கேஸாகவும் முடிந்துவிடுகின்றது. உள்ளே வயிறெரிய— உதடு பழுஞ்சொறிய ரூபாய் 1500 ஞாபகச் சின்ன நிதிக்கு உதவிய மேற்கண்ட கனவானின் கதி இறுதியில் யாதாயிற்று? பெரிய மனிதர்களென்று பேரெடுத்தவுடனேயே இன்ஸால்வெண்டு—ஜயில்வாசம்—ஸம்மன்கள்—தலைமறைவு—புதுச்சேரி ஓட்டம்—தற்கொலை—குடிவெறி—தாசிவீடு—சீட்டுக்கட்டு— பொய்க்கணக்கு—நம்பிக்கை மோசம்—வண்ணான் சலவை—நித்திய க்ஷவரக்கொலு—பைகாட் பிரதர்கள் கூட்டம்—விருந்துபசாரங்கள்—செண்ட் முதலிய வாசனைப் புட்டிகள்—இவைகளுடன் கூடவே,—என் இன்னும் அநேக ஆடம்பரங்களும் துணையாக வந்துவிடுகின்றன. இதற்கெல்லாம் ஒரு சிறந்த உவமைபோன்று மேற்கண்ட கனவானும் விளங்கலானார்.

இப்போது வாமன சாஸ்திரியாரும் சுசீலையம்மாளும் சாமிநாதரிடமே தங்கள் காலத்தை வெகு சந்தோஷமாகக் கழித்துவருகின்றனர். விலாஸவதியின் புத்திரனான தயாநாதன் இப்போது சென்னையில் ஸர்வகலாசாலையில் வாசித்துக்கொண்டிருக்கின்றான். இராஜலக்ஷ்மியும் ஸ்ரீநிவாஸரும், சாமிநாதரும் விலாஸவதியும் வெகு அன்யோன்யமாக வாழ்க்கை நிகழ்த்தி வருகின்றனர். ஈசனருள்!

பண்டிதர் T. S இராஜம் ஐயர்.

OFFICE OF THE REGISTRAR ... MADRAS

# பிரஜாநுகூலன்.

புத்தகம் 8. | திரிச்சிராப்பள்ளி. 1913-ம் ௵ டிசம்பர் ௴ 1உ | சஞ்சிகை 8.

## கடைச்சங்கத்தில் அரங்கேறிய நூல்கள்.

கடைச் சங்கப் புலவர்களின் பெயர்கள் மிக்க விநோதமும், புதுமையும் அளிக்கின்றன. பண்டைக்காலத்தில் ஜனங்கள் தங்களுக்கு வைத்துக்கொண்ட பெயர் அவ்வாறிருக்க, இப்போதோ, ராமசாமி, கிருஷ்ணசாமி, நாராயணசாமி என்றும்; பின்னும் சுருக்கமாக ராமு, கிட்டு, நாணு என்றும்; இன்னும் நாகரீகம் பாராட்டி கே. எஸ். பிள்ளை, எல். டி. செட்டி, வி. எம். முதலியார், டி. டி. ஐயர் எனவும்; இன்னும் பெரிய நாகரீகமாக சாரங்கபாணி என்பதற்கு எஸ். பாணி என்றும்; திருவேங்கடாசாரி என்பதற்கு டி. சாரி என்றும்; கோதண்டராமன் என்பதற்கு கே. ராமன் என்றும் வழங்கத் தலைப்பட்டுள்ளார். இது நிற்க,

இந்த 49 - சிறந்த பாவலர்களும் மற்றைய 449 - சாமானியப் பாவலர்களும் பல பல செய்யுட்கள் செய்தாரென்று யாவருஞ் சொல்லுகின்றனர். அவையாவும் **எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு** என்னும் முப்பகுதியுளடங்கும். எட்டுத்தொகையென்பது பற்பல புலவர்களால் ஆக்கப்பட்டுச் சிதறுண்டு கிடந்த செய்யுட்டொகுதிகளாம். பத்துப்பாட்டு என்பது எழு வெவ்வேறு ஆசிரியர்செய்த பத்துப் பாடல்களின் கூட்டமாம். இதற்கு நச்சினார்க்கினியர் உரைசெய்துளர். பதினெட்டு நூல்களின் குழுவே பதினெண் கீழ்க்கணக்காம். இவையனைத்தும் பொதுப்படச் **சங்கச் செய்யுள்**ெனப்பெறும். சங்கப் புலவர்கள் செய்தசெய்யுட்களின் பெயரைப் பின்வரும் மூன்று பாடல்களாலுணர்க:—

## எட்டுத் தொகை.

I. நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தார் பேசுங் கலியோ டகம்புறமென்
றித்திறத்த வெட்டுத் தொகை.

1. நற்றிணை : நானூறு பாடல்கள் கொண்டது. இது பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி தொகுத்தது,
2. குறுந்தொகை : நானூறு பாடல்கள் கொண்டது. இவை இருநூற்றைந்து புலவர்க ளியற்றியன. இத்தொகை தொகுப்பித்தான் பூரிக்கோ.
3. ஐங்குறுநூறு : வெவ்வேறாசிரியர்கள் செய்த பாடல்களால் ஆயது.
4. பதிற்றுப்பத்து : பல்வேறு புலவர்கள் செய்தபாடல்களால் ஆயது.
5. பரிபாடல் : பல புலவர்கள் பாடியன.
6. கலித்தொகை : நல்லந்துவனார் கோத்தது.
7. அகநானூறு : நானூறு பாடல்கள் கொண்டது. உக்கிரப்பெருவழுதி காலத்தில் உருத்திரசன்மனாற் கோக்கப்பட்டது,
8. புறநானூறு : நானூறு பாடல்கள் கொண்டது. பல்லாசிரியர்கள் பாடித்தொகுத்தது.

## பத்துப் பாட்டு.

II. முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கூர்குறிஞ்சி பட்டினப்
பாலை படுகடாம் பத்து.

1. திருமுரு காற்றுப்படை : நக்கீரரியற்றியது.
2. பொருநராற்றுப்படை : கடியலூர்உருத்திரங்கண்ணனாரியற்றியது
3. சிறு பாணாற்றுப்படை : நல்லூர் நத்தத்தனாரியற்றியது.
4. பெரும் பாணாற்றுப்படை : கடியலூர் உருத்திரங்கண்ணனா ரியற்றியது.
5. முல்லைப்பாட்டு : காவிரிப்பூம் பட்டினத்துப் பொன்வாணிகர் நப்பூதனாரியற்றியது.
6. மதுரைக்காஞ்சி : மாங்குடி மருதனாரியற்றியது.
7. நெடுநல்வாடை : நக்கீரரியற்றியது.
8. குறிஞ்சிப்பாட்டு : கபிலரியற்றியது.



9. பட்டினப்பாலை : கடியலூர் உருத்திரங்கண்ணனாரியற்றியது.
10. மலைபடுகடாம் : இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப்பெருங்கௌசிகனா ரியற்றியது. இது கூத்தராற்றுப்படை யெனவும் பெயர் பெறும்.

## பதினெண் கீழ்க்கணக்கு.

III. நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூல
மின்னிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு.

1. நாலடி : நீதிநூல். பல்லாசிரியர்கள் செய்தது. இதனைப்பால் இயல் அதிகாரமாகப் பகுத்தவர் பதுமனாரென்ப.
2. நான்மணி : நீதிநூல். விளம்பிய நாகனாரியற்றியது. விளம்பிய நாகனாரென்றுங் கூறுப.
3. கார்நாற்பது : மதுரைக் கண்ணங் கூத்தனாரியற்றியது.
4. களவழி நாற்பது : சோழராசன் கோச்செங் கண்ணனுக்கும் ஒரு சேரராசனுக்கும் நிகழ்ந்த போரினைப்பற்றிய நூல். பொய்கையாரியற்றியது.
5. இனியவை நாற்பது : நீதிநூல்; பூதஞ்சேந்தனா ரியற்றியது.
6. இன்னா நாற்பது : நீதிநூல்; கபிலதேவ ரியற்றியது.
7. திணைமொழியைம்பது : கண்ணஞ் சேந்தனா ரியற்றியது.
8. திணைமாலை நூற்றைம்பது : கணிமேதாவியா ரியற்றியது.
9. ஐந்திணை யெழுபது : மூவாதிய ரியற்றியது.
10. ஐந்திணை யைம்பது : மாறன் பொறையனா ரியற்றியது.
11. திணைமாலை யைம்பது : கண்ணஞ் சேந்தனா ரியற்றியது.
12. குறள் : திருவள்ளுவ ரியற்றியது.
13. திரிகடுகம் : நீதிநூல்; நல்லாதனா ரியற்றியது.
14. ஆசாரக்கோவை : ஒழுக்கநூல்; பெருவாயின் முள்ளியாசிரியரியற்றியது.
15. பழமொழி : நீதிநூல்; முன்றுறையரயனா ரியற்றியது.
16. மாமூலம் : மாமூலனா ரியற்றியது. இது சிறு பஞ்சமூலம் எனவும் பெயர் பெறும்.
17. முதுமொழிக்காஞ்சி : நீதிநூல்; புரிசைக்கிழவோ னியற்றியது.
18. ஏலாதி : நீதிநூல்; கணிமேதாவியா ரியற்றியது.

# தமிழ்மொழி

நம் தமிழோ மிகவும் முற்காலத்தது. வரையறைக்கு உட்படாதது: எக்காலத்தில் முதலில் உண்டானதென்று திட்டமாய்க் கூற ஒருவராலும் இயலாதது. போலியாய்த்திட்டம் கூறுவோரும் அவரவரது உத்தேசமெனவே கூறியிருக்கின்றார்கள். தென்றேசத்தில் அகத்திய முனிவர் செல்வதற்கு முன்னரே தமிழ் இருந்ததென்றும், முனிவர் தமிழ் மொழிக்கு முதல்வர் அல்லர் என்றும் வெளியாகின்றது. அகத்திய முனிவர் தமது இலக்கண நூலால் ஒருவாறு தமிழைச் சீர்ப்படுத்தினவரென்று கொள்ளக் கூடுமேயன்றி அவரே இத்தமிழுக்கு முதல்வர் எனக் கொள்ளல் ஒருவாற்றானும் சாலாது. இன்னும் இலக்கியம் கண்டதற்கு இலக்கணமாதலான் முனிவர் இலக்கணத்துக்கு முன்னரும் இலக்கியம் இருந்திருத்தல் வேண்டும். "அகத்தியம்" பல சூத்திரங்களால் எண்ணக்கூடிய வண்ணம் அகவற்பாக்களால் இயற்றியிருப்பதானும், யாப்பின் இலக்கணங்களும்,' அமைக்கப்பட்டிருப்பதானும், கவியொன்றும் முன்னிராது அதன் பெருக்கும் இலக்கணமும் அமைந்திருத்தல் கூடாததானும், முனிவர் இலக்கணத்துக்கு முன்னர் கவி இலக்கியங்கள் இருந்தனவாகவே ஊகித்தல் தவறாகாது. ஆதலால் முனிவராலே "நெடுங்கணக்கு" அதாவது "அரிச்சுவடி" ஏற்படுத்தப்பட்டதென்ற கொள்கை தவறென்றல் கூறாதே யமையும். தமிழைக் கடவுள் நேராய் அருளினர் என்பதை ஆராயும் வேளையில் இயற்கையில் உண்டானதெனவே கொள்ளலாம். இயற்கையைக் கடவுளெனக் கூறல் இயற்கையே.

அகத்தியர் இயற்றிய அகத்தியத்தைப்பற்றி ஒரு கதை உலாவுகின்றது. அகத்தியனார் மாணாக்கரான தொல்காப்பியர் அவ்வகத்தியத்தைச் சபித்தனரென்றும், அதனாலே அவ்வகத்தியம் தலையெடாதொழிந்ததென்பதுமே. அக்கதை உரையாசிரியர் ஒருவரும் சொல்வதாய் எமக்குப் புலப்படவில்லை. அங்ஙனமே கூறியிருக்கினும் 'சாபமிட்டார்' என்பதால், அகத்தியம் மிகவும் பெரிய நூலென்றும், அதில் அடங்கியவையனைத்தும் தொல்காப்பியத்தில் உளவென்றும், அவ்வகத்தியத்திற்குச் சரியான சுருக்கம் தொல்காப்பியமென்றும், ஆண்டுள்ளோர் இவை கருதித் தொல்காப்பியத்தையே கற்றனரென்றும், இக்காரணங்களால் அங்ஙனம் ஒழித்தமை தொல்காப்பியர் அகத்தியத்துக்குச் சாபம் இட்டது போலுமென்றும் ஆகிய இவையே விளங்குகின்றன



முதற் சங்கம், இருந்த தென்மதுரையும், இடைச்சங்கம் இருந்த கபாடபுரமும் கடல் கொண்டொழிந்தன போலும்! அந்தோ! யாம் யாது கூறுவம். தமிழ் மொழிக்குக் கேடு முன்னரே உற்றது. முதற் சங்கத்தும் இடைச் சங்கத்தும் இருந்து பாடினோர் எண்ணாயிரத்து நூற்று நாற்பத்தொன்பதின்மர், ஆதலாற் குறைந்திடினும் ஒன்பதனாயிரம் நூல்களுக்குக் குறைவுறாது. அந்நூல்களெல்லாம் இக்காலத்துமிருக்குமாயின் என்னென்ன பயன் அடைவம், என்னென்ன தெரிவோம். "கடந்த சொல்லிற் பயனில்லை."

பிற்காலத்தில் ஜயினர் தலைப்பட்டு அநேக நூல்களை இயற்றினர். இங்ஙனம் முயன்றவர்க்கும் அக்காலத்தில் இருந்த அரசரே தகுந்த உதவி புரிந்து வந்தனர். அரிய பெரிய நூல்கள் இந்த ஜயினர்களால் இயற்றப்பட்டன. **சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி** ஆகிய பஞ்சகாவியங்களும், சூளாமணி, நன்னூல் முதலிய நூல்களுமாகிய யாவும் அவர் வழி நூல்களே. இந்த ஜயினரெல்லாம் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் காலம் வரையில் இருந்து, பின்னர் மதவேறுபாட்டால் ஒழிவுற்றனர். கடைச்சங்கக் காலத்திலே ஜயின மதம் நிலவியதெனவும், ஜயினரின் நூல் பல அவ்வரங்கேறியவெனவும் உரையாசிரியர்கள் எழுதியவற்றானும், பதினெண் கீழ் கணக்கில் ஜயினர் செய்த நாலடி நான்மணி முதலியவை சேருதலானும், இன்னும் திருவள்ளுவநாயனார் மதம் ஜயினமன்றோ என வாதிப்பதானும் புலப்படுகின்றன. இவற்றினை முற்றும் விவரிக்கிற் பெருகும். இனி ஜயினர், உரையாசிரியர், இவர்கட்குப் பின்னர்க் கச்சியப்ப முனிவர், கல்வியிற் பெரிய கம்பர், புகழேந்தி, ஒட்டக்கூத்தர், வில்லிபுத்தூரார் முதலாயினோர் கார்த்திகைப் பிறை போன்றுற்றனர். இவரனைவரும் உரையாசிரியர் காலத்திற்குப் பின்னுற்றவரே என்றல் அவ்வுரையாசிரியர் தாம் காட்டும் மேற்கோள்கள் இவர்கள் நூலில் இலவாதலின் முடியும்.

தமிழ் நாட்டரசர் சபைக் காலத்தின் தமிழ் நிலையை ஒருவாறு தெரிவிப்போம். உக்கிர வழுதியைத் தொள்ளாயிரம் வருடத்தின் முன் துலுக்கர் விலங்கிட்டுச் சிறைப்படுத்த அதனுடன் பாண்டியர் அரசு ஒழிந்தது. ஒழியவே தமிழ் ஓங்கலும் நீங்கினது. நீங்கவே பலரும் பயிறல் நீங்கினர். சேர, சோழ, பாண்டியரென மூவர் அரசு புரிந்திடினும் தமிழின் மகிமையறிந்து அதன் பயனை நுகர்வான் வேண்டித் தகுந்த வண்ணம் முயன்று சங்கங்கூட்டி முடிவில் தாமும் ஒரு அங்கத்தினராய் இருந்து பயிறலும் பயிற்றலும் பாண்டிய அரசரே வகித்திருந்தனர். பாண்டியர் குலம் துருக்கரால் முற்றவும் தமிழும் முற்றினது, முற்றினதென்னில் முதிர்ந்ததன்று; முடிந்ததே.

தன் மகனாய அம்பிகாபதியைக் கொல்வித்த அரசன் மகன், மதயானைக்கு அஞ்சி அருகில் நின்றதால் வந்து அடைந்தவனை, மதயானைக் கஞ்சிக் கவியானையிடம் வருகின்றையாவெனக் கூறி எழுத்தாணியாற் குத்திய கம்பரை அரசன் வெகுண்டு வினவ, அதற்கவர் ஓர் பாடல் பாட, "ஆ, இன்னும் ஓர் குழந்தை உளதேல் அதனாலும் இன்னும் ஓர் பாடல் கேட்கலாம்" என மதலையில்லாததையே நொந்தான் எனவும் கேட்டிருக்கின்றோம். இந்நாளிலோ தமிழின் செல்வாக்கெல்லாம் செல்வாக்காய் ஒழிந்தது!

---

# ரஸமான குறிப்புகள்.

---

அடிமேலடி யடித்தால் அம்மியும் நகரும் என்பது பழமொழி. இடிமேலிடி விழுந்தாலும் ஆங்கிலர்கள் தமது ஷேக்ஸ்பியரை (Shakespeare) இழக்க மாத்திரம் இசையார்கள். அவருடைய சாதுர்யமொழிகளையும் அலங்கார விசேஷங்களையும் உண்ணும்போதும் உலாவும்போதும் எண்ணும்போதும் எழுதும்போதுமெல்லாம் வாயாரப் பேசிப்பேசி உடல் சிலிர்க்கவும் உயிர் மலர்க்கவும் ஆனந்தக் கூத்தாடி அகமகிழ்வார்கள். இந்தியா போனாலும் இவரையிழத்தல் ஈனமென்பார்கள்; இவர், உள்ள இடத்திலிருந்தே ஊரைச்சுற்றி வருவதும் நின்ற நிலையிலிருந்தே நினைப்பெல்லாம் தருவதும் விந்தை விந்தைபெருவிந்தையென்றே சிந்தைகளிப்பார்கள். ஆங்கிலர் இவ்வாறாக, கிரேக்கரோ (Greeks) ஹோமரைத் (Homer) தாங்கிப் பராக்கென்கிறார்கள். லத்தீன் (Latin) பாஷை செத்தேனா பாருமென்று மெத்த மகிழ்வுடன் சித்தங்களித்து வர்ஜில் (Virgil) என்பவர்க்கு அர்ச்சனை புரிகிறது. ஏக குடும்பமாய் நம்முடன் ஸ்நேகம் புரியும் திடமுள்ள வடநூலாரோ, காளிதாசனே, கவிபாடுவதில் யாளிபோன்றவன், அவனுக்கு மிஞ்சியா வேறொருவர் என்று பற்பலவாறு புகழ் கூறுகின்றனர். இஃது ஒருடில்லி தர்பார்! இன்னிசைப்புலவராகும் மன்னவர் கூட்டம், மணி மகுடங்களோடும், அணி யற்புதங்களோடும், அலங்காரமாய் நாற்புறமும் துலங்கா நிற்ப, அரசனெனப்பெயர் வாய்ந்த அருமைத்தமிழும் சிரசிலொன்றுந் தாங்காது கந்தைசுற்றிக் காவடிதாங்கி கபோதி வீரராகவா என்று கலக்கமுற்றுச் செல்வதானால் என்ன பரிதாபம் விளைவிக்கும்!

* * *

இவ்வித அபாய நிலையிலிருந்து நம்மை உபாயமாய்த் தப்புவித்தவன். உம்பர்புகழும் கம்பனேயாவன். கம்பனே கவிச்சக்கரவர்த்தி; கம்பன் பாட்டே கற்றோர்க்கிதயம் களிப்புறப்பண்ணுவது; கம்பன் சூழ்ச்சியே கம்பசூத்ரமாவது; கம்பன் வீட்டுக்கட்டுத்தறியும் கவிபாடும் யோக்கியதையுடையது. கம்பராமாயணத்தைப்போல் ஆழ்ந்தபொருளும் அலங்காரச்சொற்களும், சாயியைப் போன்றே பூமியிலிருந்து வானகந்தாவி அதைப்போனகங் கொள்வதும் வேறெங்கும் காணவும் கிட்டாது. விளம்பவும் ஒட்டாது. அம்மம்ம! அளப்பொணாத அவனுடைய அறிவும் சொல்லொணாத அவன்றன் சுந்தரத்தொடர்களும் தந்திரவகைகளும், பாவிக்கமுடியாது மற்றவர் சேவிக்கவேண்டிய கற்பனாசக்தியின் பொற்பின் திறமும், யாம் அவ்வப்போது கண்டும் கேட்டும், அளவிலா ஆனந்த மடைகின்றோம். மலையை வர்ணிக்கும் மகானுபாவர் சமயச்சண்டையைச் சந்தியிலிழுப்பதும், மதிலும் யாறும் இவ்வகைத்தென்பார் கற்றறி மோழைகளின் கதையைப் பரப்புவதும், சரயுவின் சங்கதி சாகசமாய்ச் சொலவார், தத்துவ உபதேசமாம் சத்தியங்கூறுவதும், இவைபோன்ற இன்னும் பர்பல அற்புதங்கள் அவரிடம் அநேகங் காணக்கிடைப்பன. புத்தகப்படிப்பில் மெத்தக் காலங் கழியாராயினும், கவித்திறத்தில் ஒப்புயர்வில்லாரெனப் புவியெங்கணும் புகழ் படைத்தவராதலின் 'கல்வியிற் பெரியன் கம்பன்' என்னப்பட்டார். சுருக்கமாகக் கூறுமிடத்து படிப்பினாலேயே வராமல் பிறப்போடே தோன்றியவரகவி, கம்பன்.

* * *

வான்மீக முனிவர் வடமொழியில் இராமாயணம் செய்தனர், கம்பர் தென்மொழியிலியற்றினர், இவ்விருவரில் கவித்திறத்திலெவர் முந்தினவரென்பது ஒரு அருமையான கேள்வி. தமிழபிமானிகள் கம்பரையே விசேஷித்துக் கூறுவர்.

* * *

சமயாபிமானங் காரணமாகவோ அன்றிக் குலமுதன்மையின் கொள்கையை யனுசரித்தோ வடமொழியே திடமுளதென்பார் வேறு சிலர். கம்பன் கவிச்சக்கரவர்த்தியாயினும் வான்மிகிமுன் அவன் திறம் செல்லாதென்கிறார்கள். வடமொழி யுணர்ந்தார் தென்மொழி யறிந்திலர்; தென்மொழி தெரிந்தார் வடமொழி யோர்ந்திலர்; இரண்டுங்கற்றோர் சிலர் உண்மையைக் கூறாது ஓரஞ்சொல்லுவதே பாலும்பழமுமாகக் கொண்டனர். அந்தோ நம்மனோர் கதி இவ்வண்ணமாக இவ்விஷயம் எவ்வாறு சீக்கிரத்தில் முடிவுக்கு வரும்? கவித்திறத்தைப் பற்றி மாத்திரம் ஆலோசிக்குங்கால், முன்னர் நூலியற்றினோர் வால்மீகரே யாதலின் அவரே மிக்க சாமர்த்திய முடையவர் என்று கூறுதல் ஒவ்வாது.

* * *

காலத்தினால் முதன்மையைக் கொண்டே மற்ற எல்லாவற்றிலும் முதன்மை கூற முயல்வது உலகப் பரிணமிப்புக் கிரமத்தில் மனிதனுக்கு முந்தியது மர்க்கடமாதலின் அஃதே உயர்வென்னும் ஆபாசம்போலும், பிற்காலத்தில் தோன்றினதாலேயே கம்பன் மேன்மை யற்றானெனக் கூறு

தல், முற்காலத்திய காளிதாசனைவிடப் பிற்காலத்திய கட்டைவெட்டி பீடுற்றுனென்பது போலாம். வான்மீகிமொழி பெயர்ப்பைக் கூடியவரைக்கும் யாம் பார்த்ததில், முனிவரர் அற்பசொற்பமானவரன்று என்றே ஏற்படுகிறது. கம்பன் கவித்திறம் கணிக்கலாகா அருமையுடையதென்பதும் அவனல் பண்ணிப்பதித்த பாக்களைப் பார்க்கப் பளிங்குபோல் விளக்குகிறது.

* * *

இனி சிற்சில விடங்களில் வான்மீகர் கம்பன் மீதுயர்ந்தும், வேறுசில விடங்களில் கம்பன் வன்மீகரை ஆட்டங்காட்டியுமிருப்பதாகத் தோன்றுகின்றமையின், இவர்க்குள் ஏற்றத்தாழ்வு கற்பிப்போர் இரண்டுநூல்களையும் நன்குணர்ந்தவராதலன்றியும், நனிமிகச்சுய அறிவு கைவந்தாராய், புத்தகப்பூச்சி அன்றிச் சொன்னதைச் சொல்லுங் கிளிப்பிள்ளை நிலைமையையுதறிக் கடந்து, தூய்மை யென்னும் பட்டணத்தில் வாய்மையாகிய கோட்டையில் முக்குற்றங் கடிந்த முற்றத்தின்கண் அந்தகாரம் போக்கி ஆனந்தங் கொடுக்கச் சந்திரனெழுந்து சுந்தரஞ் செய்போது ஒவ்வொரு சொல்லையும் ஊன்றியூன்றிப் பார்க்க, உயர்வும் தாழ்வும் ஒருவேளை ஏற்படினும் ஏற்படும்; அன்றி ராமனுக்குராமன் கிருஷ்ணனுக்கு கிருஷ்ணன் என்று விடியினும் விடியும். இஃதல்லாமலும் பலர்க்குப் பலவாறு முடிவு ஏற்படவும் கூடும். எஃதெவ்வாறுயினும், தமிழில் கம்பன் கவிச்சக்கரவர்த்தி யென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

* * *

பூதப்பொருளைப் பேசுவது போலேயே போதாப்பொருளுக்குச் சாதம் போடுவது கம்பனிடத்துள்ள அபூர்வ சக்திகளிலொன்று. இவ்விஷயத்தில் மகா மேதாவியான கம்பர்மேற் புகழ் படைத்தவர் இம்பரிற் கிடைக்கவே மாட்டார். மேலும், அவருடைய அலங்கார நடையும் அதியுன்னத அற்புத கதியும் ஆனந்த சாகரத்தில் அனைவரையும் அழுத்தும் அருமை வாய்ந்தன. பூவைக்கண்டார் புனலைக்கண்டார், மரத்தைக்கண்டார் மயிலைக்கண்டார், ஊரைக்கண்டார் உறவைக்கண்டார், மமலைக்கொண்டார் மனதைக்கண்டார் அங்கங்கே நின்று, அவருள்ளுருவிச்சென்று, வாகனந்தூக்கி வேகமாய்ச் செல்வோர் அதிகாரிகள் வீட்டருகில் 'ஆபக்கால்' போட்டு அரைமணிநேரம் காப்பதுபோல், நாழிகைக்கணக்காய் நாட்டியஞ்செய்து நாணயம் விளைத்த நல்லிசைப் புலவர், கதையின் அவசரத்தால், காதம் கடக்க வேண்டியதாயின், ஆட்டக்குதிரை ஓட்டம் பிடிப்பதுபோல் பாட்டுப்பாடி பதின் காதம் செல்வாரே! என்ன விந்தை.



# மதிப்புரை.

---

## ஞானசம்பந்தம்.

[ராய்சாயிப் ஸ்ரீமான் T. M. பொன்னுசாமிபிள்ளை அவர்கள் இயற்றியது. விலை ராப்பர் ரூ. 1. காலிகோ ரூ. 1—4—0. சென்னை கோவிந்தப்ப நாய்க்கன் தெரு 96-வது நெம்பர் வீட்டில் இதனுசிரியரிடம் பெறலாம்.]

"கமலாக்ஷி," "விஜயசுந்தரம்" இவ்விரண்டையும் படித்து மகிழ்ந்த நாம் ஞானசம்பந்தத்தை எவ்வளவு ஆவலோடும் எதிர்பார்த்துப்பெற்றிருப்போமென்பதை நம்மைப்போன்று அதன் சுவையை ஆழ உணர்ந்தவர்களே தீர்மானிக்கவேண்டும். தமிழில் வசன நடையில் சம்பாஷணை ரூபமாகக் கதையைக் கற்பிதம் செய்வோரில் இந்நூலாசிரியரே முதன்மையானவராவார். வழக்கம்போல் ஞானசம்பந்தம் வெகு நேர்த்தியாகவே முடிக்கப்பட்டிருக்கின்றது. கதாரம்பத்தில் குழந்தையொன்று அகப்படுவதும், காமாக்ஷிக்கும் வாலிபனுக்கும் நிகழ்ந்த சம்பாஷணையின் விபரீதமும் மிக்க ரஸமாயிருக்கின்றன. கதாநாயகனான ஞானசம்பந்தத்தின் மேன்மையான குணங்களும் செய்கைகளும் நம் நாட்டுச் சிறுவர்கள் அவாவுடனும் பின்பற்றும்படியான விதமாக விவரிக்கப்பட்டிருக்கின்றன. விசாலாக்ஷியின் மோச விவாக சந்தர்ப்பத்தில் வேறொரு முக்கியமான விவாகத்தை நடத்திவைப்பது நன்றாயிருக்கிறது. துரைசாமியின் வஞ்சகச் செயல்களும், பார்வதியின் போலி உபசாரமும் உலக இயல்பைச்செவ்வனே காட்டுகின்றன. இதனுசிரியர் தாமியற்றிய ஒவ்வொரு கதையினுள்ளும் 19-வது அத்தியாயத்தில் வேதாந்த விஷயங்களை விவரித்துச் சென்றிருத்தல், அதிலும் அது சம்பாஷணை ரூபமாக அமைக்கப்பட்டிருத்தல் தமிழ் நாட்டிற்கு ஒரு பெரும் உபகாரம். அண்ணனைக்கருதிப்பிறகு கணவனைக்கொள்ளும் சந்தர்ப்பம் மிகுதியும் இனிமையளிக்கின்றன. கதா நாயகனின் தங்கையினுடைய சரித்திரமும் வாசகர்கட்கு நேர்த்தியான விருந்துதான். நாட்டுக்கொட்டைச் செட்டிமார்களின் இயல்புகளும் பழக்க வழக்கங்களும் இதில் வெகு விவரமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களின் வர்த்தகசூழ்ச்சியும் கொடுக்கல் வாங்கல் முறைகளும் நாம் தெரிந்துகொள்வது மிக்க உபயோகமுள்ளதேயாகும். மற்றும் தமிழ் நாட்டு வழக்கங்களும் குடும்ப விசேஷங்களும் இதில் எழுதப்பட்டிருப்பதைப் பார்த்தால் இக்கதை உண்மையில் நடந்த விதமாகவே புனையப்பட்டிருக்கிறதென்றும் சொல்லலாம். ஆசிரியரது படத்துடன் விளங்கும் இந்நூலை நம் நாட்டு ஸ்திரீ புருஷர்கள் அனைவரும் அன்புடன் படித்து மகிழ்வார்களாக.

---

## ஞானம்பிகை.

[இதுவும் ராய்சாகிப் ஸ்ரீமான் T. M. பொன்னுசாமிபிள்ளையவர்கள் இயற்றியதேயாகும். விலை ராப்பர் ரூ. 1—4—0. காலிகோ ரூ. 1-8-0.]

செங்கமலத்தம்மாள் தனது சகோதரனின் துர்ப்போதனைக்குள்ளாகி முத்தம்மாளை வெளியேற்றி, பிறகு தானும் துன்பமடைவதை நோக்கின் பெண்பாலாரின் பேதமைத்தன்மை நன்கு பிரகாசமாகும். கதாநாயகியான ஞானம்பிகை வாசகர்கள் இரத்தக் கண்ணீர்விட்டுத் துக்கிக்கும்வாறாக வெகுதூரம் கஷ்டமடைகின்றாள். எத்தனை இன்னலுற்றபோதிலும் சன்மார்க்கம் தவறாமல், சென்றஇடமெல்லாம் சிறப்புப்பெற்று, அத்தியாதிசயமான தன் மறுப்பும் பரோபகாரத்வமும் காட்டிக்கொண்டு, பிறர்க்குத்தன்னால் எவ்வித சங்கடமும் உண்டாகாதவாறு நடந்துகொள்ளுகின்ற நேர்மை மிகுந்த உருக்கத்துடன் கூடியதாயிருக்கின்றது. ஒவ்வொரு குடும்பத்திலும் உண்டான சச்சரவுகளைப் போக்கி ஐக்கியத்தையும் குடும்ப ஒற்றுமையையும் ஸ்தாபிப்பதில் கதாநாயகி காட்டும் சாதுரியமும், அவளது யுக்தி புத்திகளின்அழகும் படிக்கப்படிக்கப் பரவசமளிக்கின்றன "**அந்தப் பேய் யார்? உன் மகளா?**" என்றுவருகிற இடத்திலேயே கதையின் போக்கு இப்படியே இருக்கவேண்டுமென்று ஊகித்துக்கொண்டோம். இக்கதையினுள்ளும் 19-வது அத்தியாயத்தில் வேதாந்த சம்பந்தமான விஷயங்கள் வெகு சுலபமான வழியில் விவரிக்கப்பட்டிருப்பதோடு தமிழ்நாட்டு இயல்புகளையும், நாட்டுக்கோட்டை நகரத்தார்களது காரியங்களையும் வியாபாரதோரணை முறைகளையும் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இறுதியில் கதையின் மூல புருஷரது வருகையும் ஞானம்பிகையின் விவாகமும் காண்கின்றோம். பணக்காரர்கள் ஏழைகளின் வீட்டில் பெண் கொள்ளாமையைப்பற்றி அதின் காரணத்தை ஆசிரியர் நன்றாக எடுத்துச்சொல்லியிருக்கிறார். தன்னலப் பிரியமே அதன் முக்கியகாரணமென்பது முடிவு. "**மாற்றாந்தாய்க் கொடுமை**" என்பது எங்கும் வழக்கமாக இருக்க; "**ஞானசம்பந்தத்தில்**" மூத்தமனைவியின் குமாரனால் துன்பம் உண்டானதுபோலவும், "**ஞானாம்பிகை**"யில் மூத்ததாரத்தினால் சங்கடங்கள் நேர்ந்ததுபோலவும் காண்பித்திருப்பதானது, உலகத்தில் அவ்விதம் நடவாமற் போகவில்லையென்றாலும், மாற்றாந்தாய் வகையைப்போல அவ்வளவு சாதாரணமாக நடக்கிற விஷயமல்லவென்பது நம் துணிபு. கனம் பிள்ளையவர்கள் கமலாக்ஷி, விஜயசுந்தரம், ஞானசம்பந்தம், ஞானம்பிகை ஆகிய நான்கு நவீனங்களையும் இயற்றி உபகரித்ததோடு, இப்போது **சிவஞானம், ஞானப்பிரகாசம்** என்ற பின்னுமிரு நவீனங்களையும் எழுதிவருகின்றாரென்பதையறியப் பெரிதும் மகிழ்ச்சியெய்துகின்றோம்.

---

## ஆதங்க நிக்கிரஹ ஆல்பம்.

பிரஸித்த புருஷரான வைத்தியசாஸ்திரி மணிசங்கர் கோவிந்தஜீ அவர்களை அறியாதவர்கள் அருமை. அவர் தமது வியாபாரத்தை விருத்தி செய்வதில் அதிக சாமர்த்தியவானாக விளங்கினார். "காமசாஸ்திரம்" என்ற புஸ்தகத்தையும் அதுபோன்ற பல பிரசுரங்களையும் ஜனங்களுக்கு இனாமாகவே வழங்கி அதன் மூலமாகவே வியாபாரத்தை விருத்திசெய்து அநேக இடங்களில் கிளை ஆபீஸ்களையும் ஏற்படுத்தி அதிகமான பிரபல மெய்தினார். இப்போது நமக்குக்கிடைத்திருக்கும் ஆல்பத்தில் அவரது கிளை ஆபீஸ்களுடையவும் தலைமை ஆபீஸினுடையவும், மற்றும் பலகாரியஸ்தலங்களுடையவும் படங்கள் அடங்கியிருக்கின்றன. வைத்திய சாஸ்திரி அவர்களின் குடும்பமும் காட்டப்பட்டிருக்கின்றது. ஜார்ஜ் சக்கரவர்த்தி, சக்கரவர்த்தினி முதலியோரது படங்களும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டிற்கு இக்காரியசாலையின் ஏஜண்டாக இருந்துவரும் ஸ்ரீமான் எம். ஏ. நெல்லையப்ப முதலியாரையும் இதில் காண்கிறோம். இவ்வுருவப்படப்புஸ்தகத்தினால் ஆதங்கநிக்கிரக காரியசாலையின் பிரஸித்தி அதிகமாவதோடுகூட அவர்கள் வியாபாரத்தில் அதிக சாமர்த்தியசாலிகள் என்பதும் வெளியாகும். ஒரு சுதேச கனவான் வர்த்தக விஷயத்தில் எவ்வளவு ஊக்கத்துடன் உழைத்து அதை முன்னுக்குக் கொண்டுவந்திருக்கிறாரென்பதை இந்தஆல்பம் நன்கு தெரிவிக்கின்றது.



---

## சாஸ்திர விசித்திரம்.

[ஸ்ரீமான் மாங்காணம் நடேசப்பிள்ளை அவர்கள் இயற்றியது. ஸ்ரீமத் ஹக்கீம் முகம்மது நிஜாமுகையதீன் சாயபு அவர்கள் பிரசுரித்தது. மூன்றாவது பதிப்பு. விலை அணா 12.]

ஸ்ரீமாந் நடேசம்பிள்ளையவர்கள் இப்புஸ்தகமூலமாய் தமிழ் நாட்டிற்கு மிக்க உதவியைப் புரிந்தவராகின்றார். தமது ஆங்கிலபாஷா ஞானத்தால் தமிழ்மக்கட்கு உபகாரமாக இருக்கும்படி ஸைன்ஸ் முதலிய ஆராய்ச்சிகளைத்தழுவி சாஸ்திர அற்புதங்களை இதில் நன்கு விவரித்திருக்கின்றார். இப்புஸ்தகம் ஜனங்கட்கு ஒரு நல்ல ஜீவனத்திற்கேதுவான பலவித கைத்தொழில்களைக் கற்றுக்கொடுக்கும்சக்தி பெற்றுளதென்பது உண்மை. பலவிதமான ஜாலங்கள், அவிழ்தங்கள், கைத்தொழில்கள், சாஸ்திர விநோத பாகங்கள், சாஸ்திரோக்தமான யுக்திப் பிரயோகங்கள், அற்புதகரமான கணித விநோதங்கள், உபயோகமுள்ள வைத்தியக்குறிப்புகள் இங்கி, மத்தாப்பு, பொட்டகிறாப், ரப்பர்ஸ்டாம்பு இங்கி, இன்னும் நாநாவித மைகள் பின்னும் எத்தனையோ அபூர்வமான விஷயங்களைப்பற்றியெல்லாம் பேசும் தமிழில் மிக்க எளிய நடையில் படங்கள் சகிதமாக வெகு சுலபமும் விவரமுமாய் எழுதப்பட்டிருக்கின்றது. 103 விஷயங்களைப்பற்றி ஒவ்வொன்றையும் வெகு விஸ்தாரமாக விவரித்துச்சொல்லப்பட்டிருக்கின்றன. இப்புஸ்தகத்தின் அருமையை அதைப் படிக்கும் அறிவாளிகள் நன்குணர்வர். மூன்றாவது பதிப்பைப் பெற்றிருப்பதே அதன் சிலாக்கியத்தையும் அவசியத்தையும் இனிதுதெரிவிக்கும். இது முதற்பாகமாகும். இரண்டாவது பாகத்தை இதனாசிரியர் சீக்கிரம் வெளியிட வேண்டுமென்று விரும்புகிறோம். தமிழ்ப்புஸ்தகத்திற்கு ஆங்கிலத்தில் முகவுரை எழுதும் ஆபாஸவழக்கம் தவிர்க்கப்படுதல் முக்கியம். அட்டைவைத்து நன்றாகப் பைண்டு செய்யப்பட்டிருப்பதுடன், கிளேஷ்கடிதத்தில் நல்ல பதிப்பாகவும் வெளியிடப்பட்டிருக்கின்றது. பிரபல கிரந்தகர்த்தாவும் பத்திராதிபருமாகிய ஸ்ரீமத் ஹக்கீம் முகமது நிஜாமுகையத்தீன் சாயபு அவர்கள் தமிழ் நாட்டிற்குச் செய்துவரும் உபகாரத்திற்கு தமிழுலகம் மிகுதியும் கடமைப்பட்டிருக்கின்றது. சென்னை சௌகார் பேட்டை

தங்கசாலை வீதி 439 எண்ணுள்ள கட்டிடத்தில் மதராஸ் யூநானி ஔஷத சாலையின் மானேஜரிடம் இப்புஸ்தகத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

---

1. குடும்ப ஆதார சஞ்சீவிலேகியம்.
2. ஸந்தான ஸஞ்சீவி.

இவ்விரண்டு அவிழ்தங்களும் தஞ்சாவூர் ஜில்லா, வலங்கிமான் ஹக்கீம் எஸ். பி. யம் அப்துல்கனி ராவுத்தர் அவர்களிடமிருந்து ஆறுமாதங்கட்கு முன்னர் வரப் பெற்றோம். புஸ்தகங்களுக்கு அபிப்பிராயம் எழுதுவதுபோல மருந்துகட்கும் உடனே அபிப்பிராயம் வரைதல் அதை உபயோகித்துப்பாராமல் எழுதியதாகவே முடியும். நாம் இவ்விரு அவிழ்தங்களையும் நன்றாகப் பரீக்ஷித்தோம். தக்க ஸ்திதியிலிருக்கும் ஒரு கனவானுக்கு குடும்ப ஆதார சஞ்சீவி லேகியத்தைக்கொடுத்து பத்திய முறைப்படி இருக்கவேண்டுமென்று சொன்னோம். அவ்விதமே யுண்ட அவரது குமாரத்தி நெடுநாள் மகப்பேறில்லாதிருந்து இப்போது இந்த அவிழ்தமகிமையால் கர்ப்பிணியாக இருப்பது பெரிய சந்தோஷமும் அதிசயமுமாகும். உண்மையிலேயே இந்த அவிழ்தத்தின் செய்பாகங்களும் அதிற்சேரும் சாக்குக்ளும் உத்தமமான முறையை யநுசரித்துச் செய்யப்பட்டிருக்கிறதென்பதில் ஐயமில்லை.

ஸந்தான ஸஞ்சீவி எப்படிப்பட்ட பலஹீனத்தையும் போக்கடிக்கின்றது. ஒரு வருஷகாலமாய் வயிற்றுப்போக்கிலிருந்த ஒருவருக்கு உடனே நல்ல குணத்தைக்கொடுத்தது. அதிகமாக நீர் போய்க்கொண்டிருந்த நமது நண்பர் ஒரு வாரப் பரீக்ஷையில் இதனால் குணமடைந்தார். தேகத்துக்குப் போதுமான சக்தியை உண்டுபண்ணி சுறுசுறுப்பையும் தீவிரத்தையும் நவயௌவனத்தையும் விருத்திபடுத்துகின்றது. மேற்கண்ட இரு அவிழ்தங்களும் அதன் விளம்பரத்தில் கண்டவாறு நல்ல பலனைத்தருகின்றன. இவற்றின் சம்பந்தமாக அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் அதிகமான விவரங்களை மேற்கண்டவரிடமிருந்து அறியலாம். இவை இரண்டும் உத்தம அவிழ்தங்களாகும். கனம் ராவுத்தர் அவர்கள் சத்தியத்துக்குக் கட்டுப்பட்ட யோக்கியமான மனிதராவர்.

---

## வஜ்ரதந்தப் பல்பொடி.

செக்கந்திராபாத் இரண்டாவது பஜார் ஸ்ரீமான் V. இராஜகோபால ஐயங்காரவர்களிடமிருந்து பல் பொடி டப்பிகள் வரப்பெற்றோம். இவை உபயோகிக்குந்தோறும் அதிக உத்ஸாகத்தைக் கொடுக்கின்றன. செய்பாகம் நன்றாயிருக்கின்றது. பற்களைச்சுத்திகரித்து வாய்க்கு சுகந்தமான வாசனையைத்தருகிறது. நல்ல பசியும் எடுக்கத்துணையாய் உதவுகின்றது. சிறிது துவர்ப்பும் கூடியிருக்கின்றது. நமது அபிப்பிராயத்தில் சிறந்த பற்பொடிகளில் இதுவும் ஒன்றென்று சந்தோஷப்படுகிறோம். டப்பி ஒன்றின் விலை அணா 2. மேற்கண்ட விலாஸத்தில் பெறலாம்.

OFFICE OF THE REGISTRAR OF ...
REGISTERED
3 - NOV 1913

# பிரஜாநுகூலன்.

புத்தகம் 8. திரிச்சிராப்பள்ளி. 1913-ம் ௵ நவம்பர் ௴ 1௳ சஞ்சிகை 7.

## மதுரைச் சங்கப்பலகை.

---

பின்னொரு காலத்தில் ஆழ்வார் திருநகரியில் அவதரித்த நம்மாழ்வாரை அர்ச்சாவதாரமாக எழுந்தருளப்பண்ணி, அவரது முதல் சிஷ்யரான மதுரகவியாழ்வார் உத்ஸவங்கள் நடத்தி "வேதம் தமிழ் செய்த பெருமாள் வந்தார்" என்று விருதுகள் கூறிச்செல்லா நிற்க, அதை யுணர்ந்த சங்கப் புலவர்கள் எங்களோடு தர்க்கித்து சங்கப்பலகை ஏறினொழிய "வேதம் தமிழ் செய்த பெருமாள்" என்று விருது பிடிக்க வொட்டோம் என்று தடுக்க, மதுரகவிகளும், "அது நியாயந்தான்; எங்கள் ஆழ்வார் எங்கும் எழுந்தருளார், அவருடைய கவிக்கு சங்கப்பலகை இடங்கொடுத்ததாகில் அவர்க்கும் இடங்கொடுத்ததாம்" என்று சொல்லி, ஒரு சிறு ஓலையிலே "கண்ணன் கழலிணை" என்று எழுதி அதைச்சங்கப்பலகையின் மேலே வைக்க; அப்பலகை தன்மீது வீற்றிருந்த புலவர்கள் எல்லோரையும் தள்ளிவிட்டு, ஆழ்வார் பாடலுள்ள அச்சிறு ஓலையைமட்டும் தாங்கி நிற்க, இதைக் கண்ட சங்கப்புலவர்கள் ஆச்சரிய பரவசராய்

"ஈயாடுவதோ கருடற்கெதிரே? இரவிக்கெதிர் மின்மினி யாடுவதோ?
நாயோடுவதோ வுறுமிப்புலிமுன்? நரிகேசரிமுன் நடையாடுவதோ?
பேயாடுவதோ வழகூர்வசிமுன்? பெருமானடிசேர் வகுளாபரணன்
ஓராயிரமாமறையின் தமிழின்னொரு சொற்பெறுமோ வுலகிற்கவியே?

என்பனவாதிய கவிகளால் தனித்தனியே புகழ்ந்து துதித்தனர்.

மதுரைச் சங்கப்பலகையைப்பற்றிய விவரங்கள் இவ்வளவுதான் நாம் அறிகிறோம்.

---

இப்பெயர்கொண்ட நூலானது தமிழில் பெயர்பெற்று விளங்கும் பஞ்சகாவியங்களில் ஒன்று. அப்பஞ்சகாவியங்களாவன : சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி. இவற்றுள் முதன் மூன்றும் அச்சிடப்பட்டு யாவர்க்குந் தெரிந்திருக்கின்றது. பிந்திய இரண்டும் அச்சிடப்படவில்லை. ஏட்டுப் பிரதிகள் கிடைப்பதும் அரிதாக இருக்கின்றது. ஆகையால் அநேகருக்கு அந்நூல்கள் இருப்பதே தெரியாமலிருக்கின்றன. இது ஆச்சரியமல்ல. பெருமைவாய்ந்த இவ்விரண்டு நூல்கள் நமக்குக் கிடைப்பதரிதேனும் அவற்றின் கதைகளை அறிந்துகொள்ளுதற்கு ஒரு மார்க்க மிருக்கின்றது. சூடாமணிப்புலவரியற்றிய வைசியபுராண மென்னும் நூலில் பஞ்சகாவியங்களின் கதைகளையும் சுருக்கமாகக் கூறியுள்ளார். அந்நூலில் 35-வது படல ஆரம்பத்தில் "நேரார் குண்டலகேசிப்பேர் நெடு நூலின் சீருரைத்தாம்'' என ஆசிரியர் கூறியிருக்கின்றாராகலின் 34-வது படலத்துள்ள கதை குண்டலகேசியின் கதையெனவே விளங்குகின்றது. 31, 32, 33-வது அதிகாரங்களில் சிந்தாமணி, சிலப்பதிகார, மணிமேகலைகளின் கதைகள் கூறப்பட்டிருக்கிறது. 35-வது படல இறுதியில் "அருமையான வைங்காவியந்தன்னிலே, உரிய விக்கதைக் காவியமொன்றரோ'' எனவும் கூறியிருக்கின்றது. ஆகலின் 35-வது படலத்தில் வளையாபதியின்கதை கூறப்பட்டுளது. இவ்வைசிய புராணம் சிலவருஷங்கட்குமுன் பொழிப்புரையுடன் அச்சிடப்பட்டிருக்கிறது.

குண்டலகேசியின் கதை வருமாறு:—

ராஜாதிராஜனென சோழனும் பெயர்பெற்ற வக்குவன் வம்சத்திற்பிறந்த காவேரியும் வெகு நேசமாக இருந்தார்கள். ஒருவரையொருவர் பிரிந்திருக்க அவர்கள் மனம் சகியாது. இவ்விருவரும் கற்றவர்களால் மெச்சப்படும் மேம்பாட்டினையுடைய 64 கலைஞானங்களையும் மற்றும் பல சாஸ்திரங்களையும் ஏறக்குறைய முற்றுமே குற்றங்குறைகளின்றி உணர்ந்தவர்கள். இகபரஞானங்களைக்கூறும் நூல்களை முற்று முணர்ந்தவனும், தனக்கு நிகர் ஒருவனுமிலன் என்ற எண்ணத்தாற் கர்வங்கொண்டிருந்தவனுமாகிய பாண்டியன் அப்பொழுது அயல் நாட்டில் அரசு செலுத்தி வந்தான். அவன் பந்தாட்டத்தில் தனக்குள்ள தேர்ச்சியை மிகவும் பெரிதாகவெண்ணி அவ்வாட்டத்தில் தன்னை வெல்வார் ஒருவருமிலர் என்று தன் வெற்றிக்கொடியில் சித்திரித்து நாட்டியதுந் தவிர, தன்னோடு யாவர்வந்து சம்பிரதாயம் கூறினும் அவருடன் பந்தாடுதற்குத் தான் சித்தனாயிருக்கிறதாகவும் தெரிவித்திருந்தான்.



அநகலங்க சோழனும் தன்னுடைய பராக்கிரமத்தை மிக மதித்துத் தன் சேனைகளையெல்லாம் அணிவகுத்து தன்னை ராஜாதிராஜன் என்று ஏற்றுக்கொள்ளாத ஒவ்வொரு சிற்றரசனையும் ஜெயித்துவாருங்கள் என்று அவர்கட்குக் கட்டளையிட்டான்.

இதையறிந்த பாண்டியராஜன் தன்னுடைய கட்டியக்காரனை அழைப்பித்து சோழராஜனிடம் போய் "ஓ சோழா! நீயும் நானும் உண்மையாகவே மிகவும் பெருமையையுடையவர்கள். நமக்குச் சமமானவன் எவனுமில்லை. நாம் இருவருந்தான் ஒருவருக்கொருவர் முரண் செய்துகொள்ளத்தகும். அப்படியிருக்க நாம் ஏன் ஒருவரையொருவர் எதிர்த்து யார் பெரியவரென்பதை நிச்சயித்துக்கொள்ளக்கூடாது? சாதாரணமாக ஒருவன் யோக்கியதையை அறிவதற்கு ஏதுக்களான சண்டை கல்வி முதலியவை யெல்லாம் அவ்வளவு முக்கியமானவை யல்லவாகலின் அவைகளை நீத்து பெருமையுடைய பந்தாட்டத்தில் என்னை எதிர்ப்பாயாக. இப்பந்தயத்தை நீ ஒப்புக்கொண்டால் சரி, நல்லது.' இன்றேல் நீ ஒரு பெருமையையுடைய அரசனல்ல'' என்னும் சமாசாரத்தை நான் சொல்லியதாகச் சொல் என்றனுப்பினான். இதைக்கேட்கவே சோழனுக்குக் கோபம் அதிகரித்தது. உடனே மந்திரிகளை அழைத்து, நான் காலதாமதமின்றி மதுரைக்குப்போய் துஷ்டனான பாண்டியனது கர்வத்தைப் பங்கப்படுத்தவேண்டுமாகையினால் என் பிரயாணத்திற்கு வேண்டியவைகளையெல்லாம் வெகு சீக்கிரமாக ஆயத்தப்படுத்தவேண்டுமென்று அவர்கட்குக் கட்டளையிட்டான். அப்பொழுது அவ்விடத்திருந்த காவேரி உடனே எழுந்து மரியாதையுடன் அரசனை விளித்து "ஓரரசன் அயலரசன் நாட்டிற்குட் புகுதல் தனது கண்ணியத்திற்குத் தக்கதன்று. பாண்டியனை கர்வபங்கப்படுத்தவேண்டுவது தங்களிஷ்டமேல் தங்களுடைய ஊழியக்காரனாகிய நான் இப்பொழுதே மதுரைக்குச் சென்று அவனுடையதென்றே சொல்லும்படியான அப்பந்தாட்டத்திலேயே பாண்டியனை வென்று அச்சந்தோஷ சமாச்சாரத்துடன் வெகு சீக்கிரத்தில் இவ்விடம் திரும்பி வருகிறேன்'' என்று செப்பினான்.

இதைக் கேட்டவுடன் மந்திரிகள் மிகுந்த சந்தோஷத்துடன் அரசனை நோக்கி "ஓ அரச! ஒரு பிரஜையினால் ஜயிக்கப்பட்ட கீர்த்தி நியாயமாக அரசனுக்கே உரித்து என்று நூல்கள் கூறுகின்றமையால் தங்கட்குப் பதிலாக காவேரியையே அனுப்பவேண்டும்'' என்றனர். உடனே அரசனும் அவர்கள் வேண்டுதலுக்கிசைந்து காவேரியை நோக்கி "நீ பாண்டியனிடம் போய் அவனை வென்று வருவாய்'' என்று செப்பினான். உடனே காவேரி வீரத்தன்மை பொருந்திய ஏராளமான காவலாளர்களுடனே புறப்பட்டு மதுரைக்குப்போய்ச் சேர்ந்தான். பாண்டியனும் காவேரியைத் தக்க மரியாதையுட

னழைத்து க்ஷேமசமாசாரங்கள் வினவிப் பின்னர் "நீர் இவ்விடம் வந்தது எதன் பொருட்டு" என உசாவினான். காவேரி தான் சோழனால் பாண்டியனுடன் பந்தாடுதற்கு அனுப்பப்பட்டமையால் மதுரைக்கு வந்ததாகவும் அதைத்தவிர வேறு காரியமொன்றுமில்லை யென்றும் கூறினான். உடனே பாண்டியன் கோபித்து வைசிய குலத்திற் பிறந்த காவேரி, க்ஷத்திரிய குலத்திற் பிறந்து அரசு புரியும் அரசனுக்கு எதிரியல்ல வாதலால் அவனோடு பந்தாடமாட்டேனென்று சொல்ல, காவேரி அரசனை நோக்கி "ஏ! அரச, நீர் உமது வெற்றிக் கொடியில் பந்தாட்டத்தில் உம்மை வெல்வார் ஒருவருமிலர் என்று சித்திரித்து காட்டியதுந் தவிர யார் வேண்டினும் அவ்வாட்டத்தில் உம்மை எதிர்க்கலாம் என்றும் தெரிவித்திருக்கிறீர். ஆகலின் இப்பொழுது உம்மை யாவர் எதிர்த்திடினும் அவரோடு பந்தாடுதற்கு நீர் இசையவேண்டு மன்றோ" எனக் கேட்க, அரசனும் வெட்கி இதற்கிசைந்து தம்மிருவருடைய சாமர்த்தியத்தையும் அறிவதற்கு ஒருநாள் ஏற்படுத்தி மத்தியஸ்தர்களையும் நியமித்தவுடனே ஒவ்வொருவரும் அளவற்ற திரவியத்தையும் பெரிய சேனையையும் பொதுக்கட்டி, அவை கெலிப்பவனுக்குக் கிடைக்கவேண்டிய பரிசு எனப் பந்தயம் பேசிக்கொண்டார்கள்.

குறித்த நாளும் ஏற்பட்டு ஆட்டமும் ஆரம்பமாய் விட்டது. பாண்டியராஜனும் காவேரியும் பந்தயத்திற்றேர்ந்த குதிரைகளின் மீதேறிக்கொண்டு இப்புறமும் அப்புறமும் ஓடியோடி பந்தை அடித்துக் கொண்டிருந்தார்கள் ஆட்டத்தில் இருவர்களும் சமமாகவே இருந்தபடியால் வெற்றி இன்னார்க்கென்று நிர்ணயிக்க முடியாமலிருந்தது. காலங்கழிந்தும் ஆட்டம் முடிவதாகத் தோற்றவில்லை. சிறுநேரம் தாழ்ந்து பாண்டியன், இவ்வாட்டத்தை நிறுத்தி மற்றோராட்டத்திலும் சாமர்த்தியத்தைப் பரீக்ஷிப்போமென்று சொல்ல காவேரியும் சம்மதிக்க அவ்வாட்டம் ஆரம்பித்தார்கள். அதெப்படியென்றால் ஒரு சதுரக் குளக்கரையிலிருந்து குறுக்கே ஒரு பந்தை எறிய அது எதிர்க்கரையில் நிலத்தில் விழுமுன்னே குதிரைமேற் சவாரி செய்துகொண்டு குளத்தைச் சுற்றிப்போய் அப்பந்தை அடிக்கவேண்டியது தான். இதில் பாண்டியன் மிகவும் தேர்ச்சியுடையவனாதலால் காவேரியை வென்றுவிடலாமென்று உறுதியாக நினைத்திருந்தான். பந்து எறிந்தாய்விட்டது. உடனே காவேரி பாண்டியனைக்காட்டிலும் அதிவேகமாகச் சவாரி போய் ஆச்சரியப்படும்படியான சாமர்த்தியத்துடன் பந்தை யடித்து விட்டான். ஆகலின் வெற்றி காவேரி பக்ஷம் ஆயது. மத்தியஸ்தர்களும் அவ்வாறே தீர்மானித்தார்கள், அகந்தையுடைய பாண்டியனுக்கு தனது தோல்வியை யொப்புக்கொள்ளவேண்டி நேர்ந்ததுந்தவிர, தான் பந்தயங்கட்டின திரவியமனைத்தையும் சேனையையும் காவேரிக்கே கொடுக்கவும் நேர்ந்தது. வெற்றியின் கீர்த்தியையும் தான் பாண்டியனிடமிருந்து பந்தயத்தால் ஜெயித்த திரவிய முதலியவற்றையும் தனது நண்பனும் மன்னவனுமான சோழனுக்



குச் சேர்ப்பிக்கவேண்டுமென்னும் அவாமேலிட்டால் காவேரி மதுரையைவிட்டு சோழதேசம் செல்லுகையில் இரவைப்போக்குதற்கு ஓரூரில் இறங்கினான்.

இத்தருணத்தில் இதுகாறும் சேரனோடு சண்டை செய்துகொண்டிருந்த பாண்டியன் சேனாதிபதியாகிய கொளந்தையன் மதுரைக்குத் திரும்பி வந்து, சமீபத்தில் நேர்ந்த தோல்வியால் மன வியாகூலப்பட்டுக்கொண்டிருக்கும் தன் எஜமானனைப் பார்த்து "ஏ மன்னவ! காவேரியைப் பின் தொடர்ந்து போய் அவனுடன் எதிர்த்துப் போர் புரிந்து அவன் கைப்பற்றிக் கொண்டுபோன திரவியம், சேனை, கண்ணியம், கீர்த்தி முதலியவற்றையெல்லாம் மீட்டுக் கொண்டு வர எனக்கு உத்திரவு கொடுக்கவேண்டும்" என மிகவும் வணங்கிக் கேட்டான். பாண்டியன் இவ்வார்த்தைகளைக் கேட்டவுடனே தனக்குச் சற்று முன்பு நேரிட்ட அவமானம் நீங்கிவிடும் என்ற எண்ணத்துடன் கொளந்தையனுக்கு அவனிஷ்டப்படி உத்தரவு கொடுக்கவே, அவன் மிகுந்த சேனையோடு காவேரியைப் பின் தொடர்ந்து போய் அவனோடு சண்டை தொடுத்தான். அனேக நாள் வரை சண்டை மிக உக்கிரமாக நடந்துகொண்டிருந்தது. கடைசியில் இருதிறத்தாருடைய சேனைகளும் நெருங்கின. பாண்டியன் சேனை தோல்வியுற்றது. காவேரி கொளந்தையனோடு மற்போர் புரிந்து ஒரே அடியில் அவன் தலையைத் துண்டித்துக் கீழே வீழ்த்தினான். ஆதலாலே பின்னுமொரு முறை வெற்றி காவேரி பக்ஷமேயாயது.

பிற்பாடு கொளந்தையன் தலையை தனது வெற்றிக்கறிகுறியாக எடுத்துக்கொண்டு காவேரி சோழதேசம் புறப்பட்டான். கொளந்தையன் மனைவியான **அரம்பையாதிபை** என்பவள் தன் கணவன் இறந்த செய்தி கேட்டு மிக்க விசனத்துடன் காவேரியைப் பின் தொடர்ந்து தான் மிகவும் நேசித்திருந்த தனது தலைவனுடைய தலையைத் தனக்குத் தரவேண்டுமென்று மிகவும் இரங்கிக் கேட்டனள். காவேரி அவளோடு பரிதாபப்பட்டபோதிலும் அவள் கணவன் தலை நியாயமாகச் சோழனுக்குச் சேர்ந்த பொருளாதலால் தனக்கு அதைத் தருவதற்குச் சுதந்திரமில்லை யென்றும், அவள் தன்னுடன் சோழதேசம் வந்தால் அரசனிடம் அவள் முறையைத் தானே கூறி கொளந்தையன் தலையை வாங்கித் தரக்கூடுமென்றும் உறுதியாகச் சொன்னான். அரம்பையாதிபையும் அப்படியே அவனுடன் சோழதேசம் சென்றாள். காவேரி தான் முன் கூறியவார்த்தை பிசகாமல் அரசனிடம் அவள் முறையைச் சொல்லி கொளந்தையன் தலையை அவன் மனைவிக்குக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தான்.

இக்கதையிற் பல உண்மைகள் பொதிந்துள்ளனவேனும் எவனேயாயினும் தனக்குள்ள செல்வத்தையேனும் மற்றெதையேனும் மிகப்பெரிதாக

மதித்து அகந்தை கொண்டிருப்பானேல், அவன் சீக்கிரத்தில் கெட்டு விடுவான் என்னும் உண்மையே இதை வாசிப்போர் யாவர்க்கும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாகத் தெரியும். ஆகவே யாவரும் அகந்தை கொள்ளவே கூடாது. இதுதான் குண்டலகேசியின் சாரம்.

---

# வடகோடி தாழ்ந்ததும் தென்கோடி உயர்ந்ததும்.

---

"பொருப்பிலே பிறந்து, தென்னன் புகழிலே கிடந்து, சங்கத்
திருப்பிலே இருந்து, வைகையேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோர் ஏனை
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகின்றாள்."

இறைவனுடைய சிருஷ்டியில் அடங்கிய அநேக கோடி ஜீவராசிகளுள் முதன்மை பற்றிய மானிடசரீரத்தை யுடையவர்களும் ஆறறிவுடையவர்களுமாகிய மக்கள் தம் மனத்தில் தோன்றும் எண்ணங்களைப் பிறருக்குத் தெரியப்படுத்தவும், பிறருடைய கருத்தைத் தாம் அறிந்துகொள்ளவும் உபகரணமாக இருக்கும் சங்கேத சப்தமே பாஷை எனப்படும். இவ்விதமான பற்பல பாஷைகள் இந்நிலவுலகத்தில் பற்பல ஜாதியார்களால் பேசப்பட்டு வருகின்றன. இவைகளில், வேதாகமங்களையும், தர்மசாஸ்திரத்தையும் சரியை கிரியையாதி படிகளுக்குமேல் தாண்ட முடியாமல் தவிக்கும் மாந்தர்களுக்கு கடவுளினுடைய பேரற்புதச் செயல்களை நன்கு தெரியப்படுத்தும் அநேக புராணங்களையும் முற்ற முடிந்த இலக்கணத்தையும் உடைய தமிழ் பாஷையும் ஒன்று.

இந்தத் தமிழ் பாஷையைப்பற்றிய சுருக்கமான வரலாற்றை மேலே சொல்லப்பட்டிருக்கும் வில்லி புத்தூராரின் பாடலால் தெரிந்துகொள்ளுகின்றோமாயினும், அப்பாடலின் உட்கருத்தை அறியவேண்டுவது முக்கியமாகலான் இதை ஈண்டு வரையலாயினோம்.

மேலே சொல்லப்பட்டிருக்கும் பாடலின் முதல் இரண்டு பதங்களையும்—அதாவது: பொருப்பிலே பிறந்து—என்பதை எடுத்துக்கொண்டு கருத்தை ஆராய்வோமாயின், பொதியமலையில் பிறந்து என்பது பொருளாகும்; பொதியமலையில் பிறந்தது என்றால் அம்மலையில் தவம் செய்த, இன்னமும்



தவம் செய்வதாகவே சொல்லப்பட்டுவருகிற—அகஸ்தியரிடத்தில் பிறந்தது என்பது கருத்து. தமிழ் அகஸ்தியரிடத்தில் பிறந்தது யாங்ஙனமெனின், ஹிமயகிரியில் நடந்த பார்வதிதேவியாரின் விவாகச்சிறப்பினைக் கண்ணுறக்க எண்ணங்கொண்டு முப்பத்துமூன்றுகோடி தேவதைகளும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷீஸ்வரர்களும் தத்தம் பரிவாரங்களுடன் அம்மலையை அடைந்ததாகவும், அக்காலை ஏராளமான ஜனத்திரள் ஒரேபக்கத்தில் வந்து சேர்ந்தமையால் வடகோடி தாழ்ந்தும் தென்கோடி உயர்ந்தும் போனதாகவும், இன்னும் கொஞ்சநேரம் அவ்விதமே இருக்குமாயின் பூமி எங்கு தலைகீழாகக் கவிழ்ந்துவிடுமோ வென்று பயமடைந்த தேவதைகள் சிவபெருமானைவேண்ட, அவர் அவண் சென்றிருந்த அகஸ்தியமுனிவரை யழைத்து தெக்ஷிணம் போகும்படி கட்டளை இட்டாரெனவும், அப்பொழுது அகஸ்தியர் சிவபெருமானை நோக்கி, "தென்திசையில் நாகரீகமுதிர்ச்சி பெற்ற சாதியார்களாகிய திராவிடர் தமிழ் என்னும் பாஷையைப் பேசிவருகின்றார்களாகையால் எனக்கு அப்பாஷா இலக்கணத்தைக் கற்றுக்கொடுக்கவேண்டும்" என்று வேண்டி அவ்விதமே தமிழ் இலக்கணத்தை ஈஸ்வரன் மூலமாக அறிந்துகொண்டு தென்னாடு சென்று, தமிழிற்கு முடிந்த இலக்கணம் அகஸ்தியர் செய்தாரென்றும், நாம் கர்ணபரம்பரையாகவும் புராணவாயிலாகவும் தெரிந்துகொண்டிருக்கிறோம்.

விவேகிகளாகிய மஹான்களால் எழுதிவைக்கப்பட்ட சாஸ்திரங்களை யாம் மறுக்க வரவில்லையாயினும், மேலே சொல்லப்பட்டிருக்கிற புராண ஐதீகமான கதை, பூகோள, ககோள, வானசாஸ்திர சம்பந்தமான சாஸ்திரங்களுக்கும், இயற்கைச் சட்டதிட்டத்திற்கும், நம்முடைய அனுபவத்திற்கும், இயைந்துவரவில்லை யாகலான், தூக்கிக்கொண்ட பூபாரத்தை அமிழ்த்த அகஸ்தியர் தென்தேசம் வரவில்லையென்றும், அவர் வந்ததற்கு வேறொரு முக்கியமான காரணம் இருக்கவேண்டுமென்றும், ஒருவிதமான முடிவிற்கு வரவேண்டியவர்களாகின்றோம். அக்காரணத்தைப் பின்னர் கூறுவாம்.

ஹிமயமலையில் ஜனத்திரள் அதிகமானதாகவும், அதன் காரணமாக வடகோடி தாழ்ந்தும் தென்கோடி உயர்ந்தும் போனதாகவுமே வைத்துக் கொள்வோம். கன்னியாகுமரியும் ஹிமயமலையும் பூமியாகிய திராசின் இரண்டு தட்டுகளா? ஒருபுறம் கொஞ்சம் பாரம் அதிகமானால் மற்றொருபுறம் தூக்கிக்கொள்ள, பூமியின் தென்வடகோடிகள் கன்னியாகுமரியும் ஹிமயபர்வதமும்தானா? இக்கதையை நான்காவது வகுப்பில் படிக்கும் பையன் கேட்டபோதிலும் விடாநகை புரிவானன்றோ? ஏனெனில் இவ்விந்திய தேசத்தைப்போலப் பலமடங்கு விஸ்தீரணம் வாய்ந்த பூபாகமும், இங்கு உள்ளதைவிடப் பெரிய மலை, நதி முதலியவைகளும் ஹிமயகிரியின் வடபாகத்தில் இருக்கின்றனவென்பதை அவன் அறியாமலிரான். பின்னும் எந்த சக்தியினால், சந்திர, சூரிய, நக்ஷத்திரங்கள் யாவும் பூமியில் பிரகாசித்துக்கொண்டும் பூமியைவிட்டு விலகியோடிப்போய்விடாமலும் இருக்கின்றனவோ

அந்த பூ ஆகர்ஷணைசக்தி (Universal Gravitation) யினால், பூமி தாழ்ந்தும் உயர்ந்தும் போகாவண்ணம் காக்கப்பட்டு வருகின்றதென்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். இந்தவிதமான இயற்கைச் சட்ட திட்டங்களை நாம் கூர்ந்து கவனித்தோமாயின், பூமி ஜனக்கூட்டத்தால் உயர்வதும் தாழ்வதும் அசம்பாவிதம் என்பதை எளிதில் அறிந்துகொள்ளலாம். இவ்விதமான நியாயங்களால் வடகோடி தாழ்ந்து தென்கோடி உயரவில்லை என்றும் அதற்கென்று அகஸ்தியர் தெக்ஷிணம் செல்லவில்லையென்றும் நிச்சயமாகக் கூறலாம்.

அப்படியானால் அகஸ்தியர் தென்தேசம் சென்றாரென்பதும், இங்கே இலக்கணம் செய்தார் என்பதும் வீண்கட்டுரைகள் தாமோவெனின்; அன்று, அகஸ்தியர் தென்திசை வந்ததும், இலக்கணம் செய்து தமிழ்ச்சங்கம் கூட்டியதும் உண்மையே.

மத்திய ஆசியாவிலிருந்து இந்துதேசத்தில்வந்து குடியேறிய ஆரியர்கள் சிந்து நதிக்கரையைத்தாண்டி அங்கு வாஸம் செய்துவந்த இராக்ஷஸர் பிசாசர் முதலிய அநாகரீக சாதியார்களைச் சண்டையில் வென்று வெகுநாட்கள் வரையில் வடஇந்தியாவில் வசித்து வந்தனர். பிறகு நாளாக ஆக ஜனத்தொகைஅதிகமானதால் பின்னும் குடியேறத்தெற்கே வந்தனர்; இவ்விதம் விந்திய பர்வதத்தையும் அடைந்தனர். பின்னர் தெக்ஷிணதேசம் நல்ல செழிப்பான தேசம் எனவும். என்றும் வற்றாத பல ஜீவ நதிகள் அத்தேசத்தில் ஓடுகின்றன எனவும், பசுக்களுக்கு வயிறாரப்புசிக்க புற்கள் அதிகமெனவும் கேள்விப்பட்ட ஆரியர் தெக்ஷிணத்தையடைய அவா மிகக்கொண்டனர். அக்காலத்தில், தென்தேசத்தில் பூர்வீக குடிகளாகிய திராவிடர் நாகரீக முதிர்ச்சி பெற்றிருப்பதையும், வடஇந்திய வாசிகளாகிய அநாகரீக மனிதர்களை வென்றதுபோல் திராவிடர்களை வெல்லுவது இயலாத காரியமென்பதையும் எளிதில் அறிந்துகொண்ட அறிவாளிகளாகிய ஆரியர், தங்களுடைய இனத்தவரில் புத்திநுட்பம் வாய்ந்தவரும், சம்ஸ்கிருத பாண்டித்தியம் மிகப்பெற்றவருமான அகஸ்தியரைத் திராவிடர்களிடத்திற்குத் தமிழ் அப்பியஸிக்கும் வண்ணம் அனுப்பியிருக்கவேண்டும். ஏனெனில் சண்டை செய்து திராவிடர்களை வெல்லும் ஆற்றலற்ற ஆரியர் சமாதானத்தால், அதாவது திராவிட பாஷையைக் கற்றுக்கொள்ளும் காரணம்காட்டி, செழிப்பு வாய்ந்த தென்தேசத்தில் வசிக்க ஆசை மிகக் கொண்டவர்கள், முதலில் அகஸ்தியர் சென்று தமிழ்பாஷாப்பியாஸம் செய்து அப்பாஷையில் நிபுணராகவே, சமயம் வாய்க்கும்போது உள்நுழையத் தயாராக இருந்த ஆரியரிற் சிலர் தொல்காப்பியனார் போன்றவர்கள், அகஸ்தியரிடத்தில் தமிழ்கற்கும் வியாஜத்துடன் தென்தேசம் சென்றனர். இவ்விதமே கல்வி கற்றுக்கொள்வதை ஒரு காரணமாகக்கொண்டு சில நூற்றாண்டுகளில் தென்தேச முழுவதிலும் ஆரியர் பரவி விட்டனர். இவ்வொருகாரணமே அகஸ்தியர் தென்தேசம் வந்ததற்கு முக்கிய காரணமாகக் காணப்படுகின்றன. இவ்வொரு விஷயத்தை சூசுபிக்கவே இவ்வியாஸம் வரையலாயினோமாகையால்இத்துடன் இதை நிறுத்துகின்றோம்.

பண்டிதர் T. S. இராஜம் ஐயர்.

OFFICE ... 13 JUN 1913 MADRAS.

# பிரஜாநுகூலன்.

புத்தகம் 8. } திரிச்சிராப்பள்ளி. 1913-ம் ௵ ஜூன் ௴ 9-ம் ௳ { சஞ்சிகை 3.

## பத்திராதிபர் குறிப்புகள்.

**விவகரிக்கும் திறமை:—** ஒரு பதார்த்தத்தின் சுவை வித்தியாஸம் அதைப் பாகம் செய்கிற கூட்டுவர்க்கத்திலும் பக்குவத்திலுமிருக்கிறது. அப்படியே ஒரு விஷயத்திலும் அதை விவகரிக்கும் திறமையாற்றான், ஒருவன் மனத்திற்கு உற்சாகம் உண்டாக்குவதும் ஏற்படுகிறது. ஒரு புஸ்தகத்தை இயற்றும் கிரந்தகர்த்தா கைதேர்ந்த சமையற்காரனைப் போலிருந்து, வாசிப்போரது மனதை முழுதும் திருப்தி செய்விக்கவேண்டும்.

**உண்மைக் காதல்:—** நீர்க்குமிழிபோலத் தோன்றி யழியும் வெறுக்கத்தக்க சொற்ப சுகத்திற்கு ஆசைப்பட்டு ஒருத்தியை வாழ் நாள் முழுதும் மகா துன்பத்திற்குள்ளாக்கும் ஒருவனை, அறிவுள்ள ஸ்திரீ சத்துருவென்று எண்ணாமல் வேறு எவ்விதமாக நினைப்பாள்? நம்முடைய மரபில் இதனால் உண்டாகும் மானக்கேடும் துன்பமும் பெண்களை யணுகுமேயன்றி புருஷர்கட்கு ஒன்றுமிராது. உண்மைக்காதல் எது வென்றால் காதலிக்கும் பொருளின் க்ஷேமத்தைக் கருதுவதேயாம். அப்படியிருக்க ஒரு ஸ்திரீயைப் பல விதத்திலும் துன்பப்படச்செய்வது காதலாகுமா?

**பெண்களின் கொடிய சத்துரு:—** ஒரு அயோக்கியன் உண்மையாகவே காதல் செய்வதாகப் பாசாங்கு சொல்லி ஒருத்தியை வசீகரப்படுத்தப் பார்த்தால், அந்த ஸ்திரீயின் சத்துருக்களிலெல்லாம் கொடிய சத்துரு இவன்தான் என்று அவனைக் கண்டு விலகவேண்டாமா? பொய்யாகவும் தந்திரமாகவும் சிநேகிதனைப் பாசாங்கு பண்ணி ஒருத்தியினுடைய தேகத்தை மாத்திரமல்ல, அறிவையும் கெடுக்க முயற்சி செய்பவன் நல்லெண்ணமுடையவனாக இருப்பானா?

**எதிர்பாராத விரோதம்:—** உபகாரம் செய்பவன் சிநேகிதர்களைச் சம்பாதிப்பதைக் காட்டிலும் விரோதிகளை அதிகமாக்கிக்கொள்கிறான். இன்ன

விதமாக அந்த விரோதம் வருகிறதென்பதும் முதிர்ச்சியடைகிறதென்பதும், அவனாலேயே அறியக்கூடவில்லை.

**ஜாக்கிரதை:**— மனிதரையாகட்டும் ஸ்திரீகளையாகட்டும் நம்பவே கூடாது. ஏனெனில் மனுஷன் எப்போதும் தன் சுயநலத்தையே பாராட்டுகிறவன். ஸ்திரீயோ சதா சபல புத்தியுடையவள். ஆகையால் அவளை எப்போதும் அன்னியர்களுடன் தனித்துவிடப்படாது.

**மனமிசைந்த மணம்:**— உண்மையில் மனமிசைந்து காதலித்து நடக்கும் கலியாணத்திற்கும், காமத்தினாலும், மோகத்தினாலும் பணம் கிடைக்குமென்ற பேராசையினாலும் நடைபெறும் விவாகத்திற்கும் எவ்வளவு வித்தியாசம்! அதன் முடிவு பிரிவும் சச்சரவும் துயரமுந்தான்.

**சுயநலம்:**— ஒரு சிநேகிதனுடைய ஒத்தாசையால் வேண்டிய சௌகரியங்களை அடைந்ததும் அவனை உதறி எறிந்துவிடவேண்டும் என்பது சில தந்திரிகளின் சித்தாந்தம். இத்தந்திரிகளுக்கே நாகரீகர்கள் என்று பெயர்.

**நீ குடும்பத்தில் கணவனாயிருப்பதற்குத் தகுந்தவனா?** ஒரு போக்கிரி, அதிலும் வெளியில் வெகு யோக்கியன் போல நடந்துகொள்ளுமொருவன் இந்தக் கேள்விக்கு விடை சொல்லுமுன்னதாக தன்னுடைய தீய செயல்களனைத்தும் நீள நினைத்துப்பார்த்துக் கொள்ளட்டும்.

**தம்பதிகளின் சாமர்த்தியம்:**— மனதிற்குள் ஒருவரையொருவர் பகைத்துக்கொண்ட போதிலும் மூன்றாம் பேருக்கு முன்னால் தம்பதிகள் அவ்விரோதத்தை மறைத்து ஒற்றுமையுள்ளவர்கள்போல் வெளிக்குக் காட்டிக்கொள்ளக் கூடும்.

**வைத்தியர்கள்:**— நமது வைத்தியர்களுக்கு மரணத்தினிடத்தில் அவ்வளவு பிரியமில்லை. ஏனெனில், ஒருவரைச் சாகவடித்தால் அவர்களுக்கு ஒரு தடவைதான் சன்மானம் கிடைக்கும். ஆனால் உயிருடனிருக்கும் வியாதியஸ்தனிடத்திலோ பல தடவை சன்மானம் பெறலாம்.

**பல சங்கதிகள்:**— (1) செல்வந்தான் சந்தோஷத்திற்கு காரணமென்று நினைப்பதற்கில்லை. (2) பிழை பொறுக்காதவன் மனிதனல்ல. (3) அயலார் காரியத்தையறிந்து அதைப்பற்றி வம்பு பேசுவதே மனிதர்களின் இயற்கையாகும். (4) காதல் என்னும் வியாதியானது ஒரு சமயம் தணிந்திருப்பினும் திரும்பவும் அதிகரிப்பது சகஜம். (5) காதலெல்லாம் காதலுமல்ல. ஓசையெல்லாம் சங்கீதமுமல்ல. (6) கலியாணம் வேண்டாமென்று வெளிக்கு மட்டும் மறைத்துப் பேசுகிறவன் ஒரு பெரிய பகல் திருடன்.



**ஒரு பெண்ணின் கூற்று:**— இதுதானா என் மீது இருந்த காதல்! புருஷராவார் யாவருமே சூதர், பொய்யர்கள், வஞ்சகர். அவர்கள் வார்த்தையில் நம்பிக்கையே வைக்கக்கூடாது. அவர்களுடைய கெட்ட எண்ணங்களைப் பூர்த்தி செய்து கொண்டதும் எங்களைப்போல் ஏமாந்தவர்களைக் கைவிட்டுவிடுவார்கள். பிறகு எங்களை விபசாரிகளென்று அவர்களே தூற்றுவார்கள்.

**டானிக் (Tonic):**— நமது பால்யர்கள் பதினாறு வயதிலேயே மன்மதாகாரமாய்த் திரிகின்றார்கள். இருபது வயதில் நரைத்த மயிரும், முப்பதில் கிழட்டுத்தோலும் காண்பிக்கின்றனர். வெயிலாகாது, குளிருமாகாது, பனியுமாகாது, மழையுமாகாது. டிராம்காரும், சைகிலும், ஜட்கா வண்டியுமில்லாமல் முடியாது. சிறு பிள்ளைகளும் டானிக் தேடுவார். பாஸ் பண்ணவும் டானிக்! பண்ண பிறகும் டானிக்! வெளியே போனால் டானிக்! உள்ளே வந்தால் டானிக்! என்னே இவர் தேகக்கட்டு!!

**விதவைக்கு விவாஹம் ஏன்?** இப்படிக் கேட்போர் தத்தமக்கு ஏன் விவாஹம் என்று ஏன் கேட்டுக்கொள்ளக்கூடாது? விதந்துவான தனது சிறு பெண் தாழ்வாரத்தில் தனியே உறங்க, தன் பத்தினியோடு உல்லாஸங் காணும் தந்தை எத்துணைக் கொடியோனாதல் வேண்டும்? எத்தனையோ லக்ஷம் விதவைகள் கொட்டிய கண்ணீர்தான் ஐயா! நம் தேசத்தில் வறுமையாகவும், கருப்பாகவும் பிளேக்காகவும் இதர துர்ப்பிக்ஷமாகவும் வந்திருக்கின்றது.

**ஆபரணமும் ஆடம்பரமான உடையும்:**— இந்துஸ்திரீகள் ஆபரணம் பூண ஆசைக்கொள்வது மதியீனமென்றும், ஆடையாலங்கிருதமே நாகரீகமென்றும் கருதுவோர் ஆழ்ந்தாலோசித்தறியவேண்டிய தொன்றுண்டு. ஆயிரம் ரூபாய் செலவு செய்த ஆடை ஆபத்து காலத்தில் என்ன விலைக்குப் போகும் என்பதையும், பொன், வெள்ளி ஆபரணங்கள் என்ன விலைக்குப் போகு மென்பதையும் நிதானித்துப் பார்க்கவேண்டும். உடல் முழுதும் மறைத்திருப்பதே நாகரீகமென்றெண்ணுகிற ஐரோப்பிய ஸ்திரீகளுடைய தேசாசாரத்தையும் சற்று சிந்தித்துப் பாருங்கள். அவர்களுடைய தேசத்தில் நெருப்புச் சட்டியை வந்தவரெதிரில் வைப்பதும், நந்தேயத்தில் விசிறியைக்கொண்டு விசிரவைப்பதும் கண்டுணர நேரமில்லையோ?

**தருமம் பண்ணுதல்:**— கோவில்களில் ஏகாதசிபோன்ற முக்கிய காலங்களில் நால்வருக்கு அன்னதானம் செய்யும்படியாக ஒரு நிதி ஏற்பாடுசெய்து அதைக் கோவில் அர்ச்சகர்களின் வசமோ கோவில் அதிகாரிகளின் வசமோ ஒப்புவித்தால் அந்தத் தொகையை அவர்கள் தங்கள் கைச் செல்வுக்கு வைத்துக்கொண்டு விடுகிறவர்களாயிருக்கிறார்கள். அல்லது அத்தொகையால்

அவர்களுடைய பழைய கடனைத் தீர்க்கவோ, அல்லது தங்கள் ஆஸ்தியில் சேர்த்துவிடவோ முயலுகிறார்கள். அர்ச்சனைக்காகத் தரும் பணம் கோயிலைச் சேராமல் அர்ச்சகர்களையே சேருவதாக இருப்பதால் அவர்களுக்கு இது பெரிய லாட்டரிதான்! தாம்பூலம் போட்டு மென்றுகொண்டே விக்கிரகத்தின் முன்பு புஷ்ப அர்ச்சனை ஒருவர்செய்ய, இன்னொருவர் கையால் காசும் பணமும் வாங்கியபடியே அர்ச்சனை நாமாவளி கூற எவ்வளவு அழகாக ஆலயங்களில் அர்ச்சனைகள் நடக்கின்றன! இதென்ன வயிற்றெரிச்சல்! தனது தகப்பனார் முதலியவர்களின் வருஷதிதி வருகையில் அவர்கள் ஈடேறும்படியாகக் கோயில்களில் பணம் கொடுத்து பொங்கல் செய்து நான்கு பேருக்கு அதை உண்ணக்கொடுத்து மிச்சத்தைத்தங்கட்குத்தரும்படி சொன்னால், கோயில் அர்ச்சகர்கள் அப்படிச் செய்வதே கிடையாது. பணம் கொடுத்த பேர் வழிக்குத் தரவேண்டிய பொங்கலை மட்டும் செய்து வைத்துவிட்டு மற்ற பணத்தைத் துணியில் முடிபோட்டுக் கொள்ளுகிறார்கள். கேட்கப்போனால் நால்வருக்கும் அப்போதே கொடுத்தாய் விட்டது என்கிறார்கள்! ஐயோ என்ன அக்கிரமங்கள்! தானம் வாங்கிய அரிசியைக் கடையில் விற்றுப்போட்டுப் பணமாக்கிக்கொண்டு மயக்கக் கடைக்குச் செல்வோர் வெகு பேர்!

**புரோகிதர்கள், தாசிரிகள்:—** இவர்களின் கண்களுக்கு யாராவது பிணியாளன் தென்பட்டுவிட்டால் அவன் சீக்கிரம் இறந்துபோகமாட்டானா என்று பிரார்த்திப்பார்கள். ஏனென்றாலோ அதில் இவர்களுக்கு நல்ல வருமானம் இருப்பதால் தான்! தானம், கருமாதி, திவசம் இவற்றிலெல்லாம் புரோகிதர் பாடு கொண்டாட்டமல்லவா? தாசிரிக்கு தூங்கிக்கொண்டிருக்கிற தன பறையைத் தட்டி எழுப்பவும், பணம் வாங்கவும் இடமேற்படுகிறதன்றோ? இவைகளெல்லாவற்றிலும் பெரிதாக அதிகமான வயிறு வாய்ந்தவர்கள், அதிலும் கலியாண வீட்டையும், சாவு வீட்டையும் எப்போதெப்போதென்று எதிர்பார்த்திருப்பவர்களுக்கு வெகு சந்தோஷமுண்டாய் விடுகிறது. தங்களுக்கென்று பெரிய இலையாகப் பார்த்து எடுத்துக்கொள்வார்கள்! தம் வீட்டாரனைவரையும் கூட்டிவருவோருமுண்டு. அவர்களுடைய வாடிப்போன தொந்தியும் பழையபடி உப்பி பள பளவென்று மினு மினுப்பையும் நல்ல காந்தியையும் அடைகிறது! கலியாண வீட்டிலே இந்த வயிறு பெருத்தவர்களை பெண் வீட்டார், மாப்பிள்ளையைச் சேர்ந்தவர்களென்று நினைப்பார்கள். மாப்பிள்ளை வீட்டாரோ இவர்கள் பெண் வீட்டாரைச் சேர்ந்தவர்களென்று எண்ணுவர்! இரண்டிடத்திலும் நல்ல அறுப்பு இவர்களுக்குக் கிடைக்கும். ஏமாந்தால் அகப்பட்டதையும் தங்களுடையதாக்கி மகிழ்வார்கள். இவர்களுக்குத் தான் நெருங்கிய பிராணபதமான பந்துவென்று பெயர்!


# பிரஜாநுகூலன்.

| புத்தகம் 8. | திரிச்சிராப்பள்ளி 1913-ம் ௵ மேமீ 1-ம் ௳ | சஞ்சிகை 2. |


## பத்திராதிபர் குறிப்புகள்.

**தமிழ்நடை:—** தமிழ்ப்பதங்களையே சமஸ்கிருத பதங்களாகச் சிலர் மாற்றிவிடுகின்றனர். குழந்தைகளின் பாடபுஸ்தகங்களில் "ஸமுத்ரம்" "ப்ராகாரம்", "ஸூமார்", "ஸங்கதி", "ஸூகம்", "ம்ருகம்", "வஸ்த்ரம்" போன்ற பதங்கள் அதிகம் மலிந்திருக்குமாயின் குழந்தைகள் எப்படிக் கற்க இயலுமோ நாம் அறியோம். ஆசிரியர்களின் நடையும் யுக்தியும் விசேஷமாக விருக்கலாமென்பதைப்பற்றி வாதிக்கவாவது, பிசகானவை யென்று சொல்லவாவது நாம் முன் வரவில்லை. திருத்தமாயும் தெளிவாயும் சுத்தமாயுமுள்ள தமிழ் நடை பயிற்றப்படவேண்டுமென்பதே நமது கக்ஷி.

**வேதாந்த சாஸ்திரங்கள்:—** ஹிந்து வேதாந்த சாஸ்திரத்தைக் கற்று அதில் அபிமானம் வைத்த ஒரு ஜர்மெனி தேசத்து சாஸ்திரக்ஞர் ஹிந்துக்களைப்பார்த்து "உங்களுக்கு எல்லாம் போய்விட்டது; வேதாந்தசாஸ்திரத்தைமட்டும் கை விடாதேயுங்கள்" என்று கூறினார். சென்ற 250 வருடங்களாய் நம்மில் அரசு வல்லோர் இல்லை, போர்வீரர் இல்லை, லௌகீக சாஸ்திரவிற்பன்னர் இல்லை, சிற்பிகள் எஞ்சினீர்கள் போன்ற பெரிய காரியங்கள் செய்யும் நிபுணர் இல்லை;—ஆயினும் பழைய சாஸ்திரங்களைக் கைவிடாமல் அவைகளை அங்கங்கே அறிந்தவர்கள் இருக்கிறார்கள். வேதாந்த சாஸ்திரத்தின் உண்மைகள் லௌகீகப் பெருமைக்கு விரோதமென்று நினைப்பது தப்பென ஸ்வாமி விவேகானந்தர் முதலான சாஸ்திரக்ஞர்கள் நிரூபித்திருக்கிறார்கள். இவ்வுண்மைகளை நமது தேசத்திலேயே பாமர ஜனங்கள் சரியாய்க் கிரகிக்கும்படி செய்வது அவசியம். நமது தேசத்தில் கூலிக்காரன் கூட அடிக்கடி வேதாந்தம் சொல்லித் தன்னைத் தைரியப்படுத்திக்கொள்வது சகஜமாகக் கண்டிருக்கிறோம். பிச்சையெடுப்பவனும் வேதாந்தப்பாட்டுகளைச் சொல்லிப்பிச்சையெடுக்கிறான், தாய் தன் பிள்ளையைத் தொட்டிலிட்டு ஆட்டும்போதும் வேதாந்தப்பாட்டுச் சொல்லுகிறாள். ஆயினும் இவர்கள் இந்த மகாசாஸ்திரத்தின் உண்மைகள்

தெரியாமலிருக்கிறார்கள். தெரியும்படி அவர்களுக்குப் போதிப்பின் அவர்கள் ஒழுக்கத்தைச் சீர்படுத்துவதுமன்றி தேசத்துக்கும் நன்மை செய்யும்.

ஐரோப்பியர்களும் நம்மவர்களும்:— ஐரோப்பியர்கள் தங்கள் உடம்பை உழைத்து வேலை செய்வது கௌரவக்குறைவென்று நினைக்காதிருக்கும்படி பாலியத்திலேயே கற்பிக்கப்படுகிறார்கள். நம்மவர்களோ நாற்காலியை எடுத்துப் போடுவதற்கும் ஒரு வேலைக்காரனை எதிர்பார்க்கிறவர்கள். ஒரு சமயத்தில் விக்டோரியா மகாராணி பாலியமாயிருக்கையில், ஓரிடத்துக்கு விருந்துக்குப் போக, அங்கு சிறிது தாமசப்பட்டதால் தமது இடுப்பில் கருப்புத்துணியைக் கட்டிக்கொண்டு ஜன்னல்களைத் துடைக்க ஆரம்பித்தாரென்று ஒரு கதை சொல்லப்படுகின்றது. இப்படி ஐரோப்பிய தேசத்தில் சக்கரவர்த்திகளாயும் இருப்பவர்கள் கூட, கையினால் வேலை செய்வது இளப்பமல்லவென்று சிறுபருவத்திலேயே கற்றுக்கொள்கிறார்கள். சமயம் நேரிட்டால் எவ்வளவு உயர்ந்த அந்தஸ்துள்ளவனும் கூலிக்காரன் போல் வேலை செய்வதற்குப் பின் வாங்கமாட்டான். மேலும் சமயம் வந்தால் மேல் நாட்டார் ஒன்று சேர்ந்து உழைக்கக்கூடுவார்கள். நம்மவர்களோ சமயம் நேர்ந்தால் இருக்கிற இடம் தெரியாமல் மறைந்துகொள்வார்கள்.

பிரம்மதேவனுக்கு ஆலயம்:—ஆஜ்மீரில் க்வாஜாசாகிப் என்ற புண்ணிய ஆத்மாவின் தர்காவைப் பூஜித்துச்செல்ல அநேக மகமதியர்கள் யாத்திரையாய் வருகிறார்கள். அப்படியே புஷ்கரம் ஏரியாகிய புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யத் திரளான ஹிந்து மகமதிய யாத்திரிகர் வருகிறார்கள். இந்த ஹிந்து மகமதிய யாத்திரிகர்களுக்கு விசேஷ காலங்களில் தங்கிக் களைப்பாறுவதற்கு ஒரு விடுதி அமைப்பது ஒரு பெருந்தர்மம். இந்த புஷ்கரம் ஏரியைச் சுற்றி 42 ஹிந்து தேவாலயங்கள் இருக்கின்றன. அவைகளில் ஒன்று ஹிந்து திரிமூர்த்திகளில் சிருஷ்டிகர்த்தாவாகிய பிரம்மாவின் ஆலயம்; பிரம்மதேவனுக்கு ஹிந்துக்கள் ஆலயங்கட்டி அவரைப் பூஜிப்பது வழக்கமில்லை. ஏனெனில் ஹிந்துக்கள் ஜன்மத்தை வெறுக்கிறவர்கள். இந்த புஷ்கரத்தில் உள்ள ஆலயம் இந்தியா முழுமையிலும் ஒன்றேதான் எனப்படுகிறது.

மதமும் கௌரவப்பட்டங்களும்:—முதலாவது நெப்போலியன் உலகசுபாவத்தை நன்றாக அறிந்திருந்தான். ஒரு நாள் நெப்போலியன் சாயந்திரம் வேளையில் ஏகாந்தமாய் உட்கார்ந்திருக்கையில் கோயில் கண்டாமணி சப்திப்பதைக் கேட்டு, "மதமும் கௌரவப்பட்டங்களும் மனுஷ்யர்களை அடக்கியாளும் கருவிகள்" என்றான்.

புரோகிதர்கள்:— ஆதிகாலத்தில் வீட்டு எஜமானே புரோகிதனாயிருந்தார். அப்போது சம்ஸ்கிருதம் அனைவரும் அறிந்த பேசும் பாஷை



யாயிருந்தது. பிறகு சம்ஸ்கிருதம் பேசும் பாஷையாயில்லாமல் ஜனங்கள் வேறு பாஷைகளைப்பேச ஆரம்பித்தபோது, மேற்கண்ட சம்ஸ்கார மந்திரங்களைக்கற்று அவைகளைச் சொல்லுகிற ஒரு வகுப்பார் தனியாய் ஏற்பட்டார்கள். ஆரம்பத்தில் இந்த வகுப்பாருக்கு சம்ஸ்காரங்களின் அர்த்தம் தெரிந்திருந்ததென்று நாம் நினைக்கலாம். பிற்காலத்திலோ இந்த சம்ஸ்காரங்களை அர்த்தம் தெரியாமல் கிளிப்பிள்ளைகள் போல் பாராமற் படித்துச் சொல்லும் வகுப்பாராகிய புரோகிதர்கள் ஏற்பட்டு விட்டார்கள். தற்காலத்தில் இந்தப் புரோகிதர்களைவிட சம்ஸ்கிருதபாஷையில் ஞானமில்லாதவர்களும் உலக விவகாரம் தெரியாதவர்களுமாகிய வகுப்பாரில்லை. இவர்கள் தங்களைத் தாங்களே கௌரவப்படுத்திக் கொள்கிறவர்களல்ல. கிரகஸ்தர்களுடைய கௌரவமும் இவர்களுக்குக் கிடைக்கிறதில்லை.

பிரம்மஞான சபை:—இச்சபையின் கொள்கை இந்தியாவில் சில சிறுவர்களின் புத்தியைக் கெடுத்துவிட்டது. அவர்கள் இன்னும் நிஜத்தைக் கண்டறிந்தவர்களில்லை. இச்சபையின்கண் நிறைந்துள்ள "மஹாத்மா" என்பது மனித ஜாதிக்கு யாதொரு உபகாரமும் செய்யவில்லை. பிரம்ம ஞானத்தினால் மனிதஜாதிக்கு வேண்டிய சட்டங்களும், மதவிஷயமான சட்டங்களும் செய்யலாமென்பது வீண் பேச்சு. இச்சபை இமயமலையின் உச்சியிலிருந்து, அருட்சி அடையப் போவதாகப் பாசாங்கு செய்யலாமே ஒழிய இதனால் வேறொன்றும் செய்ய முடியாது.

எலிகளைத் தின்னுங்கள்:—மாமிச போஜனத்தால் ஒரு பிரயோஜனமுமில்லையாவென்று "ஹென்றி ஸ்மித்" கேட்டதற்கு கேஷப் சந்திரஸென் பின் வருமாறு கூறினார்:—பம்பாயில் தோன்றிய பிளேக்குக் காரணம் எலிகளென்றும் அவ்வெலிகளைக் கொல்வதவசியமென்றும் பெயர் பெற்ற டாக்டர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். கவர்ன்மெண்டார் எலிகளைக் கொல்வதற்காக ஏராளமான பணம் செலவழித்தும் பயன்படவில்லை. எலிகள் இன்னும் பிளேக் தேவதையைத் தூக்கிக்கொண்டோடுகின்றன. ஆதலின் மாம்ஸ பக்ஷணிகள் தயை (!) செய்து சீனாகாரர்களைப்போல் இனி எலிகளைத் தின்பதென்கிற விரதங்கொண்டு அந்தப்படி அநுஷ்டித்து வந்தால் வெகு ஜனங்களுக்கு உபகாரமாயிருக்கும். சில தினங்களில் எலிகளேயில்லாமல் (!) ஒழிந்துபோம். பிளேக்கும் நிவர்த்தியாகும்.

ஆந்தைக்காதல்:—நோயாளியிருக்குமிடத்தினருகில் ஆந்தைக் கத்துமாகில் அந்நோயாளி நிச்சயமாய் இறப்பானென்று நாம் யாவரும் நம்புகின்றோம். இது சாஸ்திர சம்மதமுமானதே. ஆந்தையானது காற்றிலுண்டாகும் எல்லாவித மாறுபாடுகளையும் நன்கு யறிய வல்ல பறவை

யாம். நோயாளி யிருக்குமிடத்திலுள்ள வாயு மாறுபடுங்காலத்து ஆந்தை அம்மாறுபாட்டைத் தாளமுடியாது கத்துகின்றது. இம்மாறுபாடு அந்நோயாளியினால் தாளமுடியாததாயிருக்கின்றது. ஆகவே அந்நோயாளிக்கு மரணம் சம்பவிக்கக்கூடும். அதனால் ஆந்தைக்காதல் சிலவேளை மரணத்தைத் தெரிவிக்கின்றது என்னும் நம்பிக்கை சாஸ்திர யுக்தமானதே.

பூரீக்ஷேத்திரம்:—பூரி என்பது இந்தியாவின் கிழக்குக் கடற்கரையில் கல்கத்தாவுக்கும் விசாகப்பட்டணத்திற்கும் மத்தியிலுள்ள ஓர் சிறந்த க்ஷேத்திரம். துஷ்டநிக்ரகம் சிஷ்டபரிபாலனம் செய்வதற்காக மகாவிஷ்ணுவே, துவாபர யுகத்தில் ஸ்ரீ கிருஷ்ணனாக அவதாரம் செய்தார். அவர் எந்த காரியத்தை உத்தேசித்து அவதாரம் செய்தாரோ அக்காரியம் முடிந்து உடனே தம்தேகத்தை விட்டுவிட்டு மூலரூபத்துடன் ஐக்கியமாயினர். அந்த தேகத்தை அருச்சுனன் தகனஞ் செய்ததாகவும் சொல்லப்படுகிறது. அச்சமயம் சமுத்திரம் பொங்கித் துவாரகையை மூழ்கச் செய்து விட்டதாம். அவருடைய தேகத்தில் ஒரு சிறிய பாகம் சமுத்திரத்தில் அடித்துக்கொண்டு கிழக்குக்கரையிலுள்ள ஜெகன்னாத க்ஷேத்திரத்தின் கடலில் மிதந்துவர, அதை எடுத்து அவ்வூரார் மரத்தால் செய்த ஜெகன்னாத சுவாமியின் பிம்பத்திற்குள் வைத்துப்பூஜைசெய்துக்கொண்டு வருகிறதாகவும், பன்னிரண்டு வருஷத்துக் கொரு முறை ஜெகன்னாத சுவாமியின் மரக்கட்டையால் செய்த பிம்பத்தை புதுப்பித்து ஸ்ரீகிருஷ்ணனுடைய தேகத்தின் ஒரு பாகத்தை அதில் நுழைத்துவைத்துப் பூஜித்து வருவதாகவும் சொல்லப் படுகிறது. அதற்காக லட்சக்கணக்கான ஜனங்கள் அந்த மகோற்சவத்தைப் பார்க்க வருவது வழக்கம்.

——→○←——

## பலவகைக் குறிப்புகள்.

தங்கள் சுயபாஷையை யழியவிடுகிற ஜாதியார், தங்கள் மனோவலிமையின் சுயாதீனத்தின் மேன்மையை இழந்து, தாங்கள் அடியோடே அழிந்து போகத் தங்களுக்கே மனமிருப்பதாக ஒப்புக்கொள்வதுபோல் இருக்கின்றார்கள்.

ஜப்பானியர்களே, உங்களுக்கும் எங்களுக்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. அதாவது நீங்கள் திருந்த வேண்டுமென்று முயலுகின்றீர்கள். நாங்களோ முன்னுக்கு வரக்கூடாதென்று பிரதிக்ஞை செய்திருக்கிறோம்.

மெய்யாகவே ஒரு பெருந் தொகையை வைத்திருக்கிறவனுக்கு லேசான கவலையல்ல. இரும்புப் பெட்டிகள் என்னத்திற்கு? அதுகளைத் தேடியே திருடர்கள் வருகிறார்கள்.

இக்காலத்திய பெண்கள் ஒரே பேறில் ஒடுங்கி, மறுபேறில் மடங்கி, 3-ம் பேறில் முடங்கி, 4-ம் பேறில் நகர்ந்து நலங்கெடுகிறார்கள்.

# பிரஜாநுகூலன்.

திரிச்சிராப்பள்ளி.
புத்தகம் 8. | 1913-ம் வருஷம் அக்டோபர் மீ | சஞ்சிகை 6.

OFFICE OF THE [illegible] OF BOOKS
REGISTERED
[illegible] 1913
MADRAS

## மதுரைச் சங்கப் [illegible]

——○○○——

வடவேங்கடம் தென்குமரியென்னும் இவ்வெல்லைகளுக்குள்ளிட்ட இத் தென்னாட்டில் அநாதியாக வழங்கிவருகின்ற தமிழ் பாஷையானது ஆதியிலே தென்மதுரையில் அரசுபுரிந்துவந்த பாண்டிய ராஜாக்களின் ஆதரவினாலே அபிவிர்த்தி செய்யப்பட்டது. அதற்கு முதற்காரணமா யிருந்தவர் அகஸ்தியமா முனிவர். இம்முனிவர் சுப்பிரமணியக் கடவுளினிடத்தில் தமிழ்பாஷையைக் கற்றுணர்ந்தார். பூர்வத்திலே வேதவியாச மாமுனிவர் வடக்கே காசிமாநகரில் வடமொழிச் சங்கமொன்று ஏற்படுத்த, அச்சங்கப் புலவர்களுள் ஒருவராயிருந்த அகஸ்திய முனிவர் மற்றப் புலவர்களோடு மாறுகொண்டு அவர்களது இறுமாப்பை அடக்கும்பொருட்டே மிகவும் இனிய பாஷையாகிய இத்தமிழை யுணர்ந்து தென்றிசைக்குச் சென்று அந்த பாஷைக்கு ஆதாரமான பல நூல்களை இயற்றினார்.

பிறகு வடதிசையிலுள்ள வடமொழிச் சங்கத்துக்கு எதிராகத் தென்திசையில் தமிழ்ச்சங்கமொன்று ஏற்படுத்தக்கருதி அரசர்களுடைய ஆதரவின்றி அக்காரியம் முற்றுப்பெறாதெனத் தேர்ந்து, தென்மதுரையில் அக்காலத்தரசனாயிருந்த காய்சினவழுதியைக் கொண்டு அங்கே சங்கமொன்று ஸ்தாபித்தார். அச்சங்கம் பாண்டியர்களுடைய ஆதரவும் அநாதரவும் காரணமாகத் தலைச்சங்கம், கடைச்சங்கம், இடைச்சங்கமென மூன்றாயிற்று.

தலைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தவர்கள் இறையனார், அகத்தியர் முதலாகிய ஐந்நூற்று நாற்பத்தொன்பது புலவர்கள். அந்தத் தலைச்சங்கத்தில் 4449 பாவலர்கள் கவி யரங்கேற்றினார்கள். தொல்காப்பியம், காக்கைபாடினியம் முதலிய நூல்கள் தலைச்சங்கத்தில் அரங்கேறினவைகளாம். அதன் காலம் ஏறக்குறைய 4500 வருஷமாம். அது காய்சினவழுதி முதல் கடுங்கோன் வழுதி ஈறாக 89 பாண்டியர்களை யுடையது.

அதன் பிறகு உண்டானது இடைச்சங்கம்; அதில் அகஸ்தியர் தொல்காப்பியர் முதலாய் 59 புலவர்கள் கூடியிருந்ததாகவும், 3700 பேர் கவியரங்கேற்றியதாகவும் தெரியவருகிறது. இதன்காலம் 3500 வருஷமாம். இது வெண்டேர்ச் செழியன் முதல் முடத்திருமாறனீறாக 59 பாண்டியரையுடையது.

அதன்பிறகு உண்டானது கடைச்சங்கம். கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தோர் நக்கீரர், மருதனிளநாகனார் முதலான நாற்பத்தொன்பது புலவர்கள். கவியரங்கேற்றிய பாவலர்கள் 449 பேர். நெடுந்தொகை நானூறு, குறுந்தொகை நானூறு, நற்றிணை நானூறு முதலிய நூல்கள் கடைச்சங்கத்தில் அரங்கேறியவைகளாம். இச்சங்கம் 2000 வருஷகாலமுள்ளது; முடத்திருமாறன் முதல் உக்கிரப்பெருவழுதியீறாக 49 பாண்டியரையுடையது.

இக்கடைச்சங்கப் புலவர்கள் சரஸ்வதியினுடைய அம்சமாயுள்ளவர்கள்; அதன் விவரமாவது :—பாண்டிய நாட்டில் வங்கியசேகர பாண்டியன் செங்கோல் செலுத்திவரும் நாளில் பிரமதேவர் காசியில் வேதவிதிப்படிப் பத்து அசுவமேதஞ்செய்து நிறைவேற்றிக் கங்காநதியில் அவப்ருதஸ்நானஞ் செய்வதற்காக சரஸ்வதீ, சாவித்திரி, காயத்ரி என்னும் தம்மனைவியர் மூவரோடுஞ்சென்றார். சரஸ்வதி வழியிலோர் வித்தியாதரப்பெண்ணினது பாட்டைக்கேட்டுக்கொண்டு பின்தங்கி நின்றாள். பிரமதேவர் மற்றிருவரோடுங் கங்கைக்கரை சேர்ந்து சற்றுநேரங் காத்திருந்தும் சரஸ்வதி வாராமையினால் அவ்விருவருடனே அவர் கங்கையாடிக் கரையேறினார். அப்போது சரசுவதி வந்து "என்னைவிட்டு நீர் மஞ்சனமாடலாமா" வென்று கொடுமை கூற, பிரமதேவர் சீற்றங்கொண்டு உன்குற்றம் உனக்குத் தெரியாமல் நீ என் மேல்பழி கூறுகின்றாயாதலால் நீ அநேக மனுஷிய ஜனனம் எடுத்து அக்குற்றத்தை நீக்கிக்கொள்ளக் கடவையென்று சபித்தார். அதுகேட்டுச் சரசுவதி பயந்து சுவாமி! அடியாள்செய்த பிழையைப்பொறுத்து, தேவரீருக்குத் தர்ம பத்தினியாகிய நான் மனுஷிய ஜெனனம் எடுத்து மயங்காவகையருளல் வேண்டும்" என்று பிரார்த்திக்க, பிரமதேவர் மனமிரங்கி "பெண்ணே! உனக்குப்பதில் உன் சொரூபமாகிய * முதலெழுத்து ஐம்பத்தொன்றில் ஆகாரமுதல் ஹகார மீறாகவுள்ள நாற்பத்தெட்டு எழுத்துகளும் நாற்பத்தெட்டு புலவர்களாக பூலோகத்திற் பிறக்கக் கடவன; எழுத்துகளுக்கெல்லாம் அகர முதன்மையானதால் அந்த அகரத்துக்கு முதன்மையாகிய கடவுளுமொரு புலவராகி அவர்களுக்கு முதன்மையாய் அறிவு விளங்கச்செய்துகொண்டு இருப்பார்" என்று அருளிச் செய்தார்.

* இங்கே முதலெழுத்தென்றது ஆரிய பாஷையின் முதலெழுத்தை.



அப்படியே அந்நாற்பத்தெட்டெழுத்துக்களும் வெவ்வேறிடங்களில் மனிதராகப்பிறந்து தமிழ்ப்புலவர்களாய்த் தேசங்கள்தோறும் சென்று புலமை செலுத்திப் பாண்டியதேசத்துக்கு வந்து மதுரையை நோக்கிச்சென்றார்கள். அப்போது சொக்கநாத சுவாமியானவர் ஒரு புலவர்போல் எதிரில் வந்து அப்புலவர்களைப் பார்த்து நீங்களெங்கிருந்து வருகிறீர்களென்று கேட்க, அவர்கள் நாங்கள் தேசசஞ்சாரஞ் செய்துகொண்டு வருகிறோமென்ன, சுவாமியானவர், "புலவர்களே! திருவாலவாயி லெழுந்தருளியிரா நின்ற சோமசுந்தரக்கடவுளைத் தரிசிக்க வாருங்கள்" என்று சொல்லி அவர்களை அழைத்துக்கொண்டுபோய்த் தரிசனஞ் செய்வித்துத் தாம் அங்கேயே மறைந்துபோய்விட்டார்.

அதைக்கண்ட அப்புலவர்கள் அதிசயித்துச் சோமசுந்தரக் கடவுளுக்குப் பாமாலை சாத்திப்பணிந்து, பின்பு பாண்டியராஜனுடைய சபா மண்டபம் புகுந்து தமது கல்வித்திறத்தைக் காட்ட, அவனும் அவர்களுடைய கல்வி கேள்விகளைக்கண்டு தனது சபைக்குத் தக்கவர்களென்று தெரிந்துகொண்டு சொக்கநாதசுவாமி ஆலயத்திற்கு வடமேற்கில் சங்கமண்டபமென்று ஒரு மண்டபம் கட்டுவித்து அப்புலவர்களுக்கு வேண்டியவைகளெல்லாம் அளித்து அவ்விடத்திலேதானே இருக்கச் செய்தான். அவர்களுக்கு அரசன் பலவிதமாய் உபசாரங்கள் செய்யக்கண்டு, முன்பு அங்கிருந்த புலவர்கள் பொறாமைகொண்டு, அந்நாற்பத்தெட்டுப் புலவருடனும் தனித்தனி வாது செய்து தோற்று முன்னுள்ள பெருமையும் இழந்துபோயினார்கள். அவ்வாறே புறநாட்டுப்புலவர்களும் வந்து வாதுசெய்து தோற்றனர்.

இங்ஙனம் வாதுக்கு வந்தவர்களை வென்று ஜயம்பெற்றிருக்கும் சங்கப்புலவர்கள் ஒருநாள் தமக்கு முதன்மைப் புலவராகிய சொக்கநாதசுவாமி சந்நிதியிற்சென்று பணிந்து துதித்து, "சுவாமி! எல்லாரும் வந்து எங்களுடன் வாது செய்கிறார்கள். அவ்வாறன்றி அவரவரது கல்வித்திறத்தை அளவிடத்தக்க கருவியொன்று அடியேங்களுக்குத் தந்தருளல் வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். சுவாமி அவர்கள் வேண்டுகோளுக்குத் திருவுளமுவந்து தாமும் ஒரு புலவர்போல் வடிவுபூண்டு ஒரு சிறு பலகையைக் கையிலெடுத்து வந்து சங்கப்புலவர்களுக்குக் காண்பித்து, "புலவர்களே! இதோ இந்தப்பலகை இரண்டு சாணளவிற்குச் சதுரமாயிருக்கின்றது; இருந்தாலும் மெய்ப்புலவன் ஒருவன் வந்தால் அவனுக்கு ஒரு முழம் வளர்ந்து இடம் கொடுக்கும். அப்படி எத்தனை பேர்வந்தாலும் ஒவ்வொரு முழம் விழுக்காடு இடங்கொடுத்துக் கொண்டே வரும்" என்று சொல்லி அதைத் தந்தருளினார். அதை வணங்கி வாங்கிக்கொண்டு அவர்கள் சங்கமண்டபத்தை யலங்கரித்து ஓர் பீடிகையில் அப்பலகையை வைக்க, அதில்

முதலிலே நக்கீரர் ஏறியிருந்தார்; உடனே கபிலரும் பாணரும் ஏறினார்கள். இம்முறையே மற்றவர்களும் ஒவ்வொருவரா யேறியிருந்து அதுமுதல் பல பாடல் செய்துவந்தார்கள். அப்பாடலெல்லாம் சொல்வளமும் பொருள் வளமும்ஒத்து ஒரேதன்மையனவாயிருக்க, இன்னார்பாடியபாடல்இதுவெனப் பகுத்தறியக்கூடாமல் ஒருவர் பாடியதை மற்றொருவர் பாடியதாக நினைத்து அவர்கள் கலகப்பட்டுக்கொண்டிருக்க, சோமசுந்தரக்கடவுள் ஒரு புலவர் வேடங்கொண்டு வந்து அவர்கள் பாடியிருக்கும் பாடல்களைக் கொண்டுவரச் சொல்லிப் பார்த்துச் சொல்தொடர்ச்சியும் பொருள் தொடர்ச்சியும் நோக்கிப் பகுத்து அவரவர் பாடிய பாடல்களை அவரவர் கையிற் கொடுத்தார். அதை வாங்கிக்கொண்டு சங்கப்புலவர் மனங்களித்து ஐயரே! தேவரீரே எங்களுக்கு முதல்வராயிருக்கவேண்டுமென்று பிரார்த்தித்துச் சங்கப்பலகையின் மத்தியில் அவரை வீற்றிருக்கச்செய்து, தாங்கள் சூழவிருந்து அவ்விறையனாருடன் நாற்பத்தொன்பது பேராகி, பின்னும் பலபாடல் செய்துவந்தார்கள்.

இப்படியிருக்கையில் ஒரு வசந்தகாலத்தில் வங்கியசூடாமணி பாண்டியன் தன் மனைவியோடு ஒருநாள் நந்தவனத்திற் போயிருக்கும்போது இளந்தென்றல் அதிக பரிமளத்துடன் வீச, இது எந்தப்பூவின் வாசனையுமின்றி ஓர் திவ்விய வாசனையாயிருக்கும்படி யென்னென்று அதிசயித்து, அது தன் பக்கத்திருக்கும் தன் மனைவியின் அளகபாரத்து வாசனையாயிருக்கக்கண்டு, இவ்வாசனை இவள் கூந்தலுக்கு இயற்கையாயுள்ளதோ அல்லது செயற்கையால் வந்ததோ என்று சங்கித்து, இப்போது என் சந்தேகத்தை யறிந்து யாராவது ஒரு கவி செய்தால் அவர்களுக்கு ஆயிரம்பொன் கொடுப்பேனென்று ஒரு பொற்கிழிகட்டி ஏவலாளிகள் கையிற்கொடுத்தான். அவர்கள் அதை வாங்கிப்போய் அரசன் சொன்ன சங்கதியைச் சொல்லிச் சங்கப்புலவர்களுக் கெதிரில் கட்டினார்கள். அப்போது சங்கப்புலவர் ஒவ்வொருவரும் யோசித்துப்பார்த்து, பாண்டியன் கருத்தையறிய முடியாமல் வியாகுலமடைந்திருந்தார்கள்.

இவர்கள் இப்படியிருக்க, தருமியென்னும் ஒரு சிறுவன் பொற்கிழி கட்டியிருப்பதைக் கேள்வியுற்று அது தனக்குக் கிடைத்தால் கலியாணஞ் செய்துகொள்ளலாமென்று கருதிச் சொக்கநாத சுவாமியைத் தொழுது தோத்திரஞ்செய்து, "சுவாமி! தாய் தந்தையில்லாத எளியேனுக்குப் பாண்டியன் கருத்துக்கிசைய ஒரு கவி எழுதிக்கொடுத்தால் அதைக்கொண்டுபோய்க்கொடுத்து அப்பொற்கிழியை அவிழ்த்துப்போய் விவாகஞ் செய்துகொண்டு தேவரீர் திருவடிப்பூசைக்கு யோக்கியனாவேன்" என்று பிரார்த்திக்க, சொக்கநாதசுவாமி கிருபைகூர்ந்து,



"கொங்குதேர்வாழ்க்கை யஞ்சிறைத்தும்பி
காமஞ்செப்பாது கண்டதுமொழிமோ
பயிலியதுகெழீஇய நட்பின்மயிலியற்
செறியெயிற்றரிவை கூந்தலி
னறியவுமுளவோநீ யறியும்பூவே"

என்னுங் கவியை எழுதிக்கொடுக்க, தருமியும் சுவாமியைத் தொழுது சந்தோஷத்துடன் அதை வாங்கிக்கொண்டுபோய்ச் சங்கப்புலவரிடத்திற் கொடுத்தான். அவர்கள் அதை வாசித்துப்பார்த்துச் சொல்லழகும் பொருட்பொலிவும் நன்றாயிருக்கிறதென்று வியந்து பாண்டியராஜனுக்கு அப்பாடலை படித்துக்காட்ட, பாண்டியன் கேட்டுச் சிரக்கம்பஞ்செய்து தருமியைநோக்கி, நீர் இப்புலவருடன் போய் சங்கமண்டபத்தில் கட்டியிருக்கும் பொற்கிழியை அவிழ்த்துக்கொள்ளுமென்று உத்தரவு செய்தான். அப்படியே போய்த் தருமி சங்கமண்டபத்தில் தொங்கக்கட்டிய பொற்கிழியை அவிழ்க்கத் தொட்ட மாத்திரத்தில், நக்கீரர் வந்து 'அடா! நீ கிழியை அவிழ்க்காதே, நீ கொண்டுவந்த பாட்டில் குற்றமிருக்கிறது' என்று சொன்னார். தருமி அதைக் கேட்டவுடனே மிகுந்த துயரமடைந்து சொக்கநாத சுவாமி சந்நிதியிற் போய் அப்பாடலை வைத்துப் பணிந்து, 'ஐயரே! இப்பாடலை என் கையிற் கொடுத்தது மிக நன்றாயிருக்கின்றது! என் கலியாணத்துக்குப் பொருள்கிடைக்கவில்லையே யென்கிற மனவருத்தம் அடியேனுக்கில்லை; சிலநாள் பல்பிணிச் சிற்றறிவினோராகிய சங்கப்புலவர்கள் தேவரீர் பாடலுக்குக் குற்றஞ்சொன்னார்களே என்கிற விசனம் என்னை வருத்துகிறது, என்று வருந்த, சுவாமியானவர் ஒரு புலவராக வேடம்பூண்டு சங்கத்தார் முன்பு சென்று நின்றுகொண்டு, "நம்முடைய கவிக்குக் குற்றஞ்சொன்னவன் யாவன்' என்று கேட்க, நக்கீரதேவர் கொஞ்சமும் அஞ்சாமல் 'நான்தான் சொன்னவன்' என்றார். அக்குற்றமென்னவென்று சுவாமி வினவ, மாதர் கூந்தலுக்குப் புட்பத்தின் சேர்க்கையால் வரும் செயற்கைவாசனையேயன்றி இயற்கைவாசனை உண்டென்று சொன்னதுதான் குற்றமென்ன, பத்மினிசாதி ஸ்திரீயின் கூந்தலுக்கும் இயற்கை வாசனை இல்லையோ என்ன, அதற்கும் அவர் செயற்கை வாசனையேயன்றி இயற்கை வாசனையில்லை யென்றார். தேவஸ்திரீயின் கூந்தலுக்கோ வென்ன; அதுவுங் கற்பகமலரையணிவதனால் உண்டான செயற்கை வாசனையுள்ளதே யென்றார். நீ வந்தித்து வழிபாடு செய்கின்ற காளத்தீசருடைய வாமபாகத்தில் வீற்றிருக்கின்ற ஞானப்பூங்கோதையார் கூந்தலோ என்ன, அதுவும் அப்படியேயென்று நக்கீரர் தங்கொள்கையை விடாமல் சாதிக்க, இன்னும் இவன் தைரியத்தை வெளியிடுவோமென்று புலவர் பெருமானாகிய சோமசுந்தரக்கடவுள் தமது நெற்றிக்கண்ணைச் சற்றே திறந்துகாட்டினார். அதைக்

கண்டும் பயப்படாமல், தேவேந்திரன்போல் உடம்பெல்லாங் கண்ணைக் காட்டினாலும் நீர் சொன்ன பாடல் குற்றமுள்ளதே என்றுச்சொல்லிச் சாதித்தார்; ஆயினும் சுவாமியினுடைய நெற்றிக்கண் தீயினது வெப்பத்துக்காற்றாதவராய்ப் பொற்றாமரையென்னும் புண்ணிய தீர்த்தத்திற் போய் மூழ்கிவிட்டார். புலவர் வேடம்பூண்டுவந்து வாதாடிய சோமசுந்தரக் கடவுளும் அந்தர்த்தானமாயினார். அதுகண்டு கபிலர், பாணர் முதலிய மற்றைப் புலவர்கள் பயந்து மனம்நடுங்கி, இனி என்ன செய்வோம்; நக்கீரர் தேடிக் கொண்ட குற்றம் எளிதானதல்லவே; சொக்கநாதசுவாமி செய்த பாடலென்று தெரிந்தபின்புங் குற்றஞ்சொன்னாரே, அப்படிச்சொல்லலாமா; இந்தக்குற்றம் அவராலே தீரவேண்டியதேயன்றி மற்றொருவராலும் தீரத்தக்கதல்ல; ஆகையால் இனி நக்கீரதேவர் பிழைப்பதருமையென்று இரக்கமுற்று, நக்கீரதேவரில்லாத நம்முடைய சபை அரசரில்லாத நாடுபோலவும் நாயகமணியில்லாத மதாணிப் பதக்கம் போலவும், மெய்ஞ்ஞானமில்லாதகல்வி போலவும் பொலிவிழந்திருக்கிறது என்று வருந்தி, சொக்கநாத சுவாமியின் சந்நிதியிற்போய், அவர் பாதாரவிந்தங்களில் பணிந்து பலவாறு தோத்திரஞ் செய்து, 'எங்கள் ஐயரே! நக்கீரன் தெரியாமற்செய்த பிழையைப் பொறுத்தருளல்வேண்டும்' என்று போற்றி செய்தார்கள்.

சொக்கநாத சுவாமியும் திருவுளமிரங்கி மீனாக்ஷி சமேதராய்த் தீர்த்தக் கரையிலெழுந்தருளிக் கிருபைகூர்ந்து நோக்கவே வெப்பம் நீங்க, நக்கீரர் சொக்கநாத சுவாமியின் திருவடிகளில் மிக்க அன்புடையவராய், உலகமாதாவாகிய ஞானப்பூங்கோதையாருடைய அளகபாரத்துக்கும் செயற்கைவாசனையேயன்றி இயற்கைவாசனை யில்லையென்ற குற்றத்தைத் திருக்காளத்தியில் வீற்றிருக்கும் கடவுளே க்ஷமிக்கவேண்டுமாகையால் அவரையே தோத்திரஞ்செய்ய வேண்டுமென்று நினைத்து, கயிலையைக் குறித்து ஒரு வெண்பாவும் காளத்தியைக் குறித்து ஒரு வெண்பாவுமாக அந்தாதிக்கிரமத்தில் நூறு வெண்பாக்கள் பாடித்துதித்தார். அந்தப்பிரபந்தத்திற்குக் கயிலைபாதி காளத்திபாதியந்தாதி என்று பெயர். அந்தப் பிரபந்தத்தைச் சொக்கநாத சுவாமியானவர் கேட்டருளிக் கிருபைகூர்ந்து நக்கீரர் கையைத் தம்முடைய திருக்கரத்தினால் பற்றிக் கரையேற்றினார். உடனே நக்கீரர் சோமசுந்தரக் கடவுளைப் பணிந்து, குற்றஞ்செய்தவர்களுக்குத் தண்டனையும் பக்தி செய்தவர்களுக்குக் கிருபையும் புரிந்தருளிய தன்மையைப் பொருளாகவைத்து ஒரு பிரபந்தம் பாடினார்: அப்பிரபந்தத்துக்குக் கோபப்பிரசாதம் என்று பெயர். பின்னும் சோமசுந்தரக்கடவுள் விஷயமாய்ப் போற்றிக்கலி வெண்பாவும் பெருந்தேவபாணி யென்று ஒரு தோத்திரப் பிரபந்தமும், திருவெழுகூற்றிருக்கையும் பாடிப் பணிந்தார்; மற்றைப்புலவர்களும் தனித்தனிப் பாடித் துதித்தனர்.



அப்பொழுது சோமசுந்தரக்கடவுள் நக்கீரரைக் குளிரநோக்கி, நீ முன்போல் இப்புலவர்களோடு சங்கமண்டபத்தில் போயிரு என்று கட்டளையிட்டு மறைந்துவிட்டார். அக்கட்டளைப்படி நக்கீரரும் மற்றவர்களும் சங்கமண்டபத்திற் போயிருந்து அவ்விடத்திற் கட்டியிருந்த பொற்கிழியை அவிழ்த்துத் தருமிக்குத் தந்து, பின்னும் பாண்டியராஜனைக் கொண்டு பல வரிசைகளைக் கொடுப்பித்துத் திருவாலவாயனுடைய திருவருட்பெருமையை வியந்தவர்களாய்ச் சங்கமண்டபத்தில் கல்வி ஆராய்ச்சி செய்துவந்தார்கள். இப்படிவருகையில் ஒருநாள், சொக்கநாதர் நக்கீரதேவருக்குத் தரிசனமாகி, இவனுக்கு இலக்கணம் இன்னமும் போதிக்கவேண்டுமென்று திருவுளம் பற்றி அகஸ்தியமுனிவரைக் கொண்டு அவருக்கு இலக்கணம் போதிப்பித்தருளினார்.

பின்பு நக்கீரதேவர் தாங்கற்ற நூலை ஐயந்திரிபற மற்றப்புலவர்கட்கும் புலப்படுத்திக்கொண்டு அவர்களுடன் சங்கமிருக்கையில், அப்பாண்டிநாடு பன்னிரண்டு வருஷம் மழையில்லாது வருந்த, அப்போது செங்கோல் செலுத்திவந்த உக்கிரப்பெருவழுதியென்னும் பாண்டியன் சங்கப்புலவரெல்லாரையும் வரவழைத்து, புலவர்களே! இப்போது உங்களுக்குத் தெரிந்த தேசங்களில் போயிருந்து, என்றேனும் நன்றான நாளில் என்னை மறந்துவிடாமல் வந்து சேருங்களென்று வேண்டிக்கொண்டான்.

அது கேட்டுச்சங்கத்தார் அவர்களுக்கிஷ்டமான தேசங்களிற் சென்றார்கள். அப்பொழுது நக்கீரதேவர் வடதிசையிலே இமயமலைக்குச் சமீபத்திலுள்ள ஒரு பெருங்காட்டின் வழியே சென்றார். அங்கே ஒரு தடாகத்தைக்கண்டு அதில் நீராடிச் சிவபூசை செய்துகொண்டிருக்கையில், அத்தடாகக்கரையிலுள்ள தெய்வத்தன்மை பொருந்திய ஓராலமரத்திலிருந்து ஒரு பழுப்பு அவருக்கு முன்னே பாதி நீரிலும் பாதி நீர்புறத்திலுமாக விழுந்தது. நீரிலே விழுந்தபாதி பறவைவடிவமும் அடைந்து இருபுறமிழுக்க, நக்கீரதேவர் அவ்வாச்சரியமான காரியத்திலே கருத்துச் செலுத்தினார்; அதனாலே சிவபூஜைக்குத் தவறுண்டாயிற்று. அதன்முன்பு அவ்விடத்தில் அப்படியே சிவபூஜையில் வழுவினவர்களாகிய தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரை ஒரு மலைக்குகையில் அடைத்து, இன்னும் ஒருவன் வேண்டுமெனக் காத்திருந்த ஒரு கொடிய பூதமானது நக்கீரரையெடுத்துக் கொண்டுபோய் அக்குகையில் அடைத்து ஆயிரவராக்கித் தன்னியமப்படி அகப்பட்ட அவ்வாயிரவரையும் உண்ணுதற்கு நீராடப்போயிற்று. அச்சமயத்தில் முன் அடைபட்டிருந்தவரெல்லாரும் நக்கீரதேவரைப் பார்த்து, ஐயா! நாங்களெல்லோரும் நெடுங்காலமாக இப்பூதத்தின் சிறையில் அகப்பட்டிருந்தோம், இப்பூதத்தாலே உணவு முதலியவை பெற்று உயிர்பிழைத்திருந்தோம்;

இன்றைக்கு உம்மாலே இப்பூதத்துக்கு இரையாகுங்காலம் நேர்ந்ததே என்று அழுதார்கள். நக்கீரதேவர் அதைக்கேட்டு மனமிரங்கி, முருகக்கடவுளைக் குறித்துத் திருமுருகாற்றுப்படை என்னும் ஓர் பிரபந்தம்பாடி முருகக்கடவுளின் அனுக்கிரகத்தால் அவர்களெல்லாரையுங் காப்பாற்றி அப்பால் சென்றனர்.

பன்னிரண்டு வருஷத்திற்குப்பின் நாடு மலிய மழை பெய்து நல் விளைவு விளைந்து நாடு செழித்து நன்றானபின் பாண்டியராஜன் இனி நூல்வல்ல சங்கத்தாரைக் கொண்டுவாருங்களென்று தூதுவரைத் திசைதோறும் அனுப்ப, அவர் போய் எல்லாத் தேசங்களிலும் தேடி எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லவரைக் கண்டு அழைத்து வந்துவிட்டு, பொருளதிகாரம் வல்லவர் எங்குந்தேடியும் அகப்படவில்லையென்று சொல்லினர். அப்போது அவ்வரசன் மிகக் கவலையுற்று, எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பயன் அறிதற் கல்லவோ? பொருளதிகாரம் நமக்குக் கிடைக்காவிட்டால் ஏனைய மூன்றுங் கிடைத்துப் பயனென்னவென்று சொல்லி வருந்த, அதனைத் திருவாலவாயான் திருவுளங்கொண்டு "அன்பினைந்திணை" என்னும் சூத்திர முதலிய அறுபது சூத்திரங்களினால் ஓரகப்பொருணூல் செய்தருளி மூன்று செப்பேட்டிலெழுதிப் பீடத்துக்கீழிட்டருளினார். அது களவியல் எனவும், இறையனாரகப்பொருள் எனவும் பெயர் பெறும். அன்று காலையில் தேவாலயத்துப் பரிசாரகன் ஆலயமெங்குந் திருவலகிட்டு நீர் தெளித்துப் பூவிட்டு, பீடத்தின்கீழ் என்றும் திருவலகிடாதவன் அன்று தெய்வக் குறிப்பினால் பீடத்தின் கீழ்த்திருவலகிட்டான். அப்போது அத்திருவலகோடு செப்பேடுகளும் வெளிப்பட்டன. வெளிப்பட்ட ஏடுகளை எடுத்துப் பார்க்குமளவில், வாய்ப்புடையதாகிய பொருளதிகாரமாகக் காணப்பட்டது. அரசன் பொருளதிகாரமின்மையைக் குறித்துக் கவலைப்படுகின்றதை அறிந்தவனாதலால் அப்பரிசாரகன் அதனை யெடுத்துக்கொண்டு வீட்டிற்குச் செல்லாமல் அரசன் கோயில் தலைக்கடை சென்று வாயில் காப்போருக்குத் தன் வரவை உணர்த்த, அக்காவலாளர்போய் அரசனுக்கறிவித்தனர். அரசன் அப்பரிசாரக பிராமணனை வாருமென்றழைக்கப் பிராமணன் உள்ளே சென்று அச்செப்பேட்டைக் காட்டினான். அதனை அவன் இருகையுமேந்தி வாங்கிப்பார்த்து, பொருளதிகாரம் இது, இதை நமது சோமசுந்தரக்கடவுளே நமதிடுக்கண் கண்டு அருளிச்செய்தனவென்று அத்திசை நோக்கித் தொழுது நின்று சங்கத்தாரை அழைப்பித்து, இது நமது பெருமான் அருளிச்செய்த பொருளதிகாரம், இதைக்கொண்டுபோய்ச் சங்கப்பலகையிலேறியிருந்து பொருளாய்ந்து வாருங்களென்றனன். அவர்களும் அப்படியே அதை வாங்கிப் போய்த் தனித்தனியே அதற்கு உரையிட்டு, தத்தம் உரையே சிறந்ததென்று சிறப்பித்துக்கொண்டிருந்தனர்.



சிலநாள்கழித்து ஒருநாள் யாவரும் ஒருமித்து அரசனிடஞ்சென்று, யாமியற்றிய உரைகளையெல்லாங் கேட்டு இவற்றுள் எவ்வுரை சிறந்ததென்று, நிர்ணயிக்கத்தக்க ஓர் காரணிகனைக் கொடுக்கவேண்டுமென்று கேட்க, அரசன் உங்களுக்கொரு காரணிகனை எங்கே தேடுவேன்; உங்களுக் கொப்பாவார் ஒருவருமில்லையே என்றான். பின்பு இச்சூத்திரஞ் செய்த ஆலவாயி லவிர்சடைக் கடவுளிடஞ்சென்று எமக்கோர் காரணிகனைத் தரல் வேண்டுமென்று அவர்கள் விண்ணப்பஞ் செய்ய, சுவாமியினுடைய திருவருளால் இம்மதுரை வைசியர் மரபில் உப்பூரி குடிகிழான் மகனாகத் தோன்றிய ஐந்து பிராயமுள்ள உருத்திரசன்மனென்னும் ஒரு ஊமைப்பிள்ளை இருக்கின்றனன். அவன் குமரதேவன், சாபத்தால் தோன்றினவன்; ஆதலால் அவனை அத்தன்மையனென்றிகழாது அழைத்துப்போய் ஆசனத்திருத்தி நீங்கள் கீழிருந்து சூத்திரப் பொருளைச் சொல்லுவீராயின், அவன் மெய்யுரை கேட்டவிடத்தில் கண்ணீர் மல்கி மெய்ம்மயிர் பொடிப்பான், அல்லாதவிடத்தில் சும்மாவிருப்பான் என ஒரு அசரீரி வார்த்தை உண்டாயிற்று. அதுகேட்டு யாவரும் எழுந்து ஆலயத்தை வலம் வந்து உப்பூரி குடிகிழானிடத்திற் சென்று இவ்விருத்தாந்தத்தை அறிவித்து. ஐயனாகிய உருத்திர சன்மரைத் தரல் வேண்டுமென்று வேண்டி அழைத்துப்போய், அவருக்கு வெண்டூசுடுத்தி வெண்பூச்சூட்டி வெண்சாந்தணிந்து, அவரை சங்கப்பலகையிலேற்றித் தாம் கீழிருந்து சூத்திரத்தின் பொருள்களை ஒவ்வொருவராக உரைத்தார்கள். அவ்வுருத்திர சன்மர் அவற்றைக்கேட்டுச் சும்மா இருந்து, மதுரை மருதநாகனார் உரைத்த போது ஓரோவிடத்துக் கண்ணீர் வார்ந்து மெம்மயிர் நிறுத்தினர். பின்பு நக்கீரர் உரையைக் கேட்டவிடத்து ஆநந்தக் கண்ணீர் பெருக மெய்ம்மயிர் சிலிர்ப்ப இருந்தார். அப்பொழுது மற்ற புலவர்கள் தம் உரைகளை எல்லாங் கிழித்தெறிந்துவிட்டு நக்கீரருரையே மெய்யுரையென்று கொண்டாடி உருத்திரசன்மருக்கு வெகு விதமான உபசாரங்கள் செய்து, மறுபடியும் அவரை அவரிருப்பிடம் கொண்டுபோய்ச் சேர்த்து விட்டுத் தாங்கள் பழையபடி சங்கமிருந்து நூலாராய்ந்து வந்தனர்.

இச்சங்கப்புலவர்களில் பலர் பலநூல்கள் இயற்றியிருக்கின்றனர். இச்சங்கத்தில் திருக்குறள் அரங்கேற்றிய வரலாறு மிகவும் வியக்கத்தக்கதாயிருப்பதால் அதைக் கடைசியாகச் சுருக்கமாய்க் கூறுவோம். நாயனார் சில பெரியோர்களுடைய வேண்டுகோளின்படி வேதசாஸ்திரபுராணங்களைத் திரட்டி அறம்பொருள் இன்பமென முப்பாலாக்கி 1330 குறள் வெண்பாக்களால் பாடி அதைக்கொண்டு சங்கத்தாரைச் சயிக்கும்படி இடைக்காடரும் ஔவையும் கூடவர மதுரைக்குச் சென்றார். அவ்விடத்தில் சொக்கலிங்க சுவாமியின் ஆலயத்திற்குப்போய்ச் சுவாமியைத்தரிசனம் செய்து சுவாமி சன்னிதானத்தில், பாண்டியராஜன் முதலியோர் கேட்டு மகிழும்படி நாயனார்

தமது திருக்குறளை அரங்கேற்றியருளினார். அதைச் செவியுற்றுச் சங்கப் புலவர்கள் அனைவரும் மனதில் திகில் கொண்டார்களாயினும், மற்றவர்களெல்லோரும் ஆனந்த பரவசராகி நாயனாரை மிகவும் புகழ்ந்து துதித்தார்கள்.

அரங்கேற்றிய காலத்தில் சங்கப்புலவர்கள் நாயனாரை இடையிடையே பலகேள்விகள் கேட்க, அவற்றிற்கெல்லாம் அவர் செந்தமிழ்ப்பாவினாலேயே தக்கவிடைகள் அளித்துவந்தார். பிறகு சங்கத்தார் நாயனாரை நோக்கி, உமது பாடலை நாங்கள் அங்கீகரிப்பதற்குமுன், எமது சங்கப்பலகை இத்தமிழ் நூலுக்கு இடமளிக்கின்றதா வென்பதைக் கண்டறியவேண்டும். இது இடங்கொடுக்குமாயின் பின்பு இதில் எங்களுக்கு ஒரு ஆக்ஷேபமுமில்லையென்றார்கள். மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருக்கோவையார் நானூற்றுக்கும் குற்றங் கூறியவர்களும்; சொக்கலிங்கசுவாமி தமது அன்பனாகிய தருமி யென்பவனுக்குப் பொற்கிழி கொடுத்ததற் பொருட்டுப் பாடியருளிய பாடலையும் ஒரே பிடியாய்க் குற்றங்குற்றமே யெனச் சாதித்தவர்களுமாகிய சங்கப்புலவர்கள் இதற்கு ஆக்ஷேபம் சொல்லாமல் ஏற்றுக்கொள்ளுவார்களா!

அவர்கள் சொன்னபடியே நாயனார் தமது திருக்குறளைப் பொற்றாமரையிலிருந்த சங்கப்பலகையின்மீது கொண்டுபோய் வைக்க, அப்பலகை உடனே தன்மீதிருந்த புலவர்கள் அனைவரையும் அத்திருக்குளத்தில் தள்ளிவிட்டுத் திருக்குறள் புத்தகத்தினளவாய்ச் சுருங்கி அதைமாத்திரம் ஏற்றுக்கொண்டு நின்றது. அதைக்கண்டவர்கள் எல்லோரும் மிகக்களிப்படைந்து கடுகைத் துளைத்துக் கடலைப்புகட்டியிருக்கின்ற இந்நூலுக்கு நாம் உவமையாகச் சொல்லத்தக்கது வேறொன்றுமில்லை; இதென்ன தெய்வத்தன்மை பொருந்திய வேதமோ, வேதாங்கமோ, தரும சாஸ்திரமோ என்றிப்படி அவரவர் அவரவர்க்குத் தோன்றியவாறு மதித்துக் கொண்டாடினார்கள். பொற்றாமரையில் விழுந்து தடுமாறிய பின்பு மெல்லக் கரையேறிவந்து நாயனாரையும் திருக்குறளையும் புகழ்ந்து தனித்தனி ஒவ்வொரு பாடல் பாடினார்கள். அதுவே திருவள்ளுவமாலை எனப்பெயர் பெற்று, திருக்குறளுக்குச் சிறப்புப்பாயிரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. பிறகு அச்சங்கத்தாரும், பாண்டியராஜன் முதலியவர்களும் நாயனாரைப் பலவிதமாக உபசரித்து அனுப்பினார்கள்.

---

OFFICE OF THE ... 6 SEP 1913 MADRAS


# பிரஜாநுகூலன்.

புத்தகம் 8. | திரிச்சிராப்பள்ளி. 1913-ம் வருஷம் ஆகஸ்டு மீ | சஞ்சிகை 5.


## ஆசிரியரின் குறிப்புகள்.

**மனோவசியம்:**—மனதின் ஸ்வபாவத்தையும், வேகத்தையும், சக்தியையும், உள்ளபடியே உணர்ந்து, அங்ஙனம் உணர்ந்தபின் அரும்பயனைப் பலவழிப்படரும் அம்மனத்தை ஒரு வழிப்படுத்தி, (அஃதாவது அதன் கிரணங்களை ஒரு தனியிடம் அல்லது விஷயம் அல்லது பொருளின்கண் செலுத்தி) நன்மையடைந்து, க்ஷேமப்படும் வித்தையைத்தான் மனோவசியம் (Mind control) என்று பெரியோர் கூறுநிற்பர்.

**ஹிப்னாடிசம்:**—ஹிப்னாடிசம் என்ற வித்தையைக்கொண்டு செவிடரைச் சிலர் செவிடு நீக்கினார்களாம். ஸப்தமுணரும் நரம்பை முன்னிலும் மிகச் சுறு சுறுப்பாயிருக்கும்படி செய்வதற்கு அந்த ஹிப்னாடிக் நிலை ஸாதனமாயிருக்கிறதென்ப. அப்படியே கண் வலிவு குறைந்து கொண்டு வந்தால் அதையும் அந்த வித்தையைக்கொண்டு நிறுத்தி கண்ணுக்கு சுகிர்தம் செய்யலாமென்ப. தன்னிடம் நம்பிக்கை யுள்ளவனுக்குக் கடவுளிடம் நம்பிக்கையுண்டாம். நம்பிக்கை யில்லாதவனால் ஒன்றும் செய்ய முடியாதென்ப. மானஸிக வித்தை பரமபதியோடு ஐக்கியமானார்க்கே கிரமமாய்க் கைகூடும். குருவருளோடு ஐக்கியப்பட்டே இதையும் முடிக்கவேண்டும்.

**இறந்தவனின் ஆசை:**—உயிர்விட்டவுடனே, அல்லது சில நாழிகை பொறுத்தாவது உயிர் விட்ட மனிதன், அல்லது இறந்த மகள், பல்லாயிர மைல் தூரத்திலுள்ள தனது தாய், தந்தை, பெண்சாதி, புருஷன், பிள்ளை, பெண் முதலிய பந்து ஜனங்களில், யாதாமொருவருக்கு அல்லது சிலருக்கு நிஜரூபமாய்த் தோன்றுவதுண்டு. கனவிலும் வருவதுண்டு. இது பலபல இடங்களில் காணப்பட்டுள்ளது. இதற்குக்காரணம் யாது? இறந்தவனின் ஆசைதானே!

**கொலையுண்ட மனிதன்:**—ஒருவனைச் சிலர் கொன்றுவிட்டு அகால மரணத்திற்குள்ளாக்கி ஊரைவிட்டு ஓடிப்போய்விட்டார்களானால், அவன்

இறந்த இடத்தில் தினம் தினம் அந்தக் கொலை நடப்பதாகத் தோற்றமும் கூச்சலும் பய முதலியவும் இரவில் உண்டாகின்றனவாம். கொலை செய்தவர்கள் கிடைத்து, சிக்ஷையடைந்த பிற்பாடு இறந்த இடத்தில் பழய கூச்சலும் பயங்கரக் காட்சியும் நிகழ்வதில்லையாம். இது என்ன அறிவிக்கிறது? இறந்தவன் உயிர் சாகிறதில்லையென்றும், சாகும் சமயத்தில் அவன் எண்ணம் திரண்டு உருப்பெற்று, அவன் இறந்த இடத்தில் நின்றுகொண்டு பல கூத்துகளைச் செய்கிறதென்றும், கொலைசெய்தவர்கள் கிடைத்தவுடனே இறந்தவன் ஆன்மா ஒருவித மன அமைதி யடைவதால், அவன் எண்ணத்தின் உருப்பெற்ற தோற்றங்கள் மறைந்துபோகின்றனவென்பதும் பிரகாசமாகும். எனவே இறந்தவர்கள், இருப்பவர்கள்மீது ஆசையோடு இருக்கின்றனர் என்பது உண்மை. பிணம் விழு முன்னும், விழுந்த பின்னும் மக்கள் கா கூ என்று கத்தி கூப்பாடிட்டழப்படாது. அது சாஸ்திர சம்மதமன்று.

**ஜலத்தில் மூழ்கி யிறப்போன்:**—குளம், குட்டை, ஆறு, ஏரியில் வீழ்ந்திறக்கும் ஒருவனுக்கு அவன் இறக்கும் தருவாயில், அவன் ஆயுசு முழுவதும் நடந்த விஷயங்களெல்லாம் ஒரு கணம் அவனுக்கு ஸ்பஷ்டமாகத் தோற்றமாகும் என்று ஐரோப்பிய பண்டிதர் அறிந்து (பரீக்ஷித்து) கூறுகின்றனர். முதலில் விழுந்ததும் எதையாவது பிடித்துக்கொண்டு நிற்க அவன் மனம் தாவுகிறது. ஆரம்பத்தில் அவன் அப்படி முயல்கின்ற நினைவுடனேயே இருக்கிறான். பிறகு ஞாபகம் தவறிவிடுகிறது.

**இரண்டு வாழ்வு:**—நமக்கு (மனிதர்க்கு) ஒவ்வொருவர்க்கும் இரண்டு வாழ்வு உள்ளன. ஒன்று (The Soul life) ஆத்ம வாழ்வு; இது கடவுளிடத்திலிருந்து நேரில் நமக்குக் கிடைத்துள்ளது. இது தான் நம்மைப் பகவானுக்கு உறவாக்கிவைப்பது. மற்றொன்று மனிதருக்கு உள்ளது; உலக வாழ்வு (The Physical life) என்று கூறுப. இந்த உலக வாழ்வுதான் நம்மை உலகத்தோடு ஸம்பந்தப்படுத்தி வைத்துள்ளது.

**எண்ணங்களின் வாழ்வு:**— நமது எண்ணங்களின் வாழ்வு (The thought life) தான் உலக வாழ்வையும் ஆத்ம வாழ்வையும் ஒன்றோடொன்று சேர்த்து வைக்கிறதென்ப. இந்த இரண்டு வாழ்வுகளுக்கு மிடையில் நின்று வியவகரிப்பது எண்ணங்களின் வாழ்வேயாகும்.

**எண்ணங்களுக்குள்ள ஈர்க்கும் சக்தி:**—மனசின் எண்ணங்கள் அவை போன்ற பலருடைய எண்ணங்களையும் ஈர்க்கும் அதாவது இழுக்குமென்ப. ஒருவன் புதிதாய் நூல் எழுதுகிறான். அவனுடைய எண்ணங்கள் அவனுக்கு முன்னிருந்த கிரந்தகர்த்தர்களின் எண்ணங்களைக்கூட, அதாவது அவர்களுக்குண்டான யோசனைகளைக்கூடத் தனக்குள் இழுக்கின்றன; அதாவது



கிரகிக்கின்றன. உதாரணமாக:—ஒரு குடிகாரன், ஒரு கிளாசு சாராயம் சாப்பிட எண்ணங்கொண்டு சாராயக்கடைக்குப் போகின்றான். அங்கே இவனுக்கு முன்னதாகப் பலர், முதல் முதலில் கொஞ்சமாகக்குடிக்க நினைத்துப் பல கிளாசுகள் குடிக்க முற்பட்டதின் சம்பந்தமான எண்ணங்களெல்லாம் ஒரு திரட்சியாகச் சேர்ந்து நிற்கின்றன. அப்படிப்பட்ட இடத்தில் இவன் போய் ஒரு கிளாசு சாப்பிட்டவுடனே, மறுபடியும் ஒரே கிளாசு மட்டும் சாப்பிட்டுவிடலாம் என்ற எண்ணம் இவனுக்கு உண்டாகிறது; சாப்பிடுகிறான். மறுபடியும் ஒரு கிளாசு—ஒரு கிளாசு—ஒரு கிளாசாக பல கிளாசானவுடன் தன் சுவாதீனமிழந்து விழுந்து விடுகிறான். இதற்குக் காரணம் என்ன? அவ்விடத்தில் ஒன்றாகத்திரண்டு நிற்கின்ற மற்றக் குடிகாரர்களின் எண்ணங்கள் இவனுடைய மூளையில் வந்து குடிபுகுந்து அவர்களைப்போலவே இவனையும் நடக்கும்படி தூண்டுவதால் தான். ஏன் நீ கடிதம் எழுதவில்லையென்று ஒருவனுக்கு நாம் கடிதம் எழுத முற்படும்போது நமது எண்ணங்கள் அநேக நூறு மைல்களுக்கப்பாலிருக்கிற அவனுடைய எண்ணங்களை இழுப்பதால், அவனுக்கும் ஞாபகம் உண்டாகி நாம் இங்கு கடிதம் எழுதுகிற நேரத்திலே அவனும் அங்கே நமக்குக் கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறான். நாம் கடிதத்தைத் தபாலில் போட்ட மறுநாள் அவன் கடிதம் நம்து கைக்கு எட்டுகிறது. உன் கடிதமேயில்லையே என்று நேற்று தானே கடிதம் எழுதினோம் என்று நாம் இங்கே வியக்கின்றோம். இது அநுபவம்.

**தன்னறிவு:**—மனிதரில் எத்தனை மிருகங்கள் இருக்கின்றன; தன்னறிவு (self-consciousness) சிலருக்குத்தாம் உண்டு; பலருக்குக் கிடையாது. தன்னறிவு இல்லாதவர்கள் தான் ஆடு மாடுகள் மாதிரிக் கிடப்பவர்கள். தன்னறிவு உள்ளவர்கள் தாம் வாஷிங்டன், நபோலியன், நெல்சன் முதலிய பிரமுகரைப்போல் அநேக ஆயிர ஜனங்களை யடக்கியாண்டு மேன்மையடைந்தவர்கள். கிறிஸ்து, மகம்மது, பவுத்தர், சங்கரர், இராமாநுஜர் முதலியோரைப் போன்று லோகத்தை ரட்சிப்பவர்கள்.

**ஆத்ம சக்தியை வெளிப்படுத்துபவை:**—

(1) தைரியம்.
(2) உறுதியான எண்ணம்.
(3) நம்பிக்கை.
(4) சந்தோஷ குணம்.
(5) ஆநந்தம்.
(6) ஆசை.

} இவைகள் ஆத்ம ஸக்தியை வெளிப்படுத்தும் தன்மையுள்ளன.

**ஆத்ம சக்தியைத் தடுத்துவிடுபவை:—**

(1) விசனம்.
(2) ஆழ்ந்த வருத்தம்.
(3) பயம்.
(4) கவலை.
(5) முணு முணுத்துக்கிடத்தல்.
(6) சோம்பல்.
(7) கோபம்.
(8) தைரியத்தை யறவே கைவிடல்.

இவைகள் யாவும் ஆத்ம ஸக்தியை வெளிப்படாமல் தடுத்துவிடும் தன்மையன; மனோ ஸக்தியை யழித்துவிடும் தன்மையன; தேகவலியையும் ஆரோக்கியத்தையும் நாசம் செய்துவிடும்; தேகத்தையே தீவிரத்தில் அழித்தும் விடுவன.

ஞாபகசக்தி:—ஞாபகசக்தி வெளிமனசுக்கு அற்பமே தவிர அதை ஸ்திரமாகவும், நம்பிக்கையுள்ளதாகவும் நினைக்கக்கூடாது. உள்மனசில் ஆயுசில் நடக்கும் விஷயங்களெல்லாம் அப்படியப்படியே பதியப்படுகின்றன. சிலவேளை மனிதர் திடீரென இறந்துபோகிற சமயத்தில் அவர்கள் ஆயுசில் நடந்தேறிய விஷயங்களெல்லாம் அவர்கள் முன்பாக ஒரு கணத்தில் தோன்றும் என்ப. உள் மனசுக்கு எவர் சொன்னாலும் அது உண்மை யென்றே நம்பும். கனவிற் காணும் விஷயங்கள் யாவையும் நாம் அந்தச் சமயத்தில் உண்மை யென்றே நம்பவில்லையா? ஞாபக சக்தி உள் மனசிலேயே அதிகம். நாம் யோசிக்கும்போது உள்மனசு வேலை செய்யத்தொடங்கி அதனுள் பதித்து கிடக்கும் யோசனைகளை ஒவ்வொன்றாக நமக்கு எடுத்துக்கொடுக்கின்றன. சில சமயங்களில் அது அதிக சிரமத்துடன் அந்த யோசனைகளை நமது ஞாபகத்திற்குக் கொண்டுவரவேண்டியிருப்பதால் நாம் மறந்துவிட்ட யோசனையை நாம் நினைவுக்குக்கொண்டு வரமுயன்றும், அப்போது முடியாமல் பிறகு திடீரென்று நமது ஞாபகத்துக்கு வருகிறது. அப்போது தான் உள் மனசு தன் வேலையை முடித்து அந்த யோசனையைத் தேடி நமது ஞாபகத்துக்குக் கொண்டுவந்தன என்று நாம் அறியக்கடவோம்.

## மனம்.

அந்தரங்கமனம். — பகிரங்கமனம்.

அந்தரங்கமனம்: சுவப்நத்தில் வெளிப்படுவது. — Reason (யூகித்து, விஷயங்களை நிறுத்து அறியும்) சக்தி கிடையாது.

பகிரங்கமனம்: விழிப்பு நிலையில் (சாக்கிரத்தில்) இருப்பது. — Reason (யுக்தி புத்தி) இதற்கேயுண்டு.

ஞாபகசக்தி (Memory) இரண்டிற்கும் உண்டு. வெளிமனசின் ஞாபகசக்தி அற்பம்; உள் மனசின் ஞாபகசக்தி அபாரம். உள் மனசில் எல்லாம் பதிந்து கிடக்கின்றன. மனசை (வெளிமனசை)க்கொண்டு உள் மனசை யடக்கி யாளவேண்டும்.



மனசு:— மனஸை மூன்று முகங்களுடைய பொருளென்றும், ஒன்று விழிப்பு நிலையிலுள்ள முகமென்றும், ஒன்று ஸ்வப்பனவஸ்தையிலுள்ள முகமென்றும், ஒன்று சமாதியிலும், சிற்சிலவேளை நிஷ்டையிலுமுள்ள முகமென்றும் கூறுவர் மேலோர். பூர்வ ஞானம் கீழ்முகத்திலிருந்து நடுமுகத்திற்கு வருகிறதென்றும், தீர்க்க தரிசனம் மேல் முகத்தினின்றும் நடுமுகத்திற்கு வருகிறதென்றும் சொல்வர்.

ஆறாவது அறிவு:—மனிதனுக்கு ஐந்து அறிவல்லவோ இருக்கின்றன; ஆறாவதாக இன்னொரு அறிவும் உண்டு. இதை மக்கள் யாது காரணத்தாலோ பல நாளாகக் கையாடாமல் விட்டுவிட்டார்கள் போலும்! கையாடாமல் விட்டுவிட்ட எந்த வித்தையும் சீக்கிரம் பட்டுப்போகுமல்லவா? அதுபோல இந்த ஆறாவது அறிவு மக்களைவிட்டு ஒழிந்துவிட்டது. இதைத்தான் பூர்வம் நம் பெரியோர் ஞானதிருஷ்டி—அறிவாகிய கண்—மூன்றாவது கண் என்று சொன்னார்களென்று நினைக்கின்றோம். இது சிலவேளை சில சாமான்ய மனிதர்களுக்குங்கூடப் புண்ணியவஸத்தினாலோ எப்படியோ கிடைத்துவிடுகிறது. இதைக்கொண்டு சிலர் உலகத்தில் பட்சணிபேசியும், குறிசொல்லியும், தெய்வமாடியும் பிழைத்து வருகின்றார்கள். இப்படிப் பட்ட சாமான்ய ஜனங்கட்கு நடந்த விஷயங்களைச் சொல்லத்தெரியுமேயன்றி, இனிமேல் நடக்கப்போகும் விஷயங்களைச் சொல்லமுடியாது. தீர்க்க தரிசன திருஷ்டி ஞானிகட்கு (அறிவாளிகளுக்கு) அன்றி மற்றையோருக்குக் கிடைக்காது. (புருஷன்—பெண்சாதி) (காதலன் —காதலி) (சோதரன்—சோதரி) (தாய்—பெண்) (தந்தை—மகன்) (நண்பர்—சிநேகைகள்) (குரு—சிஷ்யன்) இப்படிப்பட்டவர்கட்குமட்டும் சாதாரணமாக இந்த ஆறாம் அறிவாம் வித்தை பிரயோஜனப்படுமென்று சொல்லுகிறார்கள். இதற்கு ஒரு சிறு உதாரணம் கொடுப்போம்.

பிரிந்த காதலர்:—ஒரு பெண் இளமையில் ஒரு சிறுவன் பேரில் மோஹம் கொண்டாள் என்று வைத்துக்கொள்வோம்; அது அவளுக்கு மட்டுந்தான் தெரியும். அதைத் தமுக்கு போட்டுக்கொண்டா வருவாள்? அவனுக்கும் அவளிடம் காதல் உண்டானது. பரஸ்பரம் உயிருமுடலுமாக இந்தக் காதலனும் காதலியும் நேசித்துவருகிறார்கள். இவர்கள் குடும்பங்களும் சிநேகத்தால் ஒன்றோடொன்று சம்பந்தமுடையனவென்றுங் கொள்வோம். இந்தச் சின்ன பெண்ணுக்கு ஒரு பேர் வைப்போமா? நல்லது அப்படியே—புஷ்பம் என்று அழைப்போம். பையனை—சுந்தரம் என்று கூப்பிடுவோம். புஷ்பம் சுந்தரத்தை அத்தான் என்று அழைப்பாளாம். சுந்தரம் புஷ்பத்தை கண்ணே! என்று கூப்பிடுவானும்; இப்படி இவர்கள் இருவரும் வளர்ந்து கொண்டு வருகிறார்கள்; யௌவனம் அடைந்தார்கள்; பெண்ணுக்குக் கல்யாணப் பேச்சு நடக்க ஆரம்பித்தது.

வைசியர்

முதலிமார்

| | |
|---|---|
| தொண்டை மண்டலம் | சோழநாடு |
| கார்காத்தார் | கொண்டல் கட்டிகள் |
| முடிகொடுத்தார் | கொண்டை கட்டிகள் |
| சைவர் | வைணவர் |
| மாம்ச பக்ஷணிகள் அல்லாதவர் | ஆதியில் மாம்சம் தின்னாதவர்களா யிருந்து பின் தின்னக் கற்றுக்கொண்டவர். |
| **சுந்தரம்.** வைசிய ஜாதியில் ஒரு கிளையாகிய வேளாள ஜாதியின் ஒரு கிளை நாங்கள் என்கிறார்கள் சுந்தரத்தின் மாதா பிதா. | **புஷ்பம்.** சூத்ர ஜாதியில் ஒரு கிளையாகிய் வேளாள ஜாதியில் ஒரு கிளை நாங்கள் என்கிறார்கள் புஷ்பத்தின் மாதா பிதாக்கள். |
| கறி தின்னமாட்டோம், மீன் தின்னமாட்டோம், நண்டு நத்தை தின்னமாட்டோம், பையன் மட்டும் இரகசியமாய் முட்டையும் சூப்பும் பஞ்சமரிடம் சாப்பிட்டு விடுகிறான். | இந்தக் குடும்பத்தில் கறி தின்னாதவர்களும் உண்டு, ஆட்டுக்கறி மட்டும் தின்கிறவர்களுண்டு, முட்டைமட்டும் தின்கிறவருண்டு, மீன் மட்டும் தின்கிறவருண்டு, வெளிப்படையாய்த் தின்கிறவர்களுமுண்டு. |
| சிவமே தெய்வம்; விஷ்ணு நாற்றம் கூடவே கூடாது. | ஹரியே தெய்வம்; சிவன் சுடுகாட்டுத் தெய்வம்; பேயோட்டி; அவன் வாசனையே வேண்டாம். |

ஜாதி கெட்டுப்போகும், மதம் கெட்டுப்போகும், ஆசாரம் கெட்டுப்போகும், அநுஷ்டானம் பட்டுப்போகும் என்றும், பெண்ணைக்கொடுக்கிறதில்லையென்றும் சொல்லி விட்டார்கள். பாபம் சுந்தரம் கதி யென்ன? புஷ்பம் என்ன செய்வாள்? சுந்தரம் எக்கோமும் புஷ்பத்தையே நினைத்துக் கொண்டிருக்கிறான். புஷ்பம் சர்வதா சுந்தரத்தையே தியானம் செய்துகொண்டிருக்கிறாள். இருவர் மனமும் ஒத்துப்போயின. அன்பாகிய சங்கிலியால் இருவரும் கட்டுப்பட்டார்கள். இப்படியிருக்கும்போது, எல்லாம் நிச்சிந்தை



யான இரவு காலத்தில்—நித்திரையின்றிக் கிடக்கும் சுந்தரன், புஷ்பத்தின் உருவத்தை மனதில் தியானித்து, "கண்ணே! என் செய்வேன், உயிர் துறப்பேன்" என்று எண்ணினான். உடனே அவ்விடத்தில் அவர்களிருவருக்கும் இருக்கிற மனப் பொருத்த மாட்சிமையால். அங்கே ஆறாவது அறிவு உதயமாய் விடுகின்றது. உடனே தூரத்திலிருக்கும் புஷ்பத்துக்கு மின்னல் வீசினதுபோல இந்த ஆசை மொழிகள் செவிப்புலனாயின. "ஆ! அத்தான்!! இன்று காலையில் தான் என்னை யொருவனுக்குக் கட்டிவிட்டார்கள்; ஆயினும் யான் செத்தாலும் என் அன்பு மாறாது; செத்தபிறகாவது உன்னை யடைவேன். திருவருட்செயலெதுவோ!" என்று அவனுருவைத் தியானித்து உறுதியாக மனசில் எண்ணினாள்; இவை யாவும் அந்த ஆறாவது அறிவின் மகிமையால் தந்திவந்த மாதிரியாக சுந்தரத்தின் அந்தரங்கத்துக்கு—அறிவுக்கு வெளியாயின. பிற்பட்டு இவர்கள் அடைந்தது சுகமோ துக்கமோ? படிப்பவர்களே அறியவேண்டும். மனம் ஒன்றுபட்டார் சிற்சில சமயம் மனசால் கூடப் பேசிக்கொள்ளக்கூடுமென்ப. (இதை யோசித்து மூடக் கல்யாணங்கள் செய்வதை நிறுத்தி விடவேண்டும். புத்தியோடு ஒன்றைச் செய்தால் கைம்பெண் வளர்த்த கழிசிறை என்ற சொற்றொடருக்கு அவகாசமில்லாமற் போய்விடுமென்க.)

**யோகம்:**—யோகம் என்றால் சேர்க்கை அதாவது கூடுதல். வியோகம் என்றால் பிரிவு. "தேக வியோகம்" என்றால் தேகத்தைவிட்டு ஆன்மா நீங்கியதென்று பொருள். யோகத்தில் கர்மயோகம், பக்தியோகம், இராஜயோகம், ஞானயோகம் என நான்கு யோகங்கள் உண்டு.

**கர்மயோகம்:**—தான் செய்யும் கர்மங்களில் பற்றில்லாமல் யாவற்றையும் பகவானுக்கு அர்ப்பணம் செய்து பலாபலனைக் கருதவே கருதாமல், செய்யவேண்டிய யாவற்றையும் தனது கடமையாக எண்ணி முடித்துச் சாந்தி பெறல்.

**பக்தியோகம்:**—அன்புருவான பகவானை அன்பாலடைந்து அன்பாய் நிற்றல். பாரபட்சமின்றி எல்லோரையும் யாவற்றையும் பகவானாக அல்லது பகவானுடைய திருமேனியாகக் கருதிச் சுகம்பெறல்.

**இராஜயோகம்:**— இயமம், நியமம், பிராணாயாமம், பிரத்யாகாராதி வகைகளான தேக சுத்தம் (நாடி சுத்தம்) செய்து, பிராணனை யடக்கியாண்டு, மனசுக்குச் சாந்தமுண்டாக்கி, மனசை வாகனமாக்கி அதன் மேலேறிக்கொண்டு, பிரபஞ்ச சஞ்சாரம் செய்து, அதற்குப்பின் அறிவை யுள்ளபடியே தரிசித்து ஆத்மலாபம் பெறல்.

**ஞானயோகம்:**—அறிவாய் நின்ற கடவுளை (சுவாமியை) அறிவு மார்க்கத்தில் ஆராய்ந்து அடைந்து, அறிவாய் நின்று (பேரறிவில் ஒடுங்கி) அறிவாய் விடுதல் என்ப. இந்த நான்கு யோகங்களும் ஓர் ஊருக்குப் போகும் நான்கு சாலைகள் என்ப: எந்த வழியாலும் கடவுள் வீட்டை நாம் அடையக் கூடும். இப்படி யடைந்த யாவர்க்குமே ஒரு வெளி அடையாளம் உண்டு. அவர்கள் பார்வை அற்புதமான **அருட் பார்வை**யாகும்.

**அருட்பார்வை:**—அருட்பார்வை யுடையோரின் கண்கள் கருணை பொழியும். அவர்களைக் கண்டபோதே நமக்கு ஒருவிதமான சுகம் உண்டாகும்; நம்முடைய துக்கமொழியும். **சாந்த பார்வை**யின் பெருமை என்னே! என்னே! அதைத்தான் பெரியோர் **குளிர்ந்த பார்வை** என்றார்கள். அந்தப் பார்வை பட்டபோதே நம்முடைய மனசும் உடலும் உயிரும் குளிர்ந்து புளகாங்கிதமடையும். அப்படியா! மெய்தானா?—ஆ! தடையென்ன! உண்மைதான். ஒரு விடநாயகன்—ஒரு விடநாயகியினுடைய குளிர்ந்த பார்வையால் என்னென்ன சுகங்கள் அடைகிறான். அவளே பிறிதொரு சமயம் கடுகடுத்த முகத்தோடு இவனைப் பார்த்தாளானால் என்ன நரகம் அனுபவிக்கிறான். அப்படியிருக்க:—பெரியோர்களது **ஆநந்த பார்வை**யின் பெருமைக்குத் தடையொன்றுண்டோ? எப்படி யொருவன் மின்னிலிடைக் கன்னல் மொழிப் பூங்கொம்பின் கடைக்கண் பார்வை பட்ட மாத்திரத்தில் அவட்கு அடிமையாய் விடுகிறானோ, அப்படியே மகான்களின் கடைக்கண் பார்வைபட்ட யாவன் தான் பாபவிமோசனமாகாமலிருப்பான்? செம்பும் பொன்னாய் விடும், கன்மனம் கரையும்; உடலம் புளகாங்கிக்கும்; உயிரும் அற்புத சுகம் பெறும். மனமானது அறிவு வடிவம் பெறும். இந்தப் பெரியோரின் கடவுட் பார்வையைப்பற்றி எவ்வளவு எழுதினாலும் முடிவு காணமாட்டோம். இதன்றி சாமான்யரும் அடையக்கூடிய வசீகரப் பார்வை யொன்றுண்டு. இந்தப்பார்வை மகான்கட்கும், சக்கரவர்த்திகட்கும், மகா சமர்த்தர்கட்கும், அதிகமாக இயற்கையிலுண்டென்ப.

**சக்தியை யறிதல்:**—எல்லா ஜனங்களுக்கும் சக்தி உண்டென்றாலும், உண்டென்றறிந்தவர்கட்கே அது பிரயோசனம் செய்யும். உதாரணமாக: ஜலத்தில் நீந்தும் சக்தி எல்லோருக்குமே உண்டு. எல்லோரும் நீந்தத் தெரிந்துகொள்கின்றனரா? இல்லை. புதுமையாக நீந்தக் கற்றுக்கொள்ள வந்தவன் பிறரைக்கண்டு ஆச்சரியமடைந்து வாய் பிளந்து நிற்கின்றான்; பிற்பட்டுத் தானும் நீந்தக் கற்றுக்கொண்டால் சந்தோஷப்படுகிறான். சிலர் ஆயுசு முழுமையும் நீந்தத் தெரிந்துகொள்ளாமலே காலத்தைக் கடத்தி விடுகின்றனர்; ஆயினும் அவர்கட்கு அந்த சக்தியில்லாமற் போகவில்லையல்லவா?



**சந்தர்ப்பத்துக் கேற்ற சந்தம்:**—கம்பரிடத்தில் பல விசேடம் உண்டு. அவர் நடையானது சந்தர்ப்பத்திற் கேற்றவாறாக கம்பீரமும் இன்னோசையும் மிடுக்கும் தளர்ச்சியும் உடையதாயிருப்பது. சந்தோஷ செய்தி உரைக்குமிடத்தில் சந்தத்திற்கேற்பக் கூத்தாடவுங்கூடும். வியஸன மான செய்தி உரைக்குமிடத்தில், படிக்கின்றவன் பாட்டைப் பரபரப்பாக படிக்கப் புகுந்தாலும், அந்தப் பாடல்கள் பரபரப்பாக நாவிலே உழல்வதில்லை. கதாநாயகன் அழுகின்ற இடத்தில் கதையைப் படிக்கின்றவனும் அழுவான்; அவன் களிக்கின்ற இடத்தில் இவனும் களிப்பெய்துவான். இது கவிவல்லோர்க்கு மாத்திரமே கைவந்த மர்மம்; எல்லார்க்கும் இது செய்ய இயலாது.

**கம்பனும் வால்மீகியும்:**—இங்ஙனமாகக் கம்ப ராமாயணத்தின் அழகுகளையும் நயங்களையும் எடுத்துக்காட்டுவது எப்படிப்பட்டவர்களுக்கும் இலகுவான காரியம் அல்ல. அழகு நிறைந்திருக்கின்ற இடத்திலே தனித்தனியான கூறுகளின் அழகை எடுத்துக்காட்ட இயலுமோ? ஆனாலும், கம்ப ராமாயணம், வால்மீகி ராமாயணத்தின் ஆதரவைக்கொண்டு பாடினதுதானே: இதற்கென்ன ஏற்றமுண்டு எனச் சிலர் கூறுவர். இரண்டையும் படித்துப் பார்த்தவர்களே இதற்கு ஸமாதானம் கூறத்தகுந்தவர்கள். **கால்ட்வெல்** என்பவர் "ஹோமருடைய இலியட்டுக்கும் போப்பினுடைய இலியட்டுக்கும் என்ன பேதமோ, அதே பேதம் வால்மீகி ராமாயணத்துக்கும் கம்ப ராமாயணத்துக்கும் உண்டு" எனச் செப்பியிருக்கிறார். **பௌவர்** என்பவர் "நாம் வால்மீகி ராமாயணத்தையும் படித்திருக்கிறோம்; கம்ப ராமாயணத்தையும் படித்திருக்கிறோம். வால்மீகி முனிவர், விரிவாய்க் கூறுகின்றவராயினும் விளங்கக் கூறுகின்றவர்; கம்பர், சில இடங்களில் சுருங்கக் கூறுகின்றவராயினும் சில இடங்களில் விஸ்தாரமாய்க் கூறுகின்றவர். இன்பந் தருவனவான சொற்போக்குகளும் அலங்காரமான கற்பனைகளும் ஆங்காங்கு விசேஷமாயிருக்கின்றன. ஆயினும், வால்மீகியை வியந்து கூறுவதோ கம்பரையே உவந்து கூறுவதோ எனத் துணிதல் கூடாமல் இடர்ப்பட்டோம்" என்றெழுதியிருக்கிறார்.

**சமூகத்தின் பொறுப்பாளிகள்:**—ஒரு சங்கத்தின்—ஒரு ஜாதியின்—ஒரு தேசத்தின்— அறிவு மழுங்காதிருக்கும்வரை அதற்கு நாசமேற்படாது. நமது தேசத்தில் முற்காலத்திலே நமது ஜாதியின் முழுமையின் அறிவுக்குப் பொறுப்பாளியாகப் பிராமணர் என்னும் பெயருடைய ஒரு வகுப்பினர் இருந்ததாகப் பழய நூல்களிலே காணப்படுகிறது. அந்தப் பிராமணர் தமது கடமைகளைத் தவறாது நடத்தியிருப்பார்களானால், மற்றக்குலத்தவரும் நெறி தவறியிருக்கமாட்டார்கள். மஹா பாரதப்போர் நடந்திராது. பாரத தேசத்தில் பெரியதோர் க்ஷத்திரிய நாசமும் கலியும் வந்திருக்காது.

**சகுனி சொல்லுகிறன்:**—"நமக்கு ஏற்கெனவே அளவிறந்த செல்வமிருக்கும்போது இன்னும் அதிக செல்வத்தை ஏன் விரும்பவேண்டும்? இருப்பதை வைத்துப் பாதுகாத்தால் போதாதா" என்று ஒருவேளை நீ நினைக்கிறாய்போலும்! ஆனால் இவ்வித நினைப்பு நின்போன்ற ஆரிய மன்னர்களுக்குத் தகாது. ஏனென்றால், நித்தம் ஏராளமான செல்வத்தைத் தான முதலியவற்றால் ஒரு பக்கத்திலே செலவிட்டு, மற்றொரு பக்கத்திலே போர் முதலியவற்றால் மிக்க பொருள் சேகரித்துக்கொண்டிருப்பதாகிய இரட்டைத் தொழில் ஆரிய மன்னர்களால் அநுஸரிக்கப்படுவது. இருப்பதை மூடி வைக்க விரும்புவோன் அரசனல்லன்; கிழச்செட்டி. எதுபோலெனில், கங்கைநதி நாள்தோறும் அளவில்லாத ஜலத்தைக் கடலிலேகொண்டு கொட்டுகிறது. என்ன வீண் செலவு! இந்த "வீண் செலவு" செய்யாவிட்டால் ஜீவனின்றி அழுகிப் போய்விடும். மலை மீதிருந்து அதற்கு ஓயாத ஊற்றுவரவிருக்கின்றது. அதனை உலகிற்கெல்லாம் வழங்குவதுமன்றி கடலிலும் கொண்டு பொழிகிறது. ஆம்! "மேலே" செல்வரிடமுள்ள பொருளைக் கவர்ந்து "கீழே" ஸாமான்ய ஜனங்களுக்குப் பலவகைகளிலே பயன்படுத்த வேண்டும். அப்போது தான் ராஜா கங்கைநதியைப்போல் "ஜீவநதி" யாக இருக்கலாம். கங்கை நதியைப்போலவே ஆரியர்களும்.

இங்ஙனமில்லாது, சத்தமற்ற நெடுங்காட்டில், மலையடிக் கீழ்ப்பட்ட இருட் குகையில் நீரை வைத்துப் பாசியால் மூடிக்காக்கும் சுனைகளைப்போன்ற ஒழுக்கம் ஆரியர்களால் வெறுத்தற் குரியது.

**மன்னர் வல்லினுக் கழைத்திடில் மறுப்பதுண்டோ:**—வல்=என்றால் சூது. ஒரு அரசனை மற்றொருவன் "என்னுடன் சூதாட வா" என வலிந்தழைக்கும்போது மாட்டேனென்று சொல்லலாகாதென்பது கருத்து. க்ஷத்திரியன் நஷ்டங்களுக்குத் துணிந்திருக்கவேண்டுமென்ற நல்ல கொள்கையால் விளைந்த கெட்ட வழக்கங்களில் இதுவொன்று. அறிவுடையவர்கள் கூடப் "பூர்வாசார" மென்ற காரணத்தால் தீய வழக்கங்களை, அநுசரித்தல் நமது தேசத்திற்கேற்பட்ட சாபம். பழமையிலே பெரும்பகுதி உயர்வு சான்றதுதான். அதிலும் பாரத தேசத்தினராகிய நம்மவரின் நடைகள் அறிவும் அறனும் பொதிந்தனவாகும். ஆயினும் இழிந்த அமாநுஷீக நடைகள் சில இவற்றோடு கலந்துள்ளன. "எனது தந்தை க்ஷய நோயால் இறந்து போனான். எனக்கும் க்ஷய நோய் வந்திருக்கிறது. எங்கள் பாட்டனுக்கும் இந்த நோயுண்டு. ஆதலால் இந்த நோய் தீர்ப்பதற்கு நான் மருந்து தின்னமாட்டேன்" என்று ஒரு மனிதன் சொல்வானானால் அவன் எவ்வளவு பெரிய மூடன்? லோக க்ஷேமத்துக்கும் லோகாபி விருத்திக்கும் இந்த "மாமூல்" பக்தி எத்தனை பெரிய இடையூறென்பதை நம்மவர் இன்னும் நன்றாகத் தெரிந்துகொள்ளவில்லை. நமது செய்கையில் விளைவுகளுக்கு மாத்திரமேயன்றி, நம்மைச் சேர்ந்தவர்களின் கர்மப்பயன்களுக்கும் நாம் ஆளாகிறோம்.


# பிரஜாநுகூலன்

புத்தகம் 8. } திரிச்சிராப்பள்ளி. 1913-ம் வருஷம் ஜூலை மீ 6-ம் உ { சஞ்சிகை 4.


OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 2 JUL 1913 MADRAS.

## ஆசிரியரின் குறிப்புகள்.

**தற்கால விசேஷம்:**—இந்தக் கலிகாலத்தில் நாகரீகம் அதிகரித்திருக்கிறது. வியாதியும் மதியீனமும் மலிந்து கிடக்கின்றன. அறியாமை தலையெடுத்தாடுகிறது. எவனைப் பார்த்தாலும் (ஆயிரம் பேரில் தொள்ளாயிரத்து ஐம்பது பேர்) பலவீனமா? எங்கு பார்த்தாலும் மூளை பலவீனம், நரம்பு பலவீனம், தேக பலவீனம், இதே கூப்பாடா? 12 வயதில் சிறு பிள்ளைகள் மூக்குக்கண்ணாடி போட்டு அழகு பார்க்கிறதா? அநந்தம் டாக்டர்களிருந்தும், வியாதிகள் ஒழிந்த பாட்டைக் காணோமே. எத்தனை யெத்தனை மருந்துகள் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுகின்றன!

**மனோலக்ஷணம்:**—மனசைப் போன்ற சிநேகனுமில்லை, மனசைப் போன்ற விரோதியுமில்லை, மனசை ஊழியனாக்கி அடக்கியாளும், ஒருவனுக்கு மனசைப்போன்ற சேவகன் திரிலோகத்திலுமில்லை, மனசைத் தனக்கு எஜமானாக்கி, அதற்கு அடங்கிப் பணி செய்யும் மூடனுக்கு மனசைப் போன்ற விரோதியும் எங்குமில்லை. மனிதனுக்கு ஒரு மனசன்று இருப்பது! இரண்டு. ஒன்று உள்மனசு (The subliminial consciousness); மற்றொன்று வெளி மனசு (The objective consciousness) என்று பேசுகிறார்கள். இவை யிரண்டும் இரட்டைப் பிள்ளைகள் போன்றுள்ளன. சொரூபம் (Essence) ஒன்றே யென்றாலும், இவைகள் குணத்தாலும் சக்தியாலும், வியவகார காலபேதத்தாலும் பேதப்படுகின்றனவென்ப.

**வெளிமனம் உள்மனம்:**—வெளிமனம் விழிப்பு நிலையிலுள்ளது. உள்மனம், உறங்கும்போதும் முக்கியமாய்க் கனவு காணும் போதும் பிரகாசிப்பது. வெளிமனம் கண், காது, மூக்கு முதலிய சகாயங்களைக்கொண்டு வெளியுலகத்தையறியும். உள்மனம் பஞ்சேந்திரிய உதவியின்றியே வெளி

உலகத்தையும் அறியும். வெளிமனம் அற்ப சக்தியுள்ளது. உள்மனம் அபார சக்தியுடையது. வெளி மனசு தான் உறங்கிக்கிடக்கும். உள் மனசு உறங்குவதே கிடையாது, எப்போதும் விழித்துக்கொண்டேயிருக்கும். வெளி மனம் மூளையில் வசிக்கும், உள் மனசுக்கு மூளையினுதவி வேண்டியதில்லை.

**பிணியால் வருந்துவோர்:**—மேலே நாம் கூறியதை மக்கள் நன்குணராமையால் அநேக கெடுதிகள் விளைகின்றன. ஒருவன் நோயால் பீடிக்கப்பட்டு அதிக துன்பமடைந்து பலம் குன்றியிருக்கும்போது, சனங்கள் புத்தியில்லாமல் நோயாளியின் அருகாமையில் பேசிக்கொண்டிருப்பார்கள். ஐயோ! இது கொடிய நோயாயிற்றே; இப்படித்தான் இருந்தவன் ஒருவன் நேற்று அந்த வீதியில் இறந்து போனானே! என்பார்கள். சிலர் வாயால் இப்படியெல்லாம் சொல்லாவிட்டாலும் மனசால் இப்படியெல்லாம் நினைப்பார்கள். மயக்கமாய்க் கிடக்கும் நோயாளி இதை யறியமாட்டான் என்பது இந்தச் சனங்களின் நம்பிக்கை. அச்சோ! அச்சோ! அப்படிக்கல்லல, நோயாளி— மயக்க நிலையில் இருப்பதாக நமக்குத் தோன்றினாலும்— அவனுடைய உள்மனம் அற்புதமாக விழித்துக்கொண்டிருக்கிறது. அதுவோ எதை யாவர் எப்படிச் சொன்னாலும் நம்புந் தன்மையுடையது.

**உள் மனதிற்குள்ள ஒரு குறை:**—புத்தியைக்கொண்டு (Reason) யூகித்து விஷயங்களை விசாரித்து அவை தம்மை நிறுத்து, அறியும் சக்தி (The inductive sense) உள் மனசுக்கு இல்லை. ஆகையால் பிணியாளியைப் பார்க்க வந்தவர்கள் சொன்னதை மனசில் நினைப்பதை ஒரு கணத்தில் அறியும்; அறிந்ததை மெய்யென்றே நம்பும்; சாவுக்கு நெருங்கிய நிலையில் தேகத்தைக் கொண்டு வந்து சேர்த்துவிடும். வயித்தியர்கள்—அவர்கள் எவ்வளவு நிபுணர்களாயிருந்தாலும்—அவர்களால் ஒன்றும் செய்யமுடியாது. ஆகையால் இன்னம் சிலகாலம் உயிரோடு இருக்கக்கூடிய ஒருவன் உடனே சிவலோகம்—வைகுண்டம் சேர்ந்துவிட நேரிடும்.

**ஆத்ம சக்தி:**— அறிவை (ஆத்ம சக்தியை) யறியாமையாலல்லவா பேதைச் சனங்கள் அவதியுறுகின்றனர். பிளேக்கு முதலிய வியாதிகளால் சாகின்றவர் தொகை கொஞ்சமாயிருந்தாலும், பிளேக்கு, காலரா முதலிய வியாதிகளின் பீதியினால் சாகின்றவர் அநேகர் என்கிறார்களே! இடையில் ஒரு சிறு கதை கூறுகிறோம். பம்பாய் மாகாணத்தில் ஒரு மகன் ஒரு பகல், பிளேக் வியாதியைக் கண்டு, எங்கே போகின்றாய் என்று கேட்க, அடுத்த பட்டணத்துக்குப் போகின்றேன்; மூவாயிரம் பேரைப் பலிகொள்ளப் போகின்றேன் என்றது பிளேக்கு. இரண்டொரு மாதம் சென்று மறுபடியும் அம்மகன் பிளேக்கைச் சந்தித்து ஏ! கொடிய! மூவாயிரம் பேரைச் சாப்பிடச் சென்ற



நீ, முப்பதினாயிரம் பேரையுண்டு ஏப்பமிட்டதென்னை என்றதும்—பிளேக்கானது—இல்லை, இல்லை—மூவாயிரம் பேரைமட்டும் யான் கொன்றேன்; மற்றையோரைப் பயம் கொன்று விட்டது என்று சொல்லிவிட்டுப் போயிற்று. மேலே சொல்லப்பட்ட கதையின் உண்மையை யறியாதவர் யாவர்?

**சாந்த எண்ணங்கள்:**—சாந்த எண்ணங்களை மனம் சிருஷ்டித்துக்கொண்டே வந்தால், பிறருடைய சாந்த எண்ணங்களும் மனசிற் புகுந்து க்ஷேமம் செய்யும். தேகத்தைப் பலமாகக் கட்டி வைக்கும். சாந்த மனமுடையவர்கள் தங்கள் குழந்தைகளை ஆசீர்வதித்தால் அந்தக் குழந்தைக்குத் தீங்கே நேரிடாது. "நீ சுகத்தோடு வாழ்க" என்று யாம் எமது செல்வச் சிறுவனை ஆசீர்வதிக்கும்போது நமது மனசினின்றும் ஒரு சுக எண்ணம் ஜனிக்கிறது. அந்த எண்ணத்தை எமது மனக் குழந்தையென்று பேசலாம். இந்த மனக்குழந்தையானது அருகில் யாம் இல்லாத காலத்தினுங்கூட எமது செல்வக் குழந்தையை, உடனின்று அந்தக் குழந்தைக்குத் தீங்கொன்றும் நெருங்காமல் பாதுகாத்து வருகிறது. ஆகையால்தான் விவாக வேளையிலும், மற்றைய பல சுபகரமான சமயங்களிலும் பெரியோர் சிறியோரை ஆசீர்வதிப்பது. கலியாண காலத்தில் எல்லோரும் சுக வடிவான மனசுடன் கூடி இருக்கவேண்டியது அத்யாவசியம். அதை விட்டு விட்டு நமது ஜனங்கள் அநேகர் கலியாண காலங்களில், ஒருவரோடு ஒருவர் சண்டை பிடித்துக்கொண்டு, சிற்சில சமயம் மணமகனையும், மணமகளையுங் கூடச் சபிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். இதென்ன கொடுமை! அறியாமை!

**ஆத்மாவின் வியாபாரங்கள்:**—நாம் தூங்கும்போது நம்முடைய உடம்பு (தேகம்) மட்டுந்தான் ஓய்வடைகிறது. ஆத்மாவின் வியாபாரங்கள் இடைவிடாமல் நடந்துகொண்டே வருகின்றன. நாம் உறங்கப் போகும்போது, இத்தனை மணிக்கு அல்லது இத்தனை நாழிகைக்கு எழுந்திருக்க வேண்டுமென்று உறுதியாக நினைத்துக்கொண்டு உறங்கினால், அப்படியே அந்த மணிக்கே எழுந்திருப்போம்; என்ன அதிசயம்! ஆத்மா விழித்திருந்து நம்மை எழுப்பி விடுகிறது போலும்?

**இரட்டைக் குதிரை சவாரி:**—தரித்திரத்தில் இருக்கும் ஒருவன் இரட்டைக் குதிரை வண்டியேறிச் செல்லும் ஒரு பிரபுவைக் கண்டு தனக்கும் அந்த வாழ்வு வரவேண்டுமென்று நினைக்கிறான்; வந்துவிடுமா? ஆ! ஹா! வந்துவிடும். இரட்டைக் குதிரை வண்டியேறிச் செல்லும் ஒருவனைக் கண்டு நாம் பொறாமைமட்டும் அடையக்கூடாது. மற்றபடி அவனைப்போலவே நாமும் இரட்டைக் குதிரை வண்டியேறிச் சவாரி செய்யும் வாழ்வை யபேக்ஷித்தல் குற்றமாகாது. பகவானுடைய ஐஸ்வரியத்துக்கு அளவுண்டோ?

பகவானுடைய அருமை மக்கட்குக் குறைவுமுண்டோ? கேட்டதெல்லாம் கொடுக்கக் கடவுள் இருக்க நமக்குக் குறையென்ன? ஆனால் முயற்சி தானில்லை. நான் தரித்திரன், நான் தரித்திரன் என்று ஒருவன் சதா நினைப்பானானால் அவனைத் தரித்திரம் விடவே விடாது என்பதும் மெய். மகா பெரிய மனிதத் தன்மையோடிருந்துகொண்டு பெற்றோரையும் மனைவி மக்களையும் சோற்றுக்குத் திண்டாடவிட்டு, நல்ல காலம் வரவில்லை வரவில்லையென்று ஜாதகத்தைப் பார்த்துக்கொண்டு நிற்கிற புத்திசாலிகளே! நீங்கள் வருந்திப் பாடுபடுங்கள், முயற்சியுங்கள்; அப்போது கடவுளும் வழி காட்டுவார். (Try Try again.)

**சுவிகாரஞ் செய்து கொள்தல்:**—பிள்ளைப் பேறில்லாத சில மாதர்கள் பிறருடைய பிள்ளைகளைத் தத்து எடுத்துக்கொண்டு, அவைகளை வளர்த்து வருவதைக் கண்டிருக்கலாம். அதனால் அவர்களுக்கு லாபம் என்ன? ஆயுசு வளரக்கூடும். மனசுக்குச் சுகம், நரம்புகட்குச் சுகம், தேகத்துக்கும் சுகம். மனிதனுக்குச் சீக்கிரம் பல காரணங்களால் நரம்புச் சக்தி குறைந்து போவதால் அவன் தீவிரத்தில் இறந்து போகின்றான். நரம்புச் சக்தியை (Nerve power) பாதுகாத்தால் நெடுநாள் ஜீவித்திருக்கக்கூடும். நரம்புச் சக்தியை அதிகப்படுத்தி உடனே சாந்தத்தைக் கொடுக்கக்கூடியது ஒரு குழந்தையின் பால்ய லீலை. அதனால் பரோபகாரஞ் செய்யப்புகுந்தவள், தானே உபகாரம் பிறரிடமிருந்தும் பெறுகின்றாள் என்ப.

**குழந்தைகளின் வசீகர சக்தி:**—குழந்தைகளிடத்தில் ஆத்ம சக்தியதிகமாக வெளிப்படுவதால் அச்சக்தியானது அன்போடு வளர்க்கும் தாய்க்கும் பிரதிபலிப்பது சகஜம். ஆத்ம சக்தி விசேஷமாக வெளிப்படுவதால் மனம் சாந்தமடையும். மனம் சாந்தமடைந்தால் நரம்புச் சக்தி கெடாது. நரம்புச் சக்தி தான் தேகவுறுப்புக்களையும் இரத்தக் குழாக்களையும் இயக்குவதும் தனது அதிகாரத்திற் குட்படுத்துவதுமாதலால் நரம்புச் சக்தி பூரணமாயுள்ளபோது தேகத்துக்குக் கெடுதி நேரிடமாட்டாது. இதைச் சனங்கள் அறிந்து நடந்துகொள்ளவேண்டும். திருஷ்டாந்தமாகப் பிறிதொன்று கூறுவோம்.

**ஸஞ்சலவதனியான பால்ய விதவை:**—இளம் பெண்கள் இருவர் கைம்பெண்களாய் விட்டார்கள் என்று வைத்துக்கொள்வோம். புருஷனையறியாமல் தாலியறுத்துவிட்ட இந்த இரண்டு பெண்களும் நற்குலத்திற் பிறந்தவர்களும், நல்ல குணமுடையவர்களென்றுங் கொள்வோம். இவர்களுக்குச் சேர்க்கை வாசனையும் நலமாகவே அமைந்ததாகவுங்கொள்வோம். கடவுளிடத்தில் மாறாத பக்தியுமிருப்பதாகவும் எண்ணுவோமாக. இருவர்க



ளில் ஒருத்தி தன் புருஷன் வீட்டில் அல்லது தாயார் வீட்டில் இருந்துகொண்டு தன் தலைவிதியை நொந்துகொண்டு பாயிலுறங்காமல் தரையிற் படுத்தும், ஒருவேளை உணவுமட்டும் உண்டும், புருஷனை நினைத்து நினைத்துத் துக்கித்துக்கொண்டே காலம் கடத்துகின்றாள். இவள் கதி என்ன? இவள் பூமிக்கும் பாரம்; பிறருக்கும் பாரம்; தனக்கும் பாரம்; சீக்கிரம் இறந்து போகிறாள்.

**ஸந்தோஷ ரூபியான இளம் விதவை:**—மற்றொருத்தியோ (இளங்கைம்பெண்) எந்நேரமும் புருஷனைக் குறித்துத் துக்கித்துக்கொண்டிருந்து, பிறரையும் அந்தத் துக்கத்தில் அழுந்தச் செய்தல் பிரயோசனமற்ற காரியம் என்று அறிந்தவளாய்ச் சாதாரண சற்குல ஸ்திரீகளைப்போலவே தானும் உண்டும், உடுத்தும், உறங்கியும், சந்தோஷமான முகத்துடன் யாவரையும் அழைத்துப் பேசியும், உபசரித்தும், தன்னாலான உதவியை யவரவர்கட்கு வலிந்து சென்று செய்தும், துக்கத்திலிருப்பவர்களைச் சுகப்படுத்தியும், தான் செல்லும் இடங்களில் தைரியத்தையும், உற்சாகத்தையும் ஜனங்களுக்கு வழங்கியும், "பரோபகாரார்த்தம் இதம் சரீரம்" என்ற பழமொழிக்கிணங்க, எல்லாருடைய வாழ்வையும் தன் வாழ்வாகவும், எல்லோருடைய துக்கத்தையும் தனக்கே நேரிட்ட துக்கமாகவும் கருதி நடந்து உத்தம வழியில் நிற்கின்றாள்.

**இவள் கதி என்ன?:**—இவளுக்கு ஆயுசு விர்த்தியாகும்; மனம் சாந்தமடையும்; ஆத்ம லாபம் கிடைக்கும்; அற்புதமான மறு ஜனனம் வாய்க்கும்; சாகும்போது பரம சந்துஷ்டி நேரிடும்; பகவான் எப்போதும் அவளுடனிருந்து காத்து வருவார்.

**தேகம் மனம்:**—தேகத்துக்கும் மனசுக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. தேகம் சுக நிலைமையிலிருந்தால் மனமும் சுகிக்கும். அப்படியே மனசு நல்ல ஸ்திதியிலிருந்தால் தேகமும் நோயின்றியிருக்கும். உயிர் எங்குண்டோ அங்கே மனசு (அல்லது மனோசக்தி மனோதத்துவம்) உண்டு. மக்கட்குமட்டும் மனம் இருப்பதாக நாம் எண்ணப்படாது. உயிருள்ள பிராணிகள் யாவற்றுக்கும் மனம் என்பதுண்டு. மனிதனை நோக்க எறும்பு எவ்வளவு சிறிய ஜெந்துவோ, எறும்பை நோக்க அத்துணைச் சிறிய ஜெந்துக்களும், அவையினும் சிறிய பிராணிகளும் சிருஷ்டியில் இருப்பதாக மேனாட்டுக் கலைஞர் கண்டு பிடித்திருக்கின்றார்கள். அவைகள் யாவற்றினிடத்தும் அறிவு (மனோதத்வம்) இருப்பதாகப் பரீட்சித்துப் படிப்பாளிகள் உணர்ந்தார்கள். ஆயினும் பகவானுடைய பேரறிவை யாவர் அளந்தறியக்கூடும்?

**மனோவல்லமை:**—பூலோகத்தில் பெரியோர்கள் அவ்வக்காலத்திலும் மனசின் வல்லமையைக்கொண்டு அநேக அற்புதங்களைச் செய்து முடித்தார்கள்; முடிக்கின்றார்கள்; இனி மேல்வருங்காலத்திலும் முடிப்பார்கள். புலி, கரடி, சிங்கம் முதலிய துஷ்ட மிருகங்களையும், பாம்பு, நண்டுத் தெருக்கால், செந்தேள், செய்யான் முதலிய துஷ்ட ஜந்துக்களையும் மனோவல்லமையினால் ஒருவன் ஜெயித்துவிடக்கூடும். மனந்தான் நரகத்தையுண்டாக்கும்; மனந்தான் சுவர்க்கத்தையுந் தரும்; மனசு துன்பப்பட்டால் அதே நரகம்; மனசு சுகப்பட்டால் அதே சுவர்க்கம் என்றும் சொல்வார்கள். மனசினுடைய வேகமும் அசாத்தியமாகும்; மனசினுடைய வியவகாரங்களும் அதிவிநோதமானவை.

**பயத்தின் தன்மைகள்:**—ஐயா! வெகு பேர் பொழுது போனவுடனே "பயம் பயம்" என்று பயத்தைக் கண்டு பயப்படுகிறார்கள் அல்லவா? இதை யொழிப்பதெப்படி? **பயம்** என்ற நாய் இருக்கிறதே ஐயா, அநேகம் பேரை மிரட்டி யடிக்கும்; அவசரத்தில் அதைப் பார்த்தால் அது ஒரு பெரிய கோர வடிவோடும் தோன்றும். அதைச் சற்றே உற்று நோக்கினால் அதனுடைய உண்மையான சொரூபம் (அற்ப நாய் வடிவம்) உடனே வெளியாகும். சில வயல்களில், சில தோட்டங்களில் காக்கை முதலிய பட்சிகளை மிரட்டுமாறு **மனுஷனைப்போலப்** பொம்மை பண்ணி வைத்திருப்பார்கள். இருட்டில் அதைப்பார்த்து சில மூட ஜனங்கள் யாரோ மனிதன் தான் நிற்கின்றான் என்று பயப்படுவதுண்டு. ஆனால் அருகிற் சென்று உற்றுப் பார்த்தால் சட்டியும் பானையும் தான் அங்கே நிற்கும். தடியாலொரு அடி போட்டால், பொட்டென்று **சட்டி** மனிதன் கீழே விழுந்து நாசமடைவான். அது போலப் **பயம்** என்ற அந்தகாரத்தைச் சற்றே எதிரிட்டுச் சீ, **நில் நாயே!** என்று சொல்லி, ஒருவன் உற்று நோக்கினால் அது **பூஜ்யமாய்** (சூன்யமாய்) விடும்; ஒன்றும் வாஸ்தவத்திலிராது. இந்த நாய் நமது மனசினுடைய சிருஷ்டி; **மனசாகிய தடியினால் தான் இதைக் கொல்லவேண்டும்.** ஆமாம், ஐயா! இதை எப்படிப் போக்குவது; அதைச் சொல்லும் என்று சிலர் எம்மை யடிக்கடி கேட்கின்றார்கள்.

**பய நிவர்த்திக்கு மந்திரம்:**—பயத்தால் பீடிக்கப்பட்ட ஒருவன், தான் இருட்டு வேளையில் எங்கேயாவது தனிமையாக, தனி வழியே போகும்போது, இன்ன மாதிரியாக மனசில் தியானம் செய்துகொண்டே போகவேண்டும். "**பயம் கிடையாது; யான் பயத்தை வென்று விட்டேன்; என் மனம் தீரமே உருவெடுத்து வந்தாற்போல் ஆய்விட்டது; பயமில்லை, பயமில்லை, பயம் போய்**"— இப்படித் தியானம் செய்துகொண்டே



தனி வழி நடந்து போகும்போது, **பயத்தை** ஒரு நாயாகப் பாவித்து, தன்னை ஒரு **நாயடிப்போனாக** எண்ணி, **தைரியம்** என்ற கொம்பைக் கையில் தான் பிடித்திருப்பதாகவும் எண்ணிக்கொண்டு, "**பயம்** என்ற நாய் தலை 'கிலை' காட்டினால் தடியால் அடித்துக் கொல்வேன்" என்று சங்கல்பம் செய்துகொண்டும் பாதையில் எந்த இடத்திலாவது கொஞ்சம் **பயம்** வந்தாலும் கூட, "இதோ அற்ப நாய் தலை காட்டுகிறது; இதோ போடுகிறேன் தடிகொண்டு அதன் தலை இரண்டாகும்படி" என்று, தான் **தைரியம்** என்ற தடியை எடுப்பதாய்ப் பாவனை **மனசில்** செய்யவேண்டும். தடியை எடுத்தவுடனே நாய் பறந்தோடிவிடும்; மறுபடியும் தலைகாட்டவே காட்டாது; ஒருவேளை தலைகாட்டினாலும் உன்னிடம் தடி தான் தயாராகவே இருக்கிறதே, போடு தடியால்; தயை தாட்சண்ணியம் வேண்டாம். இப்படிச் சிலகாலம் **மனோதியானமும் மனோபாவனையும்** செய்துவந்தால் பயம் ஒருவனை விட்டு அறவே ஒழிந்து போகும். இதை நீ அநுஷ்டித்துப் பார்.

**கோபத்தின் துராசாரங்கள்:**—கோபம் என்கிற சண்டாளன் அடிக்கடி நம்மை எதிர்த்துப் போர் செய்வான். வெகு சாக்கிரதையாயிருக்கவேண்டும். பெரிய அபாயங்களையெல்லாம் இந்தப் படுபாவிப் பயல் செய்துவிடுவான்; சிலவேளை ஒருவனை ஒரு கணத்தில் கொன்றும் விடுவான். அடடா! துருவாசர், விசுவாமித்திரர் முதலிய மகான்களும் சிலவேளை இந்தச் சண்டாளனால் மதி கெட்டுப் போனார்களாமே; அம்மம்ம! இவன் விஷயத்தில் வெகு **கபர்தார்** செய்யவேண்டும்.

**கோபம் எப்படி வருகிறது?:**—"ஆறுவது சினம்" என்று சொன்னாள் அம்மை. **கோபத்தை எப்படி ஜயிக்கலாம்? கோபத்தின் பேரில்** (கோபம் என்கிற துஷ்டன் பேரில்) நம்முடைய கோபத்தைச் செலுத்தவேண்டும்; **கோபத்தையே கோபிக்கவேண்டும்.** கோபம் வருகிறதல்லவோ? நன்றாய்த்தான் தெரிகிறதே கோபம் வருகிற சமாச்சாரம். அடாடாடா! என்ன வேகம் ஐயா அந்தக் கோபத்துக்கு! என்ன கம்பீரம்! என்ன சக்தி! பல் நறு நறெனக் கடிக்க, மீசை துடிப்ப, நரம்பு உதற, தேகம் நடுங்க, ஆள் குலுங்க, புத்தி தடுமாற, உதரம் பொங்க, உடலம் புழுங்கிச் சூடெடுப்ப, அடடா! என்ன வேகமடா—என்ன அட்டகாசம்—என்ன சக்தி!

**கோபத்தை வெல்லும் வழி:**—நீ ஒன்று செய்! இப்படிக் கோபம் புறப்பட்டு வருகிறபோது, சற்று நிதானி! கோபத்தை எதிரிட்டுப்பார்; வாருங்கள், வாருங்கள் என்று சொல். "ஆ! ஹா! இவ்வளவு வேகம்—சக்தி—இவ்வளவு கம்பீரம்—**வெளிப்பட்டுப் போய்விட்டால் எப்படி?** தயை செய்து **உள்ளுக்குப்** போங்கள்—உள்ளுக்குப் போங்கள்; உங்களுடைய

உதவியும் நட்பும் நமக்கு அவசியம் வேண்டும். தயவு செய்து உள்ளேயிருங்கள்'' என்று சொல்லி, புறப்பட்டுக் கர்ச்சித்து வந்த கோபத்தைக் கவளீகரம் செய்துவிடவேண்டும்; அதாவது சாப்பிட்டு ஜீரணித்துவிடவேண்டும். ஜீரணமாவதற்கு உதவி செய்யும்படி கடவுளுடைய சுத்த ஆகாயத்தை மூன்று தரம் பூரணமாக உட்கொண்டு சந்தோஷிக்கவேண்டும். (Take three deep breaths.) பாருங்கள், எவ்வளவு வசீகர சக்தி வந்து விடுகிறது உங்கள் தேகத்துக்கு. இப்படி ஒரு தரம், இரண்டு தரம், மூன்று தரம் பத்துத் தரம் கோபத்தை வென்று, அப்போதப்போது வந்த கோபத்தின் சக்தியைச் சாப்பிட்டு ஏப்பமிட்டுவிட்டால் பிற்பாடு கோபம் வரவே வராது; சாந்தம் உண்டாகும்; சுகம் நேரிடும்; வசீகர சக்தி தேகத்துக்குண்டாகும்; எல்லாரும் தழுவுவார்கள், நீ இட்டதே சட்டம், சொன்னதே வேதவாக்கியம்; ஜனங்கள் உன்னைக் கண்டு மரியாதை செய்வார்கள்; துஷ்டர் உன்னைக் கண்டு அச்சமடைவார்கள்; மிருகங்கள்கூடப் பயந்து நிற்கும். கோபத்தை இப்படி ஆறவிடவேண்டுமென்ற பொருளுடன் தான் "ஆறுவது சினம்'' என்றாள் ஔவை.

**ஸர்வாவசியம் அற்புதவாழ்வு:**—உனக்கு அநேக விரோதிகள் இருக்கக்கூடுமல்லவா? ஆம், உலகத்தில் யாருக்குத்தான் விரோதிகளில்லை? இவர்களையெல்லாம் ஒரே காலத்தில் வென்றுவிடுவதெப்படி? உன் மனசிலுள்ள கவலைகள் ஒருங்கே ஒழிவதெப்படி? நீ உள்ளபடியே சுகப்படுவதெப்படி?

**அதற்கு விடை:**—காலையிலும் மாலையிலும் உறங்கு முன்னும் அரை நாழிகை நீ ஒன்று செய்யவேண்டும். உள்ளே சென்று கதவுகளையடைத்துக் கொண்டு மோனத்தை (Silence) அதாவது மௌன விரதத்தை அநுபவிக்கவேண்டும். கால் நாழிகை அப்படி யநுபவித்த பிறகு சாந்தமுண்டாகும். உடனே கால் நாழிகை பரியந்தம் **"எல்லாருக்கும் சாந்தம் உண்டாக! எல்லா ஜீவர்கட்கும் சுகம் உண்டாக! எல்லா ஆன்மாக்களும் நன்மையே பெறுக!''** என்று தியானம் செய்யவேண்டும்; பிறகு கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்திடவேண்டும். பத்து நாளைக்கெல்லாம் உலகமெல்லாம் உன்னை நேசிக்கும்; விரோதிகளெல்லாம் சிநேகராய் மாறி விடுவார்கள். துஷ்ட மிருகங்கள், துஷ்ட ஜெந்துக்கள் உன்னைத் தீண்டமாட்டா; உனக்கு எல்லாம் நன்மையாகவே முடியும். உன்னுடைய தேகத்துக்குப்புதுமையாக ஆரோக்கியமுண்டாகும்; உன்னுடைய மனசுக்குப் புதுமையாகத் தீரமுண்டாகும். மேற்படி பேசப்பட்ட அறை உன்னுடைய ஹிருதயம். கதவுகளோ, கண் காது முதலிய இந்திரியங்கள் என்றறியக்கடவாய். ஒவ்வொருவனும் கடவுளோடு ஒன்றுபட்டிருப்பதால், அதை உள்ளபடியே உணர்ந்துஅவன் ஒன்றைக் கோரினால் அது அவனுக்குக்கிடைக்கத் தடையில்லை.

# சிறப்புரை

—:o:—

[மதராஸ் கோவாபரேடிவ் கிரேடிட் சொஸைடீஸ்அஸிஸ்டேண்டு ரிஜிஸ்டிரார் ராவ்பகதூர் ஸ்ரீமான் ஜெ. தர்மராங்கராஜு அவர்கள் எழுதியது.]

"ஆநந்தகதாகல்பகம்'' என்ற இப்புஸ்தகத்தை வாசிக்கக்கையிலெடுக்கும் சகோதரரே! சகோதரியே! உமக்கு வந்தனம். நீர் இதை இனிமேல் வாசிக்கப்போகிறீர். ஒரு வேளை இதை வாசிக்கலாமா வேண்டாமா என்னும் உறுதியின்மையும் உபேக்ஷையும் உமக்கு உண்டானாலும் உண்டாகலாம். அப்படி உண்டாவதும் ஸகஜமே. ஏனெனில், உலகத்தில் எத்தனையோ கதைகள் வெளியாயிருக்கின்றன. அவைகளில் இதுவும் ஒன்று என்று சாதாரணமாய் நினைப்பதில் விபரீதம் ஒன்றுமில்லை. ஏனென்றால் நீர் அதை இன்னமும் வாசிக்கவில்லை. அதன் ஸ்வாரஸ்யம் உமக்குத் தெரியாது. நானோ அதில் ஒவ்வொரு பக்கத்தையும் கவனத்துடன் வாசித்திருக்கிறேன். சில இடங்களில் இலக்கணத் தமிழில் எழுதப்பட்டிருந்தாலும், பொதுவாக உலக வழக்கச் சொற்களையே உபயோகப்படுத்தி, பாலார்க்கும் சிறுமியர்க்கும் பொருள் படுமாறு எளிய நடையிலேயே எழுதப்பட்டிருக்கின்றது.

கிரந்தகர்த்தா இக்கதைக்கு அமைத்திருக்கும் ஆநந்த கதா கல்பகம் என்னும் பெயர் அதற்குத் தகும். ஏனென்றால், அதை வாசிக்கும்போது நாம் நம்மை யறியாமலே ஆநந்தபரவஸம் அடைகிறோம். இவ்வாநந்தத்துடன் லோகாநுபவம் என்னும் முக்கியமான கல்பகத்தையும் நாம் பெறுகிறோம். ஆகவே ஆநந்த கதாகல்பகம் என்ற பெயர் நன்றாகப் பொருந்தும். இப்பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு ஜீவனும் அநேகமாயிரம் ஜன்மங்கள் எடுத்து, ஒவ்வொரு ஜன்மத்திலும், அதின் ஒவ்வொரு அவசரத்திலும் என்னென்ன சம்பவங்கள் உண்டாகின்றனவோ அவைகளைப் பற்றிய அறிவு அந்த ஜீவனுக்கு உண்டாகவே, அதுவே அநுபவமாய்ப் பதிந்து அந்த ஜன்மத்திலும், பின்னெடுக்கும் ஜன்மங்களிலும் அதனால் பயன் அடைகிறான். "சூடுகண்ட பூனை அடுப்பங்கரை ஏறாது'' என்பது

அநுபவத்தின் பயனைக் காட்டும் ஒரு சாதாரண பழமொழியன்றோ? இப்படிப் பல ஜன்மங்களையும் ஒரு ஜீவன் எடுக்கும்படி கடவுள் செய்திருக்கும் ஏற்பாடானது, இப்பிரபஞ்சத்தில் இயற்கை யற்புதங்களாய்த் தோன்றுமெண்ணிறந்த சம்பவங்களிலும் உலகயாத்திரையிலும் கொஞ்சங் கொஞ்சமாய் அநுபவம் உண்டாகி, அதன்பயனால் அந்த ஜீவனுக்கு அதிக மனோசக்தியும் வல்லமையும் தோன்றி வரவரப் பூர்ண சக்திக்குச் சமீபிக்கும்படி செய்யக்கூடிய அற்புதமான சாதனமாயிருக்கிறது.

இதற்கு ஒரு சிறிய திருஷ்டாந்தம் சொல்லலாம். ஒரே தாய் வயிற்றில் பிறந்த இரண்டு பிள்ளைகளுக்கு ஒன்றாய் சங்கீதம் கற்பிக்கும் போது, ஒரு பிள்ளைக்கு மற்றப் பிள்ளையைவிட அதிசீக்கிரமாக சங்கீதக் கியானம் உண்டாகிறது. அந்த ஜீவன் முன்ஜென்மத்திலே சங்கீத அப்பியாஸம் செய்த பயன் இதுவென்று சொல்லத்தடையென்ன? இன்னொரு திருஷ்டாந்தம்; இன்ன காரியத்தை உத்தேசித்து ஒருவர் தம்முடன் பேசுகிறார் என்று அவர் சொன்னபின்னர் தான் ஒருவருக்குத் தெரியும். ஒருவருக்கு அவர் பேசிக்கொண்டிருக்கும்போதே தெரிந்து போகும். ஒருவருக்கு அவர் பேசத்தொடங்கும்போதே தெரியும். ஒருவருக்கு அவர் தம்முன் வந்து நின்றவுடனேயே இன்ன காரியத்தை உத்தேசித்து வந்திருக்கிறார் என்று தெரியவரும். ஒருவருக்கு தம்முடன் மற்றொருவர் ஒருமணிநேரம் கழித்துப் பேச உத்தேசித்திருக்கும் சங்கதி இப்போதே உதயமாய்விடும். ஒருமணிநேரம் கழித்து வரப்போகிற ஒரு தந்தியின் சமாசாரம் முன்கூட்டியே ஒருவருக்குத் தெரிகிறது. இவையெல்லாம் உலக சம்பவங்களையும், இயற்கை விதிகளையும் ஒரு ஜீவன் அநேக ஜென்மங்களில் அறிந்து அநுபவமடைந்து பரிபக்குவப்படுவதைக் காட்டுகின்றன.

அக்கினி சுடும். நல்ல பாம்பின் விஷம் மனிதரையும் மற்ற ஜீவராசிகளையும் கொல்லும். விஷஜ்வரம் விசேஷமாயிருக்கும் பிரதேசங்களில் அகப்படும் குளிர்ந்த ஜலத்தைக் காய்ச்சாமல் குடித்தால் விஷஜ்வரம் உண்டாகும். இவை முதலான இயற்கை விதிகளின் பயன்களை ஒவ்வொருவரும் அநுபவித்தபின்தான் தெரிந்துகொள்ள வேண்டுமானால், உலகத்திலுள்ள அநேக விஷயங்களில் அநுபவம் உண்டாக ஒரு ஜீவனுக்கு அநேக கோடி ஜன்மங்கள் எடுத்தாலும் முடியாது. ஆகையால் அநுபோகமுள்ள மற்றவர்கள் வெளியிடும் பற்பல விஷயங்களையும் வாசித்துத் தம் அறிவை விசாலப்படுத்தி அநுபவப்பயன் பெற்றுக்கொள்வதே கல்வியின் முக்கிய நோக்கம். ஒவ்வொருவரும் தேள் கொட்டினால் எப்படியிருக்கும் என்ப



தைத்தெரிந்துகொள்வதற்காகத் தம் கையை நீட்டித் தேள்கொட்டிய பின் அதன் பயனை அறிந்துகொள்ளக் காத்திருப்பது மதியீனம். தேள்கொட்டின பயனை அநுபவித்த மற்றவர்கள்சொல்வதை அறிந்து அதை அநுபவ வழிக்குக் கொண்டு வருவதே யுக்தம்.

இந்த முக்கியமான நோக்கத்துடன் லோகோபகாரமாக இக்கிரந்த கர்த்தா இப்புத்தகத்தை வெளியிட்டிருக்கின்றார் என்பதில் சந்தேகமில்லை. இதிலுள்ள எந்தக் கதையை வாசித்தாலும் அதின் ஒவ்வொரு பக்கத்திலும் லோகாநுபவம் நிறைந்திருக்கக்காணலாம். மேலும் தர்மாதர்ம விவேகங்கள், கூட்டுறவின் அநுகூலங்கள், இம்மை மறுமைச்சாதனங்கள், நன்மை தீமையின் பலாபலன்கள், விவாகங்களின் உதாரணங்கள், சமயோசிதமான புத்திமதிகள், ஸ்திரீபுருஷ சகவாச தோஷங்கள், கலிகாலக் கொடுமையின் கூத்துகள்—இவைபோன்ற எண்ணிறந்த விஷயங்களும் அடங்கியிருக்கின்றன. இந்த விஸ்தாரமான வசனகாவியமானது ஆநந்தகதாகல்பகத்தின் முதலாவது வால்யமென்று அறிகிறோம். பதினெட்டு வால்யங்கள் ஒருங்குசேர்ந்து பெரிய கிரந்தமாக இந்நூல் விளங்குவதையும், இனி பதினேழு வால்யங்கள் எழுதப்படவேண்டியிருப்பதையும், தாம் பத்திராசிரியராக இருந்து "பிரஜாநுகூலன்" "திராவிடாபிமானி" என்ற இருபத்திரிகைகளையும் நடத்தி நிர்வகித்துவரும் கஷ்டத்தினூடே இப்பெருங் காரியத்தையும் ஏற்று நிற்பதையும் கருதுமிடத்து, இக்கிரந்தகர்த்தாவாகிய ஸ்ரீமான் எஸ். ஜி. இராமாநுஜலுநாயுடவர்களின் மனவூக்கத்துக்கும் விடாமுயற்சிக்கும் தமிழ்நாட்டார் மிகவும் கடமைப் பட்டிருக்கின்றார்களென்று சொல்லலாம். நாவல் என்றால் ஒரு பெரிய கதையைப் பிரஸ்தாபித்து அதனூடே அநேக விஷயங்களைக்கலந்து ஒரு கதையாக, அதுவே ஒரு புத்தகமாக முடிவுபடுத்துவது வழக்கம். ஆநந்த கதாகல்பகத்திலோ இவ்வாறான அநேகம் நாவல்களை ஒன்றாகச் சேர்த்து முடிக்கப்பட்டிருப்பது ஒரு புதுமையேயாகும். அத்துடன் அதனைத்தொடர்ந்து ஐந்து பிரிவுகள் காணப்படுவதும், அவ்வைந்தும் பஞ்சரத்னம் போன்று ஒளிர்வதும இப்புத்தகத்தை இனி படிக்கப்புகுவோருக்கு விசேஷித்த உற்சாகத்தையும் பயனையும் உண்டுபண்ணுமென்பது திண்ணம்.

புத்தகம் எழுதுவதும், நாடகம் நடத்துவதும் மகா பிரயாசமான காரியங்கள். "கதைக்குக் கண் மூக்கில்லை" என்று கண்டதையெல்லாம் எழுதி, வாசிப்போர் மனதைக்கலக்கி, நடத்தையைக்கெடுத்து, மானத்தைக் குலைத்து விடக்கூடிய அநேக கதைகளும் வெளியாகின்றன. கதையைக் கையிலெடுத்தால் அதை முடிக்காமல் கீழே வைக்க மனமில்லாதிருக்கும்

விதமாக இன்பரஸம் நிறைந்திருக்க வேண்டியது வாஸ்தவமே யென்றாலும், அதை வாசிப்பவர்கள் ஒவ்வொருவரும் காலப்போக்குக்காக மட்டுமல்லாமல் அதன் சாரத்தை உணர்ந்து சன்மார்க்கத்தில் நடந்து இம்மை மறுமைப் பயன்களை அடையக் கூடிய சாதனமும் அதில் அமையப்பெற்றிருந்தால் "போன்மலர் நாற்றமுடைத்து" என்பதுபோலிருக்கும். இதைப்போலவேதான் நாடகமும். உலகத்தில் தற்காலம் நிகழும் ஆசாரங்களை எடுத்துக்காட்டி, சன்மார்க்க வழியில் மனிதரைத்திருத்தி பார்ப்போர் தம்மையறியாமலே நல்லவர்களாகும்படி நாடகம் நடத்துவதுதான் சிலாக்கியமாகும்.

இவ்வளவு சிரமப்பட்டு லோகோபகாரமாக இந்த ஆநந்த கதா கல்பகத்தை எழுதி வெளியிட்ட கிரந்த கர்த்தாவுக்கு நாம் மிகவும் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இப்புஸ்தகத்தின் மற்ற வால்யங்களையும் எழுதிப் பூர்த்தி செய்யுமாறு, கடவுள் அவருக்கு தேகசௌக்கியத்தையும், சக்தியையும், தீர்க்காயுளையும் அருளும்படி பிரார்த்திக்கிறேன்.

சென்னை
1—11—1913. } ஜெ. தர்மரங்கராஜு.

# முடிவுரை.

ஸர்வலோக சரண்யனாகிய ஸ்ரீமந்நாராயண மூர்த்தியின் கிருபாகடாக்ஷத்தினால் ஆநந்த கதா கல்பகத்தின் இந்த முதலாவது வால்யம் இத்துடன் பூர்த்தி பெறுகின்றது. இனி இதனைத் தொடர்ந்து எழுதப்படும் மற்ற வால்யங்களையும் தமிழபிமானிகள் ஆதரிப்பார்களென்று எதிர்பார்க்கிறோம். இது சம்பந்தமாகத் திருத்தங்கள் ஏதேனும் நமக்குத்தெரிவிக்க விரும்பினாலும் சந்தோஷத்துடன் அவற்றைக்கேட்க ஸந்நத்தமாயிருக்கிறோம். பகவானருளால் இந்நூலைவாசிக்கும் சகோதர சகோதரிகள் சகலபோக இன்பமெய்து சகலபோக பாக்கியங்களுடனும் வாழக்கடவராக. இந்த முதலாவது வால்பத்துக்கு அழகிய சிறப்புரை ஒன்று உபகரித்த ராவ்பகதூர் ஸ்ரீமான் ஜெ. தர்மரங்கராஜு அவர்களுக்கும் நமது ஹிருதய பூர்வ விநய வந்தனத்தை ஸமர்ப்பிக்கின்றோம்.

நமது ஆநந்த கதாகல்பகத்தின் வாசகர்களிடமிருந்து பெற நாம் விரும்புவதொன்றுளது. அவர்கள் பெண்பாலாரிடத்தில் கௌரவமும் மதிப்பும் வைத்து, அவர்களை உயர்ந்த வழியில் நடப்பித்துச் செல்லவேண்டுமென்பதே நாம் கேட்டுக்கொள்கிற வரமாகும்.

ஸகோதரிகளே! உங்கட்குமொரு சங்கதி. பிரியமுள்ள தங்காய்! உன்புருஷனே உனக்குத்தெய்வம்; அவனே உன்பிராணன்; அவனே உன் ஸம்ரக்ஷகன்; உன்னுடைய தலைவனும் அவனே. உன்புருஷனே உனக்கு அரசன், உன்னைக் கவனிப்பவன் அவனே. உன்னைப் போஷிப்பவனும் அவனே. சரீரப் பிரயாஸையோடு உழைத்து உன்னைச் சுகத்தில் வைப்பவன் உன் கணவனேயன்றி வேறல்லர். இவ்வளவு உபகாரம் செய்யும் அவன் உன்னிடம் எதிர் பார்ப்பது பிரேமை, சந்தோஷமான முகம், வணக்கம் ஆகிய மூன்றுதான். எனவே இதனை நீ அறிந்து நடந்துகொள். ஸ்ரீமந்நாராயண மூர்த்தியின் கிருபையால் உங்களெல்லோருக்கும் மங்களம் உண்டாகட்டும் சுபம்.

முதலாவதுவால்யம்
முற்றிற்று.

161299

## இந்நூலாசிரியரால் இயற்றப்பட்ட நூல்கள்.

# பிரபஞ்ச விலாஸம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| புஸ்தகம். | 1. | ஆசையின் முடிவு | | | |
| ,, | 2. | தகாத யுக்தி. | | | |
| ,, | 3. | இரஞ்சித ரத்தினம். | | | |
| ,, | * 4 | புராதன திரிசிரபுரம். | 0 | 1 | 0 |
| , | 5 | வித்தியா நவநீதம். | 0 | 14 | 0 |
| ,, | 6. | ஜனகா மோஹன சாதுரியம் | 0 | 5 | 0 |
| ,, | 7. | நாகரீக பாரிஜாதம். | | | |
| ,, | 8 | சுகுமார திலகம். | | | |
| ,, | 9 | புராதன சரித்திர விவரங்கள். | | | |
| ,, | * 10 | யாமனீ பூர்ண திலகம். | | | |
| ,, | 11. | ஆநந்த கதாகல்பகம் (முதல் வால்யம்.) | 2 | 10 | 0 |
| ,, | § 12. | ஸ்ரீ விஷ்ணு ஸ்தலயாத்திரா மார்க்க விவரணம், | 0 | 8 | 0 |
| ,, | 13. | ஆநந்த கதாகல்பகம் இரண்டாம்வால்யம் (அச்சில்) | 1 | 8 | 0 |

# நீதிபோதினி.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| புஸ்தகம் | 1. | ஜெயவிஜயன். | | | |
| ,, | ‡ 2 | பரிமளா. | 0 | 10 | 0 |

# வேறுபதிப்பு

| | | |
|---|---|---|
| புஸ்தகம். | 1. | ஸுலலிதாமநோகரம். |
| ,, | 2. | இந்திரா. |
| ,, | 3. | கலாப்பிரகாசனி. |

குறிப்பு:—விலை காட்டப்படாத புஸ்தகங்கள் செலவாய்விட்டன.

* இக்குறியிடப்பட்டவை பண்டிதர் T.S. இராஜம்ஐயரவர்களியற்றியது.
§ இக்குறியிடப்பட்டநூல் இந்நூலாசிரியரின் பிதா அவர்கள் இயற்றியது.
‡ இக்குறியிடப்பட்டநூல் ஸ்ரீ P. V. கிருஷ்ணசாமி சாஸ்திரியார் மொழிபெயர்த்தது.